பதார்த்தகுண சிந்தாமணி

மூலமும் உரையும்

திருநெல்வேலிப்பேட்டை பரிமளக்காரராகிய

சேயிப்பு காசீம்ராவுத்தர் அவர்கள்

குமாரர்

[illegible] அவர்களால்

பதிப்பித்த பிரதிக்கிணங்க,

A. இரங்கசாமி முதலியார் சென்ஸ்

பூமகள் விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது

1934

பதிப்புரை

அற்புத சிந்தாமணி என்னும் இவ்வரியநூல். பதார்த்தகுணமானது வயித்திய சாஸ்திரங்களுள் முக்கியமானதாயும், யாவரும் அறிய வேண்டியதாயும், பதார்த்தங்களின் குணங்களை மாத்திரமேயன்றி யவற்றின் பிரயோசனங்களையும் சொல்லும் குடும்பசாஸ்திரமாயிருக்கின்றது.

சுருக்கிச் சொல்லுமிடத்து பதார்த்த வகைகளின் இரசத்திற்கு தக்க இரத்தமும் இரத்தத்திற்குத் தக்க அறிவும் அறிவுக்குத் தக்க ஆரோக்கியமும் ஆரோக்கியத்திற்குத் தக்க சந்தானமும் ஆயுளும் உண்டாகுமென சாஸ்திரங்களிற் கூறுகின்றமையால் வயித்திய சாஸ்திரப் பயிற்சி அனுபவம் உள்ளவர்களைப் பார்க்கிலும் பதார்த்தகுணங்களையும் அப்பதார்த்தங்களினால் உண்டாகும் பிரயோசனங்களையும் அவற்றால் நிவர்த்தியாகும் பிணிகள் இன்னதென்றும் சந்தேக விபரீதமறத்தெரிவிக்கும் நூற்களில் இது முதன்மையாகும்.

இவ்விதச் சிறப்புவாய்ந்த இந்நூலை வாசிப்பவர்களுக்கு எளிதில் விளங்குமாறு திருத்தி அச்சிடப்பட்டிருப்பதோடு செய்யுள்கள் அதன் உரைகள் அட்டவணைகள் யாவும் சரிவர அமைக்கப்பட்டிருக்கின்றன.

அ. இ. அண்டு சன்ஸ்.

Digitized By Roja Muthiah Research Library

சிறப்புப்பாயிரம்

நெடுங்காடு, ரா. ஆதிமூலப் பாவலரவர்களால்

இயற்றிய

நிலமண்டில ஆசிரியப்பா

திருஒளிமார்பனுந் திசைமுகத்தொருவனு
மிருநிலங்கீன்றி மிலங்குவிண்புகுந்தும்
அடிமுடிகாண்டற் கரியவன்கடலெழு
சுடுவமர்களத்தின் கண்ணுதற்பெருமான்
சிருட்டியாதியைந் தொழில்புரிசெல்வன்
நிருத்தம்பயில்வா னித்தியனுத்தமன்
கற்றவனுண்ணும் கற்பகனறுங்கனி
பற்றவாவறுத்தோர் பருகுதெள்ளமிர்தம்
வேதமுடிவில் விளங்குமெய்ப்பொருள்
பூதமைந்தாயொளிர் புண்ணியமூர்த்தி
கங்கைவேணியன் கடுக்கையந்தாரான்
திங்கள்சூடிய செம்மல்செம்மேனியன்
வெள்ளியங்கிரியில் வீற்றிருந்தருள்வோன்
உள்ளங்களிகூர்ந் துமையவட்கன்று
செப்பியவற்புத சிந்தாமணியை
யொப்புயர்விலாவவ் வுமையவளருள்கொடு
மருத்துவமிகத்திகழ் மாதவச்செல்வராய்
சகத்தொளிர்குறுமுனி தேரையர்முதலியோர்
மன்னுயிர்மீது வைத்திடுகருணையா
லின்னிலமருத்துவ ரியாவரும்வியப்பத்
தேர்ந்துதென்மொழியாற் சீருறவமைத்துக்
கூர்ந்தபதார்த்த குணசிந்தாமணி
யென்னுமோர்நாமமு மியம்பினரன்றே
அன்னநன்னூலிற் காயுள்வேதத்திற்
சிறந்தோரெவரையுந் தேடியாங்கவர்க்கு
நிறைந்தபோன்பொடு நிதிபலநல்கிப்
பதவுரைகருத்துரை பகருமேற்கோளோ

Digitized By Roja Muthiah Research Library

டிதமுறத்தெளிவா யிறற்றுவிற்றெவரு
மெச்சிடநாவலோர் வியந்துளங்களிகொள
அச்சிறப்பதித்தன னவனியாரெனின்
என்னாட்டிலுமுயர் தென்னாட்டினன்கண்
முன்னாட்டிடுநெல் வேலிமூதூரினன்
தூயபரிமளக் காரதொல்குலச்
சேயிப்புகாசீம் ராவுத்தர்செய்
மாதவப்பேறென வந்தவதரித்தோன்
போதநீள்சிகரப் பொதியவெற்புடையோன்
வளையுலாந்தெண்டிரை வையைமாநதியான்
தளையவிழ்நறுமலர்த் தாரணிதிண்புயன்
வளங்கொள்வைபோகம் வச்சிரதேகன்
விளங்கிழைமடவார் விரும்புபேரழகன்
மழைமுகிலெனவே வழங்குங்கொடையினன்
கழைசுளிமும்மதக் களிறனநடையினன்
நமைபொறைவாய்மை நிரம்பியசுகுணன்
மறைபுகல்முகமது மார்க்கத்துள்ளோன்
நலமிகுநாகூர்ப் புலவரேறாகிய
பலமிகுமுகம்மது புலவர்மாணாக்கன்
இலக்கியவிலக்கண மெல்லாம்வல்லான்
சொலக்கணக்கிலாத் தொன்னிதிப்படைத்தோன்
பகருமெண்டிசையெலாம் பரவியபுகழோன்
நிகரறுசற்சன நேயன்றாயன்
கலமலிகடற்றன் காரைமாநகர்த்
தலமதின்முகம்மது சமதானியன்
வுச்சிதப்பெயர்பூண் டுலகுவப்பத்திகழ்
அச்சியந்திர சாலைக்கதிபன்
மெய்த்தசீர்காசீம் மூகையதீனெனும்
மெய்த்தகுபெயரொடு விளங்குநல்லோனே.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

Digitized By Roja Muthiah Research Library

விக்கிரமாதித்தன் கதை

[ஆண், பெண், பால, பாலிகைகள் யாவரும் எளிதில் வாசிக்கும்பொருட்டு ☞ இதேமாதிரியான பெரிய எழுத்தில் அச்சிட்டிருக்கின்றது]

இதன் விலை ரூபா 1.

இது பூர்வத்தில் மகா பிரக்கியாதிபெற்று, நவரத்தின கசிதமான முப்பத்திரண்டு பதுமைகள் சூழ்ந்த சிம்மாதனத்தில் வேதாளத்தையே வாகனமாகக்கொண்டு 2000-வருடங்கள் அரசியற்றி அற்புத லீலைகள் புரிந்த விக்கிரமாதித்தன் என்னும் சக்கரவர்த்தியின் பிரபாவங்களை அம்மன்னனுக்குப்பின்னால் அரசியற்றிய வீர, சூர, தீர பராக்கிரமசாலியாகிய போஜமகாராஜனுக்கு, வினோதரஞ்சிதம், மதனாபிஷேகம், கோமளவல்லி, மங்களகல்யாணி, மந்திரமனோன்மணி, சிங்காரமோகனவல்லி, பரிமளமோகினி, கிருபாபரிபூரணி முதலிய 32-பதுமைகள் சொல்லிய அருமையான ஆச்சரியத்தை இடையிடையே யுடைய பல விசித்திர ஆனந்தக் கதைகள் இதிலடங்கி யிருக்கின்றன.

நளவீம பாகசாஸ்திரம்

புத்திமான்களே! இந்துதேசத்துப் புராதன சமையற் பாகங்களில் மேலானதாய் உருசிகரங்கண்டு சமையற் பாகங்களுக்கென்று சேகரித்து வைத்த பெரியோர்களுடைய நூல் முறையைக்கொண்டு அச்சிட்டிருக்கும் இச்சாஸ்திரத்தில் உண்பவர்களுக்கு வேண்டிய காய்வகை பதார்த்தங்களை விதிப்படி சமைக்கும் முறைகளும் நானாவித சர்பத்துகளும் வைத்திய சாஸ்திரத்தின்படி இன்னின்ன பதார்த்தங்கள் உடலுக்கு இன்னின்னவைகளை 'செய்யுமென்றும்' விவரித்திருக்கிறது. இது நம்நாட்டுப் பெண்மணிகளுக்கு மிகவும் பிரயோசனந்தரத்தக்கது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு புத்தகமிருந்தால் ஒருவர் சகாயமில்லாமலேயே சமையல் பாகங்களையும் பலகார பட்சண பூந்தி லட்டுமிட்டாய் வர்க்கங்களைத் தாமே செய்து சாப்பிட்டுச் சந்தோஷமடையலாம். இதன் விலை ரூபா 1.

அமரம்பேடு. இரங்கசாமி முதலியார் ஸன்ஸ்

நெ-24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

Digitized By Roja Muthiah Research Library

தொகை அகராதி

பெயர்கள்	பக்கம்	பெயர்கள்	பக்கம்
இறைச்சிவகை	255	பத்தியவகை	353
உண்கலவகை	382	பரிமளவகை	407
உலோகவகை	334	பலகாரவகை	402
ஔஷதியின்வகை	28	பறவைஇறைச்சி அல்லது கறிவகை	260
கஞ்சிவகை	394	பாயிரம்	25
கடல்மீன்கறிவகை	274	பால்வகை	51
கடைச்சரக்கின்வகை	279	பாஷாணவகை	329
காய் தானியவகை	252	புசிப்புவகை	380
கீரைவகை	187	புணர்ச்சிவகை	420
கொடிவகை	143	புல்லின்கிழங்குவகை	147
கொடியின்சமூலவகை	136	புல்வகை	126
கொடியின்வேர்வகை	157	புல்லின்வேர்வகை	161
கொடியின்இலைவகை	181	பூவின்வகை	194
கொடியின்புட்பவகை	203	மதுரவகை	75
கொடியின்காய்வகை	217	மதுவின்வகை	77
கொடியின்பழவகை	234	மரவகை	83
கொடியின்வித்துவகை	241	மரத்தின்சமூலவகை	130
சயனவகை	416	மரத்தின்கிழங்குவகை	137
சலவகை	33	மரத்தின்வேர்வகை	149
சாணவகை	72	மரத்தின்பட்டவகை	162
செடிவகை	93	மரத்தின்பிசின்வகை	165
செடியின்சமூலவகை	135	மரத்தின்இலைவகை	169
செடியின்கிழங்குவகை	138	மரத்தின்புஷ்பவகை	194
செடியின்வேர்வகை	154	மரத்தின்பிஞ்சுவகை	206
செடியின்இலைவகை	172	மரத்தின்காய்வகை	208
செடியின்புட்பவகை	200	மரத்தின்பழவகை	223
செடியின்காய்வகை	213	மரத்தின்வித்துவகை	235
செடியின்பழவகை	232	மருந்துவகை	345
செடியின்வித்துவகை	385	மீன்கறிவகை	271
தயிர்வகை	62	மூத்திரவகை	73
தாம்பூலவகை	409	மோர்வகை	64
தேன்வகை	81	வஸ்திரவகை	377
நவரத்தினவகை	338	வாகனவகை	414
நிலத்தின்வகை	31	விசிறிவகை	419
நூற்பயன்	29	வீட்டின்குணவகை	367
நெய்வகை	66	வெண்ணெய்வகை	65
நெற்களின் பொதுவகை	244	வெந்நீர்வகை	48
பஞ்சபூதவகை	30	வைத்தியாங்கம்	340
பதார்த்தம் அல்லது கறிவகை	390	ஸ்நானவிதிவகை	373

தொகை அகராதி முற்றிற்று.

Digitized By Roja Muthiah Research Library

உ

கடவுள் துணை

பெயர் அகராதி

பெயர்கள்	பக்கம்	பெயர்கள்	பக்கம்
அ		அப்பிரகம்	323
		அப்புவின்குணம்	30
அகத்திப்பூ	198	அப்பைக்கோவை	119
அகத்திமரவேர்	153	அமிர்தக்கடுக்காய்	285
அகத்தியிலை	170	அமிர்தக்கொடி	143
அகருமரம்	84	அமுக்கிருக்கிழங்கு	138
அகில்மரம்	83	அம்பர்	321
அக்காரகாரம்	291	அம்மான்பச்சரிசி	121
அக்காரபட்டை	164	அயச்சிந்தூரபத்தியம்	354
அசுவந்திக்கிழங்கு	138	அயச்சிந்தூரம்	345
அடப்பமரப்பிசின்	168	அயிரைமீன்	271
அடப்பம்விதை	239	அரக்கு	322
அடவிநீர்	40	அரசமரச்சமூலம்	130
அடுக்குஇளநீர்	46	அரத்தையின்பொது	288
அட்டுப்பு	316	அரிசிமது	80
அண்டங்காக்கை	270	அரிதாரம்	332
அதளக்காய்	221	அரிவாள்மூக்குப்பச்சிலை	177
அதிகஓட்டம்	415	அருங்கோவை	119
அதிகுளிர்ச்சிக்குளத்துநீர்	37	அருநெல்லிக்காய்	209
அதிசுடுகையன்னம்	385	அருநெல்லிமரவேர்	154
அதிமதுரம்	290	அருவிநீர்	39
அதிரசம்	404	அருள்மரம்	89
அதிவிடயம்	291	அரைக்கூறுகாய்ந்தவெந்நீர்	49
அத்திக்காய்	209	அரைப்புவகை	376
அத்திப்பால்	58	அரோகசந்தானப்புணர்ச்சி	421
அத்திப்பிஞ்சு	207	அரோகிணிக்கடுக்காய்	284
அத்திமரத்தின்மது	80	அலரிப்பூ	201
அத்திமரப்பட்டை	162	அல்லிக்குளத்துநீர்	37
அந்தரத்தாமரை	112	அல்லிப்பூ	204
அபத்தியபதார்த்தம்	358	அவரைப்பிஞ்சு	208
அபயமார்க்கிசமூலம்	136	அவரையிலை	182
அபயன்கடுக்காய்	285	அவுரி இலை	179
அபினி	305	அவுரிவேர்	156
அப்பளக்காரம்	319	அவையடக்கம்	28
அப்பளம்	405	அழிஞ்சில்மரம்	87
அப்பியங்கனம்	374	அழிஞ்சில்வித்து	237

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
அழுக்குவஸ்திரம்	379
அறுகங்கிழங்கு	147
அறுகம்புல்	128
அறுகீரை	191
அறுசுவைமிகுதிக்குணம்	360
அறைக்கீரை	191
அற்பச்சுடுகையன்னம்	385
அன்னபின்னம்	406
அன்னபேதி	321
அன்னமழகியரிசி	249
அன்னுசிப்பழம்	233
அஷ்டமூலம்	162
ஆ	
ஆகாப்பசுவின்பால்	54
ஆகாயக்கக்கரிக்காய்	219
ஆகாயத்தாமரை	112
ஆகாயத்தின்குணம்	31
ஆடாதோடையிலை	172
ஆடாதோடைவேர்	154
ஆடுதீண்டாப்பாளை	106
ஆடையெடுத்ததயிர்	63
ஆடையெடுத்தப்பால்	57
ஆதொண்டை	113
ஆனந்தபைரவம்-ஆனந்தரசம்	347
ஆபரணத்தின்குணம்	380
ஆமணக்குநெய்	68
ஆமைக்கறி	279
ஆமைநெய்	68
ஆயிரங்கச்சிஇளநீர்	47
ஆரைக்கீரை	192
ஆலமரத்தின்சமூலம்	130
ஆலம்பால்	58
ஆலாங்கட்டிநீர்	33
ஆவாரம்பூ	200
ஆவாரைப்பஞ்சாங்கம்	135
ஆவாரைப்பிசின்	168
ஆவாரையின்குணம்	93
ஆளிவித்து	238
ஆள்காட்டிப்பட்சி	266
ஆள்வள்ளிக்கிழங்கு	146
ஆறியநீர்சிரணகாலம்	427
ஆற்றுத்தும்மட்டிக்காய்	223
ஆற்றுநீர்	34
ஆற்றுமீன்	278

பெயர்கள்	பக்கம்
இ	
இஞ்சி	141
இண்டின் கொடி	114
இதிலின்னதை முதலிற்றின்ன வேண்டுமெனல்	412
இத்திக்காய்	211
இத்திப்பிஞ்சு	,,
இந்திரகோபப்பூச்சி	327
இந்துப்பு	316
இரவில் நித்திரைப்பங்கம்	423
இராக்காலக்கறிவகை	361
இராப்பசும்பால்	54
இரும்பு	337
இரும்புக் கெண்டிவெந்நீர்	51
இருவாட்சிமரம்	86
இலந்தைப்பழம்	224
இலந்தைமரத்தின்சமூலம்	131
இலவமரம்	88
இலவம்பஞ்சணை	416
இலவம்பிசின்	167
இலவுநீர்	44
இலுப்பைநெய்	69
இலுப்பைப்பிண்ணாக்கு	310
இலுப்பைப்பூ	199
இலுப்பைபூச்சம்பா	346
இலுப்பைவித்து	237
இலுப்பைவேர்	151
இலைக்கள்ளிப்பால்	61
இவ்விதநோய்க்குத் தயிர்கூடாதெனல்	367
இவ்வித நோய்க்குத் தாம்பூலங்கூடாதெனல்	366
இவ்வித நோய்க்கு நெய்கூடாதெனல்	367
இவ்விதப்பாக்குகளை நீக்கவேண்டுமெனல்	410
இவ்வித மாதர்போகம் கூடாதெனல்	420
இளங்கொட்டைப்பாக்கு	409
இளநீர்	45
இளநீர்சிரணகாலம்	426
இறால்மீன்	272
இன்புறாவேர்	160

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
ஈ	
ஈசனென்னும்பச்சைகர்ப்பூரம்	311
ஈச்சங்கற்கண்டு	79
ஈச்சமது	80
ஈச்சம்வெல்லம்	77
ஈச்சுரமூலி	97
ஈர்க்குச்சம்பாஅரிசி	244
ஈழத்தலரிப்பால்	35
உ	
உகாவித்து	242
உசிலமரச்சமூலம்	133
உடும்பிறைச்சி	258
உடும்புநெய்	68
உண்கலத்தில் முக்கியம்	383
உண்டபின்பருந்துமிளநீர்	48
உண்டபின்புகுறுநடை	407
உண்டபின்வெந்நீரருந்தல்	393
உண்டைசீரணகாலம்	426
உண்டைவெல்லம்	77
உண்பதற்குமுன்பின் கனியுண்ணல்	406
உருதிமரத்தின்வேர்	153
உத்தாமணியிலை	185
உப்பிலாங்கொடி	126
உப்பின்பொதுக்குணம்	315
உப்புநீர்	42
உமிலிஷாரம்	320
உரலாமணக்கு	95
உருத்திரச்சடை	113
உருத்திரச்சடைவித்து	217
உருத்திராக்ஷம்	238
உருளரிசி	302
உலகோத்தமரசம்	348
உல்லமீன்	276
உழுந்து (உளுந்து)	153
உழுந்துக்கஞ்சி	395
உழுந்துவடை	402
உழுந்தோதனம்	407
உழுவைமீன்	273
உள்ளான்கறி	264
உரைகஞ்சி	396

பெயர்கள்	பக்கம்
ஊ	
ஊசிப்பாலைஇலை	183
ஊசிமல்லிகை	115
ஊசிமுளகாய்	216
ஊசியசோறு	397
ஊணுக்குமுன் அருந்துமிளநீர்	48
ஊணுக்குமுன் பின்நடுவி லருந்தும் வெந்நீர்	50
ஊமத்தங்காய்	217
ஊமத்தம்வித்து	241
ஊமத்தை	100
ஊர்க்குருவி	263
ஊர்ப்பன்றியிறைச்சி	257
ஊழலாற்றிமரம்	92
ஊறுகாய்	393
ஊற்றுநீர்	38
ஊன்றுகோல்	416
எ	
எஃகு	337
எட்டிக்கொட்டை	236
எட்டிமரத்தின்வேர்	152
எண்ணெய்அன்னம்	389
எண்வகைதோஷம் நீங்காரசம்	329
எண்வகைவாழைப்பழம்	224
எரிசாலை	105
எரிமுகிநெய்	47
எருக்கம்பட்டை	140
எருக்கம்பால்	61
எருக்கிலை	175
எருமைக்கொம்பு	327
எருமைச்சாணம்	72
எருமைத்தயிர்	63
எருமைநெய்	67
எருமைப்பால்	55
எருமைமூத்திரம்	74
எருமைமோர்	64
எருமைவெண்ணெய்	65
எலியாமணக்கின்பால்	62
எலியிறைச்சி	260
எலுமிச்சங்காய்	212
எலும்பின்குணம்	229
எவாக்கஞ்சி	394
எழுத்தாணிப்பூண்டு	111

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
எள்ளின்நெய்	69
எள்ளு	254
எள்ளுபிண்ணாக்கு	310
எள்ளோதனம்	401
ஏ	
ஏகாதசருத்திரக்குளிகை	381
ஏரிநீர்	38
ஏரிமீன்	278
ஐ	
ஐங்கூட்டுநெய்	72
ஐந்தெண்ணெய்	327
ஒ	
ஒடிக்கிழங்கு	137
ஒட்டறை	327
ஒட்டைத்தயிர்	64
ஒட்டைநெய்	40
ஒட்டைப்பால்	56
ஒட்டைமூத்திரம்	74
ஒட்டைமோர்	64
ஒட்டைவெண்ணெய்	66
ஒதிமரவேர்	,,
ஒயில்வண்டி	414
ஓ	
ஓடைநீர்	38
ஓட்டுவீடு	342
ஓணான்நெய்	68
ஓமம்	304
ஓரிதழ்தாமரை	112
ஓரிலைத்தாமரை	112
ஓலைவாளைக்கருவாடு	274
ஓஷதியின்வகை	4
க	
கக்கரிக்காய்	219
கங்கைநதிநீர்	34
கசகசாவின்குணம்	299
கச்சற்கருவாடு	273
கஞ்சாங்கோரை	107
கஞ்சாவின்குணம்	305
கஞ்சிஅன்னம்	395
கஞ்சிவகைசீரணகாலம்	426
கடப்பம்வித்து	237
கடமானிறைச்சி	257
கடலழிஞ்சில்மரம்	87
கடலிறஞ்சிக்கறி	268
கடலை	253
கடல்நண்டு	278
கடல்நுரை	325
கடல்கெளிற்றுக்கறி	274
கடாரநார்த்தங்காய்	212
கடுகு	277
கடுகுநெய்	70
கடுநெல்லி	287
கடுகுரோகிணி	291
கடுகோதனம்	400
கடுக்காயின்சிறப்பு	283
கடுக்காயின்பேதம்	284
கடுக்காயின்பொதுக்குணம்	283
கடுக்காய்ப்பிஞ்சு	283
கடுக்காய்ப்பூ	270
கட்டமுது	401
கணப்பூண்டிலை	178
கண்டங்கத்திரி	98
கண்டங்கத்திரிசமூலம்	135
கண்டங்கத்திரிக்காய்	214
கண்டங்கத்திரிப்பழம்	232
கண்டில்வெண்ணெய்	290
கண்டுபாரங்கி	288
கத்திரிக்காய்	213
கத்திரிப்பழம்	233
கந்தியுப்பு	317
கபிலைநிறப்பசும்பால்	29
கம்பரிசி	251
கம்பளச்சாம்பல்	327
கம்பளம்	379
கம்பியுப்பு	315
கம்புச்சாதம்	398
கம்மாறுவெற்றிலை	411
கரசணுங்கண்ணி	100
கரடியிறைச்சி	258
கரடிநெய்	68
கரபாத்திரம்	385
கரியசாலை	~~100~~ 241
கரியசாலைவித்து	241

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்	பெயர்கள்	பக்கம்
கரியபோளம்	306	கருவேப்பிலை	170
கருங்கடுக்காய்	285	கருவேலமரவேர்	153
கருங்கல்வீடு	368	கருவேலம்பட்டை	163
கருங்காக்கட்டான்வேர்	158	கருவேலம்பிசின்	168
கருங்காஞ்சொறிவேர்	159	கருவேல்கொழுந்து	169
கருங்காலிநீர்	43	கர்க்கடகசிங்கு	288
கருங்காலிப்பிசின்	166	கர்ச்சூரக்காய்	296
கருங்காலிமரப்பட்டை	164	கர்ப்பூரவள்ளி	115
கருங்காலிமரவேர்	152	கலப்புநெய்	67
கருங்குண்டுமூளகாய்	216	கலப்புவெண்கலம்	383
கருங்குருவிக்கறி	263	கலவைக்கீரை	191
கருங்குறவையரிசி	244	கலிங்கம்	223
கருங்கொக்குக்கறி	265	கலியாணபூசினிக்காய்	217
கருங்கோவை	95	கலியாணமுருக்கம்பூ	199
கருங்கோழிக்கறி	261	கலியாணமுருக்குமரம்	92
கருஞ்சிவதைவேர்	308	கலுமிச்சங்காய்	212
கருஞ்சீரகம்	301	கலுவங்களின்குணம்	342
கருஞ்செம்பைப்பூ	200	கலைமானிறைச்சி	256
கருஞ்செம்பையிலை	173	கலைமான்கொம்பு	326
கருஞ்சோள அரிசி	252	கல்தாமரை	107
கருடன்கிழங்கு	143	கல்துளசி	109
கருணைக்கிழங்குத்தண்டு	187	கல்நார்	323
கருணை முதலிய கிழங்குகள் சீரணகாலம்	425	கல்மதம்	324
		கல்லுண்டைச்சம்பா	246
கருநாவி	307	கல்லுப்பு	315
கருநெய்தற்பூ	204	கல்லுருவிப்பூண்டு	105
கருநெல்லிமரம்	89	கவசம்	353
கருநொச்சியிலை	172	கவடி	326
கருந்துளசி	109	கவுதாறிக்கறி	262
கருப்பூரம்	311	கழற்காய்	242
கறுப்புமணத்தக்காளி	103	கழற்சிஇலை	184
கறுப்புப்பூலாஞ்சமூலம்	135	கழுதைக்குளம்பு	327
கருப்புவழுதுணையிலை	181	கழுதைத்தும்பை	110
கருப்புவஸ்திரம்	379	கழுதைப்பால்	56
கருமைநிறக்கலுவம்	342	கழுதைமூத்திரம்	74
கருமைநிறப்பசும்பால்	53	கழுநீர்சீரணகாலம்	426
கருமைசெம்மைநிறமாதர்முலை	52	கழுநீர்ப்பூ	204
கரும்பயறு	254	களாக்காய்	216
கரும்பாரைநீர்	39	களாப்பழம்	233
கரும்பின்சாறுவெல்லகுணம்	76	களாப்பூ	203
கருவவால்மீன்	277	களாவேர்	156
கருவாகைமரம்	64	களி	398
கருவாழைச்சமூலம்	134	களிப்பாக்கு	410
கருவிளநீர்	47	களிப்பிரண்டை	116
கருவூமத்தை	100	கள்ளிப்பட்டை	164

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்	பெயர்கள்	பக்கம்
கள்ளிமுளையான்	127	காட்டுப்பன்றியிறைச்சி	257
கறிகள்சீரணகாலம்	425	காட்டுப்பிராய்ப்பால்	59
கறிப்பாலையிலை	183	காட்டுப்புங்கவித்து	213
கறிமுள்ளி	98	காட்டுமல்லிகைவேர்	157
கறிமுள்ளிக்காய்	214	காட்டுமுருங்கைச்சமூலம	133
கறியுப்பு	315	காந்தச்சிந்தூரபத்தியம்	354
கறுத்தநீர்	40	காந்தச்சிந்தூரம்	346
கடுநீர்சீரணகாலம்	427	காந்தம்	337
கற்கண்டின்குணம்	78	காய்கள்சீரணகாலம்	426
கற்கோவை	119	காய்ச்சும்பாலுக்குநீரளவை	57
கற்சுண்ணம்	411	காய்த்தானியவகை	228
கற்சூரம்	231	காய்ந்தாறியஇளநீர்செவ்விளநீர்	48
கற்பாசி	328	காய்ந்தாறியசலம் சீரணகாலம்	425
கற்பூரசிலாசத்து	324	காய்ந்தாறியவெந்நீர்	49
கற்பம்ஜீரணகாலம்	204	காய்வள்ளிக்கிழங்கு	147
கற்பேதி	102	காராமணியிலை	183
கற்றளைமீன்	276	காராம்பசுநெய்	66
கற்றாழை	127	காராம்பசுவின்பால்	53
கஸ்தூரிமஞ்சள்	140	காரீயம்	336
கஸ்தூரியின்பேதம்	313	காரைப்பழம்	223
கஸ்தூரியின்பொது	312	காரையிலை	178
கஷாயம்உஷ்ணநிதானம்	327	கார்அரிசி	244
கஷாயம்சீரணகாலம்	452	கார்காலமணப்பூச்சு	407
		கார்போகஅரிசி	298
கா		காலதேசங்களுக்கு அவிரோத பதார்த்தம்	366
காக்கைநெய்	68	காலபேதவிரோசனம்	345
காசினிக்கீரை	194	காலகாலபோசனம்	381
காசினிவிதை	299	காலைகறிக்கானபயறு	360
காடிசீரணகாலம்	426	காலைக்குளியல்	373
காடிநீர்	42	காலைமாலைப்போஜன நெய் மோர் பேதம்	361
காடைக்கண்ணிச்சாதம்	399	காலைவெயில்குணம்	371
காடைக்கறி	262	காலையில்பச்சைப்பாலுண்ண	300
காடைச்சம்பா அரிசி	249	காலைவிழிப்பு	368
காடைச்சாறு	392	கால்கவசமிட்டநடை	415
காட்டாத்திப்பூ	195	கால்கூறுகாய்ந்தவெந்நீர்	25
காட்டாத்திமரம்	86	காவட்டம்புல்	129
காட்டாமணக்கிலை	175	காவிக்கல்	325
காட்டாமணக்கின்பால்	62	காவிரிநதிநீர்	36
காட்டிலந்தைசமூலம்	132	காளான்சம்பா	248
காட்டிருள்ளி	125	காறுக்கருணைக்கிழங்கு	141
காட்டுஏலம்	301	காறுகருணைக்கிழங்கு	141
காட்டுக்கருணைக்கிழங்கு	141	காணுங்கோழிக்கறி	261
காட்டுச்சீரகம்	302	காணும்வாழை	125
காட்டுப்பழுபாகல்	220		

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
இ	
இச்சிலிக்கிழங்கு	283
இட்டிக்கிழங்கு	149
இணற்றுநீர்	18
இணற்றுமீன்	278
இரந்திதகரம்	292
இரந்திநாயகம்	105
இருட்டிப்பட்சிக்கறி	266
இழங்கான்மீன்	278
இழங்குகளின்பொதுக்குணம்	149
இளாக்காய்	193
இளியுரல்பட்டை	164
இளுவைக்கறி	267
இருதம்சீரணகாலம்	425
ஈ	
ஈரியிறைச்சி	259
ஈரைத்தண்டு	187
ஈழ்வாய்நெல்லி	108
கு	
குக்கில்	322
குங்கிலியம்	322
குங்குமப்பூ	313
குடசப்பாலைமரம்	91
குடியோட்டிப்பூண்டு	106
குண்டற்கச்சியிளநீர்	47
குண்டுசம்பா	245
குதிரைக்குளம்படி	105
குதிரைக்குளம்பு	327
குதிரைப்பால்	56
குதிரைமூத்திரம்	74
குதிரையேற்றக்குணம்	414
குதிரையேற்றம்	370
குதிரைவாலி	117
குத்துக்காற்சம்மட்டிவேர்	156
குந்திரிக்கம்	321
குப்பைக்கீரை	167
குப்பைமேனியிலை	179
குமட்டிக்காய்	218
குயில்கறி	265
குருக்கத்திப்பூ	197
குருவிச்சிப்பூண்டு	103
குருவேர்	133
குரோசாணியோமம்	304
குழம்பின்பேதம்	391
குழிப்பரங்கிக்காய்	217
குழிமீட்டான்	107
குழைந்த அன்னம்	386
குளத்துநீர்	37
குளத்துமீன்	278
குளப்பாலைமரம்	92
குளிர்ந்தநீர்சீரணகாலம்	424
குறவைமீன்	271
குறுஞ்சம்பா	247
குறுந்தொட்டிவேர்	133
குறும்பாட்டிறைச்சி	256
குன்மகுடாரம்	348
குன்மக்குடோரி	94
குன்றிமணி	218
குன்றிமணிச்சம்பா	24
குன்றிவித்து	242
கூ	
கூகைக்கிழங்கு	143
கூகைநீறு	296
கூத்தங்குதம்பையிலை	177
கூந்தற்பனை	110
கூழைக்கடாக்கறி	266
கூழ்	398
கெ	
கெண்டிவெந்நீர்	51
கெண்டைமீன்	272
கெவுளிபாத்திரையிளநீர்	24
கெளிற்றுமீன்	249
கே	
கேழ்வரகு	251
கேளியிளநீர்	46
கை	
கைபார்த்தமருத்துவன் நடத்தைகூறல்	341

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
கையாந்தகரை	124
கைவரைச்சம்பா	245
கொ	
கொக்குக்கறி	265
கொசுவுள்ளான்கறி	264
கொஞ்சிப்பட்டை	165
கொடியெலுமிச்சங்காய்	211
கொடிக்கள்ளிப்பால்	61
கொடிக்காசரைக்கீரை	194
கொடிக்காசரைவிதை	170
கொடிக்குரிஞ்சாயிலை	183
கொடியாட்டிறைச்சி	254
கொடிவயலைக்கீரை	165
கொடிவழுதுணைக்காய்	222
கொடிவேலிவேர்	155
கொட்டிக்கிழங்கு	148
கொட்டைஅவரைக்காய்	219
கொட்டைக்கரந்தை	111
கொட்டைப்பாக்கு	409
கொட்டைப்பாசி	125
கொட்டைமுந்திரிப்பழம்	228
கொதிகஞ்சி	396
கொத்தான்கொடி	122
கொத்துமல்லி	302
கொத்துமல்லிக்கீரை	193
கொத்தவரைக்காய்	114
கொம்பசையும்பசும்பால்	53
கொம்புத்தேன்	81
கொம்புப்பாகல்காய்	220
கொமட்டிமாதுளம்பழம்	231
கொய்யாப்பழம்	229
கொல்லன்கோவை	119
கொல்லன்கோவைக்கிழங்கு	142
கொழுக்கட்டை	404
கொழுக்கட்டைமரம்	87
கொளுஞ்சிநாரத்தங்காய்	212
கொஞ்சிநாரத்தைப்பழம்	230
கொள்ளிக்கருவாடு	275
கொள்ளு	254
கொள்ளுக்கஞ்சி	394
கொள்ளுக்காய்வேளை	104
கொள்ளுச்சாறு	392
கொன்றைப்பூ	195

பெயர்கள்	பக்கம்
கோ	
கோங்குமரப்பட்டை	165
கோடகசாலை	96
கோடாசலக்குளிகை	348
கோடைச்சம்பா	248
கோடைப்பூசினிக்காய்	217
கோட்டான்கறி	271
கோதாவிரிநதிநீர்	34
கோதுமைஅடை	404
கோதுமைஅரிசி	251
கோதுமைக்கஞ்சி	395
கோமூத்திரசிலாசித்து	324
கோமேதகம்	339
கோரைக்கிழங்கு	148
கோரைச்சம்பா	247
கோரைப்பாய்	417
கோரையுள்ளான்	264
கோரோசனாதிக்குளிகை	347
கோரோசனை	314
கோவைக்காய்	222
கோவைக்காய்வற்றல்	222
கோவைக்கிழங்கு	142
கோவையிலை	183
கோழிக்கறி	160
கோழிக்கீரை	192
கோழிமுட்டை	262
கோழியவரையிலை	184
கோஷ்டம்	290
கௌ	
கௌரிபாஷாணம்	333
ச	
சகதேவி	110
சகலாத்து	417
சகஸ்திரவேதி	324
சங்கங்குப்பி	97
சங்கஞ்செடிமூலம்	135
சங்கஞ்செடிப்பால்	59
சங்கம்வேர்	154
சடாமாஞ்சில்	292
சணப்பின்குணம்	95
சண்பகப்பூ	195
சண்பகமரவேர்	150

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
சதகுப்பை	304
சதாஉட்காருதல்	389
சதாபலை	186
சதாபாதநடை	415
சதுரக்கள்ளி	126
சதுரக்கள்ளிப்பால்	60
சத்திக்ஷாரம்	319
சந்தனத்தின்பேதம்	314
சந்தனத்தின்பொது	314
சந்தனமரம்	83
சந்திரகாசம்	350
சந்திரகாந்தி	96
சந்திரபிராபாவகம்	350
சந்திரோதயமாத்திரை	320
சமுத்திரசோஷி	299
சமுத்திரநீர்	42
சமைத்ததுவரம்பருப்பு	390
சம்பங்கோழிக்கறி	261
சம்பாரஇட்டலி	403
சம்பாரத்தோசை	258
சம்புநாவல்பழம்	228
சரக்கொன்றைபுளி	227
சரக்கொன்றைமரம்	84
சரளதேவதாரு	83
சரிகைவெள்ளிக்கெண்டிவெந்நீர்	50
சருக்கரைசீரணகாலம்	426
சருக்கரைப்பொங்கல்	400
சருக்கரையின்குணம்	77
சருக்கரைவள்ளிக்கிழங்கு	174
சருக்கரைவேப்பமரம்	79
சருவாகைமரம்	88
சர்வசித்திரசம்	348
சவுரிப்பழம்	318
சவ்வரிசி	250
சவ்வற்சலவணம்	317
சவ்வாது	312
சவ்வியம்	292
சவ்வீரம்	330
சன்னக்கூனி	275
சன்னக்கெண்டை	272
சன்னலவுங்கப்பட்டை	294
சன்னிக்கிழங்கு	146
சா	
சாணைக்கிக்கீரை	189
சாதிக்காய்	295

பெயர்கள்	பக்கம்
சாதிநாரத்தம்பழம்	230
சாதிபத்திரி	295
சாதிக்காய்	418
சாதிப்பூ	205
சாதிலிங்கம்	339
சாமையரிசி	251
சாமைக்கஞ்சி	398
சாமைச்சாதம்	398
சாம்பிராணி	311
சாரப்பருப்பு	240
சாராயம் சீரணகாலம்	425
சாலுவை	377
சாரடைக்கிழங்கு	142
சி	
சிகிச்சையின்பேதம்	340
சிகைக்காய்	223
சிட்டுக்குருவிக்கறி	264
சித்தமண்டூரம்	347
சித்தர்கள் துதி	3
சித்திரநதிநீர்	36
சித்திரமூலம்	135
சித்திரான்னபாற்பொங்கல்	399
சிந்தாமணிக்குளிகை	349
சிந்துநதிநீர்	35
சிந்தூரபூஷணம்	351
சிலம்பம்	370
சிலாசத்து	324
சிலாரசம்	324
சிலேத்மதேகிகட்குஊறுகாய்	366
சிலேத்மதேகிகட்குகறிவகை	365
சிலேத்மதேகிகட்குகீரை	”
சிலேத்மதேகிகட்குரசம்	”
சிலேத்மதேகிகட்குவற்றல்	”
சிலேத்மரோகாரிவஸ்துக்கள்	359
சிவகரந்தை	111
சிவதைவேர்பொது	308
சிவந்தஅரிதாரம்	331
சிவந்தநீர்	40
சிவந்திகடுக்காய்	285
சிவப்புஅம்மான்பச்சரிசி	121
சிவப்புமணத்தக்காளி	103
சிவப்புவஸ்திரம்	379
சிவல்கறி	238

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
சிவனார்வேம்பு	99
சிறவிப்பட்சிக்கறி	268
சிறியகொடிமுந்திரிப்பழம்	234
சிறியானங்கையிலை	176
சிறுஅம்மான்பச்சரிசி	122
சிறுஏலம்	300
சிறுகடுகு	303
சிறுகட்டுக்கொடி	114
சிறுகாஞ்சொறிவேர்	159
சிறுகீரை	191
சிறுகுறிஞ்சாக்கொடி	114
சிறுகுறிஞ்சாவேர்	157
சிறுகொன்றைமரம்	84
சிறுசின்னியிலை	174
சிறுதேக்கு	288
சிறுதேட்கொடுக்கு	96
சிறுநாகப்பூ	296
சிறுநீர்	73
சிறுபசலைக்கீரை	188
சிறுபஞ்சமூலம்	161
சிறுபயறு	253
சிறுபயறுகஞ்சி	395
சிறுபீளை	102
சிறுபுலியிறைச்சி	258
சிறுபுள்ளடி	126
சிறுபூனைக்காலியிலை	185
சிறுவழுதணைவேர்	181
சிறுவள்ளிக்கிழங்கு	147
சிற்றரத்தை	289
சிற்றாமணக்குநெய்	69
சிற்றாமரைப்பூ	203
சிற்றாமுட்டிவேர்	155
சிற்றாரால்மீன்	273
சிற்றீச்சக்குருத்து	171
சிற்றீச்சம்பழம்	232
சிற்றீச்சோலைப்பாய்	418
சிற்றுழாவிலை	171
சின்னிக்கிழங்கு	136
சீ	
சீக்கிரான்	333
சீத்தாப்பழம்	230
சீந்திற்கிழங்கு	143
சீமையகத்தி	67

பெயர்கள்	பக்கம்
சீய்க்காய்	223
சீரகச்சம்பா	248
சீரகம்	301
சீரணகாலஅளவை	424
சீலைச்சாம்பல்	327
சீனக்காரம்	318
சீனிச்சருக்கரை	78
சு	
சுக்கான்கல்	325
சுக்கான்காய்	222
சுக்கான்காய்வற்றல்	,,
சுக்கான்பாறைநீர்	39
சுக்கிலநிரோதனம்	422
சுக்கு	279
சுடுகஞ்சி	394
சுடுகாட்டுப்புகை	372
சுடுநீர்சீரணகாலம்	427
சுண்டைக்காய்	215
சுண்டைக்காய்வற்றல்	215
சுத்தஅன்னம்	386
சுத்தஇட்டலி	403
சுத்தபைரவம்	347
சுத்தமண்டூரம்	347
சுத்தஸ்நானம்	373
சுப்பிரமணியர்துதி	27
சுயமக்கினிமாத்திரை	348
சுரசம்உஷ்ணநிதானம்	353
சுரும்புமீன்	276
சுரைக்காய்	218
சுரையிலை	182
சுரையின்சமூலம்	137
சுவற்றுமுள்ளங்கியிலை	180
சுளுக்குநாயகம்	105
சுறாக்கருவாடு	274
சுறாமீன்	274
சுனைநீர்	38
சூ	
சூதப்பிஞ்சு	207
சூத்திரநாவி	308
சூரணஞ்சீரணகாலம்	425
சூரணத்தண்டு	187

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
சூரியகாந்தி	96
சூரைப்பழம்	233
சூரைப்பட்சிக்கறி	267
சூலைப்பூபதி	351
செ	
செங்கடுகு	302
செங்கடுக்காய்	286
செங்கத்தாரிவேர்	155
செங்கரும்பு	75
செங்கழுநீர்க்கிழங்கு	145
செங்கற்றாழை	127
செங்கீரைத்தண்டு	190
செங்கொட்டை	309
செங்கொட்டைநெய்	71
செங்கோவை	119
செஞ்சம்பா அரிசி	245
செஞ்சோள அரிசி	252
செடிக்காசரைக்கீரை	194
செடிக்காசரைவிதை	,,
செந்தராஇலை	186
செந்தாழம்பூ	197
செந்துளசி	108
செந்தொட்டிவேர்	155
செந்நாயுருவிச்சமூலம்	136
செப்புநெருஞ்சில்	123
செம்பர்த்தம்பூ	201
செம்பருத்திப்பூவின்குணம்	,,
செம்புக்கலம்	383
செம்புலியாட்டிறைச்சி	255
செம்பையிலை	173
செம்மறியாட்டுத்தயிர்	63
செம்மறியாட்டுநெய்	67
செம்மறியாட்டுப்பால்	55
செம்முள்ளி	98
செம்மைநிறக்கலுவம்	342
செம்மைநிறப்பசும்பால்	53
செம்மைநிறமாதர்முலைப்பால்	52
செயநீர்சீரணகாலம்	424
செருப்படை	107
செல்வகத்திப்பூ	198
செவ்வகத்தியிலை	170
செவ்வந்திப்பூ	202
செவ்வல்லிக்கிழங்கு	145
செவ்வல்லிப்பூ	204
செவ்வல்லிவிதை	243
வெவ்வள்ளிக்கொடி	292
செவ்வாமணக்கிலை	173
செய்வியம்	292
செவ்விளநீர்	45
சே	
சேம்பிலை	178
சேம்புக்கிழங்கு	147
சேல்கெண்டைமீன்	274
சேவகனூர்கிழங்கு	139
சேர்க்கைஅவல்	405
சொ	
சொர்னவீடு	367
சொர்ஞனந்தபைரவம்	347
சொற்றைப்பாக்கு	410
சோ	
சோகி	326
சோதிப்புல்	128
சோம்பு	301
சோரியிளநீர்	47
சோளச்சாதம்	399
சோறுசீரணகாலம்	425
சோற்றப்பளம்	405
சௌ	
சௌரிபாஷாணம்	333
த	
தகரையின்குணம்	94
தகரைவித்து	240
தக்கோலப்பொட்டு	299
தக்கோலம்	298
தங்கக்கலம்	382
தசமூலம்	162
தசவிதஅக்கினிகுமாரம்	347
தசைஅத்திப்பழம்	226
தட்டைப்பயறு	254

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
தண்டிகைஏற்றம்	414
தண்ணீர்க்குணம்	33
தண்ணீர்விட்டான்கிழங்கு	144
ததியோதனம்	401
தந்தசடம்	229
தமர்த்தம்பழம்	,,
தயிருளுந்தின்வடை	402
தயிர்சோறுசீரணகாலம்	425
தயிர்மேல்சலசீரணகாலம்	426
தயிலப்புகை	372
தரா	336
தராயிலை	186
தருப்பைப்புல்	128
தலையணையின்குணம்	419
தலைச்சுருளி	103
தவசுமுருங்கையிலை	176
தவிட்டுப்புறு	270
தழுதாழையிலை	175
தளிர்சீரணகாலம்	427
தற்காலபலாபலபதார்த்தம்	367
தன்வந்தரிதுதி	27

தா

பெயர்கள்	பக்கம்
தாகசோபசனமாத்திரை	347
தாடிமக்கினி	230
தாணிக்காய்	287
தாணிப்பூண்டு	103
தாமரைக்கிழங்கு	144
தாமரைக்குளத்துநீர்	37
தாமரைப்பூ	203
தாமரையிலை	384
தாமரைவித்து	243
தாம்பரக்கலம்	383
தாம்பரம் வெள்ளி கலப்புவெண்கலம் இவ்வுண்கலங்கலங்கள்	383
தாம்பரபஸ்பபத்தியம்	355
தாம்பரபஸ்பம்	346
தாம்பியபரணிநதிநீர்	36
தாம்பரப்பாத்திரவெந்நீர்	50
தாம்பரம்	335
தாம்பூலத்தில் இன்னவை விலக்கவேண்டும்	413
தாம்பூலத்தில் காய்ச்சுகட்டி சுக்கு லவங்கம் முதலியவை	412
தாம்பூலந்தின்னுங்காலம்	412
தாம்பூலப்பொது	409
தாம்பூலரசம்	413
தாம்பூலரசம்விழுங்கும்வகை	,,
தாராக்கறி	266
தாழம்பாய்	417
தாழைமரச்சமூலம்	134
தாளகம்	331
தாளிசபத்திரி	295
தாளிப்பனைசமூலம்	134
தான்றிக்காய்	287

தி

பெயர்கள்	பக்கம்
திப்பிலிஅரிசி	250
திப்பிலி	281
திப்பிலிமூலம்	282
திரிகடுகு	,,
திரிவிருத்திக்கடுக்காய்	285
திரிபலம்	287
திரிகடுகாதிமண்டூரம்	347
திரிலோகசிந்தாமணிகுளிகை	349
திரிலோகசூடாமணி	,,
திரிலோகரட்சாமணி	,,
திருநீற்றுப்பச்சை	113
திருகுகள்ளிப்பால்	60
திருக்கைக்கறி	275
தில்லம்வித்து	238
தில்லைமறத்தின்பால்	60
தினப்புணர்ச்சி	422
தினைக்கஞ்சி	398
தினைச்சாதம்	,,
திரிதோஷயமதிரவியம்	260
தினைஅரிசி	252

தீ

பெயர்கள்	பக்கம்
தீக்காய்வதின்குணம்	371
தீநெறிஇழிவுகூறல்	429
தீம்பாலைமரம்	91
தீம்பாலைப்பழம்	228
தீம்பிரண்டை	117

து

பெயர்கள்	பக்கம்
துங்கபத்திரிநதிநீர்	35
துத்தம்	320

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
துத்திநாகம்	337
துத்திப்பூ	202
துத்தியிலை	177
துத்திவித்து	240
தும்பைக்ஷாரம்	320
தும்பையிலை	180
தும்பைப்பூ	202
தும்பராஷ்டகம்	289
துயிலைக்கீரை	189
துராயிலை	186
துரிசு	320
துவரம்பருப்புரசம்	392
துவரை	252
துவையலின்பேதம்	391
துளசி	108
துளசிவிதைக்குணம்	241
துளசிகாசினிவிதை	299

தூ

பெயர்கள்	பக்கம்
தூக்கணங்குருவிக்கறி	263
தூதுளங்காய்	221
தூதுளப்பழம்	234
தூதுளம்பூ	206
தூதுளைச்சமூலம்	136
தூதுளையிலை	181

தெ

பெயர்கள்	பக்கம்
தெங்கின்கற்கண்டு	78
தெங்கின்குருத்து	171
தெங்கின்மது	79
தெங்கின்வெல்லம்	77
தென்னம்பூ	199

தே

பெயர்கள்	பக்கம்
தேங்காய்நெய்	70
தேங்காய்ப்பால்	58
தேங்காய்ப்பிண்ணாக்கு	310
தேட்கொடுக்கின்குணம்	98
தேயுவின்குணம்	30
தேவகந்தம்	110
தேவதாருமரம்	83
தேற்றாங்கொட்டை	236
தேன்றூன்பழம்	227
தேனிலுண்டாகுங்கற்கண்டு	79
தேன்குழல்	403
தேன்சீரணகாலம்	426
தேன்பாகு	76

தை

பெயர்கள்	பக்கம்
தைலங்களின்பத்தியம்	356
தைலஞ்சீரணகாலம்	425
தைலந்தேய்க்கும்விதி	375
தைலாதிகளின்குணம்	,,
தைலப்புகை	372

தொ

பெயர்கள்	பக்கம்
தொக்கணம்	423
தொட்டாற்சுருங்கி	125
தொட்டிப்பாஷாணம்	334

தோ

பெயர்கள்	பக்கம்
தோசை	402

ந

பெயர்கள்	பக்கம்
நகம்	297
நஞ்சறுப்பான்பூண்டு	118
நஞ்சுமுறித்தான்	,,
நடுக்கட்டு	380
நண்டுக்கல்	325
நண்டுக்குழிநீர்	41
நத்தைக்கறி	279
நந்தியாவட்டப்பூ	201
நமிட்டுப்பட்சிக்கறி	267
நாளையின்சமூலம்	137
நரிக்கொன்றைமரம்	84
நரிப்பயற்றங்கொடி	120
நரிவெங்காயம்	149
நருமதாநதிநீர்	35
நல்லநெருஞ்சில்	122
நல்லவெல்லம்	77
நல்லவெல்லம்சீரணகாலம்	426
நல்வேளை	104
நல்பாஷாணம்	334
நவரத்தினவகை	338

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
நவரைவாழைப்பழம்	225
நவலோகபூபதி	351
நவாச்சாரம்	319
நறுந்தாளி	117
நறுமுன்னையிலை	170
நறுவிலிமரச்சமூலம்	132
நறுமணத்தக்காளிக்காய்	114
நன்றுகச்சமையாதஅன்னம்	386
நன்னாரிவேர்	160
நன்னெறிப்பெருமைகூறல்	430
நா	
நாகப்பூ	296
நாகம்	297
நாகதாளிக்கள்ளி	127
நாகப்பழம்	228
நாகமல்லிகைவேர்	157
நாகமுட்டிவேர்	,,
நாட்டுவாழைச்சமூலம்	134
நாணற்கரும்பு	75
நாயுருவிச்சமூலம்	136
நாய்க்கடுகு	303
நாய்த்துளசி	109
நாய்ப்பாகல்	116
நாய்வேளை	104
நாரசிங்கரசம்	348
நார்த்தங்கச்சல்	207
நார்த்தங்காய்	212
நார்த்தம்பழம்	230
நாராயணமண்டூரம்	347
நாருமடி	378
நாரைக்கறி	266
நாரைமான்கபிலைபசும்பால்	53
நாவல்நீர்	43
நாவல்மரப்பட்டை	162
நாவல்வேர்	152
நாவற்பழம்	228
நாவியின்பொது	307
நரளையின்சமூலம்	137
நான்காமீற்றுப்பசும்பால்	54
நான்குவளைநிமிளை	325
நி	
நித்திய அப்பியங்கனம்	375
நித்திரைசெய்தல்	422
நிம்பஇலை	169
நிலஆவாரை	308
நிலக்குமிழ்	101
நிலத்துத்தி	,,
நிலத்துளசி	109
நிலப்பனங்கிழங்கு	138
நிலப்பூசினிக்கிழங்கு	146
நிலம்புறண்டி	95
நிலவிளா	97
நிலவேம்பு	99
நிழலாலுண்டாகுங்குணம்	371
நின்றுற்சிணுங்கி	95
நீ	
நீரடிமுத்து	309
நீரடிமுத்துநெய்	71
நீரருந்துங்கிரமம்	394
நீராகாரநீர்	42
நீராரைக்கீரை	192
நீர்காக்கைகறி	270
நீர்ச்சோறுசீரணகாலம்	425
நீர்ப்பூலா	93
நீர்முள்ளி	100
நீர்முள்ளிவித்து	240
நீர்மேல்நெருப்பு	119
நீலம்	340
நீலாஞ்சனபாஞ்சனம்	333
நீலிவேர்	156
நீலோற்பலம்	204
நீறுண்டிவேர்	160
நு	
நுணுமரத்தின்சமூலம்	132
நூ	
நூற்பயன்	5
நெ	
நெய்அன்னம்	389
நெய்ச்சட்டிப்பூண்டு	110
நெய்சேர்த்துண்பதின்குணம்	390
நெய்தநிலம்	31
நெய்தற்கிழங்கு	145

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
நெய்த்தோலிமீன்	277
நெருஞ்சில்வித்து	243
நெல்லிக்காய்	210
நெல்லிக்காய்கெந்தி	331
நெல்லிமரவேர்	153
நெல்லிமுள்ளி	286
நெற்பொறி	405
நே	
நேர்வாளக்கொட்டை	309
(நேபாளம்)	,,
நொ	
நொச்சிற்பட்டை	164
நொந்தசோறுண்ணல்	415
நோ	
நோயணுகாவிதி	427
ப	
பகல்நித்திரையின்குணம்	424
பகலுறக்கம்நீங்கி மருந்தூட்டும் உபாயம்	344
பகற்பசும்பால்	54
பசலைக்கீரை	188
பசரைக்கீரை	,,
பசியின்குணம்	380
பசுமுன்னைசமூலம்	132
பசுமுன்னையிலை	170
பசும்பாலின்பத்தியம்	367
பசும்பால்சீரணகாலம்	426
பசுவின்சாணம்	72
பசுவின்தயிர்	62
பசுவின்நெய்	66
பசுவின்நெய்முழுக்கு	375
பசுவின்பால்பொது	52
பசுவின்மூத்திரம்	73
பசுவின்மோர்	64
பசுவின்வெண்ணெய்	65
பச்சடியின்பேதம்	391
பச்சரிசிஅன்னம்	386
பச்சரிசிகஞ்சி	395
பச்சரிசிசீரணகாலம்	426
பச்சிலைகிச்சிலி	314

பெயர்கள்	பக்கம்
பச்சை அல்லது வெந்த அறுசுவை சீரணகாலம்	425
பச்சைஅரிசி	240
பச்சையிளநீர்	46
பச்சைக்கடுக்காய்	211
பச்சைக்கர்ப்பூரபேதம்	311
பச்சைகுங்குமப்பூ	194
பச்சைதிப்பிலிவேர்	160
பச்சைநாவி	307
பச்சைப்பயறு	254
பச்சைப்புருக்கறி	269
பச்சைமுளகாய்	216
பச்சையாற்றுநீர்	36
பச்சைவஸ்திரம்	379
பச்சைவிலாமிச்சுவேர்	161
பஞ்சகற்பம்	374
பஞ்சபாஷாணம்	334
பஞ்சமுஷ்டிக்கஞ்சி	396
பஞ்சமூலம்	161
பஞ்சலவணம்	317
பஞ்சலோகபாத்திரவெந்நீர்	51
பஞ்சலோகம்	327
பஞ்சவர்க்கம்	165
பட்டுவஸ்திரம்	377
பண்ணைக்கீரை	189
பதார்த்த உற்பத்தியின்வரலாறு	27
பதார்த்தவகைருசிகள்	28
பத்தியத்தோர் பகற்றுயிலின் குணம்	424
பத்தியபதார்த்தம்	356
பத்தியாபத்தியபதார்த்தம்	367
பம்பந்தரா	126
பயற்றங்காய்	222
பரமசிவன்வணக்கம்	26
பரட்டைக்கீரை	190
பரத்தையர்முலைப்பால்	52
பரமசிவன்துதி	17
பரமானம்	406
பராசத்திதுதி	27
பரிதிக்காய்	211
பிருங்காராமணி	253
பருங்காளான்	129
பருங்கிழங்கு	146
பருங்கோரை	296
பருத்திப்பஞ்சணை	416

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
பருத்தியிலை	177
பருநன்னாரி	144
பருப்புக்கீரை	188
பருப்புப்பொங்கல்	400
பருவழுதுணைவேர்	181
பலகறை	326
பலகாரவகை	402
பலவகைமெழுகு	323
பலாஇலை	384
பலாக்காய்	209
பலாக்கொட்டை	235
பலாமரப்பிசின்	166
பலாசுமரம்	86
பலாப்பழம்	225
பலாப்பிஞ்சு	206
பல்லக்கேற்றம்	414
பல்லிப்பூண்டு	102
பல்லின்குணம்	326
பல்விளக்கத்தகாதவஸ்துக்கள்	372
பல்விளக்கத்தகுந்தகொம்புகள்	,,
பல்விளக்கலின்குணம்	372
பவளக்குன்றி	118
பவளம்	339
பழங்கள்சீரணகாலம்	425
பழச்சாறுசீரணகாலம்	425
பழஞ்சோறு	397
பழமையரிசி	250
பழம்புளி	227
பழயஇளநீர்	45
பழயதேன்	82
பழையவெல்லப்பாகு	76
பள்ளையாட்டிறைச்சி	256
பள்ளையாட்டுநெய்	67
பறங்கியிலை	181
பறங்கிக்காய்	217
பறங்கிப்பட்டை	293
பறங்கிப்பட்டையின்பத்தியம்	355
பற்பாடகம்	112
பனங்கற்கண்டு	78
பனங்கிழங்கு	137
பனங்குருத்து	171
பனம்பூ	200
பனம்பழம்	227
பனிக்காலமணபூச்சு	408
பனிநீர்	33

பெயர்கள்	பக்கம்
பனிப்பயறு	254
பனைநுங்கு	213
பனையின்மது	79
பனையோலைவிசிறி	419
பனைவெல்லம்	77
பன்றிநெய்	68
பன்றிப்புடலங்காய்	220
பன்னீர்	408
பன்னீர்சொம்புவெந்நீர்	51
பன்னீர்பூ	408
பன்னீர்மரப்பூ	197
பஸ்பம்சீரணகாலம்	425
பா	
பாகஞ்செய்வான்குணம்	342
பாகல்இலை	182
பாகல்பழம்	234
பாசிநீர்முதலியநீர்	41
பாதநடை	370
பாதரசதோஷம்	329
பாதரசபத்தியம்	355
பாதரசம்	329
பாதாதிகளில்தைலமிட	376
பாதிரிப்பூ	196
பாதிரிவேர்	150
பாதுகையிட்டநடை	415
பாத்திரபேதப்பால்	57
பாத்திரபேதவெந்நீர்	50
பாயசம்	406
பாலும்அன்னமும்புசித்தல்	387
பாலுள்ளமரஇலை	384
பாலேட்டின்குணம்	58
பாலைநிலம்	32
பாலைபழம்	228
பாலைமரம்	90
பால்அருந்தற்குநாழிகை	388
பால்கஞ்சி	394
பால்கடுக்காய்	286
பால்சீரணகாலம்	425
பாவட்டங்காய்	216
பாவட்டயிலை	174
பாறைநீர்	39
பாற்சொறிக்கீரை	189
பாற்பொங்கல்	387

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
பாஷாணபின்னவச்சிரசம்	348
பாணக்கம்சீரணகாலம்	429
பி	
பிசின்பட்டை	293
பிச்சிப்பூ	205
பிடங்குநாறியிலை	178
பிடாலவணம்	318
பிட்டு	404
பிணியாளர்க்குதயிர்சேர்க்கும் விதி	353
பிணியாளர்க்குமோர்தோய்க்கும் விதி	354
பிணியாளன்குணம்	341
பிண்ணாக்குக்கீரை	193
பித்தசமதிரவியம்	360
பித்ததேகிகட்குஊறுகாய்	364
பித்ததேகிகட்குகறி	363
பித்ததேகிகட்குகீரை	,,
பித்ததேகிகட்குரசம்	364
பித்ததேகிகட்குவற்றல்	,,
பித்தரோகாரிவஸ்து	258
பித்தளை	335
பிரண்டை	116
பிரதாபலங்கேச்சுரம்	351
பிரப்பங்கிழங்கு	142
பிரமதண்டிப்பால்	62
பிரமதருவின்பிசின்	166
பிரமியவழுக்கை	124
பிரதிவிக்கடுக்காய்	284
பிரமானந்தபைரவம்	347
பிளப்புச்சீரகம்	302
பிளவைகொல்லி	106
பீ	
பீங்கான்	326
பீதரோகணி	291
பீநசப்புல்	129
பீர்க்கங்காய்	220
பு	
புகையிலை	181
புங்கமரப்பால்	59
புங்கமரவேர்	152
புங்கின்நெய்	70
புங்குவித்து	237
புசித்த அன்னசாரசெய்கை கூறல்	382
புசித்தபுசிப்பின்பிறிவுகூறல்	382
புடலங்காய்	220
புட்பராகம்	339
புணர்ச்சிசெய்யும்விதி	421
புதியஇளநீர்	45
புதியதேன்	82
புதியஜ	187
புதியன்மூலி	,,
புத்தியசீவிவிதை	299
புரசங்கொட்டை	236
புரசமரம்	86
புலியிறைச்சி	258
புல்லகண்டங்கரும்பு	75
புல்வீடு	368
புழுகுசட்டம்	312
புழுகுச்சம்பாஅரிசி	245
புழுகுப்பூனையிறைச்சி	259
புழுங்கலரிசி	249
புழுங்கலரிசியன்னம்	385
புளிச்சிறுகீரை	191
புளித்தசோறு	397
புளிநரளைக்கிழங்கு	144
புளிப்பிரண்டை	117
புளிப்புக்கீரை	192
புளிமாங்காய்	211
புளியங்காய்	210
புளியங்கொட்டை	236
புளியம்பட்டை	163
புளியம்பழம்	226
புளியம்பூ	199
புளியாரைக்கீரை	192
புளியிலை	169
புளியோதனம்	400
புற்பிசின்	168
புற்றுக்காளான்	130
புற்றுத்தேன்	82
புனற்பாகம்	395
புனற்றண்டு	121
புனுகுப்பூனையிறைச்சி	259

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
புன்னைக்கொட்டை...	237
புன்னைநெய்	70
புன்னைப்பூ	196
புஷ்பஅணை	416
பூ	
பூசினிக்காய்	217
பூசினிஇலை	181
பூசிணிவித்து	241
பூதமரம்	88
பூதாச்சிறையனென்னும் பச்சைக்கருப்பூரம்	312
பூநாகம்	328
பூந்தாழம்பழம்	232
பூபதிமாத்திரை	351
பூபதிரசம்	352
பூமிச்சருக்கரைக்கிழங்கு	139
பூரணச்சந்திரோதயம்	350
பூவரசமூலம்	131
பூனைக்காலிவித்து	242
பூனையிறைச்சி	259
பெ	
பெரியஏலம்	300
பெரியாநங்கையிலை	176
பெருங்கட்டுக்கொடி	114
பெருங்காஞ்சொறிவேர்	250
பெருங்காயம்	305
பெருங்காராமணி	253
பெருங்குமிழமரம்	86
பெருங்கொடிமுந்திரிப்பழம்	234
பெருச்சாளியிறைச்சி	260
பெருஞ்சின்னியிலை	174
பெருஞ்சீரகம்	301
பெருந்தேட்கொடுக்கு	99
பெருமரப்பட்டை	163
பெருமருந்தின்குணம்	100
பெருமருந்தின்வேர்	159
பெரும்பஞ்சமூலம்	161
பெரும்பயறு	253
பெரும்மீனைச்செடி	102
பெரும்பூசினிக்காய்	217
பெருவள்ளிக்கிழங்கு	146

பெயர்கள்	பக்கம்
பே	
பேதிக்கிழங்கு	139
பேதியாகிறபதார்த்தங்கள்	357
பேதியைக்கட்டுகிற பதார்த்தங்கள்	357
பேயகத்தி	97
பேயத்திப்பால்	59
பேயன்வாழைக்கனி சேர்ந்த வடை	402
பேயன்வாழைப்பழம்	225
பேய்க்கற்றாழை	127
பேய்ச்சீந்தில்	143
பேய்ச்சுரையிலை	182
பேய்ச்சுரைவேர்	157
பேய்ப்பாற்சொரி	117
பேய்ப்பீர்க்குவித்து	242
பேய்ப்புடல்	123
பேய்ப்புல்	129
பேய்மிரட்டி	94
பேராரால்மீன்	272
பேரீச்சங்காய்	288
பேரீச்சம்பழம்	231
பேரீச்சங்குருத்து	171
பேரீச்சோலைப்பாய்	418
பேருமாவிலை	171
பொ	
பொங்கல்அன்னம்	387
பொங்கல்சீரணகாலம்	426
பொடுதலை	122
பொந்தன்வாழைப்பழம்	228
பொரிநேர்ந்தகஞ்சி	394
பொரிபூண்டு	103
பொரியலின்பேதம்	390
பொரியுண்டை	405
பொறிக்காளான்	130
பொற்கண்டிவெந்நீர்	50
பொற்சீந்திற்கிழங்கு	143
பொற்றலைக்கையாந்தகரை	124
பொன்அரிதாரம்	332
பொன்முசுட்டை	118
பொன்னாங்காணி	120
பொன்னாந்தட்டான்கறி	268

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
பொன்னுவரை	93
பொன்னின்குணம்	334
பொன்னூமத்தை	107
போ	
போகிக்கக்கூடாதமாதர்	420
போகம்விளைக்கும்கீரை	194
போசனஅளவைகூறல்	381
போசனகஸ்தூரி	207
போசனகாலவிதி	380
போசனஞ்செய்விதி	381
போசனமுடிவில் தயிர் உப்பு கூட்டல்	393
ம	
மகரந்தசீரணகாலம்	426
மகாமண்டூரம்	347
மகாராஜமிருகாங்கம்	349
மகாவசந்தகுசுமாகரம்	350
மகாவன்னிரசம்	348
மகிழம்பூ	196
மகிழம்வித்து	238
மஞ்சள்	140
மஞ்சள்கச்சி இளநீர்	46
மஞ்சள்குளியல்	374
மஞ்சள்நிறக்கலுவம்	342
மஞ்சள்வஸ்திரம்	378
மடலரிதாரக்காடு	332
மடலரிதாரம்	322
மடல்துத்தம்	320
மடவைமீன்கறி	275
மடுமீன்	278
மடையான்கறி	267
மட்டிப்பால்	59
மட்டைநீர்	44
மணக்கத்தைஅரிசி	244
மணக்குழம்புப்பூச்சு	407
மணத்தக்காளிசமூலம்	136
மணத்தக்காளிவற்றல்	215
மணப்பாகு	76
மணலிக்கீரை	192
மணிச்சம்பா	246
மணிப்புறாக்கறி	269
மண்டூரம்	338
மதூகம்	290
மத்தியானக்காலகறிவகை	361
மந்தாரப்பூ	196
மயறிமீன்	277
மயிர்க்கொன்றைப்பூ	195
மயிர்மாணிக்கம்	108
மயிலாலக்கடி	293
மயிலிறகுச்சாம்பல்	327
மயில்கறி	265
மயில்துத்தம்	320
மயில்விசிறி	419
மாகதம்	340
மரைக்காரைப்பழம்	233
மரக்காரைவேர்	155
மரநாயிறைச்சி	259
மரப்பொந்துத்தேன்	81
மரமஞ்சள்	140
மரம், பூ, தளிர் இவைகளின் சீரணகாலம்	427
மரவள்ளிக்கிழங்கு	138
மரியங்காய்	211
மரியங்கொழுந்து	169
மருக்கொழுந்து	113
மருட்கிழங்கு	148
மருதநிலம்	32
மருதமரம்	85
மருதோன்றிமரவேர்	151
மருதோன்வித்து	237
மருத்துவன்குணம்	340
மருந்தருந்தியபின்வாயிலிடும் வஸ்து	344
மருந்தருந்துங்காலஅளவு	352
மருந்தினதுபக்குவகுணம்	343
மருந்துண்பார்க்குஊறுகாய்	354
மருந்துவகை	345
மருந்துவைக்கும்பாத்திரம்	343
மருந்தூட்டுங்காலம்	344
மருந்தூட்டும்பாத்திரம்	344
மருளூமத்தை	101
மலசலம்விடுத்தலின்குணம்	372
மலைதாங்கிப்பூண்டு	106
மலைத்தேன்	81
மலைப்பாலைமரம்	91
மலையேலம்	300

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
மலைவேப்பமரம்	90
மலைவேப்பம்பிசின்	166
மல்லயுத்தம்	370
மல்லிகைச்சம்பா	246
மல்லிகைப்பூ	205
மழைநீரின்குணம்	33
மழைமந்தாரக்குணம்	371
மறுபாககுணம்	343
மனைத்தேன்	82
மனைப்புராக்கறி	270
மஞ்சிலை	332

மா

பெயர்கள்	பக்கம்
மாரிஜலம்	33
மாகாளிக்கிழங்கு	144
மாங்காய்	210
மாங்கிசங்கலந்தஅன்னம்	389
மாங்கிசபேதி	321
மாங்கொட்டை	235
மாசிக்காய்	297
மாசிபத்திரி	113
மாசீரணகாலம்	426
மாடப்புறாக்கறி	269
மாட்டிறைச்சி	258
மாணிக்கம்	338
மாதவி	197
மாதுளம்பழம்	230
மாதுளம்பிஞ்சு	208
மாதுளம்பூ	198
மாதுளைச்சமூலம்	133
மாதுளைவித்து	239
மாந்தப்புல்	129
மாமரவேர்	150
மாமாலையின்குணம்	95
மாம்பழம்	226
மாம்பழம்-காய்-பிஞ்சு	,,
மாம்பிசின்	165
மாம்பிஞ்சு	207
மாலைவெயில்	372
மாவலபருநன்னாரி	144
மாவிலிக்கிழங்கு	77
மாவிலிங்கமரம்	87
மாவிலிங்கமரப்பட்டை	164
மாலைக்குளியல்	373
மாலையணிதல்	408
மானிறப்பசும்பால்	53
மானிறைச்சி	226
மான்செவிக்கள்ளிப்பால்	60

மி

பெயர்கள்	பக்கம்
மிருகாற்றுவிரும்புதல்	415
மிசரிப்பருப்பு	240
மிதாமிதவார்த்தை	370
மிதிபாகல்காய்	221
மிரியார்கூந்தல்	117
மிருகஎலும்பு	326
மிருகக்கொம்பு	326
மிருகப்பல்	326
மிருதாரசிங்கி	333
மிளகரணை	115
மிளகு	280
மிளகுக்காய்	223
மிளகுசம்பா	247
மிளகுதக்காளியிலை	179
மிளகோதனம்	400

மு

பெயர்கள்	பக்கம்
முகிழ்விரியாக்கத்திரிப்பிஞ்சு	208
முக்காடிட்டுநித்திரைசெய்த	461
முக்கால்கூறுகாய்ந்தவெந்நீர்	49
முக்கார்சுண்டியநீர் சீரணகாலம்	427
முக்காலைவேர்	155
முக்கியமாக மருந்துக்குதவாத வஸ்து	356
முக்குளிக்கீரை	193
முக்கூட்டுநெய்	71
முக்கூட்டுநெய் சேர்க்கும்விதி	71
முசலிறைச்சி	258
முசல்செவிக்கள்ளிப்பால்	61
முசற்காதிலை	184
முசுட்டை	118
முடக்கற்றான்	119
முடிச்சுக்கஞ்சு	396
முண்டாச்சு	380
முட்காவேளைகவர்	155
முதலையிறைச்சி	258
முதிர்ந்தபாகு	76

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
முத்தக்காசு	148
முத்து	339
முசுமல்லிகை	112
முசுமுசுக்கையிலை	184
முசுமுசுக்கைவேர்	158
முசுறுமுட்டை	328
முத்துச்சிப்பி	326
முத்துச்சுண்ணம்	411
முந்திரிப்பருப்பு	239
முந்திரிகைமது	80
முப்பத்திரி	295
முருக்கம்பிசின்	167
முருங்கைக்காய்	209
முருங்கைச்சமூலம்	132
முருங்கைப்பிசின்	167
முருங்கைப்பிஞ்சு	207
முருங்கைப்பூ	197
முருங்கைமரப்பட்டை	163
முருங்கையிலை	170
முருங்கையீர்க்கு	230
முருங்கைவித்து	239
முலாங்காய்	,,
முலைப்பால்	51
முலைப்பால்வெண்ணெய்	65
முல்லைநிலம்	32
முல்லைப்பூ	205
முளைக்கீரை	190
முள்துளசி	110
முள்முருக்கமரம்	92
முள்முருக்கம்பூ	199
முள்வெள்ளரிக்காய்	219
முள்ளங்கிக்கிழங்கு	139
முள்ளங்கியிலை	180
முள்ளங்கிவித்து	241
முள்ளம்பன்றியிறைச்சி	257
முள்ளிக்கீரை	190
முள்ளிவமரம்	89
முறுக்கு	403
மூ	
மூக்குறட்டை	120
மூங்கிலரிசி	250
மூங்கிலிலை	171
மூங்கில்மரம்	93
மூங்கிற்பாய்	418
மூலரோகாரிவஸ்து	359
மூன்றுமீற்றுப்பசும்பால்	54
மெ	
மெருகன்கிழங்கு	138
மெழுகு	323
மே	
மேககுலாந்தகன்	348
மேகநாதபூண்டு	128
மேல்வீடு	368
மேனியிலை	255
மை	
மைக்கொன்றைப்பூ	192
மைகொன்றைமரம்	84
மைச்சம்பா அரிசி	248
மொ	
மொச்சக்காய்	220
மொச்சக்கொட்டை	253
மொந்தன்கடுக்காய்	285
மொந்தன்பழம்	225
மோ	
மோதகம்	404
மோதகவல்லிமரம்	87
மோரின்மேல்சலம்சீரணகாலம்	426
மோரும்அன்னமும்புசித்தல்	393
மோர்சேர்ந்தபழையது	397
மோர்ச்சோறுசீரணகாலம்	425
மோர்வகை	425
ய	
யமுனைநதிநீர்	34
யவாக்ஷாரம்	319
யா	
யானைத்திப்பிலி	282
யானைநெருஞ்சில்	123
யானைப்பால்	56
யானைமூத்திரம்	74
யானையேற்றம்	414
யெ	
யெருக்கு	164

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
ர	
ரசகற்பூரம்	330
ரசதாளிக்கரும்பு	75
ரசபூபதி	352
ரசம்சிரணகாலம்	424
ரசாஞ்சனம்	330
ரத்தபோளம்	306
ரத்தினக்கம்பளம்	417
ரா	
ராஜகண்டேச்சுரம்	349
ராஜகேசரிவடகம்	,,
ராஜமிருகாங்கம்	,,
ராஜராஜேச்சுரமாத்திரை	,,
ரே	
ரேவல்சின்னிக்கிழங்கு	139
ரோ	
ரோசாப்பூ	179
ல	
லங்கேச்சுரம்	351
லவங்கப்பட்டை	293
லவங்கப்பத்திரி-லவங்கப்பூ	294
லே	
லேகியம்சிரணகாலம்	425
வ	
வகுளம்பூ	196
வங்கச்சிந்தூரம்	346
வங்காரவள்ளைகீரை	188
வங்கேஸ்வரம்	348
வசந்தகுசுமாகரம்	350
வசம்பு	289
வசலக்கீரை	188
வச்சிரம்	338
வச்சிரவல்லி	116
வச்சிரஇலை	184
வடிகஞ்சி	396
வட்டகிலுகிலுப்பை	96
வட்டத்திருப்பி	229
வயல்நண்டு	278
வயல்நீர்	40
வயிரம்	338
வரகுச்சாதம்	399
வரால்மீன்கறி	271
வரிக்கடுக்காய்	286
வரிக்காளான்	130
வரிக்குமட்டியிலை	185
வரிக்கோவை	119
வரிப்புருக்கறி	269
வரையாட்டிறைச்சி	255
வலம்புரிக்காய்	297
வலியன்குருவிக்கறி	263
வலைக்காளான்	130
வல்லாரை	124
வழுதலங்காய்	222
வளைத்தடிச்சம்பா	247
வளையலுப்பு	316
வள்ளைக்கீரை	188
வறட்பூலாயிலை	173
வறலின்பேதம்	391
வறுத்தமாசிரணகாலம்	426
வன்னப்புருக்கறி	269
வன்னிமரம்	85
வா	
வாகைப்பிசின்	166
வாகைப்பூ	199
வாகைமரம்	88
வாசனைப்புல்	129
வாணக்கந்தம்	331
வாததேகிகட்குஊறுகாய்	363
வாததேகிகட்குக்கீரை	,,
வாததேகிகட்குரசம்	362
வாததேகிகட்குவற்றல்	363
வாதமுதலியமூன்று தேகிகட்கு உப்பு	362
வாதராக்ஷமாத்திரை	347
வாதரோகாரிவஸ்து	358
வாதுமைநெய்	69
வாதுமைப்பருப்பு	239
வாதுமைப்பிசின்	168
வாத்துக்கறி	262
வாயுவின்குணம்	30

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
வாய்விளங்கம்	297
வாலான்அரிசி	244
வாலுழுவைஅரிசி	298
வாலேந்திரபோளம்	306
வால்மிளகு	281
வாழைக்காய்	208
வாழைநீர்	44
வாழைப்பழம்	224
வாழைப்பிஞ்சு	206
வாழைப்பூ	200
வாழைமரசமூலம்	134
வாழையிலை	384
வாளப்பருப்பு	309
வாளைமீன்	273
வாள்அவரைக்காய்	219
வானம்பாடிக்கறி	263
வான்கோழிக்கறி	261
வி	
விசயன்கடுக்காய்	284
விச்சுளிக்கறி	263
விடத்தேரின்குணம்	94
விடத்தேரின்பிசின்	167
விதுகங்காய்	215
விதையத்திப்பழம்	226
வித்துக்களின்பொதுக்குணம்	243
விநாயகர்துதி	25
விநாயகர்துதி	27
விராலியிலை	175
விலாங்குமீன்	277
விலாமிச்சுவேர்	292
வில்வமரத்தின்சமூலம்	131
வில்வமரவேர்	149
விழலரிசி	298
விழித்தவுடன்கண்ணாடிபார்த்தல்	369
விழித்தவுடன்சுத்தசலம்அருந்தல்	368
விழித்தவுடன்பார்க்கத்தகாத வஸ்து	399
ஷை பார்க்கத்தகாதவஸ்துகள்	369
விழுதியிலை	178
விளாமரம்	89
விளாம்பழம்	223
விளாம்பிசின்	267
விஜேதபைரவம்	347
விஷமூங்கிலிலை	186
விஷாரிவஸ்துக்கள்	359
விஷ்ணுகிராந்தி	125
வீ	
வீமனென்னும்பச்சைகர்ப்பூரம்	312
வெ	
வெங்காயப்பூ	206
வெங்காயம்	148
வெங்காயவிதை	241
வெங்காரம்	318
வெட்சிப்பூ	205
வெட்டிவேர்	157
வெட்டிவேர்விசிறி	419
வெட்பாலைமரம்	91
வெட்பாலையரிசி	299
வெண்கடுகு	303
வெண்கலக்கலம்	383
வெண்கலப்பாத்திரவெந்நீர்	50
வெண்கலம்	336
வெண்கழற்சியிலை	185
வெண்காக்கட்டான்வேர்	158
வெண்காலிமரவேர்	151
வெண்கீரைத்தண்டு	187
வெண்குன்றிசமூலம்	137
வெண்சாமரை	420
வெண்சிவதைவேர்	308
வெண்டுங்காய்	214
வெண்டுமிளகாய்	216
வெண்டாக்காய்	214
வெண்ணுகம்	336
வெண்ணொச்சிலிலை	172
வெண்ணெய்ச்சோறு சீரண காலம்	425
வெண்பட்டுவஸ்திரம்	377
வெண்பயறு	254
வெண்புறுக்கறி	268
வெண்மைநிறக்கலுவம்	342
வெண்மைநிறப்பசும்பால்	53
வெதும்படக்கி	94
வெதும்படக்கியிலை	176
வெந்தியக்கீரை	193
வெந்தியம்	304

Digitized By Roja Muthiah Research Library

பெயர்கள்	பக்கம்
வெந்துபாகமான விதைகள் சீரணகாலம்	425
வெந்நீரின்பொதுக்குணம்	48
வெந்நீர்சீரணகாலம்	427
வெந்நீர்வகை	,,
வெய்யிலாலுண்டாகுங்குணம்	370
வெல்லத்தின்மிதாமிதகுணம்	76
வெளிச்சப்பிசின்	306
வெள் அல்லிவிதை	243
வெள்ளெலி இறைச்சி	260
வெள்வவ்வால்கறி	276
வெள்வேலமரம்	92
வெள்ளரிக்காய்	218
வெள்ளரிப்பிஞ்சு காய் பழம்	218
வெள்ளரிவித்து	241
வெள்ளறுகு	111
வெள்ளாட்டிறைச்சி	254
வெள்ளாட்டின்தயிர்	63
வெள்ளாட்டுநெய்	67
வெள்ளாட்டுப்பால்	55
வெள்ளாட்டுப்புழுக்கை	73
வெள்ளாட்டுமூத்திரம்	74
வெள்ளாட்டின்மோர்	63
வெள்ளாட்டுவெண்ணெய்	65
வெள்ளாமணக்கிலை	172
வெள்ளி	335
வெள்ளிபாத்திரவெந்நீர்	50
வெள்ளிக்கலம்	382
வெள்ளிலோத்திரம்	293
வெள்ளீயம்	336
வெள்ளெருக்கம்பால்	61
வெள்ளைக்கிலுகிலுப்பை	96
வெள்ளைக்கீரை	188
வெள்ளைக்குங்கிலியம்	322
வெள்ளைச்சங்கு	326
வெள்ளைச்சாரணை	120
வெள்ளைத்தாமரைப்பூ	203

பெயர்கள்	பக்கம்
வெள்ளைநாவற்பழம்	228
வெள்ளைநாவி	307
வெள்ளைப்பாஷாணம்	333
வெள்ளைப்பூண்டு	305
வெள்ளைமிளகு	281
வெள்ளைவஸ்திரம்	378
வெற்பேந்தி	106
வெற்றிலை	410
வெற்றிலைவள்ளிக்கிழங்கு	147
வே	
வேங்கைமரம்	85
வேப்பநெய்	69
வேப்பமரம்	90
வேப்பம்பிண்ணாக்கு	310
வேப்பம்பூ	198
வேப்பம்வித்து	237
வேப்பிலை	169
வேலம்பட்டைமது	80
வேலிப்பருத்தியிலை	185
வேளைப்பூ	202
வேள்விப்புகை	372
வை	
வைகைநதிநீர்	35
வைடூரியம்	338
வைத்தியாங்கம்	340
ஸ்	
ஸ்நானகாலவிதி	376
ஸ்நானபானங்களுக்குதவாதநீர்	41
ஸ்நானபானங்களுக்குரிய சலம் உஷ்ணநிதானம்	353
க்ஷ	
க்ஷவரத்தின்குணம்	377

பெயர் அகராதி முற்றிற்று.

Digitized By Roja Muthiah Research Library

T. P. Venkatachalam. Pillai

பதார்த்தகுண சிந்தாமணி

மூலமும்-உரையும்

பாயிரம்

விநாயகர் துதி-நேரிசை வெண்பா

ஆதியுமைக் கருள்செ யற்புதசிந் தாமணியை
யாதியுமை யருளா லம்புவியுட்-கோதறுநற்
செந்தமிழாற் கூறுதற்குச் செம்பவள வேழமுகன்
கந்தமலர்ச் செஞ்சரணங் காப்பு.

(ப-ரை.) ஆதி - எப்பொருட்கு மிறைவனுகிய சிவபெருமான், உமைக்கு-உமாதேவியாருக்கு, அருள்செய்-உபதேசித்தருளிய, அற்புத-புதுமையாகிய, சிந்தாமணியை-பதார்த்தகுண சிந்தாமணியை, உமை யருளால் - அவ்வுமாதேவியாரது திருவருளைக்கொண்டு, அம்-அழகு பொருந்திய, புவியில்-இவ்வுலகத்தில், கோது-குற்றம், அறு-நீங்கிய, நல்-நல்ல, செந்தமிழால்-இயற்றமிழ்ப்பாவினுல், கூறுதற்கு-சொல்லுதற்கு, செம்பவளம் - சிவந்தபவளம்போலு நிறத்தையுடைய, வேழ முகன்-யானைமுக விநாயகக்கடவுளது, கந்தம்-பரிமளம் பொருந்திய, மலர்-செந்தாமரை மலரையொத்த, செஞ்சரணம்-சிவப்பாகிய திருவடிகள், காப்பு-காப்பாகும், எ-று.

எந்தக்கருமங்களையுந் தன்னைவணங்கித் தொடங்கின் விக்கின நீக்குதற்கும், வணங்காது தொடங்கின் விக்கினமாக்குதற்குந் தலைவராகி விக்கினேஸ்வரரென்று பெயர்பெற்ற விநாயகக்கடவுளை ஆன்றோரொழுக்கத்தின்படி தாமெடுத்துக்கொண்ட நூல்‌ இடையூறின்றி இனிது முடித்தற் பொருட்டு வணங்கத் தொடங்கி மேலேகூறப்படும் பாக்களுக்கெல்லாம் இது முதற்பாவாதலின் முதற்பாவாகிய வெண்பாவாற் கூறினார்.

(பொ-ரை.) சிவபெருமான் உமாதேவியாருக்கு உபதேசித்தருளிய பதார்த்தகுண சிந்தாமணியாகிய ஆயுள்வேதத்தை அந்த உமாதேவியாரது திருவருளைக்கொண்டு அழகிய இந்த வுலகத்தில் குற்றமற்ற இயற்றமிழ் பாடலாற் சொல்லுதற்கு சிவந்த பவளம்போலும் நிறத்தையுடைய பிரணவ வடிவமாகிய யானைமுகத்தையடைய விநாய

Digitized By Roja Muthiah Research Library

கக்கடவுளது பரிமளம்பொருந்திய செந்தாமரை மலரையொத்த சிவந்த திருவடிகள் காப்பாகும்.

சிவபெருமான் ஆன்மாக்கள் முத்தியடையும் பொருட்டு தனுகரணாதிகளைப்படைத்து, ஊண் உறக்கமுதலிய தொழிற்குரியவைகளாக்கி உபகரித்தலை அவ்வான்மாக்களுணராது அஞ்ஞானத்தால் யான் எனது என்னுஞ் செருக்குற்றுச் செய்கின்ற இருவினைக்கு ஈடாக வியாதிகளினால் மெலிந்து வருந்துமேயென அவ்வான்மாக்களுக்குத் தாயாகிய பார்வதிதேவியார் இரக்கமுற்று விண்ணப்பஞ் செய்தலைச் சிவபெருமான் திருவுளத்தமைத்து அப்பிணிகளை நீக்குவதற்குச் சாதனமாகிய பலபல ஔடதிவகைகளை உபதேசித்தருள, அந்த வுபதேசத்தைப் பெற்றுக்கொண்ட பார்வதிதேவியார் சமஸ்கிருத பாஷையில் சுலோக பூர்வகமாகத் 'தேவிதிரவியரத்நாகரம்' என்று அருளிச்செய்த சாஸ்திரத்தை தமிழ்ப்பாடலாகச் செய்தமையாலும், உமாதேவியாரது கிருபாகடாக்ஷத்தாலன்றிக் கல்வியுஞ்செல்வமும் எய்துவதரிதாகலானும், உமையருளாற் கூறுதற்கென்றும் ஒவ்வொரு ஔடதிவகைகளும் அநேக அற்புதங்களை யுடையவைகளாதலின் அவைகளின் பெருமை தோன்ற அற்புதசிந்தாமணியென அடைமொழிகொடுத்தும், இலக்கண அமைவில்லாத ஏனையநாட்டுப் பாடல்களைப்போலல்லாது சிவபெருமான் தமது திருவாக்கினால் இயற்றமிழாசிரியராகிய அகத்திய மகா முனிவருக் கருள்செய்யப்பட்டதும் அசாத்திய ரோகங்களையும் நீக்கி சரீரத்துக்கு உறுதிபயப்பதுபோல தன்னைத் தோத்தரிக்கின்றவர்களுடைய தீராத மகா பாதகங்களையும் தீர்த்து அருளுதலின் செம்பவள வேழமுகனென்றும், செந்தாமரைமலர் இனிமையும் குளிர்ச்சியுந்தந்து வெம்மைநோய் முதலியவைகளை நீக்குவதுபோல் விநாயகக்கடவுளது திருவடிகள் அடியார்களுடைய பிறவித்துன்பமாகிய வெம்மை நோயைப்போக்கி நித்தியாநந்த வீட்டைத்தருதலின் கந்தமலர்ச்செஞ் சரணமென்றும் கூறினர்.

பரமசிவ வணக்கம்

எல்லாப் பதார்த்தமுமா யெங்குநிறை யொன்றைமுந்நூற்
சொல்லாப் பதார்த்தத்தைத் துப்புரவை-வல்லார்கள்
கூடற் பதார்த்தத்தைக் கொண்டேத்திக் கூறுதுமியாங்
கோடற் பதார்த்த குணம்.

(இ-ள்.) தாவரசங்கமப்பொருள்களும் எவ்விடத்தும் நீக்கமறப்பரிபூரணமாக நிறைந்திருக்கின்ற ஒருபொருளும், இத்தன்மையுடைய

Digitized By Roja Muthiah Research Library

தென்றுதுணிந்து சொல்லப்படாத பொருளும், அநுபவிக்கப்படும் பொருளும், ஐம்பொறிகளையும் வென்றவல்லவர்களாகிய பரமயோகிகள் சேருவதற்குரிய பொருளுமாயிருக்கின்ற பரமசிவத்தைத் தியானித்துத் தோத்திரஞ்செய்து யாவரும் நாடோறும் உண்ணத்தகுவனவாகி இவ்வுலகத்திலிருக்கின்ற பதார்த்தங்களின் குணங்களைச் சொல்லுகிறோம், எ-று. 2

கணபதி-குமரவேள்-சிவன்-உமை-தன்வந்திரி-சித்தர்கள் துதி

சீரார் பதார்த்தகுண சிந்தாமணிக காரணுந்
தாரார் கஜமுகனுஞ் சண்முகனு-நீராருஞ்
செஞ்சடையனும் பரையுந் தேவவயித்தியனும்
விஞ்சுசித்த நாதர்களு மே.

(இ-ள்.) திருவாத்திப் பூமாலையைச் சூடிய யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளும், ஆறு திருமுகங்களையுடைய குமாரக்கடவுளும், கங்கை யணிந்த சிவந்தசடையினையுடைய பரமசிவமும், உமாதேவியாரும், தேவவயித்தியராகிய தன்வந்தரியும், சித்தர்களுக்குள் மேலாகிய ஒன்பது சித்தர்களும் சிறப்புப்பொருந்திய அந்த பதார்த்தகுண சிந்தாமணியாகிய ஆயுள்வேதத்துக்கு காப்பவர், எ-று. 3

பதார்த்த உற்பத்தியின் வரலாறு-விருத்தம்

தேடருமகண்டவொளிப் பிழம்பாய்ஞான
    தீதபூரணமாய்த்தற் செயல்கொண்டெல்லா
மூடவிடவல்லதுமாய்த் தனித்தவொன்றுண்
    மூழ்கினின்றமுக்குணச்சிற் சத்திதன்னில்
நாடனம்பிறந்ததிற்கா லுதித்ததிற்றீ
    நாரமண்ணுண்டாய் மண்தானல்கவந்த
ஓடதியிலனமுமதி லுலகுநிற்கு
    முயர்வாய்ந்தவ்வோடதியி னுரிமைசொல்வாம்.

(இ-ள்.) யாவருந்தேடிக் காண்பதற்கருமையாகிய சகல சோதித்திரட்சியாயும் ஞானத்தின்மேற்பட்ட பூரணமாயும் தனது செய்கையால் யாவற்றையும் ஒடுக்கவும் தோற்றுவிக்கவும் வல்லதாகியும் தனக்கு ஒப்பும் உயர்வுமில்லாது தானே யாவருக்குங் கடவுளாகியும் இருக்கின்ற ஒருபரசிவத்தினுள் மறைந்துநின்ற முக்குணங்களையுடைய ஞானசத்தியினிடத்து பற்றுகின்ற அநந்தம் என்னும் ஆகாயமும் அவ்வாகாயத்தில் வாயுவும் அவ்வாயுவில் தேயுவும் அத்தேயுவில் அப்பும் அவ்வப்புவில் பிருதிவியும் தோன்றி அப்பிருதிவிதோற்றுவிக்க உண்டான

Digitized By Roja Muthiah Research Library

ஒஷதியென்னும் நெல்முதலிய மூலிகையில் அன்னமுண்டாகி அந்த அன்னத்தினால் உலகத்துயிர்கள் நிலைபெற்றிருக்கும்படியான உயர்வை ஆராய்ந்துணர்ந்த அந்த ஒஷதியாகிய பதார்த்தகுணங்களைச் சொல்லு கிறோம் என்க. 4

ஔஷதத்தின் வகை-கட்டளைக்கலித்துறை

விருக்கஞ்செடி கொடிபுன்னுனை தொவ்வொன்றின் விரியனந்த
வருக்கந்தமிற் சிலவேராதி வித்துவரைக்கு மெட்டா
யிருக்கும்பதார்த்த மவற்றிலொவ் வொன்றிங் கிருநிலத்துட்
செருக்கும்பன்னோயை முருக்குங் குணங்கண்டு தேர்வரிதே.

(இ-ள்.) இந்த அகன்ற பூமியினிடத்து முளைத்த ஒஷதி நான்கு வகைப்படும். அவையாவன மரம்-செடி-கொடி-புல் யென்பவைகளாம். இதில் ஒவ்வொரு வருக்கங்களினின்றும் பிரிவுற்றபேதங்களைச் சொல் லுமிடத்து அளவிறந்தவைகளாம். அவைகளிற் சிலது வேர்முதல் வித் தீறுகவெண்வகைப் பதார்த்தங்களாக விருக்கின்றன. இவற்றுள் ஒவ் வொன்றும் பற்பலரோகங்களைக்கொடுக்கும், ஆதலால் அப்பதார்த்தங் களின் குணங்களைக் கண்டறிதல் அரிது என்க. 5

பதார்த்தவகை ருசிகள்-வெண்பா

ஆதியுரி யுண்ணீ ரடைமலர்மெங் காய்விதையென்
றோது பதார்த்தமிவை யோரெட்டும்-பூதலத்துட்
கைப்புவர்ப்பு தித்திப்பு கார்ப்புளிப்பு துவர்ப்பு
வைப்பிவை யாறும்பொருந்து மால்.

(இ-ள்.) இப்பூமியில் நான்குவகையாகிய ஒஷதிகளிருக்கிற எண் வகைப் பதார்த்தங்களாவன, வேர்-பட்டை-கட்டை-ரசம்-இலை-புட்பம்- பழம்-வித்து யென்பவைகளாம். இவற்றுள் ஒவ்வொன்றும் கசப்பு- உப்பு-தித்திப்பு-கார்ப்பு-புளிப்பு-துவர்ப்பு ஆகிய ஆறுவகை ருசிகளையும் பெற்றிருக்கும் என்க. 6

அவையடக்கம்

பதார்த்தகுணஞ்சொல்வதெவன் பார்க்கின்றவெல்லாம்
பதார்த்தமெனினீக்கிற் பழியாம்—பதார்த்தமெனக்
கூறுகடற்குள்ளணவின் கூற்றினவ்வியதத்தோர்
கூறுரைத்தனம்பாருக் குள்.

(இ-ள்.) கண்களாற் பார்க்கப்படுவதுகளெல்லாம் பதார்த்தங்களா மென்றால் அப்பதார்த்தங்களின் வகைகளும் குணகுணங்களும் எவ்

Digitized By Roja Muthiah Research Library

வாறு திரிந்து சொல்லப்படும், சொல்லாமல் நீக்கிவிட்டாலோ பாப முண்டாகும், ஆதலால் பதார்த்தமெனச் சொல்லப்படுகிற சமுத்திரத் துக்குள் ஓரணுவில் கோடி-கோடி-கோடி கோடா கோடியில் ஒரு பிரிவு இந்த வுலகத்திலிருக்கும் மனிதர்களுக்குத் தெரியும்படிக்குச் சொன்னோம் என்க. அவ்வியத்தம்-எண்பதுகோடி, கோடி - கோடி, கோடா கோடியாம். பதார்த்தங்களின் குணகுணங்கள் தெரிந்தால் ஔஷதங்களுக்குச் சேர்க்கும்போது கிரமம் அறிந்து சேர்க்கப்படும். கிரமம் அறியாமல் சேர்த்தால் வியாதி நீங்காமலிருப்பதுமன்றி பிணி யாளன் சரீரத்திற்கும் அபாயம் நேரிடும். ஆதலால் நீக்கிற் பழியாம் என்றார். 7

நூற்பயன்

இந்தப் 'பதார்த்தகுண சிந்தாமணி' என்னுஞ் சாஸ்திரத்திற் சொல்லப்பட்ட பதார்த்தங்களின் குணங்களை யெல்லாம் நன்றாயறிந்து அவற்றுள் நித்தியபோசனத்துக்கு உதவத்தக்க பதார்த்தங்களை சித்தபாகம் வீமபாகம் நளபாகம் தேவபாகம் என்னுஞ் சாஸ்திரங்களிற் சொல்லியபிரகாரம் பாகஞ்செய்து புசிக்கவேண்டும். அவுஷதங்களுக்கு உதவத்தக்க பதார்த்தங்களை சுத்திக்கிரமம் என்னுஞ் சாஸ்திர விதிப்பிரகாரஞ் சுத்திசெய்து சிகிச்சாசாரம் என்னுஞ் சாஸ்திரக் கிரமப்படி முப்பத்திரண்டுவித அவுஷதங்களாகக் கைபாகத்துடன் செய்துமுடித்து ஜீவரக்ஷாமிர்தம் யென்னுஞ் சாத்திரத்தில் சுரயோகம் ஆதியாகக் கீடபேதரோகமீறாக வகுக்கப்பட்டிருக்கின்ற சகல ரோகத்தையும் சிகிச்சாக்கிரமம் என்னுஞ் சாஸ்திரக் கிரமப்பிரகாரம் கொடுத்து நிவர்த்திசெய்ய வேண்டும். இவ்வாறு மேற்சொல்லிய பதார்த்தங்களை உண்டு அனுபவிப்பதுமன்றிச் சூரியோதயமுன் விழித்தல் முதலாகச் சொல்லப்பட்ட தினக்கிரமங்களும் தவறாமல் நடப்பவர்கள் அறம் பொருள் இன்பம் வீடு யென்னும் புருஷார்த்தங்களை அடைவதற்கேதுவான அரோக திடகாத்திரமும் சந்தான சௌபாக்கியமும் தீர்க்காயுளும் பெற்று இவ்வுலகத்தில் வாழ்வார்கள்.

Digitized By Roja Muthiah Research Library

பஞ்சபூதவகை

பிருதிவின் குணம்

பூச விரணம் பொருமல்போம் பொன்முதலாம்
ஆசையுள்ள பண்ட மதிலுண்டாம்-நேசமதாய்த்
தின்றிடிற் பாண்டு செழிக்குமிகத் தேமொழியே
சென்றுலகில் மண்குணத்தைத் தேர்.

(இ-ள்.) மண்ணையரைத்துப் பற்றுப்போடுவதால் வாதத்திலும் உதிரத்திலும் பிறக்குங் கட்டியாகிய விரணங்களும் வாதப்பொருமலும்போம், அன்றியும் சொர்ன ரத்தின முதலியவைகள் பிறப்பதற்கு இடமாம். இதனைத்தின்றால் மிருத்திகாயுக்த பாண்டுரோகமுண்டாகும்.

அப்புவின் குணம்

காசமறுந் தந்தங் கழலாது மேகமுதல்
வீசுமல றணியும் வீரியமாம்-வாசமென
உந்திவளர் குன்ம முதிரஞ் சொறியிவைபோம்
இந்தநறுந் தண்ணீருக் கே.

(இ-ள்.) அப்புவென்கிற தண்ணீரால் நேத்திரத்தைப்பற்றிய பித்தகாசம் பித்தப் பிரமேகம் தேகஉஷ்ணம் பித்தகுன்மம் வெட்டு காயங்களினாற் பெருகாநின்ற உதிரம் சொறி ஆகிய இவைகள்போம் பற்களுக்குறுதியும் சுக்கிலவிருத்தியும் உண்டாம் என்க. 2

தேயுவின் குணம்

கண்டைக்கா லேயுள்வலி காதம்போங் காய்ந்தக்கால்
விண்டே பலபிணியும் விட்டேகும்-விண்டோய்
பொருப்பனைய விட்டமுலைப் பூவையே நாளு
நெருப்பினது குணங்கா ணீ.

(இ-ள்.) தேயுவென்கிற நெருப்பினால் கண்டைக்காலென்கிற சிறு தொடையினது நோயும், தேக கடுப்பும் வாதசிலேஷ்மங்களினால் பிறக்கின்ற சிற்சில ரோகங்களும் நீங்கும் என்க. 3

வாயுவின் குணம்

மேகக் கடுப்பை விளைவிக்கும் வீறிநின்ற
தாகமன விளைப்பைச் சாந்திசெய்யு-மேகத்தின்
புண்ணேயக்கும் பொல்லாது பூவையரே ரூட்சைக்குக்
கண்ணேயக்கு மாகாது காற்று.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) வாயுவென்கிற காற்றானது வெள்ளை விழும்போது ஆண் குறியின் துவாரத்தில் கடுத்தலை யுண்டாக்குவதுந் தவிர மிருதாகம் தேகஉஷ்ணம் இளைப்பு ஆகிய இவைகளைத் தணிக்கும். ஆனால் மது மேகவிரணம் சுரம் கண்ணோய் இவற்றிற்கு ஆகாது என்க. 4

ஆகாயத்தின் குணம்

உலகுமன மும்பலவா மோடதிய மண்ணுஞ்
சகலமுன லுங்காலுஞ் சாற்ற-அலகில்
அநந்தம் பொருளு மடங்கவுழி நல்கும்
அநந்தந் தனைக்கண் டறி.

(இ-ள்.) ஜீவராசிகளும் அன்னரசமும் பலவகைப்பட்ட ஔஷதிகளும் பிரிதிவு அப்பு தேயு வாயுக்களும் சொல்வதற்கு அளவுபடாத சகலபதார்த்தங்களும் அடங்குவதற்கு இடந்தருகின்ற ஆகாயத்தின் றன்மையைக்கண்டு நீ அறிவாயாக என்க. மேற்கூறிய ஐம்பூதங்களுள் ஒவ்வொன்றி னின்றும் பிரிவுற்ற பேதங்களையும் அவற்றின் குணங்களையும் தனித்தனியே சொல்லப்புகின் மிகவும் பெருகும். ஆதலால் அவைகளைப் பூதகுணாகம மகா குணபாட முதலிய நூல்களிற்காண்க.

நிலத்தின் வகை

குறிஞ்சி வருநிலத்திற் கொற்றமுண் டிரத்தம்
உறிஞ்சி வருசுரமு முண்டாம்-அறிஞருரைக்
கையமே தங்குதரத் தாமைவல்லை யுங்கதிக்கும்
ஐயமே தங்கு மறி.

(இ-ள்.) சிலேஷ்மவீடாகிய குறிஞ்சியென்று பெயர்பெற்ற மலைப் பூமியில் விளைகின்ற சகல ஔஷதமுதலிய பொருள்களுக்கும் வன்மையுண்டாம். இதில் வசிப்பவர்க்கு உதிரத்தை முறிக்கின்ற சுரமும் வயிற்றில் ஆமைக்கட்டியும் உண்டாகும் என்க. 6

நெய்தநிலத்தின் குணம்

நெய்தனில மேறுவர்ப்பை நீங்கா துறினுமது
வெய்தனில மேதங்கு வீடாகும்-நொய்தன்
மருங்குடலை முக்காக்கு வல்லுறுப்பை வீக்குங்
கருங்கடலைக் கீழிறக்குங் காண்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) நெய்தல்நிலம் மிகுந்த உவர்ப்பை யகலாதிருந்தாலும் அது பித்தவாயு தங்குவதற்கே இடமாம். இதில் வசிப்பவர் தேகத்தி லுள்ள நுட்பத்தானங்களில் சிலேஷ்மநீரானது கண்டு தடித்தலையுண் டாக்குவதுந் தவிரப் பாதமுதலிய வன்மையான உறுப்புகளில் சிலீபத ரோகத்தையும் குடலண்ட விருத்தியையும் உண்டாக்குமென்க. 7

முல்லைநிலத்தின் குணம்

முல்லை நிலத்தமைய முரிநிரை மேவினுமவ்
வெல்லைநிலைத்த பித்த மெங்குறுங்காண்-அல்லையெனின்
வாதமொழி யாததனுண் மன்னுமவை வழிநோயப்
பேதமொழி யாதறையப் பின்பு.

(இ-ள்.) முல்லைநிலம் ஆடு எருது பசு இவைகளின் கூட்டத்தை யுடைத்தாயிருந்தாலும் அது பித்ததோஷம் அதிகரிப்பதற்கே யிட மாம். அப்படியல்லவென்னில், அத்துடன் வாததோஷமும் நீக்கமின் றிப் பொருந்தும், அவ்விருவகை தோஷங்களால் உற்பத்தியாகிய ரோகபேதங்களைச் சொல்லப்புகின் அரிதாகும் என்க. 8

மருதநிலத்தின் குணம்

மருதநில நன்னீர் வளமொன்றைக் கொண்டே
பொருதநில மாதியநோய் போக்கும்-கருதநிலத்
தாறிரதஞ் சூழவருந் துவரென்றுற் பிணியெல்
லேறிரதஞ் சூழ்புவிக்கு மில்.

(இ-ள்.) மருதநிலம் நல்ல நீர்வளப்பம் ஒன்றினால் வாதபித்த சிலேஷ்மங்களா லுண்டாகின்ற ரோகங்களைப்போக்கும். அன்றியும் அந்நிலத்தில் விளைகின்ற அறுசுவைப் பதார்த்தங்கள் சேர்ந்த உணவை உண்பவர் தம்பேரைச் சொன்னாலும் ரோகங்கள் இவ்வுலகத்தில் இல்லை என்க. 9

பாலைநிலத்தின் குணம்

பாலை நிலம்போற் படரைப் பிறப்பிக்க
மேலைநில மீயாது விரித்ததற்கு-வேலைநில
முப்பிணிக்கு மில்லா முறையே யவற்றுலா
மெப்பிணிக்கு மில்லாமலி தெண்.

(இ-ள்.) பாலைநிலம் துன்மை தருதற்கிடமாவதுந் தவிர உலகிற் சொல்லும் வாதபித்த கபங்களுக்கும் அவைகளால் முறையேவருஞ் சகல பிணிகளுக்கும் இடமாமென்க. 10

Digitized By Roja Muthiah Research Library

ஜலவகை

மாரிசலத்தின் குணம்

சீதமுறுங் குளிர்ச்சி சேருமே சித்தத்துட்
போதந் தெளிவாய்ப் பொருந்துங்கா-ணுதமொடு
விந்தும் வளர்ந்துவரு மேதினியி லெவ்வுயிர்க்குஞ்
சிந்துமழை நீராற் றெளி.

(இ-ள்.) சீதளம்பொருந்திய மாரிநீரால் இப்பூலோகத்திலுள்ள சீவராசிகளுக்குக் குளிர்ச்சி நல்லறிவு சுக்கிலம் சோணிதம் இவைகள் அதிகரிக்கும் என்க. 11

ஆலாங்கட்டி சலத்தின் குணம்

வெண்மாசி மேகமுடன் வீறும் பெரும்பாடு
கண்மாசி காந்தல் கடிதகற்றுந்-தண்மீறும்
விக்கற் சுவாசமுடன் மெய்ம்மயக்க மும்போக்குங்
கக்கு மாலாங்கட்டி காண்.

(இ-ள்.) ஆலாங்கட்டி நீரானது சிலேஷ்மப்பிரமேக பெரும்பாடு நேத்திரத்திற் புகைக்கம்மல், கை கால் எரிவு, விக்கல் சுவாசம் மயக்கம் இவைகளை நீக்கும் குளிர்ச்சியையுண்டாக்கும் என்க. 12

பனிநீரின் குணம்

பனிச்சலத்தை யெல்லுதயம் பானஞ்செய் வாரைத்
தனிச்சொறி சிறங்கு குட்டந்தாபந்-தனிவாதம்
முத்தோஷ நீரிழிவு மூடழல் கிராணியிவை
கொத்தோடு தாழ்ந்தகலுங் கூறு.

(இ-ள்.) பனிநீரைச் சூரியோதயகாலத்தில் அருந்தினவர்க்குச் சொறி சிரந்தி குஷ்டம் தாபம் காசம் கிராணி தனிவாதம் திரிதோஷம் தேகவறட்சி நீரிழிவு இவைகள் அடியோடு நீங்கும் என்க. 13

தணணீரின் குணம்

தண்ணீர் குணமெல்லாந் தான்கேண் மடமயிலே
மண்ணின் குணமல்லான் மற்றுமுண்டோ-உண்ணுங்கால்
ஆறுகுள மேரிமடு வாழ்ந்தகூபஞ் சுனையுள்
ளூறருவி யென்னு முலகு.

(இ-ள்.) தண்ணீர் குணங்களெல்லாம் மண்ணின் குணமேயன்றி வேறில்லை. அதன்விவரம்: ஆறு குளம் ஏரி மடு கிணறு சுனை என்னும் ஆறுவகை இடங்களிற்றங்கி அவ்வவற்றின் குணங்களைப்பெற்ற நீரை யுண்ணுமிடத்தில் அவ்வவ்விடப்பெயர்பெற்றநீரெனச்சொல்வர் என்க.

Digitized By Roja Muthiah Research Library

ஆற்றுநீரின் குணம்

ஆற்றுநீர் வாத மனலங் கபத்தோடு
தோற்றுகின்ற தாகந் தொலைக்குமே-யூற்றமிகுந்
தேகத்தி னோயையெல்லாஞ் சீறித் துரத்திவிடும்
போகத்திற் றுதுவுமாம் போற்று.

(இ-ள்.) ஆற்றுநீரானது வாதம் பித்தகோபம் கபதோஷம் தாகம் சரீரத்திற் பித்தசம்பந்தமான சிற்சிலரோகம் ஆகிய இவைகளைப்போக்கும், சுக்கிலவிருத்தியை உண்டாக்கும் என்க. 15

கங்கைநதி நீரின் குணம்

கங்கைநதி நீர்பிறவிக் காட்டுக்கோ பேரனலாந்
தங்கமுற வப்புனலைத் தூய்க்குங்கால்-அங்கவெப்பு
மந்தங் கயம்பித்தம் வாயுமேகங் காந்தல்
உந்துந்தா கங்களும்போ முன்.

(இ-ள்.) பிறவியாகிய காட்டுக்கு அக்கினியை நிகர்த்த கங்காநதி நீரை அருந்தினால் உட்சூடு மந்தாக்கினி க்ஷயம் பித்தகோபம் வாதாதிக்கம் கீழ்ப்பிரமேகம் தேகயெரிச்சல் தாகம் ஆகிய இவை நீங்கும் என்க. 16

யமுனைநதி நீரின் குணம்

யமுனைநதி நீரா லதிகசுரம் வெண்குட்டஞ்
சமனைநிகர் காசம் வெட்டைதாகம்-வமனமுறு
பித்த மிரைப்பிளைப்பு பேசரிய தாதுநட்டஞ்
சுத்தவெள்ளைப் பாண்டிவைபோஞ் சொல்.

(இ-ள்.) யமுனைநதிநீரில் அதிகசுரம் வெண்குஷ்டரோகம் இருமல் வெட்டை தாகம் பித்தவாந்தி சுவாசம் அயர்ச்சி விந்துநஷ்டம் வெண் பாண்டுரோகம் ஆகிய இவைகள் ஒழியும் என்க. 17

கோதாவரி நீரின் குணம்

கோதாவரி யென்னுங் கோதினதி நீரதனால்
வாதாதி முத்தோஷ வன்சினமும்-பேதாபே
தச்சொறியு முட்சிரங்குந் தாவு குளிர்சுரமு
மிச்சகு விட்டேகு மிசை.

(இ-ள்.) கோதாவரிநதி நீரினால் முத்தோஷக்கோபம் பலவிதச் சொறிகள் உள்சிரங்கு நடுக்கற்சுரம் ஆகிய இவைபோம் என்க. 18

Digitized By Roja Muthiah Research Library

துங்கபத்திராநதி நீரின் குணம்

மாதுங்க பத்திராநீர் வன்ருக வெண்புருக்கி
யோதுங் கரப்பா னரோசிகநோய்-தாதுநட்டம்
நேத்திரதோ ஷங்காச நீரடைப்பு மெய்விவன்னக்
கோத்திரமென் ரேறுதிவை போக்கும்.

(இ-ள்.) துங்கபத்திரிநதி நீரானது வெப்பம் என்புருக்கிரோகம் கரப்பான் விந்துநஷ்டம் கண்புகைச்சல் இருமல் மூத்திரக்கிரிச்சரம் சரீரநிறமாறல் ஆகிய இவைகளை நீக்கும். 19

நருமதாநதி நீரின் குணம்

நருமதா வென்னு நதிப்புனலால் வாந்தி
சுரம்விக்கல் காமாலையின் ரேஷம்-பொருமலிரு
கைகா லெரிவுநீர்க் கட்டுகோழைக் கட்டோ
டைவாத மென்பவைபோ மாங்கு.

(இ-ள்.) நருமதாநதி நீரினுல் வாந்தி சுரம் விக்கல் காமாலை வயிற் றுப்பிசம் கைகால்யெரிவு பித்தகிரிசரம் கபச்சேர்க்கை சிலேஷ்மவாத தொந்தம் ஆகிய இவைகள் நீங்குமென்க. 20

சிந்துநதி நீரின் குணம்

சிந்துநதிப் புனலாற் றேகத் துறுங்கடுப்பு
புந்திமயக் கம்மேகம் புண்வியர்வை-விந்துநட்டம்
அத்திசுரம் வெட்டை யடர்மூத்திரச் சிக்சல்
முற்றியதா கப்பிணிபோ முன்.

(இ-ள்.) சிந்துநதிநீரால் சரீரக்குடைச்சல் புத்திமயக்கம் வெட்டை புண் வியர்வை தாதுநஷ்டம் அஸ்தி தாதுகதசுரம் வெள்ளை மூத்திர கிரிச்சுரம் தாகம் ஆகிய இவைகள் விலகுமென்க. 21

வைகைநதி நீரின் குணம்

வைகை நதிப்புனலால் வாதநீர் குஷ்டமொடுமெய்ச்
செய்கை தவிர்க்குஞ்சோகை திண்கரப்பான்-மெய்யெரிவு
தாகநடுக்க விலந்தாது நஷ்டஞ் சிலவிடமு
மேமிகுந்த வையம் விடுத்தே.

(இ-ள்.) வைகையாற்றுச் சலத்தினுல் வாதமேகம் குஷ்டம் சோபா ரோகம் கரப்பான் தேகயெரிச்சல் தாகம் பாதக்ஷேபகவாதம் தாது நஷ்டம் சிலவிஷம் ஆகிய இவைகள் நீங்குமென்க. 22

Digitized By Roja Muthiah Research Library

சித்திரநதி நீரின் குணம்

சித்திர னதிப்புனற்குத் தேகத் துறுங்கடுப்பு
தொத்து கரப்பான்வாந்தி சூலைகுன்மங்-குத்துகின்ற
மூத்திர தோஷத்தோடு மூடுவா தாதிக்கங்
கோத்தவுன் வீக்கமும்போங் கூறு.

(இ-ள்.) சித்திரநதி நீரினால் சரீரநோவு கரப்பான் வாந்தி சூலை குன்மம் தேகத்தின்குத்தல் வயிற்றுவலி மூத்திரதோஷம் சங்கவாதிரி தோஷம் வாதகோபம் சரீரவீக்கம் ஆகிய இவைகள் போமென்க. 23

காவேரிநதி நீரின் குணம்

காவிரிநீ ராற்பொருமல் சாச்சுவா சஞ்சோபை
நீவுதொண்டைக் கட்டிளைப்பு நீறேற்றம்-பூவுலகின்
மன்னுதிரக் கட்டியொடு வாயுலர லென்பவைபோம்
பின்னுடற்குக் காந்தியுமாம் பேசு.

(இ-ள்.) காவிரியாற்றுச் சலத்தினால் வயிற்றுப்பிசம் இருமல் இரைப்பு வீக்கம் கபக்கட்டு ஆயாசம் சலதோஷம் ரத்தகுன்மம் நாவறட்சி ஆகிய இவைகள் நீங்கும் அழகுண்டாமென்க. 24

தாம்பிரபரனிநதி நீரின் குணம்

தாம்பிரபர னிப்புனலாற் சர்வசுரம் பித்துவிழுத்
தூம்பிர முட்காய்ச்சல் சுவாசநோய்-ரோம்பிமிகக்
கக்குகய மென்புருக்கி கைகா லெரிவுடனே
மிக்குறு தாகங்களும்போம் விள்.

(இ-ள்.) தாம்பிரபரனிநதி ஜலத்தினால் சகலசுரம் பித்ததோஷம் கண்புகைச்சல் உட்சுரம் சுவாசரோகம் க்ஷயம் எலும்புருக்கி கை கால் எரிவு அதிதாகம் ஆகிய இவைகள் விலகுமென்க. 25

பச்சையாற்றின் நீரின் குணம்

பச்சையாற் றுப்புனலைப் பார்த்துவந்த பேர்தமக்கு
நச்சிரும லீளைகப நண்ணுமே-நிச்சயமா
யவ்வளவோ வெண்ணி லனிலமுதிரக் கடுப்புங்
கவ்வுசுர முங்காணுங் காண்.

(இ-ள்.) பச்சையாற்று நீரால் நச்சிறுமல் இரைப்பு கபாதிக்கம் வாதகோபம் ரத்தக்கடுப்பு சுரம் இவை உண்டாம் என்க. 26

Digitized By Roja Muthiah Research Library

குளத்துநீரின் குணம்

குளத்து சலந்தானே கொடிதான வாதம்
வளர்த்தி விடுமப்பான் மதுவாங்-குளிர்ச்சியையு
மெத்தவுண் டாக்குமென மேதினியோர் தங்களுக்கு
கொத்தலரும் பூங்குழலாய் கூறு.

(இ-ள்.) புட்பக்கொத்துகளலரும் அழகிய கூந்தலையுடைய பெண்ணே! குளத்து சலமானது வாதரோகத்தை விருத்திசெய்வதுமன்றி மதுப்பிரமேகசலத்தையும் சீதளத்தையும் உண்டாக்கும் என்க. 27

தாமரைக்குளத்து நீரின் குணம்

தண்டா மரைக்குளத்திற் றங்கு புனலதனு
லுண்டாகும் வாதபித்த முண்மையே-பண்டான
வெக்கைநோய் மாறாது வீறு தபனமுமா
மைக்கருங் கண்மாதே வழுத்து.

(இ-ள்.) மையணிந்த கண்களையுடை மாதே! தாமரைக்குளத்துத் தண்ணீரால் வாதபித்ததொந்தம் புராதனசுரம் அதிதாகம் ஆகிய இவைகள் அதிகரிக்கும் என்க. 28

அல்லிக்குணத்து நீரின் குணம்

அல்லிக்குளத்தி னீர்க்கக் கினிமந்தப் பேதி
மெல்லிச் சொறிசிரங்கு வெப்புடனே-தொல்லுலகில்
தாதுதனி லடசரமுந் தாதுநட்ட முங்கொடுக்குங்
கோல மலர்த்திருவே கூறு.

(இ-ள்.) அல்லிக்குளத்துசலம் அஜீரணபேதி சொறி புண் சுரம் தாதுகண்டகரோகம் தாதுநஷ்டம் இவைகளை உண்டாக்குமென்க. 29

அதிகுளிர்ச்சியுள்ள குளத்துநீரின் குணம்

சீத மிகுந்தசலம் தேகத்தளர்ச்சி விக்கல்
வாதகபங் கடிகள் வாந்திகளிர்-மோதிருமல்
வீறுகுன்ம நோயிவை விளக்குஞ் சரீரமதி
லூருமெனி னேய்பலவா முன்.

(இ-ள்.) அதி குளிர்ச்சியையுடைய குளத்து சலமானது தேகங் கட்டுவிடல் விக்கல் வாதசிலேஷம் தொந்தம் வண்டுகடி முதலியதும் விஷம் வாந்தி குளிர் காசம் வயிற்றுவலி ஆகிய இவைகளை யுண்டாக்கும். அதில் சரீரம் ஊறுமானால் பறபல ரோகங்களும் உண்டாகும் என்க. 30

Digitized By Roja Muthiah Research Library

ஏரிநீர் சுனைநீர் இவைகளின் குணம்

ஏரிசலம் வாதமிகு மதுவே துவர்ப்பாகுங்
கூரியதோர் கற்சுனைநீர் கூறுங்காற்-சீரியதோர்
வாதமொடு பித்தமெழும் வைத்தொருநாட் பின்னுண்ணிற்
சீதமில்லை யுட்டினமாஞ் செப்பு

(இ-ள்.) துவர்ப்புச்சுவையையுடைய ஏரிஜலமானது வாயுவை விருத்திசெய்யும், கற்சுனைசலம் வாத பித்ததோஷமாம். அதையொருநாள் வைத்திருந்து மறுநாளருந்த குளிர்ச்சிநீங்கி உஷ்ணமுண்டாகும்.

ஓடைநீரின் குணம்

ஓடைதரு சலம் யுண்ணவதி தாகமுமா
மேடையெனத் தோட்பலனு மெத்தவா-மோடைமலர்க்
கண்ணு யதுதுவர்ப்புங் காணு மதுரமுமாம்
எந்நாளும் பாரி லியம்பு.

(இ-ள்.) தாமரைமலரையொத்த கண்களையுடைய பெண்ணே! துவர்ப்பும் மதுரமுமுள்ள ஓடைநீர் குடிப்பவர்களுக்கு தாகமும் புஜபலமுமுண்டு. 32

கிணற்றுநீரின் குணம்

ஆசாறக் கூபத் தறலா லதிதாகம்
வீசாகச் சூடுபசி மெய்க்காந்தன்-மாசூலை
மெய்யுள்வலி இடைதுளைப்பு வீழ்மயக்கஞ் சோபைபித்தம்
பையவரு மீளையும் பார்.

(இ-ள்.) குற்றமில்லாத கிணற்றுஜலத்தில் மிகுதாகம் உஷ்ணம் தீபனம் தேகஅழற்சி சூலை சரீரத்துட்கடுப்பு இடுப்புக்குடைச்சல் மயக்கம் வீக்கம் பித்ததோஷம் சுவாசம் ஆகிய இவைகள் விளங்கும். ()

சுனைநீரின் குணம்

சுனைப்புனலைத் துய்த்தார்க்குஞ் சூழ்ந்ததிற் றோய்ந்தார்க்குக்
கனைப்புறுசீ தச்சுரமுங் காணும்-வினைக்குரிய
வாதமுறு மத்தால் வருமே நடுக்கலின்னும்
ஓதுபித்த கோபமுமா முன்.

(இ-ள்.) சுனைத்தண்ணீரை யுண்டவற்கும் அதில் ஸ்நானஞ் செய்தவருக்கும் இருமலோடுங்கூடிய சீதசுரம் வாதகோபம் கபவாதரோகம் பயித்தியதோஷம் இவை உண்டாகும் என்க. 34

ஊற்றுநீரின் குணம்

ஊற்றுசலம் பித்த மொழிக்கு மிணிப்பாகும்
ஆற்றிவிடுந் தாகத்தை யப்பொழுதே-கூற்றுவிழிக்

Digitized By Roja Muthiah Research Library

கொம்ப ரிடையாய் குணகுணங்களைத் தெளிவாய்
நம்பி யுலகோரறிய நாட்டு.

(இ-ள்.) மதுரம்பொருந்திய ஊற்று ஜலமானது மிகுந்த பித்தத்தையும் அதிகதாகத்தையும் உடனே சாந்திசெய்யு மென்க. 35

பாறை நீரின் குணம்

பாறைமீ தூறுகின்ற பானியந் தன்னையுண்ணி
லேறுமுடல மெல்லா மீரிப்பே-வீறுகின்ற
வாதகோ பத்துடனே மாறாச் சுரமுமெழும்
ஓதசனத் துண்டா முவர்ப்பு.

(இ-ள்.) போஜனுந்தத்தில் உவர்ப்பைத்தருகின்ற பாறைஜலத்தினால் தேகஞ்சில்லிடலும் வாதகோஷமும் தீராச்சுரமும் உண்டாமென்க. 36

சுக்கான்பாறை நீரின் குணம்

நீர்க்கடுப் பொடு நெஞ்சினிற் கபக்கட்டு
பார்க்கிற் பித்தம் பலபிணி-சூழ்வதாந்
தீர்க்க தாயுவைத் தீர்த்திடுஞ் சிந்தைநோய்
தாக்குஞ் சுக்கான் றனிப்பாறைத் தோயமே.

(இ-ள்.) சுக்கான் பாறைஜலம் மூத்திரக்கடுப்பு நெஞ்சிற் கபகட்டு பித்தாதிக்கம் கபத்தைப்பற்றிய சிறசில ரோகங்கள் மனோவியாதி ஆகிய இவைகளை யுண்டாக்கும். ஆனால் மகா வாதரோகத்தை விலக்குமென்க. 37

கரும்பாறைநீரின் குணம்

கரும்பாறைத் தண்ணீர் கனசோபை வாந்தி
பெரும்பாடு பித்தசுரம் பீடை-யருந்தயக்க
நீர்க்கடுப்பு தாகமிவை நீக்கிவித்தை புத்தியழ
கேற்கவளர்ப் பிக்குமெய்யை யெண்.

(இ-ள்.) கரும்பாறை ஜலமானது வீக்கம் வாந்தி அசிர்க்காரோகம் பித்தசுரம் மயக்கம் மூத்திரக்கடுப்பு தாகம் ஆகிய இவைகளை விலக்கும். வீரியம் புத்தி அழகு ஆகிய இவற்றை உண்டாக்குமென்க.

அருவிநீரின் குணம்

அருவிநீர் மேக மகற்றுங் கபத்தை
வருவிக்கும் ரத்தபித்த மாற்றும்-பெருமிதமாம்
வேலை யுலகின் மிகுத்தபல முண்டாக்குங்
காலைமலர் முகத்தாய் காண்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) தாமரைமலரை நிகர்த்த முகத்தையுடைய பெண்ணே! மலையருவி ஜலப்பிரமேகத்தையும் ரத்தபித்த ரோகத்தையும் விலக்கும். சிலேஷ்மத்தையும் தேகபலத்தையும் உண்டாக்குமென்க. 39

அடவிநீரின் குணம்

அடவிப் புனலா லதிசீ தாதிக்கம்
உடலிற் கனப்பிளைப்பு முண்டாம்-உடல்வயிறு
நாவிவ் விடம்வெதும்பு நண்ணுந் தலைப்பாரந்
தீவவ் வடற்சுரமாந் தேர்.

(இ-ள்.) கான்யாற்று ஜலத்தை குடிப்பவர்க்கு அதிகசீதளம் தேகபாரிப்பு இளைப்பு சரீரம் வயிறு நாபி ஆகிய இவ்விடங்களில் வெப்பம் தலைக்கனம் வலிபவிஷம் சுரம் இவைகள் உண்டாமென்க. 40

சிவந்தநீரின் குணம்-விருத்தம்

காசபித் தத்தாற் காந்தியு மேகிடும்
ஊச லுட்டின முட்சுரங் காந்தலாம்
நாச தாது வு நண்ணிடு மென்றுரை
வாசமிற் சிவப்பாம் புனல் வண்மையே.

(இ-ள்.) சிவந்தநிறத் தண்ணீரால் இருமலாற்பிறந்த பித்தவுஷ்ணம் விலகும், சுரமும் எரிவும் விந்துநஷ்டமும் உண்டா மென்க. 41

கறுத்தநீரின் குணம்-வெண்பா

கறுத்தஜலம் வாந்தி கரப்பான் வெப்புகாந்தல்
இறுத்தநெஞ்சுக் கட்டீரும் யீளை-மறைப்பில்சுர
நீக்கரிய நெஞ்செரிப்பு நீள்தோஷந் தாகநளிர்
போற்குமன லங்கொடுக்கும் போற்று.

(இ-ள்.) கருமைநிறத்தண்ணீர் வாந்தி கரப்பான் உஷ்ணம் எரிவு மார்புச்சளி காசம் சுவாசம் விடாச்சுரம் புளித்தேப்பம் சகலதோஷம் தாகம் நடுக்கல் ஆகிய இவைகளை விலக்கும், பசியைத்தரும் என்க. 42

வயல்நீரின் குணம்

மேகம்போந் தாகம்போம் வெட்டையுடனே சுரம்போந்
தேகங் குளிர்ச்சியுற்றுத் தேறுங்காண்-சோகமெல்லா
மாறு மிரத்தகய மாறுநோய்க் கோபமிக
மாறும் வயற்புனற்கு வை.

(இ-ள்.) நெற்கழனிகளிலிருக்கும் தண்ணீரால் பிரமேகவிதாகம் வெள்ளைசுரம் மூர்ச்சை ரத்தகாசம் சுரவேகம் ஆகிய இவைகள் விலகும், சப்த தாதுக்களுங் குளிர்ச்சியடைந்து தேகம் பலக்குமென்க. 43

Digitized By Roja Muthiah Research Library

நண்டுக்குழிநீரின் குணம்

வாந்தியறுந் தாகமறு வாறாத விக்கலறுங்
காந்த லெரிவுங் கடிதேகுந்-தோய்ந்துவருங்
கண்டுக் குயர்ந்த கனிமொழியே பன்னாளு
நண்டுக் குழிநீரை நாடு.

(இ-ள்.) கற்கண்டினுமினிய மொழியையுடைய பெண்ணே! வயல் களிலிருக்கின்ற நண்டுக்குழிநீரினால் வமனம் விதாகம் நீங்காதவிக்கல் தேகவெப்பம் எரிவு ஆகிய இவைபோம் என்க. 44

பாசிநீர் முதலிய பலநீரின் குணம்-விருத்தம்

பாசித்தண்ணீர் நோயாக்கும் பருத்தவோடைத் தெளிவூறல்
நேசித்திடவே பிணியில்லை நிலைநீர்க்குண்டாங் குடல்வாதம்
மாசித்தண்ணீர் பித்தகற்றும் வளர்க்குஞ் சுரத்தைச்சரகூறல்
தேசத்தண்ணீர்க் குணந்தன்னைத் தெளியச்சொன்னோந் திண்ணமிதே.

(இ-ள்.) வழுவழுத்த பாசிஜலம் பல பிணிகளையும் உண்டாக்கும், ஊற்றுள்ள ஓடைஜலத்தால் சகலநோய்களும் நீங்கும், கட்டுக்கடை ஜலத்தால் குடல்வாதம் பிறக்கும், பனிமாசுபடிந்த ஜலமானது பித்த கோபத்தை விலக்கும், சரகூறியஜலம் சுராதிக்கத்தைச் செய்யுமென்க.

இதுவுமது

ஆற்றுத்தண்ணீர்க் கழகுண்டா மடைந்தசுனைக்கு மகோதரமாந்
தூற்றுமாறி மெய்யிறுக்குந் துலையாக்கிணறே கயந்திரட்டும்
மாற்றுங்குணமே வியாதியில்லை மாறாக்குளமே வியாதியுண்டு
தோற்றுமதுர மொழிமயிலே துலங்குதண்ணீர்க் குணங்காணே.

(இ-ள்.) மதுரம்பொருந்திய சொல்லையும் மயில்போலுஞ் சாயலையு முடைய பெண்ணே! சீவநதி ஜலத்தால் அழகுண்டாம், நிழலையடைந்த சுனைஜலத்தால் பெருவயிறும், மழைஜலம் தளர்ந்த தேகத்தையும் இறுக்கும், இறைப்பில்லாத கிணற்றுஜலம் க்ஷயத்தைவளர்க்கும், வருத்தும் போக்குமுள்ள குளத்துஜலத்தால் நோயில்லை, இவ்வாறு மாறாத குளத்துஜலம் பிணியைத்தரும் என்க. 46

ஸ்நானபாணங்களுக் குதவாதநீர்-வெண்பா

சந்திரா தித்தர்வலி சாராத நீர்புழுதுற்
கந்த மதிசேறு கனப்பிலையு-திர்ந்தநீர்
தங்குசுவை யில்லாநீர் சாற்றுமிவை ஸ்நானபா
னங்களுக் காகாவுறினோ யாம்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) சந்திர சூரிய கிரணங்கள் காற்று இவைகள் அணுகாத தும் கிருமி தூர்வாசனை சேறுதடித்தல் சாகுதிரல் ருசியின்மையென் னும் இவைகள் பொருந்தியதும் ஆகிய ஜலமானவை ஸ்நானபானங்க ளுக்கு ஆகாவாம், ஆகில்ரோக சம்பவமாம் என்க. 47

நீராகாரநீரின் குணம்

வாதபித்த மைய வறட்சிகளை மாற்றிவிடுந்
தாதுவு முண்டாக்குந் தாகம்போம்-மாதர்மெச்ச
வாராகா ரங்கொடுக்கு மாமதுரத் தைக்கொடுக்கு
நீரா காரத்தெளிவு நீர்.

(இ-ள்.) மிகுமதுரமான நீராகாரத் தெளிஜலமானது வாதபித்த சிலேற்பன வரட்சிகளையுந் தாபத்தையும் விலக்கும், சுக்கிலத்தையும் அழகையும் விருத்திசெய்யும் என்க. 48

காடிநீரின் குணம்

பித்த மயக்கமறும் பேரவுஷதம் முறியும்
உற்றபிணி யிற்சிலவை யோடுங்காண்-சற்றும்
வழங்கா வசீரணமும் வன்பேதியும் போம்
பழங்காடிக் குள்ள பயன்.

(இ-ள்.) பழமையாகிய காடிச்சலத்தினால் பித்தமயக்கமும் சோபா ரோகமுதலிய சிற்சில ரோகங்களும் அசீரணமும் வாதாதிசாரமும் பெரிதாகிய ஔஷதங்களின் நற்குணங்களும் விலகும். 49

உப்புநீரின் குணம்

உப்புநீ ரானுலவை யுள்ளிலோ டிக்குத்தும்
எய்ப்பசன மாம்பித்த மேறிடுங்காண்-செப்புகின்ற
வாயினூ றுஞ்சலமு மாதுவர்ப்பா மாதரசே
யோயுங் குடல்வாத மோர்.

(இ-ள்.) உப்புத்தண்ணீரால் சரீரத்தில் ஓடிக்குத்துகின்ற வாயு வும் அற்பபோசனமும் பித்தமதிகரிப்பும் வாயில் துவர்ப்பாக ஊறுகிற ஜலமும் அதிகரிக்கும், ஆனால் குடல்வாதம் விலகும். 50

சமுத்திரநீரின் குணம்

கடலின் புனலாற் கவிகை பெருநோய்
உடலின் கடுப்புதிரச் சூலை-யடர்குஷ்டம்
வாதகுன்மம் வெப்பிரத்த வாதநீ ராமை
கோதரம் பிலீகமறுங் கூறு.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) கடற்சலத்தினால் கவிகையென்னும் ஒருவித உதரரோகம் பெருவியாதி சரீரக்குடைச்சல் ரத்தகுன்மம் குஷ்டம் வாதகுன்மம் உதிரவாதம் சீராமைக்கட்டி பெருவயிறு பிலீபத்தைப்பற்றிய வியாதி ஆகிய இவைகள் விலகும், பிலீகமென்பது இருதயத்துக் கிடப்புறத்தி லிருக்கும் ஒருவித மாமிசக்கண்டம். 51

இதுவுமது விருத்தம்

குன்ம வாயு குடற்கரி யென்பது
வன்ம மான மலசல பந்தமுங்
கன்ம மாகும் வன்னோய்களுங் காணுமோ
நுன்மை வாரிநீர் காய்ச்சி நுகரினே.

இதுவுமது

உடற் கடுப்புட னுற்றெழு சோணிதம்
நடுக்கு வாதமு நாப்பிடிப் போடுபல்
இடுக்கி ரத்தமு னிற்று விழுவதுந்
துடுக்க தாஞ்சந்நி தோஷமு மோடுமே.

(இ-ள்.) சமுத்திரசலத்தைக் காய்ச்சியுண்டால் வாதகுன்மம் குடற்கரிரோகம் மலசலபந்தம் மிகுவுழைப்பினால் வந்த வியாதிகள் தேகக்கடுப்பு சோணிதவாதம் நடுக்குவாதம் நாக்குப்பிடிப்பு பல்லிடுக்கில் இரத்தம்வருதல் பல்விழுதல் சந்நிதோஷம் ஆகிய இவைகள் விலகும் என்க. 52

நாவல்நீரின் குணம்-வெண்பா

நாவல்வே ரூறுசல நாளுமதி சாரத்தை
மாவலிய மேகத்தை மாற்றுங்காண்-பூவுலகில்
விந்தோ டதிசீதம் வீறுபலம் வெப்பையம்
மந்தமிவை யுண்டாக்கு மால்.

(இ-ள்.) நாவல்வேரூறிய சலமானது பித்தாதிசாரத்தையும் மதுமேகத்தையும் நீக்கும், சுக்கிலவிருத்தி அதிகுளிர்ச்சி தேகபலம் சுரம் சிலேஷ்மகோபம் அக்கினிமந்தம் இவைகளை உண்டாக்கும். 53

கருங்காலிநீரின் குணம்

குட்டங் கபரோகங் குன்மம் பெருவயிறு
நெட்டைப் புழுவுமிரு நீரிழிவும்-விட்டே
யருங்கான கத்தேகு மஞ்சுகமே நல்ல
கருங்காலி நீரதனைக் கண்டு.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) கிளிபோல் வசனிக்கும் பெண்ணே! கருங்காலிவேரூரிய சலத்தினால் குஷ்டம் பித்தக்ஷயம் பித்தகுன்மம் மகோதரம் பெரும் பூநாகக்கிருமி ரத்தப்பசையற்ற திமிர்வாதம் நீரிழிவு ஆகிய இவைகள் விலகுமென்க. 54

இலவுநீரின் குணம்

அட்டகுன்ம னீரிழிவு மற்றிடுமே தேகத்திற்
கெட்டவிரணக் கிருமியறு-மட்டலரும்
கூந்தன்முடி மாதரசே கோதிலில வின்புனலாற்
சேர்ந்தவழ லுந்தணியுஞ் செப்பு.

(இ-ள்.) தேன்பொருந்திய புட்பங்களை யணிந்த கூந்தலையுடைய மாதரசே! இலவமரத்தின் வேரூரிய சலத்தால் அஷ்டகுன்மம் நீரிழிவு ரத்தமற்ற விரணக்கிருமி உட்சூடு இவைபோம். 55

வாழைநீரின் குணம்

வாழைநீர் சீதவெப்பு வல்லபல முண்டாக்கும்
பேழை வயிறுடைக்கும் பெண்மயிலே-யீழும்மல்லி
ரத்தக் கிரிச்ச மெரிநீ ரிவையுடனே
சிற்றிரணம் போக்குந் தெரி.

இதுவுமது

சோம ரோகங்க டுலையு மிளைப்புழலை
நாமமறும் பாண்டுவகை நாடாதே-பூமிதனில்
காழை யெலும்புருக்கி காணு வணங்கரசே
வாழைநீர்க் கென்றுளத்தில் வை.

(இ-ள்.) மாதரசே! வாழைக்கிழங்கில் ஊறுகின்ற சீதோஷ்ண நீரானது பெருவயிறு ரத்தக்கிரிச்சுரம் எரிமூத்திரம் அற்பவிரணம் சோமரோகம் அயர்வு உழலைநோய் பாண்டு எலும்புருக்கி ஆகியவை களை விலக்கும் தேகத்திற்கு வன்மையை யுண்டாக்கும். 56

மட்டைநீரின் குணம்

மட்டை நீராற்கிரிச்ச மாறு மடமயிலே
யொட்டிநின்ற நீரிழிவு மோடுங்காண்-கெட்ட
பவுத்திரமும் புண்ணும் பறக்கும் பயந்தே
புலிக்குள் வயிற்றுக்கடுப்பும் போம்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) தெங்கு பனை முதலிய மட்டைகளிற் பிழிந்த நீரினால் மூத்திரக்கிரிச்சரம் நீரிழிவு பவுத்திரரோகவிரணம் வயிற்றுக்கடுப்பு ஆகிய இவை போமென்க. 57

இளநீரின் குணம்

இளநீரால் வாதபித்த மேகு மனதுந்
தெளிவாய்த் துலங்குமிகு திஷ்டிக்-கொளிவுங்
குளிர்ச்சியு முண்டாகுங் கொடியவன னீங்குந்
தளிர்த்தகன நொய்தாகுஞ் சாற்று.

இதுவுமது

என்றுமி ளனீர்நி றிறக்குங் கபமறுக்குந்
துன்றனலாஞ் சீதமெனச் சொல்லுவர்கா-ணின்றெழும்பும்
பித்தமொடு வாந்தியும்போம் பேதிகட் டிரண்டுமுண்டாங்
கொத்தலரும் பூங்குழலாய் கூறு.

(இ-ள்.) கொத்துக்களினின்று மலர்ந்த வழகிய கூந்தலையுடைய பெண்ணே! முறைமையாக இளநீரைப் பருகினல் வாதகோபம் பித்த தோஷம் வெப்பம் தேகபாரிப்பு கயாதிக்கம் பயித்தியகோபம் வமனம் அதிசாரம் ஆகிய இவை நீங்கும். மனத்தெளிவு நேத்திரத்துலக்கம் குளிர்ச்சி மூத்திரப்பெருக்கம் மலப்போக்கு ஆகிய இவை யுண்டாகும் இது உஷ்ணசீதளத்தையுடையது என்க. 58

செவ்விளநீரின் குணம்

பித்தமொடு தாகம் பெருத்த வழிநடையா
லெய்தலா யாசமிவை யேகு-நித்தியமுஞ்
செவ்விளநீ ருண்டக்காற் றீரும்பல கயமு
மவ்விளநீர் கொங்கைமின்னே யாய்.

(இ-ள்.) சிவந்த விளநீரனைய கொங்கைகளையுடைய மின்னலைப் போன்ற இடையையுடையவளே! தினமுஞ் செவ்விளநீரை யருந்தில் பித்தவிருத்தி தாகம் வழிநடையாலாய இளைப்பு அயர்வு பற்பலக்ஷயம் ஆகியவைகள் நீங்கும். 59

புதிய பழைய இளநீரின் குணம்

புதியிளநீர் பித்தமறும் பூதலத்தோ ருண்ணும்
பதமுடனே யுண்பார் பரிவாய்-நிதநிதமு
முண்ணப் பழுவிளநீ ருண்டா பலவகைநோ
யெண்ணிநீ யறிவா யினி.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) இளவழுக்கையுடைய புதிதாகப் பறிக்கப்பட்ட இளநீரை யுண்பவருக்குப் பித்தகோபம் விலகும். பழைய இளநீரை யுண்டால் ஜலதோஷமுதலிய பற்பல ரோகங்களும் உண்டாம். 60

பச்சை இளநீரின் குணம்

பச்சிளநீர் மேகம் பழஞ்சுரங் களைப்போக்கும்
கச்சிமுலை மாதே கபமறுக்கு-மெச்ச
வயிற்றிற் கிருமியொடு வன்சொறிகண் ணோயும்
அயர்த்தோடச் செய்யு மறி.

(இ-ள்.) வாரிறுக்கிய தனங்களையுடைய பெண்ணே! பச்சையிளநீர் கிழ்ப்பிரமேகம் பழையசுரம் கபாதிக்கம் எறிகிருமி யானைச்சொறி கண்ணோய் ஆகிய இவற்றை நீக்கும் என்க. 61

கேளி இளநீரின் குணம்

கேளியுண்ண மேகம்போங் கேளாய் மடமயிலே
நீளகட்டுக் கீடநிலை யாவாந்-தாளாத
தாகமொடு மந்தமறுந் தானேகரப் பனும்போம்
வேக வனலுந்தணியு மே.

(இ-ள்.) இளமைபொருந்திய மயில்போலுஞ்சாயலையுடைய மாதே! கேளியிளநீரை யுண்பவர்க்கு ரத்தமேகம் மலக்கிருமி விதாகம் மந்தாக்கினி கரப்பான் அதிசுரம் ஆகியவை நீங்கும். 62

மஞ்சள்கச்சி இளநீரின் குணம்

பித்தம்போஞ் சோபையறும் பேருலகி லியாவருக்குந்
தொத்து கபமுந் தொலையுங்காண்-தத்துகின்ற
பொல்லாப் பழஞ்சுரமும் போகுமஞ்சட் கச்சிக்குப்
பொல்லாப் பொன்றில்லைப் புகல்.

(இ-ள்.) மஞ்சள்கச்சி யிளநீரையருந்தினால் பித்ததோஷம் சோபை சிலேஷ்மாதிக்கம் பழயசுரம் ஆகிய இவை விலகும். 63

அடுக்கிளநீரின் குணம்

அடுக்கிளனீர் கயத்தை யண்டா தகற்றும்
வடுக்கண்ணு யின்னும் வருப்போம்-படுக்கும்பேர்
துண்டாற் சுகமெய்து முள்ளாங் கிருமியிதை
கண்டா லிறந்துவிடுங் காண்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) மாவடுவையொத்த கண்களையுடைய பெண்ணே! இன்னு ஞ்சொல்வேன் நித்திரைக்குமுன் அடுக்கிளநீரையுண்டால் கபதோஷமும் மலப்பையைப்பற்றிய கிருமியும்போம் நன்மையுண்டாமென்க. ()

கருவிளநீரின் குணம்

மருமலர்வாழ் மானேகேள் வையகத்தோர் நித்தங்
கருவிளநீ ருண்ணக் கபமுங்-கிருமிநெளி
புண்ணுங் கரப்பானும் போகுமிகக் காந்தியுறு
மெண்ணுமனப் பூரிப்பா மென்.

(இ-ள்) வாசனைபொருந்திய தாமரைமலரில் வசிக்கின்ற மான்போலுங் கண்களையுடைய பெண்ணே! கருமைநிற இளநீரால் கபாதிக்கமும் புழுநெளிகின்ற கரப்பானும் நீங்கும் தேஜசும் மகிழ்ச்சியும் உண்டாம் என்க. 65

சோரியிளநீரின் குணம்

காரிருட் கூந்தற் கருங்கண் மடமயிலே
சோரியிள நீரருந்தச் சோபையறுங்-கூறியதோர்
பச்சி கிருமியறும் பொன்மேனி யாமுடலாம்
பேச்சிற் றெளிவுண்டாம் பேசு.

(இ-ள்.) கறுத்த கூந்தலையுங் கரிய கண்களையும் மயில்போலுஞ் சாயலையுமுடையபெண்ணே! ரத்தவன்ன இளநீரால் வீக்கமும் வயற்றிலுள்ள பூச்சியும் சன்னகிருமியும்போம் தேகம் அழகுதரும் தெளிந்த வசனமுமுண்டா மென்க. 66

ஆயிரங்கச்சி இளநீரின் குணம்

வேகமுறுந் தீபனமாம் விட்டோடு வாதகப
மாகமதிற் சேர்ந்த வரிப்பும்போம்-வாகுறுபுண்
வாயிரங்கு சீழும் வயிற்றுவலியுந் தொலையும்
ஆயிரங் கச்சிக் கறி.

(இ-ள்.) ஆயிரங்கச்சி இளநீரால் வெப்பமும் பசியும் ஆமவாதகபம் தொந்தம் நமச்சல் விரணஞ்சூழ் குன்மம் ஆகிய இவை தீரும்.67

குண்டற்கச்சி இளநீரின் குணம்

அண்டையிலே நின்றூர்க் கரோசிகெடுந் தீபனமாங்
கெண்டைவிழி மாதரசே கேளினுங்-கண்டபடி
குண்டற் கச்சிக்குக் கொடுந்தாக மாறிவிடும்
பண்டைப் பழமலம்போம் பார்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) மகரத்தைப் போன்ற கண்களையுடையவளே! குண்டற்கச்சி இளநீரால் அருசி விதாகம் நாட்பட்ட பழையமலம் ஆகிய இவை போம், ஜடராக்கினியுண்டாம் என்க. 68

ஊணுக்குமுன் அருந்தும் இளநீரின் குணம்

ஊணுக்கு முன்பிளநீ ருண்டாற் பசிபோகும்
வீணுக்குக் குன்மம் விளையுங்காண்-பேணியிதை
மாலை தனிலருந்த மன்னுபுழுச் சாகும்
வேலையொத்த கண்ணாய் விளம்பு.

(இ-ள்.) வேலைநிகர்த்த கண்ணையுடைய மாதே! காலைப்புசிப்பிற்கு முந்தி இளநீருண்டால் பசிநீங்கலன்றிக் குன்மம் ஆம். மாலையில் உண்டால் யெரிகிருமிகள் ஒழியும் என்க. 69

உண்டபின்பு அருந்தும் இளநீரின் குணம்

வாதபித்த மீறுது வன்பயித்தி யந்தீருங்
கோதின் மலஞ்சாயுங் கொடும்பசியா-மாதரசே
மண்டியதோர் வாராது மேனி மினுமினுக்கும்
உண்டபின்பு நல்லிளநீ ருண்.

(இ-ள்.) பெண்கணுயகமே! புசித்தபின்பு இளநீரையுண்டால் வாதபித்த கோபந்தணிவதுமன்றித் தனிப்பித்ததோஷம் விலகும் தாராளமாக மலங்கழியும், அதிதீபனமுண்டாம், நோயணுகாது, தேகம் மினுமினுக்கும் என்க. 70

காய்ந்தாறிய இளநீர் செவ்விளநீர் கேவுளிபாத்திரை இளநீர் இவைகளின் குணம்

காய்ந்தா றியவிளநீர் காசங் கபந்தீர்க்கு
மாய்ந்திடாத் தாகசுர மாற்றுங்காண்-ஆய்ந்ததொரு
செவ்விளநீர் பித்தஞ் சிதைக்குங்கெவுளி கொண்டால்
யெவ்வளவுந் தாபமில்லை யெண்.

(இ-ள்.) மட்டைசீவித் தண்ணீரில் போட்டுக்காச்சி யாற்றிய இளநீரானது இருமல் சகலதோஷம் வறட்சிசுரம் இவைகளைப் போக்கும் செம்மைநிறமுள்ள இளநீர் பித்ததோஷத்தை விலக்கும் கெவுளிபாத்திரையென்னும் இளநீரையுண்டால் உஷ்ணம் விலகுமென்க. 71

வெந்நீரின் போதுக்குணம்

நெஞ்சதிர்ப்பு நெற்றிவலி நீங்காப் புளியேப்பம்
வஞ்சமுற வந்த வயிற்றுநோய்-விஞ்சியே
வீழாமக் கட்டோடு வெப்பிருமற் சுட்டநீர்
ஆழாக்குட் கொள்ள வரும்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) ஆழாக்கு என்னும் அளவாகக் குடிக்கின்ற வெந்நீரினால் எதிர்க்கின்ற உணவு நெற்றிநோவு புளியேப்பம் குன்மம் சீதக்கட்டு சுரம் காசம் ஆகிய இவைகள் போமென்க. 72

காய்ந்தாறிய வெந்நீரின் குணம்

காய்ந்தாற வைத்தநீர் கட்டுழலை விக்கலொடு
வாய்ந்தவதி சாரபித்த மாற்றுங்காண்-சோர்ந்துவரு
மூர்ச்சை விஷம்வாந்தி முன்மயக்க மேகமதி
யூர்ச்சித முத்தோஷம் போக்கும்.

இதுவுமது

காய்ந்தநீ ருண்ணுங்காற் கண்செவிநோய் சூலைகுன்மந்
தோய்ந்த சுரவேகத் தொடரையும்-பாய்ந்தடரும்
வாதத்தின் கோபமிவை மாறுமென லாதியருள்
வேதத்தின் வாக்கியமாம் விள்.

(இ-ள்.) காய்ச்சி ஆற்றியவெந்நீர் உழலைநோய் விக்கல் பேதியாற் கிளைத்த பித்தகோபம் மூர்ச்சை சிலவிஷம் வாந்தி மயக்கம் சுக்கில மேகம் திரிதோஷம் கண்ணோய் செவிக்குத்தல் சூலை குன்மம் சுரவேகம் கோழை வாதாதிக்கம் இவைகளைத் தீர்க்கும். 73

கால்கூறு அரைகூறு காய்ந்த வெந்நீரின் குணம்

கால்கூறு காய்நீராற் காரிகையே பித்தம்போம்
மேற்கூறு பாதிசுட்ட வெந்நீரான்-மேற்கூறும்
வாதமொடு பித்தம்போய் வைத்தொருநாட் சென்றுண்டி
ரோதம் போமோடி யொளித்து.

(இ-ள்.) வைத்த அளவைக்குக் காற்பாகஞ் சுண்டிய வெந்நீரால் பித்தகோபம் நீங்கும். பாதிசுண்டிய வெந்நீரால் வாதபித்த தோஷம் விலகும். அதை மறுநாள் வைத்துண்ணில் திரிதோஷ கோபம்போம்.

முக்காற்கூறு காய்ந்த வெந்நீரின் குணம்

முப்பக் கறக்காய்ந்த முந்தவெந்நீ ரால்வாதஞ்
செப்புங் குளிர்நடுக்கல் தீச்சுரம்வெக்-கைப்பலநோய்
வாதபித்த வையமிவை மாறுஞ் சுரிகுழலே
பூதலத்து ளோரும் புகல்.

(இ-ள்.) சரிந்தகூந்தலையுடைய பெண்ணே! முக்காற்பாகஞ் சுண்டிய வெந்நீரால் வாதவிர்த்தி குளிர்நடுக்கல் கொடுஞ்சுரம் பற்பலபேதி திரிதோஷங்கள் இவைபோமென்க. 75

Digitized By Roja Muthiah Research Library

ஊணுக்கு முன் பின் நடு இக்காலங்களில் அருந்தும் வெந்நீரின் குணம்

ஊணுக்கு முன்புவெந்நீ ருண்டாக்காற் றீபனம்போம்
ஊணுக்குப் பின்பருந்தி லூதியமாம்-ஊணுக்குப்
பாதியி லுண்டாற்பசியும் பாதியாம் வெந்நீரே
யோது சுரவாத மகற்றும்.

(இ-ள்.) உணவுக்குமுந்தி வெந்நீரைக்குடித்தால் பசி மந்தப்படும், பின்பு உண்டால் நன்மையுண்டாம். சாப்பிடும்போது மத்தியிலருந்தினால் பசியுமத்திபமாம். மேலும் வெந்நீரின் சுபாவம் வாதசுரத்தை நீக்குமென்க. 76

போற்கேண்டி வெந்நீரின் குணம்

போற்கெண்டி தன்னில்வெந்நீர் பூரித்துட் கொள்ளுங்காண்
மற்கொண்ட வாயுகபம் வாயருசி-யெற்கொண்ட
மெய்யழல் வெப்புந்தணியும் விநவுநற் புத்தியொடு
மெய்யறிவு மோங்குமென விள்.

(இ-ள்.) வெந்நீரைப் பொற்கெண்டியில் ஆறவைத்தருந்தில் வாத விருத்தி கபகோபம் அரோசகம் சரீரவுஷ்ணம் சுரமாகிய இவைபோம் சுக்கிலமும் நல்லறிவு ஸ்பரிசஞானமுண்டாகு மென்க. 77

சரிகை வெள்ளிக்கேண்டி வெந்நீரின் குணம்

சரிகைவெள்ளிக் கெண்டிதனி லெட்டி லொன்றாய்ப்
பெருகக்காய்ச் சும்புனலைப் பெய்தே-பருகுங்கால்
வெப்பொடு தாகங்குன்மம் வீறுபித்தக் காச்சலும்போந்
துப்பொடுட லுஞ்செழிக்குஞ் சொல்.

(இ-ள்.) எட்டிலொருபங்காய்க் காச்சியநீரை சரிகைவெள்ளிக்கெண்டியில்விட்டுச் சாப்பிட்டால் உஷ்ணம் தாகம் குன்மம் பித்தசுரம் இவை விலகும். தேகத்திற்கு வன்மையும் புஷ்டியுமுண்டா மென்க. 78

தாம்பரம் வெள்ளி பஞ்சலோகம் வெண்கலம் இப்பாத்திரங்களின் வெந்நீரின் குணம்

இரவிவட்டிற் காம்பிரத்த பித்தங்கள் போக்கும்
இரசிவட்டிற் கைய மேகும்-வருகலப்பு
வட்டிலறல் முத்தோஷ மாற்றும்வெண் கலச்சலமெய்க்
கொட்டிரத்த தாதுவைச்சேர்க் கும்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) தாம்பரக்கிண்ணி வெந்நீர் கண்புகைச்சலையும் ரத்தபித்தப்பிணியையும் நீக்கும், வெள்ளிக்கிண்ணத்து வெந்நீரால் கபநோய் நீங்கும், பஞ்சலோகவட்டில் வெந்நீர் திரிதோஷத்தைவிலக்கும், வெண்கலப்பாத்திர வெந்நீர் உதிரத்தைப் பெருக்குமென்க. இரவி-தாம்பரம்.

கெண்டிவெந்நீரின் குணம்

கெண்டிதனிற் காய்ந்திடுநீ ரானதை யாற்றியுண
அண்டிய நோயு மடர்சிரங்கும்-பண்டைக்
குடைச்சலும் கைகாலிற் குடைச்சலொடு சந்தின்
குடைச்சலும்போம் நன்ருகக் கூறு.

(இ-ள்.) கெண்டியில் காய்ந்த நீரையாற்றியுண்ணச் சுரம் சிரங்கு சந்தி கை காலிடுப்பு இவ்விடங்களில் குடைச்சல் ஆகிய இவைபோம்.

பன்னீர்ச்செம்பு வெந்நீரின் குணம்

பன்னீர்ச் செம்பிற்காய்ந்த பானீயம் விட்டருந்த
மன்னிய சுவாசம்விக்கல் மாபிரமை-பன்னரிய
பித்த சிலேஷ்மவளி பேசரிய தாளின்வலி
யித்தரையை விட்டகலு மெண்.

(இ-ள்.) பன்னீர்செம்பில் காய்ந்த வெந்நீரை விட்டருந்த இரைப்பு விக்கல் சித்தப்பிரமை திரிதோஷம் தாளுபாகரோகம் ஆகியவைபோம்.

இரும்புக்கெண்டி வெந்நீரின் குணம்

இரும்புநறுங் கெண்டிதனி லேந்திய வெந்நீரை
விரும்பியுணப் பாண்டு விலகுந்-திரும்பவுமோ
தாதுவுமா நாடிகளுந் தாமுரக்குந் தேகமதிற்
சீதசுக முண்டாந் தெளி.

(இ-ள்.) இரும்புக்கெண்டி வெந்நீருக்குப் பாண்டு நீங்கும் தாது விருத்தி, நரம்புகளுக்குறுதியும் தேகத்தில் சீதோஷ்ணம் உண்டாம். 82

பால்வகை

முலைப்பால் போதுக் குணம்

தன்னியமென் ருேதிச் சுருவதோ ஷங்களும்போம்
உன்னிய தாபமொழியுங் காண்-சந்நியொடு
வாதசுரம் பித்தசுரம் வன்கபச் சுரந்தணியுங்
கோதில் வலிமையுண்டாங் கூறு.

Digitized By Roja Muthiah Research Library

இதுவுமது

இருந்தோஷம் போக்கு மிகற்கிரிச்சந் தீர்க்கும்
அருந்து மருந்தி னனுபானம்-பொருந்தும்
அஞ்சனத்திற் காகு மனல்வறட்சி நீக்கிவிடும்
பஞ்சினடி மாதர்முலைப் பால்.

(இ-ள்.) முலைப்பால் எழுவகைத்தோஷங்கள் வெப்பம் சந்நி பாதம் வாதபித்த கபசுரங்கள் திரிதோஷம் வாதகிரிச்சரம் நாவரட்சி ஆகிய இவைகளைவிலக்கி வன்மையைத்தரும் ஔஷத அனுபானத்திற் கும் கலிக்கத்திற்கும் ஆகுமெனக. தன்னியம் என்பது முலைப்பால். 83

கருமை செம்மைநிற மாதர்களின் முலைப்பாற்குணம்

கரியநிற மாதர் கலசமுலைக் க்ஷீரம்
அரியவிழிக் காமருந்திற் காகா-திருநிலத்துள்
நோயணுகாச் செய்ய நுடக்கிடையார் தம்முலைப்பால்
தீயமுத் தோஷம்போக்குஞ் சேர்.

(இ-ள்.) கரியநிறமாதர் முலைப்பால் கண் வயித்தியங்களுக்கே யன்றி ஔஷதங்களுக் குபயோகமாகாது வியாதியில்லாத செம்மைநிற மாதர்முலைப்பால் வாதாதி முத்தோஷங்களைப்போக்கும். க்ஷீரம்-பால்.

பரத்தையர் முலைப்பாற் குணம்

பரத்தையர் முலைப்பாற்குப் பாரமுத் தோஷங்கள்
உரத்து வரும்வாத முண்டாகும்-இரத்தச்
சொறிகிரந்தி புண்ணுங் தொடர்கழ லேய்சேருங்
குறியறிந்து நீக்கிக் கொடு.

(இ-ள்.) வேசையர் முலைப்பாலால் திரிதோஷங்கள் வாதரோகம் இரத்தச்சொறி கிரந்தி விரணம் கழல்வாதம் இவையுண்டா மெனக. ()

பசுவின்பாற் பொதுக்குணம்

பாலர் கிழவர் பழஞ்சுரந்தோர் புண்ணுளி
சூலையர் மேகத்தோர் துற்பலத்தோர்-எனுமிவர்
எல்லார்க்கு மாகு மிளைத்தவர்க்குஞ் சாதகமாம்
நல்லாய் பசுவின்பால் நாட்டு.

(இ-ள்.) பசுவின் பாலானது பாலருக்கும் விருத்தருக்கும் பழய சுரம் விரணம் சூலை பிரமேகம் துர்ப்பலம் அதிசுஷ்கரோகம் ஆகிய இவைகளை யுடையவர்களுக்கும் ஆகுமெனக. 86

Digitized By Roja Muthiah Research Library

வெண்மை செம்மை கருமை கபிலை என்னும் இன்னிறமுள்ள பசுக்களின் பாற்குணம்

வெண்பசுவின் பால்போக்கும் பித்தத்தை மெய்சிவந்த
வண்பசுவின் பால்போக்கும் வாதத்தைக்-கண்சிறந்த
காராவின் பால்போக்கு மையங் கபிலைப்பால்
ஆரமிர்தாங் தோஷ மறுக்கும்.

(இ-ள்.) வெண்மைநிறப் பசுவின்பால் பித்தகோபத்தையும், செம்மைநிறப் பசுவின்பால் வாததோஷத்தையும், கருமைநிறப் பசுவின் பால் கபரோகத்தையும், கபிலைநிறப் பசுவின்பால் திரிதோஷத்தையும் போக்கும். கபிலை என்பது-கருமைகலந்த பொன்னிறமாம் என்க. 87

காராம்பசுவின் பாற்குணம்

கண்ணோ யகற்றுங் கயரோகந் தான்போக்கு
மண்ணிலுள்ள பால்தோஷம் மாற்றுங்காண்-பெண்ணே
இரத்தபித்தம் போக்கு மிராச வசியங்
கறுத்தபசும் பாலதனைக் காண்.

(இ-ள்.) பெண்ணே! காராம்பசுப்பால் விழிப்பிணி க்ஷயம் மற்ற பாலின் தோஷங்கள் ரத்தபித்தரோகம் இவைகளை நீக்கும் ராஜவசியமாம். 88

நாரைமான் கபிலை என்னும் பசுக்களின் பாற்குணம்

நாரைப் பசுவின்பால் நாளுமுய லோயகற்று
மாரைநிறப் பசும்பால் வாய்த்திடுநோ-வேரையுறு
முப்பிணியும் போகு மொழிகபிலை யின்பாலுக்
கெப்பிணியும் போமே யிறங்கி.

(இ-ள்.) நாரைப்பசும்பால் முயல்வலிதீர்க்கும். வாணிப்பசும்பாலால் திரிதோஷமும் கபிலைநிறப்பசும்பாலால் பலபிணியும் தீருமென்க.

கோம்பசையும்பசுவின் பாற்குணம்

கொம்பசையு மாப்பாலே கூறுபித்தம் போக்கிவிடும்
தம்பவா தத்தைத் தருவிக்கும்-வம்புமுலை
மானேகேள் விந்துவை வளர்ப்பிக்குங் கபத்தைத்
தானே யெழுப்புமெனச் சாற்று.

(இ-ள்.) கச்சணிந்த தனங்களையுடைய பெண்ணே! அசைகின்ற கொம்பையுடைய பசுவின்பால் பித்தரோகத்தை நீக்கும், தனுஷ்தம் பவாதம் சுக்கிலதாது கபநோய் இவைகளை விளைக்கும். 90

Digitized By Roja Muthiah Research Library

மூன்றுமீற்று நான்காமீற்றுப் பசுக்களின் பாற்குணம்

மூன்று மீற்றின்பான் முதிர்கபத்தைப் போக்கிவிடும்
என்ற நாலாமீற் றெனும்பாலுங்-கூன்றுதிரி
தோட மகலுஞ் சுகமுண்டிவ் வாப்பாற்சந்
தோட மெவர்க்கு முண்டாக்கும்.

(இ-ள்.) மூன்றும் மீற்றுப் பசுவின்பால் நீடித்த சிலேஷ்மநோயை யும் நான்காம் ஈற்றுப்பசுவின்பால் வாதாதிமூன்று தோஷங்களையும் நீக்கும், சரீரசவுக்கியமும் மகிழ்ச்சியும் உண்டாமென்க. 91

ஆகாப்பசுவின் பாற்குணம்-விருத்தம்

விஞ்சுவரனை தாராநோய் மிகுத்துச்சுழலல் வெண்புள்ளி
துஞ்சியலைந்து மலமருந்தல் சுடுகாடேகி யெலும்புணலிவ்
வஞ்சுவகையி னுவின்பா லாகாதணு கிரறிதோஷம்
நெஞ்சிலடையுங் கயநோயா னிறைந்தவயதுங் குறைந்திடுமே.

(இ-ள்.) ஆகாப்பசுவின்பால் ஐவகைப்படும், அவையாவன அரனை நோய் தாராநோய் மிகவுஞ்சுற்றுதலோடு வெண்மைபுள்ளி தூங்கித் திரிந்து மலம்அருந்தல் சுடுகாட்டெலும்பு உண்ணல் ஆகிய இவைகளை யுடைய பசுக்களின்பாலாம், இவைசேருமாகில் வாதாதிமூன்றுதோஷங் களும் மார்பிற்சேர்ந்து க்ஷயத்தை விளைப்பதும் ஆயுளைக்குறைப்பதுமா மென்க. 92

பகற்பசுவின் பாற்குணம்-வெண்பா

பகற்பால் சிசுக்கட்குப் பக்குவ மென்றாலும்
விகற்பமுடன் பருக மெய்யே-யெதற்குமிகத்
தீதடரச் செய்யுமித்தாற் சேராதுட் காய்ச்சலனல்
தாதவிழும் பூங்குழலே சாற்று.

(இ-ள்.) மகரந்தங்களுதிர மலரணிந்த அழகிய கூந்தலை யுடை யாளே! பகற்பசுவின்பால் குழந்தைகளுக்குப் பக்குவமா மென்றாலும் பற்பலகபநோயையும் தாம்பூலம் புளிப்புமுதலிய சேருமிடத்துக் கெடு தியையும் செய்யும், உட்சூட்டையும் வெப்பத்தையும் நீக்குமென்க. 93

இராப்பசுவின் பாற்குணம்

பகற்பசும் பால்காய்ச் சிப்பருகி னழலும்
விகற்பமு மிளையு மிராவாம்-புகல்பித்த
வேகமும்போ மேனியெல்லா மேயிடுந் தாதுவுமாம்
போகமு முண்டாகும் புகல்.

Digitized By Roja Muthiah Research Library

இதுவுமது

இரவின்பால் கண்ணி லெழுபிணி போக்கும்பின்
பரவியநோ யும்போக்கும் பாரில்-விரகமுற்றார்க்
கத்தியம் பன்னவிழி யாயிழையே யாவருக்கும்
பத்தியமா மென்றறைக்கும் பார்.

(இ-ள்.) அயிலைநிகர்த்த கண்ணையும் ஆராய்ந் திழைக்கப்பெற்ற ஆபரணத்தையுமுடைய பெண்ணே! பகலிற் சுரந்து இரவு கரக்கின்ற பாலே விதிப்படி காய்ச்சி யருந்த தேகஅழற்சி கபரோகம் சுவாசம் பித்த கோபம் நேத்திரவியாதி விந்துவின் கெடுதியா லனுசரித்த சிற்சில ரோகங்கள் ஆகிய இவை நீங்கும். தேகத்தில் மினுமினுப்பும் சுக்கிலப் பெருக்கமும் மாதர்மேல் விருப்பமுமுண்டாகும் இது பத்தியத்திற்கு உதவுமென்க. பகல்முழுதுஞ் சுரந்திருந்து இரவில் கறப்பது பகற்பால்.

எருமைப்பாற் குணம்

வாதத் திமிரை வரவழைக்கும் புத்தியினற்
றோதத் தெளிவைநனி போக்குங்காண்-கோதற்றே
யங்கத்துறு மருந்தை யன்றே முறித்துவிடும்
பங்கத் துறுமேதிப் பால்.

(இ-ள்.) எருமைப்பால் திமிர்வாயுவைத் தருவிக்கும். தெளிந்த புத்தியின் கூர்மையையும் நல்ல மருந்தின் குணத்தையுங் கெடுக்கும். ()

வெள்ளாட்டுப்பாற் குணம்

வெள்ளாட்டுப் பாலுக்கு மேவியநற் றீபனமாந்
தள்ளாட்டு வாதபித்தஞ் சாந்தமாம்-உள்ளிரைப்புச்
சீதமதிசாரஞ் சிலேஷ்ம மறும்புண் ணறும்
வாதகிலே சமும்போ மாய்ந்து.

(இ-ள்.) வெள்ளாட்டுப் பாலினால் வாத பித்த தொந்தம் சுவாச காசம் சீதாதிசாரம் கபதோஷம் விரணம் வாதத்திலுண்டாகிய வீக்கம் முதலிய துன்பம் தீரும், நல்ல பசியும் உண்டாமென்க. 96

செம்மறியாட்டுப்பாற் குணம்

செம்மறிப் பால்பித்தஞ் சிலேஷ்மத்தை யுண்டாக்கும்
விம்மும் வயிறுமிக மேன்மூச்சாங்-கொம்மை
வருமுலையாய் பத்தியத்தில் வாராது வாய்வாம்
பருகுவர்க்கு நாளும் பகர்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) திரட்சியாய் வளர்ந்துவருவனவாகிய தனங்களையுடைய பெண்ணே! வாதரூபமான செம்மறியாட்டுப்பால் பித்த சிலேஷ்ம தொந்தம் வயிற்றுப்பிசம் மேற்சுவாசம் உண்டாகும் பத்தியத்திற்கு உதவாது வாய்வு அதிகரிக்குமென்க. 97

யானைப்பாற் குணம்

வாதம்போந் தாதுபுஷ்டி வந்தடரும் வன்பலமோ
யாதுபித் தங்கூடி யழுகுதிக்குந்-தாதுமலர்த்
தேனைப்பா லிற்கலந்த தித்திப்பை போலிருக்கும்
யானைப்பா லுண்ணு மவர்க்கு.

(இ-ள்.) தேனும் பாலுங் கலந்த ருசிபோன்ற யானைப்பாலைக் குடிப்பவருக்கு வாதகோபம் நீங்கும், சுக்கிலவிருத்தியும் மிகுவன்மையும் பித்தசம்பந்தமான நோயும் தேக அழகும் உண்டாகுமென்க. 98

குதிரைப்பாற் குணம்

வீரிய விருத்தி விளைக்குமழ குண்டாகுங்
காரியத்திற் காமங் கதிப்பிக்கும்-வாரார்
கரகமெனச் செப்புமுலைக் காரிகையே கேளாய்
துரகதப்பால் செய்யுந் தொழில்.

(இ-ள்.) வாரிணுலிறுக்கிய பொற்கலசமெனப் புகலுங் கொங்கைகளையுடைய மங்கையரே! குதிரைப்பால் சுக்கிலப்பெருக்கத்தையும் சரீர வனப்பையும் புணர்ச்சியில் நிருவாகத்தையும் உண்டாக்குமென்க. 99

ஒட்டைப்பாற் குணம்

ஒட்டைப் பாலுக்குமந்த மூவாதம் சூலையோ
டட்டகுணக் காப்பா னுவதன்றி-மட்டிடாக்
காதிரைச்சன் மந்தமதி காசஞ் சுவாசமுமா
மாதரைக்கு ஞானும் வழுத்து.

(இ-ள்.) ஒட்டைப்பாலினால் அக்கினிமந்தம் வாதசூலை எண்வித கரப்பான் கர்ணநாதசெவிடு அதியிருமல் இரைப்பு இவை யுண்டாகும்.

கழுதைப்பாற் குணம்

கழுதைப்பால் வாதங் கரப்பான் விரணந்
தழுதளையுள் வித்திரதி தானே-யெழுகின்ற
ஒட்டியபுண் சீழ்மேக மோடு சொறிசிரங்கு
கட்டியிவை போக்குங் கழறு.

Digitized By Roja Muthiah Research Library

இதுவுமது

கத்தபத்தின் பாற்குக் கரிய கிரந்தியறுஞ்
சித்தப் பிரமைபித்தந் தீருங்காண்-தத்திவரும்
ஐயமொழியு மதிக மதுரமு மாஞ்
செய்ய மடமயிலே செப்பு.

(இ-ள்.) அழகு மிளமையும் பொருந்திய மயிலனையபெண்ணே! கழுதைபால் மிகுமதுரத்தை யுடையது இது வாதநோய் கரப்பன்புண் தழுதளைரோகம் உள்வித்திரிதிக்கட்டி ஒட்டுகிரந்தி கிழ்ப்பிரமேகம் சொறி சிரங்கு அற்புதவிரணம் சித்தப்ரமை பித்ததோஷம் கபநோய் இவைகளைப்போக்கும் என்க. 101

பாத்திரபேதத்தி லுண்டாகிய பாற்குணம்

செம்பிலிடும் பால்வாத சீதமொழிக்கும் பொன்மண்
கும்பத் தடுபால்போக் கும்பித்தை-யம்புவியுள்
வெள்ளி யறையிரும்பில் விட்டுக்காய்ச் சும்பாலாற்
றுள்ளி யுறையைமருஞ் சொல்.

(இ-ள்.) செப்புப்பாத்திரத்தில் காய்ச்சியபால் வாதசிலேத்மத்தையும் பொன் மண் பாத்திரங்களில் காய்ச்சியபால் பித்ததோஷத்தையும் வெள்ளி வெண்கலம் இரும்பு பாத்திரங்களிற் காய்ச்சியபால் காசரோகத்தையும் போக்குமென்க. 102

ஆடையெடுத்த பாற்குணம்

ஆடை யெடுக்கும்பாலா லக்கினிமந் தப்படுமே
வாடைநல்லாய் சீரணமாம் வாதமறுங்-கோடையிடி
போலுமெழுந்த பித்தம் போகுமே கூரியசீர்
வேலனைய கண்ணாய் விதி.

(இ-ள்.) கூரியவேலையுடைய கண்களையுடைய பெண்ணே! ஏடுநீக்கியபாலால் அக்கினிமந்தமும் சப்ததாதுக்களின் சீரணமும் உண்டாம் வாதபித்த கபதோஷங்கள் நீங்குமென்க.

காய்ச்சும்பாலுக்கு நீரளவைகூறல்

ஆடுபசும் பால்காய்ச்சி லஷ்டபா கம்புனலாம்
நீடெருமை செம்மறிக்கு நேர்நேராந்-தேடரிய
சுக்குசிறு காஞ்சொறிவேர் கூட்டிச் சுவரியபா
லொக்கும்வெள் ளாட்டுப்பாற் குறை.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) வெள்ளாடு பசு இவைகளின் பாற்கு எட்டிலொருபங்கும் எருமை செம்மறியாடு இவைகளின் பாற்குச் சரிப்பங்கும் ஜலம்விட்டுக் காய்ச்சவேண்டும். எவ்வித பால்களுக்கும் சுக்கு சிறுகாஞ்சொறிவேர் சேர்த்துக்காய்ச்சல் அவைகள் வெள்ளாட்டுப் பாலுக்கு நேராமென்க.

பாலேட்டின் குணம்

பாலேட்டாற் பித்தமறும் பாழ்த்தகொடும் வாந்தியும்போம்
மாலாட்டு மூர்ச்சையும்போம் வன்பலமா-மேலாலே
தாதுமிகுந் தீபனமாந் தானேயிளைத் தவருக்குக்
கோதுமறு மாமயிலே கூறு.

(இ-ள்.) பாலிலுண்டாகும் ஏட்டினால் பயித்தியநோயும் கொடிய வாந்தியும் மூர்ச்சையும் நீங்கும் மிகுபலமும் சுக்கிலமும் ஜாடராக்கினி யும் விருத்தியாம் இதைத் துற்பலதேகிகளுண்டாலுங் குற்றமில்லை. ()

தேங்காய்ப்பாற் குணம்

வாதமாம் பித்தமுறும் வன்கரப்ப னும்படருந்
தாதுவும் விருத்தியாந் தார்குழலே-யோதநல்ல
அன்ன மிறங்கு மதியுரிசை யுண்டாகுந்
தென்னங்காய்ப் பாலாற் றெளி.

(இ-ள்.) தாழ்ந்த கூந்தலையுடைய பெண்ணே! மிகுமதுரத்தால் உணவை யுட்செலுத்துகின்ற தெங்கின்பாலால் வாதவிகாரம் பித்தா திக்கம் கரப்பான் சுக்கிலவிருத்தியும் ஆம் என்க. 106

ஆலம்பாற் குணம்

ஆலம்பால் மேகமறுத் தசையும் பல்லிறுக்குங்
கோல முடிக்குவெகு குளிர்ச்சிதரும்-ஞாலமதில்
மெத்தவுமே சுக்கிலத்தை விர்த்திசெய்யுந் தப்பாமற்
சுத்தமதி முகத்தாய் சொல்.

(இ-ள்.) களங்கமற்ற பூரணச்சந்திரனை நிகர்த்தமுகத்தினையுடைய பெண்ணே! ஆலம்பால் பிரமேகத்தை நீக்கும், ஆடும்பற்களை யிறுக் கும், சிரசுக்குக் குளிர்ச்சியையும் தாதுபுஷ்டியையும் தருமென்க. 107

அத்திப்பாற் குணம்

காரமோ டட்டினமாங் காறுகின்ற பித்தத்தை
நீரிழிவைச் சூலைகளை நீடிரத்தஞ்-சேருங்
கிரிச்சரத் தைப்போக்குங் கிளர்கோளி யென்னும்
மரச்சருமப் பாலதனை வாங்கு.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) காரமும் உஷ்ணமுமுள்ள அத்திப்பால் பித்தம் நீரிழிவு சூலை ரத்தமூத்திர கிரிச்சரம் இவைகளை நீக்கும். கோளி-அத்திமரம். ()

பேயத்திப்பாலின் குணம்

வெடிப்பை மேகப்படையை வீறிவரு குட்டத்
தடிப்பைமுளை ரணத்தைச் சாடும்-படிக்குண்மயி
லென்னவொளிர் மாதரசே யெங்குஞ் சுணைகறை
மன்னமுறு பேயத்திப் பால்.

(இ-ள்.) மயிலென்ன விளங்குகின்ற பெண்கணுயகமே! சுணைகளையுடைய பேயத்திப்பால் பாதபேதரோகம் மேகச்சொறி குஷ்டரோகத் தடிப்பு முளைவிரணம் இவற்றை விலக்கு மென்க. 109

மட்டிப்பாற் குணம்

தலைவலி நீரேற்றந் தனித்த வுடல்வாத
மலைவுறு மேல்வாந்தி யரோசி-நிலைகுலையும்
வட்டுப்பால் வஞ்சம்வைத்த மாமுலைமாதே மணக்கு
மட்டுப் பாலிற்கு மருண்டு.

(இ-ள்.) சூதாடுகருவியை வெற்றிகொள்ளும் வஞ்சம் பொருந்திய தனங்களையுடைய பெண்ணே! வாசனையுடைய மட்டிப்பாலினால் தலைவலி சலதோஷம் பாதக்ஷேபகவாதம் கபவாந்தி அருசி இவைபோம்.()

காட்டுப்பிராய், ஈழத்தலரி இவைகளின் பாற்குணம்

காட்டுப் பிராய்ப்பாலோ காணுகின்ற பல்வலியை
நாட்டில்வைக்கா தோட்டிவிடு நங்கையே-கோட்டாரும்
ஈழத்தலரிப் பாலேறுபுரைப் புண் தொடையின்
வாழைப் புற்றும்போக்கு மால்.

(இ-ள்.) காட்டுப்பிராய் மரப்பால் தந்தநோயை நீக்கும், ஈழத்தலரிப்பால் புரைவிரணத்தையும் தொடைவாழைப்புற்றையும் விலக்கும்.

சங்கன்முட்செடி புங்கமரம் இவைகளின் பாற்குணம்

சம்கம்பால் வீக்கமதைத் தான்போக்கு நீர்வடிக்கு
மங்குசுர வெப்பகற்று மையமிலை-கொங்குலவு
புங்கம்பால் புண்ணாற்றும் பொல்லாத வாய்வகற்றுந்
தங்கம்போன் மெய்யளிக்குந் தான்.

(இ-ள்.) முட்சங்கன் வேர்க்கட்டையை மெல்லியதாய் சீவிப்பிழிந்த பால் சோபையையும் நீரேற்றத்தையும் சுரவேகத்தையும் நீக்கும் முன்

Digitized By Roja Muthiah Research Library

போல்பிழிந்த புங்கம்பால் விரணத்தையும் நீக்கும் தேகத்தில் பொன் ஒளியுண்டாகு மென்க. 112

தில்லைமரத்தின்பாற் குணம்

பாரிசவா தஞ்சன்னி பாதச்சூலங் குஷ்டஞ்
சேருமுட வாதம்வலி சில்விஷம்போம்-பேருரைக்க
இல்லையில்லை யென்றேடு மெண்பது வாதமுமே
தில்லைமரப் பாலாற் றெளி.

(இ-ள்.) தில்லைமரப்பாலால் பக்ஷபாதவாதம் சன்னிபாதம் சூலை குஷ்டரோகம் மூடவாதம் அமரகண்டன் முதலிய ஐவகைவலிகள் சில விஷம் 80-வித வாதரோகங்கள் ஆகிய இவைபோமென்க. 113

திருகுகள்ளிப்பாற் குணம்

வாத முடக்கலும் வன்கிரந்தி குட்டம்போஞ்
சீத மொழியுங்கிருமி சேராவாம்-மாதே
பருகுபக்க நோயுடனே பாழ்ங்கரப் பான்றீருந்
திருகுகள்ளிப் பாலாற் றெளி.

(இ-ள்.) திருகுகள்ளிப்பாலினால் கஞ்சவாதம் கிரந்தி பெருவியாதி சீதக்கட்டு கிருமிரோகம் பக்கசூலை கரப்பான் இவைபோமென்க. 114

சதிரக்கள்ளிப்பாற் குணம்

குட்டங் கடிசூலை குன்மமே கம்வாயு
துட்டக் கிருமியொடு தூறுபுண்ணு-முட்ட
முதிரக் கரப்பனும்போ மெய்குழலே நாளுஞ்
சதிரக்கள் ளிப்பாற்குத் தான்.

(இ-ள்.) நெருங்கிய கூந்தலையுடைய பெண்ணே! சதிரக்கள்ளிப் பாலால் குட்டம் கடி சூலை வாதப்பிரமேகம் வாதாதிக்கம் கிருமிநெளி கின்ற துட்டவிரணம் கரப்பான் இவைகள் விலகுமென்க. 115

மான்செவிக்கள்ளிப்பாற் குணம்

மான்செவிக் கள்ளிப்பாற்கு மாறு விரணங்கள்
ஏன்கிளைக்கு நன்மல மிறங்குங்காண்-ஊண்சேர்
வரிகிரந்தி நீங்கா வறட்சி சொறியோடு
பொறிகிரந்தி யும்போம் பொரிந்து.

(இ-ள்.) மான்செவிக்கள்ளிப்பாலால் ஆறுதபுண்கள் மாமிசத்தைப் பற்றிய வரிக்கிரந்தி தேகவறட்சி படை பொரிகிரந்தி இவை நீங்கும் தோஷமற்றமலமுஞ் சாருமென்க. 116

Digitized By Roja Muthiah Research Library

இலைக்கள்ளிப் பாற்குணம் இதுவே முயற்செவிக்கள்ளி

செய்ய கரப்பான் செவிநோய்வா தம்போக்கும்
மையவருஞ் சூலைதனைப் பாழாக்கு-வெய்யின்மிக
ஊது கிரந்தியோ டுட்புண்ணை யாற்றிவிடு
மேதுமிலைக் கள்ளிப்பா லோர்.

(இ-ள்.) இலைக்கள்ளிப்பால் செங்கரப்பான் செவிநோய் வாதவிகாரம் சூலை விசர்ப்பிக்கிரந்தி உள்விரணம் இவைகளை நீக்கும். 117

கோடிக்கள்ளிப்பாற் குணம்

துய்ய கரப்பான் சொறிசிரங்கும் புண்ணும்போஞ்
செய்ய கடிகுஷ்டநோய் சேருமே-மெய்யி
லடிக்கடி யாங்குன்மவலி யத்தனையுந் தீருங்
கொடிக் கள்ளிப்பாலுக்குக் கூறு.

(இ-ள்.) கொடிக்கள்ளிப்பாலால் கரப்பான் சொறிசிரங்கு பெருவிரணம் அக்கினி கிடக்கடி குஷ்டம் அடிக்கடி வலிக்குங் குன்மம் இவைகள்போம் என்க. 118

எருக்கம்பாற் குணம்

எருக்கம்பாற் கட்டிகளை யேகரைக்கும் வாய்வைத்
திருக்கறவே கொன்றுவிடுந் தீராச்-செருக்கான
சன்னிவலி தீர்க்குஞ் சார்ந்தபல சிந்தூர
முன்ன முடிக்குமென் றோர்.

(இ-ள்.) எருக்கம்பால் வாதக்கட்டிகளைக் கரைப்பதன்றி வாதநோய் சன்னிபாதம் ஐவகைவலி ஆகிய இவைகளைப்போக்கும் பற்பல சரக்குகளைச் சிந்தூரஞ்செய்ய நினைக்கில் முடிப்பிக்கும். 119

வெள்ளெருக்கம்பாற் குணம்

வலியின் வலிசுளுக்கு மாவாதஞ் சன்னி
யெலியின் விஷஞ்சுரங்க ளெல்லாம்-வலியற்றுக்
காலைத் தொழுதே கடற்புக்கும் வெள்ளெருக்கம்
பாலைத் தொடுவாரைப் பார்.

(இ-ள்.) வெள்ளெருக்கம்பாலால் ஐவகைவலியும் சுளுக்கும் மகாவாதம் சன்னிபாதம் எலிவிஷம் குளிர்ச்சுரம் இவைபோம். 120

Digitized By Roja Muthiah Research Library

காட்டாமணக்கின் பாற்குணம்

விழுமேக வெள்ளைகுன்ம மேல்விர ணங்தோலி
விழுமேருக் கட்டியிவை யெல்லாங்-தொழுதோடுங்
கூட்டா மணக்குழம்பைக் கொண்டவணக் கொங்கைமின்னே
காட்டா மணக்கம்பாற் கண்டு.

(இ-ள்.) கலவைச்சாந்தணிந்த கொங்கைகளையுடைய பெண்ணே! காட்டாமணக்கம்பாலால் மூத்திரத்தோடு விழுகின்ற மேகம் வெள்ளை வயிற்றுவலி குறிவிரணம் சருமக்கட்டி இவை நீங்குமென்க. 121

எலியாமணக்கம் பாற்குணம்

எலியா மணக்கோ வெலிவிடம் வித்துப்பற்
பலவிடமு நீக்கிவிடும் பாரில்-வலுபேதி
யுண்டாகச் செய்யு முயிர்ப்பிலீ கங்குன்ம
மண்டாம லோட்டுமி யாய்.

(இ-ள்.) எலியாமணக்கின்பால் எலிவிஷம் எலீக்கம் வண்டுகடி முதலிய பற்பல விஷம் பீலிகநோய் வயிறுறுவலி ஆகிய இவைகளை நீக்குவதுமன்றி அதிக விரோசனத்தை யுண்டாக்குமென்க. 122

பிரமதண்டின் பாற்குணம்

கண்கூசல் கண்ணருகல் கண்ணொழுகல் கண்ணோதல்
கண்சிவத்த லெல்லாங் கடிதேகுந்-திண்ணச்
சரமதன் றனைப்பிளக்குஞ் சாயகக்கண் மாதே
பிரமதண் டின்பாற்குப் பேர்ந்து.

(இ-ள்.) பலம்பொருந்திய மன்மதனையும் வருத்துஞ் சயல்போலுங் கண்களையுடைய பெண்ணே! பிரமதண்டின் பாலால் கண் கூசுதல் கண்ணருகல் கண்ணீர்வடிதல் கண்வலி கண்சிவப்பு ஆகிய இவைகள் போமென்க. 123

தயிர் வகை

பசுவின்தயிர்க்குணம்

பசுவின் றயிராற் பசிமிகவு முண்டாகு
மிசிவுறும் சீரணனோ யேகும்-பசையகன்ற
தாக மிளைப்பிருமல் தாங்கொணு மெய்யெரிவு
மேகு முலகி லியம்பு.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) பசுவின் தயிரால் பசியுண்டாகும். இசிவு சிரணரோகம் தாகம் ஆயாசம் காசம் சரீரஎரிச்சல் இவை நீங்கும். 124

ஆடையெடுத்த தயிர்க்குணம்

ஆடை யெடுத்த தயிர்கய மிளைப்பறுக்கும்
நாடு கிரிச்சரத்தை நாடவொட்டா-தாடொலியா
லுண்டாங் கிராணியுறை மேகம் போக்கிவிடுந்
தண்டார் குழலணங்கே சாற்று.

(இ-ள்.) குளிர்ந்த மாலையணிந்த கூந்தலையுடைய பெண்ணே! எடு நீக்கிய தயிரானது சிலேஷ்மரோகம் ஆயாசம் மூத்திரக்கிரிச்சரம் வாத கிராணி குஷ்டரோகம் இவைகளை நீக்குமென்க. 125

எருமைத்தயிர்குணம்

எருமைத் தயிருக் கெரிவு பித்தம்போம்
வருமைக் கரப்பனொடு வாதம்-பெருமிதஞ்சேர்
தூல வுடலமுமாந் தூயறிவு மந்தமுறுங்
கோலவிழி குளிருங் கூறு.

(இ-ள்.) எருமைத் தயிருக்கு யெரிச்சலும் பித்தநோயும்போகும் கபத்தைப்பற்றிய கரப்பான் வாதரோகம் அதிதூலரோகம் புத்திமந் தம் கண்ணுக்கு குளிர்ச்சி ஆகிய இவைகள் உண்டாகு மென்க. 126

வெள்ளாட்டின் தயிர் மோர் இவைகளின் குணம்

வெள்ளாட்டின் வெண்டயிரோ மிக்கனல மாகுமதற்
குள்ளாடை யான்மந்த முண்டென்பார்-வெள்ளாட்டின்
மோரோ மேகத்தை முதிரா தடித்துவிடும்
பாரோ ரறியப் பகர்.

(இ-ள்.) வெள்ளாட்டின் தயிரால் அதிஉஷ்ணமும் அதன் எடால் மந்தமும் விளையும். மோரானது பிரமேகரோகத்தைப்போக்கும். 127

செம்மறியாட்டுத் தயிர்குணம்

செம்மறியின் றன்தயிரைத் தின்ன மதுரமிகுங்
கொம்மைமுலை மாதரசே கூறக்கேள்-அம்ம
கரப்பான் சொறியுங் கடுப்பிரத்த வாய்வு
முரப்பா முடல்கெடுமென் றோர்.

(இ-ள்.) இளமைபொருந்திய தனங்களையுடைய மாதரசே! மதுர முள்ள செம்மறியாட்டின் தயிரை உண்டால் கரப்பான் சொறி மூலக்

Digitized By Roja Muthiah Research Library

கடுப்பு ரத்தமூலம் வாதரோகம் ஆகிய இவைகள் பலப்படுவதுமன்றிச் சரீரத்திற்குத் துன்பமுண்டாகுமென்க. 128

ஓட்டைத்தயிர்குணம்

தீபனமு முண்டாஞ் சிறுகரப்பான் புண்ணுமாற்
பூபதி பொன்மேனி புளகிக்கும்-தாபதமாம்
ஒட்டைத் தயிர்நிதமு முண்ணவதி தாகம்போந்
துட்டக் கிருமியறுஞ் சொல்.

(இ-ள்.) ஒட்டைத்தயிரைக் குடித்தால் ஜடராக்கினி சிறுகரப்பான் விரணம் சரீரமேனி இவை உண்டாகும், தாகமும் மலக்கிருமி ரோகமும் நீங்குமென்க. 129

மோர்வகை

பசுமோர்குணம்

வீக்க மகோதரமுள் வீறுகுன்மம் பாண்டுபித்தந்
தாக்கு மருந்திட்டத்தி சாரமொடு-கூக்குரலே
மாறுந் திரிதோஷ மந்தமனற் றுகம்போம்
வீறுவின் மோருக்கு மெய்.

(இ-ள்.) பசுவின் மோருக்கு வீக்கம் மகோதரம் வயிற்றுவலி பாண்டுரோகம் பித்தகோபம் இடுமருந்தால் வரும்நோய்கள் பேதி திரிதோஷம் அக்கினிமந்தம் வெப்பம் இவைகள் போமென்க. 130

எருமைமோர்க்குணம்

தாக்கங் கிராணி சலங்கழிச்சல் காமாலை
ஆகங் குடைபுழுவு மற்றுப்போ-மோகமுறுந்
தேவா மிருதமுமாஞ் சீர்மானி டர்தமக்கு
மூவா மருந்தெருமை மோர்.

(இ-ள்.) எருமைமோரினால் தாகம் கிராணிரோகம் சலக்கழிச்சல் காமாலை கிருமி ஆகிய இவைகள் நீங்கும் போகவிருப்பமாம், சிறந்த மானிடர்களுக்கு கெடாதவமுதமாகுமென்க. 131

ஓட்டை மோர்குணம்

ஒட்டைமோர் மெத்தவனை லோங்கியவா தந்தணிக்குங்
கிட்டுமந்த நெய்ப்பெருமை கேட்பீரால்-நெட்டுலகின்
மந்தஞ் செய்தாலும் வலிவிந்து வைப்பெருக்கு
மந்தஞ்சேர் கண்ணு யறி.

(இ-ள்.) ஓட்டைமோரானது பித்தவாத தொந்தத்தைச் சாந்தி செய்யும் அதன் நெய்யானது அக்கினிமந்தஞ் செய்வதா யிருந்தாலும் சுக்கிலதாதுவை விருத்திசெய்யுமென்க. 132

வெண்ணெய் வகை

முலைப்பால் வெண்ணெய்க் குணம்

கண்ணெரிவுங் கையெரிவுங் காலெரிவு நாசிகளி
லண்ணெரிவு மண்ணி லகன்றிடுங்காண்-தண்ணு
ரலைப்பால் மாண்பது கணிசெய்யு மாதர்
முலைப்பால் வெண்ணெய்க்கு முரிந்து.

(இ-ள்.) சிறந்தமாதர் முலைப்பால் வெண்ணெய்க்கு கண், கை, கால், நாசி இவ்விடங்களில் உண்டாகும் எரிச்சல் நீங்கும். 133

பசுவெண்ணெய்க் குணம்

கண்ணி லெழுநோயுங் கண்ணெரிவும் பீளையும்போ
மெண்ணும் பசியு மெழும்புங்காண்-நண்ணரிய
ஆவினறும் வெண்ணெய்க் ககலும்வன் மேகமெல்லாம்
பூவினர்க் கெல்லாம் புகல்.

(இ-ள்.) பசுவின் வெண்ணெய்க்குக் கண்ணோய் கண்ணெரிச்சல் பீளை சாரல் பிரமேகம் இவைபோம், பசியுண்டாம். 134

எருமைவெண்ணெய்க் குணம்

எருமைவெண் ணெய்க்கில் லெரிவுநீ ரிழிவு
பருவமயிலே கேளிப் பாரிற்-கிருமியுறும்
மந்தமாம் வாதமிகு மாறுக்கபங் கரப்பான்
றொந்தமா நோயருடஞ் சொல்.

(இ-ள்.) பருவமயில்போலுஞ் சாயலையுடைய பெண்ணே! எருமை வெண்ணெயினால் பித்த மூத்திரகிரிச்சரம் நீங்கும் மலாசயக்கிருமி அக்கினிமந்தம் வாதரோகம் கபாதிக்கம் கரப்பான் தொந்தரோகம் ஆகிய இவைகள் உண்டாமென்க. 135

வெள்ளாட்டுவெண்ணெய்க் குணம்

வெள்ளாட்டு வெண்ணெயது வீறுசுரந் தான்போக்குந்
தள்ளாடு பித்தந் தணிக்குங்காண்-தெள்ளுமொழி

LIBRARY SERVICE INDIA
KOTTAIYUR-623106.
TAMIL NADU. INDIA.

Digitized By Roja Muthiah Research Library

மானே பசியெழுப்பும் வன்கரப்பனைக் கடற்குட்
டானே துரத்திவிடுஞ் சாற்று.

(இ-ள்.) தெள்ளிய மொழியையுடைய பெண்ணே! வெள்ளாட்டு வெண்ணெய் சுரரோகம் பித்தநோய் கரப்பான் ஆகிய இவைகளை நீக்கும் பசியை உண்டாக்குமென்க. 136

ஒட்டைவெண்ணெய்க் குணம்

கட்டழகு செய்யுநற் காரிகையீர் கேண்மின்கள்
ஒட்டைவெண் ணெய்மந்த மொடுவாதங்-கிட்டவைக்கும்
நீரிழிவுக் கேற்கு நிறைபித்தம் போக்கிவிடும்
பாரறியச் சொன்னேம் பகுத்து.

(இ-ள்.) ஒட்டைவெண்ணெயானது நல்ல அழகையும் மந்தத்தையும் வாதரோகத்தையும் உண்டாக்கும் நீரிழிவையும் பித்தகோபத்தையும் நீக்குமென்க. 137

நெய்வகை

பசுவின்நெய்க் குணம்

தாகமுழ லைசுட்கம் வாந்திபித்தம் வாயுபிர
மேகம் வயிற்றெரிவு விக்கலழல்-மாகாசங்
குன்மம் வறட்சி குடற்புரட்ட லஸ்திசுட்டஞ்
சொன்மூலம் போக்குநிறைத் துப்பு.

(இ-ள்.) பசுவினது நெய்யானது தாகம் உழலைப்பிணி அதிசுட்கரோகம் வாந்தி பித்தாதிக்கம் வாதவிஷம் விரணப்பிரமேகம் வயிற்றிலெரிவு பித்தவிக்கல் இருமல் வயிற்றுவலி சிலேப்பு குடல்நெளிதல் அஸ்திசோம்பல் மூலரோகம் ஆகிய இவைகளை நீக்குமென்க. துப்பு-நெய்.

காராம்பசுநெய்க் குணம்

காராம் பசுனெய்யாற் கண்ணுக் கொளியுண்டாம்
நீரார் விழிபுருவ நெற்றிசிரச்-சூரொழியும்
மெய்யிற் குழைவு மிளர்பொன் னிறமும்வரும்
நெய்யா லிதுமேலா நிகழ்த்து.

(இ-ள்.) காராம்பசு நெய்யால் நேத்திரத்திற் கொளிவும் சரீர புஷ்டியும் பொற்சாயலும் உண்டாகும். கண் புருவம் நெற்றி சிரசு இவைகளைப்பற்றிய நோய்கள் விலகுமென்க. 139

Digitized By Roja Muthiah Research Library

எருமைநெய்க் குணம்

புத்திகெடு மெய்யழகு போதக் கெடுநயனம்
மெத்தவொளி மாறிவிடு மேதினியிற்-சத்தியமா
முறுவாத மொடுபித்த மாருக் கரப்பானுங்
கோதெருமை நெய்யருந்திற் கூறு.

(இ-ள்.) எருமைநெய்யால் அறிவு அழகு கண்ணொளி இவைகள் மத்திபமாம். வாதபித்ததோஷம் கரப்பான் இவையுண்டாமென்க. 140

வெள்ளாட்டுநெய்க் குணம்

ஐயைப்போக் கும்வாதத் தாண்மையைக் கெடுத்துவிடும்
வெய்யை வளர்க்கும்விழி யைத்துலக்கும்-வையகத்திற்
பத்தியத்திற் காகும் பயமிலைவெள் ளாட்டின்னெய்
நித்தியங் கொண்டாலுங் கொண்ணீ.

(இ-ள்.) வெள்ளாட்டின் நெய்யையுண்ணில்அது சிலேஷ்மாதிக்கத்தையும் வாதகோபத்தையும்போக்கும், சரீரத்தை வளர்ப்பது மன்றிக் கண்ணுக்கொளியை யுண்டாக்கும், பத்தியத்திற்குதவுமென்க. 141

செம்மறியாடு பள்ளையாடு இவைகளின் நெய்க்குணம்

செம்மறியி நெய்யதனைத் தின்ன மதுரமுமாங்
கொம்மைமுலை மாதரசே கூறக்கே-ளம்முறுங்காண்
பள்ளையின்னெய் பித்தொழிக்கும் பாருலகி லெல்லாருங்
கொள்ளத்தான் மந்தமுறுங் கூறு.

(இ-ள்.) இளமைபொருந்திய தனங்களையுடைய பெண்ணே! மதுரமுள்ள செம்மறியாட்டு நெய்யால் கபநோயதிகரிக்கும். பள்ளையாட்டு நெய் பித்தநோயை யொழிக்கும் மந்தமாமென்க. 142

கலப்புநெய்க் குணம்

நெய்யுட் பலநெய்க்கு நீள்சுக்கி லம்பெருகும்
வெய்யபசி யுண்டாம் விடும்பித்த-மெய்யனலா
லுள்ளபித்த வெக்கைபோ மோங்குயிருந் தானிலைக்குங்
கொள்ளத் தெரியுங் குணம்.

(இ-ள்.) எருமைநெய் முதலிய கலப்புநெய்யால் சுக்கிலம் பெருகும் தீபனமும் உண்டாம். பித்ததோஷமும் தேகக்கொதிப்பாலாகிய பித்தசுரமும்போம் உயிரைத்தாங்குகின்ற உடலும் பலக்குமென்க. 143

Digitized By Roja Muthiah Research Library

பன்றி-உடும்பு-காக்கை இவைகளின் நெய்க்குணம்

பன்றிநெய் நீர்க்கடுப்பு பாயுமூலத் திரத்தங்
கன்றியாவாதக் கடுப்புமுதற்-றுன்றியநோய்
போக்கு முடும்பின்னெய் போமிரத்தம் போக்கிவிடுங்
காக்கைநெய் காமாலைக்காங் காண்.

(இ-ள்.) பன்றிநெய்யானது மூத்திரக்கடுத்தலையும் ரத்தமூலக்கிராணியையும் வாதக்கடுப்புமுதலிய பிணிகளேயும் நீக்கும், உடும்பின் நெய் ரத்தக்கிராணியை நீக்கும், காக்கைநெய் காமாலைக்குதவும். 144

ஆமை-ஓணன்-கரடி-இவைகளின் நெய்க்குணம்

ஊமை நெய்மூல மோட்டும் ஓணனெய்க்குக்
காணுப் புறவலிநோய் காணுவாம்-பூணர்
முலையாய் கரடிநெய்க்கு முன்வாதம் மோடும்
புலையாருங் கால்வெடிப்பும் போம்.

(இ-ள்.) ஆபரணங்களையணிந்த தனங்களையுடைய பெண்ணே! ஆமைநெய் ரத்தமூலம்நீக்கும். ஓணன் நெய்யால் பின்னிசிவு தீரும். கரடிநெய்யால் வாதவேகமும் பாதவெடிப்பும் நீங்குமென்க. 145

ஆமணக்குநெய்க் குணம்

ஆமணக்கு நெய்யா னலமுண்டா மியாவர்க்கும்
பூமணக்கு மேனி புரிகுழலே-வாய்மணக்கக்
கொள்ளில் வயிறுவிடுங் கோரமுள்ள வாயுவறு
முள்ளில்வரு குன்மம்போ மோர்.

இதுவுமது

அம்பொனிற மும்விந்து மாங்குடலி னேற்றமறு
மைம்பொறிச் சூடெறிவு மாறுங்காண்-அம்புவியிற்
பாமணக்கு மின்பமொழிப் பாவாய் நலஞ்செறிந்த
ஆமணக்கின் நெய்யுண் டறி.

(இ-ள்.) புட்பங்கள் பரிமளிக்காநின்ற அழகுபொருந்திய கட்டப்பட்ட கூந்தலையும் இனியமொழியையுமுடைய பெண்ணே! உஷ்ணதிக்கமுள்ள முத்துக்கொட்டை நெய்யை முறைமைப்படிக்குக் குடித்தால் விரோசனமாம். இதனல் கோரவாதம் குன்மம் குடலேற்றம் தேகம் கண் மூக்கு செவி வாய் இவைகளிலுண்டாகிற யெரிச்சலும் நீங்கும், பொன்னிறமும் தாதுவிருத்தியுமுண்டாகும். 146

Digitized By Roja Muthiah Research Library

சிற்றாமணக்கு நெய்க்குணம்

மருந்தி னழலும் வளியான் மூலத்துட்
பொருந்து மழலுமறப் போக்கும்-குருத்திற்கு
நற்றா யெனவளர்க்கு நாளுமழலைத் தணிக்குஞ்
சிற்றா மணக்கினெய்தான் றேர்.

(இ-ள்.) சிற்றாமணக்குநெய் பற்பல ஔஷதங்களின் வெப்பங்களை யும், வாயுவினால் மூலத்திலுண்டாகின்ற உஷ்ணங்களையும் நீக்கும், சிசுக்களை தாய் வளர்ப்பதுபோல உடலை வளர்ப்பிக்குமென்க. 147

எள்ளின்நெய் குணம்

புத்தி நயனக்குளிர்ச்சி பூரிப்பு மெய்ப்புகளுஞ்
சத்துவங் காந்தி தனியிளமை-மெத்தவுண்டாங்
கண்ணோய் செவிநோய் கபால அழல் காசநோய்
புண்ணோய்போ மெண்ணெய்யாற் போற்று.

(இ-ள்.) எள்ளினது நெய்யால் புத்திக்குத் தெளிவு விழிக்குக் குளிர்ச்சி மனமகிழ்ச்சி தேகபுஷ்டி பலம் தேஜசு வாலிபத்தன்மை இவை கள் உண்டாகும். நேத்திரநோய் கர்னரோகம் கர்பாலஉஷ்ணம் காசம் விரணம் ஆகிய இவைகள் நீங்குமென்க. 148

வாதுமைநெய்க் குணம்

அழலெல்லா மாற்று மரிய வுடம்பி
லழலோடு விந்துவை யுண்டாக்கும்-வழுவழுப்பைப்
பூண்ட கபம்போக்கும் பொறிகட் கொளிசெய்யு
நீண்ட அடப்பம்விதை நெய்.

(இ-ள்.) வாதுமைநெய் ஔஷதங்களினாலும் உழைப்பினாலும் விளைந்த வெப்பங்களையும் கபதோஷத்தையும் நீக்கும், சமோஷ்ணஞ் சுக்கிலம் பஞ்சேந்திரிகளுக் கொளிவு இவைகளை உண்டாக்குமென்க. ()

வேப்பநெய் குணம்

வாதம்போம் பித்தமிகு மாறாக் கிரந்தியோடு
மேதுகரப் பான்சிரங்கு முன்னிசுவும்-ஓதுடலின்
நாப்ப ணுறுசுரமு நாடுசந்நியுந் தொலையும்
வேப்பநெய் யென்றொருகால் விள்.

(இ-ள்.) வேப்பின்நெய்க்கு மகாவாதம் கிரந்தி கரப்பான் சிரங்கு ஆகிருஷ்ணஸ்தம்பனவாதம் சுரம் சன்னி நீங்கும். பித்தமாம். 150

இலுப்பைநெய்க் குணம்

கரப்பானடருங் கடிசிரங்கு புண்ணு
முரப்பா மிடுப்புல்லி யோடு-கரப்பான்

Digitized By Roja Muthiah Research Library

பாகுமொழிமாதே பலமுண்டாந் துர்ப்பலம்
பேருமிலுப் பைநெய்க் கே.

(இ-ள்.) கற்கண்டனைய மொழிக்காரிகையே! இலுப்பைநெய்யால் கரப்பான் கடிவிஷம் சிரங்கு விரணம் வன்மை இவை உண்டாம் சகல வாதமும் துர்பலமும் நீங்குமென்க. 151

புன்னைநெய்க் குணம்

புன்னையிலுண் டாநெய்யாற் பொங்குசந்நி பாதமுதன்
மன்னியலைக் கும்கொடிய வாயுவுன்-பின்னிசிவும்
பொல்லா வலியினமும் புண்கிருமி யுந்தொலையு
மல்லார் குழலே யறி.

(இ-ள்.) இருண்ட கூந்தலையுடைய பெண்ணே! புன்னைநெய்யால் சந்நிபாதம் மகாவாதரோகம் முன்னிசுவும் பின்னிசுவும் ஐவகைவலி விரணம் கிருமி ஆகிய இவைகள் நீங்குமென்க. 152

புங்கின்நெய் குணம்

அங்கமழ கிடும்வெற்பாம் புங்கினெய் தனக்குத்
தங்கம்போற் காந்தியது தானுண்டாந்-திங்கண்முக
மானே கரப்பான்போம் வன்சொறி யுஞ்சிரங்குந்
தானே விலகுமெனச் சாற்று.

(இ-ள்.) சந்திரனையொத்த முகத்தையும் மானையொத்தகண்களையுமுடைய பெண்ணே! மலைப்புங்கின் பருப்புநெய்க்கு அழகும் ஒளிவும் உண்டாம்; கரப்பானும் சொறி சிரங்கு ஒழியும். 153

தேங்காயின்நெய் குணம்

தேங்காயி நெய்யதனாற் றீயால் வருபுண்போம்
பாங்காகக் கூந்தற் படர்தேறு-நீங்காத
பல்லடியின் னோயும் படர்தா மரைசிரங்கு
மல்லறப் போமென் றறி.

(இ-ள்.) தேங்காய்நெய்யினால் தீயால்வரு விரணம் தந்தமூலரோகம் படர்தாமரை சிரங்கு ஆகிய இவைகள்போம் தலைமயிர் வளரும். 154

கடுகுநெய்க் குணம்

கோஷ்டநோய் பித்தரத்தங் குஷ்ட மடல்வாதம்
விட்டு கபமூல விரணமறும்-பூட்டின்
முடுகி யெழுசூலையொடு மொத்தநோ யேகுங்
கடுகின் னெய்யாலனலாங் காண்.

(இ-ள்.) சூடுள்ள கடுகுநெய்யால் குன்மம் ரத்தபித்தம் குஷ்டம் மகாவாதம் க்ஷயம் முளை மூலவிரணம் சூலை முதலிய பிணிகள் நீங்குமென்க. கோஷ்டு-வயிறு. 155

நீரடிமுத்து நெய்க்குணம்

பூசுகுடி வாதகணம் பொங்கு கிரந்திபுடை
வீசுகுட்டஞ் சூலையிவை விட்டேகும்—தேகஞ்சச்
சீரடியை யொத்தநடைத் தெய்வ மடமயிலே
நீரடி முத்தின்நெய்யை நீ.

(இ-ள்.) அழகுபொருந்திய அன்னத்தையொத்தநடையையும் தெய்வத்தன்மை பொருந்திய மயில்போலுஞ் சாயலையுடைய பெண்ணே! நீரடிமுத்துநெய் மேலிற் பூசினும் உள்ளுக்குக் குடிக்கினும் வாதகுட்டம் சிரங்கு சொறி பெருவியாதி சூலை இவை நீங்குமென்க. 156

செங்கோட்டைநெய்க் குணம்

தாதுவும் புருணமுமாந் தத்துரு பரங்கிப்புண்
கோதுபுரி யிருமைக் குட்டிணங்கன்-காதுங்
கரிமுகி யூரர் கரப்பான் றிமிர்போ
மெரிமுகி நெய்யாலென் றறி.

(இ-ள்.) எரிமுகியென்னுஞ் செங்கொட்டைநெய்யால் தடிப்பு பரங்கிப்புண் கருங்குட்டம் வெண்குட்டம் முதலிய குட்டரோகங்கள் கருஞ்சொறி கரப்பான் திமிர்வாதம் ஆகிய இவைகள்போம். சுக்கிலவிருத்தியும் கருப்போற்பத்தியும் உண்டாகும். புருணம்-கர்ப்பம். 157

முக்கூட்டுநெய் சேர்க்கும் விதி

ஆவெண்ணெ யண்டமெண்முத் தாமுத்தா வெண்ணெய்
மூவெண் கலாதி முறையேகேள்-மேவுநெறி
யொன்றிரண்டு மூன்றுகு மொன்றிரண்டு மூன்றுகு
மொன்றிரண்டு மூன்றுகு முற்று.

(இ-ள்.) வாதமுதலிய மூன்று தோஷங்களுக்குக் கூட்டவேண்டிய முறைமை வாததேகிகளுக்குப் பசுவின்னெய் 3-பங்கு, எண்ணெய் 2-பங்கு, ஆமணக்குநெய் 3-பங்கு, பித்த தேகிகளுக்கு வெண்ணெய் 1-பங்கு, ஆமணக்குநெய் 2-பங்கு, பசுவின்நெய் 3-பங்கு, சிலேத்ம தேகிகளுக்கு ஆமணக்குநெய் 1-பங்கு, பசுவின்நெய் 2-பங்கு வெண்ணெய் மூணுபங்கு இவ்வாறு கூட்டவேண்டுமென்க. 158

முக்கூட்டுநெய்க்குணம்

நூவுநெய்க் கையறுவலா நெய்க்குப் பித்தம்
மேவுமுத்து நெய்க்கனிலம் வீறுவாம்-பூவுலகில்

Digitized By Roja Muthiah Research Library

மூன்று மளவாய்க்காய்ச்சி மூழ்கிலந்தப் பிணியா
லூன்றுநோய் யியாவும்போ மோர்.

(இ-ள்.) எள்ளின்நெய் பசுநெய் ஆமணக்குநெய் இவைக்கு முறையே கப்பித்தவாத கோபங்கள் மீறாமல் தத்தம் நிலையிற் பொருந்துவனவாம், ஆதலால் அம்மூவித நெய்களையும் கிரமப்படிக் கூட்டிக்காய்ச்சி ஸ்நானஞ்செய்யில் திரிதோஷங்களால் வருஞ் சகல ரோகமும் நீங்கும்.

ஐங்கூட்டுநெய்க்குணம்

அஞ்செண் ணெய்க்காணி லாலித்த பின்னிசிவுந்
தஞ்சமென வாய்வுந் தணியுங்காண்-பஞ்சாய்ப்
பறக்குமே சந்நிசுரம் பாரிலையைச் சேஷ்டை
யிறக்குமே நன்று மியம்பு.

(இ-ள்.) ஆமணக்கு யெள்ளு வேம்பு புன்னை புங்கு இவற்றின் நெய்களை கலந்து தயிலமாகச்செய்து உபயோகிக்கில் பின்னிசவு மகா வாதம் சந்நிபாதசுரம் கபதோஷம் ஆகிய இவை நீங்குமென்க. 160

சாணவகை

பசுவினது சாணத்தின்குணம்

ஆவினது சாண மடிபடுவீக் கம்முதிரந்
தாவிவரு கிருமி சார்ந்தகப-மேவுசுரந்
தங்குந் தாகம்போக்குஞ் சாற்றின்மெய்ச் சுத்தியப்பால்
தெங்கின் பாலுக்கொக்குந் தேர்.

(இ-ள்.) பசுஞ்சாணம் கல்முதலியவைகளால் அடிப்பட்ட வீக்கம் ஒழுகுகின்ற உதிரம் கிருமிரோகம் கபசுரதாகம் இவைகளை நீக்கும் தேகசுத்தியுண்டாகும் இது தெங்கின்பாலை ஒக்குமென்க. 161

எருமைச்சாணத்தின் குணம்

வயிற்றுப் பிசமிரத்த வாந்தி காமாலை
நியமித்த பெரும்பாடு புண்ணீங்கும்-வியத்த
கருமைச் சாரங்கவிழிக் காரிகையே நாளும்
மெருமைச் சாணத்தி னியல்பு.

(இ-ள்.) மான்போலுங் கண்களையுடைய மையணிந்த பெண்ணே! எருமைசாணத்தால் வயற்றுபொருமல் ரத்தவாந்தி காமாலைபெரும்பாடு புண் இவைகள் நீங்கும். 162

Digitized By Roja Muthiah Research Library

வெள்ளாட்டுப்புழுக்கையின் குணம்

உருக்கை நீருக்கு முதரநோய் போக்குந்
திருக்கான வாதநோய் நீக்கு-நெருக்கான
தோட்டுக் குழையணங்கே தொல்புவியோர் சொல்லிடுவெள்
ளாட்டுப் புழுக்கை யது.

(இ-ள்.) காயாபரணத்தை யணிந்த வரமகளிரையொத்த பெண்ணே! வெள்ளாட்டுப்புழுக்கை உருக்கை அல்லது எஃகு என்னும் லோகத்தைப் பஸ்மிக்கும், மகோதரத்தையும் வாதநோயையும் நீக்கும். 163

மூத்திரவகை

சிறுநீரின் குணம்

காணுக் கடிபோங் கதித்தெழுந்த வீக்கமது
காணுது காயசித்தி கைக்குளநல்-பூணே
பதித்த கொங்கைமாதே பகர்மாந் தருக்கு
ளுதித்த சிறுநீருக்கென் றோர்.

இதுவுமது விருத்தம்

அங்கியுவ ருரைசிறுநீர் வாசம்போக்கு
 மதைப்பருகி லிருமலிரைப் பரத்தநோயு
பொங்கிவரு மேகவிகாரங் கிரந்திப்
 புண்களும்போ மதைநசியம் புரியிற்சூடுந்
தங்கியதோர் பஸ்மாரஞ் சந்நியாசஞ்
 சருவவிடம் விடசுரமுந் தவறுண்டோடும்
மிங்கதனைத் தொட்டலம்பிற் கண்முகங்கா
 திவ்விடத்து ளெழும்விரண மிரியுங்காணே.

(இ-ள்.) மாந்தர்களின் ஜடராக்கினி யவர்ச்சுவையையுடைய சிறுநீரினுல் காணுக்கடிவிஷமும் சோபையும் வாததோஷமுந்தீரும். அதை முறைப்படி பருகில் இருமல் சுவாசம் அசிர்க்கரம் மேகமூத்திரம் கிரந்திவிரணம் ஆகிய இவைகள்போம். நசியஞ்செய்தால் சுரம்அபஸ்மாரம் சந்நியாசம் சர்வவிஷம் விஷசுரம் ஆகிய இவைகள் நீங்கும். அந்த நீராற் கழுவினுல் 'விழி முகம் செவி இவ்விடங்களில் பிறக்கின்ற கட்டிகள் விலகும் அன்றியும் காயசித்திக்கு உதவுமென்க. 164

பசு மூத்திரக்குணம்-வெண்பா

விடபாண்டு சோபைபல வீக்கஞ் சகல
விடமுதிர மாலையென மெத்தப்-புடவிதனிற்

Digitized By Roja Muthiah Research Library

பேசலக்க ணுடுதந்தப் பீடையு மகன்றிடுமே
கோசலத்தா லாரணங்கே கூறு.

(இ-ள்.) கோசலத்தால் விஷப்பாண்டு சோபை பற்பலவீக்கம் சகல விஷம் அசிர்க்கு காமாலை பன்னோய் முதலிய பிணிகள்போமென்க. ()

எருமைமூத்திரக் குணம்

உதரநோய் பாண்டோ டிரத்த காமாலை
விதிரவரு சோபை மேகம்-முதிர்க்கிருமி
யாகியநோ யேகு மடவெருமை மூத்திரத்தால்
மீதிலன வுண்டாகு மே.

(இ-ள்.) எருமைமூத்திரத்தால் பெருவயிறு பாண்டு காமாலை பிரமேகம் சோபை கிருமி முதலிய நோய்களும்போம் இதிற்கூடுண்டாம்.

வெள்ளாட்டுமூத்திரக் குணம்

சோபையொடு பாண்டுவைத் துரத்தும் பலவீக்க
தாகமற்றும் மூதிரத்தைப் போக்கும்-கோபமுடன்
உள்ளாட்டுத் துர்ச்சதையோ டோங்குதர நோயகற்றும்
வெள்ளாட்டு மூத்திரம் விரைந்து.

(இ-ள்.) வெள்ளாட்டுமூத்திரம் சோபை பாண்டு பற்பலவீக்கத்தினெரிச்சல் ரத்தபோக்கு துர்மாமிசம் மகோதரம் இவைகளைநீக்கும். ()

யானைமூத்திரக் குணம்

அதிதூலஞ் சோபை யனிலங் கிருமி
யெதிர்விடங் கருங்கரப்பா னேகும்-அதிராத
யானையெனப் பலமு மங்கபுஷ்டியும் கொடுக்கும்
யானைவிடு மூத்திரமென் றோது.

(இ-ள்.) யானை மூத்திரத்தால் அதிதூலநோய் சோபை வாய்வு கிருமிவிஷம் கருங்கரப்பான் இவைகள்போம் ஆனையைப்போன்று வன்மையும் சரீரபுஷ்டியும் உண்டாமென்க. 168

குதிரைமூத்திரக் குணம்

பாதவன் மீகம் படர்தடிப்பு நீள்கிருமி
வாதமொடு கபமு மாறுங்கா-ணுதரிய
பொற்குவட்டை யொத்தமுலைப் பூவையரே சூடுடைய
நற்குதிரை மூத்திரத்தி னால்.

(இ-ள்.) பொன்மலையையொத்த கொங்கைகளையுடைய மாதே! சூடுள்ள குதிரைமூத்திரத்தால் பாதப்புற்று கண்டுகண்டாகத் தடித்தல் கிருமிரோகம் வாதநோய் கபதோஷம் இவைகள்போம். 169

Digitized By Roja Muthiah Research Library

ஒட்டைமூத்திரக் குணம்

மேலையூருந் தடிப்பு வீசியெழுஞ் சந்நி
சூலையுதர வர்த்தந் தொடர்குன்மஞ்-சீலநனே
மண்டலகுஷ் டேகும் வருமொட்டை மூத்திரத்தா
லுண்ட னலமாதே யுரை.

(இ-ள்.) வெப்பத்தையுடைய ஒட்டை மூத்திரத்தினால் சரீரத்தி லோடிப்புடைக்கின்ற தடிப்பு சந்நிபாதம் சூலை பிடிப்பு உதரவர்த்த வாதம் வயிற்றுவலி மண்டலகுஷ்டம் இவை நீங்குமென்க. 170

கழுதைமூத்திரக் குணம்

வேசரி நீரால்வெப்பம் வீரியநஷ்டங் குஷ்டங்
காசமிரைப்பு விஷங் காற்கிருமி-வீசிடுபுண்
மேகம் பஸ்மாரம் வெடியச் சுரங்கிரந்தி
போகுமின்னுஞ் சேய்ப்பிணியும் போம்.

(இ-ள்.) கழுதை மூத்திரத்தால் உஷ்ணம் தாதுநஷ்டம் அவதம் பாகுஷ்டம் காசம் இரைப்பு சில்விஷம் கால்களுள்ள கிருமி விரணம் தந்திமேகம் அபஸ்மாரம் ஜிக்வாகண்டகரோகம் கிரந்தி பாலரோகங் கள் இவைபோம். வேசரி-கழுதை. 171

மதுரவகை

சேங்கரும்பு ரசதாளிக்கரும்பு புல்லகண்ட கரும்பு இவைகளின் குணம் விருத்தம்

செங்கரும் பதனச்சாறு தீர்த்திடும் பித்தமெல்லாம்
அங்குறு மிரசதாளிக் ககன்றிடுந் தாகவேகம்
மங்குறுப் புல்லகண்டம் வாதகோபத்தைப் போக்கும்
கங்குல்வார் குழலினளே காரியமறிந்துகூறே.

(இ-ள்.) இருண்டு நீட்சியுற்ற கூந்தலையுடைய பெண்ணே! செங் கரும்பின்ரசம் பித்ததோஷத்தை நீக்கும், ரசதாளிக் கரும்பினது சாற்றினால் தாகவெப்பம் போம், புல்லகண்டம் என்கிற கரும்புசாறு னது வாததோஷத்தை நீக்குமென்க. 172

நாணற்கரும்பின் குணம் வெண்பா

வாயுபித்தம் வாந்திநீர் மாறுமதி தூல
நோயுளெழும் வயிற்றி னோய்கலங்கு-மோயாத
ஈளையொடு பாண்டு மெதிரா தடங்கிநிற்கு
நாளு நாணற்கரும்பி னால்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) நாணற்கரும்பின் ரசத்தினால் வாதபயித்தியம் வமனம் அருசி அதிசூலம் வயிற்றி லெழுநோய் இரைப்பு பாண்டு இவை மீறாமற் சாந்தமாம். 173

கரும்பின்சாறு, வெல்லம் இவைகளின் மிதாமித குணம்

கரும்பிரச மெத்தவுண்டாற் காணுங் கபநோய்
விரும்பிவெல்ல மெத்தவுண்டால் மேகங்-கருமதுநீ
ருண்டா மவைமிதமா யுண்டால் மேகபித்தம்
மிண்டாமற் சாந்தமுறும் விள்.

(இ-ள்.) கரும்பின் ரசத்தை மிகவுங்குடிக்கில் சிலேஷ்மநோயுண்டாம். வெல்லத்தை யதிகமாகத்தின்றால் மதுமேகங்காணும். மிதமாகப் புசித்தால் பிரமேகம் பித்தகோபம் இவை மீறாமல் அடங்கும். 174

தேன்பாகின் குணம்

அனலா லெழுந்த வருசிசர்த்தி தாழும்
புனலாருங் கோழையது பொங்குங்-கனலாருந்
தேன்பாகுக் கென் றுமதைச் சேரோ ஷதியதனால்
கான்பாவ நோய்க்கூட்டங் காண்.

(இ-ள்.) தேன்பாகினால் பித்த அரோசகம் வாந்திநீங்கும், நெஞ்சிற் கோழைகட்டுண்டாம். இதை ஔஷதிகளிற்சேர்த்து உபயோகித்தால் கபதோஷ முதலியநோய்கள் விலகுமென்க. 175

மணப்பாகின் குணம்

பித்த வருசிகெடும் பேசிலற்ப வாதமறுந்
தத்தனலம் மெள்ளவுள்ளே தாவிவரு-மெத்த
வணப்பாகை யொத்த மொழிமாதே முறுகா
மணப்பாகுக் கென்றே மதி.

(இ-ள்.) பாகைநிகர்த்த மொழியையுடைய பெண்ணே! மணப்பாகினால் பயித்திய அரோசகமும் அற்பவாதமும் நீங்கும். அன்றியும் சரீரத்தில் உஷ்ணாரம்பமாமென்க. 176

முதிர்ந்தபாகு பழயவெல்லப்பாகு இவைகளின் குணம்

முதிர்பாகும் வயிற்றெரிவு மூத்திரக் கட்டோடே
யதிர்வாத மாதிய நோயாகுந்-துதிபழைய
வெல்லப்பா குக்கருசி வீறுபித்தம் பேதிவாய்
வில்லைப்பா மாதே யினி.

(இ-ள்.) முறுகிய வெல்லப்பாகினால் வயிற்றெரிச்சலும் வாதகுண்டலிமூத்திரமும் கம்பவாதமும் உண்டாம். பழைய வெல்லப்பாகுக்கு அரோசிகம் பித்தாதிக்கம் அதிசாரம் வாதகோபம் இவைநீங்கும். 177

Digitized By Roja Muthiah Research Library

நல்லவெல்லத்தின் குணம்

குன்மபித்தம் போக்குமதி கோழைதனை யுண்டாக்குந்
துன்மலத்துட் கிடத்தைத் தோன் றுவிக்கும்-நன்மைபோல்
வெல்ல மதுநீரை விளைவிக்கு மாமதுர
வெல்லமென நாளும் விளம்பு.

(இ-ள்.) நல்லவெல்லம் பித்தகுன்மத்தை நீக்கும், நெஞ்சிற் கபக்கட்டு மலாசயக்கிருமி மதுமேகம் இவை யுண்டாமென்க. 178

உண்டைவெல்லத்தின் குணம்

சூலமேகங் குன்ம முட்சூலை விந்துவுமாங்
காலடர் குமட்டல்பித்தங் காசமும்போம்-நீலவரிக்
கெண்டை விழியாய் கெழுமிய நாணற்கன்ன
லுண்டைவெல்ல மிக்குண்பார்க் கோது.

(இ-ள்.) கறுத்து செவ்வரிபொருந்திய மகரநோக்கியே! நாணற் கருப்பஞ் சாற்றாலாகிய உண்டைவெல்லத்துக்கு மூலமுளை மதுரப்பிரமேகம் வயிற்றுநோய் பக்கநோய் சுக்கிலவிருத்தி இவையுண்டாம் வாதரோகமும் பித்தமும் இருமலும்போம் என்க. 179

தெங்கின்வெல்லம், பனைவெல்லம் இவைகளின் குணம்

தெங்கின் வெல்லத்தாற் செரியாக் குணஞ்சோபை
யங்கமுறு நீரு மதிகரிக்குந்-தங்குபனை
வெல்லத்தால் வாதபித்தம் வீறுகபஞ் சந்நிநோய்
வல்லருசி குன்மமறு மால்.

(இ-ள்.) தெங்கின் வெல்லத்தால் செரியாமாந்தம் வீக்கம் நீரேற்றம் இவை யதிகரிக்கும், பனைவெல்லத்தால் வாத பித்த தொந்தம் சிலேத்மதோஷம் சந்நிபாதம் அரோசகம் வாதகுன்மம் இவைதீரும். ()

ஈச்சம்வெல்லத்தின் குணம்

நீடுபே ரீச்சினையர் நின்மலப் புத்திக்குமந்த
மோடுகப வாத முட்சீத-மாடுமிதி
பித்தமுடனே பெருந் திமிர்நோய் வியாதிகளை
யித்தரையி லுண்டாக்கு மெண்.

(இ-ள்.) பேரீச்சம்வெல்லம் புத்திமந்தம் சிலேத்மவாதம் உள்ளிற் சீதளம் பித்தகோபம் திமிர்வாயு உண்டாகும். அயிர்-வெல்லம். 181

சருக்கரையின் குணம்

அருந்து மருந்திற் கனுபான மாகப்
பொருந்துமடல் வாந்திபித்தம் போக்கும்-வந்தருசி
நீக்கு மதிகபத்தை நின்றுமகிழ்ச் சியையுண்
டாக்கு நறுஞ் சருக்கரை.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) சர்க்கரையானது மருந்துகளுக்கு அனுபானமாயிருப்ப தன்றி வாந்தி பித்தம் அரோசகத்தையும் போக்கும் கெட்டிப்பட்ட கபத்தையிளக்கி மகிழ்ச்சியைத்தரு மென்க. 182

சீனிச்சருக்கரையின் குணம்

சீனிச் சருக்கரைக்குத் தீராத வன்சுரமுங்
கூனிக்கும் வாதத்தின் கூட்டுறவு-மேனிற்கும்
வாந்தி யொடுகிருமி மாறாத விக்கலுமே
போந் திசையைவிட்டுப் புரண்டு.

(இ-ள்.) சீனிச்சருக்கரைக்கு வாதசுரம் வக்கிரிக்கின்ற வாதநோய்கள் வாந்தி கிருமிரோகம் நீங்காதவிக்கல் இவைபோமென்க. 183

கற்கண்டின் குணம்

ஈறின் தடிப்பு மிருமலும்பல் வாந்திகளுஞ்
சீறுகப முட்டினமுஞ் சேராதே-தேறியநற்
சொற்கண் டிளங்குயில்கள் சூழு மடவனமே
கற்கண் டெனவுரைக்குங் கால்.

(இ-ள்.) இனிய சொற்கேட்டிளங் குயில்கள் சூழும் இளமைதங்கிய அன்னத்தை நிகர்த்த நடையையுடையமாதே! கற்கண்டினால் பல்லரணை காசம் பற்பலவாந்தி அதிகரித்த சிலேத்மதோஷம் வெப்பம் ஆகிய இவைகள் தீருமென்க. 184

தேங்கின் கற்கண்டின் குணம்

நெஞ்சிற் றிமிருஞ்செந் நீரிலழுக் கும்படையு
மஞ்சுகப வாதமொடு வாதமுமே-விஞ்சுமிளந்
தொங்கின தேதர்க்கயர்வுந் தூயபுத்தி மந்தமுமாந்
தெங்கினது கண்டாற் றெளி.

(இ-ள்.) தெங்கின் கற்கண்டினால் தொண்டைக்குள் திமிர் உதிரத்திலழுக்கு சொறிமேகம் சிலேத்ம வாததொந்தம் வாதம் இளைத்த தேகிகளுக்கு ஆயாசம் மந்தபுத்தி ஆகிய இவை யுண்டாமென்க. 185

பனங்கற்கண்டின் குணம்

மேக வனலு மிகவீசும் சூரிகையா
லாகமுறு கனலு மாறுங்காண்-மோகனத்திற்
றங்கிவரு நீர்ச்சுருக்குந் தாகவெப்ப முந்தணியு
மிங்குபனங் கற்கண்டுக் கே.

(இ-ள்.) பனங்கற்கண்டுக்கு மேகசுரம் சூரிகையின் வெப்பம் தங்கி வரும் நீர்ச்சுருக்கு உஷ்ணதாகம் இவை நீங்குமென்க. 186

Digitized By Roja Muthiah Research Library

ஈச்சங்கற்கண்டின் குணம்

அரிய மருந்தையெலா மன்றே முறிக்குந்
திரிவித கபத்தைவரச் செய்யுந்-தெரிவரிய
பன்னோய் விளைக்கும் பகரறிவை மங்குவிக்கு
மன்னோய் வீச்சங்கண் டிசை.

(இ-ள்.) ஈச்சங்கற்கண்டு அவுஷதங்களையும் அறிவையுங் கெடுக்கும் மூன்றுவித க்ஷயங்களையும் காணற்கரிய பலபிணிகளையுந் தரும். ()

தேனில் உண்டாகுங் கற்கண்டின் குணம்

தேனிற் பிறந்த செழுங்கண்டாற் கண்விழிக்கு
றானிற் படர்படல மோடிடுங்காண்-கானத்திற்
காகுஞ் சுரமாகு மண்டும் பசிகபங்கா
ணேகுஞ் சுரமேகு மெண்.

(இ-ள்.) தேனிலுண்டாகுங் கற்கண்டினுல் கண்ணிற்படருகின்ற தூர்மாமிசபடலம் உதராக்கினி கபநோய் வாதநோய் சுரரோகம் இவை நீங்கும். இசைப்பாட்டுக்குரிய குரற்றொனியுண்டாகும். 188

மதுவின் வகை

தெங்கின்மதுக் குணம்

நாதவிந் தூறு நாளிற்பாண் டொடுசோபை
வாதபித்தங் கிராணி வன்கரப்பான்-பேதியிவை
பொங்கி யதிகரிக்கும் புத்திகெடு மேகமுண்டாந்
தெங்கின் மதுவிற்கென்றே செப்பு.

(இ-ள்.) தெங்கின் கள்ளுக்குச்சோணிதசுக்கிலப்பெருக்கம் பாண்டு ரோகஞ் சோபை வாதபித்தமொந்தம் ரத்தக்கழிச்சல் கரப்பான் பேதி பிரமேகம் இவைகள் உண்டாகும் அறிவுங்கெடுமென்க. 189

பனையின்மதுக் குணம்

விந்துதிர மூறுமதி வெப்புடனே தாகம்போம்
பந்தமாந் தாதுவுமோ பாரிக்கு-முந்துபித்தந்
தோன்றும் பாஷாணங்கள் சுத்தியுமாந் தோகைமின்னே
யேன்ற பனைமதுவிற் கே.

(இ-ள்.) மயில்போலுஞ் சாயலேயுடைய பெண்ணே! பனங்கள்ளுக்கு சுக்கில சோணிதவிருத்தி சப்ததாதுக்களும் உறுதி பித்தா

Digitized By Roja Muthiah Research Library

திக்கம் இவையுண்டாகும், தேக உஷ்ணமும் விதாகமும் நீங்கும், பாஷாணவகைகள் சுத்தியாகுமென்க. 190

ஈச்சமதுக் குணம்

வெப்பகலு மெய்குளிரு மேகங் கிரிச்சரம்போஞ்
செப்பருசி போம்பித்தஞ் சேருங்கா-ணெப்படியும்
பூச்சு திமிருண்டாம் பொங்கறிவுங் கெட்டிடுமே
ஈச்ச மதுவதனுக் கே.

(இ-ள்.) ஈச்சங்கள் உள்அழலை பிரமேகம் மூத்திரக்கிரிச்சரம் அரோசகம் புத்தி ஆகிய இவை நீங்கும், சரீரத்தில் குளிர்ச்சி பித்த கோபம் வீக்கம் திமிர்வாயுவு ஆகிய இவைகள் உண்டாமென்க. 191

முந்திரிகையின்மதுக் குணம்

முந்திரிகைக் கள்ளுக்கு மூடுதிரி தோஷம்போம்
விந்துறு மிரத்தமுறும் வெப்பகலும்-இந்தவகைக்
கள்ளெல்லாங் காமமுறுங் காமமற்றூ ருண்டாக்கால்
விள்ளரி தோஷமிலை மெய்.

(இ-ள்.) முந்திரிகை மதுவென்கிற திராட்சப்பழச் சாராயத்திற்கு வாதபித்த கபதோஷங்களும் தேகஅழற்சியும் நீங்கும். விந்துவும் ரத்தத்தாதுவும் விருத்தியாம், இந்த மது வருக்கங்களெல்லாம் காமத்தையுண்டாக்கும், ஆதலால் காமமற்ற பெரியோர் அருந்தில் குற்றமில்லை என்க. 192

அரிசி வேலம்பட்டை தெங்கு இவைகளின் மதுக்குணம்

சாலிமது வாதத்தாற் சளிநீருண் டாக்கும்
வேலின்மது பித்தமழைக்கும் வேண்டாவாஞ்-சாலவுயர்
தெங்கின் மதுசீதந் திரிதோஷ முண்டாக்கு
மங்குவிடு கள்குலையே யாம்.

(இ-ள்.) அரிசியிலிறக்கிய சாராயம் விருத்தி வாதகபத்தையும் நீரேற்றத்தையும் உண்டாக்கும். வேலம்பட்டைச் சாராயம் பித்த கோபத்தை வருவிக்கும் உயர்ந்த தென்னங்கள்ளானது குளிர்ச்சியையும் வாதபித்த கபதோஷங்களையும் உண்டாக்கும் என்க. 193

அத்திமரத்தின் மதுக்குணம்

அத்திமே கஞ்சூ டதிமயக்கந் தாகமும்போ
மத்திமர வேரினுண் டாமதுவில்-நித்தியமுஞ்

Digitized By Roja Muthiah Research Library

சீனியெனும் பேயன் செங்கனியே னுங்கலந்தே
பானுவுதயங் குடித்துப் பார்.

(இ-ள்.) அத்திமாவேரிலிரங்கிய கள்ளில் சீனிச்சருக்கரையாவது பேயன்வாழைக்கனியாவது கலந்து தினமும் சூரியோதய காலத்தி லுண்டுவர அஸ்திமேகம் உட்சூடு மூர்ச்சை தாகம் இவை நீங்கும். ()

தேன்வகை

மலைத்தேனின் குணம்

ஐயிரும லீளைவிக்க லக்கிப்புண் வெப்புடல்நோய்
பையவொழியும் பசியுமுறும்-வையகத்தி
லெண்ணுமிசை யாமருந்திற் கேற்ற வனுபான
நண்ணு மலைத்தே னென்றிறல்.

(இ-ள்.) மலையிலிருக்குங் குறிஞ்சித்தேனினால் சிலேஷ்மகாசம் சுவாசம் விக்கல் கண்விரணம் சுரம் தேகக்கடுப்பு இவைநீங்கும். தீபனமும் நல்லதொனியுமுண்டாம். இது ஔஷத அனுபானங்களுக்குதவும்.

கொம்புத்தேனின் குணம்

வாதபித்த வையகத்தை மாற்றுமுள மாந்தைதனைக்
காதமென வோடக் கடியுங்காண்-பூதரமாம்
வம்பு முலைமாதே வருமருசி நீக்கிவிடுங்
கொம்புத் தேனன்றுருகுங் கூறு.

(இ-ள்.) வாரிறுக்கிய மலையனைய கொங்கைகளையுடைய பெண்ணே! மாமரம்முதலிய மரக்கொம்புகளிற் கட்டுகின்ற தேன் திரிதோஷங்களையும் உளமாந்தையும் அரோசகத்தையும் நீக்குமென்க. 196

மரபொந்துத்தேனின் குணம்

பசிவெப்பாம் வாந்திமந்தம் பல்விக்கல் வெய்ய
ருசிமுக் கபந்தூல ரோகங்-கசிவகலாக்
கொந்துத்தேன் பாடுங் குழலணங்கே காவின்மரப்
பொந்துத்தே னுண்டாயிற் போம.

(இ-ள்.) அன்பு நீங்காத வாசனைபொருந்திய வண்டுகள் பாடுங் கூந்தலையுடைய பெண்ணே! மரப்பொந்துத்தேனினால் ஜடாக்கினியும் உஷ்ணமும் உண்டாம். வமனம் மந்தாக்கினி பலவிதவிக்கல் ரோகம் அரோசகம் இருமல் சுவாசம் க்ஷயம் அதிதூலரோகம் ஆகிய இவைகள் போமென்க. 197

Digitized By Roja Muthiah Research Library

புற்றுத்தேனின் குணம்

*கொப்பணியு மாதே குவலயத்து ளெல்லார்க்கு
மொப்பநின்ற வைய மொழிக்குங்காண்-கொப்பளிக்குங்
காச்சுவாசம் வாந்தி கண்ணிலெழு நோய்களறும்
வீசுபுற்றுத் தேனுக்கு மெய்.*

(இ-ள்.) கொப்பென்னுங் காதணியையுடைய பெண்ணே! புற்றில் கட்டுகின்ற தேனுக்கு கபதோஷம் இருமல்* ஈளை வாந்தி நேத்திர ரோகம் ஆகிய இவைகள் நீங்குமென்க. 198

மனைத்தேனின் குணம்

*புண்ணும் புரையும்போம் போகாக் கரப்பானது
மெண்ணரிய தீபனமா மேந்திழையே-கண்ணுகளிற்
பூச்சிபுழு வெட்டுகபம் பொல்லா விருமலறும்
பேச்சின் மனைத்தேனுக்குப் பேசு.*

(இ-ள்.) வீடுகளிற் கட்டுகின்ற தேனுக்கு விரணம் புரையோடல் கரப்பான் நேத்திரவிரணக்கிருமி புழுவெட்டு சிலேஷ்மகோபம் காசம் ஆகிய இவைகள் நீங்கும், ஜடராக்கினி யுண்டாமென்க. 199

புதியதேனின் குணம்

*ஆயுளுட னுட்டின மரோசிய கக்கபமு
மேயவழுகும் வளர்ந் தேறுங்-காய்தூய
மதியமெனும் வதன மாதரசே நாளும்
புதியநறுந் தேனாற் புகல்.*

(இ-ள்.) பூரணசந்திரனென்றுரைக்கும் வதனத்தையுடைய மாதரசே! புதுத்தேனினால் நிறைந்த ஆயுளும் சரீரவெப்பமும் தேஜசும் உண்டாம். மிகவுஞ்சேர்ந்தால் அருசியுநெஞ்சிற்கபமும் விளையும். ()

பழையதேனின் குணம்

*வாதப் பெருக்கை வயிற்றெரிவைத் தந்துறையைச்
சேதப் படுத்துமின்னுஞ் செப்பவோ-மாதரசே
சத்திப் புறமரசந் தன்னைத்தூண்டும் புளிப்புத்
தித்திப் புறும்பழைய தேன்.*

(இ-ள்.) பெண்களுக்குள் நாயகம்போல்பவளே! புளிப்பும் இனிப் புங்கலந்த சுவையையுடைய பழையதேனானது வாதரோகக் கூட்டத்தையும் வயிற்றெரிச்சலையும் வாதமூலரோகத்தையும் விளைக்கும். மருந்தினது நற்குணங்களைக் கெடுக்குமென்க. 201

Digitized By Roja Muthiah Research Library

மரவகை

சந்தனமரத்தின் குணம்

நற்சந் தனமரத்தா னல்லறிவு மின்பமெழிற்
பொற் செந்திருவருளும் பூமிதத்துண்-மெச்சுஞ்
சரும வழகுந் தனிமோ கமுமாம்
மிருமுனோ யேகும் பிறழ்ந்து.

(இ-ள்.) சாதிச் சந்தனமரக்கட்டையைக் கிரமப்படி யனுபவிப்பவர்கட்கு நல்லவிவேகமும் மனமகிழ்ச்சியும் லட்சுமி விலாசமும் சருமதாது ஒளியும் மாதரிச்சையுமுண்டாம். கிழ்ப்பிரமியம் நீங்கும். 202

தேவதாருவின்குணம் இது தேவதாரம் என மருவியது

தேவதருக் குணந்தான் சேர்த்துவளர் பீநசத்தை
காவகத்தி லோட்டுங் காப்பலவே-பாவலர்கள்
சொல்லும் புராண சுரமொடுசீ ரேற்றத்தை
வெல்லு மணற்றணிக்கும் விள்.

(இ-ள்.) தேவதாருக்கட்டை நாசிரோகம் பழையசுரம் சலதோஷம் சீரவெப்பம் ஆகிய இவைகளை நீக்குமென்க. 203

சரளதேவதாருவின் குணம்

சரளமெனுந் தேவ தாருவினுற் கண்ணீர்
விரளமா குங்கபமும் வீடுந்-தரளவெயிற்
றுமயஞ் சுவாசம்வலி யண்ணுதம் வாதம்
போவயச் சுரத்துரமும் போம்.

(இ-ள்.) சரள தேவதாருக்கட்டையினல் கபஸ்ராவரோகம் சிலேஷ்மதோஷம் தந்தநோய் இரைப்பு ஐவகைவலி கர்னநாதரோகம் நடுக்குவாதம் கபச்சுரம் இவைகள் நீங்குமென்க. அள்-காது. 204

அகில்மரத்தின் குணம்

தளர்ந்த விருத்தருக்காந் தக்க மணத்தா
லுளைந்த சுரமுழுது மோடும்-வளந்திகழு
மானே யகிற்புகைக்கு வாந்தியரோ சகம்போந்
தானே தளர்ச்சியறுஞ் சாற்று.

(இ-ள்.) வண்மைதிகழும் பெண்ணே! அகில்கட்டை (சந்தனம்) விருத்தர்களுடைய தளர்ந்த தேகத்தையும் இறுக்கும். இதன்வாசனையால் சிற்சிலசுரம் நீங்கும். புகையால் வாந்தியும் அருசியும் அயர்ச்சியும் நீங்குமென்க. 205

Digitized By Roja Muthiah Research Library

அகரு மரத்தின் குணம்

நாசி யடைப்பு நவிரவிடி தாளுநோய்
வீசுகனைப் புடைகள் விட்டேகும்-பேசிற்
சுகரு மயங்குந் துணைமுலையாய் நல்ல
அகரு மரத்தா லறி.

(இ-ள்.) சுகரும் மயங்குந் தனங்களையுடைய பெண்ணே! அகருக் கட்டையினால் பீநசம் தலைக்குத்து வாதம் தினவுள்ள புடைகள் ஆகிய இவைகள் போகுமென்க. 206

சரக்கொன்றை மரத்தின் குணம்

குட்டங் கிருமி கொடுஞ்சூலை வாதமையந்
துட்ட மலமருசி தூரப்போந்-தட்டிச்
சுரக்கின்ற பேதியுண்டாந் துய்க்கத் துவர்க்குஞ்
சரக்கொன்றைக் காரணங்கே சாற்று.

(இ-ள்.) தெய்வமகளிரனைய தெரிவையே! சரக்கொன்றை மரத்தால் பெருவியாதி கிருமிரோகம் சூலை வாதம் கபதொந்தம் விஷமலம் அரோசகம் ஆகிய இவைபோம் இதில் துவர்ப்பு உண்டு விரோசனம் ஆமென்க. 207

சிறுகொன்றை மரத்தின் குணம்

சிறுகொன்றை நற்கசப்பாஞ் சென்னி யனலா
லுறுகின்ற கண்களி னோயோடே-பெருமுடலி
னுட்டினமுன் மூலமிவை யோடு மதிபலமுங்
கட்டழகு முண்டதனாற் காண்.

(இ-ள்.) மிகுந்த கசப்பையுடைய சிறுகொன்றைமரத்தால் கபாலச் சூட்டினால் உதித்த நேத்திர ரோகங்களும் தேக உஷ்ணமும் உள் மூலமும் நீங்கும். சரீர வலிமையும் அழகும் உண்டாகும். 208

நரிக்கொன்றை மரத்தின் குணம்

பையவே யூறிப் படருமியா னைச்சொரியு
நொய்ய கிருமிகொண்ட நூண்புடையு-மெய்யி
லரிக்கின்ற வன்புடையு மாழிபுகு மாதே
நரிக்கொன்றை தன்னை நவில்.

(இ-ள்.) நரிக்கொன்றை மரத்திற்கு யானைச் சொறியும் தவிட்டுக் கிருமிப்புடையும் தினவுள்ள விரணப்புடையும் நீங்கும். 209

மைக்கொன்றைமரத்தின் குணம்

குடல் வாதஞ்சூலை கொடுமேக மெல்லா
மடைவாகப் போக்க வலைந்தே-படிமீது

எக்கொன்றைத் தேடிநெஞ்சி லெண்ணமிடு வானேன்
மைக்கொன்றை யீங்கிருந்து மால்.

(இ-ள்.) மைக்கொன்றைமரம் குடல்விருத்தி வாயுவையும் சூலை மேக ரோகங்களையும் போக்குமென்க. 210

மருதமரத்தின் குணம்

ஓதமெனு நீரிழிவை யோட்டும் பிரமேகங்
காதமென வோடக் கடத்துங்காண்-போத
மயக்க மொடுதாக மாறுச் சுரத்தின்
தயக்க மறுக்கும்மருதந் தான்.

இதுவுமது

குட்ட ரோகங்கிருமி கோர வயிற்றுவலி
துட்ட வரட்சூலை தொலையுங்காண்-கிட்டிப்
பொருதம் பாமென்னும்விழிப் பூவையரே நாளு
மருதம்பா ரென்றளவில் மாய்ந்து.

(இ-ள்.) போர்புரியும் அம்பாமென்னும் கண்களையுடைய பெண்ணே! மருதமரமானது வெகுமூத்திரம் பிரமியம் மயக்கம் விதாகம் நீங்காத சுரத்தில்வரும் ஆயாசம் பெருவியாதி கிருமிரோகம் உதரநோய் வறட் சூலை இவைகளைப் போக்கும் என்க. 211

வேங்கைமரத்தின் குணம்

குற்றிருமல் வெட்டையொடு கூறுமுள மாந்தையிவை
யெத்திசையும் வாராதிசையுங் காண்-சத்தியமாய்ப்
புண்ணிருமல் சீயொழுகல் போகுமல மிறங்குங்
கண்ணொளிரும் வேங்கைக்குக் காண்.

(இ-ள்.) வேங்கைமரத்தினால் குற்றிருமல் வெள்ளைவிழுதல் உள மாந்தை விரணம் காசம் கீழ்ப்பிரமேகம் ஆகிய இவைகள் நீங்கும். கண்ணுக்கு ஒளியும் மலவிரோசனமும் உண்டாமென்க. 212

வன்னிமரத்தின் குணம்

வாதசன்னி தோஷமறு மாறுத் தழலுளதென்
றோதுவரிவ் வன்னிக்கு வமையுண்டோ-பூதலத்திற்
காணார் விஷமுங் கபமுஞ் சொறியும்போந்
தேனே யிதையறிந்து செப்பு.

(இ-ள்.) தேன்போன்ற மொழியினையுடைய பெண்ணே! வெப்பத்தையுடைய வன்னிமரத்திற்கு வாதசன்னி பாதம் திரிதோஷம் விஷம் சிலேஷ்மகோபம் புடை இவை நீங்கும். 213

Digitized By Roja Muthiah Research Library

புரசமரத்தின் குணம்-இதுவே பலாசு

புரசுவா தம்பித்தம் பொங்குகபங் குன்மங்
கிருமி யுடனே கிராணி-பெருவலிநோ
யோட்டி மதிதீபனத்தை யுண்டாக்கு மப்பொழுதே
தீட்டியவேற் கண்ணாய் தெளி.

(இ-ள்.) தீட்டிய வேல்போன்ற கண்களையுடையபெண்ணே! புரசமரமானது வாதாதிக்கம் பித்தகோபம் சிலேஷ்மதோஷம் வயிற்றுநோய் மலக்கிருமி கிராணிரோகம் தேகக்குடைச்சல் ஆகிய இவைகளை நீக்கும். உதராக்கினியை யுண்டாக்குமென்க. 214

இருவாட்சிமரத்தின் குணம்

கண்ணொளிவு மெய்யிற் கமழ்மணமு நீடழுகு
நண்ணும் வலிமூர்ச்சை நாசமாம்-பண்ணளியுங்
கங்குலும் வாழ்வார்குழலே காரமொடு வெப்புமிகத்
தங்குமிரு வாட்சிமரத் தால்.

(இ-ள்.) இசையையுடைய வண்டுகளும் கங்குலும் வாழ்கின்ற நீண்ட கூந்தலையுடைய பெண்ணே! உஷ்ணமும் கார்ப்புச் சுவையுமுள்ள இருவாட்சிமரத்தால் நேத்திரபிரகாசமும் தேகத்தில் சுபாவவாசனையும் வனப்புமுண்டாம், தேகக்குத்தலும் மூர்ச்சாரோகமும் நீங்கும். ()

காட்டாத்தின் குணம்

அதிசார மந்தமிக வாலித்த காசம்
விதிராம் விஷமும் விலகு-மெதிரொருவர்
மூட்டாத்தீ யென்றுமதி மோகந் தருமணங்கே
காட்டாத்திக் கென்றுளத்திற் காண்.

(இ-ள்.) மூட்டாத அக்கினியென்னும் அதிமோகந்தரும் பெண்ணே! காட்டாமரத்திற்கு அதிசாரபேதி அக்கினிமாந்தம் இருமல் தாவரசங்கம் விஷம் ஆகிய இவைகள் நீங்குமென்க. 216

பெருங்குமிழமரத்தின் குணம்

பெரிய குமிழின்பேரைப் பேசின் மேகத்தி
னெரிவு சுக்கிலக்கடுப்பு மேகும்-பிரியாத
வல்ல வனற்சுரமும் வாதசுரமும் தணியும்
மெல்லெனமுத் தோஷம்போம் விள்.

(இ-ள்.) பெருங்குமிழி மரத்தினால் மதுமேகஎரிச்சல் வெள்ளை விழல் நீர்க்கடுத்தல் பித்தசுரம் வாதசுரம் திரிதோஷமிவைகள்போம். ()

Digitized By Roja Muthiah Research Library

மாவிலிங்கமரத்தின் குணம்

சுரங் கடியின்றோஷ தொலையாத வாத
முரம்பெறு விஷங்க ளொழியும்-அரவுஞ்
சருமா வடுவேலுங் கண்டஞ்சுங் கண்ணு
யொருமா விலங்குக் குரை.

(இ-ள்.) அரவும் மாவடுவும் வேலும் கண்டு பின்னிடையும் கண்க ளையுடைய பெண்ணே! மாவிலங்கமரத்திற்கு சுரம் கடிகளின் தோஷம் மகாவாதரோகங்கள் சர்ப்பவிஷம் ஆகிய இவை போக்குமென்க. 218

அழிஞ்சில்மரத்தின் குணம்

அழிஞ்சிலது மாருதத்தை யையத்தைத் தாழ்த்து
மொழிஞ்ச பித்தத்தை யுயர்த்து-விழுஞ்சீழாங்
குட்டமெனு நோயகற்றுங் கூருமருந் தெய்திடில்
திட்டமென வறிந்து தேர்.

(இ-ள்.) அழிஞ்சில் மரமானது வாதகோபம் கபதோஷம் சீழ்வடி யும் பெருநோய் இவற்றை நீக்கும். பித்தாதிக்கத்தைச் செய்யும். 219

கடலழிஞ்சில்மரத்தின் குணம்

தீதில் கடலழிஞ்சில் செய்யுங் குணங்களோ
யோது மதுமேக மொழிப்பதன்றி-வாதத்தில்
வந்தசலம் பித்தசல மாகபச் சலந்தாகத்
தொந்த சலமும்போக்குஞ் சொல்.

இதுவுமது

கமல விரணங் கசிந்தீ ரகற்றும்
நிமல சுரம்விலக்கு நேரே-கமலமுக
மாதே கடலழிஞ்சில் வன்பட்டை பேதிகட்டுஞ்
சீதமேகம் போக்குந் தேர்.

(இ-ள்.) கடலழிஞ்சில் மரமானது மதுநீர் வாதாதி மூன்றுநீர் தாகத்தைத் தராநின்ற தொந்தமூத்திரம் படர்தாமரை சொட்டுமூத் திரம் தனிச்சுரம் அதிசாரம் சீதமேகம் இவைகளைப் போக்குமென்க.()

மோதகவல்லிமரத்தின் குணம்-இதுவே கோழுக்கட்டைமரம்

பொங்கிவரு வள்ளைப் புனலினசிர்க் குங்காலா
லங்கியுந்த வீழுமிரத் தாமயநோய்-தாங்கவே
போதகத் துச்சியெனப் பூரித்த மாமுலையாய்
மோதக பூருகத்தை முன்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) யானை மத்தகத்தை நிகர்த்து பூரித்து நெருங்கிய தனங்களையுடையபெண்ணே! மோதகவல்லிமரத்தினால் அசிர்க்காரமும் வாதத்தால் மூலாக்கினிதள்ள வீழாநின்ற ரத்தசீதமும் நீங்கும். பூருகம்-மரம்.

பூதமரத்தின் குணம்

பூததரு ருட்சையது போக்கும் பலவிஷத்தை
வாதமென்ற நோயனைத்து மாற்றுங்காண்-தீதுபுரி
சன்னிகளைத் தப்பாது சண்ணிவிடும் பூதலத்து
ளுண்ணி மகிழ்வா யுரை.

(இ-ள்.) பூதவிருட்சம் என்கிற ஆலமரம் சுரம் பற்பலவிஷம் வாதரோகங்கள் சன்னிபாதங்கள் ஆகிய இவைகளை நீக்குமென்க. 222

வாகைமரத்தின் குணம்

வாகை காரங்கசப்பை வைத்திருக்கு முள்ளபடி
யோகை யுறப்பசியை யுண்டாக்குந்-தோகையரே
தீரா விஷத்தோடு சில்விஷத்தை யுந்தீர்க்கு
சூரநாய்த் தோன்று மறி.

இதுவுமது

வாகை யணல்விரணம் வாதை வரட்சியுடன்
தாக சுரமுந் தணிக்குங்கா-ணுகமதி
வக்கர மெல்லா மகற்றிவிடும் பூவனமே
யக்கணத்தி லென்றே யறி.

(இ-ள்.) கார்ப்பும் கைப்புமுள்ள வாகைமரம் ஜடராக்கினியை விருத்திசெய்யும், சர்ப்ப விஷங்கள் பித்தவிரணம் வாதச்சொறி தாக சுரம் கந்ததாளிரோகங்கள் ஆகிய இவைகளை நீக்குமென்க. 223

கருவாகைமரத்தின் குணம்

விரணமோ டுட்டினமுன் வீறுகின்ற வாய்வுந்
திரண மெனுங்கிருமிச் சேர்வு-மரணமுறச்
செய்யுங் கபத்தின் செயலுங்குடி விலகும்
வெய்ய கருவாகைக்கு வின்.

(இ-ள்.) கருவாகைமரத்திற்கு புண் வெப்பம் விரதகோபம் சன்னக்கிருமி மரணமுறச்செய்யும் க்ஷயரோகம் நீங்கும். 224

இலவமரத்தின் குணம்

நீர்க்கடுப்பு நீரெரிவு நீண்டொழுகு மேகமும்போ
மார்க்கும் விந்தடைக்கு மாண்மையுறும்-பார்க்குள்

Digitized By Roja Muthiah Research Library

நிலவு மதிவதன நேரிழையே யொப்பா
மிலவு மரத்தா லியம்பு.

(இ - ள்.) விளங்குகின்ற சந்திரனையொத்த முகத்தினையுடைய பெண்ணே! உஷ்ணமுள்ள இலவுமரத்தினால் வாதகிரிச்சுரம் எரிமூத்திரம் தந்துமேகம் இவைபோம் சுக்கிலமும் ரசதாதுவும் பலப்படும். ()

முள்ளிலவமரத்தின் குணம்

தந்துமேகஞ் சிறுநீர்த் தாரைவெப்பம் வாய்
வுந்தவரு பேதியிவை யோட்டுங்காண்-முந்திக்
கிளர்வள்ளை பாயும் வரிக்கெண்டை விழியாய்
வளர் முள்ளிலவ மரம்.

(இ-ள்.) விளங்குகின்ற வள்ளையை நிகர்த்த காதுகளைத்தாவுங் கொண்டையையொத்த கண்களையுடைய பெண்ணே! முள்ளிலவமரம் பஞ்சிநூலைப்போல வீழ்கின்ற தந்துமேகத்தையும் மூத்திரகாளச்சூட்டையும் வாதாதிசாரத்தையும் போக்குமென்க. 226

விளாமரத்தின் குணம்

காச சுவாசங் கதித்த வருசிமுதற்
பேசரிய தாகமிவை பேருங்காண்-வீசு
தபித்தலைச் செய்பித்தந் தரிக்குமோ பூவிற்
கபித்த மரமிருக்குங் கால்.

(இ-ள்.) கபித்தம் என்கிற விளாமரத்தினால் இருமல் இளைப்பு கதித்தஅரோசகம் சொலற்கரிதாகிய தாகம் தபித்தலைச்செய் பித்த கபரோகம் ஆகிய இவைகள் நீங்குமென்க. 227

கருநெல்லிமரத்தின் குணம்

பதினைந் தெனுஞ் சன்னிபாதந் தயக்கம்
மதினைந் திடச்செய் வினைமாறும்-பதியிற்
சனித்த கருவுருவந் தானும் வேறுகுந்
தனித்த கருநெல்லிமரத் தால்.

(இ-ள்.) கருநெல்லிமரத்தினால் பதினைந்துவகை சன்னிபாதங்களும் மயக்கமும் மனோவியாதியும் நீங்கும் காயசித்தியாமென்க. 228

அருள்மரத்தின் குணம்

வாத மகலும் வளருகின்ற மந்தமறுஞ்
சீதரத் தஞ்சோபை சுரந்திடுங்காண்-ஓதும்

Digitized By Roja Muthiah Research Library

இருளாருங் கூந்தலெழி லணங்கே முத்த
அருளென்னும் நன்மரத்தா லாய்.

(இ - ள்.) கருநிறம்பொருந்திய கூந்தலையும் அழகையுமுடைய பெண்ணே! அருள்யென்கிற முதிர்ந்த மாதுமரத்தினல் வாதகோபம் மந்தாக்கினி சீத ரத்தபேதி சுரவீக்கமாகிய இவைகள் போமென்க. ()

வேப்பமரத்தின் குணம்

ஓதரிய வேம்பை யுரைக்கிற் சுரமுடனே
வாதமர மூலகண மந்தம்போந்-தீதா
யுதிரு மெரிபூச்சி குன்ம மொழியுஞ்
சிதறுமலம் போகுமெனத் தேர்.

(இ-ள்.) வேப்பமரத்திற்கு சுரம் வாதகோபம் மூலகணமாந்தம் எரிகிருமி வயிற்றுநோய் சிதறுகின்ற மலப்பேதி இவை நீங்குமென்க.

மலைவேப்பமரத்தின் குணம்

மலட்டுப் புழுவும் வயிற்றின் வலியு
மலட்டு வாய்வும் போமடங்கிக்-கொலட்டு
முலைவேஞ்சின வேற்கண் ணேதிமமே கேளாய்
மலைவேம்பின் பேரை வழுத்து.

(இ-ள்.) கருமானுலையிற் காய்ச்சிய சினவேலனைய கண்களையுடைய அன்னமே! மலைவேப்பமரத்திற்கு மலட்டுக்கிருமி ரத்தகுன்மரோகம் ஓடிஓடிக்குத்துகின்ற வாதம் ஆகிய இவைகள் விலகுமென்க. 231

சருக்கரை வேப்பமரத்தின் குணம்

காயசித்தி யாகுங் கடிய சிலேத்மமறுந்
தூயவிந்து நாதமிவை சுத்தியுமாந்-தூயவருக்
கெத்திக் குங்கிட்டு இலையருந்தில் வாயெல்லாந்
தித்திக்கும் வேம்புதற்குத் தேர்.

(இ-ள்.) தூயவர்களுக் கெத்திக்கிலுங் கிட்டுகின்ற இலையில் மதுரமுள்ள சருக்கரை வேம்பினல் காயசித்தியும் சுக்கில சோணிதசுத்தியும் உண்டாம் கபரோகம் நீங்குமென்க. 232

பாலைமரத்தின் குணம்

வாதப் பெருக்குபித்த மாறுச் சுவாசமுத
லோதுசர்வ தோஷமும்விட் டோடுங்காண்-தீதுபுரி
வேலைப் பொருவுவிழி மெல்லியலே காட்டிலுறை
பாலைக்கென வுன்னிப் பார்.

(இ-ள்.) வேலனையகண்களையுடைய பெண்ணே! பாலைமரத்திற்கு வாதநோய்க் கூட்டங்கள் பித்தரோகம் தமகசுவாசம் திரிதோஷம் ஆகிய இவைகள் ஒழியுமென்க. 233

வெட்பாலைமரத்தின் குணம்

அக்கினியை வைத்திருக்கு மாந்தவாதம் போக்குந்
திக்குள்திரி தோஷத்தைத் தீர்த்திவிடுஞ்-சொக்கவிரு
கட்பாலைக் கூற்றைவைத்த கான மடமயிலே
வெட்பாலை நன்மருந்தாம் விள்.

(இ-ள்.) மயங்கும்படியாக விருகண்ணிடத்தி வியமனைவைத்த பெண்ணே! அக்கினிக்குணத்தையுடைய வெட்பாலை மரமானது வாத வலியையும் திரிதோஷகோபத்தையும் நீக்குமென்க. 234

தீம்பாலைமரத்தின் குணம்

மேகவட்டை சன்னி விஷபாக நேத்திரநோய்
தாகமுத் தோஷஞ்சர்த்தி சாரனலம்-வேகமோ
டேறுசலம் பீநசமி ரத்தமுந்தீம் பாலையெனுந்
தூறுவா திக்ககலுஞ் சொல்.

(இ-ள்.) தித்திப்புப்பாலைமரத்திற்கு மேகஉஷ்ணவெள்ளை சன்னி விஷபாகம் கண்ணோய் தாகம் திரிதோஷம் வாந்தி பித்தகோபம் நீரேற்றம் நாசிநோய் ரத்தக்கிராணி இவை நீங்கும். தூறுவாதி-தீம்பாலை. ()

மலைப்பாலைமரத்தின் குணம்

விக்கல்வலி வாந்திகுன்ம மீறுபக்கச் சூலையொடு
மைக்கரப்பான் மந்தமிவை மாறுங்காண்-மைக்கண்
நிரைப்பாலை யொத்தமொழி நேரிழையே கேளாய்
வரைப்பாலையை யுண்ட வர்க்கு.

(இ-ள்.) மையணிந்த கண்களையும் பாலன்னமொழியையு முடைய நேரிழையே கேட்பாயாக, மலைப்பாலை மரத்திற்கு விக்கல் ஐவகைவலி வாந்தி வயிற்றுவலி விலாக்குத்தல் கருங்கரப்பான் மந்தாகினி இவை நீங்குமென்க. 236

குடசப்பாலைமரத்தின் குணம்

வாதமறும் பேதிகட்டு மாறுத நீரிழிவுங்
காதம்போ மேகங் கடக்குங்காண்-தீதடரப்
பொங்கு கரப்பானும் போகா விரணமும்போ
மிங்கு குடசப்பாலைக் கெண்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) குடசப்பாலைமரத்திற்கு வாதநோய் அதிசாரம் நீரிழிவு தந்திப்பிரமேகம் மிகக்கொடிதாகப் பொங்கும் கரப்பான் சிரங்கு ஆகிய இவைபோமென்க. 237

குளப்பாலைமரத்தின் குணம்

சுவாச காசம்பக்கச் சூலை யதிசார
மவாச வியர்ப்போ டனலங்-தவாத
கரப்பா னிவைவிலகுங் காரிகையே நாளு
முரப்பாங் குளப்பாலை யுண்.

(இ-ள்.) பலமுள்ள குளப்பாலை மரத்தினால் சுவாசகாசம் பக்கச் சூலை அதிசாரவியர்வை சுரம் கரப்பான் இவைபோமென்க. 238

முள்முருக்கமரத்தின் குணம்-இது கல்யாணமுருக்கு

முள்ளு முருக்கதுதான் மோதுகின்ற சாந்திகுன்மங்
கள்ளமறத் தீர்க்குக் கனற்சுரமும்-விள்ளரிய
அக்கரமும் போக்கு மனல்வாய் வேக்காடகற்று
மிக்கவலி கொடுக்கும் விள்.

(இ-ள்.) முள்முருக்கமரம் வாந்தி வயிற்றுவலி பித்தசுரம் அக்கரம் அனல் வாய்வேக்காடு ஆகிய இவற்றைநீக்கி மிருவன்மையையுண்டாக்குமென்க. 239

ஊழலாற்றிமரத்தின் குணம்

அடவி வதிரூழ லாற்றி யெனுமூலி
படவிரணம் புண்கொறுக்கை பாமை-கடிதடத்தால்
வந்தவரை யாப்புவெள்ளை வாதப் பிடிப்புகுட்ட
மிந்தவகை நோயகலு மெண்.

(இ-ள்.) காட்டில் வளர்கின்ற ஊழலாற்றிமரத்தால் மேகவிரணம் ஒட்டுப்புண் ஆண்குறிவிரணம் பாமையென்கிற சிரங்கு போகத்தால் வந்த அரையாப்பு வெள்ளை கீல்வாதம் பெருநோய் ஆகிய இவைகள் நீங்குமென்க. 240

வேள்வேல்மரத்தின் குணம்

பித்த மயக்கமமும் பேருலகின் மானிடருக்
குற்ற சுரவாத மோடுங்காண்-குத்துகின்ற
சந்துக் குடைச்சல்விடுஞ் சர்வாங்க வாதம்போங்
கொந்துலவும் வெள்வேலுக் கு.

(இ-ள்.) வெள்வேல்மரத்திற்கு பித்தமயக்கம் வாதசுரம் சந்துக் குடைச்சல் சர்வாங்க வாதரோகம் ஆகிய இவைகள் நீங்குமென்க. 241

Digitized By Roja Muthiah Research Library

மூங்கில்மரத்தின் குணம்

சூதக வாய்வினது சோணிதந் தங்காதுவரு
மாதே சுரந்தணியும் வாதம்போம்-பூதரமே
லோங்கி வளர்ந்திழையு மோங்கலெனு மூங்கிலுக்கு
வாங்குஞ் சுவாசம்போ மாய்ந்து.

(இ-ள்.) மலையிலோங்கி வளர்ந்திழைகின்ற மூங்கில் மரத்திற்கு மாதாந்தருதுச் சோணிதக்கட்டு சுரம் வாதநோய் இரைப்பு இவைகள் போமென்க. 242

செடிவகை

ஆவாரையின் குணம்

சொல்லுதற்கு மட்டோ தொலையாத மேகநீ
ரெல்லா மொழிக்கு மெரிவகற்று-மெல்லவச
மாவாரைப் பம்பரம்போ லாட்டுந் தொழிலணங்கே
யாவாரை மூலி யது.

(இ-ள்.) நிதானமாய் வசமாவாரைப் பம்பரம்போ லாட்டுகின்ற தொழிலையுடைய மாதே! ஆவாரைச்செடியானது சர்வபிரமேக மூத்திரரோகங்களையும் ஆண்குறி எரிவந்தத்தையும் கெடுக்கு மென்க. ()

பொன்னுவரையின் குணம்

வெடிப்பு துவக்குதிரல் மேகப் புடைகள்
தடிப்பு தினவுதடி தங்கா-அடிக்கடியிங்
கென்னுவறைய விசையா லெழிலணங்கே
பொன்னு வரையதனைப் போற்று.

(இ-ள்.) என்னுவினுற் சொல்லமுடியாத வழகினையுடைய மாதே! பொன்னுவரைச் செடியினுல் சருமவெடிப்பு சொறிந்தால் சருமத்துாள் சிந்துதல் மேகப்புடைகள் கண்டுகண்டாகத் தடித்தல் நமைச்சல் கரணுக்கடி ஆகிய இவைகள் போமென்க. 244

நீர்ப்பூலாவின் குணம்

மாந்தங் கனம்பொருமல் மாறுச் சலத்துடனே
சேர்ந்த சொறிசிரங்குந் தீருங்காண்-ஏந்தெழிலைச்
சேர்ப்பாகக் கொண்ட செழுந்திருவே பூவிலுறை
நீர்ப்பூலாப் பூண்டை நினை.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) ஏந்து எழிலை சேகரமாகக் கொண்டவிலக்குமியனைய பெண்ணே! நீர்ப்பூலாச்செடியால் மாந்தம் கணைச்சூடு வயிறிரைச்சல் சொறி சிரங்கு அதிமூத்திரம் ஆகிய இவை யொழியுமென்க. 245

பேய்மிரட்டியின் குணம் இதுவே வெதும்படக்கி

மாந்த கணங்கழிச்சல் மாறு வயிற்றுவலி
சேர்ந்து வருங்கரப்பான் தீச்சுரமும்-பேர்ந்துவிடும்
வேய்மிரட்டுந் தோளுடைய மெல்லியலே ராசியமாய்ப்
பேய்மிரட்டி யென்றொருகாற் பேசு.

(இ-ள்.) மூங்கிலைமிரட்டுந் தோள்களையுடைய பெண்ணே! பேய் மிரட்டி கணமாந்தம் பேதி வயிற்றுநோய் கரப்பான் கோரசுரம் ஆகிய இவைகள் போமென்க. 246

குன்மக் குடோரியின் குணம்

சூலையோ டீளைதொலை யாதகாசங் கயநோய்
காலனென்ற குன்மங் கலங்குங்காண்-ஞாலமிசை
நன்மைக் குரியகுண நல்குவமென் றூற்றிலுறுங்
குன்மக் குடோரி தனக்கு.

(இ-ள்.) ஆற்றோரங்களிலிருக்கும் குன்ம குடோரிச் செடியால் சூலை சுவாசம் இருமல் க்ஷயம் குன்மரோகம் இவை நீங்குமென்க. ()

விடத்தேரின் குணம்

முளையைவரு விக்கின்ற மூலரோ கத்தை
யளையு முதிரத்தை யடங்கர-துளைதாக
வேகத்தைப் போக்கிவிடும் வெய்யவிடத் தேர்சக்ர
வாகத்தைக் காய்முலையாய் வாழ்த்து.

(இ-ள்.) வெப்பத்தையுடைய விடத்தேரின் செடிக்கு முளையை வருவிக்கின்ற மூலம் வயிற்றுப்பிடுங்கலையுடைய ரத்தகிராணி அதி தாகம் இவை போமென்க. 248

தகரையின் குணம்

தகரை படர்தா மரையைச் சொறியைத்
தகர வடிக்குமந்தந் தன்னோ-டிகலான
அத்தி சுரத்தையு மதஞ்செய்யு மிம்மூலி
யுத்தமமா மென்றே யுரை.

(இ-ள்.) தகரைச்செடியானது படர்தாமரை சொறி அக்கினிமந்தம் அஸ்தாது சுரம் ஆகிய இவைகளை நீக்குமென்க. 249

Digitized By Roja Muthiah Research Library

நின்றுசிணுங்கி நிலம்புரண்டி இவைகளின் குணம்

நின்றுற் சிணுங்கியது நீலவிஷம் போக்குமினுங்
குன்றுந் தனத்தியரைக் கூட்டுவிக்கு-மென்று
மலம்புரண்ட நோயகற்று மாள்வசிய மாக்கும்
நிலம் புறண்டிமூலி நினை.

(இ-ள்.) நின்றுற்சிணுங்கிச் செடியானது சர்ப்பவிஷத்தை நீக்கும் ஸ்திரீவசியத்திற்காகும் நிலம்புரண்டிச்செடியானது அற்ப விஷரோகங் களை யொழிக்கும் புருஷவசியத்திற் குதவும் என்க. 250

உரலாமணக்கின் குணம்

உரலா மணக்குக் குரத்த வலிசூலை
விரைவான குன்மமும்போம் விள்ளப்-பிரிவாம்
முளைமூல மோடிரத்தம் முன்கால் விரணங்
கொளுமேக மெல்லாம்போங் கூறு.

இதுவுமது

எலியா மணக்கோ எலிவிஷமுஞ் சேர்ந்த
பலவிஷமு மோட்டிவிடும் பாரில்-வலுபேதி
யுண்டாக்கு விக்கு முரத்தகுன் மம்பீலிக
மண்டாம லோட்டிவிடு மால்.

(இ-ள்.) உரலாமணக்கஞ் செடிக்கு சரீரநோவு குத்தல் குன்மம் முளைமூலம் கழல்வாத விரணம் ரத்தமேக முதலிய சிலமேகங்கள் எலி விஷம் சில்விஷம் வயிற்றுவலி பீலிகரோகம் ஆகிய இவைகள் நீங்கும் இது விரோசனத்தை யுடையது என்க. 251

சணப்பின் குணம்

கைப்பும் உரைப்புங் கலந்திருக்குந் தின்றக்கால்
மெய்ப்புள்ள பித்த விலக்குங்காண்-நெய்ப்பாங்
கருப்பங்க ளெல்லாங் கரைந்து விழுமே
உருப்பங்க மாஞ்சணப்புக் கோ.

(இ-ள்.) கசப்புங்காரமுமுள்ள சணப்புச்செடிக்கு பித்தகோபமும் சில வாதரோகங்களும் நீங்கும் இளங்கருப்பங்கள் கரையும். 252

மாமாலையின் குணம்

பாண்டுடனே மெய்யிற் படர்சோகை யைத்துரத்துந்
தூண்டுநீ ராம்பலெனுந் துன்பொழிக்கும்-பூண்டதோர்
நீரை யிறக்கு நெடுந்துயர மாற்றிவிடு
நாறியரே மாமாலை நன்று.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) மாமாலேச் செடியானது பாண்டுரோகம் சரீரத்திற் படர் சோகை நீராம்பல்ரோகம் ஆகிய் இவைகளை நீக்கும் அதிகமாக நீரை பிறக்குமென்க. 253

கோடகசாலேயின் குணம்

கோடகசா லேக்குக்கொடிய அலல் மேகமொடு
போடகங் கிரந்திகுஷ்டம் புண்ணுறும்-நாடகஞ்செய்
யப்பித்த வாய்வு மலர்வரம் விரணமும்போம்
பொற்புற்ற பொன்னே புகல்.

(இ-ள்.) அழகுபொருந்திய திருவனேய பெண்ணே! கோடகசாலே செடிக்கு சுரம் வாதப்பிரமேகம் விஷ்டபோகரோகம் சிரங்கு குஷ்டம் விரணம் பித்தவாததொந்தம் ஜிக்வாகண்டகரோகம் ஆகிய இவைகள் விலகுமென்க. 254

வட்டக் கிலுகிலுப்பையின் குணம்

வட்டக் கிலுகிலுப்பை மாறுச் சொறிகிரந்தி
துட்டகண்ட மாலேபல சோபைநோ-வட்டமுலே
மானே விரணவகை மாந்தமுத ஞெயெல்லாந்
தானே யகற்றுமெனச் சாற்று.

(இ-ள்.) வட்டமாய் பரந்த முலேகளேயுடைய பெண்ணே! வட்டக் கிலுப்பைச்செடி சொறிகிரந்தி கண்டமாலே பற்பல சோகை விரணங் கள் அக்கினிமந்தம் இவற்றை நீக்கும். 255

வெள்ளேகிலுகிலுப்பையின் குணம்

விடவினங் களேப்பிடித்து விண்ணேற்றும் வந்த
விடசன்னி நோயை விரட்டுந்-தடமாரும்
வெள்ளேக் கிலுகிலுப்பை மென்பூண்டது புவிக்குட்
கிள்ளேக் குதலேமின்னே கேள்.

(இ-ள்.) கிளிபோன்ற குதலே மொழியையுடைய மின்போல் பவளே! மலேயில் முளேத்த வெள்ளேக் கிலுகிலுப்பை தாவரசங்கம விஷங்களேயும் விச்சன்னிபாதரோகத்தையும் நீக்குமென்க. 256

சந்திரகாந்தி சூரியகாந்தி இவைகளின் குணம்

சந்திரகாந் திக்குத் தழலெரிச்சல் நீர்க்கடுப்பும்
உந்தவலி யாவு மொடுங்குங்காண்-சந்திலுறும்
பாரிய வாதம்பருகு நீரேற்ற மும்போஞ்
சூரிய காந்திக்குச் சொல்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) சந்திரகாந்திச் செடிக்குப் பித்த எரிவும் நீர்க்கடுப்பும் தொப்புள்வலியும் நீங்கும். சூரியகாந்திச்செடிக்கு சகலவர்த்த வாத ரோகமும் சலதோஷமும் நீங்குமென்க. 257

பேயகத்தியின் குணம் இதுவே சீமையகத்தியாம்

தம்மைக் கண்டாவிரத தாதுவிலாம் பொருட்டுகளும்
வெம்மைப் புடைநமையும் வீறுநெய்-யம்மையுறுந்
தூயகத்தி யுங்கலங்குந் தோதகக்கண் மாதே
பேயகத்தி மூலிகண்ட பேர்.

(இ-ள்.) பேயகத்தியால் ரசதாதுக்கிருமிகளும் உஷ்ணச்சொறியும் தினவும் நீங்கும், ரத்தநரம்பு பிரகாசிக்கும். நெய்-ரத்தம், அம்மை-அழகு. 258

ஈச்சுரமூலியின் குணம்

பலபல வீக்கஞ்சன்னி பாதங்க ளோடு
நலமகல் விஷங்கள் நடுக்குங்-கலகலெனப்
பேச்சுர முண்டாகுமலர்ப் பெண்ணனமே நீகேளா
யீச்சுர மூலிதனக் கின்று.

(இ-ள்.) மலரில் வசிக்கும் பெண்ணன்னம் போன்றவளே! ஈச்சுர மூலியால் விஷசோபை முதலிய சோபைகளும் சன்னிகளும் பலவிஷங் களும் நீங்கும். உரத்த வார்த்தை யுண்டாமென்க. 259

நிலவிளாவின் குணம்

அழன்ற கணவேக மதிதாகந் தீருஞ்
சுழன்று வருபித்தந் தொலையு-முழன்று
பொருநிலை மேகத்துடனே புண்சுரமும் போகு
மருநில விளாவத் தயர்ந்து.

(இ-ள்.) நிலவிளாவினால் வெதும்புகின்ற கணச்சுரம் அதிதாகம் பித்தகோபம் மாறுப்பிரமேகம் விரணசுரம் இவை நீங்கும். 260

சங்கங்குப்பியின் குணம்

கரப்பான் கிரந்தி கருங்குட்ட ரோக
முரப்பான மேக மொழியுங்-கருப்பக்
கருங்கிரந்தி செவ்வாப்புக் கட்டிகளுமேகு
மருஞ் சங்கங்குப்பிக் கறி.

இதுவுமது

வெட்டை சொறிசிரங்கு வீறிவருஞ் சூலை
துட்ட வாதங்கபந் துணுக்கிருமல்-கெட்டவிஷம்

Digitized By Roja Muthiah Research Library

அங்கங்கொள் பூச்சியிவை யாவம்போம் பித்தமுறுஞ்
சங்கங் குப்பிக்கெனவே சாற்று.

(இ-ள்.) சங்கங்குப்பிச்செடிக்கு அரைக்கடுவன் சிரங்கு விகர்ச்சி காகுஷ்டம் வாதப்பிரமேகம் கர்ப்பத்திலுண்டாகிய கருங்கிரந்தி குண்டாலக்கட்டி வெள்ளை தவளைச்சொறி விரணம் கீல்வீக்கம் குத்தல் மகாவாதம் சிலேத்மதோஷம் வறட்டிருமல் சர்ப்பவிஷம் ரத்தக்கிருமி ஆகிய இவைகள்போகும் பித்தாதிக்கமென்க. 261

கறிமுள்ளியின் குணம்

ஈளையிரும விரைப்புச் சுவாச மறும்
வாளைவென்ற கண்ணாய் வழுத்தக்கேள்-நாளையென்
றில்லைக் கபச்சுர மதின்றே விலகிடுநங்
கொல்லைக் கறிமுள்ளி கொள்.

(இ-ள்.) வாளை வென்ற கண்களையுடையாளே! சொல்லக் கேட்பாயாக, கறிமுள்ளியினால் நெஞ்சிற் கோழைக்கட்டு காசம் தமகசுவாசம் சிலேத்மசுரம் ஆகிய இவைகள் நீங்குமென்க. 262

செம்முள்ளியின் குணம்

செம்முள்ளி யென்றூற் சிலேத்மம் நடுநடுங்கும்
விம்முமுலை மாதே விளம்பக்கேள்-நம்முகின்ற
மாந்தகண மையமிவை மாறுஞ் சிறுவருக்குச்
சேர்ந்தசுர தோஷமும்போஞ் செப்பு.

(இ-ள்.) விம்முகின்ற தனங்களையுடைய பெண்ணே! விளம்பக் கேள் செம்முள்ளியினால் கபப்பெருக்கம் கணமாந்தம் சுவாசம் குழந்தைகளுக்குண்டாகின்ற சுரதோஷம் இவைபோம். 263

கண்டங்கத்திரியின் குணம்

காசஞ் சுவாசங் கதித்தக்ஷய மந்தமனல்
வீசுஞ் சுரஞ்சன்னி விளைதோஷ-மாசுறுங்கா
வித்தரையு ணிற்கா வெரிகாரஞ் சேர்கண்டங்
கத்தரியுண் டாமாகிற் காண்.

(இ-ள்.) வெப்பமுங் கார்ப்புமுள்ள கண்டங்கத்திரியினால் காசம் சுவாசம் க்ஷயம் அக்கினிமந்தம் சீதச்சுரம் சன்னிபாதம் எழுவகை தோஷங்கள் வாதரோகம் ஆகிய இவைகள் போமென்க. 264

தேட்கொடுக்கின் பொதுக் குணம்

தேட்கொடுக் குண்டாயிற் றினவடக்குந் தப்பாது
காட்பட்ட புண்கரப்பான் நாசமாங்-கீட்பட்ட

Digitized By Roja Muthiah Research Library

மாந்த கணமுமறு மானிலத்துட் சில்விஷம்போம்
போந்த மறுந்தாகும் புகல்.

(இ-ள்.) தேட்கொடுக்குச்செடியால் நமைச்சல் பழையவிரணம் கடுவன் கணமாந்தம் சில்விஷம் ஆகிய இவை விலகுமென்க. 265

பெருந்தேட்கோடுக்கின் குணம்

சுடுகாடு முட்டா னெனப்பெரி யோர்சொல்லும்
நெடியபெருந் தேட்கொடுக்கால் நீரா-பொடிக்கிருமி
புண்கிரந்தி மேகப்புண் போல்லாக் கருங்கிரந்தி
விண்கரந்து போகாதோ விள்.

(இ-ள்.) சுடுகாடு முட்டானென்கிற பெருந்தேட்கொடுக்கால் ரசதாதுவைப்பற்றிய அணுக்கிருமி விரணக்கிரந்தி மேகப்புண் கருங்கிரந்தி ஆகிய இவைகள் நிவர்த்தியாகுமென்க. 266

சிறுதேட்கோடுக்கின் குணம்

சிறுதேட் கொடுக்கதனுற் சேயிழையே கேளாய்
சொறிசிரங்கு புண்கரப்பான் சூலை-கொறுமாந்தை
மேகவெட்டை பித்தவெட்டை மீளா வெலும்புருக்கி
யாகம் விடுத்தோடு மறி.

(இ-ள்.) செவ்விய ஆபரணத்தை யணிந்த பெண்ணே! சிறுதேட்கொடுக்கால் நமைச்சிரங்கு விரணக்கரப்பான் சீல்வீக்கம் கொருக்குமாந்தம் ஒழுக்குப்பிரமேகம் பித்தவெள்ளை அஸ்திசிராவம் ஆகியவைகள் நீங்குமென்க. 267

நிலவேம்பின் குணம்

வாதசுர நீரேற்ற மாற்றுஞ் சுரதோஷங்
காதமென வோடக் கடியுங்காண்-மாதரசே
பித்த மயக்கறுக்கும் பின்புதெளிவைக் கொடுக்குஞ்
சுத்தநில வேம்பின் றொழில்.

(இ-ள்.) பெண்களுயகமே! நிலவேம்பு வாதசுரம் மேகநீர்க்கோவை சுரதோஷம் பித்தமயக்கம் ஆகியவைகளை நீக்கும் தெளிவையுண்டாக்குமென்க. 268

சிவனார்வேம்பின் குணம்

சாய்க்குமிடிப் புண்பழம்புண் சர்மகுட்டம் பிளவை
தீக்கடுகால் வன்பெருநோய் சிந்துமா-நோய்க்கு
விதையாதி வேம்பினல் மெய்க்கழகு காலை
லுதையாதி வேம்பினு லுண்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) சிவனார்வேம்பினால் ஆகந்துகவிரணம் நாட்பட்டபுண் சர்ம குட்டம் ராஜப்பிளவை சர்ப்பவிஷம் மகாவாதம் குஷ்டு அக்கினிமந்தம் இவை நீங்கும் அழகுண்டாம். தீக்கடு-மகாவிஷம். 269

நீர்முள்ளியின் குணம்

பாண்டு குளுப்பையறும் பாரித்த நீரேற்ற
மாண்டுவிடு நீர்க்கட்டு மாறுங்காண்-பூண்டதொரு
வீக்கமெலா நீதாய் விடுமேநீர் முள்ளிக்குத்
தாக்கு மயில்விழியாய் சாற்று.

(இ-ள்.) கூரியவேலனைய கண்களையுடைய பெண்ணே! நீர்முள்ளி செடிக்குப் பாண்டு குளுப்பை சலக்கோவை மூத்திரச்சிக்கல் வீக்கங்கள் ஆகியவைகள் விலகுமென்க. 270

பெருமருந்தின் குணம்

திரிதோஷம் வெப்பு சிரங்கும் சொறிநஞ்சோ
டரிசேமல் வன்புடையு மண்டா-தொருவா
னருமருந்தை யொத்த வணங்கே யுலகிற்
பெருமருந்தை நீயெடுத்த பின்.

(இ-ள்.) தேவாமிர்தத்தையொத்த பெண்ணே! பெருமருந்தினால் வாதாதிமுத்தோஷம் சுரம் நமைச்சிரந்தி விஷம் தினவு தேமல் மேகப்படை இவைகள் நீங்கும். 271

ஊமத்தையின் குணம்

நாய்க் கடியால்வந்து நலிசெய்யு விரணமும்போம்
வாய்க்குழிப்புண் கட்டிகளு மாறுங்கண்-தீக்குணத்தைச்
சேமத்தில் வைத்தவிடந் தீருமுத் தோஷமறும்
ஊமத்தையின் குணத்தை யுள்.

(இ-ள்.) ஊமத்தையினால் நாய்க்கடிப்புண் குழிவிரணம் வித்திரிசி கட்டிகள் நஞ்சுதிரிதோஷம் ஆகிய இவை நீங்கும். 272

கருவூமத்தையின் குணம்

வந்துவிர தங்கள்கட்டு மேனிதருங் குஷ்டமொடு
வந்தவியர்ப் பரிப்பை மாற்றுங்காண்-முந்தப்
பெருமத்தனு செய்சுரத்தைப் போக்கும் கயப்பாங்
கருவூ மத்தைமூலி காண்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) கசப்பையுடைய கருவூமத்தை சுக்கிலத்தையும் பாதரசத்தையும் கட்டும் உடலுக்கு அழகையுண்டாக்கும் பெருவியாதி வியர்வைத்தினவு பயித்தியம் சுரம் இவை நீங்கும். 273

பொன்னூமத்தையின் குணம்

பொன்னூமத்தை முண்டாகிற் பூவையரே புண்கிரந்தி
தொன்மைக் கிராணி வருகரும-வன்பேதி
சுத்த சுரத்துடனே போராவிடச் சுரமுஞ்
சத்தவதி சாரமும்போஞ் சொல்.

(இ-ள்.) பெண்ணே! பொன்னூமத்தையினால் விரணக்கிரந்தி நாட்சென்ற கிராணி அதிசாரம் பித்தவிஷசுரங்கள் பேதி இவை நீங்குமென்க. 274

மருளூமத்தையின் குணம்

சீதசுரம் நீரேற்றஞ் சிலவிஷங்கள் மந்தத்தோ
டுதையிவை யெல்லா மொழியுங்காண்-போத
இருளூருங் கூந்த லெழின்மாதே கான
மருளூ மத்தைக்கறிந்து வை.

(இ-ள்.) இருண்டகூந்தலையுடைய யழகுபொருந்திய பெண்ணே! மருளூமத்தை குளிர்ச்சுரஞ் சரீரத்திற் சகலக்கோவை அற்பவீரியம் அக்கினிமந்தம் வாததோஷம் இவை விலகுமென்க. 275

நிலக்குமிழின் குணம்

பேதியொடு கண்சொருகற் போராத சீதளமும்
வாதவலி கொட்டாவி மாந்தமும்போம்-ஓதச்
சலக்குமிழை யொத்த தனக்கருங்கண் மாதே
நிலக்குமிழைக் கையிலெடு நீ.

(இ-ள்.) நீர்க்குமிழியனைய கொங்கைகளையுங் கறுத்த கண்களையுமுடைய பெண்ணே! நிலக்குமிழினால் சலமந்தப்பேதி விழிசொருகல் சீதளிப்பு வாதக்கடுப்பு அதிகொட்டாவி மந்தம் ஆகியவைகள்போம். ()

நிலத்துத்தியின் குணம்

தொடங்கர சங்கட்டி தொலையவப் புலோக
மடங்கி நீருகவெண்ணி னம்பொற்-குடம்போ
னலத்துத்தி பூத்ததலை நல்லா ரமிர்தே
நிலத்துத்தி மூலியை நினை.

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR—623 106
P.M.DIST. INDIA

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) தேமல்படர்ந்த குடம்போன்ற தனங்களையுடைய பெண்ணே! நிலத்துத்தி மூலியானது ஆரம்பமூலரோகத்தையும் வித்திரிக் கட்டிகளையும் போக்கும் கருவங்கத்தைப் பஸ்பஞ்செய்யும். 277

பெரும்பீளைச்செடியின் குணம்

பாடாண பேதியெனப் பன்னுபெரும் பீளைக்கு
மேடான வீக்கம் விலகுங்காண்-நாடருய்ய
பேய்பூத மும்பறக்கும் பேசிற் பலபிணிபோந்
தூயோ ரறிவரிதைச் சொல்.

(இ-ள்.) பாஷாண பேதியென்கிற பெரும்பீளைச்செடிக்கு மிகு சோபையும் பைசாச முதலிய சங்கை தோஷமுங் கல்லடைப்பு முதலிய சில ரோகங்களுந் தீருமென்க. 278

சிறுபீளைச்செடியின் குணம்-இதுவே கற்பேதியாம்

பாண்டு பெரும்பாடு பகர்மூத்திரக் கிரிச்சரம்
பூண்டதிரி தோஷமிவை போகுங்காண்-தாண்டிப்
பரிய வேளைத்தூரத்தும் பாரவயிற் கண்ணாய்
சிறிய பீளைக்குச் சிதைந்து.

இதுவுமது

நீரடைப்பு கல்லடைப்பு நீங்காக் குடற்சூலை
பேரிட ரிரத்தகணம் போக்குங்காண்-வாரிறுக்கும்
பூண்முலையே கேளாய் பொருந்துஞ் சிறுபீளை
யாமிது கற்பேதி யறி.

(இ-ள்.) மாரனை வெற்றிகொள்ளும் வேலனைய கண்களையுடைய பெண்ணே! சிறுபீளைச்செடிக்குத் தேகம்வெளிறல் அசிர்க்கரரோகம் வாதமூத்திரக்கிரிச்சரம் முத்தோஷம் மூத்திரச்சிக்கல் அஸ்மரி ஆந்திர பித்தவாதம் சோணிதவாதங்கள் ஆகியவைகள் போமென்க. 279

பல்லிப்பூண்டின் குணம்

வல்விடந் தோஷசுரம் வாதபித் தங்களொடு
பல்வலியும் பஞ்சாய்ப் பறக்குங்காண்-நல்லோர்பாற்
சொல்லிப்பாற் பாஷாண தாளகமுஞ் சுத்தியதாம்
பல்லிப் பூண்டுண்டாயிற் பார்.

(இ-ள்.) பல்லிப்பூண்டில் சர்ப்பவிஷம் சுரதோஷம் வாதபித்த தொந்தம் பல்வலி இவைபோம் பாஷாணமுந் தாளகமுஞ் சுத்தியாம். ()

Digitized By Roja Muthiah Research Library

தாணிப்பூண்டு, பொரிப்பூண்டு இவைகளின் குணம்

தாணிப்பூண் டேயிருந்தாற் றுவிவருமே மேகத்தை
நாணிப் போகச்செய்யு நானிலத்துள்-வீணி
லெரிகிரந்தி மேக மிருக்குமோ வூரிற்
பொரிபூண்டின் பேரைப் புகல்.

(இ-ள்.) தாணிப்பூண்டு ரத்தபிரமேகத்தை நீக்கும் பொரி பூண்டினால் அக்கினிகீடகிரந்தி மேகம் இவை நீங்கும். 281

குருவிச்சிப்பூண்டின் குணம்

குருவிச்சிப் பூண்டெனவே கூட்டிட்டாற்போதும்
வருவிச்ச குஷ்டம் மலடும்-ஒருமிச்ச
மேகக் கரப்பான் விடமாந்தஞ் சீதரத்தம்
பேதமறப் போமொருகாற் பேசு.

(இ-ள்.) குருவிச்சிப் பூண்டினால் பெருவியாதி மலடு சிலேஷ்ம மேகங் கரப்பான் விஷமாந்தம் சீதரத்த கிராணி இவைகெடும். 282

தலைச்சுருளின் குணம்

பாண்டகற்று மெய்யிற் படர்குஷ்ட நோய்விலக்கும்
நீண்ட விருதயநோய் நீக்குங்காண்-தாண்டதம்பை
முன்னே யொழித்துவிடு மூவாத தலைச்சுருளி
யென்னே யுலகி லிசை.

(இ-ள்.) தலைச்சுருளிப்பூண்டு உடல்வெளுப்பு படர்குஷ்டம் இருதயநோய் ஆகந்துகசோபை ஆகிய இவைகளைப்போக்கும். 283

கருப்பு மணத்தக்காளியின் குணம்

வெவ்வெழலு மாறும் விரிகுரற்கம் மற்போகு
மொவ்வு சிசுவுக்கா முலைவைவிடுஞ்-செவ்வி
யருமணிக் கச்சுமுலை யாயிழையே கேளாய்
கருமணத் தக்காளிதனைக் கண்டு.

(இ-ள்.) அரிய விரத்தினக்கச்சணிந்த தனங்களையுடைய பெண்ணே! கருமணத்தக்காளியினால் பயித்தியவெப்பம் சுரசாத ரோகம் வாத தோஷம் இவைபோம் இது பாலர் சிகிச்சைகளுக்குதவும். 284

சிவப்பு மணத்தக்காளியின் குணம்

கந்ததாளிப் புண்ணைக் காங்கையினு லுள்ளுக்குள்
வந்தவேக் காட்டைமிக மாற்றுங்காண்-முந்தனில்

Digitized By Roja Muthiah Research Library

ஐயவினை யையகற்றி விடுநற் புலத்துச்
செய்ய மணத்தக்காளிச் சீர்.

(இ-ள்.) சிவப்பு மணத்தக்காளியானது கந்ததாளிவிரணம் உட்சுரவேகம் வாதகபதொந்தம் ஆகிய இவைகளைப் போக்குமென்க. 285

நல்வேளையின் குணம்

சிரநோய் வலிகுடைச்சல் தீராச் சயித்திய
முரநோ யிவைக ளொழியு-முரமேவும்
வில்வேளைக் காயும் விழியாய் பசிகொடுக்கும்
நல்வேளை தன்னை நவில்.

இதுவுமது

நல்லவேளைப் பூண்டை நாடுங்கால் வாதமும்போஞ்
சொல்லும் ஐயத்துடனே சோபையறும்-மெல்லமெல்லத்
தக்கவனலும் பித்துந் தானெழும்புஞ் சாந்தமின்றி
சக்கரநோய் விஞ்சு மறி.

(இ-ள்.) கரும்புவில்லேந்திய மதனனைக்கோபிக்குங்கண்களையுடைய பெண்ணே! நல்வேளையினால் சிரஸ்தாபரோகம் சரீரநோய் குடைச்சல் சீதளம் மார்வலி வாததோஷம் கபரோகம் வீக்கம் இவைபோம் பசியுஞ் சூடும் பித்தாதிக்கமும் ஜிக்வாகண்டக ரோகமு முண்டாம். 286

நாய்வேளையின் குணம்

வாதமுடற் கடுப்பு வன்சூலை காதிரைச்ச
லோதமிகு நேசமு மோடுங்காண்-போதெரிந்து
காய்வேளைக் காயும்விழிக் காரிகையே வையமதில்
நாய்வேளை யுண்டு நவில்.

(இ-ள்.) புட்பபாணம் விடுத்துக் கோபிக்காநின்ற மதனனைச்சினக்கும் விழிக்காரிகையே! நாய்வேளையால் வாதப்பொருமல் தேகக்கடுப்பு குத்தல் கர்னநாதரோகம் சிலேத்மபீனிசநோய் இவைகள்போம். 287

கொள்ளுக்காய்வேளையின் குணம்

வாதமிக்க தென்பார்க்கும் வாய்வறட்சி யென்பார்க்கு
மீதுதந்த மூலநோ யென்பார்க்கு-மோதமுற்ற
சொள்ளுக்கா தாரகபந் தோற்றியதென் பார்க்குமொரு
கொள்ளுக்காய் வேளைதனைக் கூறு.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) கொள்ளுக்காய் வேளையினால் வாதாதிக்கமும் நாவறட்சியும் தந்தமூலநோயும் சொள்ளுவடியச் செய்கின்ற கபமும்போம். 288

கல்லுருவிப்பூண்டின் குணம்

கல்லுருவிப் பூண்டுபல கட்டிகளை யுங்கரைக்கும்
வல்லுதிரக் கட்டறுக்கும் வந்தபுண்ணை-வெல்லரிய
மேகத்தை வல்விடத்தை மீறுதொடுக் கிடுமு
லோகத்தைச் சுத்திசெய்யு மோர்.

(இ-ள்.) கல்லுருவிப்பூண்டு பலகட்டிகள் ரத்தத்தடிப்பு கிரந்தி பிரமேகம் சர்ப்பவிஷம் இவைகளை நீக்கும் இரும்பைச் சுத்திசெய்யும்.

எரிசாலை, குதிரைக்குளம்படி இவைகளின் குணம்

பூவில் எரிசாலைப் பூண்டுக் கிழுப்புவலி
கூவியமுஞ் சூலையனி லங்குறையுந்-தாவு
குதிரைநட வாயுசன்னி கூறுதினவும் போங்
குதிரைக் குளம்படியைக் கூறு.

(இ-ள்.) எரிசாலைப்பூண்டுக்கு தனுஸ்தம்பவாதமும் கீல்குத்தலும் வாதகோபமும் நீங்கும். குதிரைக்குளம்படிப் பூண்டுக்கு அஸ்வவாதமுஞ் சன்னியுந் தினவும் விலகும் இதனைக் குளித்திப்பூண்டு யென்பர்.

சுளுக்குநாயகத்தின் குணம்-விருத்தம்

சுளுக்கு நாயகந் தோடஞ் சுரமொடு
சுளுக்கும் வாங்குந் தொடுத்தகை கால்களின்
சுளுக்கு மேற்கறடுங் கரைக்குஞ் சொன்னேஞ்
சுளுக்கு மேல்விழி ரத்தந் துடைக்குமே.

(இ-ள்.) சுளுக்கு நாயகப்பூண்டு சப்ததோஷம் சுரமெலுவினால் வந்த தேகச்சுளுக்கு சுபாவக்கைகால்களின் சுளுக்கு ரத்தங்கட்டிய கறடுகளுக்கு மேலுண்டாகிற ரத்தத்தடிப்பு ஆகிய இவைபோம். 291

கிரந்திநாயகத்தின் குணம்

சீதமறு மாவிடமுந் தீரும்விழி நோயகலும்
பூதமொடு மருளும் போகுங்காண்-மேதினியுள்
ளாயகத்துப் புண்கிரந்தி யாறுமயிலே கிரந்தி
நாயகத்தி னாலோ நவில்.

(இ-ள்.) மயில்போன்ற சாயலையுடைய பெண்ணே! கிரந்திநாயகப் பூண்டினால் சீதளம் சர்ப்பவிஷம் கண்ணோய் பைசாசமுதலிய சங்கை தோஷம் உள்புண் கிரந்தி இவை நீங்குமென்க. 292

Digitized By Roja Muthiah Research Library

பிளவை கொல்லிப்பூண்டின் குணம்

பிளவைகொல்லிப் பூண்டிருந்தாற் புண்விரணம் பேரு
மளவையுறு மேக மடங்கு-முளமாந்தை
யாறுப் பிளவைகட்டி யெல்லா முலர்ந்திடுமே
மாறுக் கவினணங்கே வாழ்த்து.

(இ-ள்.) நீங்கா வழகினையுடைய பெண்ணே! பிளவைகொல்லிப் பூண்டினால் சிறுசிரங்கு கிரந்தி ஒழுக்குப்பிரமேகம் உளமாந்தை ராஜப் பிளவைக் கட்டி இவை நீங்கும். 293

மலைதாங்கிப்பூண்டின் குணம்-இதுவே வேற்பேந்தி

வாதமெண் பதுஞ்சுரமும் வாதச் சயித்தியமுங்
காதுவலி பாரங் கரந்திடுங்காண்-போதச்
சிலைதாங்கி நின்றநுதற் செந்திருவே நீயும்
மலைதாங்கிப் பூண்டை வழுத்து.

(இ-ள்.) வில்லினைய புருவங்களையுடைய விலக்குமியை நிகர்த்த பெண்ணே! மலைதாங்கிப் பூண்டுக்கு சமஸ்த வாதரோகங்கள் ருட்சை வாததொந்தம் கர்ணசூலை தேகபாரிப்பு இவைபோம். 294

குடியோட்டிப்பூண்டின் குணம்

புண்ணோடு கரப்பான் பொடிசிரங்கு சில்விஷங்கள்
கண்ணிருமல் மேகவலி தண்மேக-மெண்ணிற்
படியோட்டு மாவிடமும் பலநோயுந் தீருங்
குடியோட்டுப் பூண்டால் குலைந்து.

(இ-ள்.) குடியோட்டுப்பூண்டினால் பெருவிரணம் கரப்பான் சிறு சிறங்கு சில்விஷங்கள் காசமேகவாயு சலப்பிரமேகஞ் சர்ப்பவிஷம் தந்தரோகம் ஆகிய இவைகள் விலகுமென்க. 295

ஆடுதீண்டாப்பாளையின் குணம்

ஆடுதொடாப் பாளைக் கக்கிருமி வன்சிலந்தி
நீடுகருங் குஷ்டம் நிறைகரப்பான்-ஆடிடச்செய்
யெண்பது வாய்வு மிக்கருஷ்ட முந்தீருந்
திண்பெறு நற்றுதுவுமாஞ் செப்பு.

(இ-ள்.) ஆடுதீண்டாப்பாளைக்கு மலகபரத்தாசயக்கிருமிகள் வரத்திச் சிலந்திப்பூச்சிவிஷம் கருங்குஷ்டம் கரப்பான் சர்வவாதரோகங்கள் கிடிகுஷ்டம் இவைநீங்கும் பலமும் சுக்கிலமும் உண்டாம். 296

Digitized By Roja Muthiah Research Library

குழிமீட்டான் குணம்

கணத்திலெழு மாந்தத்தைக் காணுவுட் சூட்டைக்
கணத்திலே வேரைக் களையும்-மணத்தமுலைப்
பாலைச் சுரப்பிக்கும் பாரிற் குழிமீட்டான்
காலைத்தொழு துண்ணுங் கால்.

(இ-ள்.) குழிமீட்டான் பூண்டு கணமாந்தத்தையும் உள்வெப்பத்தையும் போக்கும், முலைப்பாலைச் சுரக்கும்படிக்குச் செய்யுமென்க. 297

செருப்படையின் குணம்

செருப்படைக்கு வாதமந்தஞ் சேர்வான மேக
மிருப்படிகொள் பொல்லா இசிவும்-விருப்படிக்குஞ்
சூலையொடு வாதகுன்மந் தோற்று தொருநாளும்
வேலையொத்த கண்ணாய் விளம்பு.

(இ-ள்.) வேலை நிகர்த்த கண்களையுடைய பெண்ணே! செருப்படைக்கு வாதகோபம் மந்தாக்கினி வெள்ளைவீழல் ஆகிருஷ்ண ஸ்தம்பனவாதம் சூலைகுன்மம் நீங்குமென்க. 298

கல்தாமரையின் குணம்

வீரிய விருத்திதரு மெய்க்கு பலங்கொடுக்குங்
கூரிய குஷ்டுதனைக் கோபிக்குங்-காரியத்தை
நற்றும் பரமாக்கு நங்கா யடுக்கலுறை
கற்றமரை யதனைக் காண்.

(இ-ள்.) மலையில் முளைத்த கல்தாமரை சுக்கிலத்தையும் பலத்தையும் விருத்தியாக்கும். குஷ்டை நீக்கும் காரீயத்தைச் செம்பாக்கும். ()

கஞ்சாங்கோரையின் குணம்

மாந்தக் கழிச்சலறும் மாந்தஞ் சுரங்கணம்போஞ்
சேர்ந்த மூலத்தின் றினவடங்கும்-பூந்தடக்கை
யன்னமே மேகமறுங் கஞ்சாங் கோரையினை
யுன்ன இருமலில்லை யோர்.

(இ-ள்.) மலரை நிகர்த்த விசாலமான கைகளையும் அன்னம்போன்ற நடையையுமுடைய பெண்ணே! கஞ்சாங்கோரையால் மாந்தபேதி அக்கினிமந்தம் கணச்சூடு குதாங்குர நமைச்சல் பிரமேகம் காச மிவை நீங்குமென்க. 300

Digitized By Roja Muthiah Research Library

கீழ்வாய்நெல்லியின் குணம்

சீதமதி பித்தவடஞ் செவ்விழிநோய்க் கூட்டம்
பூதமொடு பேயிரத்தப் போக்குகளும்-பூதலத்துட்
டாழ்வாய்ப் பணிந்தேகுந் தப்பாது நற்புலத்துக்
கீழ்வா யெனு நெல்லிக்கே.

இதுவுமது

கீழாநெல்லிக் குணந்தான் கேளாய் மதுமேகந்
தாழாக் காமாலைகளைச் சண்ணுந்தா-தேழனலுந்
தொக்கி னனலுந் தொலைக்குந் தொன்மேகம்போம்
தக்க விரணங்கெடுக்குந் தான்.

(இ-ள்.) கீழ்வாய்நெல்லிக்கு ஆமக்கட்டு அக்கினி கீடவிஷம் நேத்திரரோகங்கள் பூதமுதலிய சங்கைதோஷம் ரத்தாதிசாரம் மதுப்பிரமேகமூத்திரம் காமாலை சப்ததாதுகதசுரம் தாதுவெப்பம் நாட்பட்டமேகப்புண் ஆகிய இவைகள் போகும் என்க. 301

மயிர்மாணிக்கத்தின் குணம்

மயிர்மா ணிக்கத்தால் வளர்மேகம் போகுஞ்
செயிரான மேகவெட்டை தீருங்-கயரோகம்
மாவிரணம் போக்கயிதில் வல்லிரதஞ் சேர்த்தரைத்துத்
தாயுண்பா ருண்டறிந்தோர் தாம்.

(இ-ள்.) மயிர்மாணிக்கத்தினால் வளர்கின்ற மேகமும் வெள்ளையும் க்ஷயமும் நீங்கும். இதில் முறைப்படி சூதஞ்சேர்த்துண்ண விரணம் ஆறுமென்க. 302

துளசியின் குணம்

ஐயம் வயிறுளைச்ச லஸ்திசுரந் தாகமும்போம்
பையசுர மாந்தம் பறக்குங்காண்-மெய்யா
வாயினரோசகம் போம் வன்காரஞ் சூடுள்ள
தூய துளசிதனைச் சொல்.

(இ-ள்.) காரப்பும் வெப்பமும் உள்ள துளசியினால் கபதோஷம் வயிறுளைதல் அஸ்திதாது கதசுரம் அருசி இவைபோமென்க. 303

சேந்துளசியின் குணம்

செய்ய துளசிவிஷந் தீர்க்குங் கபமறுக்கும்
வெய்யரடி விஷத்தை விண்ணேற்றுந்-தையலரே

Digitized By Roja Muthiah Research Library

முத்தோஷத் துண்டா முரணேட்டு மவ்வழியா
மெத்தோஷ மும்போக்கு மெண்.

(இ-ள்.) சிவப்புத்துளசி விஷங் கபாதிக்கம் அக்கினி கீடவிஷம் திரிதோஷத்தால் ஜனிக்கின்ற பற்பல ரோகங்கள் இவைபோம். 304

கருந்துளசியின் குணம்

இருமலொடு நெஞ்சி விழுப்புச் சுவாசம்
கிருமிசல தோஷங் கேவல்-மருமச்
சளிரூட்சை சூலவிஷஞ் சந்நியிவை போக்குந்
தளிரார் கருந்துளசி தான்.

(இ-ள்.) கருந்துளசி காசம் தொண்டைக்குள் குறுகுறு என்னும் ஒருசத்தம் இரைப்பு கிருமி நீர்க்கோவை இருமலால் வருங்கேவல் மார்புச்சளி சுரம் குத்தல் விஷம் சந்நிபாதம் இவைகளை ஒழிக்கும். 305

நிலத்துளசியின் குணம்

நிலத்துளசி மாதர்தரு நீண்முலைப் பால்மந்தம்
வலுத்த சுரம்பித்த கண்மாற்றும்-அலத்துகண
மாந்தசுரம் பித்தசுர மாபெரிய சீதசுரஞ்
சேர்ந்தோடச் செய்யுந் தெளி.

(இ-ள்.) நிலத்துளசி முலைப்பாலால் வருமந்தம் வாதசுரம் பல பித்தநோய்கள் கணச்சூடு மந்தம் பித்தரூட்டை குளிர்ச்சுரம் இவற்றை நீக்குமென்க. 306

நாய்த்துளசியின் குணம்

கபத்தொடு குற்றிருமல் காணு தொழிக்குஞ்
சபத்தைச்செய் முத்தோஷஞ் சாடும்-விபத்தழலைச்
சாய்த்துடலைப் போஷிக்குந் தாரணியி லுள்ளோர்க்கு
நாய்த் துளசியீ து நவில்.

(இ-ள்.) நாய்த்துளசியானது கோழை பொடியிருமல் திரிதோஷ மாகிய இவைகளை மாற்றும். சரீரத்தைப் போஷணை செய்யும் என்க. ()

கல்துளசியின் குணம்

தாபச் சுரமுந் தனிவித் திரிதிகளுஞ்
சோபச் சிலவிஷமுந் தோற்றுமே-கோபிச்சங்
குற்றுள சிலேஷ்மத்தா லுன்றுகாசம் பறக்குங்
கற்றுளசிப் பேருரைக்குங் கால்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) கற்றுளசியால் தீச்சுரம் வித்திரிதிக்கட்டி நீர்வண்டு முதலிய சிலவிஷம் கோழையைத்தள்ளுகின்ற கபகாசம் தீரும். 308

முள்துளசியின் குணம்

எலிவிஷம்போம் வெட்டுண் டிருக்கும் விரணக்
கிலிவிடும் விஷங்கள் கிளேக்கா-துலவிவரும்
மட்டுறச்சி வந்தமலர் மண்டபத்துள் வாழனமே
முட்டுளசிப் பேரை மொழி.

(இ-ள்.) தேனையுடைய சிவந்தமலராகிய மண்டபத்தில் வாழ்கின்ற வன்மைபோல்பவளே! முள்துளசியால் எலிவிஷம் வெட்டுப்புண் அற்பவிஷமும் போமென்க. 309

கழுதைத் தும்பையின் குணம்

அரையாப்புக் கட்டி யனில முதிரம்
பிரியாச் சீதக்கடுப்பும் போகுந்-தரையிற்
பழுதைக் கொள்ளாச்செய்ய பங்கயப் பெண்ணேகேள்
கழுதைத் தும்பைச்செடியைக் கண்டு.

(இ-ள்.) குற்றமற்ற சிவந்ததாமரையில் வசிக்குமிலக்குமியனைய பெண்ணே! கழுதைத்தும்பையால் அரையாப்புக்கட்டி வாதநோய் ரத்தமுஞ் சீதமுங் கலந்து விழலால் வருங்கடுப்பு ஆகியவைபோம். 310

நெய்ச்சட்டியின் குணம் இதுவே சகதேவி தேவகந்தம்

நெய்ச்சட்டி யென்றால் நிறைமெய்யுட் சுக்கிலமும்
பொய்ச்சிட்ட கண்ணொளியாம் பூவையரே-வெய்ச்சிட்ட
மேகமறுந் தீபனமாம் வெட்டையழலுந் தணியுந்
தாகமறும் பித்தமும்போந் தான்.

இதுவுமது

தூயழ குறப்புரியுஞ் சூதகந்த மாதிகளால்
வாயழுகி நாறுபுண்ணை மாற்றிவிடுந்-தீயழலை
நீக்கிவிடு நிம்பநெய்யை நெய்யாக்கிடும் வமனம்
போக்கிவிடு நெய்ச்சட்டிப் பூண்டு.

(இ-ள்.) நெய்ச்சட்டிப்பூண்டு வீரியவிருத்தி நேத்திரஒளி பசி அழகு இவைகளையுண்டாக்கும். பித்தமேகம் வெள்ளை உட்சூடு தாகம் பித்தகோபம் ரசகந்தகமுதலியவற்றால் பிறந்த வாய்ப்புண் அழற்சி வாந்தி இவைகளை நீக்கும் வேப்பெண்ணெய்க்குரிய கசப்பை விலக்கும்.

Digitized By Roja Muthiah Research Library

எழுத்தாணிப்பூண்டின் குணம்

பழமலங்கள் சாறும் பருங்குடற் சிதம்போஞ்
செழுமலச் சீதக்கடுப்பு மேகு-மொழியாக்
கரப்பான் சொறிசிரங்குங் காறு தகலு
முரப்பா மெழுத்தாணிக் கோர்.

(இ-ள்.) எழுத்தாணிப்பூண்டுக்கு மலக்கட்டு குடலின் சீதளம் எழுகின்ற மலச்சீதக்கடுப்பு கரப்பன் புடைகிரந்தி ஆகியவைகள்போமென்க

கோட்டைக்கரந்தையின் குணம்

கொட்டைக் கரந்தைதனைக் கூசாம லுண்டவர்க்கு
வெட்டை தணியுமதி மேகம்போங்-துட்டச்
சொறிசிரங்கு வன்கரப்பான் றேன்று மலப்பை
மறிமலமுந் தானிரங்கு மால்.

(இ-ள்.) கொட்டைக்கரந்தைக்கு வெள்ளைஒழுக்கு பிரமேகம் சொறி சிரங்கு கரப்பான் இவை நீங்கும், மறிப்பட்ட மலமுஞ்சாரும்.

சிவகரந்தையின் குணம்

வாந்தி யரோசகத்தை மாற்றும்பசி கொடுக்குஞ்
சாய்ந்த விந்துவைக்கட்டுந் தப்பாதே-வந்தழகைத்
தண்டா துறச்சேர்க்குஞ் சார்ந்த பரிமளத்தைத்
தண்டாச் சிவகரந்தை தான்.

இதுவுமது-விருத்தம்

கந்தநா று கரந்தை யதன்குணம்
மந்தவாதங் கரப்பனே மாற்றிடும்
தொந்தரோகந் துடைக்கு மிருமல
மந்தநோயுந் தணிக்கு நம்மாணேயே.

(இ-ள்.) மணமுள்ள சிவகரந்தை வாந்தியரோகம் விந்துநஷ்டம் பட்சிணவாதம் கரப்பான் வாதாதிதொந்தம் காசம் அக்கினிமாந்தம் இவைகளை நீக்கும், சடராக்கினியையும் வனப்பையும் உண்டாக்கும். ()

வெள்ளறுகின் குணம்-வெண்பா

குன்மமொடு வாயுகுடல் வாதஞ் சூலையிடை
சென்மம் விடுத்தோடிச் சிதையுங்காண்-வன்முலையா
யுள்ளு கிரந்திசொறி யொட்டிய சிரங்குமறும்
வெள்ளருகு தன்னை விரும்பு.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) சொக்கட்டான் காய்நிகர்த்த தனங்களையுடைய பெண்ணே! வெள்ளறுகினால் குன்மம் வாதப்பிணி வாதக்குடல்விருத்தி கீல் பிடிப்பு நரம்புகளைப்பற்றிய கிரந்தி தினவு சிறுசிரங்கு இவைபோம். ()

ஓரிலைத்தாமரையின் குணம்

ஓரிலைத் தாமரையி னுற்றகுணத் தைக்கேளாய்
மார்பிற்பா லில்லாத மங்கையர்க்கு-மோரிற்
குடிக்கப்பா லுண்டாகுங் கோர வன்மேகம்
படிக்கு ளிருக்குமோ பார்.

(இ-ள்.) ஓரிலைத்தாமரையை எலுமிச்சங்காயளவு அரைத்து அரை ஆழாக்கு பசுமோரில் இரண்டுவேளையும் 40-நாள் கொடுக்கில் தனத்திற் பாலில்லாதவர்களுக்குப் பால்சுரக்கும் வாதமேகம் போகுமென்க. 316

ஓரிதழ்த்தாமரையின் குணம்

தாதுவை யுண்டாக்குந் தனிமேகத்தைத் தொலைக்கு
மாதரவர் மேனிக் கழகுதருஞ்-சீதம்போஞ்
சீரிதழ்த் தாமரைவாழ் செய்யமட வனமே
ஓரிதழ்த் தாமரையை யுண்.

(இ-ள்.) அழகுதங்கிய யிதழ்களையுடைய தாமரையில் வசிக்குமன்னம்போல்பவளே! ஓரிதழ்த்தாமரை சுக்கிலத்தையும் சவுந்தரியத்தையும் உண்டாக்கும், மேகரோகத்தையும் சீதத்தையும் நீக்குமென்க. ()

அந்தரத்தாமரையின் குணம்-இதுவே ஆகாயத்தாமரை

அழுகிரந்தி குஷ்ட மடர்ந்த கரப்பான்
பழுவுறு மக்கூடு முதற்போகும்-அழகாகு
மிந்திரநீலக் கருங்க ணேந்திழையே யெப்போழ்து
அந்தரத் தாமரையா லாய்.

(இ-ள்.) அழகுபொருந்திய இந்திரநீலமணியை நிகர்த்த கரியகண்ணையுடைய பெண்ணே! அந்தரத்தாமரையால் அளிந்த விரணமும் குஷ்டும் கரப்பானும் மார்புக்குள் கட்டுகின்ற கிருமிக்கூடு முதலிய சில நோய்களும் போமென்க. 318

பற்படாகத்தின் குணம்

சீதவாதச் சுரமுந் தீராத தாகமும்போம்
போதவிரு கண்குளிரும் பொய்யலவே-பூதலத்துள்
வற்பரம பயித்தியமு மாபித்தமுந் தொலையும்
பற்படா கத்தையுன்னிப் பார்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) பற்பாடகத்துக்கு சீதவாதசுரம் பித்தகாசரோகம் உன்மாதம் பித்ததோஷம் இவைபோம் விழிக்குக் குளிர்ச்சியுண்டாம். 319

திருநீற்றுப்பச்சை, உருத்திரச்சடை இவைகளின் குணம்

திருநீற்றுப் பச்சை சிலேஷ்ம சர்த்திதன்னை
விரிநீற்றைப் போலாக்கு மெய்யே-பெரிய
சுரத்திரத்த வாந்தி சுரமருசி நில்லா
வுருத்திரச் சடைக்கே யுரை.

(இ-ள்.) திருநீற்றுப்பச்சை கபவாந்தியை நீக்கும். உருத்திரசடை சுரத்தாலாகிய உதிரவம்மை பித்தசுரம் அரோசகமிவைகளை நீக்கும்.()

மாசிப்பத்திரியின் குணம்

புளிப்புந் துவர்ப்பும் பொருந்தி யிருந்தாலுந்
தளிர்த்த காளைக்கனலைச் சாடு-நெளித்த
வலிதனை விட்டோட்டு மடமாதே நீகேளாய்
மலிமாசிப் பத்திரிதான் வாழ்த்து.

(இ-ள்.) இளமை பொருந்திய பெண்ணே! நீகேட்பாயாக; புளிப்புந் துவர்ப்புமுள்ள மாசிப்பத்திரி வாதநோயையும் உஷ்ணத்தையும் ஐவகை வலியையும் போக்கும். 321

மருக்கொழுந்தின் குணம்

கண்ணிலுறு தோடங் கபஞ்சூ டிவைபோக்கும்
ஒண்ணனல் கைப்புக்காரம் உள்ளமரும்-மண்ணிற்
கொழுந்த மருக்குணத்தைக் கொண்டிருந்த போழ்துந்
தழைந்தபசி வண்மைதருஞ் சாற்று.

(இ-ள்.) கைப்பும் காரமும் உஷ்ணமும் உள்ளமரு ஆனது நேத்திர படலம் கபதோஷம் உட்சூடு இவைகளை நீக்கும் அந்தமருவின் குணத்தைப் பெற்றகொழுந்து மிகுபசியையும் பலத்தையுங் கொடுக்கும். 322

கொடிவகை

ஆதொண்டையின் குணம்

மண்டைக் குடைச்சலறும் வாயுவழிப் பீநசம்போந்
தொண்டைக் கபமுந் தொலையுங்காண்-மிண்டுசெய்யும்
வாதக் கடுப்பகலு மாதேஆ தொண்டைக்குப்
போதப் பலபிணியும் போம்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) ஆடுதொண்டையால் மண்டைகுடைச்சல் வாதபீநசம் நெஞ்சிற்கபாதிக்கம் வாதக்குடைச்சல் முதலிய ரோகங்களும் போம். 323

பெருங்கட்டுக்கோடி, சிறுகட்டுக்கோடி இவைகளின் குணம்

பெரியகட்டுக் கொடிக்குப் பேசு பெரும்பாடு
மரியமல பேதியும்போ மப்பா-வுரிய
சிறுத்த கட்டுக்கொடிதான் சீதரத்த நீக்கு
மிறுத்த புனலைக்கட்டு மெண்.

(இ-ள்.) பெருங்கட்டுக்கொடியால் பெரும்பாடும் மலக்கழிச்சலும் போம் சிறுகட்டுக்கொடி சீதரத்தத்தையும் மேகநீரையும் கட்டும். 324

சிறுகுறிஞ்சாக் கோடிக்குணம்

சிறுக்குறிஞ்சா வாதமொடு சீதத்தை நீக்கும்
மறுவுதிர மில்லாத மாதர்க்-குறுமுலகி
லத்தி சுரமு மகலாக் கடிவிஷமுந்
தத்தி யகலத்தகர்க்குந் தான்.

இதுவுமது

வாதசுரஞ் சந்நிசுர மாறுக் கபசுரமும்
பூதலம் விட்டோடப் புரியுங்காண்-மாதேகே
ளக்கரநோய் தீர்க்கு மதிசுரந் தாகம்போ
தக்கசிறு குறிஞ்சா தான்.

(இ-ள்.) சிறுகுறிஞ்சால் வாதவிஷம் மாதாந்த உதிரச்சிக்கல் அஸ்திகதசுரம் காணுக்கடிவிஷம் வாதசுரம் சந்நிபாதசுரம் கபசுரம் பித்தஜிக்வாகண்டகம் சந்ததசுரம் தாகரோகம் இவை நீங்கும். 325

இண்டின்குணம்-இதுவே புனற்றண்டு

பீநசத்தைப் போக்கும் பெருகியதோர் நீரேற்றந்
தானசிக்கச் செய்யுமது சத்தியங்காண்-வானசைக்கும்
மண்டைக் குடைச்சலொடு வாய்ச்சந்நி யும்விலக்கும்
பண்டையுற்ற விண்டிதனைப் பார்.

இதுவுமது

கட்டுவா தங்களறுங் காரிகையே மேகம்போ
முட்டுவா தங்களெல்லா முன்பொழியுங்-கிட்டும்
புனலினறுந் தண்டுக்குப் போரீளை சூலை
யனலி லெழுபுண்ணு மறும்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) இண்டின்கொடியினல் பீநசம் சகல தோஷம் கபாலக் குடைச்சல் முகசன்னி வாதத்தடிப்பு பிரமேகம் சூதகவாயு சுவாசம் கீல்பிடிப்பு தீச்சுட்டவிரணம் ஆகியவைகள் போமென்க வாய்-முகம். ()

கர்ப்பூரவள்ளியின் குணம்

காச விருமல் கதித்தம்மை சூரிஐயம்
பேசுபுற நீர்க்கோவை பேருங்காண்-வீசுசுரங்
கற்பாறை யொத்துநெஞ்சிற் கட்டுகபம் வாதமும்போங்
கர்ப்பூர வள்ளிதனைக் கண்டு.

(இ-ள்.) கர்ப்பூரவள்ளியினல் காசம் என்கிற பொடியிருமல் அம்மைக் கொப்பிளம் சிலேஷ்மதோஷம் புறநீர்க்கோவை சூட்சை மார்பிற் கட்டு கபம் வாதக்கடுப்பு ஆகியவைகள் போமென்க. 327

முசுமல்லிகையின் குணம்

வீக்கமறுங் காமாலை விட்டோடுஞ் சோபைவிடு
நீக்கமற விம்முமுலை நேரிழையே-ஏய்க்கும்
விடபாக மேகமும்போம் வீரியமுமுண்டாம்
படர்முசு மல்லிகைக்குப் பார்.

(இ-ள்.) மார்பிலிடமில்லாமல் விம்மிய தனங்களேயுடைய பெண்ணே! முசுமல்லிகையினல் சோகை காமாலை ஆகந்துகவீக்கம் விஷபாகரோகம் பிரமேகம் ஆகியவைகள்போம். சுக்கிலவிருத்தியாம். 328

ஊசிமல்லிகையின் குணம்

மாந்தகணம் பொருமல் வாராது மைந்தர்களுக்
கூர்ந்தே யிரத்தகண மோடுங்காண்-கூந்தன்முடி
மானே சுரந்தணியும் வாங்காத வீக்கம்போங்
கானூசி மல்லிகைக்குக் காண்.

(இ-ள்.) கூந்தலை முடிக்கின்ற மான்போலுங் கண்களேயுடைய பெண்ணே! காட்டிலுள்ள ஊசிமல்லிகைக்கு கணமாந்தம் வயிற்றுப் பிசம் சிசுக்களுக்குண்டாகிற உதிரசம்பவப் பிணிகள் சுரம் சோகை இவைபோம். 329

மிளகரணையின் குணம்

ஐயமகற்று மசீரண வாதம் போக்குஞ்
செய்ய பித்த சூலைதனைத் தீர்க்குங்காண்-பையவரு
மீளையிரும லிரைப்பும் பிசந் தொலைக்கு
நாளு மிளகரணை நன்று.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) மிளகரணை கபவிருத்தி அசீரணவாயு பயித்தியசூலை க்ஷயம் காசம் சுவாசம் வயிற்றுப்பிசம் ஆகியவை போமென்க. 330

நாய்ப்பாகலின் குணம்

நாய்ப்பா கலின்குணத்தை நன்று யுரைக்கக்கேள்
வாய்ப்பான பீநசத்தை மாற்றுங்காண்-தீப்பாயி
லிங்கமதைச் சுத்திசெய்யு நேரிற்பா ஷாணத்தைப்
பங்கமறச் சுத்திசெய்யும் பார்.

(இ-ள்.) நாய்ப்பாகல் பீநசம் நீக்கும், சாதிலிங்கத்தையும் பாஷாணத்தையும் சுத்திசெய்யுமென்க. 331

பிரண்டையின் குணம்-இதுவே வச்சிரவல்லி

பிரண்டையை நெய்யால்வறுத்துப் பின்பரைத்து மாதே
வெருண்டிடா தேற்று விழுங்கி-லரண்டுவரு
மூலத் தினவடங்கு மூலவிரத்த மறும்
ஞாலத் தினுள்ளே நவில்.

இதுவுமது

மந்தம் வயிற்றுவலி வாயுவதி சாரமுளை
சேர்ந்த மூலங்கபமுட் செம்புனற்போக்-கோய்ந்தநடை
யெல்லா மகலு மெழுப்பு மதிகபசி
மல்லார் பிரண்டையுண்டு வா.

(இ-ள்.) பெண்ணே! பிரண்டையை நெய்விட்டு வறுத்து அரைத்துக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் எட்டுநாள் அந்தி சந்தி சாப்பிட ஆசனத்தினவும் ரத்தமூலமும் ஒழியும். இதைப் பற்பல ஔஷதங்களாகப் பிரயோகிக்கில் அக்கினிமந்தம் குன்மம் வாதாதிசாரம் முளை மூலம் கபதோஷம் ரத்தபேதி காலசதி இவை நிவிர்த்தியாம். ஜடராக்கினி வளரும். 332

களிப்பிரண்டையின் குணம்

ஐயமறும்பித்த மணுகாம லோடிவிடுந்
தையலார் போகமிகச் சாருங்காண்-பையக்
கரப்பான் விலகுங் கடிசி லந்தியும்போ
முரப்பாங் களிப்பிரண்டை யுண்.

(இ-ள்.) களிப்பிரண்டையினால் கபவிரணம் பித்ததோஷம் கரப்பான் காணுக்கடி சிலந்திவிஷம் நீங்கும் வீரிய விருத்தியாம். 333

Digitized By Roja Muthiah Research Library

தீம்பிரண்டை, புளிப்பிரண்டை இவைகளின் குணம்

தீம்பிரண்டை தன்னாற் செரியாமந்தம் ஆமந்
தேம்பிரைப்பு விக்கலையர் திண்வாதம்-போம்பலரும்
பார்க்கும் புளிப்பிரண்டை பாண்டுநோய் குன்மகயம்
போக்குமது சூடாம் புகல்.

(இ-ள்.) தித்திப்புப்பிரண்டையால் செரியாமந்தம் சீதபேதி அதி கொட்டாவி சுவாசவிக்கல் சிலேஷ்மாதிக்கம் வாதகோபம் ஆகியவை போம். உஷ்ணகுணமுள்ள புளிப்புப்பிரண்டை சரீரவெளுப்பு மார்பு நோய் வயிறுவலி க்ஷயம் இவைகளை விலக்கும். 334

நறுந்தாளியின் குணம்

நாவுகளார் மார்பு நாபிமூலங் களிலுட்
டாவி வருமிரணஞ் சாத்தியமாங்-கூவலிடு
மெய்யழலு மோதணியு மேகமறும் வீரியமா
முய்யவெனி னற்றளி யுண்.

(இ-ள்.) நறுந்தாளியினால் தொண்டை மார்பு உந்தி மூலம் இவற்றின்புண்கள் தேகவெப்பம் பிரமேகமிவைபோம். சுக்கிலமுண்டாம். ()

பேய்பாற்சோரியின் குணம்

பேய்ப்பாற் சொரியினாற் பேதிமுதல் வெப்பகலும்
வாய்ப்பார் கடுப்புதிர மாறுங்காண்-போய்ப்பாய்ந்
துருவாம லுள்ளலைக்கு மோங்கயற் கண்மாதே
பொருவார் பயித்தியமும் போம்.

(இ-ள்.) கயல்போன்ற கண்களையுடைய பெண்ணே! பேய்ப்பாற் சொரியால் அதிசாரவுட்சூடு ரத்தக்கிரணி பித்ததோஷம் ஆகியவைகள் போகுமென்க. 336

குதிரைவாலியின் குணம்-இதுவே மிரியார்குந்தல்

கடுப்பு கழிச்சல் கனன்ற சுரதாக
மிடுப்பு வலிவாத மிவற்றே-டுடுப்ப
விதிரைவா வென்றழைக்கு மேகமிரு மலும்போங்
குதிரை வாலிக்குக் குலைந்து.

இதுவுமது

காசம் பருப்படுவன் கண்மயக்க மீளையொடு
வாசங் கமழ்குழலாய் மாந்தமும்போம்-பேசத்

Digitized By Roja Muthiah Research Library

தரியாது வாதகபந் தானே சொரிபோம்
மிரியார் குந்தற்கு விரைந்து.

(இ-ள்.) வாசம்பரிமளிக்கும் கூந்தலையுடைய பெண்ணே! குதிரை வாலியால் மூலக்கடுப்பு அதிசாரம் சுரவேகத்தால் வந்த நாவறட்சி சகஜ விருதவாதம் பிரமேகம் இருமல்கட்டி படுவன் நேத்திரமங்கல் கோழை அக்கினிமந்தம் வாதகபதொந்தம் தினவு ஆகியவைகள் நீங்கு மென்க. 337

பவளக்குன்றிக் கொடியின் குணம்

பவளக் குன்றிக்கொடிக்குப் பற்றிநின்ற மேகங்
கவிழிரத்த பித்த கயமும்-நவமாஞ்
சொறி கரப்பான் புண்கிரந்தி தேலோர்கடுவன்
மறுகரப்பான் போமே மலைந்து.

(இ-ள்.) செங்குன்றிக்கு வெள்ளை ரத்தபித்த க்ஷயம் நமைக்கரப் பான் விரணம் சிரங்கு சருமக்கடுவன் அழுக்குக்கரப்பான் இவைபோம்.

முசுட்டையின் குணம்

மாதே முசுட்டையது வாதமோ டையத்தைத்
தீதே புரிநீரைத் தீர்க்குங்காண்-வேதனைசெய்
வன்மலத் தைத்தள்ளும் வறட்சி சொறிசிரங்கைச்
சன்மமறப் போக்குநிசந் தான்.

(இ-ள்.) பெண்ணே! முசுட்டையானது வாதகோபம் கபதோஷம் பிரமேக நீர் தினவுபுடை சிறுசிரங்கு இவைநீக்கும் மலத்தையிறக்கும்.

பொன்முசுட்டையின் குணம்

வாதமொடு பித்தத்தை மாற்றுமே மாநிலத்திற்
சீத மகற்றுந் தினவடங்கு-மாதேகே
ளுண்டிக்கும் வாசனையா மோங்கிவள ரனலைக்
கண்டிக்கும் பொன்முசுட்டை காண்.

(இ-ள்.) மாதேகேள் பொன்முசுட்டை வாதவலி மயக்கம் சீதம் நமைச்சல் உட்சூடு இவைகளை நீக்கும். உண்ண மணமாயிருக்கும். 140

நஞ்சறுப்பான்பூண்டின் குணம்-இதுவேநஞ்சுமுறித்தான்

தொடுநஞ்சு நாவாரத் துய்க்குநஞ்சு மற்றே
ரிடுநஞ்சுந் தாவர நஞ்சேறிப்-படுநஞ்சுங்
கூண்டுட னேகாதோ குயின்மொழியாய் நஞ்சறுப்பான்
பூண்டுதனை நீயெடுக்கும் போது.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) குயில்போலினிய மொழியாளே! நஞ்சறுப்பான் பூண்டினால் கீடசர்ப்பம் தீண்டுதலாலும் தானே நுகரலாலும் இடுமருந்தாலும் பாஷாணங்களாலும் வியாபித்தவிஷம் தீரும். 341

நீர்மேல்நெருப்பின் குணம்

வாதமகா ரோகம் வாரினுங் கறையல்கி
மீதடா வன்றிமிரே மேவுகினு-மோதரிய
சீர்மே னிலம்பரவு தெய்வ மடமயிலே
நீர்மே னெருப்பை நினை.

(இ-ள்.) தெய்வத்தன்மை பொருந்திய மயில்போன்ற சாயலையுடைய பெண்ணே! நீர்மேல்நெருப்பினால் மகாவாதரோகமும் ரத்தக்குறைவினால் பிறக்கின்ற திமிர்வாதநோயும் விலகுமென்க. 342

முடக்கற்றான் குணம்

சூலைப் பிடிப்பு சொறிசிரங்கு வன்கரப்பான்
காலைத் தொடுவளியுங் கனமலமுஞ்-சாலக்
கடக்கத்தா னோடிவிடுங் காசினியை விட்டு
முடக்கத்தான் றன்னை மொழி.

(இ-ள்.) முடக்கற்றான் மூலிகையால் கீல்பிடிப்பு சினைப்பு கிரந்தி கரப்பான் பாததாகவாதம் மலக்கட்டு ஆகியவைபோமென்க. 343

கோல்லங்கோவையின் குணம்

சூலைபாண்டு திரிதோஷ மக்கிவைப்பு கண்ட
மாலை குடலின்வலி மாகுஷ்ட-மாலவிஷ
முட்கரப்பான் மெய்யுரிப்பு முண்டோ கொல்லங்கோவை
கைக்குளிருக்க வின்னுங் காண்.

(இ-ள்.) கோல்லங்கோவையால் சூலைவலி சரீரம்வெளிறல் பாண்டு திரிதோஷம் அக்கிப்புண் உட்சூடு கண்டமாலை ஆந்திர பித்தவாதம் மாகுஷ்டம் மகாவிஷம் கரப்பான் நமைச்சல் ஆகியவைபோம். 344

கற்கோவை வரிக்கோவை அப்பைக்கோவை சேங்கோவை அருங்கோவை இவைகளின் குணம்

வீக்க மகற்றுநஞ்சை வீட்டுநீர்ப் பேதிதரும்
போக்கு மதுவையழற் புண்ணொழிக்குந்-தேக்குறுநற்
கோவைவரிக் கோவையப்பைக் கோவைசெங் கோவைகருங்
கோவை முறையேயுணர் குணம்,

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) இனிப்புள்ளகற்கோவை சோபையையும், வரிக்கோவை விஷத்தையும், அப்பைகோவை மேகவிரணத்தையும் நீக்கும். தேக்கு-இனிப்பு. 345

நரிப்பயற்றங்கொடியின் குணம்

நரிப்பயற் றங்கொடிக்கு நாடாது பித்தந்
தரிப்புற்ற ஐயமெல்லாந் தாழு-முருப்பொழிக்கு
மேகவெட்டை பித்தவெட்டை மீளாக் கரப்பனிவை
யாகம் விடுத்தோடு மறி.

(இ-ள்.) நரிப்பயற்றங்கொடிக்குப் பித்தகோபம் கபரோகங்கள் பிரமேகவெள்ளை அரித்திராமேகம் கரப்பான் இவைபோம். 346

மூக்குரட்டையின் குணம்

சீத மகற்றுந் தினவடங்குங் காந்திதரும்
வாத வினையை மடிக்குங்காண்-பேதி
கொடுக்குமதை யுண்டாக்காற் கோமளமே பித்த
மடுக்குமே மூக்குறட்டை யால்.

(இ-ள்.) அழகிய பெண்ணே! மூக்குறட்டை ஆமம் நமைச்சல்வாத நோய் இவைகளை நீக்கும். அழகையும் விரோசனத்தையும் பித்தப் பிணியையும் உண்டாக்கும். 347

வெள்ளைச்சாறடையின் குணம்

வித்திரிதி மூலம் விழிப்படல மார்புநோய்
தத்து சுவாசந் தனிக்கருப்பை-யுற்ற
கருச்சிதறச் செய்சூசி காவாதமும்போம்
விருச்சி கத்தின்பேரை விரி.

(இ-ள்.) விருச்சிகம் என்கிற வெண்சாறடையால் வித்திரிக்கட்டி மூலவாயு; கண்படலரோகம் நெஞ்சுநோவு சுவாசரோகம் கருப்பத்தை சின்னப்படுத்துகின்ற சூசிகாவாதம் ஆகிய இவைபோம். 348

பொன்னாங்காணியின் குணம்

காசம் புகைச்சல் கருவிழிநோய் வாதமனற்
கூசும் பிலீகங்கு தாங்குரநோய்-பேசிவையா
வென்னாங்கா ணிப்படிவ மேமாஞ் செப்பலென்னை
பொன்னாங் காணிக்கொடியைப் போற்று.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) பொன்னுங்கண்ணியினால் விழியைப்பற்றிய வாதகாசம் தும்பிரரோகம் கிருஷ்ணமண்டலரோகம் வாததோஷம் தேகச்சூடு பீலிகம் மூலரோக மிவைபோம் சரீரத்தில் பொன்னிறமுண்டாம். 349

புனற்றண்டின் குணம்

கபவமன நாடிக் கமலங் காப்ப
ளிபமறு களத்தொலியு நீங்காக்-சுபமா
ரனற்றண்டைக் காட்டா வற்றசுரமு மேகும்
புனற்றண்டைச் சிந்திக்கும் போழ்து.

இதுவுமது

கட்டுவாதங் கொடிய கான்மேகங் கீல்கடோறு
முட்டு வாதஞ்சூலை மூடிரணம்-விட்டுவிடுஞ்
சொல்லவொண் ணுவின்ப சுகமளிக்கு மாரமிர்தே
நல்ல புனற்றண்டி னால்.

(இ-ள்.) சொல்லவொண்ணு வின்பசுகமளிக்கும் அமுதனையாளே! புனற்றண்டுக்குச் சிலேஷ்மவாந்தி நாசியில்வீழ்கின்ற சலம் கரப்பன் காரணமின்றி அடைபட்ட கண்டத்தொனி நாளுநன்கைவிளைக்கின்ற பசியின் வரம்பைக்காட்டாத சீதசுரம் கட்டுவாதம் வாதப்பிரமேகம் சந்திகவாதம் சூலை கிரந்தி இவைபோம் நாடி-நாசி, கமலம்-சலம். 350

அம்மான்பச்சரிசியின் குணம்

காந்தல் விரணமலக் கட்டுமேகத் தடிப்பு
சேர்ந்த தினவிவைகள் தேசம்விட்டுத்-பேர்ந்தொன்று
யோடுமம்மான் பச்சரிசிக் குண்மை யினத்துடனே
கூடுமம்மா னொத்தகண்ணுய் கூறு.

(இ-ள்.) இனத்துடன் சஞ்சரிக்கு மான் விழிகளையொத்த கண்களையுடைய பெண்ணே! அம்மான் பச்சரிசிக்கு எரிபுண் மலபந்தம் பிரமேகக்கசிவு சரீரத்தடிப்பு நமைச்சல் ஆகியவைகள் போகுமென்க. 151

சிவப்பு அம்மான்பச்சரிசியின் குணம்

அரத்தவம் மான்பச் சரிசியெனு மூலிக்
குரத்த வன்மேக மொழியுங்-கரத்ததொரு
விந்துவு முண்டாகும் வெள்ளி பொடியா
மிந்துவினும் வாண்முகத்தா யெண்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) சந்திரன்போன்ற வொளிபொருந்திய முகத்தையுடைய பெண்ணே! சிவப்பு அம்மான் பச்சரிசிமூலிக்கு வாதப்பிரமேகம்போகும் சுக்கிலதாது விருத்தியாகும் இதனால் வெள்ளி பற்பமாகுமென்க.

சிறு அம்மான் பச்சரிசியின் குணம்

பாதுபுகல் வேனமுதா லங்கிகரு மெழுகாந்
தீதுபுரி மேகவெப்பந் தீருமினு-மோதுங்காற்
றேரம்மான் சீரமொக்குந் தின்னுதையஞ் செம்மைநிறச்
சீரம்மான் பச்சரிசிச் சீர்.

(இ-ள்.) பாலுள்ள சிறு அம்மான் பச்சரிசியால் அங்கிகரு என்கிற சாதிலிங்கம் மெழுகாகும் மேகவுஷ்ணம் நீங்கும் நல்ல பசும்பாலுக்கொக்கும் இதனை உதயகாலந்தோறும் உண்பாயாக என்க. 353

பொடுதலையின் குணம்

பொடுதலையின் பேருரைத்தாற் போராமப் போக்கு
மடுதலைச்செய் காசமு மடங்குங்-கடுகிவரு
பேதியொடு சூலைநோய் பேசரிய வெண்மேகம்
வாதமும்போ மெய்யுரக்கும் வாழ்த்து.

(இ-ள்.) பொடுதலையால் சீதபேதி இருமல் அதிசாரம் சூலைநோய் சிலேஷ்மப்பிரமேகம் வாதநோய் இவைபோம். தேகம்பலக்கும். 354

கோத்தான் குணம்

சித்த ரறிவார் செறிகுழலாய் நீகேளாய்
கோத்தான் மிகக்குளிர்ச்சி கொண்டக்காற்-சுத்தப்
பிரமேக முட்கிரிச்சம் பித்த மிளைப்பு
மறுமே தவறு தறி.

(இ-ள்.) நெருங்கிய கூந்தலையுடைய மாதே! அதிகுளிர்ச்சியுள்ள கோத்தானுக்கு ஒழுக்குப் பிரமேகம் மூத்திரக்கிரிச்சரம் பித்தநோய் அயர்ச்சி ஆகியவைநீங்குமென்க. 355

நல்லநெருஞ்சிலின் குணம்

நல்ல நெருஞ்சிலது நாளுங் கிரிச்சரத்தை
வல்ல சிரமனலே மாற்றுங்காண்-மெல்லியலே
மாநிலத்திற் கல்லடைப்பும் வாங்காத நீர்கட்டுங்
கூனுறுமெய் வாதமும் போக்கும்.

Digitized By Roja Muthiah Research Library

இதுவுமது

மேகவெட்டை நீர்ச்சுருக்கு வீறுதிரி தோஷம்புண்
வேகசுர தாகவெப்பை விட்டோட்டும்-போகந்
தருஞ்சின் மதலைமொழித் தையலே நல்ல
நெருஞ் சிலதனை நினை.

(இ-ள்.) இன்பத்தைத்தருங் குதலைமொழியாளே! நல்லநெருஞ்சில் சொட்டுமூத்திரம் சுரவெப்பம் அஸ்மரிரோகம் நீரடைப்பு முடவாதம் பிரமேகவெள்ளை மூத்திரகிரிச்சரம் திரிதோஷ கோபவிரணம் சுரதாகம் உஷ்ணம் இவைகளை நீக்கும். 356

யானைநெருஞ்சிலின் குணம்

மேகத்தைப் போக்கிவிடும் வெண்குஷ்டந் தானொழிக்குந்
தேகத்திற் கல்லடைப்பைத் தீர்க்குங்காண்-மேனிதனில்
தேனையரும் பாகைத் திருத்துங் கிளிமொழியே
யானை நெருஞ்சி லது.

இதுவுமது

யானை நெருஞ்சி லதுசீ தளமாகும்
மானே யெலும்புருக்கி மாற்றுங்காண்-மேனிதனி
லுள்ள வெரிச்ச லுழலையுட் டாகமொடு
தள்ளுபித் தமும்போகுந் தான்.

(இ-ள்.) தேனையும் பாகையும் திருத்துமொழியாளே! குளிர்ச்சியையுடைய யானைநெருஞ்சில் வெள்ளைவீழல் வெண்குஷ்டரோகம் அஸ்மரி அஸ்திசிராவரோகம் தேகயெரிவு உழலைதாகம் பித்தமயக்கம் ஆகியவைகளைப் போக்குமென்க. 357

செப்புநெருஞ்சில் குணம்

செப்பு நெருஞ்சில் திரிதோஷம் போக்கிவிடும்
வெப்பு முதலனைத்தும் வீட்டுங்காண்-செப்பரிய
சுக்கில மேகம்போக்குந் தொல்லை யனல்மாற்று
மிக்கு மருந்தாம் விரி.

(இ-ள்.) செப்பு நெருஞ்சில் திரிதோஷம் சுரமுதலியநோய்கள் சுக்கிலமேகம் நீடித்த உட்சூடு ஆகியவை நீங்கும். நல்லமருந்தாம். 358

பேய்ப்புடலின் குணம்

பித்தசுரஞ் சீதசுரம் பீரிக்குங் காமாலை
யுற்ற மசூரி யழற்றுக-நித்தியமுங்

Digitized By Roja Muthiah Research Library

காய்புடலை யண்ணக் கவிழ்க்கின்ற பித்தமும்போம்
பேய்ப்புடலை யுண்பாரைப் பேணு.

(இ-ள்.) பேய்ப்புடலால் பித்தகபசுரங்கள் காமாலை மசூரிகை தாகம் தேகங் காய்ப்பேறும்படி தள்ளுகின்ற மயக்கம் இவைகள்போம். ()

வல்லாரையின் குணம்

அக்கர நோய்மாறு மகலும் வயற்றிழிவு
தக்கவிரத் தக்கடுப்புத் தானேகும்-பக்கத்தி
வெல்லாரையும் மருந்தென் றேயுரைத்து நன்மனையுள்
வல்லாரையை வளர்த்து வை.

(இ-ள்.) வல்லாரையினால் பித்தஜிகவண்டகரோகமும் மலக்கழிச்சலும் ரத்தகிராணியால் பிறக்கின்ற கடுப்பும் நீங்குமென்க. 360

பிரமியவழுக்கையின் குணம்

சீலின் பசையாற் கிளைத்த வலிவீக்கங்
காலின் பிடிப்பொடுகை காலெரிவு-மேலிலெழு
வாதத்தா நோவு மலக்கட்டுஞ் சோபையும்போஞ்
சீதத்தாஞ் சப்தலைக்குத் தேர்.

(இ-ள்.) சப்தலை என்கிற பிரமிய வழுக்கைக்குக் சீல்களின் கபம் விருத்தி யடைவதாற் பிறந்தவலி வீக்கம் கால்பிடிப்பு கைகால் எரிவு வாதக்கடுப்பு மலபந்தம் சோபை ஆகியவைகள் போகுமென்க. 361

கையாந்தகரையின்குணம்-இதுவே கரசனுங்கண்ணி கரியசலை

குறற்கம்மற் காமாலை குட்டமொடு சோபை
யுரற்பாண்டு பன்னோ யொழியு-நிரற்சொன்ன
மெய்யாந் தகரையொத்த மீளியண்ணு நற்புலத்துக்
கையாந் தகரையொத்தக் கால்.

(இ-ள்.) கையாந்தகரையால் சுரசாந்தரோகம் காமிலம் புண்டக குஷ்டம் வீக்கம் பாண்டு தந்தரோகம் ஆகியவைபோம். தேகத்திற் பொற்சாயலும் யாளிக்குச் சமதையானபலமும் உண்டாகுமென்க. 362

பொற்றலைக்கையாந்தகரையின் குணம்

பொற்றலைக்கையாந்தகரை பொன்னிற மாக்குமுடலை
சுத்தமுறக் கட்குச் சுகங்கொடுக்குஞ்-சிற்றிடையாய்
சிந்தூரங் கட்காகுஞ் சிந்தைதனைத் துலக்கு
முந்திவளர் குன்ம மொழிக்கும்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) பொற்றலைக் கையாந்தகரை தேகத்திற் பொற்சாயலையும் விழிக்குள் ஒளியையும் புத்திக்குத் தெளிவையும் உண்டாக்கும். குன்மக்கட்டியைப்போக்கும்; இதுபலவித சிந்தூரஞ்செய்ய ஆமென்க. 363

விஷ்ணுகிராந்தியின் குணம்

செய்ய மாலின்கிராந்தி தீராத வல்லசுரத்
தைய மறுக்கு மணற்றணிக்கும்-பையவரு
காச மிருமலையுங் கட்டறுக்கும் வாதத்தா
லூசலா டும்பிணி போக்கும்.

(இ-ள்.) விஷ்ணுகிராந்தி சத்தசுரத்தாற் பிறந்தகபம் உட்சூடு கோழை இருமல் வாதப்பிணி இவைகளை நீக்கும். மால்-விஷ்ணு. 364

தொட்டாற்சுருங்கியின் குணம்

மேகநீரைத் தடுக்கு மேதினியிற் பெண்வசிய
மாகவுன் னிநல்கு மதுவுமன்றித்-தேகமிடைக்
கட்டாகக் காட்டுகின்ற காலைத் துரத்திவிடுந்
தொட்டாற் சுருங்கியது சொல்.

(இ-ள்.) தொட்டாற்சுருங்கி மேகமூத்திரத்தை நீக்கும். பெண்வசியஞ்செய்யும் உடலிற் ஓடிக்கட்டுகின்ற வாதத்தடிப்பைக் கரைக்கும். ()

கோட்டைப்பாசியின் குணம்

மேகமருந் தீபனமாம் வெஞ்சுரமு மேகிவிடுந்
தேகமதிற் றேமலினஞ் சேருமோ-பாகுமொழி
மின்னே வைகுகுணஞ்செய் மென்கொட்டைப் பாசியினாற்
றன்னுகரப் பானும்போஞ் சொல்.

இதுவுமது

மிக்குகக்கு வானகலும் வெய்ய கிரந்தியறுந்
தக்க ஐயவாதந் தணியுங்காண்-மிக்ககிலின்
மட்டைப் பாய்ச்சுங்கூந்தல் மாதே யுலகத்திற்
கொட்டைப் பாசிப்பெயரைக் கூறு.

(இ-ள்.) அகலின் வாசனையைவீசும் கூந்தலையும் பாகனையசொல்லையுமுடைய பெண்ணே! கொட்டைப்பாசியால் பிரமேகம் பித்தசுரம் தேமல் கரப்பான் கக்கிருமல் கிரந்தி கபவாத மிவைபோம்; பசியுண்டாம். ()

கானும்வாழையின் குணம்

கானும் வாழைக்குழலைக் கண்குழிப்புண் ணாறிவிடும்
மானுலும் போக மதிகரிக்கு-மானேகேள்
ஐயம் விளையு மனற்றணியு நீங்காத
பையுதிர மாறுமுன்னிப் பார்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) கானும்வாழைக்கு ஸ்தனவித்திரிதி சுரம் ரத்தபேதி இவை நீங்கும்; சுக்கிலவிருத்தியும் கபப்பெருக்கமும் உண்டாம். 367

சிறுப்புள்ளடியின் குணம்

மாந்தகுணம் போராமம் வன்மந்த நீக்கிவிடு
மேய்ந்த முலைப்பாலு மொழுகுங்காண்-மோந்தே
சிறுபுள் ளடிதுதையாத் தேமலர்ப்பூங் கோதாய்
சிறுபுள் ளடியைநிதஞ் சேர்.

(இ-ள்.) வாசனைபொருந்திய மலர்மாலையைத்தரித்த கூந்தலையுடைய பெண்ணே! சிறுபுள்ளடியால் எண்வகைமாந்தம் சீதக்கட்டு வாதசவம் ஆகியவை நீங்கும்; வற்றியமுலைப்பாலும் பெருகும். 368

உப்பிலாங்கோடியின் குணம்

பிள்ளை மந்தபேதி பேராத ரூட்சையும்போம்
வெள்ளைசெய்யுந் தங்கத்தை மென்மலராற்-றுள்ளைபுரி
வேளு நடுங்குவடி வேலைநிகர் கூர்விழியாய்
நாளுமுப் பிலாங்கொடியி னால்.

(இ-ள்.) மலர்பாணத்தால் போர்புரியுங் காமனும் அஞ்சும்படியான கூரியவேல்போன்ற கண்ணுளே! உப்பிலாங்கொடியினால் குழந்தைகள் மாந்தமும் க்ஷீரதிசாரமும் நீங்காதசுரமும் நீங்கும்; இது தங்கத்தைப் பற்பமாக்கும். 369

பம்பந்தராவின் குணம்

பாலிராக் கொங்கைகளிற் பாலாங் கருப்பைப்பை
மூலியிறை யழுக்கு முன்பிழியும்-மேலெழுத்
தப்பமெனத் தங்குஞ் சலனமரோ சுகம்போம்
பம்பந்தரா யருந்திப் பார்.

(இ-ள்.) பம்பந்தராயினால் பிரசவ அழுக்கும் எஃகுஸ்தம்பம்போற் றடுக்கின்ற வாதத்தடிப்பும் அருசியும்போம், பால்வற்றிய ஸ்திரீகளுக்குப் பால்விருத்தியாகும். சலனம்-வாயு. 370

புல்வகை

சதுரக்கள்ளியின் குணம்

கரப்பான் சொறியுங் கடியுங் கபமு
முரப்பாங் குன்மத்தையு மொழிக்கும்-நிரைப்பான்

Digitized By Roja Muthiah Research Library

பேதிதருஞ் சீதமென்ற பேச்சகற்றும் பூவுலகிற்
சாது சதுரக்கள்ளி தான்.

(இ-ள்.) சதுரக்கள்ளி கரப்பான் நமைச்சல் கழுக்கடி கபரோய் வாதகுன்மம் இவை நீங்கும் விரேசனத்தைத் தரும். 371

நாகதாளிகள்ளியின் குணம்

செந்து விஷங்கள் செடிவிஷங் களைத்தொலைக்கு
தொந்திடச் செய்வாதத்தை தூறுங்காண்-முந்தவெகு
வேகமா லிக்கும்வடி வேல்விழிமாதே பணைதல்
நாகதாளிக் குணத்தை நாடு.

(இ-ள்.) வேல்போலுங் கண்களையுடையமாதே! நாகதாளிக்கள்ளி சங்கமவிஷம் தாவரவிஷம் மகாவாதரோகம் இவைகளைப் போக்கும். ()

பேய்க்கற்றாழை செங்கற்றாழை இவைகளின் குணம்

பேய்க்கற் றாழைக்குப் பெருமேக மும்மெரிவு
மேய்க்கக் கூடாவழலு மேகுங்காண்-தாய்க்குநிக
ராஞ்சிவந்த கற்றாழை யங்கங் குளிர்விக்கும்
பாஞ்சயத்தைப் பொன்னாக்கும் பார்.

(இ-ள்.) பேய்க்கற்றாழைக்கு அதிமேரும் சரீரஎரிவும் சுரமும் போம். செங்கற்றாழை உட்சூடகற்றும் இரும்பைத் தங்கமாக்கும். 373

கற்றாழையின் குணம்

பொல்லா மேகங்கபம் புழுச்சூலை குஷ்டரச
மல்லார் மத்தம்பகந் தரங்குன்ம-மெல்லாம்விட்
டேகு மரிக்கு மெரிச்சற் கிரிச்சரமு
மா குமரிக்கு மருண்டு.

(இ-ள்.) நறுங்கற்றாழைக்கு வாதமேகம் கபமேகம் கிரிமிக்குற்றல் பெருவியாதி மூலம் உன்மாதம் பகந்தரம் வயிற்றுநோய் தினவுள்ள பித்தகிரிச்சரம் இவைகள்போம் குமரி-கற்றாழை. 374

கள்ளிமுளையான் குணம்

வாய்க்குப் புளித்திருக்கும் வன்பசியை யுண்டாக்கு
மேய்க்குமுடல் வாதத்தை யேறுபித்தஞ்-சாய்க்குந்
தெள்ளிய வின்பமொழி தெய்வ மடவனமே
கள்ளி முளையானருந்திக் கண்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) தெள்ளிய யின்பமொழியையும் அன்னநடையையுமுடைய பெண்ணே! புளிப்புச்சுவையுள்ள கள்ளிமுளையான் தீபனத்தையுண்டாக்கும் வாதபித்ததோஷத்தையும் மாற்றும். 375

மேகநாதப்பூண்டின் குணம்

இரத்த பித்தரோக மெரிசுருவ காள
முரத்த வுன்மாதமிவை யோட்டு-மிரத்தனப்புண்
வாரணிவான் கொங்கை மடவார் தொழுந்திருவே
தாரணி வாழ்மேக நாதம்.

(இ-ள்.) இரத்தினுபரணத்தையணிந்த கச்சிணலிறுக்கிய தனங்களையுடைய மாதர்கள் தொழத்தகுந்திருவே! மேகநாதப்பூண்டு இரத்த பித்தத்தையுஞ் தாவரச்சங்கமம் முதலிய விஷங்களையும் உன் மாத ரோகத்தையும் போக்குமென்க. 376

அருகம்புல்லின் குணம்

அருகம்புல் வாதபித்த ஐயமோ டூளை
சிறுக வறுக்குமின்னஞ் செப்பி-லறிவுதரும்
கண்ணோ யொடுதலைநோய் கண்புகை யிரத்தபித்த
முண்ணோ யொழிக்கு முறை.

(இ-ள்.) அருகம்புல் திரிதோஷம் கோழை கண்ணோய் சிரஸ்தாபம் தும்பிரமநோய் ரத்தபித்தம் மருந்துச்சூடு யிவைபோக்கும் அறிவு தரும். 377

சோதிப்புல்லின் குணம்

காசப் படலங் கருவித்தோஷம் பில்லம்
பூசாந்திரஞ் சதையொண் பூசுக்கிரன்-கூசமலை
வோதியவிந் நோய்முழுது மொண்விழியை விட்டகலுஞ்
சோதியெனும் புல்லுக்குச் சொல்.

(இ-ள்.) சோதிப்புல்லுக்கு விழிக்காசபடலம் கருவிழிநோய் நீர்ப்பில்லப் பூசாந்திரம் ஊன்பலம் பூவெண்புள்ளி கூசுதல் இவைபோம். ()

தருப்பைப்புல்லின் குணம்

தோடஞ் சிறியவிடஞ் சேராக்கப் பெருக்கஞ்
சாடுஞ் சகலசுரம் தாகமிவை-யோடு
மரிப்பு மகலு மடல்வேள்வி கட்காந்
தருப்பை யெனும்புல்லுக்கு தான்.

(இ-ள்.) தருப்பைக்கு சப்ததோஷம் அற்பவீரியம் விஷம் கபாதிக்கம் சர்வசுரம் தாகம் நமைச்சல் போம் யாகங்கட்காம். 379

Digitized By Roja Muthiah Research Library

மாந்தப்புல், காவட்டம்புல் இவைகளின் குணம்

மாந்தப்புற் பேதிகட்டு மந்தமசீ ரணத்தைச்
சாந்திசெய்யும் வந்தசுரத்தைப் போக்கு-மேந்திழையே
காவட்டம் புற்குக் கணமாந்தம் பேதியறு
நாவொட்டிக் காய்ச்சலும்போ நாடு

(இ-ள்.) மாந்தப்புல் மலப்பேதி அக்கினிமந்தம் அசீரணம் சிலே ஷ்மசுரம் ஆகிய இவைகளைப்போக்கும். காவட்டம் புல்லுக்கு கணமாந் தம் அதிசாரம் நாவொட்டிக்காய்ச்சல் ஆகிய இவைகள் விலகும். 380

பீனசப்புல்லின் குணம்

பீநசப்புல் லுண்டாயிற் பேர்ந்துவிடு மாந்தமெலாம்
பீநசமுந் தீரு பெருமூலந்-தானொழியும்
மைய விளைசிதையு மக்கரநோ யுந்தீரு
மெய்யா யிதனை விளம்பு.

(இ-ள்.) பீநசப்புல்லினால் எண்விதமாந்தம் நாசிரோகம் மூலம் சிலேத்மதோஷம் பித்தசிக்வாகண்டகம் ஆகிய இவைகள் போகும். 381

வாசனைப்புல்லின் குணம்

வாசனைப்புல் வாதபித்த மாற்றுவது மன்றிமிகு
சூசனையாய் வந்தசுரம் போக்கும்-பேசரிய
ஐய மறுக்கு மரோசகத்தை விண்ணேற்றுந்
துய்ய பசியைக்கொடுக்குஞ் சொல்.

(இ-ள்.) வாசனைப்புல் வாதபித்தரோகம் சுரம் கோழை அருசி இவைகளை நீக்கும் பசிதீபனத்தை யுண்டாக்கும். 382

பேய்ப்புல்லின் குணம்

இறுத்து ரோகம்போ மெலிவிஷம் போமெய்யி
லுறுத்து நின்றசூலை யொழியுங்-கறுத்தவளி
யேய்ப்புற்ற கண்ணு யெழில்வான ர வாயுண்டாம்
பேய்ப்புல்லை கண்டறிந்த பேர்க்கு.

(இ-ள்.) கறுத்த வண்டை நிகர்க்குங் கண்களையுடையாளே! மலை யில் முளைக்கின்ற பேய்ப்புல்லுக்கு மார்புநோய் எலிவிஷம் வாயுவின் குத்தல் ஆகிய இவைகள் போமென்க. 383

பருங்காளான் குணம்

கயங்கிரந்தி தாகங் கரக்குமண் டம்விக்கல்
மயங்கு விக்கும்பித்த மடல்வாதம்-பயங்கரத்தைச்

Digitized By Roja Muthiah Research Library

செய்யவரு பேதி திட்டிமந்த நோய்களுண்டாம்
வெய்யபரு மாம்பியால் விள்.

(இ-ள்.) பருங்காளானால் க்ஷயமும் விரணமும் தாகமும் நீங்கும் குடல்விருத்தி விக்கல்ரோகம் பித்தகோபம் மகாவாதம் அதிசாரம் கண் புகைச்சல் இவைகளுண்டாம் ஆம்பி-காளான். 384

புற்றுக்காளான், வளைக்காளான், போறிக்காளான், வரிக்காளான் இவைகளின் குணம்

புற்றுக் காளான்வலையைப் போலும் பொறிவரியை
யுற்றெழு காளானென் றுரைக்குமவை-முற்றும்
பழுதின்று நற்குணமும் பண்ணுவன மாந்தர்
தொழுதின்று முண்பரெனச் சொல்.

(இ-ள்.) புற்றின்றன்மையாயும் வலைக்கண்ணுருவமாயும் பலநிற மாயும் வரிநிறைந்த குறியுள்ளதாயும் இராநின்ற நான்குவகை காளான் களைப் புசிக்கிற் குற்றமில்லை நற்குணத்தைச் செய்யினுஞ் செய்யும். 385

மரத்தின் சமூலவகை

அரசமரத்தின் சமூலகுணம்

அரசம்வேர் மேல்விரண மாற்றுமவ் வித்து
வெருவவருஞ் சுக்கிலநோய் வீட்டுங்-குரல்வறளுந்
தாகமொழிக்குங் கொழுந்து தாதுதரும் வெப்பகற்றும்
வேகமுத் தோஷம்போக்கு மெய்.

(இ-ள்.) அரசம்வேர்ப்பட்டை சருமவிரணத்தையும், விதை சுக் கிலக்கெடுதியையும், கொழுந்து தொண்டையை வறட்டுகின்ற தாகத் தையும், மகரந்தம் தேக உஷ்ணத்தையும் திரிதோஷத்தையும் நீக்கும்.

ஆலமரத்தின் சமூலகுணம்

சொல்லுகின்ற மேகத்தைத் துஷ்டவகக் கடுப்பைக்
கொல்லுகின்ற நீரிழிவைக் கொல்லுங்கா-ணல்லாயின்
பாலும் விழுதும் பழமும்விதையும் பூவு
மேலு மிலையுமென விள்.

(இ-ள்.) ஆலமரத்தின் பால் விழுது பழம் விதை பூ பட்டை இலை இவைகள் மேகவயிற்றுக்கடுப்பு மேகநீர் இவைகளை நீக்கும். 387

Digitized By Roja Muthiah Research Library

இதுவுமது

வடமரவீழ் பல்லிறுக்கு மாமேகம் போக்கு
மடர்கொழுந் திரத்தப் போக்காற்றும்-படரதிலாம்
புல்லுருவி யென்றெய்திற் பொல்லா விடபாக
வல்லுருவி யுண்மை மதி.

(இ-ள்.) ஆலமரத்தின் விழுது தந்தங்களை யிறுகச்செய்யும். பிரமேகத்தை நீக்கும். கொழுந்து ரத்தாதி சாரத்தைவிலக்கும். இந்தமரத்தில் முளைத்த புல்லுருவியால் விஷபாகரோகம் நீங்கும். 388

வில்வமரத்தின் சமூலகுணம்

பல்லவம் பூபிஞ்சின் பழமியாவும் முறையே
வல்லவம் மேகம் மந்தமாகுன் மஞ்-செல்லுகின்ற
நோக்கமருள் விந்துநட்ட நாறுமடுத் தவர்கட்
காக்கமருள் வில்லுவத்தி லாம்.

(இ-ள்.) வில்வமரத்தின் தளிர் சலமேகத்தையும் பூ மந்தத்தையும் பிஞ்சு குன்மத்தையும் பழம் கண்ணிருளையும் பிசின் விந்துநஷ்டத்தையும் நீக்கும். 389

பூவரசமரத்தின் சமூலகுணம்

நூறுண்டு சென்றதொரு நூண்பூ வரசம்வேர்
தூறுண்ட குஷ்டைத் தொலைக்குங்காண்-வீறிப்
பழுத்தயிலை விதைமேற் பட்டை யிவைகண்டாற்
புழுத்தபுண் விரோசனமும் போம்.

இதுவுமது

குட்டங் கடிசூலை கொல்லும் விஷபாகந்
துட்ட மகோதரமுஞ் சோபையொடு-கிட்டிமெய்யிற்
றுவுகரப் பான்கிரந்தி தண்மேகம் போக்கிவிடும்
பூவரசங் காய்ப்பட்டைப் பூ.

(இ-ள்.) நூறுவருடத்திய பூவரசம்வேர் நாட்பட்ட குஷ்டத்தை நீக்கும், பழுப்பிலை விதை பூ பட்டைகாய் இவைகள் கிருமி விரணம் பேதி பெருவியாதி காணுக்கடி குத்தல் விடபாகம் பெருவயிறு வீக்கம் கரப்பான் சிரங்கு சலப்பிரமேகம் இவைகளைப்போக்கும். 390

இலந்தைமரத்தின்சமூல குணம்

வேருக் காயாசம் விலகும் பசியுண்டாஞ்
சீரொத் திடுமிலைக்குச் சீழ்மூலஞ்-சோரிவிழல்

Digitized By Roja Muthiah Research Library

வேவெரிச் சலுங்கடுப்பு மேகபித்த மும்போகுந்
தாவும் விழியா யிலந்தை.

(இ-ள்.) காதுகளைத்தாவுஞ் சேல்கண்ணுளே! இலந்தைமரவேருக்கு அயர்ச்சி நீங்கும். ஜடராக்கினியுண்டாகும். இலைக்கீழ்மூலமும் ரத்தாதிசாரம் தேக எரிச்சல் வயிற்றுக்கடுப்பு பித்தமேகம் நீங்கும். ()

காட்டிலந்தை மரத்தின் சமூலகுணம்

விறகுணுமெண் ணெய்க்கனலா மெய்யெரிவு நீக்குஞ்
சிறியவிலைக் குக்கடுப்புத் தீரும்-முறிக்கு
அழைத்திடு பித்தும்போ மதன்கனி யடைக்குத்
தழைத் திடுமிக்காட்டி விலந்தை.

(இ-ள்.) காட்டிலந்தைமரம் நித்தியங் குடிக்கின்ற குளிர்ச்சி எண்ணெய் காய்ச்சுதற்கு விறகாகும். இலைக்கு தேகஎரிவும் கொழுந்துக்கு வயிற்றுக்கடுப்பும் பழத்தின் அடைக்குப் பித்தமும் நீங்கும். 392

நறுவிலிமரத்தின் சமூலகுணம்

நறுவிலி யிலைக்கிரத்த நாசமவ் வேர்க்கு
மறுவி லெலும்புருக்கி மாறு-நறுவிலியின்
றன்பழ மிரத்தபித்தஞ் சார்மேக முந்தீர்க்கு
மின்புர யாவர்க்கு மிசை.

(இ-ள்.) நறுவிலியிலைக்கு மூலரத்தமும் வேருக்கு அஸ்திசிராவமும் பழம் ரத்தபித்தத்தையும் பிரமேகத்தையும் நீக்கும். 393

நுணாமரத்தின் சமூலகுணம்

பட்டை கரப்பனெடு பாரச் சிலேஷ்மசுர
மொட்டிநின்ற புண்கிரந்தி யோட்டுங்காண்-மட்டலரை
யேந்து நுணவி னிலைமாந்தந் தீர்த்துநல்ல
காந்தித்ரு மேகமடுங் காண்.

(இ-ள்.) நுணாப்பட்டை கரப்பான் கபச்சுரம் புண் கிரந்தி இவைகளையும், இலை மந்தம் மேகம் இதுகளையும் விலக்கும் ஒளியைத்தரும்.

முருங்கைமரத்தின் சமூலகுணம்

பிஞ்சாற் றிரிதோஷம் பெரும் பூவாற்போக
மிஞ்சுவிழிக்குக் குளிர்ச்சியுஞ் சேரும்-பிஞ்சிலைவெப்
பாற்றுந்தோ நஞ்சறுக்கு மவ்வேர்வாதச் சினத்தை
மாற்று முருங்கை மரம்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.): முருங்கையின் சிறிய பிஞ்சால் திரிதோஷம் நீங்கும். பூவினால் புணர்ச்சியில் வன்மையும் கண்ணுக்கு குளிர்ச்சியும் உண்டாம் இலை சுரத்தையும் பட்டைவிஷத்தையும் வேர்வாதகோபத்தையும் நீக்கும். ()

காட்டுமுருங்கைமரத்தின் சமூலகுணம்

தின்றூற் கசப்பாகுந் தீயாங்கொடு விஷத்தைக்
கொன்றுவிடுங் கட்குங் குளிர்ச்சிதரு-மென்றுமைய
மோட்டும் வேர்பூவிலைகா யுற்றபிசினும் பிஞ்சுங்
காட்டுகைப் புளமுருங்கை காண்.

(இ-ள்.) கைப்புள்ள காட்டுமுருங்கைவேர் மகாவிஷத்தை நீக்கும் பூ கண்ணுக்குக் குளிர்ச்சிதரும் இலை காய் பிசின் பிஞ்சி என்னுமிவைகள் சிலேஷ்மரோகங்களை நீக்குமென்க. 396

பசுமுன்னைமரத்தின் சமூலகுணம்

முன்னைவேர் வாதமுதி ரோப்பந் தான்போக்கு
மன்ன மிறக்கு மதனிலைதான்-சொன்ன
வியல்வாத மெண்பதையு மில்லையெனச் செய்யு
கயல்பொருவும் கண்ணுய் கருது.

(இ-ள்.) மச்சத்தைபொருதுங் கண்களையுடைய பெண்ணே! பசுமுன்னைவேர் வாதஇத்மாரோகத்தை நீக்கும் இலை உணவைச் செலுத்துவதுந்தவிர 80-வாதரோகத்தையும் விலக்கும். 397

மாதுளைமரத்தின் சமூலகுணம்

மாதுளைவேர் பிஞ்சிவைக்கு வாந்தியதி சாரம்போந்
தாதுவுமா மக்கனிக்குத் தாகம்போஞ்-சூதைநிகர்
வன்னமுலை யாயிலைகாய் மாமலர் களுக்குமுனஞ்
சொன்னவை யெலாம்போகுஞ் சொல்.

(இ-ள்.) வன்னமுலைகளுடைய மாதே! மாதுளைவேர் பிஞ்சு இவைகட்கு வமனமும் அதிசாரமும் நீங்கும். அதன்கனி உண்டால் தாகம் போம் வீரியவிர்த்தியுமுண்டாக்கும் இலைகாய்மலர் இவைகளுக்கு முற்கூறிய ரோகங்களெல்லாம் தீருமென்க. 398

உசிலமரத்தின் சமூலகுணம்-இதைச்சீக்கிரான் என்பர்

அளுமந்த நெய்ச்சிக் கழன்மேக நீங்குநிதங்
கொள்ளு தயிலக்கறைக்கு கொள்விறகாம்-விள்ளுமதி
லோதியடை வானினமென் ருென்றுகுழலே கவிகை
யாதி யடைபிசின் கட்டை.

(இ-ள்.) உசிலமரத்தின் வேர்ப்பட்டை அள்ளுமந்தத்தையும், இலையின்றாள் எண்ணெய்ச்சிக்கையும், பிசின்பித்தமேகத்தையும் நீக்கும் கட்டை பிரதிதினமும் குடிக்கின்ற எண்ணெய் காச்சுதற்கு விறகாகும் கலிகை-உசிலமரம். 399

தாளிப்பனையின் சமூலகுணம்-இதுவே கூந்தற்பனை

எழுத்திற் கிடமா யிருக்கு நெடுங்காலம்
வழுத்தில் தன்மாமை மடலாற்-கழுத்திலுறுஞ்
சோறு மலமிருக்குந் தூறுபாளைப் பிழியா
மூறும் உடலுக்கிந்தாளிக் கோர்.

(இ-ள்.) தாளிப்பனையின் மழையாகிய ஓலை யெழுத்திற்கிடமாக நீடித்திருக்கும். இதன் சோறு மலங்கட்டும் பிழி என்கிற கள்ளு மாமிசத்தை வளர்ப்பிக்குமென்க. 400

தாழைமரத்தின் சமூலகுணம்

மடிச்சோற்றூன் மங்கையர்க்கு மாதாந்த பூப்பாம்
வெடிச்சபூ நற்பசி விளைக்குந்-தடிச்சமூலை
சுக்கிலத்தை நெய்யைத் துலக்குவிக்குஞ் சோபையெனு
மக்குலத்தை நீக்கு மறி.

(இ-ள்.) தாழைச்சோற்றினல் மாதர்க்குச்சோணிதம் விகுணமின்றியுண்டாம் பூ தீபாக்கினியைத்தரும் விழுது விந்துவையும் ரத்தத்தையும் பிரகாசப்படுத்தும், சோபாரோகக்கூட்டங்களை நீக்கும் மடி-தாழை. 401

வாழைமரத்தின் சமூலகுணம்

நற்கதலிக் கந்தமன ஞரார்தண் டோகுடலிற்
சிக்குமயிர் தோனஞ்சுந் தீர்த்திடுங்காண்-தொக்குறுபூ
மேகமொழிக்கும் பிஞ்சால் வெங்கடுப் போகுங்காயாற்
றேக முழுதுங்காலாந் தேர்.

(இ-ள்.) கிழங்கிற்குடுள்ள நறும் வாழைத்தண்டு குடலிற் சிக்கிய ரோமம் தோல்விஷம் இவைகளை விடுவிக்கும் பூ பிரமேகம் நீக்கும் பிஞ்சினல் மூலக்கடுப்புத்தீரும் காயினல் உடல்முழுதும் வாயுவாம். 402

நாட்வோழை, கருவாழை இவைகளின் சமூலகுணம்

நாட்டுக் கதலியது நாளுந் துவர்ப்பதனற்
றீட்டுபித்த மையஞ் சேருங்காண்-நீட்டுகரு
வாழை திரிதோஷ மாற்று மதன்கிழங்கா
லாழுஞ் சுரம்விருத்தி யாம்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) துவர்ப்புள்ள நாட்டுவாழையினால் பயித்தியகபதோஷங்கள் அதிகரிக்கும். கருவாழை வாதாதி மூன்றுதோஷங்களையும் நீக்கும். இதன் கிழங்கினால் அடங்கியசுரமும் விருத்தியாகுமென்க. 403

செடியின் சமூலவகை

ஆவாரை பஞ்சாங்கத்தின் குணம்

மேகத்தினாலே விளைந்த சலம் வெட்டையன
லாகத்தின் பண்ணோ யருங்கிரணி-போகத்தால்
ஆவாரைப் பஞ்சகங்கொ ளஸ்திசுரந் தாகமும்போ
மைவாரைக் கண்மட மாதே.

(இ-ள்.) ஐயரிபடர்ந்த கண்களையுடைய பெண்ணே! ஆவாரைச் செடியின்வேர் இலை பூ காயென்னும் ஐவகை அங்கங்களால் பிரமேக மூத்திரம் வெள்ளை உட்சூடுவிரணம் வாதகிராணி அஸ்திதாது கதசுரம் தாகம் இவைபோகுமென்க. 404

சங்கஞ்செடியின் சமூலகுணம்

வீக்கங் கரப்பான் விதாகக் கிரந்திகுன்ம
மூக்குமிகு சூலைவாய் வோடுபித்தந்-தாக்குவிஷம்
வீறுமோ கண்டுலங்கும் வீசுபசி ரத்தமுண்டாங்
கூறுசங்கு வேரிலை கட்டு.

(இ-ள்.) முட்சங்கின்வேருக்கும் இலைக்கும் சோகை கரப்பான் விதாகம் விரணம் குன்மம் கீல்வீக்கம் வாதகோபம் பித்தநோய் பலநஞ்சு யிவைவிலகும். கண்துலக்கமும் மிகுபசியும் ரத்தவிருத்தியும் ஆம். ()

கருப்புப்பூலாஞ்செடியின் சமூலகுணம்

காட்டமதில் வீரியமாங் காணவிலை மூலரத்த
வோட்ட மறிக்கு முதிருமுளை-க்-கூட்டமெழச்
சித்தம்வைக்கி லவ்வண்ணஞ் செய்யுங் கருங்கனிதா
னைத்தமுற்ற பூலாவி லாம்.

(இ-ள்.) காட்டிலுள்ள கருப்புப்பூலாங் குச்சியினாற் பற்றுலக்கில் வீரியவிருத்திபுண்டாம். இலை மூலரத்தப்பெருக்கைத் தடுக்கும். பழய ரோமங்களை யுதிரவொட்டாமற் செய்யும், அத்தம்-காடு. 406

கண்டங்கத்திரியின் குணம்

வேரிலைபூ காய்பழமவ் வித்துமேற் பட்டையுமிவ்
வூரிலிருக்க வுடற் கைப்பும்-சீராய்

LIBRARY SERVICE INDIA
KOTTAIYUR-623106.
TAMILNADU. INDIA.

Digitized By Roja Muthiah Research Library

வரும் பீநசகயஞ் சுவாசமுந் தங்காவே
யருங் கண்டங்கத்திரியுள் ஆய்.

(இ-ள்.) கண்டங்கத்திரியின்வேர் இலை பூ காய் பழம் விதை பட்டை இவைகளால் நீரேற்றம் சலப்பீநசம் ஈளைசுவாசம் இவைபோம். 407

மணத்தக்காளியின் சமூலகுணம்

காய்க்குக் கபந்தீருங் காரிகையே யவ்விலைக்கு
வாய்க்கிரந்தி வேக்காடு மாறுங்காண்-தீய்க்கு
ஞுணக்கடு வற்றலுறு பிணியோர்க் காகும்
மணத்தக் காளிக்குள்ள வாறு.

(இ-ள்.) மணத்தக் காளிக்காய்க்கு சிலேஷ்ம ரோகமும் இலைக்கு நாப்புண்ணும் வேக்காடும் நீங்கும். வற்றல் நோயாளிகளுக்காகும். 408

நாயுருவின் சமூலகுணம் இதுவே அபமார்க்கி-விருத்தம்

மலிகாரங் கைப்புள்ள அபமார்க்கியின் வேரால் வசியமுண்டா
மிலைமூல வுதிரமந்தம் பேதிகபம் வியர்வுதந்தி யிறங்குமேகம்
மலையேறும் படிபுரியு முள்ளரிசி பசிமாற்று மதன்சமூலம்
பலமாதர்க் குள்ளமுக்கை நீக்கும்வங்கசிந்தூரம் பண்ணுமாதோ.

(இ-ள்.) கார்ப்புங் கைப்புமுள்ள நாயுருவியின்வேரால் முகவசீகரமாம். இலைரத்தமூலம் அதிசாரம் கபநோய் வியர்வை தந்தி பிரமேகம் இவைகளை விலக்கும். அரிசி என்கிறவிதை பசியைநீக்கும். சமூலசாம்பல் பிரசவித்தமாதர்க்கு உதிரச்சிக்கலை ஒழிக்குமென்க. 409

சேங்நாயுருவின் குணம்-வேண்பா

ஓதமுறு சோபை யுயர்பாண்டுவைப் போக்குந்
தீதுறுகா மாலைநோய் தீர்க்குமினூர்-சூதகநீர்
பொய்ப்புறு காலத்ததனைப் பொங்குவிக்குங் காரமொடு
கைப்புறு செந்நாயுருவி காண்.

(இ-ள்.) கார்ப்புங்கைப்புமுள்ள செந்நாயுருவியின் சமூலம் ஏறு வீக்கம் பாண்டு காமாலை இவைகளை நீக்கும். மாதர்களின் ருதுகால சோணிதத்தை வழக்கப்படி யுண்டாக்கும். 410

கொடியின் சமூலவகை

தூதுளையின் சமூலகுணம்-விருத்தம்

தூதுபத்திரியூண் சுவையாக்கும்பூ
தாதுவைத்தழைப் பித்திடுங் காயது

Digitized By Roja Muthiah Research Library

வாதபித்த கபத்தையு மாற்றும்வே
ரோதும்வல்லி பன்னோயு மொழிக்குமே.

(இ-ள்.) தூதுவளையிலை உண்டிக்குச் சுவையைத்தரும். பூ சுக்கில தாதுவை விருத்திசெய்யும். காய் திரிதோஷங்களை நீக்கும். வேருங் கொடியும் சுவாசமுதலிய சிலேஷ்மரோகங்களைப் போக்கும். 411

சுரையின் சமூலகுணம்

சுரையிலையோ சோபையொடு தோன்றுநீர் கட்டைத்
தரையிலையோ வைக்காமற் சண்ணுஞ்-சுரையினது
தண்டோ பித்தத்தைத் தரிக்கவொட் டாதடிக்குங்
கண்டோ ருரைப்பரிதைக் காண்.

(இ-ள்.) சுரையிலையானது வீக்கத்தையும் மூத்திரச்சிக்கலையும் விலக்கும். கொடி பயித்திய ரோகங்களைப் போக்குமென்க. 412

நாளையின் சமூலகுணம்

நாளையிலை தன்குணங்கே ளரியர் வயற்றி
லூருளிரத் தக்குன்ம மொழிக்கும்-நாளைக்
கிழங்குக்கு மேகமொடு கீறு கரப்பான்
புழுங்கு புண்மூலமிவை போம்.

(இ-ள்.) நாளையிலை மாதர்களின் ரத்தக்குன்மக்கட்டியைப் போக்கும். கிழங்குக்கு பிரமேகம் கரப்பான் அளிவிரணம் மூலமிவைபோம்.

வெண்குன்றியின் சமூலகுணம்

வீரியத்தை யுண்டாக்கும் வெண்குன்றி வித்ததன்வேர்
பாரிய தாகத்தைப் பறக்கடிக்குஞ்-சீரியவோர்
சிற்றிலையி னற்சுளுக்குத் தீருங்கொடிகாயாற்
சுற்றிலைப்பேய்க் கூட்டமெனச் சொல்.

(இ-ள்) வெண்குன்றிவிதை சுக்கிலத்தை விருத்திக்கும். வேர் தாகத்தையும் இலை சுளுக்கையும் காய்கொடி பைசாசங்களையும் நீக்கும்.

மரத்தின் கிழங்கு வகை

பணங்கிழங்கு ஒடிகிழங்கு இவைகளின் குணம்

பனங்கிழங்கா லத்திவெப்பும் பன்மேக மும்போ
மினுங்குளிர்ச்சி யோடழகு மெய்தூந்-தினநமையும்
புண்ணுங் கரப்பானும் பூரிக்கு மெய்யெலா
நண்ணும் ஒடிகிழங்கி னல்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) பனங்கிழங்கால் அஸ்திச்சூடும் பித்தமேக முதலிய மேகங்களும்போம். குளிர்ச்சியும் வனப்பும் உண்டாம். ஒடிகிழங்குகளுக்கு களைச்சலும் விரணமும் கரப்பானும் வன்மையும் உண்டாம்.

நிலப்பனங்கிழங்கின் குணம்

மேகவனற் றணியும் வெண்குஷ்டந் தான்விலகும்
போக மிகவுமுறும் பொற்கொடியே-போகாத
சூலமே கங்களொடு துன்னுகரும் புள்ளியும்போஞ்
சால நிலப்பனைக்குத் தான்.

(இ-ள்.) நிலப்பனங்கிழங்கினால் மேகமூத்திரவெப்பமும் வெள்ளைகுஷ்டமும் விலாக்குத்தலும் ஒழுக்குப்பிரமேகமும் நீலாஞ்சனரோகமும்போம். புணர்ச்சியில் இச்சை உண்டாகும். 416

மரவள்ளிக்கிழங்கின் குணம்

பித்தங் கலந்த பெருவாயு வைக்கூவு
மெத்தஅனல் மந்தத்தை மேலெழுப்புஞ்-சுத்த
இரவள்ளிக் கொண்டகுழ லேந்திழையே யிந்த
மரவள்ளிக் கந்தமென வை.

(இ-ள்.) இருண்ட கூந்தலையுடையாளே! மரவள்ளிக் கிழங்குபயித்தியவாத தோந்தத்தையும் அக்கினிமாந்தத்தையும் உண்டாக்கும். 417

செடியின் கிழங்கு வகை

மெருகன்கிழங்கின் குணம்

மெருகன் கிழங்கதுதான் மேகத்தைப் போக்குந்
தருவு குன்மமூலந் துடைக்கும்-பெருமீளை
யஸ்திசுரம் ஐயறுக்கு மங்கங் குளிர்விக்கு
மத்திமூலை மாதே யறி.

(இ-ள்.) மெருகன்கிழங்கு கட்டிப்பிரமேகம் வயிற்றுநோய் கபரோகம் அஸ்திதாது கதசுரம் சிலேஷ்மாதிக்கம் ஆகிய இவைகளைப் போக்கும். உடலுக்குக் குளிர்ச்சியை யுண்டாக்குமென்க. 418

அமுக்கிராக்கிழங்கின் குணம்-இதுவே அசுவகேந்தி

கொஞ்சந் துவர்ப்பாங் கொடியகயஞ் சூலையரி
மிஞ்சுகரப் பான்பாண்டு வெப்பதப்பு-விஞ்சி

Digitized By Roja Muthiah Research Library

மூசிவுரு தோஷமும்போ மோகமன லுண்டா
மசுவ கந்திக்கென் றறி.

(இ-ள்.) கொஞ்சந் துவர்ப்புள்ள அமுக்கிராக் கிழங்கினால் க்ஷயம் வாதசூலை வாதக்கரப்பான் பாண்டு சுரம் வீக்கம் சலதோஷம் இவை கள்போகும். மாதர்மேலிச்சையும் பசியும் உண்டாகும். 419

பேதிக்கிழங்கின் குணம்-இதுவே ரேவல்சின்னி

பேதிதனை யுண்டாக்கும் பித்தந் தனையெழுப்புந்
தோதக் குடல்தனைச் சுத்திசெய்யு-மோதியகால்
பேதிக்குந் தாதுவைப் பெருக்கிவிடு மெப்போதும்
பேதிக் கிழங்கதனைப் பேசு.

(இ-ள்.) பேதிக்கிழங்கு விரோசனம் பித்தாதிக்கம் குடற்சுத்தி வீரியவிர்த்தி இவைகளை யுண்டாக்கும். வாதகோபத்தை யடைவிக்கும்.

சேவகனார் கிழங்கின் குணம்

கபரோகந் தன்னைக் கடலில் விழச்செய்யு
மபமிருத்துவாம் விஷத்தை மாற்று-மிபமுலவும்
காவக நாடாக் கருங்குயிலே கண்டுரைத்த
சேவகனார் கிழங்க தே.

(இ - ள்.) சோலையிற் சஞ்சரிக்காத குயிலனையாய்! சேவகனார் கிழங்கு சிலேஷ்ம தோஷத்தையும் காலமில்லாமற் கொல்லுகின்ற விஷத்தையும் போக்கும் என்க. 421

பூமிச்சருக்கரைக் கிழங்கின் குணம்

மேகமுறு முள்ளுருக்கு வெட்டை யனற்றணியும்
போகுமே மூலம் புகலக்கேள்-பாகுமொழிப்
பொன்னனையாய் பூமிச் சருக்கரைக் கிழங்குக்கு
வன்னவுடல் பருக்கும் வாழ்த்து.

(இ - ள்.) பாகொத்த மொழியையும் திருமாதனைய அழகையு முடைய பெண்ணே! பூமிச்சருக்கரைக் கிழங்குக்கு பிரமேகம் அதிசுஷ்கம் வெள்ளைவீழல் சுரம்மூலம் ஆகியவைபோம். தேகம்பூரிக்கும் என்க.

முள்ளங்கிக் கிழங்கின் குணம்

வாதங் கரப்பான் வயிற்றெரிவு சூலைகுடல்
வாதங் காசம்ஐயம் வன்றலைநோய்-மோதுநீர்க்
கோவைபன்னோய் பல்சிலந்தி குன்மமிரைப் புக்கடுப்புஞ்
சாவு முள்ளங்கிக்கந்தத் தால்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) முள்ளங்கிக்கிழங்கால் வாதப்பிணி கரப்பான் வயிற்றிலெ ரிச்சல் குத்தல் குடல்விருத்திநோய் இருமல் கபம் தலைவலி நீரேற்றம் பல்நோய் பல்சிலந்தி குன்மம் சுவாசம் மூலக்கடுப்புகள்போகும் என்க.

மஞ்சளின் குணம்

பொன்னிற மாம்மேனி புலானாற்ற மும்போகும்
மன்னு புருஷன் வசியமாம்-பின்னியெழும்
வாந்திபித்த தோஷமையம் வாதம்போந் தீபனமாங்
கூர்ந்த நறுமஞ்ச டனக்கு.

இதுவுமது

தலைவலி நீரேற்றஞ் சளையாத மேக
முளைவுதரு பீநசத்தி னூடே-வலிசுரப்பு
விஞ்சு கடிவிஷமும் வீறுவிர ணங்களும்போ
மஞ்சட் கிழங்குக்கு மால்.

(இ-ள்.) உடலைப் பொற்சாயலாக்கிப் புலால் நாற்றத்தை நீக்கு கின்ற மஞ்சளினால் புருஷவசியமும் பசியுமுண்டாம். வம்மைபித்த கப வாத கோபங்கள் தலைவலி சலதோஷம் பிரமேகம் நாசிகாரோகம் ஐவ கைவலி வீக்கம் வண்டுகடி விஷம் பெருவிரணம் இவைபோம். 424

மரமஞ்சளின் குணம்

அழன்ற கணமூல மருசி யுடனே
யுழன்ற கணச்சுரமு மோடுஞ்-சுழன்றுள்ளே
வீறுசுர முந்தணியும் வீசுமர மஞ்சளுக்குத்
தேறு மொழியனமே செப்பு.

(இ-ள்.) தெள்ளிய வசனத்தையுடைய பெண்ணே! மரமஞ்சளுக்கு முக்குகணம் மூலநோய் அரோசிகம் கணச்சுரம் உட்சுரம் ஆகியவைகள் விலகும் என்க. 425

கஸ்தூரிமஞ்சளின் குணம்

புண்ணுங் கரப்பானும் போகாக் கிருமிகளும்
நண்ணுமங் தாக்கினியு நாசமாம்-வண்மலர்த்த
கோத்தே றளகமின்னே சுக்கிலமும் புந்தியுமாங்
கஸ்தூரி மஞ்சளுக்குக் காண்.

(இ-ள்.) பூங்கொத்தை யணிந்த மின்போல்பவளே! கஸ்தூரி மஞ் சளுக்கு பெருவிரணம் கரப்பான் கிருமிரோகம் அக்கினிமந்தம் இவை போம். வீரியமும் அறிவும் விருத்தியாம். 426

Digitized By Roja Muthiah Research Library

இஞ்சியின் குணம்

இஞ்சி யதனுக் கிருமலைய மோக்காளம்
வஞ்சிக்குஞ் சந்நிசுரம் வன்பேதி-விஞ்சுகின்ற
சூலையறும் வாதம்போந் துண்டாத தீபனமாம்
வேலையுறுங் கண்ணாய் விளம்பு.

(இ-ள்.) கடலை நிகர்த்த கண்களையுடைய மாதே! இஞ்சிக்கு காசம் கபம் வெள்ளோக்காளம் சந்நிபாதசுரம் அதிசாரம் வாதசூலை வாத கோபம் இவைபோம் பசியுண்டாம். 427

காறுகருணைக் கிழங்கின் குணம்

கரப்பான் சிரங்குசொறி காணுக் கிரந்தி
யுரப்பாக்கு மூலநோ யோட்டும்-நிரைப்பான
மந்தமொடு கோழைதரு மாறுத்தின வளிக்கு
மந்தமிகுங் காறுகரு ணை.

(இ-ள்.) காறுகின்ற கருணைக்கிழங்கு கரப்பான் பொடிச்சிரங்கு சொறி உட்கிரந்தி மந்தாக்கினி கபக்கோழை நமைச்சல் ஆகியவைகளை உண்டாக்கும். மூலரோகத்தை நீக்கும். 428

காருகருணைக் கிழங்கின் குணம்

ஞாலமதிர் கபநோய் நாடாது வாதமறு
மூலமுளை யிரத்த முன்பொழியு-மோலமிட்டு
மாறாக் கனல்மந்த மாறுமதி தீபனமாங்
காருக் கருணைதனைக் கண்டு.

(இ-ள்.) காருக்கருணைக் கிழங்கினால் சிலேத்மரோகம் வாதநோய் ரத்தமூலமுளை அக்கினிமந்தம் இவை நீங்கும் பசியுண்டாம். 429

காட்டுக் கருணைக் கிழங்கின் குணம்

மேக மணுகாது வெகுதீ பனமாகுந்
தேகமதில் மூலமுளை சேராவே-போகாச்
சுரதோஷம் போங்கரப்பான் றேன்றும் வனத்திற்
பரவு கருணைக்கிழங்காற் பார்.

(இ-ள்.) காட்டுக்கருணைக் கிழங்குக்கு வாதம் பிரமேகம் முளை மூலமும் சுரதோஷமும்போம். மிகுபசியும் கரப்பானுமுண்டாம். 430

சேம்புக் கிழங்கின் குணம்

வாதகபத்தை யுள்ளே வைத்திருக்குந் தின்றக்காற்
கோதிலாத் தொண்டை தனில்கோழை-மாதரசே

Digitized By Roja Muthiah Research Library

யுண்மருந்தி னற்குணம தோடுஞ்சேம்புக் கிழங்கைத்
தண்மேக சாந்தியென்பர் தாம்.

(இ-ள்.) மாதர்கள் நாயகமே! வாதகப தோஷத்தையுடைய சேம்புக்கிழங்கைத் தின்றால் தொண்டையில் கோழைகட்டும் நன்மருந்தின் குணமுங்கெடும். இது கபத்திரவியமாகையால் மேகசாந்தி என்பர். ()

பிரப்பங்கிழங்கின் குணம்

தந்தரோ கத்தைத் தணியாத வாதத்தை
யுந்துசூலைப் பிடிப்பை யோட்டுங்காண்-வந்து
கரப்புந் திறப்பு மெனக்காட்டு நகைமாதே
பிரப்பங் கிழங்கதனைப் பேண்.

(இ-ள்.) கரப்புந் திறப்புமெனக் காண்பிக்கும் பற்களையுடைய மாதே! பிரப்பங்கிழங்கு தந்தமூலரோகம் வாதகோபம் கீல்பிடிப்பு சிலேத்மதோஷம் ஆகிய இவைகளை நீக்கும். 432

சாறடைக்கிழங்கின் குணம்

சீதஞ் சலதோஷந் தேமல் தழும்புகுன்மம்
வாதஞ் சிறுசிரங்கு வன்மேக-மோதரிய
காசமுத னேயெல்லாங் கான்சா றடைக்கிழங்கால்
நாசமுறு மென்றே நவில்.

(இ-ள்.) காட்டுச்சாறடைக்கிழங்கால் சீதளம் நீரேற்றம் தேமல் தடிப்பு குன்மம் வாதவலி சிறுசிரங்கு பிரமேகம் இருமல் இவை தீரும்.

கோவைக்கிழங்கின் குணம்

முத்தோஷஞ் சூலைபித்த முடுகுஷ்டஞ் சிக்குவைநோ
யெத்து சுவாசங் கபமினிப்பு-பித்தனையுங்
கூட்டோ டகற்றுங் குளிர்ச்சியொடு காரத்தைக்
காட்டிய கோவைக்கிழங்கு காண்.

(இ-ள்.) சீதளத்தையும் வாதத்தையும் உடைய கோவைக்கிழங்கு திரிதோஷம் சந்துகளின் குத்தல் பித்தகோபம் சருமதல குஷ்டம் ஜிக்வாரோகம் இரைப்பு கோழை மதுப்பிரமேகம் இவைகளை நீக்கும்.

கோல்லன் கோவைக்கிழங்கின் குணம்

துட்டவிஷம் பாண்டுவெப்ப சூலைவாதங் கிரந்தி
குட்ட மரிப்பக் கொண்டகுநோய்-கெட்டகண்ட
மாலைபோங் கொல்லன் கோவைக்கிழங்கால் முத்தோஷ
வேலை போம்பாரில் விளம்பு.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) கொல்லன்கோவைக் கிழங்கால் மகாவிஷம் தேகவெளுப்பு சுரம் வாதசூலை சிரங்கு பெருவியாதி நமைச்சல் வக்கிரநேத்திரம் குடல்வலி கண்டமாலை திரிதோஷம் ஆகிய இவைகள் நீங்கும். ()

சீந்திற்கிழங்கின் குணம்-இதுவே அமுர்தக்கோடி

சீந்திற் கிழங்கருந்த தீபனமா மேகவகை
போந்த வுதிரபித்தம் பொங்குசுர-மாந்த
மதிசாரம் வெய்யகண மாம்பல நோயோடே
கதிவிஷமுங் கெட்டுவிடுங் காண்.

(இ-ள்.) சீந்திற் கிழங்கினால் சர்வமேகம் ரத்தபித்தரோகம் ருட்சை மாந்தசுரம் பேதி பித்தகணம் ஆமிலபித்தரோகம் சர்ப்பவிஷம் ஆகிய இவைகள் போகும் ஜடராக்கினியுண்டாகும். 436

பொற்சீந்திற்கிழங்கின் குணம்

பொற்சீந்தி லின்கிழங்கு பொங்கு மதுமேக
மெச்சுகய ரோக மிளைப்புவிஷம்-பச்சையா
யோடிரத்த பித்தமுயர் சுரந்தனைக் களையுந்
தேடரிய மேனிதருஞ் சேர்.

(இ-ள்.) பொற்சீந்திற்கிழங்கானது மதுநீர் க்ஷயம் அதிசுஷ்கம் சர்ப்பவிஷம் ரத்தபித்தம் இவைகளை நீக்கும். காயசித்தி பண்ணும். ()

கருடன்கிழங்கின் குணம்-இதுவே பேய்ச்சீந்தில்

அரையாப்பு வெள்ளை யகலாக் கொறுக்கை
கரையாத கட்டியிவை காட்டிறூர்-வறையிற்
றிருடரெனச் சொல்லும்விஷஞ் சேர்ப்பாம்பு மஞ்சுங்
கருடன் கிழங்கதனைக் கண்டு.

(இ-ள்.) கருடன் கிழங்குக்கு அரையாப்புக்கட்டி வெள்ளை கொறுக்குமாந்தை அற்புதரணம் ஆகிய இவை நீங்கும். சர்ப்பங்கள் நடுங்கும்.

கூகைக்கிழங்கின் குணம்

மேனியிடும் வாய்க்கு மிருதுவா மாக்கியுண்ணத்
தானிருமல் வெப்பதிக தாகமிவை-யேனிருக்கு
மம்பே றிழங்கிழங்கி தியாவர்க்கு மாமணப்பூங்
கொம்பே கூகைக்கிழங்கைக் கூறு.

(இ-ள்.) வாசனைபொருந்திய பூங்கொம்பனையாளே! நீர் நிறைந்துள்ள இளங்கூகைக் கிழங்கைச் சமைத்துண்ணில் தேகபுஷ்டி யுண்டாகும் இருமலும் சுரமும் தாகமும் நீங்கும். 439

Digitized By Roja Muthiah Research Library

புளிநரளைக்கிழங்கின் குணம்

புளிநரளை யின்கிழங்கோ பொன்போலச் செம்பைத்
தெளிவாகச் சுத்தியது செய்யும்-வெளியான
மூலமுளை யறுக்கு முந்துசுவைக் கேதுவுமாங்
கோல மடமயிலே கூறு.

(இ-ள்.) அழகிய மயில்போலுஞ் சாயலையுடையாளே! புளிநரளை கிழங்கு செம்பைத் தங்கம்போற் புனிதமாக்கும் வெளி முளை மூலத்தைப்போக்கும். உணவிற் சுவையைத்தரும். 440

மாகாளிகிழங்கின் குணம்-இதனை மாவலி பருநன்னாரி என்பர்

அனலையதி பித்தத்தை யாற்றும் பசியா
மனலை யெழுப்புங் கபமறுக்கு-மானிலத்தார்
வேகாளத்தைத் தணிக்கு மென்கொடியே காட்டிலுறை
மாகாளிக் கந்தமிது வாம்.

(இ-ள்.) வஞ்சிக்கொடுபோன்ற இடையாளே! மாகாளிக்கிழங்கு உட்சூடு பித்தகோபம் சிலேத்மநோய் வாததோஷம் இவைகளை நீக்கும். ஜடராக்கினியை வளர்ப்பிக்கும். 441

தண்ணீர்விட்டான் கிழங்கின் குணம்

நீரிழிவைப் போக்கு நெடுநாட் சுரத்தையெலா
முரைவிடுத் தோஷ வுறுக்குங்காண்-நாரியரே
வெண்ணீர்மெய் சோமனோய் வெட்டை யனற்றணிக்குந்
தண்ணீர் விட்டான்கிழங்கு தான்.

(இ-ள்.) மாதே! தண்ணீர்விட்டான்கிழங்கு வெகுமூத்திரம் புராதனசுரம் சோமரோகம் வெள்ளை உட்சூடு ஆகிய இவைகள் நீக்கும். ()

தாமரைக்கிழங்கின் குணம்

கண்ணுக் கொளிகொடுக்குங் காசபித்தம் போக்கு
மெண்ணுங் குளிர்ச்சிதரு மேந்திழையே-மண்ணுலகிற்
றாமரைப்புண் ணும்போக்குந் தொந்திக் கடுப்பகற்றும்
தாமரைக் கந்தமது தான்.

(இ-ள்.) ஏந்திழையாளே! தாமரைக்கிழங்கு நேத்திர ஒளியையும் குளிர்ச்சியையுந்தரும். பித்தகாசம் மாமிசதாதுவைப்பற்றிய தவளைச்சொறி வயிறுகடுப்பு ஆகிய இவைகளை நீக்கும். தா-தசை, மரை-தவளை.

Digitized By Roja Muthiah Research Library

செவ்வல்லிக் கிழங்கின் குணம்

செம்பைக் களிம்பகற்றிச் சிந்தூர மாக்கிவிடும்
வெம்பு பித்தமேகம் விலக்குங்கா-ணம்புவியி
லல்லிற் கறுத்தகுழ லாரணங்கே நற்சிவப்பா
மல்லிக் கிழங்கென்பது.

(இ-ள்.) இருளினுங்கரிய அளகபாரத்தையுடைய ஆரணங்கே! சிவந்த அல்லிக்கிழங்கு செம்பின்களிம்பை நீக்குவதுந்தவிர அதைச் சிந்தூரமாக்கும் பித்தப்பிரமேகத்தை விலக்கும் என்க. 444

நெய்தற்கிழங்கின் குணம்

கண்ணுங் குளிருமக்கி காணாது காந்துபித்த
மெண்ணுந் தோஷம்மேக மேகுங்காண்-பெண்ணே
வயிற்றுக் கடுப்புரத்த மாறு நெய்தலுக்குப்
பயித்தியம்போம் விந்துறும் பார்.

(இ-ள்.) மாதே! நெய்தற் கிழங்குக்கு அக்கினிப்புண் பித்தயெரிச்சல் திரிதோஷம் பிரமேகம் ரத்தகிராணி பித்தநோய் ஆகிய இவை போம் விழிக்குகுளிர்ச்சியும் சுக்கிலவிருத்தியும் உண்டாகும். 445

செங்கழுநீர்க்கிழங்கின் குணம்

கண்ணுங் குளிர்ந்திருக்குங் காசம்போம் பித்தமறு
மெண்ணரிய மேகமிடையுங் காண்-பெண்ணேகேள்
பொங்கமொடு மாதைப் புணர்ந்தவழ லுந்தணியுஞ்
செங்கழுநீர்க் கிழங்காற் றேர்.

(இ-ள்.) மாதே! நீ கேட்பாயாக; செங்கழுநீர்க் கிழங்கால் இருமல் பித்தநோய் சர்வமேகம் புணர்ச்சியின்வெப்பம் இவைநீங்கும். விழிக்கு குளிர்ச்சியாம். 446

கோட்டிக்கிழங்கின் குணம்

கொட்டிக் கிழங்கு குளிர்ச்சியென்பார் தேமலுடன்
ஒட்டிநிறை மேக மொழிக்குங்காண்-வட்டமுலை
மானே யகக்கடுப்பும் வந்தவழ லுந்தணிக்குந்
தானேயிதை யறிந்து சாற்று.

(இ-ள்.) வட்டமா யடிப்பரந்த தனங்களையுடைய பெண்ணே! கொட்டிக்கிழங்கு தேமல் பிரமேகம் தேகக்கடுப்பு உட்சூடு ஆகிய இவைகளை நீக்கும் இதனைக்குளிர்ச்சி என்பார் என்க. 447

Digitized By Roja Muthiah Research Library

நிலப்பூச்சினிக்கிழங்கின் குணம்

மெய்பிறுகுந் தாதுகளும் வீறுமதி தேகசுகமாம்
கொய்ய வுடலம்பருக்கு நுண்ணறிவாம்-பைய
மலப்பூச லேகு மலர்த்திருவே நல்ல
நிலப்பூசி னிக்கிழங்கு னீ.

(இ-ள்.) மலரில் வசிக்குந் திருவனையாளே! நிலப்பூசினிக் கிழங்கினுல் தளர்ந்ததேகம் இறுகப்படுவதுமன்றி இளைத்த சப்த தாதுக்களுக்குச் செழுமையுஞ் சருமதாதுவிற்கு ஒளிவும் நுட்ப அறிவும் உண்டாகும் மலபந்தம் நீங்கும் என்க. 448

பருங்கிழங்கின் குணம்

பருங்கிழங் கொன்றெய்திற் பறையறவும் வாத
மருங்கனையா தெவ்விடமு மாறுங்-கருங்கலென
வீக்குமடல் வீக்கமொடு மேகப் பிணியுமறு
மாங்குயிலே நாளும் வழுத்து.

(இ-ள்.) மாங்குயிலனைய மாதே! பருங் கிழங்கினுல் வயிற்றில் இரைச்சலைச் செய்கின்ற வாதரோகம் சர்வவிஷம் கபச்சோபை பிரமேகம் இவை நீங்கும் என்க. 449

சின்னிக்கிழங்கின் குணம்

சின்னிக் கிழங்குசிறு சிரங்குபுண் வளர்க்கு
முன்னிலது வூர்பன்றிக் கொவ்வுங்கா-ணன்னமே
மூல மறுக்குமினு மோதிரத்தஞ் சீழ்மாற்றுந்
தால மறியுணிசந் தான்.

(இ-ள்.) அன்னம்போல்பவளே! ஊர்ப்பன்றி மாமிசத்துக்கு ஒப்பாகிய சின்னிக்கிழங்கு பொடிக்கிரந்தியையும் புண்ணையும் விளைக்கும் மூலரோகத்தையும் ரத்தமயகிரகணியையும் நிவர்த்தி செய்யும். 450

பெருவள்ளிக்கிழங்கின் குணம்-இதுவே ஆள்வல்லி

வாதகபம் பித்தமொடு மாமூலம் வாதகுன்ம
மோதுபல நோய்மந்த முண்டாகும்-போதின்
மருவள்ளிக் கொண்டழகின் மாதே யுலகிற்
பெருவள்ளி யின்கிழங்காற் பேசு.

(இ-ள்.) வாசனையையுடைய அளகபாரத்தாளே! பெருவள்ளிக் கிழங்கால் திரிதோஷதொந்தம் வாதமூலம் வாதகுன்மம் முதலிய சில நோய்களும் அக்கினிமந்தமும் இவை உண்டாகும். 451

Digitized By Roja Muthiah Research Library

சிறுவள்ளிக்கிழங்கின் குணம்

மந்தமிகுந் தீபனம்போ மாருக் கரப்பானுஞ்
சிந்தமிகு கபமுஞ் சேருங்காண்-தொந்தமா
மூல முளைவரு முட்டைச் சிறுகிழங்கா
லேலவளக மின்னே யெண்.

(இ-ள்.) மயிர்ச்சாந்தணிந்த குழலாளே! சிறுவள்ளிக் கிழங்கால் மந்தம் கரப்பான் சிலேஷ்மவிருத்தி முளைமூலம் ஆகியவை யுண்டாம் உதராக்கினிகெடும் என்க. 452

காய்வள்ளிக்கிழங்கின் குணம்-இதுவே வெற்றிலைவள்ளி

அக்கினிவெப் பையடக்கு மென்பார் வாதமொடு
தொக்கிலதி புண்சிரங்கைத் தூண்டிவிடும்-மிக்குபசும்
வேயையுடைத் தோளணங்கே வெற்றிலையாம் வள்ளியெனுங்
காயை யுடைவள்ளியது காண்.

(இ-ள்.) பசியமூங்கிலனைய தோள்களையுடையாளே! காய்வள்ளிக் கிழங்கு வாதரோகத்தையும் சருமத்தின்மீது பெரியசிறிய விரணங் களையும் விளைவிக்கும். உஷ்ணசாந்தி யென்பர். 453

சருக்கரைக்கிழங்கின் குணம்

உள்ளிற்கோ ணன்மருந்தை யும்முறிக்குஞ் சர்க்கரையாம்
வள்ளிக் கிழங்கதிக மந்தந்தா-னுள்ளில்முளை
மூலம் விளையுநித மோடிரைச்ச லுண்டாகுங்
கோல வயிறுங் கடுக்குங் கூறு.

(இ - ள்.) அதிமந்தமுள்ள சருக்கரை வள்ளிக் கிழங்கு திவ்ய ஔஷத குணத்தைக் கெடுப்பதுமன்றி மூலமுளையையும் குடலிரச்சலை யும் கிரகணியையும் விளைவிக்கும். 454

புல்லின் கிழங்குவகை

அறுகங்கிழங்கின் குணம்

ஆறு வழலெல்லா மாறுமுத் தோஷமது
வீறு திருக்குநல்ல மேனிதரும்-மாறுக்
கடியமா லங்கலணி காரளக மின்னே
கொடியறுகம் புற்கிழங்கைக் கூறு.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) வாசனைபொருந்திய மலரையணிந்த கரிய கூந்தலாளே! அறுகின் கிழங்கால் தணியாத பற்பல வெப்பமும் திரிதோஷ ரோகங்களும் நீங்கும். சரீரவனப்புண்டாகுமென்க. 455

கோரைக்கிழங்கின் குணம்

சீதசுரந் தீர்க்குஞ் செம்புனற்பித் தம்போக்கும்
வாதசுரந் தணிக்கும் வையகத்தில்-வேதைசெய்ய
வந்தபிணியை யெல்லாம் வாட்டும் முத்தக்காசு
கொந்துலவும் வார்குழலே கூறு.

இதுவுமது

அதிசாரம் பித்தமென்ற ருக மையங்
குதிவாதஞ் சோபக் கொடிய-முதிர்வாந்தி
யாரைத் தொடர்ந்தாலு மவ்வவர்க் கெலாங்குளத்துக்
கோரைக் கிழங்கைக் கொடு.

(இ-ள்.) வாசனைவீசும் நீண்ட கூந்தலாளே! முத்தக்காசு என்கிற கோரைக்கிழங்கு களிர்ச்சுரம் ரத்தபித்தம் வாதசுரம் பேதி பயித்திய தோஷம் பித்ததாகம் கபரோகம் குதிகாலைப்பற்றிய வாயு மூர்ச்சை திரிதோஷவாந்தி ஆகிய இவைகளையும், துன்பத்தைத் தருகின்ற சிற்சில ரோகங்களையும் போக்கும். 456

மருட்கிழங்கின் குணம்

தொண்டைக் கட்டையுந் தொலையு மகோதரமும்
பண்டைப் பல்வீக்கம் பறக்குங்காண்-கெண்டைவிழி
மானே மருட்கிழங்கால் மாறுமூலங்க ளெல்லாந்
தானே பசியெழும்புந் தான்.

(இ-ள்.) மகரநோக்கியே! மருட்கிழங்கால் நெஞ்சைப்பற்றிய கப கட்டு பெருவயிறு பலவிதசோகை மூலமிவைபோம். தீபாக்கினி உண்டாகும். 457

வெங்காயத்தின் குணம்

வெப்ப மூலங்கிரந்தி வீறிரத்த பித்தமுடன்
செப்புநா அக்கரந் தீராத்தாகம்-வெப்புக்
கடுப்பறு மந்தஞ்சந்நி காசம் வயிற்றுப்பல்
தடிப்பேறும் வெங்காயத் தால்.

(இ-ள்.) வெங்காயத்தால் தேகஉஷ்ணம் மூலம் சிரங்கு ரத்த நோய் பித்தம் கண்டகம் தாகம் உஷ்ணபேதி இவை நீங்கும். அக்கினி மாந்தம் சன்னிபாதம் இருமல் வயிற்றுப்பிசம் இவை விருத்தியாம். 458

நரிவெங்காயத்தின் குணம்-இதுவே காட்டுள்ளி

நஞ்சோடு சீதகபம் நாடா திரைப்புமறும்
பஞ்சாகமூல பகந்தரம் போம்-பஞ்சணைசேர்
வீட்டுள் ளிருக்கு விநோத மடமயிலே
காட்டுள்ளி யின்கிழங்கைக் கண்டு.

(இ-ள்.) பஞ்சணை பொருந்திய வீட்டிற் சஞ்சரிக்கும் விநோத மயில் போல்பவளே! நரிவெங்காயத்தால் சர்ப்பவிஷம் சீதளத்தா லுண்டாகிய கோழை சுவாசம் மூலகபரோகம் ஆகிய இவைபோம். 459

கிட்டிக்கிழங்கின் குணம்

கிட்டிக் கிழங்கால் கிளர்தீ பனமுண்டா
மெட்டிக் கிழமேக மேகுங்காண்-துட்டஞ்செய்
பித்த சமனமுமாம் பேசில்கப நாசமுமாம்
நிர்த்த மயிலே நினை.

(இ-ள்.) நடனமாடு மயிலனையாளே! கிட்டிக்கிழங்கால் நாட்பட்ட பிரமேகமும் சிலேஷ்மநோயும் போகும். மிகுபசியும் பித்தசாந்தியும் உண்டாகும் என்க. 460

கிழங்குகளின் பொதுக்குணம்

கிழங்குவகை யின்பேரைக் கேண் மூலத்துண்
முழங்கு வாதத்தின் முரசம்-வழங்குகின்ற
சூரணக் கிழங்குகளைத் துய்த்தார் பேர்சொல்லிற்
சீரணந் குடும்பமெங்கே சொல்.

(இ-ள்.) கிழங்குவகைகளால் மூலவாயு விருத்தியாம். கருணைக் கிழங்குகளால் மூலரோகங்கள் நீங்கும். 461

மரத்தின் வேர்வகை

வில்வமரத்தின் வேர்க்குணம்

வில்லுவத்தின் வேருக்கு வீறுகுன்ம வாயுகபம்
சொல்ல வொண்ணுப்பித்தந் தொடர்சோபை-வல்லகப
தாகசுர நீரேற்றஞ் சன்னியொடு மெய்வலியும்
வேகமொடு நீங்குமே விள்.

இதுவுமது

அக்கினி மாந்தம் மரோசியதி சாரம்விக்கல்
நிற்கரிய பித்தசுரம் நீள்சாந்தி-சுட்கரோ

Digitized By Roja Muthiah Research Library

யாதியநோ யேகுமழகோடு புஷ்டியுண்டாங்
கோதில் வில்வவேரதனைக் கொள்.

(இ-ள்.) வில்வவேறினல் வாதகுன்மம் கபாதிக்கம் பித்தசோகைக் கபத்தால் வந்ததாகம் சலக்கோவை சந்நிபாதம் தேகக்கடுப்பு மந்தாக்கினி அருசி உஷ்ணபேதி விக்கல் பித்தரூட்சை வமனம் அதிசுட்கம் முதலிய ரோகங்கள் நீங்கும். அழகு தேகபுஷ்டியுண்டாம் என்க.

பாதிரிமரத்தின் வேர்க்குணம்

பாதிரியின் வேரிஞற் பாரமது மேகம்போ
மோதுகரப் பானுழலை யோடிவிடும்-மாதேகேள்
கண்ணெரிவு காதெரிவு கையெரிவு காலெரிவு
திண்ணைய மாய்ப்போகு நிசம்.

இதுவுமது

மேகத் தால்வந்த மிகுபிளவை மாவிரணம்
போகத் தால்வந்து பொருமூல-மாகத்தில்
வந்தசொறி யோடுகப வாதமந்த மும்போகும்
கொந்தடரும் பாடலத்தாற் கூறு.

(இ-ள்.) மாதரசே! பாதிரிவேருக்கு மதுமூத்திரம் காப்பான் உழலை கண் காது கை கால் இவைகளைப்பற்றிய எரிச்சல் மேகப் பிடகம் பெருவிரணம் ஆக்கந்து மூலரோகம் புடை சிலேஷ்மவாதநொந்தம் அக்கினி மாந்தம் ஆகிய இவைகள் போகும். பாடலம் என்பது பாதிரி என்க. ()

சண்பகமரத்தின் வேர்க்குணம்

தீராத வுட்டினத்தைத் தீர்க்குஞ் சுரம்போக்கும்
கோரே பசியெழுப்பு நிச்சயமே-யோருங்கால்
பண்புறுகண் டோஷத்தைப் பற்றறுக்கும் வாசமுள்ள
சண்பக மரத்தின்வேர் தான்.

(இ-ள்.) சண்பகவேரானது உஷ்ணம் சுரம் நேத்திரதோஷம் ஆகிய இவைகளை நீக்கிப் பசியையுண்டாக்கும் என்க. 464

மாமரத்தின் வேர்க்குணம்

சீதரத்தப் போக்கைச் சிக்கெனவே தான்பிடிக்கும்
போதவயிற் றுக்கடுப்பை போக்குங்கா-ணோதுகின்ற
வாந்தியையுந் தீர்க்கும்வெளி மாமரத்தின் வேர்பட்டை
பூந்துகிலின் மாதே புகல்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) அழகிய மேகலாபரணத்தை யணிபவளே! மாமரத்தின் வேர் பட்டையானது சீதரத்தபேதி வயிற்றுக்கடுப்பு வாந்தி என்னும் இவைகளைப் போக்குமென்க. 465

இலுப்பைமரத்தின் வேர்க்குணம்

புண்ணும் புரையுமறும் போதத் துவர்ப்பாகு
மெண்ணு மகக்கடுப் பிருக்குமோ-பெண்ணேகேள்
நீரிழிவு மேகும் நெடுமோமை மூலத்தாற்
போடா கடுப்பிரத்தம் போம்.

இதுவுமது

மந்த மரோசி மகாசூலை சர்வசுரம்
விந்துநஷ்டந் தாகமொடு மெய்யுளைப்பும்-முந்த
அலுப்பைப் பெற்றேகு மளகத்திற் காகா
விலுப்பைக்குச் சூடதிக மெண்.

(இ-ள்.) பெண்ணே! நீகேட்பாயாக; துவர்ப்பாகிய இலுப்பை வேரினால் விரணம் புரை வயிற்றுக்கடுப்பு அதிமூத்திரம் ரத்தகிரணி அக்கினிமாந்தம் அருசி வாதசூலை சகலசுரம் சீணசுக்கிலம் தாகம் சரீர அயர்வு ஆகியவை நீங்கும். தலைரோமங்களுக்கு ஆகாது. உஷ்ணகாரி என்க. ஓமை-இலுப்பை. 466

மருதோன்றிமரத்தின் வேர்க்குணம்

சோணித தோஷமெலாஞ் சொல்லாம லேகிவிடும்
பேணுவார்க் கிரத்தமொடு பித்தம்போம்-காணு
ஒருதோன்ற லென்னுமத னேதுமெழின் மாதே
மருதோன்றி வேரால் மறைந்து.

(இ-ள்.) ஒப்பற்ற புருஷனாகிய மன்மதன் புகழும் அழகுடையாளே! மருதோன்றிவேரால் மாதர்கள் ருதுகாலசோணித தோஷங்கள் அசிர்க்காரோகம் பித்தநோய் ஆகியவைகள் நீங்கும். 467

வெண்காலிமரத்தின் வேர்க்குணம்

விம்மு மகோதரமு மேனேக்கு பித்தமொடு
சிம்மகிருஷ்ண தோஷமு முட் சேருமோ-கம்முகின்ற
கள்ளைப் பொருநீருங் காணாது கைப்பையுறும்
வெள்ளைக் கருங்காலி வேர்க்கு.

(இ-ள்.) கசப்புள்ள வெள்ளைக் கருங்காலி வேருக்குப் பெருவயிறு ஏறுபித்தம் கிருஷ்ண சிம்மதோஷம் சுறுமேகம் இவைநீங்கும். 468

Digitized By Roja Muthiah Research Library

கருங்காலிமரத்தின் வேர்க்குணம்

கைப்புற் றிருக்குங் கருங்காலி வேருக்கு
மெய்ப்புழுவும் பாகம் மதுநீரு-மெய்க்குளெழு
குஷ்ட முதிரப்போக்குங் கூவியழு தகலும்
மட்டுதுபூங் கோதாய் வழுத்து.

(இ-ள்.) தேன்பொருந்திய பூங்கொத்துகளையணிந்த கூந்தலாளே! கைப்புள்ள கருங்காலிவேருக்கு மலாசயக்கருங்கிருமி பாகுபடுமதுநீர் ருசியசிம்மக் குஷ்டம் ரத்தபேதி இவைவிலகும். 469

எட்டிமரத்தின் வேர்க்குணம்

ஆலவிஷ மொக்கு மருந்தக் கடிதீரு
ஞாலமதிற் பித்தகுண நாசமா-மாலேக்கோ
லட்டிய பாகுமொழியே யானவிஷ முட்டியெனு
மெட்டி மரவே ரிது.

(இ-ள்.) ஆலையிலாடு பாகனைய மொழியாளே! விஷமுஷ்டிஎன்கிற எட்டிமரம் ஆலவிஷம்போன்றது. இதன் வேரால் மகாசர்பவிஷங் களும் பயித்திய குணங்களும்நீங்கும். 470

புங்கமரத்தின் வேர்க்குணம்

வாதக் கடுப்பு மகாமூர்ச்சை தாபசுரம்
வாதகுன்ம மிரத்தத்தால் வந்திடுநோ-யோதுகின்ற
புண்புரையும் வல்விஷமும் போகுந் திரண்டுருண்டே
பண்புறு புங்கம்வேர்க்குப் பார்.

(இ-ள்.) புங்கமரவேரினல் வாதக்குடச்சல் திரிதோஷமூர்ச்சை தாபசுரம் வாயுகுன்மம் ரத்ததாதுவினுற் பிறக்கின்ற ரோகங்கள் விரணம் புரையோடல் சர்ப்பவிஷம் ஆகியவைகள்போம். 471

நாவல்மரத்தின் வேர்வகை

வாதமறுங் கரப்பான் மாறும் விரணமோ
டோதமுறு நீரிழிவு முந்துரத்த-சீதமுங்காய்
மாவன் சுரமும்வளர் மேகமும் போகும்
நாவன் மரவேரி னல்.

(இ-ள்.) நாவல்மரவேரால் வாதவிகாரம் கரப்பான் புண் வெகு மூத்திரம் ரத்தசீதபேதி வாதசுரம் மச்சாமேகம் இவை விலகும். 472

Digitized By Roja Muthiah Research Library

கருவேல்மரத்தின் வேர்க்குணம்

கருவேலின் வேர்க்குக் கடுப்பிரத் தம்மாந்தம்
பருவாத மூறு கரப்பானும்-பெருகும்
பெரும்பேதி யும்போக்கும் பேச வினிக்குக்
கரும்பே யிதனைக் கருது.

(இ-ள்.) பேசவினிக்குங் கரும்பனையாளே! கருவேல்வேரினால் ரத்தக்கடுப்பு அக்கினிமந்தம் மகாவாதம் கரப்பான் வதிசாரம் ஆகிய இவைகள் போகுமென்க. 473

உருதிவாக்கின் வேர்க்குணம்-இது ஓதி எனமருவியது

புண்புரை கிராணிரத்தப் போக்கதி சாரக்கடுப்புந்
திண்பெறு தாகஞ்சோபஞ் சீதளமும்-நண்பி
லதிவிரைவாய்த் தாண்டு மணங்கே பருத்த
வுதிமரத்தின் றாரினு லோர்.

(இ-ள்.) தெய்வமகளீரனைய பெண்ணே! உருதிமரவேரினால் விரணம் புரைகிராணி ரத்தபேதி சீதக்கடுப்பு தாகம் மூர்ச்சை பித்த சீதளம் இவைவிலகும் என்க. தூர்-வேர். 474

அகத்திமரத்தின் வேர்க்குணம்

நல்லகத்தி வேரதனை நாடுங்கால் மேகமெனுஞ்
சொல்லகலுந் தாகமறுஞ் சொல்லவெனின்-மெல்லமெல்ல
மெய்யெரிவு கையெரிவு மேகத்தி னுள்ளெரிவு
மையெரிவும் போமென் றறி.

(இ-ள்.) நல்ல அகத்திவேரால் வெள்ளை விதாகம் உடல் உள்ளங்கை ஆண்குறி நாளம் பஞ்சேந்திரியமின விடங்களில் யெரிச்சலிவை நீங்கும். 475

நெல்லிமரத்தின் வேர்க்குணம்

வமன மரோசியறும் வாதமுதன் மூன்றுஞ்
சமனமுறு மலமுஞ் சாரும்-மமனசுரம்
புல்லிவரு தோஷசந்நிப் பொல்லாச் செயலும்போம்
நெல்லிமர வேரை நினே.

(இ-ள்.) நெல்லிவேரால் வாந்தி அருசி திரிதோஷகோபம் தருணசுரத்தில் அபத்தியத்தாற்பிறந்த பீதஜிம்மகதோஷம் அதிற்கிளைத்த சந்நி இவைதீரும் திரிதோஷசமனமும் மலப்போக்கும் உண்டாமென்க.

20

Digitized By Roja Muthiah Research Library

அருநெல்லிமரத்தின் வேர்க்குணம்

சுத்த சுரமருசி தோஷப் பெருவாந்தி
பித்தசந்தி பாதமிவை பேருங்காண்-மெத்தமண
நாறுமலர்க் கூந்தன்மின்னே நாவுக் கினிமையெனக்
கூறுமரு நெல்லியின் வேர்க்கு

(இ-ள்.) மிகுபரிமளம் பொருந்திய மலர்க் கூந்தலையுடையாளே! அருநெல்லிமரவேரால் தனிச்சுரம் அரோசிகம் திரிதோஷவாந்தி இரத்தபுஷ்டி விசந்திபாதம் ஆகியவைகள் போகுமென்க. 477

செடியின் வேர்வகை

ஆடாதோடையின் வேர்க்குணம்

காசமொடு மந்தங் கதித்தபித்தங் கொடுஞ்சு
வாசங் கழுத்துவலி முதநோய்-கூசி
யோடா திராதிங் கொருநாளு மொண்டொடியே
யாடா தொடைத்துருக் கஞ்சி.

(இ-ள்.) ஆடாதொடை வேரினால் இருமல் அக்கினிமந்தம் சுவேத பித்தம் மகசுவாசம் களரோகமுதலிய நோய்கள்போம். 478

சங்கம்வேர்க் குணம்

சங்கம்வேர்ப் பட்டை சளியிருமலைச் சுரத்தை
யங்கவாதக் கடுப்பை யாடத்தைப்-பங்கே
செய்யுங் கிரந்தியையுட் டகால் கிருமியையில்
வையந் தனியொழிக்கு மால்.

(இ-ள்.) சங்கம்வேர்ப்பட்டை கோழை காசம் கபச்சுரம் வாதக் கடுப்பு சிலேத்மசோகை பங்கவிசர்ப்பி உட்சுரம் தனிவாதகோபம் கிருமிரோகம் ஆகிய இவைகளைப் போக்குமென்க. 479

பேராமுட்டி வேர்க்குணம்

வாதசுரந் தாகம் மதலைக் கணமாந்தஞ்
சீதசுரம் பித்தமெனச் செப்பணுங்கு-மோதுநம்மாற்
சேரா முட்டிக்கேகுஞ் செய்ய மடமயிலே
பேரா முட்டித்தூரைப் பேசு.

(இ-ள்.) அழகு பொருந்திய மயில்போலுஞ் சாயலை யுடையாளே! பேராமுட்டிவேரினால் வாதசுரம் தாகரோகம் மாந்தகணம் குளிர்ச்சுரம் பித்தரோகம் ஆகிய இவைகள் போகுமென்க. 480

Digitized By Roja Muthiah Research Library

சித்தாமுட்டிவேர்க்குணம்-இதுவே குறுந்தோட்டி

அத்திசுர முதலனந்த சுரம்பித்த மும்போ
மெத்தவிழிக் கொளியாம் வீறுதயி-லத்திற்காம்
நற்று மரைதருவு நாடுமெழிற்றிருவே
சித்தா முட்டித்தூரைச் செப்பு.

(இ-ள்.) நல்ல தாமரையில் வசிக்கு மிலக்குமியையொத்த அழகுடையாளே! சித்தாமுட்டிவேரினால் அஸ்திசுரமுதலிய சுரங்களும் பித்தநோயும் நீங்கும் கண்ணுக்கொளியாம். தயிலத்துக்குதவும். 481

செந்தோட்டி வேர்க்குணம்

சந்துவலி வாதந் தாகஞ் சுரங்கரப்பா
னுந்து சுவாசங்கப மோடுங்கா-ணந்தமிகு
மிந்தொட் டியவதன வின்ப மடமயிலே
செந்தொட்டி வேராற் றெளி.

(இ-ள்.) சந்திரன்போன்ற முகத்தினையுடைய யின்பந்தரு மடமயிலே! செந்தொட்டிவேரினால் சகன விருதவாதரோகம் விதாகம் சூட்சை கடுவன் இரைப்பு கோழை ஆகியவைபோம். 4-2

முட்காவேளை வேர்க்குணம்-இதுவே முக்காவேளையென மருவியது

தாகாதி மந்தமதி சாரநா வறட்சி
போகாச் சுரந்தாபம் போக்கமருந்-தோகையிற்
சிக்காவேளைப் பதத்தைத் தின்னச்செய் விக்கவென்றான்
முக்கா வேளைப்பதத்தை முன்.

(இ-ள்.) முக்கா வேளைவேரினால் வாததாகம் மந்தாக்கினி அதிசாரம் நாவறட்சி சந்தசுரம் வெப்பம் அன்னத்துவேஷம் இவைபோம். ()

செங்கத்தாரி வேர்க்குணம்

செங்கத்தாரிச் சடைக்குத் தீராத வன்மேகம்
பொங்கி வருகிரந்திப் புண்புரைகள்-தங்குகின்ற
சந்திக சிலேஷ்மந் தனித்த மகாவாத
முத்திகை விட்டோடும் மொழி.

(இ-ள்.) செங்கத்தாரிவேருக்குப் பிரமேகநீர் ஒட்டுப்புண்புரைகள் சில்களை வீங்கச்செய்கின்ற கபம் மகாவாத மிவைபோம் சடை-வேர். ()

மாக்காரை வேர்க்குணம்

சீதங் கடுப்பு திரிதோஷ மாந்தபித்த
வாதங் கரனைய மாந்தகண-மியாதிங்

Digitized By Roja Muthiah Research Library

கிரிக்கான மருந் தென்பா ருலகில்
மரக்காரை வேரால் மதி.

(இ-ள்.) மரக்காரைவேரால் சீதக்கடுப்பு திரிதோஷம் உதிர பித்த வாதநோய் கரப்பான் கபம் கணமாந்த மிவைபோம் இதுவாந்திமருந்து.

குத்துக்காற் சம்மட்டி வேர்க்குணம்

சாரமுறு குத்துக்காற் சம்மட்டி வேரெனச்சொற்
கோரமுள்ள மாவாதக் கூட்டமெங்கே-வீரமுறு
மேகத் தருப்பெங்கே விறுதிமிர் வாதமெங்கே
சோகத் தளர்ச்சி யெங்கே சொல்.

(இ-ள்.) பச்சையுள்ள குத்துக்காற் சம்மட்டி வேரினால்மகாவாதம் சர்வ மேகக்கட்டிகளும் திமிர்வாதமும் மூர்ச்சையின் அயர்வும்போம். ()

அவுரி வேர்க்குணம்-இதுவே நீலி

எல்லா விஷங்களுக்கு மேற்ற முறிப்பாகும்
பொல்லாச் சுரமூர்ச்சை பொங்குவட்டை-நில்லாப்
பவுரிதருங் குன்மமுதற் பன்னோ யொழியு
மவுரிதரு வேருக் கறி.

(இ-ள்.) அவுரி வேரினால் சர்வவிஷம் ருட்சை மூர்ச்சை வெள்ளை வயிற்றுநோய் முதலிய பலநோய் ஆகியவைபோம். 487

களாவேர்க்குணம்-இது கிளா என மருவியது

விடத்துறுநோய் பித்தமைய வேர்வை யதிதாகந்
திடத்தக வுதிரத்தினது சிக்கற்-கடத்துளெழு
மக்கினி மாந்தமிவை யண்டா தொருநாளுஞ்
சிக்கெனக் களாவேரைச் சேர்.

(இ-ள்.) களாவேரினால் விஷசம்பவரோகம் பயித்தியம் கபாதிக்கம் கபவியர்வை விதாகம் பிரசவ அழுக்கு மந்தாக்கினி இவைநீங்கும். ()

வெட்டிவேர்க்குணம்-இதுவே குருவேர்-விருத்தம்

பித்தவிகாதஞ் சசிகாமிலங் கறைப்பித்த மனம்
தத்திடுகுட்டஞ் சிரநோய் களமடி தாதுநட்ட
மத்தமனற்புண் டடைப்புண் வண்மூர்ச்சை வரிவிழிநோய்
வித்திரமேகத்தின் கட்டியும்போம் வெட்டி வேரினுக்கே.

(இ-ள்.) வெட்டிவேருக்குப் பித்தத்தால் அகாலத்தி லுண்டாகிற தாகம் சோமரோக காமாலை சத்தபித்தம் சுரம்பரவுகின்ற குஷ்டம் தலை நோய் கழுத்துநோய் சுக்கிலநஷ்டம் உன்மத்தம் தீப்புண் முலைச்சிலந்தி திரிதோஷமூர்ச்சை நேத்திரரோகம் வித்திருக்கட்டி யிவை நீங்கும். ()

Digitized By Roja Muthiah Research Library

கொடியின்வேர் வகை

நாகமல்லிகை நாகமுட்டி வேர்க்குணம்-வெண்பா

சீராரு நாகல்லைச் சிவையைக் கண்டக்காற்
றீரா நமைச்சற் செறிபுடைக்க-ணீராருஞ்
சன்னப் புழுச்சங்கந் தாங்காவாஞ் சாம்புனத
வன்னக் குயிலனையாய் வாழ்த்து.

(இ-ள்.) வன்னக்குயிலனைய மாதே! நாகமல்லிகை வேரால் ஒழியாத்தினவும் நெருங்கிய புடைகளும் ரசதாதுவைப்பற்றிய கிருமிக்கூட்டமும் நீங்கும் என்க. சிவை-வேர். 490

காட்டுமல்லிகை வேர்க்குணம்

சுரங்களொடு நாவறட்சி தொந்தி மந்தம்பேதி
யுரங்கதித்த தாகமிவை யோட்டும்-வருஞ்சேரார்
தாமல்லி லோடுந் தாகமைபோ லோடிவிடுங்
காமட்டிகை வேரார்க் காண்.

(இ-ள்.) காட்டு மல்லிகை வேரினால் சாவசுரம் நாவறளல் அக்கினி மந்தம் அதிசாரம் விதாகம் ஆகியவைகள் போகும். 491

சிறுகுறிஞ்சா வேர்க்குணம்

சிறுகுறிஞ்சா வேர்விஷத்தைத் தீர்க்கு மானிலத்
துறுசுரங் கள்வாத மொழிக்குந்-தெறிபாணக்
கண்ணு யிருமன்முதற் காசந் தணிக்கும்
விண்ணு டருக்குமிதை விள்.

(இ - ள்.) ஏவுகின்ற பாணமனைய கண்களையுடையாளே! சிறுகுறிஞ்சாவேரானது அற்ப செந்துக்களின் நஞ்சுவாதசுரம் வாததோஷம் காசம் சுவாசகாசம் இவைகளைப் போக்குமென்க. 492

பேய்ச்சுரைவேரின் குணம்

கடுவேறு பேய்ச்சுரைவேர் கண்ட லரவின்
கடுவேறு துண்மை முக்காலும்-கொடுவிடமு
மீளையிருமலும் விட்டேகு முண்டால் வாந்தியுண்டாம்
வாளையுறுங் கண்ணாய் வழுத்து.

(இ-ள்.) வாள்போலுங் கண்ணையுடைய மாதே! கசப்புள்ள பேய்ச்சுரைவேரினால் சர்ப்பசப்தவேகம் மகாவிஷம் கோழை காசம் இவை நீங்கும். இதில் வமனம் உண்டாம் என்க. 493

Digitized By Roja Muthiah Research Library

முசுமுசுக்கை வேர்க்குணம்

கந்தம் பரவு களிச்சளியும் புண்விடமு
மந்தம் பெருவிடமு வாந்திகளும்-மந்தம்
பெருகுரங்குக் கிச்சூரும் பித்தமு மிருக்கா
திரு குரங்குக்கை வேருக்கே.

(இ-ள்.) *முசுமுசுக்கை வேரினால் துர்க்கந்தத்துடன் இறுகிய கோழை அற்பவீரியவிஷம் விஷாலசகரோகம் வமனம் மார்புநோய் குன்மம் பித்தாதிக்கம் இவைபோம். குரங்குக்கு முசு என்றொருபெயர்.*

வெண்காக்கட்டான் வேர்க்குணம்

மாதரால் வந்தவெட்டை வன்மேகஞ் சென்னிவலி
யோதுசுரம் விழிநோய் யோடுங்காண்-பேதியொடு
மாக்கட்டாஞ் சீதமறு மாமூலியாம் வெள்ளைக்
காக்கட்டான் வேரைக் கருது.

(இ-ள்.) *மாமூலியென்னும் காக்கட்டான்வேருக்கு வெள்ளைபிரமேகம் தலைநோய் சுரம் கண்ணோய் ஆமம் இவை நீங்கும்.* 495

கருங்காகட்டான் வேர்க்குணம்

மாந்தங் கிருமியடல் வாதங் கபமினமுஞ்
சேர்ந்தமலக் கட்டுஞ் சிதையுங்காண்-சூழ்ந்த
அருங்கா குவடுகளி லண்டா மயிலே
கருங்காக் கட்டான்வேரைக் கண்டு.

(இ-ள்.) *சருக்கலையுடைய மலைகளிலே சஞ்சரிக்காதே மயிலே! கருங்காக்கட்டான் வேருக்கு மாந்தம் மலக்கிருமி வாதாதிக்கம் சிலேஷ்மரோகம் மலக்கட்டு ஆகிய இவை நீங்கும் என்க.* 496

கோடிவேலின் வேர்க்குணம்-இதுவே சித்திரமூலம்

கட்டி விரணங்கிரந்தி கால்க ளறையாப்புக்
கட்டி சூலைவிக்கங் காழ்மூல-முட்டிரத்தக்
கட்டு நீரேற்றங் கனைத்த பெறுவயிறு
கட்டுங் கொடிவேலி யாம்.

(இ-ள்.) *கொடிவேலி வேரானது வித்திரிதி புண் சொறிசிரங்கு வாதரோகம் குதஸ்தானவித்திரி குத்தல் சோபை மூலரோகம் உதிரக்கட்டு ஜலஸ்வாரம் மகோதரம் இவைகளைக் கெடுக்கும்.* 497

Digitized By Roja Muthiah Research Library

பெருமந்தின் வேர்க்குணம்

பெருமந்தின் வேர்ப்பித்தம் பீறியைப்பு காசம்
வருதிர முரும்பு வலிவாத-முருவுவிட
மொன்றிய மாகடிக ளோட்டு மூலகிலிது
வன்றியது கோச்சிகிச்சைக் காம்.

(இ-ள்.) பெருமருந்துவேர் பித்தகோபம் சுவாசம் இருமல் சுரரோகம் சரீரக்குத்தல் வாததோஷம் அற்பவிஷக்கடிகள் ஆகிய இவைகளை நீக்குவதுமன்றி கோச்சிகைக்கைக்கும் உதவும் என்க. 498

பெருங்காஞ்சோறி வேர்க்குணம்

காசஞ் சுவாசங் கபச்சுரங்க ளோடுவன
வாசஞ்செய் யும்மூர்க்குள் வாராமல்-வாசம்
பெருக்கு முலையாய் பெருங்காஞ் சொறிவே
ரிருக்கு மெனமனத்து ளெண்ணி.

(இ-ள்.) வாசமிகு தனங்களையுடைய பெண்ணே! பெருங்காஞ்சொறிவேரினால் இருமல் இரைப்பு சீதசுரம்போம். 499

சிறுகாஞ்சோறி வேர்க்குணம்

சிறுகாஞ் சொறிவேர் சிலேஷ்ம வாசத்தைக்
குறியாத முச்சுரக் குழாத்தைச்-சொரியுங்
கரப்பான் சிறுசிரங்கைக் காலைத் தாகத்தே
யுரப்பாகச் சாடுமென வோது.

(இ-ள்.) சிறுகாஞ்சொறி வேரானது தமக்கவாசம் திரிதோஷ சுரங்கள் கரப்பான் புண் வாதப்பெருக்கம் தாகரோகம் இவைகளை நீக்கும். 500

கருங்காஞ்சோறி வேர்க்குணம்

குற்றிருமல் நீரேற்றங் கோரகப ருட்சை
நித்திய வரோசகமு நீக்குங்காண்-ரத்ன
அருங்காஞ்சி வாய்ந்தவிடை யன்னமே சுத்தக்
கருங்காஞ் சொறிவேரைக் கண்டு.

(இ-ள்.) அருங்காஞ்சிவாய்ந்த விடையையுடைய அன்னம்போல்பவளே! கருங்காஞ்சொறிவேருக்கு பொடியிருமல் ஜலஸ்ராவம் சிலேஷ்மருட்சை அன்னரோசகம் ஆகிய இவை நீங்கும். 501

Digitized By Roja Muthiah Research Library

பச்சைதிப்பிலி வேர்க்குணம்

தாகமுடன் சோபந் தணிக்குங்கா ணெவ்வகையின்
மேகமுடன் பித்தம் விலக்குமே-போகமிகும்
கவ்வியரன்ன நயங்கொடுக்கும் பச்சை யாஞ்
செவ்விய மூலச் செயல்.

(இ-ள்.) சிவந்தநீற்பச்சையுள்ள திப்பிலிவேர் விதாகம் ஆயாசபல மேகம் பித்தாதிக்கம் இவை நீங்கும். சுக்கிலத்தையும் அழகையும் விருத்திக்கும். 502

இன்புரு வேர்க்குணம்

இன்புரு வேரை யிதமா யருந்தினர்க்கும்
பின்புரு தையமொடு பித்தமுமே-துன்பா
மிருமல் சுவாச மெரிசுரம் வயிற்றுப்
பொருமலுப் பிசம்பறந்து போம்.

(இ-ள்.) இன்புருவேருக்கு கபாதிக்கம் பித்தகோபம் காசம் ஈளை பித்தசுரம் வயிறிறைதல் விக்குதல் இவைகள் நீங்கும் என்க. 503

நன்னாரி வேர்க்குணம்-இதுவே நீறுண்டி

நன்னாரி வேரை நறுக்கியரைத்து மதன்
வின்னாரி யூனால் வெதுப்பியே-தின்னவெறி
தோணாது கற்றாழைச் சோற்றில் கலந்துண்ணக்
காணாது வண்டு கடி.

இதுவுமது

சலதோஷம் பித்த மதிதாக முழலை
சலமேறு சீதமின்னார் தஞ்சு-டுலகமதிற்
சொன்மது மேகம்புண் சுரமிவை யெலாமொழிக்கு
மென்மதுர நன்னாரி வேர்.

(இ-ள்.) நன்னாரிவேரை யரைத்துத் தேனிற்பாகுஞ் செய்துண்ணில் அதிபித்தந்தீரும். அதைக் கற்றாழை சோற்றோடுண்ண வண்டு கடிபோம் இன்னுங் கிரமப்படி உபயோகிக்க நீரேற்றம் பித்தநோய் தாகம் வாய் நீர்ச்சுரப்பு புணர்ச்சியின் சூடும் மதுநீர்க்கிராந்தி சுரவேகம் போம். 504

Digitized By Roja Muthiah Research Library

புல்லின் வேர்வகை

பச்சைவிலாமிச்சு வேர்க்குணம்-இதுவே வெட்டிவேர்

திரிதோஷந் தாகஞ் செறிகுஷ்ட மீளை
பெரிதான சூலைமந்தம் பேராச் சுரவெப்ப
மச்சையுண்ணும் கீடமுதன் மாறுமெய்க்கும் காந்தியுண்டாம்
பச்சைவிலா மிச்சுக்குப் பார்.

(இ-ள்.) பச்சைவிலாமிச்சுவேருக்கு வாதபித்த கபாதிக்கம் தாக ரோகம் பெருவியாதி சுவாசம் சரீரக்கடுப்பு அக்கினிமந்தம் உஷ்ணசுரம் மச்சைதாதுக்கிருமி ஆகியவைகள் நீங்கும். அழகுண்டாம். 505

பஞ்சமூலத்தின் குணம்

செவ்வியம் பேரரத்தை சித்திர மூலஞ்சுக்கோ
டொவ்வு தண்டுபரங்கி யோரைந்தும்-வெவ்வினையைச்
சண்ணு பஞ்சமூலமெனத் தாரணி யெலாமறிய
வண்ண மயிலே வழுத்து.

(இ-ள்.) வண்ணமயிலனைய மங்கையரே! திப்பிலிமூலம் பேரரத் தை கொடிவேலிவேர் சுக்கு தண்டுபரங்கி இவ்வைந்தும் பஞ்சமூலமாம். இது கொடிய ரோகங்களையு நீக்கும் என்க. 506

சிறுபஞ்சமூலத்தின் குணம்

சிறிய வழுதுணைவேர் சின்னெரிஞ் சின்மூலஞ்
சிறுமலி கண்டங் கத்திரிவேர்-நறிய
பெரிமலி யோரைந்தும் பேசுபன் னோய்தீர்க்கு
மரிய சிறுபஞ்ச மூலம்.

(இ-ள்.) சிறுவழுதுணம் சிறுநெருஞ்சில் சிறுமல்லிகை கண்டங் கத்திரி பெருமல்லிகை ஆகிய இவைகளின் வேர்கள் ஐந்தும் சிறுபஞ்ச மூலமாம். இது பற்பலரோகங்களைப் போக்கும். 507

பெரும்பஞ்சமூலத்தின் குணம்

பாதிரிவேர் வாகை பருங்குமிழ மாலூர
மாதே தழுதாழையிவ் வேரைந்தும்-போதிலம
ருஞ்சிலை நுதற்றிருவே யுன்னுபெரும் பஞ்சமூ
லஞ்சில நோயேகுமிதி லாய்.

(இ-ள்.) மலராசனத்தில் வசிக்கும் சிலைநுதற்றிருவனைய பெண்ணே! பாதிரிவகை பெருங்குமிழம் வில்வம் தழுதாழை இவ்வைவகைவேரும் பெரும்பஞ்சமூலமாம் இதனாற் சிலநோய்கள்போம். 508

Digitized By Roja Muthiah Research Library

அஷ்டமூலத்தின் குணம்

கோரை யரிகாந்தை கூலங்கலூசி கஞ்சாங்
கோரை யாடாதோடை கோத்துளசி-வீரியபற்
பாடகமிவ் வெட்டும் பலவிஷக் குழாமிரியச்
சாடுமஷ்ட மூலமென்ப தாம்.

(இ-ள்.) முத்தக்காசு விஷ்ணுகாந்தை பேய்புடல்வேர் சீந்தில் வேர் கஞ்சாங்கோரை ஆடாதோடைவேர் கருந்துளசி, பற்பாடகம் இவ்வெட்டும் அஷ்டமூலமாம். இதுபற்பலவிஷங்களைத் தீர்க்கும்-கூலம் பேய்ப்புடல். 509

தசமூலத்தின் குணம்

வில்வம் பெரியகுமிழ் மேனெருஞ்சில் முன்னையிரு
மல்லிகை சிறிய வழுதுணைவேர்-நல்லகண்டங்
கத்திரி புன்காலி பெருவாகை யிவைவன்னோயைக்
குத்துந் தசமூலங் கூறு.

(இ-ள்.) வில்வம் பெருங்குமிழ் யானைநெருஞ்சில் முன்னை சிறு மல்லிகை சிறுவழுதுணம் கத்திரி பாதிரி பெருவாகை இப்பத்தும் தசமூலமாம் இதுகடினமான ரோகங்களைத் தீர்க்கும் என்க. 510

மரத்தின் பட்டைவகை

அத்திமரப் பட்டையின் குணம்

வீறு கடுப்பிரத்தம் வெண்சீத ரத்தமொடு
நாறுவிர ணங்களெலா நாடாவாங்-கூறுங்கா
லத்திதரு மேகம்போ மாயிழையே யெஞ்ஞான்று
மத்திப்பாற் பட்டைக் கறி.

(இ-ள்.) ஆயிழையே! அத்திமரப்பட்டைக்கு ஆசனக்கடுப்பு உதிரப்போக்கு சீதரத்தபேதி புன் தத்துப்பிரமேகம் ஆகியவைபோகும்.

நாவல்மரப் பட்டையின் குணம்

ஆசிநோய் காச மசிர்க்கரஞ் சுவாசவினை
கேசமுறு பாச கிரகநோய்-பேசரிய
மாவயங்க லாஞ்சனமிவ் வன்பிணி யெலாமேகு
நாவலுறு பட்டையதனால்.

(இ-ள்.) நாவல்மரப் பட்டையினால் வாயிற்பிறக்கும் நோய்கள் இருமல் பெரும்பாடு ஈளை பிள்ளைகளின் கிரகதோஷங்கள் வியங்கம் லாஞ்சனம் என்னும் மச்சபேதங்கள் ஆகியவைகள் தீரும் என்க. 512

Digitized By Roja Muthiah Research Library

முருங்கைமரப்பட்டையின் குணம்

முருங்கைவேர் பட்டைக்கு மூடு கபத்தோ
டொடுருங்குருச் சந்நி சுரமோடு-மருங்கனக
வட்டைப் பொருமுலையாய் வாய்வொடு விஷங்களுமேற்
பட்டைக்குப் போமே பறந்து.

(இ-ள்.) சூதாடுகருவியை நிகர்த்த முலைகளையுடைய மாதே! முருங்கை வேர்ப்பட்டைக்கு கபதோஷம் சந்நிபாதசுரமும், மரப்பட்டைக்கு வாததோஷமும் சில விஷங்களும் நீங்கும். 513

புளியமரப்பட்டையின் குணம்

புளிய மரத்தின் புரணிதனைக் கண்டா
லுளமாந்தை குன்மவலி யோடும்-வளியார்ந்த
பேதிகட்டுஞ் சுரம்போம் பித்தமுறுந் தீபனமா
மோத வசீரணமே துன்.

(இ-ள்.) புளியமரப்பட்டையினால் உளமாந்தை குன்மநோய் வாதாதிசாரம் சுரம்அஜீரணம் இவை நீங்கும் பித்தமும்பசியும் விருத்தியாம்.

பெருமரப்பட்டையின் குணம்

பெருமரப் பட்டையது பேதி கிராணி
மருவிரத்த நோயினத்தை மாத்தும்-திருவே
நடலைபுரி வாதத்தை நாடா தகற்று
முடலை யிரட்சிக்குமென வோர்.

(இ-ள்.) இலக்குமியனையாளே! பெருமரப் பட்டையானது அதிசாரம் கிரகணி உதிரநோய் வாதாதிக்கம் இவைகளை நீக்கும். சரீரத்தைப் போஷிக்கும். 515

கருவேலமரப்பட்டையின் குணம்

தந்தமிறுகுந் தனிச்சூதம் புண்ணூறு
மந்தசுரம் பித்தம் மடியுங்காண்-பந்த
மருவே யகலா மலரளக மாதே
கருவேலம் பட்டைக்குக் காண்.

(இ-ள்.) வாசனை நீங்காத புட்பங்களைச்சூடிய அளகபாரத்தையுடையாளே! கருவேலம்பட்டைக்கு ரசவேகத்தின் வேக்காடு முதலிய விரணங்களும் சுரமும் பித்தநோயும் ஒழியும். பல்லிறுகும். 516

Digitized By Roja Muthiah Research Library

கருங்காலிமரப்பட்டையின் குணம்

மேகநீரைக் கெடுக்கு மீறுதந்த மூலத்து
னாகிய வேதனையை யார்த்துங்காண்-சோகந்
தருங்காச மீளையிவை சாரா தகற்றுங்
கருங்காலிப் பட்டையது காண்.

(இ-ள்.) கருங்காலிமரப் பட்டையானது பிரமேகமூத்திரம் தந்த மூலரோகம் இருமல் சுவாசம் ஆகிய இவைகளை நீக்கும். 517

மாவிலிங்கு, யெருக்கு, கருவேல் இதுகளின் பட்டைக் குணம்

மாவிலிங்கப் பட்டையினால் வாதமொடு சந்நிகளும்
பாவுகின்ற கல்லடைப்பும் பாறுமே-மாவெருக்கம்
சடைசந்நி வாதம் பலவிஷம் போக்குங்கருவேற்
பட்டைநா நோய்தீர்க்கும் பார்.

(இ-ள்.) மாவிலிங்கப்பட்டையால் வாதநோயும் சந்நிகளும் அஷ்மரிரோகமும் நீங்கும். யெருக்கம்பட்டை சந்நிபாதம் வாதநோய் பலவிஷம் இவை போக்கும். கருவேல்பட்டை நாப்புண்ணை நீக்கும். 518

கள்ளி, நொச்சில் இதுகளின் பட்டைக் குணம்

நரம்புச் சிலந்தி நளிர்வாத சந்நி
யுரம்பெரிய வாதமிவை யோடும்-பெரும்புவியிற்
கள்ளிமரப் பட்டையினால் காரநொச்சிற் பட்டையது
துள்ளு சன்னிவாத மகற்றும்.

(இ-ள்.) கள்ளிமரப்பட்டையினால் நரம்பு சிலந்தியும் கபவாததொந்த சன்னிபாதமும் வாதப்பிரகோபமும் நீங்கும். நொச்சில்மரப் பட்டையானது சன்னிபாதத்தாற் பிறந்த வாதத்தைப் போக்கும். 519

கிளியூரர்ப்பட்டையின் குணம்

மணவருக்க மாகும் வருசுரத்தைப் போக்குந்
தணலாய வெப்பைத் தணிக்கும்-குணமாதர்
கிளியூரற் பட்டையது கீதம் பயிலு
மளியூருங் கூந்தன்மின்னே யாய்.

(இ-ள்.) கீதம்பயிலும் வண்டுகள் பொருந்திய கூந்தல்மின்னே! பரிமளச் சேர்க்கையி லோங்கிய கிளியூரற்பட்டையானது சுரரோகத்தையும் தேகக்கொதிப்பையும் தணிக்கும். 520

அக்காரப்பட்டையின் குணம்

அக்காரப் பட்டைக் கறனு வறட்சிகளு
மெக்கு சன்னிபாதசுர மென்பவையும்-பக்கச்

Digitized By Roja Muthiah Research Library

சகலதலை நோய்வாய்வுந் தாழ்ந்தே யொழியும்
புகலிரத்த கந்தமது போம்.

(இ-ள்.) அக்காரப்பட்டைச் சலாதிக்கம் நாவறட்சி சன்னிபாதம் சுரம் பற்பல தலைநோய் வாதகோபம் உதிரநாற்றம் இவை நீங்கும். ()

கோங்குமரப்பட்டையின் குணம்

கோங்கினறும் பட்டையார் கூறறிய மேகம்போந்
தாங்கிய பற்பிணியுஞ் சாந்தமாம்-வாங்குவெண்மைக்
கன்னு ரதுவெள்ளிக் காசெனவே பஸ்மிக்கும்
மின்னூர்ச் சிகாமணியே விள்.

(இ-ள்.) மின்னூர்ச் சிகாமணியே! கோங்கின்பட்டையால் பிரமேக மூத்திரமும் தாளக்கூடாத தந்தரோகம் நீங்கும். கல்நார் பஸ்பமாகும் என்க. 522

கோஞ்சிப்பட்டையின் குணம்

மாந்த மகற்றும் வயிற்றுப்பி சந்தவிர்க்கு
மாந்த கணச்சுரத்தை மாற்றிவிடும்-சேர்ந்தசிறு
வாதநோ யோட்டும் வகைகொஞ்சிப் பட்டையது
மாதரசே நீயுமுணர் வாய்.

(இ-ள்.) மாதரசே! காட்டுக்கொஞ்சிப்பட்டை பாலர்மாந்தம் வயிற்றுப்பொருமல் கணச்சூடு ஆவிருத வாதரோக மிவைகளைப் போக்கும்.

பஞ்சவர்க்கத்தின் குணம்

ஆலரசு சம்புடனே யத்திகுரு வேலற்றின்
தோலைந்தும் பஞ்சவர்க்கந் தொல்லுலகி-லேலுமதாற்
காசஞ் சுவாசங் கபங்கொங்கை வித்திரிதி
நாசமுறு மென்றே நவில்.

(இ-ள்.) ஆல் அரசு நாவல் அத்தி இத்தி என்னும் ஐவகை மரங்களின்பட்டைகளே பஞ்சவர்க்கமாம். இதனால் இருமல் இரைப்பு சிலேஷ்மதோஷம் ஸ்தனவித்திரிக்கட்டி ஆகிய இவைகள் போமென்க.

மரத்தின் பிசின்வகை

மாம்பிசின் குணம்

பெரும்பா டெங்கேயிரத்த பேதியெங்கே முக்க
றரும்பாழும் வெள்ளையெங்கே சாற்றாய்-கரும்பாம்பின்

Digitized By Roja Muthiah Research Library

நாதநிரி யாசஞ்செய் நங்காய் வனத்திலுறை
சூதநிரி யாகமெனச் சொல்.

(இ-ள்.) கரும்பாம்பின் நாதநிரியாசஞ்செய் நங்கையரே! மாம்பிசினால் பெரும்பாடு என்கிற அசிர்க்கரநோயும் ரத்தாதிசாரமும் வாதப் பிரமேக வெள்ளையும் நீங்கும் நிரியசெம்-பிசின்.. 525

பிரமதருவின்பிசின் குணம்-இதுவேபலாசு முருக்கு

சந்திகட்கு நாடிகட்குந் தங்குசுக்கி லந்தனக்கும்
புந்தியுரங் கட்குரமும் பூட்டுங்கா-ளுந்து
சரமதனுக் காகமநூல் சாற்றுமலர் மாதே
பிரம தருவிற்சம் பிசின்.

(இ-ள்.) உந்துசரமதனுக் காகமநூலைப் புகட்டும் மலர்மாதனையாளே! பிரமதருவின் பிசினானது கீல்கள் நரம்புகள் சுக்கிலம் அறிவு மார்பு ஆகிய இவைகளுக்குப் பலத்தை யுண்டாக்கும். சம்-பிறப்பு. 526

மலைவேப்பன்பிசின் குணம்

மலைவேம்பு தன்பிசின்றான் வாதக்கரப்பன்
மலுமேகக் கட்டியிவை மாற்று-நிலமீது
தாதுவு முண்டாக்கும் சலப்பேதி யைக்கட்டு
மாதே யிதனை வழுத்து.

(இ-ள்.) மாதே! மலை வேப்பம்பிசின் கருங்கரப்பன் மேகக்கட்டி சலமந்தம் பேதி ஆகிய இவைகளை நீக்கும் சுக்கிலம் விருத்தியாகும். ()

கருங்காலிப்பிசின் குணம்

கருங்காலி யின்பிசின்றான் காரகர் கரப்பன்
வருமேக நீரிழிவை மாத்தும்-விரைவாய்ப்
பெரும்பாட்டை நீக்கும் பெருந்தாது விர்த்தி
பருப்புமெனக்கண் டறி.

(இ-ள்.) கருங்காலிப்பிசின் கருங்கரப்பன் மேகமூத்திரம் அசிர்க்காம் ஆகிய இவைகளை நீக்கும் விந்துவை வளர்ப்பிக்கும். 528

வாகைப்பிசின் குணம்

வாகைப் பிசின்மேகம் வன்கிரந்தி கட்டியையு
மேகத் துரத்துமிது நிசமே-மாகனக
மேனி கொடுக்கு மிகுத்தபல முண்டாக்குந்
தேனினிய மென்மொழியே தேர்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) தேனினுமினிய மொழியையுடைய பெண்ணே! வாகைப் பிசின் பிரமேகம் வாதகிரந்தி மேகக்கட்டி ஆகிய இவைகளை விலக்கும் அழகையும் வன்மையையும் உண்டாக்கும். 529

இலவம்பிசின் குணம்

மேகவெட்டை நீர்ச்சுருக்கு மெய்யனற் கிருச்சரத்தின்
வேகமதி காரமென விள்ளுநோ-யேகவென்றால்
வாரணியுங் கும்பமுலை மாதே மறைப்பின்றிக்
பூரணி ரசத்தைப் புகல்.

(இ-ள்.) வாரணியுங் கும்பஸ்தனங்களை யுடையாளே! இலவம் பிசினியினால் பிரமேகவெள்ளை மூத்திரக்கடுப்பு உட்சுரம் கிரிச்சுரவே கம் பேதி ஆகிய இவைகள் நீங்கும் பூரணி-இலவம், ரசம்-பிசின். 530

விளாம்பிசின் குணம்

நல்ல விளாம்பிசினை நற்பதஞ் செய்தருந்தத்
தொல்லை யதிசாரந் தொலைவதன்றே-மெல்லியரால்
வந்தவெள்ளைத் தன்னுடனே மாதர் பெரும்பாடு
மூந்துநீர்ப் போக்கும்போ மூன்.

(இ-ள்.) சுத்திசெய்த விளாம்பிசினை சூரணம் மாத்திரை முதலிய ஔஷத ரூபமாகச்செய்து உண்டால் நீடித்த அதிசாரம் புணர்ச்சியால் வந்தவெள்ளை அசிர்க்குரோகம் வெகு மூத்திரம் ஆகிய இவை நீங்கும்.

முருங்கைப்பிசின் குணம்

மூந்து நீரைத்தடுக்கு மோரைப் போலேயொழும்
விந்துவைத் தடிப்பித்து மேனிதருந்-தொந்தக்
கரியநிற வாயுதனைக் காதிவிடு நாளும்
பெரிய முருங்கைப் பிசின்.

(இ-ள்.) முருங்கைப்பிசின் அதிமூத்திரம் குஷ்டமேகம் தொந்த வாதம் இவைகளைநீக்கும் சுக்கிலத்தை இறுக்கி அழகையுண்டாக்கும். ()

விடத்தேரின்பிசின் குணம்

விடத்தேரின் றன்பிசின்றன் வெண்மேகம் போக்கு
மடுத்த பிரமேகத்தை யாற்றுந்-தொந்தக்
மேகக் கரப்பானைவிட்டோட்டு மென்றுலகி
ஞகரிக மாதே நவில்.

(இ-ள்.) நாகரீகமாதே! விடத்தேரின் பிசின் வெண்மேகம் சீழ்ப் பிரமேகம் மேகவெப்பத்தால் வந்தகரப்பன் ஆகியவைகளை விலக்கும்.

Digitized By Roja Muthiah Research Library

அடப்பமரத்தின்பிசின் குணம்-இதுவே வாகுமையாம்

நெஞ்ச முரக்கு நிகழுவிந்து யுங்கட்டும்
நஞ்சு மருந்துகளு நல்லமிர்தாம்-விஞ்சுகயக்
கோழை யடக்குங் குலவா துமை யெனவே
வாழை யுடம்பின் சலிக்குமாற்.

(இ-ள்.) அடப்பமரத்தின் பிசினால் சுக்கிலத்திற்குத் தடிப்புண் டாவதுமன்றி விஷமான மருந்துகளும் அமிர்தமாம் சயத்தினால் அதிக ரித்த கபக்கோழையானது தந்நிலையைவிட்டுப் பெயரா தடங்கும். 534

கருவேலம்பிசின் குணம்

நீத்தொழுகும் விந்துவை நிலைக்கப் புரியுமெரி
பூத்தொழுகும் வெள்ளைதனைப் போக்குமிம்-மாத்திரமோ
தேசுதரு முரமுஞ் செய்யும் பெரியோராற்
பேசு கருவேலம் பிசின்.

(இ-ள்.) கருவேலம் பிசினானது நீத்துப்போன சுக்கிலத்தை இறு கச்செய்வதுமன்றி எரிச்சலோடு விழுகின்ற சீழ்ப்பிரமேகத்தையும் நீக் கும். அழகையும் உண்டாக்கும் என்க. 535

ஆவாரைப்பிசின் குணம்

பெருநீர் மறிக்கும் பிரமேகம் போக்கும்
வருநீர்ச் சுறுக்குதனை மாற்றுந்-தருநீர்மை
பூணுமேனிக் கமலப் பொன்னே பீடகரெலாம்
பேணு மேகாரிப்பி சின்.

(இ-ள்.) அழகுபொருந்திய கமலமின்னனைய காரிகையே! ஆவா ரைச்செடியின் பிசினானது வெகுமூத்திரத்தையும் பிரமேகரோகத் தையும் வாதகிரிச்சுரத்தையும் போக்கும் என்க மேகாரி-ஆவாரை. ()

புற்பிசின் குணம்

நெஞ்சிற் குரஞ்சலம்போ நீத்தவிந்து விற்குறுதி
வஞ்சியர்தம் போகத்தில் வன்மையா-நஞ்சைத்
தடவியகூர் வாளென்னச் சாற்றும் விழியா
யடவிவரு புற்பிசினென் றால்.

(இ-ள்.) நஞ்சைத்தடவிய கூர்வாளனைய விழியாளே! காட்டிலுள்ள புற்பிசினால் மார்புக்கும் நீரான சுக்கிலத்துக்கும் சையோகத்திற்கும் அதிகபல முண்டாக்கும். 537

Digitized By Roja Muthiah Research Library

மரத்தின் இலைவகை

மரியங்கொழுந்தின் குணம்

வாயருசி நீர்ச்சுரப்பு வாந்தி கடிதேகுப்
பேயிரத்த சீதமென்ற பேதியறும்-பாயு
மரியங்க மொத்தவிடை யாரா வமிர்தே
மரியங் கொழுந்தை வழுத்து.

(இ-ள்.) அரியங்கமொத்த இடையையும் அமிர்தத்தை நிகர்த்த மொழியையுமுடைய பெண்ணே! மரியங்கொழுந்தினால் அரோசகம் வாயில் சலமூறல் வமனம் ரத்தாதிசாரம் சீதபேதி ஆகியவைநீங்கும்.

கருவேல்கொழுந்தின் குணம்

கண்டாலு வின்றளிரைக் கல்லிலரைத் துத்தயிரி
லுண்டாற் பாஷாணவெப்ப மோடுங்காண்-கண்டாவி
வந்தவசிப் பேருமதை மாதர்பாலா லரைத்து
வெந்தவடை கண்ணிலொத்த வே.

(இ-ள்.) கருவேலங்கொழுந்தைத் தயிரிலரைத்துக்குடிக்க பாஷாணவேகம் நீங்கும் முலைப்பாலிலரைத்து அடைதட்டிக் காய்ந்தசட்டியி லிட்டு வெதுப்பி அறப்சூடாக ஒத்தடமிடில் கண்சிவப்புமாறும் கண்டாலு-கருவேல். 539

புளியிலையின் குணம்

அழுபுண்ணை நீக்கு மடற்சோபை மாற்று
மெழுபாண்டு வைப்போக்கு மிப்பான்-முழுது
மளியச் சிவந்தகண்ணோ யாற்றுங் கனலாம்
புளியிலையை நன்றாய்ப் புகல்.

(இ-ள்.) வெப்பமுள்ள புளியிலை அளிந்தவிரணம் சோபரோகம் பாண்டுரோகம் சிவந்தகண்ணோவு இவைநீங்கும் என்க. 540

வேப்பிலையின் குணம்-இதுவேநிம்பம்

கிருமிகுட்ட மாந்தங் கெடுவிடஞ் சுரங்கள்
பெருமிய வசூரிகையின் புண்க-ளொருமிக்க
நிம்பத் திலையிருக்க நீடுலகி னீங்காமற்
கம்பத் திலையிருக்கக் காண்.

(இ-ள்.) வேப்பிலையினால் புழுக்கள் பெருவியாதி மாந்தம் மகாவிஷம் சுரரோகங்கள் அம்மைக்கொப்புள விரணம் இவைகளொழியும்.

Digitized By Roja Muthiah Research Library

முருங்கையிலையின் குணம்

செறிமந்தம் வெப்பந் தெரிக்குந் தலைநோய்
வெறிமூர்ச்சை கண்ணோய் விலகு-மறமே
நெருங்க யிலையொத்தவிழி நேரிழையே நல்ல
முருங்கை யிலையை மொழி.

(இ-ள்.) வேலையொத்த கண்களையுடையாளே! முருங்கையிலையால் அக்கினிமந்தம் உட்சூடு சிரஸ்தாபரோகம் பித்தமூர்ச்சை கண்ணோவு ஆகியவை நீங்குமென்க. 542

அகத்தியிலையின் குணம்

மருந்திடுதல் போகுங்காண் வன்கிரந்தி வாய்வாந்
திருந்த வசனஞ் செரிக்கும்-வருந்தச்
சகத்திலெழு பித்தமது சாந்தியாம் நாளு
மகத்தியிலை தின்னு மவர்க்கு.

(இ-ள்.) அகத்தியிலையை உண்ணில் இடுமருந்தும் பயித்தியதோஷமும் நீங்கும். கடுவானும் வாய்வுமுண்டாம் போஜனசீரணமாம். 543

செவ்வகத்தியிலையின் குணம்

செவ்வகத்திப் பன்னுஞ் சிலேத்மமதை யுண்டாக்கும்
வவ்வுபல சிந்தூரம் வைப்பதற்காங்-கவ்வு
நவநீத பஸ்மமதை நாளு முடிப்பிக்குஞ்
சிவமாக்குந் தாளகத்தைத் தேர்.

(இ-ள்.) செவ்வகத்தியிலை கபதோஷத்தை யுண்டாக்கும். பற்பல சிந்தூரம் நவநீதபஸ்பம் தாளகசுத்தி இவைகளைச் செய்வதற்குதவும்.

பசுமுன்னைஇலையின்குணம்-இதுவே நறுமுன்னை.

வாயருசி சோபையைய மாறுக் கரப்பனெழும்
வாயுமந் தாக்கினி மயக்கமென்ற-நோய்க
ளறுமுன்னை யுண்ணுவர்கட் காழி யுலகி
னறுமுன்னை தன்னிலையை நாடு.

(இ-ள்.) பசுமுன்னையிலையால் அரோசகம் வீக்கம் கபம் கரப்பான் இவையுண்டாம். வாததோஷமும் அக்கினிமந்தமும் மயக்கமும்போம்.

கருவேப்பிலையின் குணம்

வாயி னருசி வயிற்றுளைச்ச லீடுசுரம்
பாயுகின்ற பித்தமுமென் பண்ணுந்தான்-தூய
மறுவேறு காந்தளங்கை மாதே யுலகிற்
கருவேப் பிலையருந்திற் காண்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) வாசனைபொருந்திய காந்தள் மலரனைய கைகளையுடைய மாதே! கருவேப்பிலையால் அரோசகம் சீதபேதியால்வரும் வயிறுளைவு புராதனசுரம் பயித்திய தோஷம் ஆகியவைகள் போகும். 546

சிற்றுழா பேருழா-இவ்விலைகளின் குணம்

சிற்றுழா மூலரத்தஞ் சீழ்மூலம் போக்கிவிடு
மற்றதொரு பேருழா வாய்த்திடினோ-உற்றகுத
மூன்றும் வலைய முளையாசனக் கடுப்பைத்
தோன்றா தகற்றிவிடுஞ் சொல்.

(இ-ள்.) சிற்றுழாமரத்தின் இலையானது ரத்தமூலத்தையுஞ் சீழ் மூலத்தையும் போக்கும். பேருழாமரத்தின் இலையானது ஆசனவளையம் மூன்றிற்குள் உள்வளையமுளையையும் குதக்கடுப்பும் ஒழியும். 547

தெங்கு பனை இவைகளின் குருத்துக் குணம்

தென்னங் குறுத்தாற் சிலேத்ம வலிநீங்கும்
மன்னுதிர மூலமது மாறுங்கா-ணுண்ணும்
பனங்குறுத்தைத் தின்றாற் பகருதிர மூலங்
கனம்பெருகும் பேதியுமாங் காண்.

(இ-ள்.) தென்னங்குருத்தால் கபவுபத்திரவமும் ரத்தமூலமும் நீங்கும். பனங்குறுத்தால் ரத்தமூலமும் அதிசாரமும் உண்டாம். 548

பேரீச்சு சிற்றீச்சு இவைகளின் குருத்துக்குணம்

பேரீச்சுத் தன்குருத்தைப் பேணியே தின்பவருக்
கீரீச்ச குன்மவலி யேகுங்கா-ணூரிற்
சிறியயீச்சுக் குருத்தைத் தின்றால் வயிற்றின்
மறியுதிர வாயுவறும் வாழ்த்து.

(இ - ள்.) பேரீச்சுக்குருத்தால் சிலேத்மகுன்மம்போம். சிற்றீச்சுக்குருத்தால் வயிற்றில் கட்டுப்பட்ட ரத்தவாத குன்மம்போம். 549

மூங்கில் இலையின் குணம்

குடற்கட்டிச் சூலையுடன் குன்ம முதிர
முடற் கெட்டாதோடி யொழியு-மடற்றங்கு
வேல்விழி மாதேகேளாய் வேயினிலை தனக்குக்
கால்வழியுஞ் சோணிதம்போங் காண்.

(இ-ள்.) வேல்விழி மாதே! மூங்கிலிலைக்கு குடற்சூலையும் வயிற்று நோவும் ரத்தத்தடிப்பும் பிரசவகாலத்திற்றங்கிய அழுக்கும் நீங்கும். ()

Digitized By Roja Muthiah Research Library

செடியின் இலைவகை

ஆடாதோடையிலையின்குணம்

ஆடாதோடைப் பன்ன மையறுக்கும் வாதமுதற்
கோடாகோடிச் சுரத்தின் கோதொழிக்கு-நாடின்
மிகுத்தெழுந்த சந்நிபதின் மூன்றும் விலக்கு
மகத்துநோய் போக்கு மறி.

(இ-ள்.) ஆடாதோடையிலை கபாதிக்கம் வாததோஷம் பற்பல சுரம் சந்நிபாதம்-13 வயிற்றுநோய் ஆகியவைகளை நீக்கும். 551

வெண்நொச்சில் இலையின் குணம்

நாசந் தருவாத நாசிப்பிணி யழல்சு
வாசந் தசனவுரு வன்றோடங்-காசமற
லுச்சி யடையை யுறைநோயு மென்படுமோ
நொச்சி யடையை நுவல்.

(இ-ள்.) வெண்நொச்சிலிலையால் மகாவாதம் பீநசம் சுரம் இரைப்பு தந்தவலி திரிதோஷம் இருமல் நீரேற்றம் கபசிரஸ்தாபம் இவைகளை விலக்கும். 552

கருநொச்சில் இலையின் குணம்

வாதக் கடுப்பகலு மாறுத பீநசம்போ
மோதப் பேயோடி யொளிக்குங்காண்-வேதைசெய்யு
மண்டைக் குடைச்சலறும் மாசில்கரு நொச்சிலுக்குப்
பண்டைத் தலைவலிபோம் பார்.

(இ-ள்.) கருநொச்சில் இலையால் வாதவலி நாசிகாரோகம் கபம் மண்டைக்குடைச்சல் சிரஸ்தாபரோகம் இவைகள் நீங்கும். 553

வெள்ளாமணக்கிலையின் குணம்

மந்தங் கதித்தெழுந்த வாத மருமவலி
பந்தமல மியாவும் பறக்குங்காண்-சந்ததமும்
பூமணக்கு நெய்த்த புரிகுழன் மாதேவெள்ளை
யாமணக்குப் பத்திரியா லாய்.

(இ-ள்.) புட்பங்கள் பரிமளிக்கும் நெய்த்த புரிகுழன்மாதே! வெள்ளாமணக்கு இலையால் அக்கினிமந்தம் வாதவலி மார்புநோய் மலக்கட்டு ஆகியவைகள் போமென்க. 554

Digitized By Roja Muthiah Research Library

செவ்வாமணக்கிலையின் குணம்

குன்மமொடு மந்தங் கொடுவாத மெய்வலியுஞ்
சன்மமட்டு வாராமற் றுண்டுங்கா-ணன்மைதரு
மெய்வா மணக்குகட்கு மேற்றமென்பார் காந்தியுள்ள
செவ்வா மணக்கிலையைச் சேர்.

(இ-ள்.) செவ்வாமணக்கு இலையால் வயிற்றுநோவு செரியாமந்தம் வாதகோபம் தேகக்கடுப்பு இவைகள் விலகும். 555

செம்பையிலையின் குணம்

கட்டியொடு வீக்கங் காயது ணீரேற்ற
மொட்டிவரு வாதகப மோட்டுவது-தொட்டுவிடு
மம்பயிலை வேலைவென்ற வங்கண் மடமாதே
செம்பையிலை வேலையெனத் தேர்.

(இ-ள்.) அம்பயிலைவேலைவென்ற அழகியகண்களை யுடையாளே! செம்பயிலையால் வாயுவின்கட்டிகள் சோபை சரீர நீரேத்தம் வாதசிலேஷ்மதொந்தம் ஆகிய இவைகள் ஒழியும் என்க. 556

கருஞ்செம்பையிலையின் குணம்

விப்புருதிப் புண்ணுறும் வீறுகரப் பானும்போந்
தப்பாமன் மேகந் தணியுங்காண்-வெப்பார்
கபரோக மேகுங் கருஞ்செம்பை யொன்றுக்
கிபமா முலைமாதே யெண்.

(இ-ள்.) யானை மத்தகம்போன்ற தனத்தாளே! கருஞ்செம்பை இலையால் விப்புருதிக்கட்டி கரப்பான் பிரமேகம் பித்த சிலேஷ்மதொந்தம் ஆகிய இவைகள் போகும் என்க. 557

வறட்பூலாயிலையின் குணம்

சீதரத்தஞ் சேர்ந்தேனுஞ் சேர்க்கையின்றி யேனும்வரு
பேதிகள் வயிற்றின் பிடுங்கலினு-பாதிகளும்
பூதலத் திராநல்வறட் பூலாவிலை யரைத்து
மேதித் தயிருலுண்ண வே.

(இ-ள்.) வறட்பூலா இலையை யரைத்து எருமைத்தயிரிற் கரைத்துக்குடிக்கில் சீதரத்தமும் கலந்தாவது தனித்தாவது காணுகின்ற பேதிகளும் இதுகளாலுண்டாகிற வயிற்றுநோயும் ஆயாசமும் விலகும்.

Digitized By Roja Muthiah Research Library

பாவட்டையிலையின் குணம்

தீதவாதங் களறுந் தீபனமோ வுண்டாகும்
வாதங் கபமொழியும் வார்குழலே-போதவே
ஆவட்டைத் தாச்சுர மற்றுவிடுந் தோஷம்போம்
பாவட்டைப் பத்திரிக்குப் பார்.

(இ-ள்.) நீண்டகுழலாளே! பாவட்டை இலையால் சிலேஷ்மவாதம் வாதகபதோஷம் ஆயாசம் தாபசுரம் திரிதோஷம் ஆகிய இவை போம். பசியுண்டாக்கும். 559

பெருஞ்சின்னியிலையின் குணம்

காணுக் கடியுமெதிர் கண்ட விஷக்கடியு
நாணு திரந்திடவு ஞாயமுண்டோ-தோணு
வருஞ்சின் மதலைமொழி மாதரசே கேளாய்
பெருஞ்சின்னி மூலியுண்ட பேர்க்கு.

(இ-ள்.) மதத்தொழி மாதரசே! பெருஞ்சின்னி இலைக்குக்காணுக் கடிவிஷமும் பார்க்கும்படிக்குக் கடித்த பற்பல செந்து விஷங்களும் நீங்குமென்க. 560

சிறுசின்னியிலையின் குணம்

கடிவிஷமும் காணுக் கடிவிஷமு மாத
ரிடுவிஷமு மோடுமிது வன்றி-நெடியவிழிக்
கன்னிகையே மேகங் கணக்காச்சல் மாந்தமும்போஞ்
சின்னி யிலைக்குத் தெறித்து.

(இ-ள்.) காதளவோடி நீண்டகண்ணுளே! சிறுசின்னியிலைக்கு வண்டு முதலிய கடிவிஷங்கள் இன்னதெனத் தெரியக்கூடாத செந்துக் களின் விஷங்கள் இடுமருந்து பிரமேகம் கணச்சுரம் அக்கினி மந்தம் ஆகிய இவைகள்போமென்க. 561

தழுதாழையிலையின் குணம்

வாதம் பிடிப்பென்ற வற்காலியைப் புலிபோற்
போதப் புசிக்கும் புகல்வற்றே-காத
அழிதாழைப் பீனசத்தை யண்டா தகற்றுப்
தழுதாழைப் பன்னமது தான்.

இதுவுமது

சேர்ந்த சொரிசிரங்கைத் திண்வாதக் கூட்டத்தை
யாய்ந்தொழிக்கும் பித்தை யழைக்குமந்த-மோய்ந்திடா
ஐயின் சுரந்தணிக்கு மான தழு தாழையது
மெய்யின் கடுப்பகற்றும் விள்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) தழுதாழையிலை பக்கவாத முதலிய 80-வாதரோகங்கள் சிலேஷ்மபீனசம் புடைகிரந்தி ஆவிருதவாதங்கள் மந்தகபசுரம் தேக குடைச்சல் இவைகளை நீக்கும். பித்தத்தை யுண்டாக்கும். 562

விராலியிலையின் குணம்

ஆன்ற துரிசிரீ ருகமனத் துன்னினவே
ரூன்ற வருகட்டி யோடதைப்பு-தோன்றிற்
சுராலிக் குதலையிளந் தோகாய் விரைவாய்
விராலிக் குழையோடு விள்.

(இ-ள்.) குதலைச்சொற்களையுடைய மயிலனையாளே! விராலியிலை பெருமைதங்கிய துரிசை வெளுப்பாக்குவதுந்தவிர அடிகனத்த கட்டிகளையும் வீக்கத்தையும் போக்கும். குழை-தளிர். 563

எருக்கிலையின் குணம்

எலிவிஷங் குஷ்டமைய மேறு கிருமி
எலிசூலை வாயு விஷமந்தம்-மலபந்த
மெல்லா மகலு மெருக்கிலையைக் கண்டக்கால்
வில்லாரு நன்னுதலே விள்.

(இ-ள்.) வில்போன்ற நன்னுதலாளே! எருக்கிலையினால் எலிவிஷம் பெருவியாதி சிலேஷ்மநோய் கிருமிரோகம் ஐவகைவலி இசிவு வீக்கம் தனிவாதகோபம் சர்ப்பவிஷம் அக்கினிமந்தம் மலக்கட்டு ஆகிய இவைகளை நீக்கும் என்க. 564

காட்டாமணக்கிலையின் குணம்

கட்டி விரணங் கரப்பான் பிலீகமதி
கொட்டியுறு குன்மங் கிளைத்தசிரங்-கொட்டுமோ
கூட்டோ டொழியுங் குவடனைய கொங்கைமின்னே
காட்டா மணக்கிலையைக் கண்டு.

இதுவுமது

காட்டா மணக்காற் கபவாத சூலையுடன்
வீட்டு தலைநோய் விரிகிரந்தி-வாட்டுகின்ற
உண்மூலம் போகு முடம்புலாதல் வெட்டையறும்
திண்மூல தாதுவுமாஞ் செப்பு.

(இ-ள்.) மலைகளைநிகர்த்த கொங்கையுடையாளே! காட்டாமணக்கு இலையினால் மேகக்கட்டி புண் கரப்பான் பீலிகம் குன்மக்கட்டி ஜனிக்

Digitized By Roja Muthiah Research Library

இன்ற விரணங்கள் சிலேட்மவாதக்குத்தல் சிரஸ்தாப ரோகம் பெரு விரணம் வருத்தாநின்ற உள்மூலம் உள்ளுருக்கு வெள்ளை இவைகளை போக்கும் சுக்கிலவிருத்தியுண்டாம். 565

தவசுமுருங்கிலையின் குணம்

தவசு முருங்கைத் தழையதற்குக் கேளா
யவசியம் பீநச முண்ணுக்கு-முவசர்க்கி
யைஞ் சுவாசகப மண்டாது குத்திருமல்
வையம் விடுத்தேகும் வழுத்து.

(இ-ள்.) தவசு முருங்கையிலைக்கு வாதபீனசம் உபஜிக்வாதரோகம் தொந்தநோய் கபம் சுவாசம் பொடியிருமல் இவைகள் நீங்கும். உவசர்க்கி-தொந்தநோய். 566

வேதுப்படக்கிலையின் குணம்

வெள்ளொடுப்பு சீதம் வெதும்பல் சுரத்துடனே
யள்ளொடுக்கு மாந்த மதிவாதத்-தெள்ளுமொழி
மாதே வெதுப்படக்கி வன்றழையுட் காய்ச்சலொடு
கோதே ரிரத்தமும்போக் கும்.

(இ-ள்.) தெள்ளுமொழிமாதே! வெதுப்படக்கியின் யிலையானது வெளுப்பானபேதி சிலேத்மக்கிராணி தாபம் ரூட்சை அள்ளுமாந்தம் வாதாதிக்கம் உட்சுரம் ரத்த தாதுவிலுண்டாகின்ற மலினம் ஆகிய இவைகளைப் போக்கும். 567

பெரியாநங்கையிலையின் குணம்

பெரியாநங்கைத் தழைக்குப் பித்தமென்ப தெல்லாந்
தெரியாம லோடுமிது திண்ணம்-பிரியா
மலமறுக்கும் பஸ்பவகை வைப்பதற்கு மாகுஞ்
சிலைநுதலே நன்றாய்த் தெரி.

(இ-ள்.) சிலைநுதலாளே! பெரியாநங்கையிலைக்கு பித்தரோகங்களும் மலபந்தமும் நீங்கும். இது பலவித பஸ்மங்கள் செய்வதற்கு முதவுமென்க. 568

சிறியாநங்கையிலையின் குணம்

சிறியாநங்கைத் தழையைச் சேவித்த பேரைப்
பிறியாற் மடந்தையர்கள் பின்னு-மறியதிலி
டங்கண்மும் நீறுங் தனியழகு முண்டாகுந்
திங்கண்முக மாதே தெளி.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) திங்கண்முகமாதே! சிறியாநங்கை என்னுமூலி ஸ்திரீ வசியத்தைச் செய்யும் வெங்காரத்தைப் பஸ்மமாக்கும். தேகத்தில் வனப்பை உண்டாக்கும். டங்கம்-வெண்காரம். 569

பருத்தியிலையின் குணம்

பருத்தியிலை மொட்டிரண்டைப் பாலிலரைத் துண்ண
வருத்துகின்ற மேகமெல்லா மாறும்-பருத்த
விரத்த பித்தத்தோடு விரணவீக் கம்போ
மரத்த விதழ்மாதே யறை.

(இ-ள்.) சிவந்த அபரத்தாளே! பருத்தியினது இலையையாவது மொக்கையாவது பலம் அரைத்து அரை ஆழாக்குப் பசும்பாலில்கரைத் துண்ணில் சீழ்மேகமுதலிய மேகங்களும் ரத்தபித்தரோகமும் விரண சோபையும் நீங்கும். 570

கூத்தங்குதம்பையிலையின் குணம்

குத்துகின்ற நோய்போக்கும் கோரபித்த முண்டாக்கு
மத்திசெய்யுஞ் சந்நி யகற்றுங்காண்-சத்திக்கு
மாத்தங்கு வாய்மொழிக்கு மண்டூரத் திற்குதவுங்
கூத்தங் குதம்பைக் குரை.

(இ-ள்.) கூத்தங்குதம்பையிலை சூலரோகம் சந்நிபாதம் மகாவாத ரோகம் ஆகியவைகளை ஒழிக்கும். பித்தகோபத்தை விருத்திசெய்யும் மண்டூரத்தைச் செந்தூரஞ்செய்வதற்கும் உதவும். 571

அரிவாள்மூக்குப் பச்சிலையின் குணம்

வெட்டுக் காயத்தை விரைவி லுலர்த்திவிடுந்
துட்டக் கடுவோட்டுந் தோன்றிமிகக்-கெட்ட
பிரிவாற் றலையைப் பிளக்கும் வளிநீக்கு
மரிவாள் மூக்குப்பச் சிலை.

(இ-ள்.) அரிவாள் மூக்குப்பச்சிலை ஆயுதங்களாலுண்டாகிற காயத்தை சீக்கிரத்தில் ஆற்றுவதுந்தவிர மகாவிஷத்தையும் உதிரக்கெடுதியாற்பிறந்த சிரஸ்தாபரோகத்தையும்விலக்கும். தோன்றி-உதிரம். 572

துத்தியிலையின் குணம்

மூலநோய் கட்டி முளைபுழுப் புண்ணும்போஞ்
சாலவதக்கிக் கட்டத் தையலே-மேலுமதை
எப்படியேனும் புசிக்கி லெப்பிணியுஞ் சாந்தமுறு
மிப்படியிற் றுத்தி யிலையை.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) மாதே! துத்தியிலையை ஆமணக்குநெய்யால் வதக்கிக் கட்ட மூலரோகமும் கட்டிவிரணமுளைகளும் கிருமி விரணமும்போம். அதை எவ்விதமாவது பாகஞ்செய்துண்ணில் சகலரோகங்களும்போம்.

விழுதியிலையின் குணம்

விழுதித் தழைகரப்பான் வெண்மேகம் நீக்கு
பழுபடுவன் சூலை பறிக்கு-மெழுபேதி
யாக்கு மதிமந்த மகக்கிருமி துன்மலமும்
போக்கு மதுவே புகல்.

(இ-ள்.) விழுதியிலை கரப்பான் சுவேதப்பிரமேகம் வித்திரிதிக் கட்டி சரீரக்குத்தல் அக்கினிமந்தம் மலாசயக்கிருமி விரோதமலம் ஆகிய இவைகளைப்போக்கும். விரோசனத்தை உண்டாக்கும். 574

கணப்பூண்டினது இலையின் குணம்

கணப்பூண் டிலைமேகக் கட்டிமேகக் கரைக்கு
மணக்குமிக வாய்க்கு மதுரஞ்-சிணுக்கான
வாதகணம் பித்தகண மாற்றுங் கபச்சுரத்தின்
பேதமறப் போக்குமெனப் பேசு.

(இ-ள்.) பரிமளமும் வாய்க்குமதுரமுமுள்ள கணப்பூண்டின் இலையானது மேகநீராற்பிறந்த கட்டிகளைக்கரைக்கும் தேரைக்கணம் ஆமக்கணம் சிலேஷ்மசுரங்கள் ஆகிய இவைகளைவிலக்கும். 575

காரை, சேம்பு இலைகளின் குணம்

காரைத் தழைக்குக் கடுப்பித்தம் போம்புளியைச்
சோரப் பெய்தாக்கிச் சுவைத்தறிநீ-பாரிலுள்ள
சேம்பிலைக்கு நற்புளியைச் சேர்த்து சமைத்துண்டாற்
கூப்பிட்ட மூலமறுங் கூறு.

(இ-ள்.) புளியிட்டுக்கடைந்த காரையிலைக்கு ரத்தக்கடுப்பு விலகும் அவ்வாறுசமைத்த ஊர்ச்சேம்பிலைக்குச் சுஷ்கமூலம் நீங்கும். 576

பிடங்குநாறியிலையின் குணம்

பிடங்குநாறிப் பன்னப் பேச்சை யெடுக்கி
லடங்கு மலச மிஃதன்றித்-தொடங்குகின்ற
நீர்ச்சுரப்பும் வாங்கிவிடு நீடுசட ராக்கினியாந்
தேர்ச்சியுறும் புத்திக்குத் தேர்.

(இ-ள்.) பிடங்குநாறியிலையால் செறியாமமந்தமும் ஆரம்ப சலக்கோவையும் போகும். சடராக்கினியும் புத்திக்குத்தெளிவும் உண்டாம்.

Digitized By Roja Muthiah Research Library

அவுரியிலையின் குணம்

உரிய வவுரித்தழைதா ளேது பதினெண்
ணரியநஞ்சைத் தின்றவர்க்கு மாகுந்-தெரிவரிய
வாதவெப்பு காமாலை மைந்தர்க்குறு மாந்தந்
தேக மகற்றுந் தெரி.

இதுவுமது

சந்நிபதின் மூன்றுஞ் சந்தொடித்த வாதமுத
லுன்னு விஷக்கடியு மோடுங்காண்-மின்னுங்
கவுரிநிற முண்டாகுங் காசினி யுளைநல்
லவுரி யிலையா லறி.

(இ-ள்.) அவுரியிலை தாவரக் கந்தமூலவிஷங்கள் 18-ம் வாதசுரம் காமிலம் மாந்தம் சீதளம் சந்நிபாதங்கள் கீல்வாதம் சர்ப்பவிஷம் இவைகளையும் நீக்கும். உடற்குப் பொன்னிறந்தரும். 578

குப்பைமேனியிலையின் குணம்

தந்தமூலப் பிணிதீத் தந்திடுபுண் சர்வவிஷ
முந்துகுன்மம் வாத முதிரமூ-லந்தினவு
சூலஞ் சுவாசந் தொடர்பீநசங் கபம்போம்
ஞாலங்கொண் மேனியத னால்.

(இ-ள்.) குப்பைமேனியிலையால் தந்தமூலநோய் தீச்சுட்டபுண் தாவர சங்கமவிஷங்கள் வயிற்றுவலி வாதரோகம் ரத்தமூலம் நமைச்சல் குத்தல் இரைப்பு பீநசம் கபாதிக்கம் ஆகியவை நீங்கும். 579

மிளகுத்தக்காளியிலையின் குணம்

மந்தாக்கினி சோபை வாந்திகழல் வாயுவெப்ப
மிந்துநோய் பாண்டோ டெதிர்விக்கன்-முந்த
வளருமுத் தோஷநோய் மாற்றுங் கைப்பான
மிளகுத் தக்காளியிலை மெய்.

இதுவுமது

மிளகுத்தக் காளியிலை வெண்ணுகங் கட்டு
மிளகுபற் சிந்தூரத்திற் கேகும்-கொளுவுகின்ற
மேகச் சொறியகற்றும் வெட்டையனற் றணிக்கு
மாகச் சணிமுலையாய் வாழ்த்து.

(இ-ள்.) கச்சணிந்த முலைகளையுடையாளே! கசப்புள்ள மிளகுத் தக்காளியிலை அக்கினிமந்தம் வீக்கம் சத்தி பாதாக்ஷேபகவாதம்

சுரம் சோமரோகம் பாண்டு விக்கல் திரிதோஷ நோய்கள் மேகச்சொறி வெள்ளை உட்சூடு இவைகளை நீக்கும். வெள்ளியத்தைக்கட்டும் பலவித சிந்துாரங்களுக்குதவும். 580

தும்பையிலையின் குணம்

சீறுகின்ற பாம்போடு சிலவிஷங்கால் சென்னிவலி
யேறுகப மாந்த மிருக்குமோ-நாறுமலர்க்
கொம்பனைய மாதே குளிர்சீத சந்நிவிடுந்
தும்பையிலை யென்றுருகாற் சொல்.

இதுவுமது

தும்பையிலை யையுண் ணுஞ் சோற்றுக் கெலாங்கறியா
யம்புவியோர் மிக்க வருந்துங்கால்-வெம்பிவரு
மேகமொடு கண்புகைச்சல் வீறுகை காலசதி
தாகமதி சோம்பலுறுந் தான்.

(இ-ள்.) மலர்க்கொம்பனைய மாதே! தும்பை யிலையால் சர்ப்பகீட விஷங்கள் வாதநோய் தலைவலி கபதோஷம் அக்கினிமந்தம் சிலேஷ்ம சந்நி இவை நீங்கும் இதை புளியிட்டுக் கடைந்து உணவோ டருந்தில் பிரமேகம் நேத்திரப்புகை கால்களின் அசதி தாகம் சோம்பல் இவை உண்டாம். 581

முள்ளங்கியிலையின் குணம்

வாயு மிகும்பித்தம் வளருங் கிருமியுமா
மோய்வுரு நெஞ்செரிவு முண்டாங்காண்-யேயுநிற
முள்ளாங்கி யிலையை முற்றுமுண்டாற் குன்மவலி
யுள்ளாங் கிளம்பா துரை.

(இ-ள்.) முள்ளங்கியிலையால் வாதகோபம் பித்தநோய் கிருமரோகம் மார்பெரிச்சல் ஆகிய இவையுண்டாகும் வயிற்றுநோயடங்கும். 582

சுவற்றுமுள்ளங்கியிலையின் குணம்

நீரை யிறக்கிவிடு நெஞ்சுவலியைத் தொலைக்குங்
கோர வதைப்பைக் குடிகெடுக்கு-நேரே
தவத்திலுயர்ந் தோர்மயங்குஞ் சாயகக்கண் மாதே
சுவற்று முள்ளாங்கியது சொல்.

(இ-ள்.) தவத்திலுயர்ந்தோர் மயங்குகின்ற சாயகத்தை நிகர்த்த கண்களையுடைய மாதே! சுவற்று முள்ளாங்கி யிலையானது நீர்க்கட்டையும் மார்நோயையும் வாதசோபரோகத்தையும் போக்கும். 583

Digitized By Roja Muthiah Research Library

கறுப்பு வழுதுணையிலை, பருவழுதுணைவேர், சிறுவழுதுணைவேர் இவைகளின் குணம்

வழுதுணையின் பேதம் வழுத்தின் மிகுநோக்காம்
வழுதுணைக டம்மை நவில்வாமை-வழுதுணைப்பன்
னஞ்சலம் போக்குங்கா லடக்கும் பருதுசன்னம்
பஞ்சமூலத்தி லொன்றாகும் பார்.

(இ-ள்.) வழுதுணை செடி வகைகளைக்கூறில் மிகவும் பெருகும் இவற்றுள் பிணிக்குதவுகின்றவைகளை மாத்திரம் சொல்வாம். வழுதுணையிலை நீர்க்கட்டையும் பருவவழுதுணைவேர் வாதநோயையும் நீக்கும். சிறுவழுதுணைவேர் பஞ்சமூலத்தில் ஒன்றாயிருந்து பலபிணியையும் விலக்கும். மை-கருப்பு. 584

புகையிலையின் குணம்

மருந்தை முறித்துவிடும் வாய்வளரச் செய்யுந்
திருந்து பலவினஞ் சேர்க்கும்-பொருந்துபித்த
முண்டாக்கும் விந்தழிக்கு மோது புகையிலையைக்
கண்டார்க்கு மாகாது காண்.

(இ-ள்.) புகையிலை வாய்வறட்சி துர்ப்பலம் பித்தாதிக்கம் சுக்கில க்ஷீணம் இவைகளை விளைக்கும். நல்லமருந்தையும் முறிக்கும். 585

கொடியின் இலைவகை

தூதுளையிலையின் குணம்

காதுமந்தங் காதெழுச்சி காசந் தினவுமத
மோதுமந்த முத்தோஷ முட்சூலை-தாதுநட்ட
மீதுளைப் பத்திரியை மேவச்செய் வாராய்ந்தோர்
தூதுளைப் பத்திரியைத் துய்த்து.

(இ-ள்.) தூதுளையிலையால் காதுமந்தம் காதெழுச்சி காசம் நமைச்சல் மதரோகம் அக்கினிமந்தம் திரிதோஷம் உட்குத்தல் விந்துநஷ்டம் மேலிளைப்பு ஆகிய இவைகள் விலகும். 586

பறங்கி இலையின் குணம்-இதுவே பூசினி

பித்தமொடு வாதம் பெருந்தாக மும்பெருகும்
சத்தமொடு பேதி தலைப்படுங்காண்-சுற்றுங்
கறங்காகு மேனியுள்ளே கவ்வுபுழுச் சேரும்
பறங்கி யிலைக்குப் பகர்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) பறங்கியிலைக்குப் பித்தகோபம் வாதாதிக்கம் அதி தாகம் இரைகின்றபேதி சரீரப்படபடப்பு கிருமி இவைகளுண்டாம். 587

சுரையிலையின் குணம்

நீரிழிவும் வீக்கம்போ நேரே மலமிறங்கும்
பாரமுறு சோபை பறக்குங்காண்-தீராத்
திரிதோஷம் போகுஞ் செறிந்த சுரையி
னுரிய கொழுந்திலையை யுண்.

(இ-ள்.) நீரையிரக்காநின்ற சுரையிலையால் சோபரோகம் தேக வீக்கம் நீங்காமுத்தோஷங்கள் இவைபோம் மலமிளகி யிறங்கும். 588

பேய்ச்சுரையிலையின் குணம்

மூல ரோகத்தின் முளையைக் களைந்துவிடு
மால விஷத்தையு மகற்றுங்காண்-ஞாலமதில்
வாய்ச்சி விடங்கிட்டுவது மாவருத்தம் வெற்பிலுறும்
பேய்ச்சுரையின் பத்திரத்தைப் பேண்.

(இ-ள்.) மலையில் முளைத்த பேய்ச்சுரை யிலையானது முளை மூல ரோகத்தையும் கொடிய சர்ப்பவிஷத்தையும் கெடுக்கும். 589

பாகல் இலையின் குணம்

பிரியாக் கிருமியறும் பேதியுண்டாந் தோஷ
முறியு மிரத முறியுங்-குறியாத
மாகற்புடைய மடமயிலே யெப்போதும்
பாகற் றழைக்குப் பயந்து.

(இ-ள்.) மாகற்பினையுடைய மாதே! பாகல் இலைக்கு கிருமிரோகமும் திரிதோஷகோபமும் நீங்கும். விரேசனமுண்டாகும். இதனல் பாதரசவேகம் முறியும். 590

அவரை இலையின் குணம்

அவரையிலைக் குத்தலைநோ யாழ்ந்த கிராணி
யுவரும் விஷமுத லேகந்-தவறுமற்
கொண்டவர்க்குத் தீபனமாங் கோதாய் விரணமறுங்
கண்டவர்க்குத் தோற்றுமிது காண்.

(இ-ள்.) மாலைசூடிய கூந்தலாளே! அவரை இலைக்குச் சிரஸ்தாப நோய் கிராணி, விஷம் சிரோகம் சிரங்கு ஆகியவை விலகும் உதிராக்னியுண்டாகும் என்க. 591

Digitized By Roja Muthiah Research Library

காராமணி இலையின் குணம்

காராமணி யிலையைக் காய்ச்சியுண்டா லுவரிசை
வாராத வாயுமிக வந்துறுங்கா-ணேரேகேண்
மூலம் விளையு முசியாக் கழிச்சலுண்டாந்
தாலமதி லதனைத் தள்.

(இ-ள்.) உரிசையுள்ள காராமணியிலையைப் பாகஞ்செய்துண்டால் வாதநோய் வாதமூலம் நீங்காபேதியுமுண்டாகும். பூமியிலிதனைத்தள்.

கோடிக்குரிஞ்சாலையிலையின் குணம்

கரப்பான் கிரந்தி கடியவிரும் புண்காச
முரப்பாம் விஷபாக மோட்டு-நிரைப்பான
அக்கரத்தை மாற்றிவிடு மாயிழையே பித்தமுமாந்
தக்குறிஞ் சாவினிலை தான்.

(இ-ள்.) ஆயிழையே! பித்தகுணமுள்ள கொடிகுறிஞ்சாயிலை அரைக்கடுவன் சிரங்கு காசம் வலியவிஷபாகம் நாப்புண் இவை நீங்கும்.

கறிப்பாலை இலையின் குணம்

மேகமனல் வெட்டைசுரம் வீறுபித்த முந்தொலையும்
போகமுறு மெய்மருந்தும் பொய்மருந்தாம்-பாகுமொழி
மானே கறிப்பாலை மன்னுமிலை யைத்தினமுந்
தானே யருந்தவர்க்குத் தான்.

(இ-ள்.) பாகனையசொல்லையுடைய பெண்ணே! கறிப்பாலையிலையை தின்பவருக்கு பிரமேகவெப்பம் கீழ்மேகசுரம் பித்தகோபம் இவை நீங்கும். சுக்கிலவிருத்தியும் ஔஷதக்கெடுதியு முண்டாம். 594

ஊசிப்பாலையிலையின் குணம்

மேக மகலும் விழிகுளிரு நாளத்தின்
வேக மகலுமங்க மேனியிடும்-மோகமண
வாசிப் பாலைப்பருவ மாந்தரை வீக்குங்கொடியே
ஊசிப் பாலைப்பன்ன முண்.

(இ-ள்.) மோகமணவாசிப்பால் பருவமாந்தரைக் கட்டும் கொடி போல்பவளே! ஊசிப்பாலையிலையால் பிரமேகமும் ஆண்குறியினது துவாரவெப்பமும் தீரும். கண்குளிர்ச்சியும் தேகபுஷ்டியும் உண்டாம்.

கோவை இலையின் குணம்

கண்ணுங் குளிர்ச்சிபெருங் காசமொடு வாயுவறும்
புண்ணுஞ் சிரங்கும் புரண்டேகும்-நண்ணுமுடல்

Digitized By Roja Muthiah Research Library

மீதிலார் வெப்பகலும் வீழாநீர்க் கட்டேகும்
கோதிலாக் கோவை யிலைக்கு.

(இ-ள்.) கோவையிலைக்கு இருமல் வாதகோபம் பெருவிரணம் சிறு சிரங்கு தேகச்சூடு நீரடைப்பு இவைபோம். கண்குளிர்ச்சியுண்டாம். ()

முசுமுசுக்கை இலையின் குணம்

இருமலுட னீளை யிரைப்பு புகைச்சன்
மருவுகின்ற நீர்த்தோஷ மாறுந்-திருவுடைய
மானே முசுமுசுக்கை மாமூலி யவ்விலையைத்
தானே யருந்துவர்க்குத் தான்.

(இ-ள்.) அழகையுடைய பெண்ணே! மாமூலியாகிய முசுமுசுக்கை யிலைக்கு காசம் கோழை சுவாசம் நெஞ்சிற் புகைக்கம்மல் சலதோஷம் ஆகிய இவை நீங்கும். 597

கோழியவரை இலையின் குணம்

ஆழிசுற்றும் வையத் தடர்ந்த பேராமையொரு
காழினிற் கெட்டு நலியுங்காண்-தோழிசேர்
கோழியவரைத் தழைக்குக் குன்மங் குடல்வாத
மூழிவரைக்கும் வாரா தோர்.

(இ-ள்.) தோழியே! கடல்சூழ்ந்த வுலகில் கோழியவரையிலைக்கு வயிற்றிற் காணுகின்ற பருத்த ஆமக்கட்டியும் வயிற்றுநோயும் ஆந்திர பித்தவாதமும் போக்கும். 598

முசற்காதிலையின் குணம்

பீசத் தெழுத்த பெருவீக்கங் கைகாலில்
வீசிப் புடைத்த வெறுவீக்கம்-பேசாம
லேகுமுசற் காதிலை யிருக்குமுறை விட்டுப்
பாகுமொழி மாதே பகர்.

(இ-ள்.) பாகுமொழி மாதே! முசற்காதிலையால் குடலண்ட வீக்கமும் கைகால்களின் கீல்களைப்பற்றி வீங்கிய வீக்கமும் விலகும். 599

கழற்சியிலையின் குணம்-இதுவே வச்சிரம்

விரைவாதஞ் சூலையமும் வெட்டை யனலேகு
நிரைசேர்ந்த குன்ம நிலையா-துரைசே
ரழற்சி விலகு மருந்திற் கசப்பாங்
கழற்சியிலை யென்றுரைக்குங் கால்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) கசப்புள்ள கழற்சியிலையால் பீஜவாதம் சூலைக்கட்டு பிரமேகம் சுரம் பலவிதகுன்மம் உள்ளழலை ஆகியவை ஒழியும். 600

வெண்கழற்சி இலையின் குணம்

ஏறண்டத் தோடே யிரங்கண்ட மெத்தவுமே
வீறண்ட வெல்லாம் விலகுங்காண்-தூரண்ட
வள்ளைக் குழையடிபோல் வாள்விழி மாதேநல்ல
வெள்ளைக் கழற்சியிலை யின்.

(இ-ள்.) வள்ளைக்குதழயடிபோல் வாள்விழிமாதே! வெள்ளைக் கழற்சியிலை ஏறண்டரோகத்தையும் இறங்கண்ட நோயையும் தசையண்டப்பிணியையும் கெடுக்கும் என்க. 601

வரிக்குமட்டி இலையின் குணம்

பற்றுதிர பூச்சிகளைப் பற்பலவா மந்தத்தைச்
சுற்றுதிரப் பித்தத்தைத் தூவிடத்தை-முற்று
மரிக்குமட்டி யாயிலைமா தங்கருரை யன்றோ
வரிக்குமட்டி யாயிலை மாதே.

(இ-ள்.) பெண்ணே! வரிக்குமட்டியிலை ரத்தக்கிருமிகள் பலவித மந்தம் ரத்தபித்தம் தசையைப்பற்றிய சர்ப்பவிஷமிவைகளை விரைவிற் கெடுக்கும் என்க. 602

சிறுபூனைக்காலி இலையின் குணம்

சிறுபூனைக் காலியிலை சில்விஷத்தைப் போக்கு
முறுகாந் தத்தைச் சிந்தூரிக்குஞ்-சிறுமாந்த
மையங் கபந்தீர்க்கு மாந்தகப நோய்விலக்கும்
வையந் தனிலிதனை வாழ்த்து.

(இ-ள்.) சிறுபூனைக்காலியிலையானது வண்டுகடிமுதலிய சிலவிஷம் அற்பமந்தம் சிலேஷ்மகோபம் கோழைக்கட்டு க்ஷயரோகம் ஆகியவைகளை ஒழிக்கும் காந்தத்தைச் சிந்தூரஞ்செய்யும். 603

வேலிப்பருத்தி இலையின் குணம்-இதுவே உத்தாமணி

ஆவித் தெழுந்தநோ யத்தனையுந் தீருமே
வேலிப் பருத்தியதன் மெல்லிலையால்-வேலொத்துக்
கண்டிக்கும் வாதஞ் சன்னிதோஷ மும்போ
முண்டிக்கும் வாசனையா மோது.

இதுவுமது

உத்தா மணியிலையா லுள்வயிற்றுக் குன்மமொடு
குத்தாம் வலியுங் குளிரும்போம்-பற்றி

Digitized By Roja Muthiah Research Library

யிசக்கும் வலியிரைப்பு மெத்தடிப்பு மேகும்
பசிக்குமதி மாந்தமும்போம் பார்.

(இ-ள்.) உணவில் மணத்தைத் தருகின்ற உத்தாமணியிலையால் பலநோய்கள், வாதநோய் விஷம் சன்னி திரிதோஷம் வாதகுன்மம் சரீரக்குடைச்சல் குத்தல் நடுக்கல் தநுர்வாதம் சுவாசம் 'பலவிதத்தடிப் புகள் அக்கினிமாந்தம் இவைநீங்கும். தீபனமுண்டாம். 604

தரா இலையின் குணம்-இது தூரா எனமருவியது

புண்கிரந்தி கட்டி பொருசன்னி கீடமும்போங்
கண்புகைச்சல் காசங் கதிக்குமென்பார்-பெண்களுக்குப்
பாலும் பெருகுமுள்ளே பற்றுதிரச் சிக்கல்விடு
மேலுந் தராவினிலைக் கே.

(இ-ள்.) தராயிலைக்கு விரணம் கிரந்தி வித்திரிதிக்கட்டி சந்நிபா தம் எரிகிருமி நேத்திரப்புகை கண்காசம் முலைப்பால் விருத்தி ஆகிய இவைகள் உண்டாகும் மாதாந்த உதிரச்சிக்கல்விடும். 605

செந்தரா இலையின் குணம்

அனில முளையு மரோசகமு நீங்குந்
தனியான தோஷமது தாழும்-கனிமொழியே
வெந்தாரைச் சூடும் விடாயும்போந் தீபனமாஞ்
செந்தராவின் றழைக்குச் செப்பு.

(இ-ள்.) கனிமொழியாளே! செந்தரா இலைக்கு வாத முளைமூலம் அருசி வாதமுதலிய தனித்தோஷங்கள் நீர்த்தாரைச்சூடு ஆயாசம் இவைநீங்கும் தீபனமுண்டாம். 606

விஷமூங்கில் இலையின் குணம்

பிளவை யுகிர்ச்சுற்று பெரும்படுவன் வீக்க
மளவின்றும் காதெழுச்சியாற்று-மளவையுறு
தோங்கி வளர்ந்தமுலை யோவியமே நீண்டவிஷ
மூங்கிலிலை நன்மூலி முன்.

(இ-ள்.) அளவையுறு தோங்கிவளர்ந்த முலைகளையுடைய வோவி யம்போல்பவளே! விஷமூங்கிலை ராசப்பிளவை நகச்சுற்று பெரும்படு வன் சோபை சிலேஷ்மகர்ணசூலைமுதலிய நோய்களையும் போக்கும். ()

சதாபலை இலையின் குணம்

கணமாந்த ரூட்சை கணக்கழிச்சல் வாந்தி
குணமாம் பசியுங் குலவும்-வண்மயிலே

Digitized By Roja Muthiah Research Library

கூடுநிறை கருப்பக் கோதையர்க்காம் வேதகலு
நாடு சதாபலே யிலையினால்.

(இ-ள்.) வண்ண மயில்போலுஞ் சாயலையுடையாளே! சதாபலே யிலையினால் பால்மந்த முதலியவற்றால் விளைகின்ற சுரம் கணப்பேதி கபவமனம் பிரசவமாதர்களின்வேதனை இவைநீங்கும் தீபனமுண்டாம்.

கீரைவகை

கருணைக்கிழங்கின் குணம்-இதுவேசூரணம்

சித்த குதாகுரத்தைத் துட்டகப மேதையதி
கத்தை விலக்குங் கறியமைக்கிற்-பத்தியமாஞ்
சீரணத்தை யும்மிகுத்த தீபனத்தை யுங்கொடுக்குஞ்
சூரணத்தின் றண்டெனவே சொல்.

(இ-ள்.) சூரணத்தண்டென்னும் பத்தியத்திற்கான கருணைத்தண்டால் மூலரோகமும் கபரோகமும் மேதோ தாதுவிருத்தியும் நீங்கும். சீரணமும் பசியுமாம். 609

கீரைத்தண்டின் குணம்

தண்டுமெத்த வாயு தணியாத சீதளமாம்
விண்டுரைக்கிற் சின்னோய்போம் விள்ளவோ-கொண்டக்கா
ணீர்க்கடுப்பு வெட்டையு மில்லாது நேரிழையே
போர்க்கடுப் பிரத்தமும் போம்.

(இ-ள்.) நேரிழையாளே! அதிவாத சீதளமுள்ள கீரைத்தண்டால் பித்தகிரிச்சரம் பிரமேகச்சூடு வயிற்றுக்கடுப்பு ரத்தபேதி முதலிய நோய்களும்போம். 610

வெண்கீரைத்தண்டின் குணம்

வெண்கீரைத் தண்டு வியாதியற்ற நற்கறியாங்
கண்காணு தோடிவிடுங் காந்தலெலாங்-கண்காணு
மூலமதற் கேற்கு முசியா வெரிவகற்றுந்
தாலமதி லக்குணத்தைச் சாற்று.

(இ-ள்.) நோயற்ற நல்லபதார்த்தமாகிய வெண்கீரைத் தண்டினால் வெப்பமும் வெளிமூலரோகமும் பித்த எரிச்சலும் நீங்கும். 611

புதியன்மூலிக்குணம்-இதுவே புதியனு

அருசியொடு வாந்தி யக்கினி மந்தங்
குருதி யழுக்குமலக் கொட்ட-விரியுங்

Digitized By Roja Muthiah Research Library

துதியதன்று சோறிரங்குந் தொல்லுலகி னாளும்
புதியன் மூலிப் புகல்.

(இ-ள்.) புதியன் மூலியால் அருசி சர்த்தி மந்தாக்கினி ரத்ததாதுவி னழுக்கு மலப்போக்கு இவை நீங்கும் போஜனமுஞ்செல்லும் என்க. ()

வெள்ளைக்கீரை பருப்புக்கீரை இவைகளின் குணம்

வெள்ளைக் கீரை தனில் மாரும்பா லுண்டாகும்
பிள்ளைப் பருப்பிலைக்கும் பித்தமறும்-கொள்ளத்
தெரியுங் கடல்சூழித் தேசத் தோருக்குக்
கரிய குழலணங்கே காண்.

(இ-ள்.) கறுத்தகுழலாளே! வள்ளைக்கீரைக்கு வாதகோபம் நீங்கும் முலைப்பால் பெருகும். இளம்பருப்புக்கீரைக்குப் பித்தாதிக்கம்போம்.()

வங்காரவள்ளக்கீரையின் குணம்

மாரிக்கா லத்தாய வங்கார வள்ளையினாற்
பூரித்த வாதம் பொருமலொடு-காரித்
திறங்கா மலசல மிறங்கு மின்புண்டா
முறங்கா விழியணங்கே யுள்.

(இ-ள்.) மதர்த்த விழிகளையுடைய மாதே! மழைக்காலத்து வங்கார வெள்ளைக்கீரையினால் வாதநோயும் வயிற்றுப்பிசமும் நீங்கும். கருத்துஞ் சிக்கிய மலமும் மூத்திரமும் சரியாயிறங்கும். குடலுக்குச் சுகமுண்டாகும் என்க. 614

கோடியிலைக்கீரையின் குணம்-இது வசலை பசலை என மருவியது

நீர்க்கடுப்பு நீரடைப்பு நீங்காத மேசமுமிவ்
வூர்க்கடுத்து வாராம லோடுங்காண்-பார்க்கவொண்ணு
வற்பவிடை மாதே யரோசிசர்த்தி யுந்தொலையு
நற்பசலைக் கீரையத னால்.

(இ-ள்.) நுட்பமான யிடையையுடையாளே! நல்ல வசலைக் கீரையால் மூத்திரக்கடுப்பு மூத்திரக்கிரிச்சரம் ஒழுக்குவெள்ளை அருசி வாந்தி ஆகிய இவைகள் போகும். 615

சிறுபசலைக்கீரையின் குணம்-இதுவே பசறை

போகமிகக் கொடுக்கும் போர்செய்கபத் தைப்பெருக்கு
மாகமதிற் றுகமனலைத் தணிக்கு-மாகுடரின்

Digitized By Roja Muthiah Research Library

மன்னு மிலமிளக்கு மாறு வுரிசைதருந்
தின்னுஞ் சிறுபசலைத் தேர்.

(இ-ள்.) அதிசுவையுள்ள சிறுபசலை புணர்ச்சியி லிச்சையையும் கபத்தையும் பெருக்கும் தாகத்தையும் சூட்டையும் தணிக்கும் மலத்தை யிளக்கும். 616

பாற்சோறிக்கீரையின் குணம்

வயிற்றுக் கடுப்பு மலஞ்சீதப் பேதி
நியத்தரத்தம் போக்கியிவை நிறுத்துங்-குயத்தையொரு
பாறசரியக் காட்டும் பருவ வணங்கரசே
பாற்சொரியக் கீரையது பார்.

(இ-ள்.) மங்கைப்பருவமுள்ள பெண்கள் நாயகமே! பாற்சொரிக் கீரையானது வயிற்றுக்கடுப்பு மலம் சீதம் ரத்தம் இவ்வகைப் பேதி களையும் நீக்கும் என்க. 617

சாணக்கீரையின் குணம்

கோழையொடு மாந்தங் குழந்தைச் சுழிக்கணமும்
பேழையெனச் சொல்லும் பெருவயிறும்-கீழொருவர்
காணக் கிருமிகளைக் கக்குமளி புண்ணுஞ்
சாணக்கிக் கீரையிற்போந் தான்.

(இ-ள்.) சாணக்கிக்கீரையால் கபம் அக்கினிமாந்தம் சுழிக்கணம் மகோதரம் புழுநெளிகின்ற விரணம் ஆகியவைபோம். 618

துயிலிக்கீரையின் குணம்

சீதம் விளையுஞ் சிறுசிரங்கு புண்ணுமாங்
காது பழமலமுங் கட்டறுங்காண்-கீதக்
குயிலனையாய் வெட்டையெனக் கூறுநோ யில்லைத்
துயிலியிலைக் கறிக்குஞ் சொல்.

(இ-ள்.) கீதக்குயிலனைய பெண்ணே! துயிலிக்கீரைக்கு ஆமமும் நமிட்டுச்சிரங்கும் விரணமும் உண்டாகும். பழமலக்கட்டும் பிரமேக மும் வெள்ளையும் நீங்கும். 619

பண்ணைக்கீரையின் குணம்

பண்ணையிளங் கீரையது யற்றுபல மிளக்கு
மெண்ணுங் குடருக் கிதங்கொடுக்கும்-பெண்ணேகேள்
சீதங் கரப்பான் சிரங்குபுண் மாற்றுவிக்கும்
கோதங்கு சிலையதனைக் கொள்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) பெண்ணே! குடலுக்கு நன்மைத்தாநின்ற பண்ணைக் கீரை ஆமங் கரப்பான் கிரந்தி விரணம் இவைகளை நீக்கும். மலத்தை யிளக்கும் என்க. 620

பரட்டைக்கீரையின் குணம்

பரட்டைநறுங் கீரையது பத்தியத்திற் காகும்
வெருட்டுகின்ற பித்தமிக வீறு-புரட்டுங்
கபமுடனே வாதங் கரப்பானு மேகுஞ்
சுபவசன மாதே துதி.

(இ-ள்.) சுபவசனமாதே! பத்தியவியஞ்சனமாகிய பரட்டைக்கீரை யால் சிலேஷ்மரோயும் வாதப்பிணியும் கரப்பானும்போம். பித்தம். ()

செங்கீரைத்தண்டின் குணம்

செங்கீரைத் தண்டதுதான் தீராத பித்தத்தைத்
தாங்காம லோட்டிவிடுந் தையலர்க்குப்-பொங்கும்
பெரும்பாட்டை நீக்கும் பெரிய கறியாந்
தரும்பாட்டு வெப்பகற்றுந் தான்.

(இ-ள்.) பெருங்கறியாகிய செங்கீரைத்தண்டு தீராத பித்த நோயையும் பெண்களுக்கும் பெரும்பாட்டையும் பிரலாப சன்னிபாத சுரத்தையும் நீக்கும் என்க. 622

முளைக்கீரையின் குணம்

தளர்ந்தவர்க்கும் பாலர்க்குந் தக்க வயதோர்க்கும்
மிளங்கீரை நாவுக் கிதமாங-கிளம்பு
சுரகாசம் போக்குந் தொடர்பசி யுண்டாக்கும்
பிரகாச மாயெடுத்துப் பேசு.

(இ-ள்.) விருத்த பால யௌவன பருவத்தவர்க்கும் நாவுக்கிதமு வைத்திராநின்ற முளைக்கீரை காசசுரத்தை நீக்கும். பசியைத்தரும். ()

முள்ளிக்கீரையின் குணம்-இதுவே குப்பைக்கீரை

நீரைப்பெருக்கிவிடு நீடனலைத் தானெழுப்பும்
பாரநறுந் தங்கத்தைப் பஸ்மிக்கு-நேரே
விடவிருக்கும் பொற்றட்டை மேவுமல்குன் மாதே
யடவிநிற்கு முள்ளிக் கீரை.

(இ-ள்.) விடவிருக்கும் பொற்றட்டையொத்த அல்குலையுடைய மாதே! காட்டு முள்ளிக்கீரை நீர்ப்பேதியையும் ஜடராக்கினி விருத்தி யையும் செய்யும். தங்கத்தைப் பஸ்பமாக்கும் என்க. 624

Digitized By Roja Muthiah Research Library

அறுகீரையின் குணம்-இது அரைக்கீரை எனமருவியது

காய்ச்சல் குளிர்சந்நி கபநோய் பலபிணிக்கும்
வாய்ச்ச கறியாய் வழங்குங்காண்-வீச்சாயக்
கறுவுமோ வாயுவினங் காமமிக வுண்டா
மறு கீரையைத்தின் றறி.

(இ-ள்.) பலபிணிக்கும் நற்கறியான அறுகீரையினால் சுரம் நடுக்கல் சந்நிபாதம் கபரோகம் வாதநோய் இவைபோம் தாதுவிருத்தியாம்.

புளிச்சிறுகீரையின் குணம்

தேகசித்தி யாகுஞ் சிறுகாச மந்தமறும்
போகமுறு விந்துவுநற் புஷ்டியுண்டாம்-வாகாம்
வெளிச்சிறுமா னேக்கும்விழி மென்கொடியே நாளும்
புளிச்சிறு கீரையுண்ணும் போந்து.

(இ-ள்.) வெளிச்சிறுமானேக்கும் விழிமென்கொடியே! புளிச்சிறு கீரையினால் சிணுக்கிருமலும் மந்தமும் நீங்கும் காயசித்தியும் புணர்ச்சியில் விருப்பமும் வீரியவிருத்தியும் உண்டாம். 626

சிறுகீரையின் குணம்

கண்புகைச்ச நேத்திரநோய் காசம் படலம்ரசப்
புண்கிரிச் சுரஞ்சோபை பொங்குபித்த-மண்பரவு
தாவர விஷங்களும்போந் தாழாத் திருவுமுண்டாங்
கூறுசிறு கீரைதனைக் கொள்.

(இ-ள்.) சிறுகீரையால் தூம்பிரநோய் காசம் படலம் பாதரசவேகம் விரணம் மூத்திரகிரிச்சம் வீக்கம் பித்தநோய் நாவிபாஷாண முதலிய விஷங்கள் ஆகிய இவைபோம் அழகுண்டாம். 627

கலவக்கீரையின் குணம்

வாதபித்த வையகத்தை மாற்று மலமறுக்கு
மோதுகுடல் வாதமதை யோட்டுங்காண்-போதின்
பலகலவைக் கோதாய்நற் பத்தியத்திற் கொவ்வும்
பலகலவைக் கீரையுண்டு பார்.

(இ-ள்.) மயிற்சாந்தணிந்த கூந்தலாளே! பலவகையுங் கலந்தகீரை வாதபித்த கபதோஷங்களையும் மலச்சிக்கலையும் ஆந்திர பித்தவாதத்தையும் போக்கும் பத்தியத்திற்காம் என்க. 628

Digitized By Roja Muthiah Research Library

மணலிக்கீரையின் குணம்

வாதமறு நெஞ்செரிவு வாதகபம் விலகுஞ்
சீதமுட னேய்பலவுந் தீருங்காண்-போதவுள்ளே
வீறு கிருமியொடு மேவாப் பயித்தியம்போங்
கூறு மணலிக் கிரைக்கு.

(இ-ள்.) மணலிக் கிரைக்கு வாதகபம் மார்புச்சளி சிலேஷ்ம முதலிய பலநோய் கிருமிரோகம் பயித்தியதோஷம் இவை நீங்கும். 629

நீர் ஆரைக்கீரையின் குணம்-இதுவே ஆரைக்கீரை

தின்று ருசிசைதருந் தீராப் பயித்தியத்தைப்
பொன்றுத நீரிழிவைப் புண்ணுரை-யென்றுமிந்த
வூராரைச் சாராம லோட்டிவிடு நாலிதழார்
நீராரைக் கிரையது நீ.

(இ-ள்.) நல்லசுவையும் நாலிதழுமுள்ள நீராரைக்கிரை பித்தநோயையும் அதிமூத்திரத்தையும் ரத்தபிரமேகத்தையும் நீக்கும். 630

புளியாரைக்கீரையின் குணம்

பித்த மயக்கமறும் பேருலகின் மானிடர்க்கு
நித்தமருள் வாதகப நேருமோ-மெத்தெனவே
மூலக் கிராணிவிடு மூல வுதிரமறுங்
கோலப் புளியாரைக் கு.

(இ-ள்.) புளியாரைக்கிரைக்கு பித்தமயக்கம் தீமையை விளைக்கின்ற வாதகபமீசிரம் மூலவாயு கிரகணி ரத்தமூலம் இவைபோம். 631

கோழிக்கீரையின் குணம் இதுவே பருப்புக்கீரை

சொறியுங் கரப்பானுந் தோற்று மென்மேலுஞ்
சொறியுங் கிருமிமிகச் சேரு-மெறிகின்ற
வாழிக் கிடானவிழி யாரணங்கே வையகத்திற்
கோழிக் கிரைக்குணத்தைக் கூறு.

(இ-ள்.) சமுத்திரத்தை நிகர்த்த கண்களையுடையாளே! கோழிக்கிரையால் புடையும் கரப்பனும் கிருமியும் உண்டாம். 632

புளிப்புக்கீரையின் குணம்

வாதமறும் பித்தமுறு மாறு வரோசிவிடுஞ்
சீதமுடனே யகலுஞ் சேயிழையே-போதப்
புளித்த விலைக்கறிக்குப் போமிரத்த பித்தங்
களித்த கரப்பனொடு காண்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) சேயிழையாளே! புளிப்புக்கீரைக்கு வாதகோபம் அருசி சீதளம் ரத்தபித்தரோகம் கரப்பான் ஆகிய இவைநீங்கும். பித்தங் கதிக்கும் என்க. 633

பிண்ணாக்குக்கீரையின் குணம்

மலமிறங்கும் வாதமுடன் வன்கரப்ப னுண்டாஞ்
சலமிறங்கு மேகந் தணியு-மலர்விழியா
யுண்ணாக்குக் கின்பமா மோடுமனல் வெட்டையெலாம்
புண்ணாக்குக் கீரையுண்ட பேர்க்கு.

(இ-ள்.) மலர்போன்ற விழியாளே! உரிசையுள்ள பிண்ணாக்குக் கீரையால் மலமும் மூத்திரமும் சரியாயிறங்குவதூந் தவிர வாததோஷமும் கரப்பானும் உண்டாகும். பிரமேகவெள்ளையும் அரித்திராமேகமும்போகும் என்க. 634

முக்குளிக்கீரையின் குணம்

ஐய மிகக்கொடுக்கு மாந்தர்போகந் தருங்காண்
மெய்யெரிவை யெல்லாம் விலக்குமே-தையலே
பேதி யளிக்கும் பெருமுக் குளிக்கீரை
சீதம் விளைக்குமெனத் தேர்.

(இ-ள்.) தையலே! முக்குளிக்கீரை கபதோஷம் புணர்ச்சியிலிச்சை அதிசாரம் ஆமம் ஆகியவைகளை உண்டாக்கும். வெப்பத்தை நீக்கும்.

வெந்தயக்கீரையின் குணம்

பொருமந்தம் வாயுகபம் போராடு கின்ற
விருமல் ருசியிவை யேகுந்-தரையிற்
றீதி லுயர்நமனைச் சீறும் விழியணங்கே
கோதில் வெந்தயக்கீரை கொள்.

(இ-ள்.) தீதிலுயர்ந்த காலனைச் சினக்கும் விழிகளையுடையமாதே வெந்தயக்கீரையால் வயிற்றுப்பிசம் அக்கினிமந்தம்வாதகோபம் சிலேஷ்மதோஷம் காசம் அரோசகம் ஆகியவைநீங்கும். 636

கோத்துமல்லிக்கீரையின் குணம்

கொத்துமல்லிக் கீரையுண்ணிற் கோர வரோசகம்போம்
பித்தமெல்லாம் வேருடனே பேருங்காண்-சத்துவமாம்
வெச்சென வே போகம் விளையுஞ் சுரந்தீருங்
கச்சுமுலை மாதேநீ காண்.

(இ-ள்.) கச்சுமுலைமாதே! கொத்துமல்லிக் கீரையால் வாத அரோசகம் பித்தசுரமும்போம். வன்மையும் சுக்கிலமும் விருத்தியாம். 637

Digitized By Roja Muthiah Research Library

கோடிக்காசரைக்கீரை, செடிக்காசரைக்கீரை விதை இவைகளின் குணம்

கொடிக்கா சரையிலையாற் கூறுபித்த மேகுஞ்
செடிக்கா சரைக்குச் சிலேஷ்மங்-தடிக்காவா
மிவ்விதைகளாற் கருப்ப மின்றெனவே பொய்த்துவிடுஞ்
செவ்விய மெல்லிதழாய் தேர்.

(இ-ள்.) செவ்விய மெல்லிதழையுடைய பெண்ணே! கொடிக்காசரைக்கீரையால் பயித்தியம்போம். செடிக்காசரைக் கீரையால் கபம் நீங்கும். இவ்வித்துக்களால் கருப்பங்கரையும். 638

காசினிக்கீரையின் குணம்

அத்திவெப்பம் நீக்கு மடர்சோபை யைத்தொலைக்கு
மெத்த வுதிரத்தழுக்கை விலக்கு-மத்தரத்தின்
மாசினியி லேங்காத வார்த்தையெனப் பேசுவிக்குங்
காசினி யிலைக்குணத்தைக் காண்.

(இ-ள்.) காசினிக்கீரை அஸ்திதாது சுதசுரத்தையும் வீக்கத்தையும் உதிரத்தழுக்கையும் நீக்கும் ரத்தவிருத்தியைச்செய்யும். 639

போகம் விளைக்குங்கீரைகள்

தாளி முருங்கைத் தழைதூது ணம்பசலை
வாளிலறு கீரையுநெய் வார்த்துண்ணி-லாளியென
விஞ்சுவார் போகத்தில் வீம்புரைத்த பெண்களெலாங்
கெஞ்சுவார் பின்வாங்கிக் கேள்.

(இ-ள்.) நறுந்தாளி நன்முறுங்கை தூதுணம் பசலை அறுகீரை இவற்றுள் யாதேனும் ஒன்றைப்புளிநீக்கிப் பாகஞ்செய்து அன்னத்துடன் நெய்சேர்த்துக் காலையில்மாத்திரம் ஒருமண்டல அளவையாக உண்ணில் புணர்ச்சியில் நிர்வாகம் உண்டாம் என்க. 640

மரத்தின் புட்பவகை

பச்சைக் குங்குமம்பூவின் குணம்-விருத்தம்

சங்கையின் மதுரதோஷஞ் சலதோஷம் பீநசங்கட்
செங்கையற் கண்ணின்றோஷஞ் செவித்தோஷம் பித்ததோஷங்
கெங்கையாங் கபதோஷங்கள் கெஞ்சிடும் பச்சையான
குங்குமப் பூவினாலே கோதையே யிதனைக்கொள்ளே.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) கோதையே! பச்சைக் குங்குமப்பூவுக்கு இன்சுவையால் பிறந்த துர்க்குணங்கள் நீரேற்றம் நாசிநேத்திரம் செவி இவைகளைப் பற்றிய ரோகம் பயித்தியம் சிலேஷ்மதோஷம் இவைகள்விலகும் என்க.

கொன்றைப்பூவின் குணம்-இதுவே சரக்கொன்றை-வெண்பா

மலக்கிருமி யோடு மதுநீர் குடலாந்
தலத்துநோ யுங்குலைந்து சாயு-நிலத்திற்கு
ளொன்றைக்கு வாடாத வின்பமலர்க் கொம்பே
கொன்றைப் பசுமலரைக் கொள்.

(இ-ள்.) இன்பமலர்க் கொம்பனையாளே! கொன்றைப்பூவால் மலா சயமிருகி மதுமேகம் குடலைப்பற்றியரோகங்கள் ஆகியவைகள்போம்.

மைக்கொன்றைம்பூவின் குணம்-இதுவே மயிர்க்கொன்றை

மைக்கண விழியனமே வையகத்தி லெப்போது
மைக்கொன்றைப் பூமேக மாற்றுங்காண்-மிக்கதனைக்
கொண்டாற் சலமேகங் கூகூவென் றேபதறி
யண்டாதீ துண்மை யறி.

(இ-ள்.) மையணிந்த கண்களையுடைய அன்னமே!மைக்கொன்றை பூவால் பிரமேகமும் சலமேகமும் நீங்கும். 643

காட்டாத்திபூவின் குணம்

உதிரக் கடுப்போ டுதிரக் கழிச்சல்
விதிரக் கடும்பேதி மேக-மெதிர்நிற்க
மாட்டா தகலும் வனசமலர்த் திருவே
காட்டாத்திப் பூவுக்குக் காண்.

(இ-ள்.) தாமரையில் வசிக்கு மிலக்குமிபோல்வாளே! காட்டாத்திப்பூவுக்கும் ரத்தக்கடுப்பு ரத்தாதிசாரம் வெளுத்த மலக்கழிச்சல் பிரமேகம் ஆகிய இவைகள்போகும். 644

சண்பகப்பூவின் குணம்

வாதபித்த மஸ்திசுர மாமேகஞ் சுத்த சுரந்
தாதுநஷ்டங் கண்ணழற்சி தங்காவே-மாதேகேள்
திண்புறு மனக்களிப்பாந் திவ்யமண முட்டனஞ்சேர்
சண்பகப் பூவற்குத் தான்.

(இ-ள்.) பெண்ணே! நீ கேட்பாயாக; நல்ல மணமுஞ்சூடும் உள்ள சண்பகப்பூவிற்கு வாதபித்த மிஸ்ரம் அஸ்திசுரம் பிரமேகம் தனித்

Digitized By Roja Muthiah Research Library

தோஷசுரம் சுக்கிலநஷ்டம் நேத்திர அழலை ஆகிய இவைபோம் மனக் களிப்புண்டாம். 645

பாதிரிப்பூவின் குணம்

பித்த சுரந்தணியும் பெண்வசிய முண்டாகும்
முற்றியதோர் வெட்டை முடியுங்காண்-மெத்தவுமே
மா துரிய நீங்கா வசன மடவனமே
பாதிரின் பூவையுண்டு பார்.

(இ-ள்.) மாதுரியவசனியே! பாதிரிப்பூவினால் தீச்சுரமும் மேகமும் நீங்கும். ஸ்திரீவசியமாம். 646

மந்தாரப்பூவின் குணம்

மந்தாரப்பூ குளிர்ச்சி மன்னர் வசியமுமாஞ்
செந்தா மரைத்திருவே செப்பக்கேள்-சந்ததமுங்
கண்ணுக்கு மாகுளிர்ச்சி காணுங் கொதிப்பகற்று
மண்ணினின்றும் பூவெனவே வை.

(இ-ள்.) செந்தாமரையில் வசிக்கு மிலக்குமியனைய பெண்ணே! குளிர்ச்சியுள்ள நல்ல மந்தாரப்பூ ராஜவசியத்தையும் விழிக்குக் குளிர்ச்சியையும் செய்யும் சரீரவெப்பத்தை நீக்கும். 647

புன்னைப்பூவின் குணம்

புன்னைப்பூ பித்தமென்பார் போராடு வன்மேகம்
வின்னப் படாசித்த விப்பிரமம்-பின்னுங்
கரப்பான் சொறிசிரங்குங் காணு தகற்று
முரப்பாக வேமயக்கு முன்.

(இ-ள்.) புன்னைப்பூ நீங்காமேகம் சித்தவிப்பிரமம் சந்நி கரப்பன் புடை விரணம் இவைகளைநீக்கும் மயக்கமுண்டாக்கும் பித்தமென்பர்.

மகிழம்பூவின் குணம் இதுவே வகுளம்பூ

வெகு வனலமாகு விரகமிக வுண்டா
முகா வரோசக முறியு-மிகவு
மகிழச்சுரத வகைகாட்டு மாதே
மகிழத் துரு மலர்க்கு.

(இ-ள்.) மகிழப்புணர்ச்சி விளையாட்டைக் காட்டுமாதே! மகிழம் பூவுக்கு தேகவெப்பமும் புணர்ச்சியிலிச்சையும் உண்டாக்கும். இதனை முகர அரோசகரோகம் நீக்கும். துருமம்-மரம். 649

Digitized By Roja Muthiah Research Library

பன்னீர்மரப்பூவின் குணம்

சர்த்தி யரோசகமுட் டாதுநட்ட மேல்வறட்சி
யொத்த வழலு மொதுங்குங்கா-ணெத்தரத்துந்
தன்னீர்மை குன்றாத தளிர்வண்ண மாதரசே
பன்னீர்ப்பூ மரத்தைப் பார்.

(இ-ள்.) தன்னீர்மைகுன்றாத தளிர்வண்ணமாதரசே! பன்னீர் மரப்பூவினால் வாந்தி அருசி சுக்கிலட்சீணம் நாவறட்சி பித்தகோப மிவைகள் போம். 650

குருக்கத்திப்பூவின் குணம்-இதுவே மாதவி

சிரரோகந் தாகஞ் சிலேஷ்ம விரணம்
பொருபித்தம் பலவிஷமும் போக்கும்-வரிசேர்
கருக்கொத்த வாள்விழியாய் கைப்புமது கஞ்சார்
குருக்கத்திப்பூ வின் குணம்.

(இ-ள்.) வாள்விழியாளே! கைப்பினையுள்ள குருக்கத்திப்பூ சிரஸ்தாபம் அதிதாகம் சிலேத்மதுஷ்டவிரணம் பித்தகோபம் பலவிஷம் இவைகளை நீக்கும். 651

சேந்தாழம்பூவின் குணம்

தலைநோய் சலதோஷஞ் சண்ணு கபங்காச
முலைவாத மெல்லா மொடுக்கு-நிலைசேர்
திருந்துடற்குக் காந்திதருஞ் செம்மணப்பில் வெம்மை
பொருந்துகின்ற செந்தாழம் பூ.

(இ-ள்.) உட்டினமணம் பொருந்திய செந்தாழம்பூ சிரஸ்தாபரோகம் நீரேற்றம் நெஞ்சிற்கபாதிக்கம் இருமல் சலிக்கின்ற வாதகோபம் இவைகளைப் போக்கும். சரீரத்தில் வனப்பைத்தரும். 652

முருங்கப்பூவின் குணம்

விழிகுளிரும் பித்தம்போம் வீறருசி யேகு
மழிவிந்து வும்புஷ்டி யாகு-மெழிலா
ரொருங்கை யகலாக் கற்புடை வாணகையே
முருங்கையின் பூவை மொழி.

(இ-ள்.) கற்பினையுடைய ஒளிபொருந்திய நகையாளே! முருங்கப்பூவினால் பித்ததோஷம் அரோசகமும் நீங்கும். கண்குளிர்ச்சியும் சுக்கிலவிருத்தியும் உண்டாகும். 653

Digitized By Roja Muthiah Research Library

அகத்திப்பூவின் குணம்

புகைப்பித்த மும்மழலாற் பூரிக்கு மந்த
வகைபித்த மும்மனலு மாறும்-பகுத்துச்
சகத்தி லருந்தாத் தனியமிர்தே நீளு
மகத்தி மலருக் கறி.

(இ-ள்.) சகத்திலருந்தா ஒப்பற்ற அமுதனைய பெண்ணே! அகத்திப்பூவுக்கு சுருட்டுமுதலிய புகைகளாலும் வெய்யிலாதி உஷ்ணதிரவியங்களாலும் பிறந்த பித்தங்களும் தேக அழலையும் நீங்கும். 654

செவ்வகத்திபூவின் குணம்

நாடிற் பனிப்பினு நாசிக்கறைக் கதழ்வை
யோடித் துடைத்துள் ளொளியாற்றும்-பாடெத்
தவரகத்தி னுந்துணங்கைத் தண்டா மயிலே
துவரகத்தி பூக்காண் டுதி.

(இ-ள்.) மடமயிலனைய மங்கையே! செவ்வகத்திப்பூ பார்க்கிற் பயங்கரத்தைக் கொடுக்கின்ற நாசியால்விழுகிற ரத்தப்பெருக்கை விரைவில் நிறுத்துவதுந்தவிர உள்வெப்பத்தையும் நீக்கும். 655

வேப்பம்பூவின் குணம்

பித்தத் தெழுந்த பெருமூர்ச்சை நாத்தோஷஞ்
சத்தத் தெழுவமனந் தங்கருசி-முற்றியகா
லேப்ப மலகிருமி யிவையேகு நாட்சென்ற
வேப்ப மலருக்கு வெருண்டு.

(இ-ள்.) நாட்சென்ற வேப்பம்பூவுக்கு சந்நிமூர்ச்சை ஜிம்மகதோஷம் வாந்தி அரோசகம் நீடித்தவாதம் ஏப்பம் மலக்கிருமி இவைபோம்.

மாதுளம்பூவின் குணம்

வாந்திபித்த தோஷமொடு மாறாக் கடும்பனலஞ்
சேர்ந்துநின்ற மூலரத்தந் தீர்க்குங்காண்-மாந்தளிர்க்கை
மாதே கறைப்புஷ்டி வல்லபல னுண்டாகும்
பூதலத்துண் மாதுளையின் பூ.

(இ-ள்.) மாந்தளிரனைய கைகளையுடைய மாதே! மாதுளம்பூ பித்தவாந்தி வயிறளைதல் யெப்பம் ரத்தமூலம் இவைகள்போகும். ரத்தபுஷ்டியையும் பலத்தையுந் தரும். கறை-உதிரம். 657

Digitized By Roja Muthiah Research Library

புளியம்பூவின் குணம்

பித்தத் துடனே பெருத்தவரோ சகம்போ
மெத்த வெழும்வாந்தி மிதத்துணிற்கு-மெத்தக்
கனத்துப் பூரித்தமுலைக் காரிகையே வெற்பார்
வனத்துப் புளியம்பூ வால்.

(இ-ள்.) கனத்துப் பூரித்த முலைகளையுடையாளே! மலையைச் சார்ந்த காட்டில் முளைந்த புளியம்பூவினால் பித்தகோபமும் அருசியும் அதிகரித்த வமனமும் நீங்கும் என்க. 658

இலுப்பைப்பூவின் குணம்

குன்று விலுப்பையின்பூ கூர்மதுரம் வாசனையாந்
தின்றாற் பயித்தியமுஞ் சேருங்காண்-வன்றலுறுந்
தார்குழலே பித்தசுரந் தாகந் தணிந்துவிடும்
வார்தயக்க மெய்தும் வழுத்து.

(இ-ள்.) வாசனையையுடைய நீண்டகூந்தலாலே! ருசியும் பித்தமணமும் உள்ள இலுப்பைப்பூவினால் பித்தசுரமும், தாகரோகமும் நீங்கும், அதிபித்தமும் பிரமையும் உண்டாகும். 659

வாகைப்பூவின் குணம்

வாத சனஞ்செய்யும் வல்விடத்தைப் போக்கிவிடுஞ்
சீத சிலேஷ்மத்தைச் சிதைக்குங்காண்-போதவுள்ளே
மாகைப்பை வைத்திருக்கும் மாநிலத்திலே பிறந்த
வாகைப்பூத் தன்னை வழுத்து.

(இ-ள்.) கைப்புச்சுவையுடைய வாகைப்பூ வாததோஷத்தையும் சர்ப்பவிஷங்களையும் சிலேஷ்மகோபத்தையும் கொடுக்கும். 660

முள் முருக்கம்பூவின் குணம்-இதுவே கலியாணமுருக்கு

கருப்பா சயத்திற் கறுத்துத் தடித்தே
பருத்த வுதிரத்திரளைப் பஞ்சாய்த்-துரத்திவிடும்
பண்முருக்கு மின்பமொழிப் பாவா யுலகறிய
முண்முருக்கம் பூவை மொழி.

(இ-ள்.) இசையை வெற்றிகொண்ட யின்பமொழியாளே! முள் முருக்கம்பூ கருப்பப்பையிற் கட்டிய ரத்தகுன்மத்தை விலக்கும். 661

தென்னம்பூவின் குணம்

மேக மகக்கொதிப்பு வீறு விரத்தபித்தம்
வேக வசிர்க்கரநோய் வீழ்பிரமி-தேகத்தில்

Digitized By Roja Muthiah Research Library

வின்னம் பாலிக்கும் விஷபாகம் போகவென்றூற்
றென்னம் பாளைப்பூவைத் தின்.

(இ-ள்.) தெங்கினிளம்பாளைப்பூவால் பிரமேகம் உட்காய்ச்சல் ரத்த பித்தம் அசிர்க்கரம் ஒழுக்குப்பிரமியம் விஷபாகநோய் இவை நீக்கும்.

பனம்பூவின் குணம்

பனையிலுறு பூவதுதான் பங்கமுறுக் குன்ம
வினையகற்று நீர்கட்டை மீட்கும்-முனையான
பன்னோ யொழிக்கும் பழச்சுரத்தைப் போக்கிவிடு
மின்னே யிதனை விளம்பு.

(இ-ள்.) மின்னலனையாளே! பனம்பூவானது வாதகுன்மம் மூத்திரச் சிக்கல் தந்தரோகம் புராணசுரம் ஆகிய இவைகள் போகும். 663

வாழைப்பூவின் குணம்

வாழைப்பூ மூலரத்த மாபிரமி வெட்டைபித்தங்
கோழைவயிற் றுக்கடுப்பு கொல்காச-வாழியன
லென்னவெரி கைகா லெரிவுந் தொலைத்துடலின்
மன்னவளர்க் குந்தாது வை.

(இ-ள்.) வாழைப்பூ ரத்தமூலம் பிரமேகம் வெள்ளை பயித்தியம் கபாதிக்கம் உதரக்கடுப்பு இருமல் கைகால் எரிச்சல் இவைகளை நீக்கும். சுக்கில விருத்தியைத் தரும். 664

செடியின்புட்ப வகை

ஆவாரம்பூவின் குணம்

தங்கமெனவே சடத்திற்குக் காந்திதரு
மங்காத நீரை வறட்சிகளை-யங்கத்தா
மாவைக் கற்றாழை மணத்தை யகற்றிவிடும்
பூவைச் சேராவாரம் பூ.

(இ-ள்.) ஆவாரம்பூ பிரமேகநீர் வறட்சி உடம்பிற்பூத்த உப்புமா கற்றாழை நாற்றம் இவை நீக்கும். மெய்க்குப் பொற்சாயலைத் தரும். ()

கருஞ்செம்பைப்பூவின் குணம்

தலைக் குத்தலையஞ் சலதோஷம் வாத
முலைப்பீ நசமிகுந்த வூர்க்குண்-ணிலைக்கா
தருஞ்சண் பகநாசி யாயிழையே சுத்தக்
கருஞ்செம்மைப் பூவிருக்குங் கால்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) அரியசெண்பகமலரை நிகர்த்தநாசியையுடைய பெண்ணே! கருஞ்செம்மைப்பூவால் கபாலச்சூலே சிலேஷ்மகோபம் நீரேற்றம் வாததோஷம் பீநசம் ஆகியவைநீங்கும் என்க. 666

செம்பரத்தம்பூவின் குணம்

செம்பரத்தை மேகவெட்டை தீராப் பிரமியொடு
வம்பிரத்த வெள்ளை வழுவழுப்பும்-வெம்பும்
பெரும்பா டிரத்தபித்த பேதமு மகற்றுங்
கரும்பா மொருமயிலே காண்.

(இ-ள்.) கன்னலையொத்த மொழியையும் மயில்போலுஞ் சாயலையுடைய பெண்ணே! செம்பரத்தம்பூ மேகவெள்ளை பிரமியமேகம் ரத்தப்பிரமேகம் பெரும்பாடு அசிர்க்காவருக்கம் இவைகளைநீக்கும் என்க.

அலரிப்பூவின் குணம்

வெப்பருசி குஷ்டம் விதாகஞ் சொறிசிரங்கு
செப்பிரத்தப் புண்பித்தஞ் சென்னியெரி-விப்படியிற்
றங்குமோ கும்பத்தனத் தணங்கே வாசஞ்சேர்
கொங்கலரிப் பூப்பெயரைக் கூறு.

(இ-ள்.) கும்பத்தனத்தணங்கே! வாசமுள்ள கொத்து அலரிப்பூவால் சுரம் அரோசகம் குஷ்டம் விதாகம் புடை கிரந்தி ரத்தக்கட்டி பித்தநோய் தலையெரிவு இவைபோம் என்க. 668

செம்பருத்திப்பூவின் குணம்

செம்பருத்திப் பூவழலைத் தீயரத்த பித்தத்தை
வெம்புவயிற் றுக்கடுப்பை விந்துவைநீத்-தம்பெனச்செய்
மேகத்தை வெட்டையை விழுசிமுதற் பேதியையுட்
பாகத்தை யோட்டிவிடுந் தான்.

(இ-ள்.) செம்பருத்திப்பூ தேகஅழற்சி ரத்தபித்தரோகம் உதரக்கடுப்பு சலமேகம் வெள்ளை விழுசி முதலியபேதிகள் தாகம் இவைகள் நீங்கும். 669

நந்தியாவட்டப்பூவின் குணம்

காசம் படலங் கரும்பாவைத் தோஷமெனப்
பேசுவிழி நோய்கடமைப் பேர்ப்பதன்றி-மோசைதரு
தந்திபோலே தெறித்துச் சாருமண்டை நோயகற்று
நந்தியா வட்டப்பூ நன்று.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) நந்தியாவட்டப்பூவானது நேத்திரகாசம் படலம் லிங்க நாத தோஷங்கள் சிரஸ்தாபரோகம் ஆகியவைகளை விலக்கும் என்க. ()

துத்திப்பூவின் குணம்

துத்தி மலரைநிதந் துய்க்கின்ற பேர்களுக்கு
மெத்தவிந்து வும்பெருகு மெய்குளிருஞ்-சத்தியமே
வாயால் விழுமிரத்த மாறு மிருமலறுந்
தேயா மதிமுகத்தாய் செப்பு.

(இ-ள்.) கலைகுறையாத சந்திரனையைய முகத்தையுடைய பெண்ணே! துத்திப்பூவால் ரத்தவாந்தியும் காசரோகமும் நீங்கும். சுக்கில விருத்தியும் தேகக்குளிர்ச்சியும் உண்டாம். 671

செவ்வந்திப்பூவின் குணம்

அலைமயக்கஞ் சுற்றலறு மட்சிக் கொளியாந்
தலைமயி ருண்டா மனலஞ்சாரும்-நிலைமணமா
மொவ்வந்தி வான்புறையை யொத்த நுதற்றிருவே
செவ்வந்திப் பூவதனைச் செப்பு.

(இ - ள்.) அந்திவான் பிறையையொத்த நுதல்களையுடைய பெண்ணே! வாசனையுள்ள செவ்வந்திப்பூவால், மூர்ச்சையும் தலைச்சுழலும் நீங்கும். கண்ணுக்கொளியும் ரோமச்செழிப்பும் உண்டாம். 672

தும்பைப்பூவின் குணம்

தாகங் கடிதொழுயுஞ் சந்நிபா தங்களறு
மாகந் தனில்வருநோ யண்டுமோ-மாகந்த
வம்பைப் பிறுங்குயத்து மாதேநின் செங்கரத்தாற்
றும்பைபூத் தன்னைத் தொடு.

(இ-ள்.) கச்சைபீறுந் தனங்களையுடைய பெண்ணே! தும்பைப் பூவினால் தாகரோகம் சந்நிபாதசுரங்களும் நேத்திரத்தைப் பற்றிய தோஷங்களும் நீங்கும் என்க. 673

வேளைப்பூவின் குணம்

கணமாந்தம் வாதங் கபக்கோவை கோழை
யணுமாந்த வெப்பு மகலு-மணமாறும்
பாளைக் குழலே பசிமெத்த வுண்டாகும்
வேளைப்பூ வென்றுருக்கால் விள்.

(இ-ள்.) மணமார்ந்த கூந்தலாளே! வேளைப்பூவினால் மாந்தகணம் வாதகோபம் சலதோஷம் மார்புச்சளி மாந்தசுரம் இவை நீங்கும். தீபனமுண்டாகும். 674

Digitized By Roja Muthiah Research Library

சிற்ருமரைப்பூவின்குணம்-இதுவேபன்னீர்ப்பூ

சிற்ரு மரைப்பூவாற் சேர்ந்தமலக் கட்டுவிடு
முற்றவெப்பு தாகமதி யோக்காளஞ்-சற்றும்விடா
மூல வெரிவிரத்த மூத்திரம் வயிற்றுசிவு
ஞாலம் விடுத்தேகு நவில்.

(இ-ள்.) சிற்ருமரைப்பூவால் மலபந்தம் சுரம் தாகம் ஓக்காளம் ஆசன எரிச்சல் ரத்தபிரமேகம் வயிற்றிசுவு இவைபோம். 675

களாப்பூவின் குணம்

கண்ணிற் படருங் கரும்படலம் வெண்படலம்
வண்ண வுதிரப்படலம் வன்சதைக-ளெண்ணற்
களவினைய் போக்கு மணங்கே சிறிய
களவினது பூவென் றுங் காண்.

(இ-ள்.) தேவமகளிரனைய பெண்ணே! களாப்பூ நேத்திரத்திலுண்டான கரும்படலம் ஸ்வேதபடலம் ரத்தபடலம் சதைப்படலம்முதலிய நோய்களை விலக்கும். 676

கொடியின் புட்பவகை

தாமரைப்பூவின் குணம்

பருத்தநற் ருமரைப்பூ பல்வாந்தி நோயைத்
துரத்திவிடு மின்னுஞ் சொலவோ-கரத்தி
லெடுத் தணைக்கக் கண்குளிரு மேகுஞ்சுரமு
மெடுத்த விதாகமும்போ மெண்.

(இ-ள்.) தாமரைப்பூ பலவிதமான ரோகம் வெப்பத்தாற் பிறந்த விழிஎரிச்சல் சுரம் விதாபம் ஆகியவைகளைப்போக்கும். 677

வெள்ளைத்தாமரைப்பூவின் குணம்

ஈரலைப் பற்றிமிக வேறுகின்ற வெப்பமும் போங்
கோர மருந்தின் கொடுமையறும்-பாருலகிற்
றண்டா மணத்தையுள்ள தாழ்குழலே கால்கள் விடும்
வெண்டாமரைப் பூவால் விள்.

(இ-ள்.) நீங்காத வாசனையுள்ள கூந்தலாளே! வெள்ளைத் தாமரை பூவால் ஈரலிலதிகரிக்கின்ற உஷ்ணமும் வெப்பமுள்ள ஔஷத வேகம் எட்டும் நீங்கும் என்க. 678

Digitized By Roja Muthiah Research Library

அல்லிப்பூவின் குணம்

மேகமறும் புண்ணுறும் விட்டேகு நீரிழிவு
தாகந் தணியுந் தழலகலும்-வாகான
மெல்லியலே யாயுண்மறை வேதியரெலா முரைக்கு
மல்லி மலரா லறி.

(இ-ள்.) மெல்லியலாலே! ஆயுண்மறை வேதியரா லுரைக்கும் அல்லிப்பூவால் ரத்தபிரமேகம் ஆண்குறித் துவாரவிரணம் வெகுமூத்திரம் தாகம் உட்சூடு ஆகியவை நீங்கும் என்க. 679

செவ்வல்லிப்பூவின் குணம்

செவ்வல்லிப் பூவுக்குச் சேர்ந்திறங்கு நீர்பிணியோ
டொவ்வு மேகப்பிணியு மோய்வதன்றி-யிவ்வுலகிற்
கண்ணினோய் தீருங் கனத்தபித்த ரத்தமொடு
புண்ணினோய் பன்னோயும் போம்.

(இ-ள்.) செவ்வல்லிப்பூவுக்கு மூத்திரரோக சங்கவாதம் மேகமூத்திரம் வெய்யிலாதியாற் பிறந்த நேத்திர ரோகங்கள் ரத்தபித்தம் விரணம் தாதுநஷ்ட முதலிய சிலநோய்கள் ஆகியவை நீங்கும். 680

கழுநீர்ப்பூவின் குணம்

உடற்குக் குளிர்ச்சியதா முள்ளுழலை மாற்று
மடற்கப வரோசகத்தை யாற்றுங்-கடற்கு
ளெழுநீர்க் குமிழி யிகழு முலையாய்
கழுநீர் மலரெனவே காண்.

(இ-ள்.) கடற்கு ளெழும் நீர்க்குமிழி யனைய கொங்கைகளையுடையாளே! கழுநீர்ப்பூவானது தாகரோகத்தையும் சிலேத்ம அரோசக ரோகத்தையும் நீக்கும். சரீரத்திற்குக் குளிர்ச்சியைத் தரும். 681

கருநெய்தற்பூவின் குணம்-இதுவே நீலோற்பலம்

பிரசவித் தாரைத்தேற்றும் பேரசிர்க்கை மாற்றும்
வருசிலேத்மப் பிணியை மாட்டுங்-துருசாம்
விடபாக ரோகம் விலக்கும் புவியிற்
றடமாக்கு நெய்தற் றுன்.

(இ-ள்.) கருநெய்தல் பிரசவித்த மாதர்களைத் தேற்றுவதுமன்றி பெரும்பாட்டையும் கபநோயையும் விஷபாகத்தையும் போக்கும். 682

Digitized By Roja Muthiah Research Library

சாதிப்பூவின் குணம்-இதுவே பிச்சிப்பூ

முத்தோஷஞ் சென்னிவலி மூடுஞ் சரீரவெப்ப
மொத்த விழியினோ யோடுங்கா-ணித்தம்
விலகாத காந்தியுண்டா மேனிதனில் வாசங்
குலவு சாதிப்பூ வுக்கு.

(இ-ள்.) சாதிப்பூவுக்கு திரிதோஷம் தலைநோய் தேக உஷ்ணம் கண்படலம் இவை நீங்கும். நீங்காத ஒளியும் மணமும் உண்டாம். ()

மல்லிகைப்பூவின் குணம்

போகமிக வுண்டாகு பொங்குகபங் கட்பிரமை
யாகவனற் சூனியமு மண்டுமோ-பாகனையாய்
மன்னு திருவசியம் வாய்க்குஞ் சூடென்றவரும்
பன்னு மல்லிகைப்பூவாற் பார்.

(இ-ள்.) பாகனையமொழியாளே! புணர்ச்சியி லதிவிருப்பமுண்டாக்குகின்ற மல்லிகைப்பூவால் கோழை கண்மயக்கம் தேக உஷ்ணம் சூனியம் ஆகிய இவைகள் நீங்கும். லட்சுமி கடாட்சமுண்டாகும். இதனை உஷ்ணமென்பர். 684

முல்லைப்பூவின் குணம்

முல்லையெனு மூசிமல்லி மொய்த்த மலரெவர்க்கு
மொல்லை மனநோயை யொழிக்குங்காண்-மெல்ல
வழலைத் தணிக்கு மரோசகத்தைப் போக்கு
மழலைமொழி யாமறிந்து வை.

(இ-ள்.) மழலைச்சொல்லாளே! முல்லை என்ற ஊசிமல்லிகைப்பூ மனோவியாதியையும் உள் வெப்பத்தையும் அரோசகத்தையும் நீக்கும்.

வெட்சிப்பூவின் குணம்

வெட்சிப்பூ மேகமழல் விட்டோடும் வாசனையா
மட்சிவழி யாயுயிர்கொள் ளாரணங்கே-யெற்சுஞ்
சுரமுடனே தாகந் தொலைக்கு முலகில்
விரைவா யிளைப்பகற்றும் விள்.

(இ-ள்.) கண்களின்விழியா யுயிர்பருக்கும் பெண்ணே! பரிமளத்தையுடைய வெட்சிப்பூ மேகச்சூடு சுரரோகம் தாகம் சரீர ஆயாசம் ஆகிய இவைகளைக் கெடுக்கும் என்க. 686

Digitized By Roja Muthiah Research Library

தூதுளம்பூவின் குணம்

புட்டியுண்டாந் தாதுவுமாம் பொங்கழகோ டாற்றன்மிகு
முட்ட நரைத்து முதிர்ந்தமனைக்-கட்டழகு
மாதுளத்தி னீங்காது வைத்திடவு மெண்ணமுற்றாற்
றூதுளத்தின் பூ வுண்ணச் சொல்.

(இ-ள்.) தூதுளம்பூவால் தேகபுஷ்டி சுக்கிலதாதுவிருத்தி வனப்பு சரீரபலம் ஸ்திரீவசியம் இவைகளுண்டாம். 687

வெங்காயப்பூவின் குணம்

வயிற்றுச் சிறுநோயை வாத வலியை
யுயிர்த்தியஞ் செய்யாம லோட்டுங்-குயிற்றுத
சிங்காரக் கொங்கைச் செழுந்திருவே நாட்டிலுரை
வெங்காயப் பூவெனவே விள்.

(இ-ள்.) சிங்காரக் கொங்கைகளையுடைய பெண்ணே! நாட்டுவெங்காயப்பூவானது சாமானிய வாதமுதலிய மூன்று குன்மரோகங்களையும் குடலைப்பற்றிய வாதநோயையும் போக்கும். 688

மரத்தின் பிஞ்சுவகை

வாழைப்பிஞ்சின் குணம்

உதிரம் விழுகடுப்போ டுண்மூல ரத்த
மெதிரில்விழு நீரிழிவு மேகு-மதிநுதலே
பேழை வயிற்றுப்புண் பேருந் துவரார்ந்த
வாழைக் கச்சற்கு மருண்டு.

(இ-ள்.) பிறையனைய நுதலாளே! துவர்க்கின்ற வாழைப்பிஞ்சுக்கு ரத்தக்கடுப்பு உள்வலயாத்தமூலம் அதிமூத்திரம் வயிற்று விரணமிவைபோம். 689

பலாப்பிஞ்சின் குணம்

தாகம்போம் வந்தபித்தஞ் சாந்தமா மாடவர்க்குப்
போகமிகப் பொழியும் பொய்யன்றே-மூக
ஜலமந்தங் குன்மமிவை யண்டிவருஞ் சொன்னேங்
கலசப் பலாப்பிஞ்சாற் காண்.

(இ-ள்.) பாலுள்ள பலாப்பிஞ்சால் தாகமும் பித்தநோயும் நீங்கும். சுக்கில விருத்தி அடங்கியசலம் மந்தாக்கினி குன்மம் இவை யுண்டாம். கலசம்-பால். 690

Digitized By Roja Muthiah Research Library

அத்திப்பிஞ்சின் குணம்

மூலக் கிராணியறு மூலவிரத்தந் தீருஞ்
சாலக் கடுப்புந் தரிக்குமோ-மாலரவத்
துத்திப் படவல்குற் றோகாய் துவர்ப்பையுறு
மத்திச் சிறுபிஞ் சருந்து.

(இ-ள்.) புள்ளிகளையுடைய பாம்பின் படம்போன்ற வல்குளாளே! துவர்ப்புச்சுவையையுடைய அத்திப்பிஞ்சால் மூலவாயு கிரகணியும் ரத்தமூலமும் வயிற்றுக்கடுப்பும் விலகுமென்க. 691

முருங்கைப்பிஞ்சின் குணம்

சிக்குருக்குப் பிஞ்சத்திச் சுரத்திற் குஞ்சநிக்கு
மக்குருக் குருப்ப மரோசிகட்குஞ்-சுக்கிலத்தின்
கொச்சை யுறவருந்திக் கூறுவற்கு மாமதனைப்
பச்சையுற வருந்திப் பார்.

(இ-ள்.) முருங்கையினது பூப்பிஞ்சைப்பாகஞ்செய்து தோலுடன் உண்ணில் அஸ்திசுரம் எலும்பையுருக்குகிற வெப்பம் அரோசகம் விந்துநஷ்டம் இவைகள் நீங்கும். சிக்குரு-முருங்கை. 692

மாம்பிஞ்சின் குணம்-இதுவே சூதப்பிஞ்சு

கவை வாதபித்த கபமருசி வாந்தி
கவைவறுத்த மந்தமெனுந் தோஷ-மிவையெல்லாங்
காதத்துக் கப்புறம்போங் கான மடமயிலே
சூதத்தின் புன்வடுவைத் துய்.

(இ-ள்.) காட்டிற்சஞ்சரிக்கு மயிலனையாளே! மாம்பிஞ்சை நீ தின்னக்கடவை. தின்றால் கிளைத்தவாதாதி முத்தோஷங்கள் அரோசகம் சர்த்தி அக்கினிமந்தம் இவைபோம். 693

நாரத்தங்கச்சலின் குணம்-இதுவே போஜனகஸ்தூரி

அன்ன மிடுஞ்சீத மருசியுப் பிசங்கிருமி
மன்னுமோ விந்துவுடன் வன்பசியாம்-வன்னமலர்
வாசனை யேறுங்குழலீர் மாநோய்தனி லுண்ணும்
போசன கஸ்தூரிப் பூ.

(இ-ள்.) வன்னமலர் வாசனையேறுங் கூந்தலாளே! உலகில் சுரரோகிகளும் உண்ணுகின்ற நாரத்தங்கச்சலால் சீதளம் அரோசகம் வயிற்றுப்பொருமல் எரிகிருமி இவை நிலைக்காவாம். சுக்கிலதாதுவும் தீபாக்கினியும் உண்டாம். உணவை மிகுதியாக உட்செலுத்தும். 694

Digitized By Roja Muthiah Research Library

மாதுளம்பிஞ்சின் குணம்

மலக்கழிச்சல் சீதத்தால் வந்த கழிச்சல்
சலக்கழிச்சல் சோரியாற் சாரு-பலகழிச்சல்
மாளும் புளிப்பான மாதுளம் பிஞ்சால்யிலை
யாளுங் கண்மாதே யறி.

(இ-ள்.) வேல்போலுங் கண்ணளே! புளி மாதுளம்பிஞ்சால் மலம் சீதம் ஜலம் ரத்தம் இவைகளினிறமாக ஆகின்ற பற்பல அதிசாரரோகங்கள் தீருமென்க. 695

முகிழ்விரியாக் கத்திரிப்பிஞ்சின் குணம்

அனலுடனே பித்த மகலு மலம்போந்
தோனியுண்டா மையந் தொலையுஞ்-சனியாக
முத்திருக்கும் வெண்ணகையீர் மூடுமுகிழ் விரியாக்
கத்திரிப்பிஞ் சுண்பவர்க்குக் காண்.

(இ-ள்.) முத்தனைய வெண்டந்தங்களையுடையாளே! முகிழ்விரியாத கத்திரிப்பிஞ்சுக்கு சுரமும் பித்த தோஷமும் கபமும் நீங்கும். மலம் இளகியிறங்கும் குரற்றொனி பலக்கும். 696

அவரைப்பிஞ்சின் குணம்

கங்கு லுணவிற்குங் கறிக்கு முறைகளுக்கும்
பொங்குதிரி தோடத்தோர் புண்சுரத்தோர்-தங்களுக்குங்
கண்முதிரைப் பில்லநோய்க் காரருக்குங் காழிறையா
வென் முதிரைப்பிஞ்சாம் விதி.

(இ-ள்.) விதைமுதிராத வெள்ளையவரைப்பிஞ்சு இராப்போஜனத்திற்கும் மருந்துண்பவர்க்கும் வாதாதிமுத்தோஷம் விரணம் சுரம் விழிக்குள் முதிர்ந்த சிலேத்மபில்லம் முதலிய ரோகிகட்கும் ஆகும். உரை-மருந்து, காழ்-விதை, முதிரை-அவரை. 697

மரத்தின் காய்வகை

வாழைக்காயின் குணம்

வாந்திபித்தம் பேதி வாய்நீர் வயிறுளைத
லார்ந்தவன லங்காத மண்டாவாஞ்-சூழ்ந்தேறு
செம்புனலுந் தென்புமுண்டாந் திண்டி மிகப்பெருகு
மம்புவியுள் வாழைக்கா யால்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) வாழைக்காயினுல் பித்தவாந்தி பயித்தியம் பித்தாதிசுரம் உமிழ்நீர்ச்சுரப்பு வயிறளைதல் உஷ்ணம் இருமல் இவைபோம். ரத்த விருத்தியும் பலனும் உண்டாம். போஜனம் அதிகரிக்கும். செம்புனல்-உதிரம். 698

பலாக்காயின் குணம்

உண்ணின் மிகுமந்த முறுதியாம் வாதநோ
யண்ணி மிளைப்பிரைப்பு மண்டுங்காண்-வண்ணப்
பலாக்காய்க்கு விந்துவுமாம் பாரி லுவமை
சொலாக்காம வாரிதியே சொல்.

(இ-ள்.) பாரிலுவமை சொல்லாக் காமவாரிதி யனையாளே! பலா காய்க்கு அக்கினிமந்தம் வாதகோபம் ஆயாசம் சுவாசம் சுக்கிலவிருத்தி ஆகியவைகள் உண்டாகும் என்க. 699

அத்திக்காயின் குணம்

அத்திக்காய் தன்னை யருந்திஞ லாரணங்கே
யெத்திக்கு மேக மிருக்குமோ-சத்திக்கும்
வாத மகலு மலங்கழியுஞ் சூலையொடு
மீதன லும் புண்ணும்போம் விள்.

(இ-ள்.) பொருந்திய அமுதனையாளே! அத்திக்காயால் பிரமேகம் வாதநோய் சூலை சரீரவெப்பம் விரணம் ஆகிய இவைகள் போம். மலங் கழியும் என்க. 700

முருங்கைக்காயின் குணம்

சொல்லு நோய்கட்கெல்லாந் தோஷமில்லை யையமறும்
பல்லுயிர்க்குந் தாது விந்தூறும்-வில்லார்
பெருங்கைக் காமன்றுதிக்கும் பெண்ணே நறிய
முருங்கைக்காய் தன்னை மொழி.

(இ-ள்.) வில்லேந்திய காமன்றுதிக்கும் பெண்ணே! நிதானநூலிற் கூறும் பலபிணிக்கும் ஒவ்வியதாயும் மத்தியக்கறியாயும் இராநின்ற முருங்கைக்காயால் கப்மநீங்கும். விந்துவூறும். 701

அருநெல்லிக்காயின் குணம்

அருநெல்லிக் காய்குளிர்ச்சி யாம்பித்தம் போக்கு
மருவு துவர்ப்பாற்றுரிசை மாற்றும்-விரியுலகிற்
ருகத் துயர்நீக்குஞ் சாரிரு மலைத்தொலைக்கு
மாகக் கொதிப்பகற்று மாங்கு.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) துவர்ப்புச் சுவையையுடைய அருநெல்லிக்காய் சீதபித்தம் தாகம் காசம் உட்சூடு ஆகியவைகளைப்போக்கும். 702

நெல்லிக்காயின் குணம்

பித்தமன லையம் பீநசம்வாய் நீர்வாந்தி
மத்த மலக்கட்டு மயக்கமுமி-லொத்தவுரு
வில்லிக்கா யம்மருங்கா மென்னுட் காலந்தேர்ந்தே
நெல்லிக்கா யம்மருந்து ணீ.

இதுவுமது

நெல்லிக் காய்க்குபித்த நீங்குமதன் புளிப்பாற்
செல்லுமே வாதமதிற் சேர்துவப்பாற்-சொல்லுமையு
மோடுமிசைத் சித்தத்தி லுன்ன லனலுடனே
கூடுபிர மேகமும்போங் கூறு.

(இ-ள்.) கடல் அமிர்தம் ஒத்தநெல்லிக் காயைப் பகற்போதுண்ணில் பயித்தியம் கபரோய் பீநசம் வாய்நீர்ச்சுரப்பு வாந்தி உன்மத்தம் மலபந்தம் தலைச்சுழல் பிரமேகம் இவைபோம். காமன் அழகுண்டாகும். அதன் புளிப்பால் வாயுவும் துவரால் கபமும் நீங்கும். மருந்து-அமிர்தம். 703

புளியங்காயின் குணம்

சோபமொடு பித்தந் தொலைக்கு முரிசைதரும்
கோபமுற வாயுவையே கொண்டாடுந்-தாபக்
கருப்ப மடவார்க்குக் கனவிருப்ப முள்ளே
பருப்புமுதிராப் புளியங் காய்.

(இ-ள்.) ருசியைக் கொடுக்கின்ற கொட்டைமுதிராத புளியம்பிஞ்சு சோருதலையும், பித்தக்கோபத்தையும் நீக்குவதுந்தவிர வாததோஷத்தையுண்டாக்கும். இது கருப்பஸ்திரீகளுக்கு விருப்பாம். 704

மாங்காயின் குணம்

தாதுநஷ்டம் வாதந் தனிக்கிரந்தி யாம்பசிபோங்
காதுமுட்டப் பக்குவிடுங் காயமதி-லோதுகின்ற
பாங்காறுப் புண்வளரும் பற்கூசுஞ் சொற்குளறு
மாங்கா யுண்பாரை மதி.

(இ-ள்.) மாங்காயால் சுக்கிலநாசம் மிகுவாயு சிரங்கு தேகம் வெடித்தலோடு ஆறுவிரணம் தந்தங்கூசுதல் சொற்றவறல் இவையுண்டாம். பசிபோம். 705

Digitized By Roja Muthiah Research Library

மரியங்காயின் குணம்-இதுவே புளிமாங்காய்

வாயின் கசப்பகலு மாறு வரோசகமு
மோயுஞ் சுரத்தோர்க் குவப்பாகுந்-தூயவரித்
தேனமரும் வார்கூந்தற் றெய்வப் பெடையனமே
கான மரியங்காயைக் கண்டு.

(இ-ள்.) தேனமரும்வார்கூந்தற்றெய்வமடவனமே! காட்டிலுள்ள மரியங்காயினால் வாய்க்கசப்பும், அரோசகமும் நீங்கும். இது சுர ரோகிகளுக்குதவும் என்க. 706

பச்சைக்கடுக்காயின் குணம்-இதுவே பரித்திக்காய்

பச்சை பரித்திக்காய் பண்ணும் வகைகேளா
யிச்சையுறத் துவைத்துப் பிட்டூறித்-வைத்தெடுத்துத்
தின்ன வரோசியறுந் தீபனமா முண்மலம்போ
மன்னநடை மாதே யறி.

(இ-ள்.) அன்னநடையாளே! பச்சைக்கடுக்காயைக்கொட்டைநீக்கி யிடித்து அதற்கு 5-ல் ஒருபங்கு உப்பிட்டு 105-நாள் சென்றபின் பிசைந்து அதை அசனத்திற் சேர்த்தாவது தனித்தாவது புசிக்கில் அரோசகந்தீரும். பசியுண்டாம் மலங்கழியும். 707

இத்திக்காய், பிஞ்சு இவைகளின் குணம்

வாயு மலக்கட்டு மலக்கழிச்சல் கால்வழியே
சாயு மசிர்ச்சிக்குள்ளே தங்குவெப்பி-னோயினங்க
ளத்திக்கா தாரமுற் றிருப்பன விராவேநல்
லித்திக்காய் பிஞ்சுகளை யெண்.

(இ-ள்.) இத்திக்காய்க்கு வாதமலபந்தம் போம். பிஞ்சுக்கு அதிசாரமும், பெரும்பாடும், உட்சூடுறாற்பிறக்கின்ற பிணிகளும் நீங்கும்.

கோடியெலுமிச்சங்காயின் குணம்

வாந்தி மயக்கம் வயிற்றுக் கழிச்சலனற்
சேர்ந்த வரோசகமுந் தீருங்காண்-தீர்ந்த
தொடியமரு மங்கையிளந் தோகா யடவிக்
கொடியெலுமிச் சங்காயைக் கூறு.

(இ-ள்.) காட்டிலுள்ள கொடியெலுமிச்சங்காய்க்கு வாந்தி பித்த மயக்கம் மலபேதி பித்தம் அருசிரோகம் ஆகிய இவைகள் போகும். ()

Digitized By Roja Muthiah Research Library

எலுமிச்சங்காயின் குணம்

தீதிலெலு மிச்சங்காய் சேர்முத்தோ ஷத்தையுமுள்
வாதகபஞ் சூலையையு மாகொடிய-சாதியெனுஞ்
சார்த்திகுன் மத்தையுமுட் டங்கமருந் திட்டதையும்
பித்தவெப்பை யுந்தணிக்கும் பேசு.

(இ-ள்.) குற்றமற்ற எலுமிச்சங்காய் திரிதோஷம் வாதசிலேஷ்மம் சூலை சர்த்தி குன்மம் இடுமருந்து பித்த உஷ்ணம் இவைகளைப் போக்கும். 710

கலுமிச்சங்காயின் குணம்

தந்துவிழப் பண்ணுஞ் சலவைதனைக் கொடுக்கும்
வெந்துமிக விந்துவை விழச்செய்யு-மந்த
வெலுமிச்சங் காய்போன் றிருக்குங் கொடிய
கலுமிச்சங் காய்க்குணத்தைக் காண்.

(இ-ள்.) எலுமிச்சங்காய்போற் றோற்றுகின்ற கலுமிச்சங்காய் பற்களை விழச்செய்வதுந் தவிரச் சீதளத்தையும், வீரிய நஷ்டத்தையும் உண்டாக்கும். 711

நாரத்தங்காயின் குணம்

நன்றி யுறவுலகி னாரத்தங் காயருந்த
வென்றி தரும்புளிப்பான் மெய்ச்சும்-மன்றியுமோ
வாதமொடு குன்மமறும் வாற்கிருமி யும்போகுங்
காதலுறு தீபனமாங் காண்.

(இ-ள்.) நாரத்தங்காயால் வாதநோயும் வாலுள்ள மலக்கிருமியும் நீங்கும். பசியுண்டாம் இதன் புளிப்பினால் தேகஞ்சுத்தியாம். 712

கடாரநாரத்தங்காயின் குணம்

பித்தமொடு வாயிற் பெருகறல ரோகம்போம்
பத்தியமா நோயிற் பருகலாங்-குத்துங்
கடாரி யனையவிழிக் கன்னி மடமாதே
கடார நாரத்தங்காயைக் கண்டு.

(இ-ள்.) குத்துங்கடாரியனைய விழிகளையுடைய கன்னிகையே! கடாரநாரத்தங்காயால் பித்தநோயும் வாய்நீரூறலும் அருசியும்போம். இது பத்தியவஸ்துவாம். நோயாளர்க்கும் உதவும். 713

கொளுஞ்சிநாரத்தங்காயின் குணம்

சொல்லுங் கொளுஞ்சிக்காய் தோன்றுகின்ற காசத்தை
வல்லவட் சீதத்தை மாருதத்தைப்-பொல்லாத

Digitized By Roja Muthiah Research Library

வையத்தைத் தாகத்தை யப்பொழுதே நீக்கிவிடும்
வையத்துட் பெண்ணரசே வாழ்த்து.

(இ-ள்.) பெண்கள் நாயகமே! பண்டிதர் கூறுகின்ற கொளுஞ்சி நாரத்தங்காய் இருமல் ஆமதோஷம் வாதவிகுணம் கபாதிக்கம் தாகம் இவைகளை நீக்கும். இதனை கொடிநாரத்தை முலையெலுமிச்சை துரிஞ்சி எனவுஞ் சொல்வர். 714

பனைநுங்கின் குணம்

நீர்வரா வியக்குருவை நீக்குமன லாக்குந்தோற்
சார்வா மயஞ்சீதந் தானொழிக்குஞ்-சேர்வார்
விழிக்கரையாந் துஞ்சளிக்கு மென்சுரத மானே
கழிக்கரையாந் தாளியிளங் காய்.

(இ-ள்.) மென்சுரத மாதே! நெய்தனிலப் பனையினது இளங்காயி லுள்ள நுங்கின் சலமானது வியர்க்குருவை நீக்கும். பசியைத் தரும். தோலுடனேயிருக்கும் நுங்கு சீதபேதியை விலக்கும். ஆமயம்-நுங்கு.

செடியின் காய்வகை

கத்திரிக்காயின் குணம்-விருத்தம்

பண்டு மாண்ட கிரந்தியைப் பாலிக்கு
முண்ட கைக்குந் தினவை யுண்டாக்கிடு
நண்டு கட்டுங் குரங்கென நாளுமாங்
கண்டு விட்டது கத்திரிக் காயதே.

(இ-ள்.) கத்திரிக்காய் ஆறிய சிரங்கையும் நமைச்சலையு முண்டாக்கும் என்க. 716

கத்திரிக்காய், அதன்பிஞ்சு இவைகளின் குணம்-வெண்பா

கத்திரிக்காய்பித்தங் கனன்றகபந் தீர்த்துவிடும்
தொத்து சொறிசிரங்கைத் தூண்டிவிடு-மெத்தவுந்தான்
பிஞ்சான கத்திரிக்காய் பேசுமுத் தோஷம்போக்கு
மஞ்சார் குழலே வழுத்து.

(இ-ள்.) மேகம்போன்ற கூந்தலாளே! கத்திரிக்காய் பித்தத்தால் வந்தகபத்தை நீக்கும். புடையையும் கிரந்தியையும் அதிகப்படுத்தும். பிஞ்சு திரிதோஷத்தை விலக்கும். 717

Digitized By Roja Muthiah Research Library

கண்டங்கத்திரிக்காயின் குணம்

ஐயமறுந் தீபனமா மாமலக் கட்டும்
மையவெளி யாகிவிடும் பார்மீதிற்-செய்யமலர்த்
தொத்திரிக்கும் வார்குழலே தூமணலா ருங்கண்டங்
கத்திரிக் காயைப்புசிக்கும் கால்.

(இ-ள்.) அழகிய மலர்மாலையணிந்த நீண்ட கூந்தலாளே! வெண் மணலி லுண்டாகின்ற கண்டங்கத்திரிக்காயால் சிலேஷ்ம நோய் தீரும். சிதங்கலந்தமலமும் பசியும் உண்டாமென்க. 718

கறிமுள்ளிக்காயின் குணம்

வாதபித்த வையகத்தை மாற்றுமன்ற போக்கு
மோது சுவாசத்தை யோட்டுங்காண்-பூதலத்துட்
டுள்ளிப்பாய் கெண்டைவிழித் தோகா யறிதிகறி
முள்ளிக்காய் செய்யு முறை.

(இ-ள்.) மகரநோக்கியே! கறிக்குதவாநின்ற முள்ளிக்காயானது வாதபித்த கபதோஷங்கள் சுரம் சுவாசரோகம் ஆகிய இவைகளைப் போக்கும் என்க. 719

கோத்தவரைக்காயின் குணம்

கொத்தவரைக் காய்பித்தங் கூடாது பத்தியத்தின்
மெத்தெனவு மையம் விளைக்குங்காண்-பித்தத்தால்
சித மகற்றிவிடுந் தின்மருந்தைப் பாழாக்கும்
வாதக் குடைச்சறரு மால்.

(இ-ள்.) அபத்தியமான கொத்தவரைக்காய் பயித்தியம் கபம் வாதக்கடுப்பு இவை யுண்டாக்கும். பித்தத்தால் நளிரையும் மருந்தை யும் முறிக்கும். 720

வெண்கடுக்காயின் குணம்-இதுவே வெண்டைக்காய்

கண்ட கிராணி கடிய வதிசாரம்
விண்டவெண் சீதரத்த மேவுங்கா-ெண்டொடியே
வண்டற்காய் வெய்யகப வாதமிகும் வாய்க்குணவாம்
வெண்டக்கா யுண்பார்க்கு விள்.

(இ-ள்.) வறலுக்குதவியான வெண்டக்காய்க்கு கிராணிபேதி சீதரத்தாதிசாரம் சிலேஷ்மவாதம் நாவுக்குருசை இவை உண்டாம். ()

நறுமணத்தக்காளிக்காயின் குணம்

மலமிளகுந் தானே மகாகபமும் போகும்
பலமிகுந்த வாதம்போம் பார்க்குண்-மலைபோற்

Digitized By Roja Muthiah Research Library

பணைத்துப் பூரித்தமுலைப் பாவாய்கே ணல்ல
மணத்தக் காளியை வாழ்த்து.

(இ-ள்.) மலைபோற் பணைத்துப் பூரித்த முலைகளையுடையபெண்ணே! நறுமணத்தக்காயால் மலம் இளகிச் சுபாவமாக இறங்குவது மன்றி சிலேஷ்மநோயும் வாதாதிக்கமும் நீங்கும் என்க. 722

மணத்தக்காளி வற்றலின் குணம்

நீர்ப்பேதி யாகு நிலைவமனம் போம்வாயிற்
கூர்ப்ப விளைப்புமறுங் கூறுவதோ-பார்க்கிலினு
மிக்கான நோயோர் விரும்புகின்ற நல்லமணத்
தக்காளி வற்றலுக்குத் தான்.

(இ-ள்.) நோயுற்றோர்க்காகின்ற நல்லமணத்தக்காளி வற்றலுக்கு நீர்ப்பேதியுண்டாவதுந் தவிர வாந்தியும் இளைப்பும் நீங்கும். ()

சுண்டக்காயின் குணம்

நெஞ்சின் கபம்போ நிறைகிருமி நோயும்போம்
விஞ்சு வாதத்தின் விளைவும்போம்-வஞ்சியரே
வாயைக் கசப்பிக்கு மாமலையிலுள்ள சுண்டைக்
காயைச் சுவைப்பவர்க்குக் காண்.

(இ-ள்.) கசப்புச் சுவையையுடைய மலைச்சுண்டக்காயால் மார்பு சளி கிருமிரோகம் வாதாதிக்கம் ஆகியவைபோம். 724

சுண்டக்காய் வற்றலின் குணம்

பித்த வரோசகம்போம் பேராய் புழுச்சாகு
முற்ற கிராணியறு முட்பசியாஞ்-சத்தியமாய்ப்
பண்டைக் குதவாமம் பற்றுமறு மாரையுந்தான்
சுண்டைக்காய் வற்றலுண்ணச் சொல்.

(இ-ள்.) சுண்டைக்காய் வற்றலால் பித்த அரோசகம் மலக்கிருமி கிராணி ஆசனத்துவாரச்சீதக்கட்டு இவைபோம் உள்ளிற்பசியுண்டாம்.

விதுகங்காயின் குணம்

விதுகங்காய் பத்திய வியஞ்சன மத்தாற்
புதுநெய் விந்தெழிற் பலமும்பூணு-முதுபித்த
வேக மொழியு மிகுதுர்ப் பலமகலும்
பாகனைய வின்மொழியே பார்.

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR—623 106
P.M.DIST. INDIA

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) பாகை யொத்த யினிய மொழியாளே! பத்திய கரியாகிய விதுளங்காயினால் புதிய உதிரம் சுக்கிலம் அழகு பலம் இவை விருத்தியாம். நீடித்த பித்தமும் அதிதூர்ப்பலமும் நீங்கும். 726

பாவட்டங்காயின் குணம்

வாத சுரந்தணியும் வாயருசி யேகிவிடுஞ்
சீதக் கடுப்பகலுந் தேன்மொழியே-வாதுபுரி
பித்தவதி சாரமொடு பேராக் கபமுமறு
முற்ற பாவட்டங் காய்க்கு.

(இ-ள்.) தேன்போலும் வசனிப்பவளே! பாவட்டங் காய்க்குவாத சுரம் அரோசகம் சீதக்கடுப்பு பித்தாதிசாரம் சிலேஷ்மதோஷம் ஆகிய இவை நீங்கும். 727

ஊசிமிளகாயின் குணம்

சீதக் கழிச்சற் சிறுநீர்ச் சுறுக்காசங்
காதக் குதநெகிழ்ச்சி காட்டுங்கா-ணாதித்தன்
வீறு கிரணம்பருகி மேனோக்கிக்காய்த்த பங்காக்
காரமுறு மூசிமிள காய்.

(இ-ள்.) ஆகாயமுகமாய்க் காய்த்து சூரியனது அக்கினிகிரணத்தைப்புசித்து மிகுகார்ப்புச் சுவையைப்பெற்ற ஊசிமிளகாய் சீதபேதி மூத்திரகிரிச்சரம் மூலம்குதநெகிழ்ச்சிரோகம்இவைகளையுண்டாக்கும்.

வெண்டுமிளகாய் கருங்குண்டுமிளகாய் பச்சைமிளகாய் இவைகளின் குணம்

வெண்டு மிளகாய்க்கனில மேவுமிடம் பார்க்குமணிக்
குண்டு மிளகாய்க் கனலங்கூடுங்கா-மூண்டுபயிர்ப்
பச்சைமிளகாய்க்குப் பதமிறங்குஞ் சொவைபுரிந்
திச்சையுற வுண்ணின்மறு வில்.

(இ-ள்.) உன்னிற் போலாயிருக்கின்ற வெண்டுமிளகாய்க்கு வாத கோபம்நீங்கும். ஆகாயத்தைநோக்கிக் கருமைநிறத்துடன் காய்க்கின்ற குண்டுமிளகாய்க்கு உஷ்ணமாம். பயிரிடுகிற விதையடர்ந்த பச்சைமிளகாய்க்குச் சம்பாரஞ் சேர்த்துண்ணில் அன்னமிறங்கும் குற்றமில்லை. ()

களாக்காயின்குணம்-இதனைக்கிளாக்காய் என்பர்

காதுவிடாய் தாகங் கடியபித்தம் வாந்தியும்போம்
மாதே யரோசகமு மாறுங்காண்-டீதா
மிரத்த பித்தம்போகு மினியகளாக் காய்க்
குரத்த பசியுமுண்டா மோர்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) மாதே! யறிவாயாக; இன்புளிப்புள்ள களாக்காய்க்கு காதடைப்பு தாகம் பித்ததோஷம் வாந்தி அருசி ரத்தபித்தம் இவைகள் போம். மிகுபசியுண்டாம். 730

ஊமத்தங்காயின் குணம்

வாதமறும் பித்த மயக்கமுறு மாநிலத்திற்
றீது கரப்பன் சிரங்ககலும்-கோதாய்கேள்
மாமத்த மாகும் வறட்சியெல் லாம்போகு
மூமத்தங் காய்க்கென் றுரை.

(இ-ள்.) பெண்ணே! நீ கேட்பாயாக; ஊமத்தங்காய்க்கு வாதநோய் கரப்பான் கிரந்தி சொறி இவை நீங்கும். பித்தமயக்கமும் உன்மாதரோகமும் உண்டாகும். 731

கொடியின் காய்வகை.

கலியாணப்பூசினிக்காயின் குணம். இதுவே பெரும்பூசனி.

பெரும்பூசினிச் காய்க்குப் பித்தமோ டுட்காய்ச்ச
லருஞ்சார நீர்க்கட் டருமே-மருந்திடுதற்
பித்தசுர மஸ்திசுரம் பேய்வறட்சி மேகமும்போ
மெத்த வனிலமுறும் விள்.

(இ-ள்.) கலியாணப்பூசினிக்காய்க்கு பித்தரோகம் உட்காய்ச்சல் சாரமேக மூத்திரக்கிரிச்சரம் இடுமருந்து பித்தசுரம் அஸ்திதாதுகதசுரம் பேய்ச்சொறி பிரமேகம் ஆகியவைபோம் வாதாதிக்கமாம். 732

பறங்கிக்காயின் குணம் இதுவே பூசினிக்காய்

அனலழலை நீக்கு மதிபித்தம் போக்குங்
கனலெனவே வன்பசியைக் காட்டும்-புனலாகு
மிக்கவைய முண்டாக்கு மென்கொடியே யெப்போதுஞ்
சர்க்கரைப் பறங்கிக்காய் தான்.

(இ-ள்.) மிருதுவான பூங்கொம்பனையாளே! இனிப்புள்ள பறங்கிக்காய் அனலால்வரும் அழற்சியையும் மிகுபித்தத்தையும் நீக்கும். நல்ல பசியையும் கபகோபத்தையும் விளைக்கும். 733

குழிப்பறங்கிக்காயின் குணம் இதுவே கோடைப்பூசினி

வாதக் குடைச்சலுறு மாறாத வையமுமாம்
போதவலிச் சூலையுண்டாம் பொற்கொடியே-யோதுங்
குழிப்பறங்கிக் காய்க்குக் குளிர்ச்சி நிறையும்
பழிக்கடுத்த மாந்தமிகும் பார்.

28

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) பொற்கொம்புபோல்பவளே! குழிப்பறங்கிக் காய்க்கு வாதக்கடுப்பே விருத்தி. வாதசூலை அக்கினிமாந்தம் இவையுண்டாம். இதனைக்குளிர்ச்சி என்பர். 734

குமட்டிக்காயின் குணம் இதனை முலாங்காய் என்பர்

தந்தம் விழுந்திடுமே தாது மெலிந்திடுமே
விந்தை மிகுங்காந்தி விலகிடுமே-சந்ததமும்
வாத மிகுந்திடுமே வந்துகபஞ் சேர்ந்திடுமே
யோது குமட்டிக்காயா லுன்.

(இ-ள்.) குமட்டிக்காயினால் பல்விழல் சுக்கிலட்சீணம் தேகவொளி கெடல் வாதகோபம் சிலேத்மாதிக்கம் ஆகியவைகளுண்டாம். 735

சுரைக்காயின் குணம்

வாதபித்தம் வாயருசி வன்பீலிகஞ் சீத
மோதிருத்து நோயுண்டா முள்ளனற்போ-மோதத்
திருப்பாற் கடற்றிருவே தீக்குணத்தை மேவுஞ்
சுரைக்காயைத் தின்பவர்க்குச் சொல்.

(இ-ள்.) திருப்பாற்கடலி லுற்பவித்த இலக்குமியனையாளே! உஷ்ணமுள்ள சுரைக்காயினால் வாதபித்தம் அரோசகம் பீலிகரோகம் ஆமம் மார்புநோய் இவைகளுண்டாகும் உட்சூடு நீங்கும். 736

வெள்ளரிக்காயின் குணம்

உண்டருந்தத் தீயெழுப்பு முண்மருந்தைத் தான்முடுக்குங்
கண்ட கரப்பனைக் கடுக்குங்காண்-பண்டிதரே
யுள்ளரிப்பை நீர்க்கடுப்பை யூரைவிடுத் தோட்டிவிடும்
வெள்ளரிக் காயின்குணத்தை விள்.

(இ-ள்.) பண்டிதரே! வெள்ளரிக்காய் கரப்பான் நீர்த்துவாரத்தினவு நீர்ச்சுருக்கு இவைநீங்கும். இதைப்புசித்தபின் யுண்ணப்பசியாம். மருந்தை முறிக்கும். 737

வெள்ளரிப்பிஞ்சு காய் பழம் விதை இவைகளின் குணம்

பிஞ்சுவெள் ளரிக்காய்க்குப் பேசுதிரி தோஷம்போம்
வஞ்சியரே முற்றியகாய் வாதமாம்-நைஞ்சகனி
யுண்டாற் சயித்தியமா முள்ளிருக்கு மவ்விதையைக்
கண்டாலு நீரிறங்குங் காண்.

(இ-ள்.) வெள்ளரிப்பிஞ்சுக்கு முத்தோஷங்களும் நீங்கும். காயால் வாதமும், நைந்தபழத்தால்கபமும் விளையும். வித்தால் நீர்ப்பேதியாம்.

Digitized By Roja Muthiah Research Library

கக்கரிக்காயின் குணம் இதுவே முள்ளரிக்காய்

கக்கரிக்காய் பித்தங் கடியுங் கபமுயர்த்து
மெய்க்குக் குளிர்ச்சிதரு மெல்லியலே-முக்குகின்ற
மூல வழறணிக்கு மூடிரத்த பித்தத்தை
சால வகற்றிவிடுஞ் சாற்று.

(இ-ள்.) மெல்லியலே! கக்கரிக்காய் பித்ததோஷம் மூலச்சூடு ரத்த பித்தம் இவைகளை நீக்கும். கோழையுங் குளிர்ச்சியு முண்டாகும். 739

ஆகாயகக்கரிக்காயின் குணம்

ஐயம் விளையு மழல்கரப்பான் பித்தமும்போ
மெய்யு ளதிபோகம் விளையுங்காண்-செய்மருந்தின்
காந்தியும்போ மாகாய கக்கரிக்காய் தின்றவர்க்கு
வாந்தியும்போ மாதே வழுத்து.

(இ - ள்.) மாதே! பந்தலில் காய்க்கின்ற ஆகாய கக்கரிக்காய்க்கு தேகச்சூடு கரப்பான் பயித்தியதோஷம் மருந்தின் வீரியப் பித்தவாந்தி யாகியவைகள்போம். கபாதிக்கமும் புணர்ச்சியிலிச்சையு முண்டாம். 740

கோட்டை அவரைக்காயின் குணம்

கொட்டை யவரைக்காயாற் கோரவரோ சகநோய்
கிட்டாதென் பார்மருந்தின் கீர்த்திகெடுந்-துட்டமந்தம்
பையவுண்டாம் பேதியுண்டாம் பாரிப்பனில முண்டா
மையமுண்டாஞ் சூலையுமுண் டாம்.

(இ-ள்.) வித்துமுதிர்ந்த அவரைக்காயினல் அருசியும் ஔஷத தன்மையும் நீங்கும். அக்கினிமாந்தம் அதிசாரம் சரீரபளுவு வாததோஷம் சிலேத்மகோபம் குத்தல் ஆகியவைகளுண்டாம். 741

வாள் அவரைக்காயின் குணம்

அதிபித்தம் வாந்தி யரோசகமு முண்டாங்
குதிவாதம் வாய்ச்சுரப்புங் கூடுந்-துதிசக்ர
வாள வரையொத்த வனமுலை மாதேபசிய
வாளவரைக் காயான் மதி.

(இ-ள்.) சக்ரவாளகிரியனைய வனமுலைமாதே! பசுமையுள்ள வாளவரைக்காயால் பித்தாதிக்கம் வாந்தி அருசி குவாதரோகம் வாய்நீருறல் ஆகியவைகளுண்டாம். 742

Digitized By Roja Muthiah Research Library

மோச்சைக்காயின் குணம்

அனிலபித்த வையங் களைக்கடி துண்டாக்குந்
தொனியடுக்கும் வாதனைத்துந் தூண்டு-மனுதினமுங்
கொச்சை மலத்தைப்பெருக்குங் கோரவுட்டி னந்தணிக்கு
மொச்சைக்காய் செய்யு முறை.

(இ-ள்.) மொச்சைக்காயானது திரிதோஷங்கள் தொனிக்கத்தக்க வாதம் க்ஷீணமலம் இவைகளை விருத்திசெய்யும் மிகு சூடுதணியும். 743

பீர்க்கங்காயின் குணம்

தின்றவுடன் பீர்க்கங்காய் சீதமுறுங் காண்பித்த
மொன்று மூன்றாக வுயருமே-மன்றலணிக்
காரளகக் கச்சுமுலைக் காரிகையே வாதகப
நேரளவைத் தாண்டு நினை.

(இ-ள்.) கறுத்த அளகத்தையும் வாரிறு விறுக்கிய தனங்களை யுடைய மாதே! பீர்க்கங்காயையுண்ணில் சீதளமும் பித்தம் தன்மாத்திக்குமேல் மூன்றுபங்கதிகமும் வாதகபங்கள் தத்தம் நிலைபிசகும். 744

புடலங்காயின் குணம்

போகம் விளையும் பொருந்தி வளருமைய
மாகமதிற் பித்த மணுகுங்காண்-மேக
புடலங் கவியளகப் பாவாய் கேணும்
புடலங்காய்க் குள்ள புகழ்.

(இ-ள்.) மேகம்போன்ற கூந்தலாளே! புடலங்காய்க்கு சுக்கிலமும் கபமும் பயித்தியமும் அதிகரிக்கும். 745

பன்றிப்புடலங்காயின் குணம்

கரப்பான் சொறிசிரங்கு காணுச் சிலந்தி
யுரப்பாம் விஷக்கடியு முண்டா-முரைத்தவகை
யன்றிச் சயித்தியமு மாம்பன்றி தன்னையொத்த
பன்றிப் புடலுக்குப் பார்.

(இ-ள்.) பன்றிமாமிசத்தையொத்த பன்றிப்புடலங்காய்க்கு கரப்பான் புடை கிரந்தி சீதளம் இவையுண்டாவது மன்றிக் காணுக்கடி சிலந்திசர்ப்பம் முதலியவிஷங்கள் இறங்கியதாயினும் உடனே யேறும்.

கொம்புப்பாகல்காயின் குணம்

மருந்துகளி லற்குணத்தை மாற்று மஃதொன்று
திருந்துவலி வாதத்தைச் சேர்க்கும்-பொருந்துபித்தங்

Digitized By Roja Muthiah Research Library

கூட்டுமவ பத்தியத்தைக் கொண்டிருக்கும் வன்கரப்பான்
காட்டுங் கொம்புப்பாகற் காய்.

(இ-ள்.) அபத்திய பதார்த்தமாகிய கொம்புப்பாகற்காய் நல்ல ஔஷ தங்களை முறிப்பதுமன்றி வாதபித்த கோபங்களையும் உண்டாக்கும். ()

மிதிபாகல்காயின் குணம்

பித்தமொடு வாதப் பெருக்கைமிக வுண்டாக்குந்
தத்து கரப்பானைத் தருவிக்கும்-பற்றிரத
தார பாஷாணந் தமைமுறிக்குந் தப்பாது
காரவல்லி யாம்பாகற் காய்.

(இ-ள்.) காரவல்லியென்கிற மதிபாகற்காய் பித்தவாதகோபங் களையும் கரப்பானையும் உண்டாக்கும். பாதரசம் அரிதாரம் பாஷாணம் முதலியவைகளை முறிக்கும். இது கேரளதேசத்துப் பத்தியக்கறியாம்.

காட்டுப்பழுபாகல்காயின் குணம்

போஜனமுட் செல்லும் பொருந்துபசி யுண்டாகும்
காசபித்த வாதமிவை காணுவா-நேசமுற
வாட்டுப்படாக் கொங்கை மாதே குறிஞ்சிநிலக்
காட்டுப் பழுபாகற் காய்க்கு.

(இ-ள்.) சாயாத தனங்களையுடையமாதே! மலையடுத்த காட்டுப்பா கற்காய்க்கு அன்னமிறங்கலும் நல்ல பசியும் உண்டாம். இருமலாற் பிறந்த பித்தவாதகோபங்கள் நீங்கும். 749

அதளக்காயின் குணம்

அதளக்காய் வாய்க்குருசி யாயிருக்குந் தின்றுற்
கதளவொட் டாபித்தங் கதிக்கும்-பதலத்தின்
மந்தமுண்டாம் வாயுமிக வந்தடருந் தப்பாதே
கந்தமலர்க் குழலாய் காண்.

(இ-ள்.) கந்தமலர்க்குழலாளே! வாய்க்கு உணவைத்தருகின்ற அதளக்காயை யுண்ணில் பயித்தியமும் அடிவயிற்றில் மந்தமும் வாத நோயுமுண்டாம் என்க. 750

தூதுளங்காயின் குணம்

ஐயமுடன் பித்த மகலு மரோசகம்போந்
தையலே வாதந் தணியுங்காண்-வையமிசை
யோதுங் குடல்வாத மோடுமல மொழிந்
தூதுளங் காயுண்ணச் சொல்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) தூதுளங்காயால் கபரோகங்கள் பயித்தியதோஷம் அருசி ரத்தாசயவாயு ஆந்திரபித்தவாதம் மலபந்தம் இவை விலகும். 751

கோடிவழுதுணைக்காயின் குணம்-இது வழுதலங்காயென மருவியது

எல்லார்க்கும் நல்லிதமாஞ் சிலேஷ்மத்தைப் போக்கும்
புல்லார்க்கும் பத்தியம் புசிக்கலாம்-முல்லைக்
கடிகமழும் வார்குழலே காசினியிற் சொன்னேங்
கொடி வழுதுணைக்காய்க் குணம்.

(இ - ள்.) முல்லைமலர்வாசனை பரிமளிக்கா நின்ற கூந்தலாளே! கொடிவழுதுணைக்காய் வாதமுதலிய மூன்றுதோஷங்கட்கும் பொருந்துவதுமன்றிக் கபத்தைக்கரைக்கும். பத்தியத்திற்கும் ஆகும். 752

பயற்றங்காயின் குணம்

ஐய மகலு மரோசிகெடுந் தீபனமாம்
பையுதிர வாய்வும் பறக்குமென்பார்-செய்யு
நயத்த வவுஷதமு நாச மடையும்
பயற்றங்காய் தன்னையுண்டு பார்.

(இ-ள்.) மருந்தை முறிக்கின்ற பயற்றங்காயினால் கபாதிக்கம் அருசி ரத்தவாந்தி குன்மம் இவைவிலகும். பசிவிளைதலும் உண்டென்பார்.()

கோவைக்காய் இதன்வற்றல் இவைகளின் குணம்

வாயி னரோசகம்போ மாறு வழலையறு
கோயின் கபமகலு நுண்ணிடையே-தூயவதன்
வற்றக் கருசி மருவுகரப் பான்போகுஞ்
சுத்தக் கோவைக்காயைச் சொல்.

(இ-ள்.) சிற்றிடைப் பெண்ணாளே! நல்ல கோவைக்காயால் அருசி நீங்காத வெப்பம் சுரகபதோஷம் இவைபோம். வற்றலால் அரோசகமும் கரப்பானும் நீங்கும். 754

சுக்கான்காய் இதன்வற்றல் இவைகளின் குணம்

மைக்குழலே நீகேளாய் வாதமறும் பித்தமென்பார்
சுக்கான்காய் வற்றலது தொல்லுலகிற்-கைக்கின்ற
வாயுவை நீக்கும் வருமருசி போக்கிவிடு
நீயு மறிவாய் நிசம்.

(இ - ள்.) கருத்த கூந்தலாளே! சுக்கான்காயினால் வாததோஷம் நீங்கும். இது பித்தம் என்பார். அதன் வற்றலால் வாதத்தையும் அரோசகத்தையும்நீக்கும். 755

Digitized By Roja Muthiah Research Library

மிளகுக்காயின் குணம்

அளவை யறுக்கார மடைந்திருக்கும் வாத
விளைவை யெல்லாமறுக்கு மெய்யே-மிளகின்காய்
கண்டவர்க்கு மின்பமாங் காரிகையே சீழ்மூலங்
கொண்டவர்க்கு நன்மருந்தாங் கூறு.

(இ-ள்.) காரிகையே! மிகுகார்ப்புச் சுவையுடைய மிளகுக்காய் வாதரோகங்களையும் சீழ்மூலத்தையும் நீக்கும். அதைப்பார்க்கில் விருப்பமுண்டாம் என்க. 756

ஆற்றுத்துமட்டிக்காயின் குணம்-இதுவே கலிங்கம்

கிடையெங்கே சோம்பலெங்கே கேடுறச்செய் வாதக்
கடையெங்கே யாற்றுக் கலிங்க-மடைதிறக்கி
னண்டை யடைச்சலெங்கே யாயிழையார் சூதகத்தி
னுண்டை யுடைச்சலெங்கே யோது.

(இ-ள்.) ஆற்றுத்தும்மட்டிக்காயால் கீற்பிடிப்பால் நடையின்றிக் கிடத்தல் சோர்தல் மலாவிருதமுதலிய வாதரோகங்கள் கருப்பையைப் பற்றி அடைகின்ற ஆமம் சத்தகுன்மக்கட்டி அகாலருது இவைபோம்.

சிகைக்காயின் குணம்-இதனைச் சீக்காய் என்பர்

மூக்கின் சிகிச்சைகட்கு முக்கியமாம் பேதியையுண்
டாக்கு வமனத்தையு மழைப்பிக்குந்-தேய்க்கும்
வகைநெய்ச் சிக்கைப்போக்கு மாதரசே நாளுஞ்
சிகைக்கா யதனைத் தெரி.

(இ-ள்.) பெண்களுயகமே! சிகைக்காயானது நாசியுட்புரிகின்ற ஆக்கிராணநசியச்சிகிச்சைகளுக்கு முக்கிய மருந்தாயிருக்கும். அன்றியும் பேதியையும் வாந்தியையு முண்டாக்கும். பலவித நெய்ச்சிக்குகளை நீக்கும். 758

மரத்தின் பழவகை

விளாம்பழத்தின் குணம்

எப்போது மெய்க்கிதமா மீளையிருமல் கபமும்
வெப்பாகும் தாகமும்போ மெய்ப்பசியா-மிப்புவியி
லென்றாகிலுங் கனிமே லிச்சைவைத்துத் தின்னவெண்ணித்
தின்றால் விளாங்கனியைத் தின்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) விளாம்பழத்தினால் சுவாசம் காசம் கபாதிக்கம் பித்த தாகம் இவை விலகும். உடலுக்குச் சுகமும் நல்ல பசியும் உண்டாம். ()

இலந்தைப்பழத்தின் குணம்

பித்த மயக்கருசி பேராப் பெருவாந்தி
மொத்தனில மெல்லா முடிந்திடுங்காண்-மெத்த
வுலர்ந்த வெறுவயிற்றி லுண்டா லெரிவா
மிலந்தை நறுங்கனியை யெண்.

(இ-ள்.) இலந்தைப் பழத்தால் பித்தமூர்ச்சை அரோசிகந் திரிதோஷம் வாந்தி வலிவாதம் இவைபோம். இதைப் பசியிலுண்டால் எரிவுண்டாம் என்க. 760

வாழைப்பழத்தின் பொதுக் குணம்

சுத்தவறுச் சுனஞ்செய் சோமநோ யென்பதுவும்
பித்தநோ யென்னப் பிறந்தவையு-முத்தி
வரம்பைக் கடந்த மதமூர்ச்சை யும்போ
மரம்பைக் கனியுண் டறி.

(இ-ள்.) வாழைப்பழத்தால் உடம்பை வெளுக்கச்செய்கிற சோமரோகம் பித்தபிணிகள் மதநோய் மூர்ச்சை ஆகிய இவைபோம். 761

எண்வகை வாழைப்பழத்தின் குணம்

செவ்வாழை வெள்வாழை சேர்ந்தரச தாளிமொந்த
னெவ்வு வமையோர்க் குலத்திற்-கவ்வடுக்கு
வாழைமலை வாழைபசு வாழைகரு வாழைகளி
லூழிகரு வாழைநன்று மோர்.

இதுவுமது

ஓதலுற்ற வாழை யெட்டிலுற்ற கனிகளெல்லாம்
வாதநோய்க் காகாது வையகத்தோர்-போதவுண்ண
வெண்ண முண்டாயி னிதற்கியைந்த சத்துருவோ
டுண்ண விடரின் றுறை.

(இ-ள்.) செவ்வாழை வெள்ளவாழை ரஸ்தாளி பொந்தன் அடுக்குவாழை மலைவாழைப் பச்சைவாழை கருவாழை என்கிற 8-வகை வாழைப்பழங்களுள் முதலிற்கூறிய 4-ம் நோயாளர்க்கு ஆகும். மற்ற 4-ல் கருவாழை நன்மையைத்தரும். இவ்வெட்டு வகைப்பழங்களும் வாத ரோகிகட்குதவாது. ஆனால் அசனத்துடன் உண்ணில் குற்றமில்லை. ()

Digitized By Roja Muthiah Research Library

பேயன் வாழைப்பழத்தின் குணம்

பேயன் பழமருந்திற் பித்தரோகம் போகும்
வாயு வுண்டாகு மலங்கழியு-தீயே
தகத்திலதி குளிர்ச்சி யாகு மணங்கே
சகத்தி லிதையறியச் சாற்று.

(இ-ள்.) தேவமகளிரனையமாதே! பேயன்பழத்தினால் பயித்திய முமுட உட்சூடும் நீங்கும். வாதாதிக்கமும் மிகுகுளிர்ச்சியும் ஜாரியாக மலமிறங்கலும் உண்டாகும். 763

பொந்தன் வாழைப்பழத்தின் குணம்

மந்தமுட னேய்கலத்தல் வாதவலி சீதந்
தொந்தமுறு தாகமிவை தோன்றுங்காண்-புந்திவலி
யோட்டுபித்தங் காமாலை யுள்வறட்சி யுந்தொலையு
நாட்டு பொந்தன் பழத்தி னால்.

(இ-ள்.) பொந்தன் பழத்தினால் அக்கினிமந்தம் உடல்வலியுடன் பாரிப்பு இசிவு சீதளம் திரிதோஷதாகம் இவையுண்டாம். மனவுறுதியை விலக்குகிற பித்தம், காமாலை, தாதுவைப்பற்றிய வறட்சி நீங்கும்.

நவரை வாழைப்பழத்தின் குணம்

மாந்தமொடு நமைச்சல் வாதகபமும் பெருகும்
பாந்தலுறு கரப்பான் பரவுங்காண்-பூந்தடக்கை
யாழைப் பழித்தமொழி யன்னமே நவரை
வாழைப் பழத்தான் மதி.

(இ-ள்.) அழகுபொருந்திய கையையும் யாழைப்பழித்த மொழியையுமுடைய அன்னமே! நவரை வாழைப்பழத்தால் மந்தாக்கினி தினவு வாதசிலேஷ்ம தொந்தம் கரப்பான் ஆகிய இவை அதிகரிக்கும் என்க. 765

பலாப்பழத்தின் குணம்

தித்திக்கும் வாத சிலேஷ்மபித்த முண்டாக்கு
மெத்தக் கரப்பான் விளைவிக்குஞ்-சத்தியமாய்ச்
சேராப் பிணியையெலாஞ் சேர்ப்பிக்கு மோர்நொடியிற்
பாராய்ப் பலாவின் பழம்.

(இ-ள்.) இனிப்புள்ள பலாப்பழம் வாதபித்த தொந்தங்களையும் கரப்பானையும் முன்னில்லாத பிணிகளையும் உண்டாக்கும். 766

29

Digitized By Roja Muthiah Research Library

மாம்பழத்தின் குணம்

தின்றூற் றினவெடுக்குந் தீபனம்போ நெஞ்செரிவா
மன்றே விழிநோ யடருங்காண்-துன்றிமிக
வாதக் கரப்பனும் வன்கிரந்தி யும்பெருகுஞ்
சூதக் கனியின் சுகம்.

(இ-ள்.) மாம்பழத்தையுண்ணில் நமைச்சலும் மார்புயெரிச்சலும் கண்ணோவும் கருங்கரப்பானும் கிரந்தியும் அதிகரிக்கும். பசிநீங்கும். ()

மாம்பழம் காய் பிஞ்சு-இவைகளின் குணம்-விருத்தம்

வேத சத்திய மாக விளம்புவோந்
தாது விர்த்திக்குந் தம்பன-மாங்கனி
போத மர்த்தனம் புன்காயி னல்வடு
வாத பித்த கபங்களை மாற்றுமே.

(இ-ள்.) மாம்பழம் சுக்கில பெருக்கத்துக்கும் அதைக்கட்டுவதற்குமாகும். காயினல் அறிவுகெடும். பிஞ்சுதிரிதோஷகோபத்தை நீக்கும்.

தசையத்திப்பழத்தின் குணம்-வெண்பா

இரத்த முண்டாக்கு மிளைத்தமெய்யைத் தேற்றுஞ்
சுரத்தி லாமவெப்பத்தைத் தொலைக்கும்-கரத்த
மலத்தைக் கடிதுள்ளும் வன்னிகபத் தொந்தம்
பலத்த தசையத்திப் பழம்.

(இ-ள்.) உஷ்ணசீதளமுள்ள தசையத்திப்பழம் ரத்தவிருத்தியையும் தேகபோஷணையுந் தரும். சுரவெப்பும் சிரணமலமும் நீங்கும். 769

விதையத்திப்பழத்தின் குணம்

தினமுமலக் கட்டொழிக்குந் தேகவெப்ப நீக்கும்
வனமுறு பித்தகோப மாற்று-மினமயிலுந்
துன்னு விழியையுடைச் சொன்னமே வையகத்தோர்
பன்னு விதையத்திப் பழம்.

(இ-ள்.) துன்னிய கண்களையுடைய பொன்னிறம் போல்பவளே! விதையத்திப் பழமானது நித்திய மலபந்தத்தையும் சரீர உட்ணத்தையும் பித்தவேகத்தையும் போக்குமென்க. 770

புளியம்பழத்தின் குணம்-விருத்தம்

புத்தியு மந்தமாகும் பொருமியே யுடலமூதும்
பத்தியந் தவறுஞ்சந்தி பாதமாஞ் சுரங்கள்வீறுஞ்

Digitized By Roja Muthiah Research Library

சர்த்தியும் பித்தந்தீரும் தனுவெலாம் வாதமேறு
மத்திபந் தாதுபுஷ்டி வருந்திரை நரைபுளிக்கே.

(இ-ள்.) அபத்தியமான புளியம்பழத்தினுல் மந்தபுத்தி தேகந் தூலித்தல் சந்நிபாதசுரங்கள் அங்கசலனவாதம் சுக்கிலதாதுமத்திமம் திரை நரை இவையுண்டாம். வாந்தியும் பித்தரோகமும் விலகும். 771

பழம்புளியின் குணம்

தீதிற் பழம்புளியைச் சேர்க்கத் திரிதோஷம்
வாதமொடு சூலைசப மாறுங்கா-ணேதுருசஞ்
சாத்தியென்ற தோஷமிவை சாந்தமாங் கண்ணோய்போம்
பித்தமென்ற பேரொழியும் பேசு.

(இ-ள்.) குற்றமற்ற பழம்புளியால் திரிதோஷம் வாதநோய் சூலை சிலேத்மகோபம் ருட்சை வாந்தி விழிநோய் பயித்தியம் இவை நீங்கும்.

சரக்கோன்றைப்புளியின் குணம்

வன்பணில மேக மலக்கட் டொடுகுடரின்
றுன்ப மலினம்வெப்பு தோன்றுங்கா-லின்பந்
தருதமாலப் பரிமளத் தனத்தா யிந்தக்
கிருதமா லப்புளியைக் கேள்.

(இ-ள்.) பரிமளமணிந்த தனத்தாளே! சரக்கொன்றைப்புளியால் வாதப்பிரமேகம் மலபந்தம் குடல்வலி அக்குடலைப்பற்றிய அழுக்கு உஷ்ணம் இவைபோம். கிருதமாலம்-சரக்கொன்றை. 773

பனம்பழத்தின் குணம்

நாளும் பனம்பழத்தை நல்லமுதாயு ண்ணுங்கா
லாளுங் கரப்பா னழுகிரந்தி-நீளுமலஞ்
சிக்கும்பித் தத்தில்வளி சேருதல ணேய்க்கனமு
தித்திக்கும் பலக்குமெனச் செப்பு.

(இ-ள்.) தினமும் பனம்பழத்தையே உணவாக உண்டால் கரப்பான் அழுகிய சிரங்கு மலபந்தம் பித்தவாயுவாற்பிறந்த நோயினங்கள் இவைகளுண்டாம். இது யாழ்ப்பாணதேசத்து ஊணும். இதனைப் பனுட்டு என்பர். 774

தேற்றான்பழத்தின் குணம்

தேற்றான் கனிதனக்குச் சேயிழையே வன்காசந்
தேற்று தொழியுஞ் சுவாசமும்போஞ்-சாற்றின்மிகு

Digitized By Roja Muthiah Research Library

வாந்தி பெருகு மலம்போ முத்தோஷத்தைச்
சேர்ந்த பிணிகளும்போஞ் செப்பு.

(இ-ள்.) ஆபரணமணிந்த பெண்ணே! தேற்றான்பழத்தால் வாத இருமல் இரைப்பு மலக்கட்டு திரிதோஷரோகங்கள் ஆகிய இவைபோம். வாந்தியுண்டாம். 775

நாவற்பழத்தின் குணம்-இதனை நாகப்பழம் என்பர்

மாந்தம் விலாயும் வலிகரப்பா னுண்டாகுஞ்
சேர்ந்ததொரு நீரிழிவுஞ் சேருமே-நாந்தலொடு
வாயுவுங் கடுப்பும் வருங்கொதிப்புந் தாகமும்போந்
தூயநாவற் பழத்தாற் சொல்.

(இ-ள்.) நாவற்பழத்தினால் அக்கினிமந்தம் சரீரநோவு கடுவன் சீததாகம் கடுத்தல் இவையுண்டாம். அதிநீரும் வெப்பமும் தாகமும் நீங்குமென்க. 776

வெள்ளைநாவற்பழத்தின் குணம்

உதிரமொடு விந்துவையு முண்டாக்கு முள்ளே
யதிரழலை தன்னை யகற்றும்-பதியதனிற்
கண்ணு வலியார்க்குங் கதிக்கநோக்குந் திருவே
வெண்ணாவலின் கனியை விள்.

(இ-ள்.) மிகுந்த பார்வையையுடைய லிலக்குமி போல்பவளே! வெள்ளை நாவற்பழம் ரத்ததாதுவையும் சுக்கிலதாதுவையும் உண்டாக்கும். உள்வெப்பத்தை நீக்கும். 777

சம்புநாவற்பழத்தின் குணம்

அனில வழலு மரும்பித்த வெப்புந்
தனியலவு தாகமுந் தயங்கும்-தனிவேட
னம்பு நாணுங்கண் ணணியிழையே கானிலுறுஞ்
சம்பு நாவற்கனிக்குத் தான்.

(இ-ள்.) காட்டிலுள்ள சம்புநாவற்பழத்தால் வாதவுஷ்ணம் பித்த வுஷ்ணம் ஒரு தோஷத்தாற் பிறந்த தாகரோகம் இவை நீங்கும். 778

பாலைப்பழத்தின் குணம்-இதுவே-தீம்பாலை

வாத கரப்பனறும் வல்லசிலேஷ்ம மும்போம்
வேது கிந்தியுஞ்சா மென்பசியா-மோதுமதன்
கோலைப் பழித்தவிழிக் கோதா யினிமையுள்ள
பாலைப் பழத்தானீ பார்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) நிம்பாலைப் பழத்தால் கருங்கரப்பன் சிலேஷ்மதோஷம் வெப்பத்தைச் செய்கின்ற கிரந்தி இவைபோம் மிகுபசியுண்டாம். 779

கோட்டை முந்திரிப்பழத்தின் குணம்

தாகந் தணியுஞ் சகிக்கா கரப்பனு
மாகத்திற் சேர்ந்த வழலுமறும்-வேகின்ற
துட்ட வன்சிரங்கொடு புண்டோற்றுங் காகரப்பாங்
கொட்டை முந்திரிப் பழத்தாற் கூறு.

(இ-ள்.) கொட்டை முந்திரிப்பழத்தால் தாகமும் சரீரவெப்பமும் நீங்கும். கரப்பான் துஷ்டவிரணம் கிரந்தி நெஞ்சிற்கரப்பு இவையுண் டாகும். 780

தமரத்தம் பழத்தின் குணம் தந்தசடம்

வாதபித்தம் வாதகபம் வாந்திசுரற் கம்மல்கண்ணோய்
தாதுநஷ்டம் பித்தந் தலைநோயோ-டோதுசித்தத்
துற்ற பிரமையும்போம் மொண்டொடியே மாபுளிப்பா
நற்றமரத்தம் பழத்தை நாடு.

(இ-ள்.) புளிப்புள்ள தமரத்தம் பழத்தால் வாதபித்த தொந்தம் வாதசிலேஷ்ம தொந்தம் வாந்தி சுரற்கம்மல் நேத்திரரோகம் சுக்கில நஷ்டம் பித்தகோபம் சிரஸ்தாபரோகம் சித்தப்பிரமை இவைநீங்கும்.()

கொய்யாப்பழத்தின் குணம்

திரிதோஷஞ் சென்னித் திருப்ப மரோசி
பொருமாந்தம் வாந்தி பொருமல்-கரப்பானும்
மெய்யாப் பரவுமல மெத்தவிடும் போகமுண்டாங்
கொய்யாப் பழத்தினுற் கூறு.

(இ-ள்.) கொய்யாப் பழத்தினுல் முத்தோஷம் தலைமயக்கம் அரோ சகம் மந்தம் வாந்தி வயிறுப்பல் கரப்பான் வீரியம் இவையுண்டாம் மலங்கழியும். 782

எலுமிச்சம்பழத்தின் குணம்

தாகம் நகநோய் தாழாச் சிலிபதநோய்
வேகங்க ளுண்மாதம் வீறுபித்தம்-மாகண்ணோய்
கன்னநோய் வாந்தியும்போங் கட்டுவாதித் தொழிலின்
மன்னெலு மிச்சங்கனியை வாழ்த்து.

(இ-ள்.) மலபந்தமுள்ள எலுமிச்சம்பழத்தால் தாகம் நகச் சுற்று யானைக்கால் உன்மாதம் பித்தம் கண்ணோய் காதுவலி வாந்தி நீங்கும்.()

Digitized By Roja Muthiah Research Library

நாரத்தம்பழத்தின் குணம்

பித்தவழிக் குன்றுமறும் போராத தீபனமாம்
வித்தான தாதுவும் விளைந்திடுங்காண்-முத்திணைத்த
வாரணத்தைத் தாங்குமுலை யாயிழையே யெக்காலும்
நாரத்தை யின்கனியி னால்.

(இ-ள்.) முத்தாரத்தைத்தாங்குந் தனங்களை யுடையாளே! நாரத்தம்பழத்தினால் பித்தகுணம் ரோகம் நீங்கும். நீங்காத ஜடராக்கினியும் சுக்கிலவிருத்தியும் உண்டாகும் என்க. 784

சாதிநாரத்தை, கொளஞ்சி நாரத்தைப்பழங்களின் குணம்

சாதிநாரத் தம்பழந்தான் ரூகந் தனையகற்று
மோதருசி வாய்க்கயப்பை யோட்டுங்காண்-வேதா
ளஞ்சமேகத் தேகர்க்காம் வறட்சி போக்குங்
கொளிஞ்சி நாரத்தம்பழந்தான் கூறு.

(இ-ள்.) சாதிநாரத்தம்பழம் தாகம் அரோசகம் வாய்க்கசப்பு இவைகளை நீக்கும். கொளுஞ்சிநாரத்தம்பழம் பிரமேகதேகிகளது நாவறட்சியை விலக்கும் என்க. 785

சீத்தாப்பழத்தின் குணம்

பித்தகப மெத்தப் பெருகுமந்த மேலோடுஞ்
சித்தமதிற் றயக்கஞ் சேருங்கா-ணத்துலவும்
பூத்தானத் தாரும் பொலன்கொடியே பூவுலகிற்
சீத்தாக் கனியாற் றெளி.

(இ-ள்.) சீத்தாப்பழத்தால் பித்தசிலேஷ்ம தொந்தமும் அக்கினிமாந்தமும் சித்தப்பிரமையும் உண்டாகும் என்க. 786

மாதுளம்பழத்தின் குணம் இதுவே தாடிமக்கனி

சங்கையறச் சொற்றவிர்க்குஞ் சந்நியாசஞ் சர்த்தி
யங்கையதி தாகநமைச் சாருமோ-கங்கை
யிருந்தாடி மக்கட் கிரத்தனைச்செய் நோய்போ
மிருந் தாடமக்கனிகட் கெண்.

இதுவுமது

வாய்நீரூறல் கசப்பு வாந்திவிக்கண் மந்தமிகக்
காய்வெப்ப நெஞ்செரிவு காதடைப்பு-வோயா
மயக்கமுந் தீர்ந்துவிடு மாதுளம் பழத்தாற்
றயக்கமனத் தேமொழியே சாற்று.

Digitized By Roja Muthiah Research Library

இதுவுமது விருத்தம்

வெடித்துவீழ் பழத்தைவாங்கி மெல்லிய சீலைகட்டிக்
கடுக்கெனப் பிழிந்துகொண்டு கண்டதற் கிணங்கக்கூட்டிக்
குடித்திட வெப்புமாறுங் குளிர்ந்திடு மங்கமெல்லாங்
வடித்தநன் மொழியினளே மாதுளம் பழத்தின்சாறே.

(இ-ள்.) பெருமையாகிய மாதுளங் கனிகளுக்கு சந்தேகம் நீங்க நினைப்பையும் பேச்சையும் ஒழிக்கின்ற சந்நியாசரோகம் வாந்தி கபம் பித்தாகம் பித்தநோய் இவை அங்கு சேரமாட்டாது. புத்ர நிமித்தம் கங்காஸ்நானஞ் செய்து யாசிக்கச் செய்யும் மலட்டுவியாதி போகும். மேலும் அப்பழத்தைத் தின்பதனுல் வாய் நீர்ச்சுரப்பும் வாந்தியும் விக்கலும் மாந்தமும் அதிசுரமும் நெஞ்செரிவும் காதடைப்பும் நீங்காத மயக்கமும் ஒழியும். வெடித்த அந்தப் பழத்தைச் சீக்கிரமாகப் பிழிந்து மெல்லிய சீலையால் வடிக்கட்டி தகுந்த கற்கண்டு சேர்த்து ரசத்தைச் சாப்பிட உட்டினம் ஒழியும். சரீரமுழுதுங் குளிர்ச்சியடையும். 787

கோமட்டி மாதுளம்பழத்தின் குணம் வெண்பா

அருசி கெடும்பித்த மகலு மையந்தீரு
முரிசையுருங் கபமு மோடுஞ்-சரசமுறக்
காதளவும் பாயும்விழிக் காரிகையே நற்கொமட்டி
மாதுளையின் பொற்கனியை வாழ்த்து.

(இ-ள்.) காதளவோடும் விழிகளையுடைய பெண்ணே! கொமட்டி மாதுளம்பழத்தினுல் அரோசகம் பித்தகோபம் சிலேஷ்ம தோஷம் க்ஷயரோகம் இவை நீங்கும். உரிசையுண்டாம். 788

பேரீச்சம்பழத்தின் குணம் இதுவே கற்பூரம்

பேரீந் தெனுங்கனிக்குப் பித்தமத மூர்ச்சைசுர
நீரார்ந்த வைய நெடுந்தாகம்-பேரா
விரத்தபித்த நீரிழிவு விலைப்பு மரோசி
யுரத்தமலக் கட்டுமறு மோர்.

(இ-ள்.) பேரீச்சம்பழத்தால் நீரைச் சுரப்பிக்கின்ற பித்தரோகம் மதரோகம் மூர்ச்சைசுரம் சிலேஷ்ம நீர்க்கோவைதாகம் ரத்தபித்தம் நீரிழிவு வாயிலைப்பு அருசி மலபந்தம் இவை நீங்கும்.

Digitized By Roja Muthiah Research Library

செடியின் பழவகை

சிற்றீச்சம்பழத்தின் குணம்

சிற்றீச் செனுங்கனிக்குச் சீத முழலைநோய்
உற்ற சிரங்குகளு முண்டாகுஞ்-சுற்றிச்
செறியும் பலபிணியுந் தேமொழியே நாளு
மறிவு மழுங்கு மறி.

(இ-ள்.) தேன்போல் வசனிப்பவளே! சிற்றீச்சம்பழத்திற்கு சீத பேதி உழலைநோய் விரணம் இவை முதலிய பற்பலரோகங்களும் புத்திக்குக் குறைவும் உண்டாகும். 790

பூந்தாழம்பழத்தின் குணம் இதுவே அன்னுசிப்பழம்

மேகவெட்டை வாந்திபித்த மீறுவா மேனியிடுந்
தாகமு மட்டாகுந் தலைவலிபோம்-பாதமுறு
பூந்தாழை யின்பழத்தைப் பூரிப் புடன்புசிக்க
வாந் தாழ்வுமில்லை யறி.

(இ-ள்.) பூந்தாழம் பழத்தினால் பிரமேகவெள்ளை வாந்தி பித்த நோய் தாகம் சிரஸ்தாபரோகம் இவைபோகும். அழகுண்டாம். 791

கத்திரிப்பழத்தின் குணம்

பித்தங் கரப்பான் பெருங்கிரந்தி குஷ்டமிவை
மெத்தவுமா மெய்யிலழல் வீறுங்காண்-சத்தான
தாதுகட்ட மாங்கபங்காற் சார்ந்த சுவாசமும்போ
மோது கத்திரிப்பழத்தா லுண்.

(இ-ள்.) கத்திரிப்பழத்தினால் பித்தரோகம் கரப்பன் பெருவிரணம் குஷ்டு தேகவெப்பம் சுக்கிலக்குறைவு ஆகியவைகள் உண்டாகும். சோமையும் வாததோஷமும் இரைப்பும் நீங்கும் என்க. 792

கண்டங்கத்திரிப் பழத்தின் குணம்

காசஞ் சுவாசஞ் கயஞ்சீதம் பல்லரணை
வீசுசொறி தினவை விட்டோட்டும்-பேசுடலை
யுத்தரிக்குந் தீபனத்தை யுண்டாக் கிடுங்கண்டங்
கத்திரிப் பழக்குணத்தைக் காண்.

(இ-ள்.) கண்டங்கத்திரிப்பழம் இருமல் இரைப்பு க்ஷயம் கபம் பல்லரணை புடைாமை இவைகளைநீக்கும்பலத்தையும் பசியையும்தரும்

Digitized By Roja Muthiah Research Library

களாப்பழத்தின் குணம்

நல்ல பசியிலுண்டா னண்ணுமே சீதாத்தம்
வல்ல மந்தத்திலுண்டால் மாபசியா-மெல்லப்
புரையார்கள் நோய்போம் போற்றுசிர நீர்போந்
தரையார் களாப்பழத்தைத் தான்.

(இ-ள்.) நிலக்களாப்பழத்தை மிகுபசியில் தின்றால் சீதாத்தத்தையும் அதிமந்தத்தில் தின்றால் நற்பசியுமுண்டாம். தொண்டை வலியும் தலைக்கனப்பும் நீங்கும். 794

காரைப்பழத்தின் குணம்

சீதக் கடுப்புஞ் செறியிரத் தக்கடுப்பு
மோதுமதி சாரமும்போ முண்மையே-மோதுகட
னீரைப் பருகுமுகி னேரளக மின்கொடியே
காரைப் பழத்திற்கு காண்.

(இ-ள்.) கடல்நீரையுண்டு சூல்முதிர்ந்த மேகம்போலக் கறுத்த கூந்தலாளே! காரைப்பழத்தால் சீதாத்தக்கடுப்பும் அதிசாரம் நீங்கும்.

மரக்காரைப்பழத்தின் குணம்

சுரமும் பொருமலும்போந் தொன்மயக்க மில்லு
தரவூதற் போமறிவிந் தங்கும்-பருகு
மரக்காரை மெல்லிதழ்வா யஞ்சுகமே நாளு
மரக்கா ரையின்கனியை வாழ்த்து.

(இ-ள்.) சிவப்புநிறம் பொருந்திய மெல்லிய இதழையும் அழகிய வாயையுமுடையாளே! மரக்காரைப்பழத்தினால் சுரம் வயிற்றுப்பிசம் மூர்ச்சை மகோதரம் இவைகள் நீங்கும். புத்திக்குத் தெளிவு உண்டாம்.

சூரைப்பழத்தின் குணம்

மந்த மதிகரிக்கும் வன்சீதளஞ் சேரு
முந்து குடல்வலியு முண்டாங்காண்-முந்துநவில்
காரைப் பழத்திற் சுதித்தவொரு பேதமுமாஞ்
சூரைப் பழத்திற்குச் சொல்.

(இ-ள்.) முற்கூறிய காரைப்பழத்தில் ஒருபிரிவாகிய சூரைப்பழத்திற்கு அதிமந்தமும் கபதோஷமும் குடல்நோயும் உண்டாம். 797

மிளகாய்ப்பழத்தின் குணம்

மூல விரத்த முளைகடுப்பு முண்டாகும்
தாலமதிற் றுதுவுந் தழைக்குமே-ஆலமெனு

Digitized By Roja Muthiah Research Library

மந்த மரோசிகுன்மம் வாய்வும் பொருமலும்போ
முந்து மிளகாய் பழத்தா லோர்.

(இ-ள்.) மிளகாய்ப்பழத்தினுல் ரத்தமூலமுளையும் ஆசனக்கடுப்பும் வீரிய விருத்தியும் உண்டாம். விஷாலசகம் அருசி வயிற்றுநோய் விகுணவாதம் வயிற்றுப்பிசம் இவை நீங்கும். 798

கொடியின் பழவகை

சிறியகோடிமுந்திரிப்பழத்தின் குணம்-இதுவே திராட்சி

வெப்பருசி தாகம் விரணஞ் சுவாசகய
மெய்ப்புடைய பித்த மிரத்தபித்தஞ்-செப்பு
மடிமந்த மேக மதமும்போஞ் சின்னக்
கொடி முந்திரிகனிக்குக் கூறு.

(இ-ள்.) சிறியகொடி முந்திரிப்பழத்திற்கு, சுரம் அரோகம் தாகம் மதரோகம் ஆகிய இவைகள் போகும் என்க. 799

பெருங்கோடிமுந்திரிப்பழத்தின் குணம்

சோமநோய் தாவரத்தாற் றோன் றுவிஷ முன்மாத
காமமுறு மூத்திரநோய் நாடுமோ-சாமசுரம்
விண்ணெழி மெய்குளிரும் வீறுகொடி முந்திரிக்குக்
கண்ணொளியுந் தாதுவுமாங் காண்.

(இ-ள்.) பெருங்கொடி முந்திரிப்பழத்தால் சோமநோய் தாவர விஷம் உன்மாதம் மூத்திரதோஷம் ஆகிய இவை நீங்கும். உடல் குளிர்ச்சியும் கண்துலக்கமும் சுக்கிலவிருத்தியும் ஆம். 800

தூதுளம் பழத்தின்குணம்

கபக்கட்டு கோழை கத்திரி தோஷங்
குபுக்கென் றெழும்பு நீர்க்கோவை-கபுக்கென்
றழுத்து விஷமும் போமடர்தூ துளத்திற்
பழுத்து விழும்பழத்தாற் பார்.

(இ-ள்.) தூதுளம்பழத்தினுல் இறுகிய மார்புச்சளி க்ஷயம் வாதாதி மூன்றுதோஷங்கள் சலதோஷம் சர்ப்பவிஷம் இவைகள் நீங்கும். 801

பாகற்பழத்தின் குணம்

சுரமேகங் காசஞ் சுவாசமொடு மூலந்
திரிதோஷங் குஷ்டமிவை தீருங்-கிருமியது

Digitized By Roja Muthiah Research Library

மோகப் புணரியெனு மொய்குழலே வெம்பிவிழாப்
பாகற் பழத்தையுண்டு பார்.

(இ-ள்.) மோகசாகரமனைய நெருங்கிய கூந்தலாளே! வெம்பிவிழாத பாகல்பழத்தினால் சுரம் பிரமேகம் இருமல் இரைப்பு மூலம் முத்தோஷம் குஷ்டம் மலக்கிருமி இவை விலகும். 802

சவரிப்பழத்தின் குணம்

தலைவலி குடைச்சல் சலப்பிரமேகங்கள்
குலைகுலைந்தே காட்டிற் குடிபோ-நிலையா
னவரிப் படிமாதென் றையுறு மாதே
சவரிப் பழத்தினாற் றான்.

(இ-ள்.) தேவர்கள் இப்பூலோகமாதுதானோவென் றையமுறும் அழகினையுடைய பெண்ணே! சவரிப்பழத்தால் சிரநோயும் உடற்கடுப்பும் நீர்ப்பிரமேகமும் விலகுமென்க. 803

மரத்தின் வித்துவகை

மாங்கோட்டையின் குணம்

பேசுமோ சீதம் பெருக்குஞ் சோரிக்கடுப்பும்
வீசுமோ மூலமுறு வெங்கொதிப்பு-மாசுடைய
பூங்கொட்டையைத் தள்ளிப் போட்டுக் கனியில்வந்த
மாங்கொட்டையைக் காணில் வாது.

(இ-ள்.) மாம்பழக்கொட்டையால் சீதபேதி ரத்தாதிசாரம் உதிரக்கடுப்பு மூலச்சூடு ஆகியவைகள் போமென்க. 804

பலாக்கோட்டையின் குணம்

அள்ளேறு நீள்குடரி னப்பான் மலக்கட்டுங்
கள்ளேறு நெஞ்சர்நெஞ்சாங் கல்லகட்டி-னுள்ளே
சலாக்கொட்டை யிட்டசுகந் தானுங் கருக்கும்
பலாக்கொட்டை யிட்ட பலன்.

(இ-ள்.) கருக்கிய பலாக்கொட்டையினால் அள்ளுமாந்தம் குடல் கபத்தால் மலச்சிக்கல் கட்குடியர்க்குண்டாவதுபோல் நெஞ்சிற் புளியேப்பம் கற்போற் வயிறுகெட்டிப்படல் அதில் ஓட்டைசாணளவிருப்புச்சலாக்கை சொருகினதுபோ லுபத்திரவமிவையுண்டாம். 805

Digitized By Roja Muthiah Research Library

புளியங்கோட்டையின் குணம்

சுக்கில மேகாற் றுன்னுமதி சாரமொடு
மிக்கிரண நாக்கடுப்பு வெட்டையறுந்-தொக்கொடுவ
ருற்றபுளி வித்திற் குறுகுணத்தை மேன்மேலு
நற்றரையுண் மாதே நவில்.

(இ-ள்.) மாதே! தோலில் துவர்ப்புள்ள புளியங்கொட்டைக்குச் சுக்கிலமேகம் பித்தாதிசாரம் அதிவிரணம் மூத்திரக்கடுப்பு வெள்ளை இவைகள் நீங்கும். 806

தேற்றுங்கோட்டையின் குணம்

பிரமிவெள்ளை வெப்புபசி பேரார் கடுப்போ
டெரிகிரிச் சுரம்புண்ணு மின்றும்-வருமந்தந்
தேற்றுங் கொட்டைக்கஃதோ திட்டமருந்தாகுங்
கூற்றுங்கண் மாதேநீ கொள்.

(இ-ள்.) இயமனைப்போன்ற கண்களுடைய பெண்ணே! தேற்றுங் கொட்டைக்கு பிரமேகம் வெட்டை உட்சூடு ஜடாராக்கினி வயிற்றுக் கடுப்பு எரிகின்ற மூத்திரகிரிச்சுரம் இரணமும் நீங்கும் மந்தமுண்டாம் அது கண்ணுக்கு மருந்தாம். 807

எட்டிக்கோட்டையின் குணம்

கைக்கறுப்பு சந்நி கடிவிஷங் குஷ்டவலி
யெய்க்கவரு தாதுநஷ்ட மென்பவைபோ-மைக்கண்ணாய்
கட்டி கரப்பான் கனமயக்கு பித்தமுமி
லெட்டிமரக் கொட்டையி னாலே.

(இ-ள்.) மையணிந்த கண்களுடையவளே! எட்டிக்கொட்டையால் கருமேகம் சந்நி விஷக்கடி குஷ்டம் வாதவலி வீரியநஷ்டம் பிடகம் கரப்பன் மூர்ச்சை பயித்திய மிவைபோம். 808

புரசங்கோட்டையின் குணம்

வயிற்றுக் கிருமிகணம் வாதமொடு சீத
நியத்தப்படர் தாமரையு நீங்கும்-வயிற்று
வலியிரைச்சல் வன்கரப்பான் மாறும்பித் துண்டா
மலிபுரசங் கொட்டைதனை வாழ்த்து.

(இ-ள்.) புரசங்கொட்டையினால் மலப்புழுக்குலம் வாதவலி சீதம் படர்தாமரை குன்மம் வயிற்றிரைச்சல் கரப்பான் இவைகள்நீங்கும். பித்தமாம். 809

Digitized By Roja Muthiah Research Library

புன்னைக்கோட்டையின் குணம்

கன்ன விரணங் கடுஞ்சந்நி பாதமுட
னின்னலுறு வாதை யேகுங்காண்-புன்னைக்கோட்
டைக்கமட்டோ வென்னி லார்சூதக வாய்வு
மெய்க்கம மிட்டாழ்வாய்வு மில்.

(இ-ள்.) புன்னைக்கொட்டைக்கு செவிப்புண் சந்நி தனுர்வாதம் சூதகவாயு நீரேற்றி அதிலழுந்திய சீதளவாயு இவைகள் நீங்கும். 810

இலுப்பை, அழிஞ்சில் இவ்வித்துக்களின் குணம்

இலுப்பைவிதை யந்தரவாய் விற்கும் விஷத்திற்கு
மலுப்பை யுண்டாக்கி யகற்று-நிலத்திற்
றெழுஞ்சுக மோகக் கரப்பில்சொல் லஞ்சனமா
மழிஞ்சில் விதையென் றறி.

(இ-ள்.) இலுப்பைக்கொட்டை அந்தரவாயுவையும் விஷத்தையும் நீக்கும். அழிஞ்சில்விதை உலகவசியத்திற்கும் மறைப்புமைக்குமாகும்.

புங்கு காட்டுப்புங்கு-இவ்வித்துக்களின் குணம்

புங்கின்விதை காற்கிரந்தி புண்கரப்பான் காதெழுச்சி
யங்கசந்நி கண்ணோய்க்கு மாம்பேதி-யுங்கட்டுங்
காட்டுப் புங்கின்விதைக்கு கண்டதேமற் சொறிமெய்ப்
பூட்டுப் பங்கினவாய்வும் போம்.

(இ-ள்.) புங்கக்கொட்டை கழல் விரணம் கிரந்தி கரப்பான் கர்ண பரிஸ்போடகம் சந்நிகண்ணோய் இவைக்குதவும். மலத்தைகட்டும். காட்டுப்புங்கம்விதைக்கு தேமலும்புடையும் கீல்களைப்பற்றியவாய்வும்போம்

மருந்தோன்றி, வேம்பு-இவ்வித்துக்களின் குணம்

மருந்தோன்றி யின்விதைக்கு மாபில்லி சூனியம்
விருந்தாண்ட பேய்பூதம் வீயும்-கருதுான்றி
வேம்பின் விதைக்கு விஷஞ்சந்நி பாதமுதற்
றேம்பிவிழுந் தோடுமெனத் தேர்.

(இ-ள்.) மருந்தோன்றிவித்துக்கு பில்லிசூனியமும் பேய்பூதமும் கெடும் வேப்பம் பருப்புக்கு தாவரசங்கம விஷங்களும் சந்நியும் நீங்கும்.

கடப்பம்வித்தின் குணம்

கடப்பம் விதைக்குக் கடிவிஷமு முண்டோ
தொடுப்பு மண்டைநீருந் தொலையு-மிடக்கான,

Digitized By Roja Muthiah Research Library

வாத வகையொழியு மாந்தங்க ளேகிவிடுங்
கீதமொழிய மாதே கேள்.

(இ-ள்.) கீதம்போன்ற மொழியையுடைய பெண்ணே! கடப்பம் வித்துக்கு விஷக்கடி சிரஸ்தாபரோகம் வாதரோகங்கள் அக்கினிமாந்த பேதங்கள் ஆகிய இவைகள் நீங்கும் என்க. 814

மகிழம்வித்தின் குணம்

தாதுவைநன் மெய்யழகைச் சத்தியையுண் டாக்கிவிடுஞ்
சீதளமென்பார் கலிக்கஞ் செய்மருந்தாம்-வாதை
மலத்தைவிழித் தோஷத்தை வல்விஷத்தை வெப்பை
விலக்கு மகிழம் விதை.

(இ-ள்.) கண்கலிக்கத்துக்கான மகிழம்வித்து மலாவிருதவாதம் நேத்திரதோஷம் சர்ப்பவிஷம் சுரம் இவைகளை நீக்கும். சுக்கிலத்தையும் தேகவனப்பையும் பலத்தை விருத்தியுமாம். இது சீதளமென்பர்.

தில்லம்வித்தின் குணம்

தில்லம் விதைக்குச் சிறுவிஷம்போம் பின்விஷமுஞ்
செல்வஞ்செருக்குந் திமிர்வாய்வும்-வெல்லங்கொள்
வாரை வருத்துகின்ற வன்கபமுங் குஷ்டமுமிவ்
வூரை விடுத்தேகு முரை.

(இ-ள்.) தில்லம் விதைக்கு கீடவிஷம் சர்ப்பவிஷம் திமிர்வாதம் இனிப்புச் சுவையாற்பிறந்த கபரோகம் குஷ்டநோய் இவை நீங்கும். ()

ஆளிவித்தின் குணம்

வீக்க மதிவாந்தி மேனிவலி வாய்வுந்
தூக்கு நரம்பின்குத்த றொருவழலை-யோக்காள
மீளி யருசிவிதை வாதமும் போகு
மாளிவிதை தன்னு லறி.

(இ-ள்.) ஆளிவிதையினல் சோபை மிகுவமனம் உடற்கடுப்புவாத வலி நரம்புச்சூலை அஸ்திச்சூடு ஓக்காளம் அருசி பிசவாயு இவைநீங்கும்.

உருத்திராக்ஷத்தின் குணம்

நீளுமதி தாகத்தை நீங்காமுத் தோஷத்தை
யாளும்விக்கல் பித்தத்தை யாற்றுங்கா-ளுளு
மிருத்திரா மற்கபத்தை வீட்டுமே நல்ல
வுருத்திராக் கத்தின்வலி யுன்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) உருத்திராக்ஷமானது அதிதாகம் திரிதோஷம் விக்கல் ரோகம் பித்தகோபம் சிலேஷ்மாதிக்கம் இவைகளைப் போக்கும். 818

முருங்கைவித்து, இலை, ஈர்க்குகளின் குணம்

நீரான விந்துவுமே நீண்டபிசினுய்த் தடிக்குஞ்
சீராக மேனி செழிக்குங்காண்-பாராய்
முருங்கையுறு விதையான் மெய்த்தவிலை யீர்க்கோ
வொருங்கையுற நீரிறக்கு முன்.

(இ-ள்.) முருங்கைவித்தினால் சலரூபமாகக் கரைந்த விந்துவும் பிசினிபோலாகும். சரீரம் பலக்கும். இதன் இலையும் ஈர்க்கும் நீரைப் பெருக்கும். 819

மாதுளைவித்தின் குணம்

சுக்கிலத்தைக் கட்டுமந்தச் சுக்கிலதோஷம் போக்கு
மக்கணமேகக் கடுப்பை யாற்றுங்கா-ணெக்காலுங்
கோதுளத் தெண்ணுதமலர்க் கொம்பனையாய் தித்திக்கு
மாதுளத்தின் பீச வலி.

(இ-ள்.) புட்ப கொம்பனைய பெண்ணே! இனிப்புள்ள மாதுளம் வித்தானது சுக்கிலத்தை இறுக்குவதுந் தவிர அதிலுள்ள குற்றத்தையும் பிரமேகச் சுறுக்கையும் நீக்கும். பீசம்-வித்து. 820

முந்திரிப்பருப்பின் குணம்

மெத்த வினிப்பாகு மென்கொடியே தின்றக்காற்
பித்த வனிலம் பிறக்குங்காண்-சத்தியமா
யிந்திரியப் புஷ்டி யிளைக்காது மாந்தமுண்டா
முந்திரியி னற்பருப்பான் முன்.

(இ-ள்.) மிகுந்த உரிசையுள்ள முந்திரிபருப்பைத்தின்னில் பித்த வாததொந்தம் தாதுவிருத்தி அக்கினிமாந்தம் ஆகியவையுண்டாம். 821

வாதுமைப்பருப்பின் குணம்-இதுவே அடப்பம்விதை

அடப்பம் விதையாம் வாதுமைப் பருப்பினால்
மடற்பெரிய கட்படல மாறுஞ்-சடக்கெனவே
புண்மேற் கொழுப்பகலும் போகமு முண்டாமென்றே
மண்மேற் றுணிப்பாய் வழுத்து.

(இ-ள்.) அடப்பவிதை என்கிற வாதுமைப்பருப்பினால் விழிப்படலமும் விரணக்கொழுமையும் நீங்கும். கலவியில் விருப்பமுண்டாம். ()

Digitized By Roja Muthiah Research Library

சாரப்பருப்பு மிசரிப்பருப்பு இவைகளின் குணம்

சாரப் பருப்பாற் றளிமிசரி யின்பருப்பா
னீரப் பருப்பு நீர்ச்சீதந்-தீரத்
தொலையு மிரதந்தந்தி துய்த்தார்க்கு நன்றாங்
கலையும்விந்து விற்கூக்கங் காண்.

(இ-ள்.) சாரப்பருப்பு மிசரிப்பருப்பு இதுகளால் சிறுநீரைப்பற்றிய கடுஞ்சுருக்கும் மூத்திரக்கடுப்பும் சலப்பிரமேகமும் நீங்கும். நித்தசுக்கிலம் இறுக்கும். ரசகந்தங்களைத் தின்றவர்க்கும் நலனைத்தரும். இரதம் பாதரசம். தந்தி-கந்தகம். 823

செடியின் வித்துவகை

துத்திவித்தின் குணம்

கையிற் காலிற்படர்ந்த காமேகம் போயொழியு
மெய்யிலுறு குஷ்டம்போம் வெப்பகலுந்-துய்யதிரை
யத்திதனை யொத்தவிழி யாரணங்கே நாட்டுலுறுந்
துத்தி விதையைச் சுவை.

(இ-ள்.) கடல்போன்ற விழியையொத்த வாரணங்கே! துத்திவிதையை நீ தின்னக்கடவை; தின்றால் கைகால்களிலுண்டாகிய கருமேகமும் குஷ்டரோகமும் உட்சூடும் நீங்கும் என்க. 824

தகரைவித்தின் குணம்

வண்டு கடியுடனே வன்கடுவனும் பலவாம்
பண்டுநமை புடையும் பண்டிதர்கள்-கண்டுரையாப்
பித்த கனலும் பெருத்த தகரைவிதைச்
சித்தரைய னில்லா திசை.

(இ-ள்.) தகரைவிதைக்கு வண்டுகடி அரைக்கடுவன் நீங்காததினவு பலவித புடை பிடகருரைத்தற்கரிய பித்தம் இவைபோம். 825

நீர்முள்ளிவித்தின் குணம்

வித்துவுமாந் தாதுவுமா மேகரோகந் தொலையு
மூத்து மதிசார மொழியுங்காண்-வந்துடலி
லேறிய நீர்வீக்க மிறங்கு மிளைப்புமறுங்
கூறியநீர் முள்ளி விதைக்கு.

(இ-ள்.) நீர்முள்ளிவித்துக்கு பிரமேகம் அதிசாரம் கபசோபை ஆயாசம் இவைநீங்கும். சுக்கிலமும் சப்ததாதுக்களும் விருத்தியாம். ()

Digitized By Roja Muthiah Research Library

ஊமத்தம்வித்தின் குணம்

சுரம்போம் விஷம்போந் தொலையாத சந்நி
யுரம்போ மதிசார மோடு-நிரம்பவே
மாமத்த முண்டாம் வளரிளங்கொங் கைத்திருவே
யூமத்தை யின்விதையை யுன்.

(இ-ள்.) இளங் கொங்கையையுடைய விலக்குமிபோல்பவளே! ஊமத்தைவிதையினுல் சுரம் தாவரசங்கம் விஷம் சந்நிபாததோஷம் அதிசாரம் ஆகிய இவைபோம். வெற்றியுண்டாம். 827

வெங்காயம் துளசி கரிசாலை முள்ளங்கி உருத்திரச்சடை இவ்வித்துக்களின் குணம்

வெங்காய வித்துக்குன்மம் வீட்டுந் துளசிவித்துக்
கெங்கெமயங் கரிப்பா னின்பழமாற்-றங்காவே
காமாலை முள்ளங்கிக் காழால்வித் தாஞ்சடைவுத்
தோமாலை யுள்ளடக்குஞ் சொல்.

(இ-ள்.) வெங்காயவிதை குன்மத்தையும் துளசிவிதை சீதத்தையும் கரிசாலவிதை காமாலையையும் முள்ளங்கிவிதை விந்து நஷ்டத்தையும் உருத்திரச்சடைவிதை மயங்குகின்ற கபத்தையும் போக்குமென்க.

கொடியின் வித்துவகை

பூசினிவித்தின் குணம்

பித்தம்போ மேகம்போம் பேராவனலும் போம்
மெத்த வுடலங்குளிரு மேனியிடு-மித்தலத்து
வாசினியொன் றில்லா வலர்ந்தவசனத் தனமே
பூசினி வித்தைத்தின்னும் போது.

(இ-ள்.) அலர்ந்த புட்பத்திற் சஞ்சரிக்காநின்ற அன்னம்போல்பவளே! பூசினிவித்தினுல் பயித்தியமும் பிரமேகமும் சரீர அழலையும் நீக்கும். தேகத்திற் குளிர்ச்சியும் புஷ்டியும் உண்டாம். 829

வெள்ளரிவித்தின் குணம்

கடுப்பொடுநீர்க் கட்டுவெறுங் கல்லடைப்பு தரை
வெடிப்பு சதையடைப்பு மேக-மெடுத்துரைக்கா
வுள்ளரிவி யென்னு முறைகிரிச் சுரமிவைகள்
வெள்ளரி விதைக்கேகும் விள்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) வெள்ளரிவிதைக்கு கடுக்கின்றநீரடைப்பு கல்லடைப்புநீர்த் துவாரவெடிப்பு சதையடைப்பு பிரமேகம் கிரிச்சுரம் இவை நீங்கும். ()

கழற்காய் பேய்ப்பீர்க்கு-இவ்வித்துக்களின் குணம்

கழற்காய் விதைக்குக் கனவண்ட வாதந்
தழற்பக்கச் சூலேகுன்மஞ் சாந்தி-கழற்காலிற்
காய்ப்பாக்குந் துஷ்டக் கடிவிஷமெலாம் போக்கும்
பேய்பீர்க்கின் றன்விதையைப் பேசு.

(இ-ள்.) கழற்காய்விதைக்கு அண்டவாதமும் சூட்டினால் பிறந்த பக்கசூலேயும் வயிற்றுநோயும் நீங்கும். பேய்பீர்க்கம்வித்து காலிற்றமும் பேரும்படிக் கடித்த துஷ்ட விஷங்களை யெல்லாம் நீக்கும். 831

பூனைக்காலிவித்தின் குணம்

தழுதளை நாற்றத்தோடு சாரிரத்தப் போக்கும்
பழுதுபரி கின்றகரப் பானு-மழுதேகுந்
தாலமிசை விந்துவாஞ் சாற்றும் கரும்பூனைக்
காலி விதையினாற் காண்.

(இ-ள்.) கருமைநிறப்பூனைக்காலிவிதையினால், கற்றாழைநாற்றமும் ரத்தகிராணியும் கரப்பானும் நீங்கும். தாதுபுஷ்டியுண்டாகும். 832

உகாவித்தின் குணம்

வாதமுதன் முப்பிணியால் வந்தபிணியை யெல்லாங்
கோதிற் சமப்படுத்துங் கூறவொண்ணாச்-சீத
மகாவனச மண்டபத்தில் வாழ்ந்திருக்கு மாதே
யுகா விதையைநன்று யுரை.

(இ-ள்.) குளிர்ந்து மேன்மைதங்கிய மண்டபத்தில் வாழ்ந்திருக்கும் மாதே! உகாவிதை திரிதோஷங்களால்வந்த நோய்களை சாந்தமாக்கும்.

குன்றிவித்தின் குணம்-இதுவே குன்றிமணி

நேத்திரநோய் பித்த நிறமழுங்கல் காமாலே
வேர்த்திடு தாபச்சோப வெப்புடனே-கோத்திட்ட
வையமும்போம் விந்துவா மாயிழையே காட்டினுறை
செய்யகுன்றி யின்விதையைச் சேர்.

(இ-ள்.) நூல்போன்ற விடையையுடையவளே! சிவந்த குன்றி மணிப் பருப்பினால் கண்ணோய் பித்தநோய் மாறுநிறம் காமிலாரோகம் வியர்வையொடு வெப்பத்தைத் தருகின்ற மூர்ச்சைச்சுரம் சிலேஷ்மகோபம் இவை நீங்கும். சுக்கிலவிருத்தியாம். 834

Digitized By Roja Muthiah Research Library

நெருஞ்சில் வித்தின் குணம்

சொல்லவொண்ணு நீர்க்கட்டு துன்பமாமிச மருகல்
கல்லடைப் பெனும்பிணிகள் கண்டாக்கால்-வல்லக்
கருஞ்சினவேற் கண்மதே காசினியிற் றேன்று
நெருஞ்சினறும் வித்தை நினே.

(இ-ள்.) வேற்போன்ற கண்களேயுடையமாதே! நல்ல நெருஞ்சில் வித்துக்கு மூத்திரக்கட்டு சதையடைப்பு மூத்திரகிரிச்சுரம் சர்க்கராஸ்மரிரோகம் ஆகிய இவை நீங்கும். 835

தாமரைவித்தின் குணம்

மந்தத்துவ மகற்றும் வல்லருசி நீக்கிவிடு
மந்தத் துறைதாது விற்கடலே-தந்திடும்பின்
னுன்னி லின்னுந்தோடகுண மியாவுமோட்டுஞ் சலந்
தன்னி லண்ணிக்கிரவுஞ் சம்.

(இ-ள்.) தாமரைவிதை அலசத்தையும் அருசி முதலிய சர்வதோஷங்களே நீக்கும். கடைத்தாதுவாகிய் சுக்கிலத்தை விருத்திசெய் யும் என்க. 836

வெள்ளேஅல்லி செவ்வல்லி இவ்விதைகளின் குணம்

மிதுனவல்லி வித்துக்களால் விந்துண் டென்றுனு
மதனநரைக்குச் செம்மைக் காரக்க-மதனமிந்தப்
பேதமின்றி யீரற் பீலிகங்களுக்கு வன்மை
யேதமின்றிச் செய்யு மிரண்டும்.

(இ-ள்.) இருவித அல்லிவிதைகளினுலும் சுக்கிலவிருத்தி யுண் டென்று சிலமதாந்தரத்திற் சொல்லப்பட்டாலும் வெள்ளல்லிக்குச் சுக்கிலம் அதிகமும் செவ்வல்லிக்குச் சோணிதம் அதிகமும் ஆம். இந்தப் பேதமேயன்றி ஈரலுக்கும் பீலீககண்டங்களுக்கும் இரண்டு சமபலஞ்செய்யும். 837

வித்துக்களின் போது குணம்

மிக்கனலி மிக்குநளிர் வித்துகள் விதைப்புரக்கத்
தக்கனவன் றுஞ்சமர சந்தகவா-மக்குறிகா
யாகாய மின்றிபடாந் துறைவித் தங்கிநெடு
மாகாய மென்றூர்வித் தாம்.

(இ-ள்.) அதி உஷ்ணமுள்ளவும் அதிசீதளமுள்ளவும் ஆகிய இரு வகை விதைகளும் விந்துவை ரக்ஷிக்கத்தக்கவை அல்ல. உஷ்ணசீதளம

Digitized By Roja Muthiah Research Library

சமமாயுள்ளவித்துக்கள் அதை ரக்ஷிக்கத்தக்கனவாம். அவையெவை யெனில் காய்க்குள் இடைவெளியின்றி நெருங்கியிருக்கின்ற தூதுவளை முதலிய விதைகளெல்லாம் உஷ்ணமும் இடைவெளி யிருந்து ஒன்றோ டொன்று நெருங்காமலிருக்கிற பூசினிமுதலிய வித்துக்கள் அதிசீதளமு மாகும். சமமானவை இடைவெளியுள்ளனவும் ஒன்றுக்கோவ்வோர் வித்து உள்ளனவுமான முருங்கை வாதுமைவித்துக்கள் முதலியன. ()

நெற்களின் பொதுவகை

செந்நெல் வகைக்குஞ் சிறுதானிய வகைக்கு
மிந்நிலத்தி லுண்டோ விலக்கென்ப-துன்னுங்காற்
கண்ட மட்டிலே பெயராங் கண்டவவரவர்க
ளுண்டமட்டிலே சுவையா மோர்.

(இ-ள். இந்தவுலகில் விளைகின்ற நன்செய் புன்செய் தானியவருக் கங்களின் பெயரையும் சுவையையும் அளவிடுதற்கரிதேயாயினும் அவற் றைப் பார்த்தவகையில் எவரும் புசித்தவகையில் சுவையுமாம் என்க.()

கார்அரிசியின் குணம்

காரரிசி மந்தங் கனப்புடலிற் றாலிப்பும்
பாரறிய வாயுவையும் பண்ணுங்கா-ணேரே
கரப்பா னென்பார் பொருந்திற் காயமுறுமெத்த
வுரப்பாகு மென்றே யுரை.

(இ-ள்.) மந்தகுணமுள்ள பருத்தகாரரிசி சரீரபுஷ்டியையும் தனி வாதவிளைவையும் பலத்தையும் தரும். இது கரப்பன் பண்டம் என்பர்.

மணக்கத்தை வாலான் கருங்குறவை என்னும் இவ்வரிசியின் குணம்

மணக்கத்தை வாலான் கருங்குறவை மூன்றும்
பிணக்குஷ்டைச் சிலவிஷத்தைப் போக்கு-முணக்குமுற
வாக்கியுண்டாற் கரப்பா னுருமென் பார்கள்சிலர்
பார்க்குளிதை பாய்ந்து பார்.

(இ-ள்.) மணக்கத்தை வாலான் கருங்குறவை என்னும் மூவகை அரிசிகளும் விரணகுஷ்டத்தையும் அற்பவிஷத்தையும் நீக்கும். இவ் வகைச் சாதங்களாற் சில வயித்தியர் கரப்பானுண்டா மென்பார். 841

ஈர்க்குச்சம்பா அரிசியின் குணம்

ஈர்க்குச் சம்பாவென் றியம்பு மரிசியது
நாக்குக் கதியுரிசை நல்குங்காண்-பார்க்குமிடத்

தெல்லார்க் குங்காத வியற்றுமற்ப பித்தமுமாம்
வில்லாரும் பூசைகட்காம் விள்.

(இ-ள்.) தேவாராதனைக்கான ஈர்க்குச்சம்பா அரிசி நாவுக்குருசியை யும் பார்க்கில் இச்சையையும் தரும். இதில் கொஞ்சம்பித்தம் உண்டு.

புழுகுசம்பா அரிசியின் குணம்

புழுகு சம்பாவரிசி பூதலத்தி லுண்பார்க்
கழகு மொளியுஞ் சேர்வதன்றி-யழலாம்
பசிதாகந் தீரும் பலமு மிகவுண்டா
முசிவே துடற்சுகமா முன்.

(இ-ள்.) புழுகுச்சம்பா அரிசியை யுண்பவர்களுக்கு வனப்புங்காந் தியும் அதிதீபாக்கினியும் பலமும் உண்டாம். தாகம் நீங்கும். 843

கைவரைச்சம்பா அரிசியின் குணம்

கைவரச் சம்பாவரிசி கண்டா லவரவர்த
மெய்வரைபோ லென்று மிகுபலமா-மைய
மடையா தென்பார்க ளடர்சுக் கிலமு
முடையா ததிசுகமா முன்.

(இ-ள்.) கைவரைச்சம்பா அரிசியால் உடற்குமலைபோன்றவன்மை யும் சுக்கிலஸ்தம்பன சுகம் உண்டாம். இதில் பித்தமின்றென்பர். 844

செஞ்சம்பா அரிசியின் குணம்

செஞ்சம்பாத் தண்டுலத்தாற் றீராச் சிறுசிரங்கும்
விஞ்சுபுண்ணும் வன்சொறியு மேகுங்காண்-துஞ்சா
ததிக பசியாகு மணங்கரசே யிந்தப்
பதியதனி னீயுண்டு பார்.

(இ-ள்.) செஞ்சம்பா அரிசியாற் கிளைக்கின்ற அற்பசிரங்கியும் அதிவிரணமுங் யானைச்சொறியும் மிகுபசியும் உண்டாகும். 845

குண்டுசம்பா அரிசியின் குணம்

குண்டுச் சம்பாவரிசி கொண்டுண்ணும் பேர்களுக்குப்
பண்டையில்லா மந்தநோய் பாரிக்கு-மண்டுபடாத்
தாகமெல்லா மொழியுந் தையலே வன்கரப்பான்
றேகமெல்லாம் பரவுஞ் செப்பு.

(இ-ள்.) பெண்ணே! குண்டுச்சம்பா அரிசிக்கு அக்கினிமாந்தமும் பலமிகுந்த கரப்பான் ரோகமும் உண்டாம். தாகரோகந்தீரும். 846

Digitized By Roja Muthiah Research Library

கல்லுண்டைச்சம்பா அரிசியின் குணம்

கல்லுண்டைச் சம்பாவைக் கண்டருந்தி நின்றவர்முன்
மல்லுண்ட பேரெதிர்க்க வாய்க்குமோ-வில்லுண்டை
போலுரையா நல்ல புசபலமா மின்சுவையாம்
பாலனைய மென்மொழியே பார்.

(இ-ள்.) பாலனைய மிருதுவாகிய பெண்ணே! கல்லுண்டைச் சம்பா அரிசியை உண்பவர்க்கு மல்யுத்தக்காரரும் எதிர்க்கக்கூடாத புசபலமும் மிகுவார்த்தையும் உண்டாம் என்க. 847

மல்லிகைச்சம்பா அரிசியின் குணம்

மல்லிகைச் சம்பாவரிசி வாய்க்குரிசை யாயிருக்கு
நல்லது மெய்க்கு நலஞ்செய்யும்-சொல்லாக்
கரப்பானை மேகத்தைக் கண்ணழலை நீக்கு
முரப்பாம் பலங்கொடுக்கு முன்.

(இ-ள்.) நாவிற்கு உரிசையாயிருக்கின்ற மல்லிகைச்சம்பா அரிசி சரீரத்திற்குச் சவுக்கியத்தையும் உறுதியையும் தரும். கரப்பான் பிரமேகம் நேத்திரவெப்பம் ஆகிய இவைகளைப்போக்கும். 848

இலுப்பைப்பூச்சம்பா அரிசியின் குணம்

பித்தமிகப் பெருக்கும் பேருலகி லியாவர்க்கு
முற்றதலை வலிநோ யுண்டாக்குஞ்-சத்தியமாய்த்
தாக மெடுப்பிக்குந் தழலிலுப்பைப் பூச்சம்பா
வாகமதி லேய்வளர்க்கு மால்.

(இ-ள்.) இலுப்பைப்பூச்சம்பா அரிசி பித்தாதிக்கத்தினால் விளைகின்ற சிற்சில ரோகம் சிரஸ்தாபம் உபசர்க்கதாகம் உஷ்ணம் இவைகளைச்செய்யும். 849

மணிச்சம்பா அரிசியின் குணம்

நல்லமணிச் சம்பா நாடுகின்ற நீரிழிவைக்
கொல்லு மிகுந்தசுகங் கொண்டளிக்கு-மெல்லப்
பசியளிக்கு மூத்தோரைப் பாலர்களை நாளு
முசியாமலே வளர்க்கு முன்.

(இ-ள்.) நல்லமணிச்சம்பா அரிசி அதிமூத்திரத்தை விலக்கும். அதிசுகத்தால் உடலையும் விருத்தர் பாலர்களையும் வளர்க்கும் என்க. ()

Digitized By Roja Muthiah Research Library

வளைதடிச்சம்பா அரிசியின் குணம்

வளைதடிச் சம்பாவிற்கு வாதபித்த முண்டா
முளையுமடி பொருமி யுப்புங்-கொளகொளெனத்
தானே கரப்பானுந் தாங்கொணு மந்தமுமாந்
தேனே யிதனைத் தெளி.

(இ-ள்.) தேனனையமொழியாளே! வளைதடிச்சம்பா அரிசிக்குவாத பித்ததொந்தம் வயிறு உளைதலுடன் உப்பிசம் கரப்பான் மிகுமந்தம் இவை உண்டாம். 851

கோரைச்சம்பா அரிசியின் குணம்

கோரைச் சம்பாநற் குளிர்ச்சியென்பார் பித்தத்தைப்
பேரா வழலைப் பிரித்தோட்டுந்-தீராத
மேகமொடு தினவை வீட்டுஞ் சுகங்கொடுக்கு
மேகமுறை ருழலாய் விள்.

(இ-ள்.) மேகமுறைகின்ற கூந்தலையுடையாளே! கோரைச்சம்பா அரிசி பயித்தியம் உட்சூடு பிரமேகம் நமைச்சல் இவைகளை நீக்கும். சவுக்கியந்தரும். குளிர்ச்சியென்பார். 852

குறுஞ்சம்பா அரிசியின் குணம்

குறுஞ்சம்பா பித்தங் குடியிருக்கச் செய்யும்
வெறுங்கரப்பா னுண்டாக்கு மெய்யி-னுறுங்கச்செய்
வாதமருள் வாயுவினை மாற்றும்போகங் கொடுக்குஞ்
சீதவனசத் திருவே செப்பு.

(இ-ள்.) குளிர்ந்த தாமரையையொத்த வனசத்திருமாதே! குறுஞ் சம்பா அரிசி பித்தம் கரப்பான் சுக்லதாது இவைகளை விருத்திசெய்யும் சரீரத்தில் குத்துகின்ற வாதநோயை நீக்கும். 853

மிளகுச்சம்பா அரிசியின் குணம்

மிளகுச் சம்பாவரிசி மென்சுகத்தைச் செய்யு
மளவில் பலநோயை யகற்றுங்-களகளெனத்
தீபனத்தைத் தூண்டிவிடுந் தீராவலி தொலைக்குஞ்
சோபனத்தைச் செய்நகையாய் சொல்,

(இ-ள்.) சோபனத்தை செய்கின்ற நகையாளே! மிளகுச்சம்பா அரிசி சவுக்கியத்தைக் கொடுத்துத் தீபாக்கினியை வளர்க்கும். மகா வாத முதலிய பலவித ரோகங்களைப் போக்கும். 854

Digitized By Roja Muthiah Research Library

சீரகச்சம்பா அரிசியின் குணம்

சீரகச் சம்பாவரிசி தின்னச் சுவைதரும்
பேரகத்து வாதமெல்லாம் பேருங்காண்-பாருலகி
லுண்ட வுடனேபசியு முண்டாகும் பொய்யலவே
வண்டருறை பூங்குழலே வாழ்த்து.

(இ-ள்.) வண்டுகள் மொய்க்குங் கூந்தலாளே! மதுரமுள்ள சீரகச் சம்பா அரிசியை உண்டவன் மீளவும் உண்பதற்கான தீபனமுண்டாம். அற்பவாதரோகங்கள் நீங்கும். 855

காளான்சம்பா அரிசியின் குணம்

காளான் சம்பாவரிசி கல்லையொத்த மாபலத்தைக்
கேளாமலே கொடுக்குங் கேளினனும்-நீளு
மானிலத்தைப் போக்கிவிடு மாரோக்கி யத்தை
கானிலத்திற் செய்துவிடு நாடு.

(இ-ள்.) காளான் சம்பா அரிசி சரீரத்திற்கு மலைபோன்ற வுறுதியையும் சவுக்கியத்தையும் தரும். சிற்சிலவாதரோகங்களை நீக்கும். ()

மைச்சம்பா அரிசியின் குணம்

மைச்சம்பாத் தண்டுலத்தால் வாயருசி போயொழியும்
வெச்சென்ற வாதபித்த மெய்யைவிடு-நச்சுந்
தனிவாயு வுஞ்சுரக்குஞ் சர்த்தியும்போ மின்பக்
கனிமொழியே நன்றாகக் காண்.

(இ-ள்.) இன்பந்தருங் கனிபோன்றமொழியையுடைய பெண்ணே! மைச்சம்பா அரிசியினால் அரோசகம் வாதபித்ததொந்தம் தனிவாத கோபம் வாந்தி நோய் ஆகியவைபோம் என்க. 857

கோடைச்சம்பா அரிசியின் குணம்

கோடைச் சம்பாவரிசி கொண்டாற் றிரிதோஷ
வாடைக் கதிக வலியுமுண்டோ-நீடு
முறுப்பினுள்ள நோயெல்லா மோதாம லேகுங்
கறுப்பினுயர் வார்குழலே காண்.

(இ-ள்.) கறுத்த கூந்தலாளே! கோடைச்சம்பா அரிசியை யுண்ணில் முத்தோஷத்தாற் பிறந்த வாதவலியும் சரீரத்திலுள்ள சிற்சில நோய்களும் விலகும் என்க. 858

Digitized By Roja Muthiah Research Library

காடைச்சம்பா அரிசியின் குணம்

காடைச் சம்பாவரிசி கண்டுதரி சித்தவர்க்கு
நீடுற்ற வேகவன னிற்குமோ-சாடைப்
பறவைபோ னேயும் பறக்கும் பலத்தி
னுறவை யெவர்சொல்வா ருறை.

(இ-ள்.) காடைச்சம்பா அரிசிக்கு பிரமேகசுரமும் சில அற்ப நோய்களும் நீங்கும். சுக்கிலதாது விருத்தியும் பலமுமுண்டாம். 859

குன்றிமணிச்சம்பா அரிசியின் குணம்

குன்றிமணிச் சம்பா கொண்டா லனிலமறும்
வென்றி தருபல மிருக்குங்காண்-துன்றியநோ
யெல்லாம் பறக்குமுறை யிந்திரிய புஷ்டியுண்டாம்
நல்லா ரறிய நவில்.

(இ-ள்.) குன்றிமணிச்சம்பா அரிசியையுண்ணில் அற்பவாதரோக முதலிய சிலநோய்கள் நீங்கும். சரீரபலமும் சுக்கிலதாதுவுமுண்டாம்.

அன்னமழகி அரிசியின் குணம்

அன்ன மழகியரி யாரோக்கியங் கொடுக்குந்
தின்னவெகு ருசியாஞ் செப்பக்கே-ளிந்நிலத்து
நோயனைத்துந் தூளாய் நொறுங்கத் தகர்த்துவிடுஞ்
தீயனலைப் போக்குந் தெளி.

(இ-ள்.) மிகுமதுரமுள்ள அன்னமழகியரிசி சகல சுரங்களையும் பித்தவெப்பத்தையும் போக்கித் தேகத்திற்குச் சௌக்கியத்தைக்கொடுக்கும் என்க. அரி-அரிசி, நோய்-சுரம். 861

பச்சை அரிசியின் குணம்

சுத்த வனிலமந்தத் தோன்றுமெரி பித்தம்போம்
பத்தியத்தி லெண்ணார்கள் பண்டிதர்கண்-மெத்தவுமே
வைச்ச சுமைதாங்க வலியுண்டாந் தேகத்திற்
பச்சரிசியைப் புசித்துப்பார்.

(இ-ள்.) பத்தியத்தில் விலக்கான பச்சரிசியினால் தனிவாதகோபமும் அலசரோகமும் மிகுந்தபலமு முண்டாம். பித்தயெரிச்சல்போம்.

புழுங்கல் அரிசியின் குணம்

புழுங்க லரிசியது புத்திரர்க்கு மாகு
மழுங்குகின்ற வாயுவிற்கு மாகு-மொழுங்காய்

நிலைத்த பத்தியத்திற்கு நீட்டலா மெய்க்குப்
பலத்தைக் கொடாததனைப் பார்.

(இ-ள்.) புழுங்கலரிசி குழந்தைகள் வருந்துகின்ற வாதரோகியர் அரும்பத்தியமுள்ளவர் இவர்களுக்குதவும். ஆனாலுடலுக்குறுதியில்லை.

பழமை அரிசியின் குணம்

பழவரிசி மூத்தோர்க்கும் பாலர்கட்கு மாகு
மழன் மிகவுமாகு மருந்தி-னிழலைப்போ
லாகு முடற்குளிர்ச்சி யையமறு நோயுற்றோர்க்
காகும் பன்னேய்போ மறி.

(இ-ள்.) பழய அரிசி விருத்தர் பாலர் ரோகியர்களுக்குமாகும். இவ்வன்னத்தையுண்ணில் பசியும் குளிர்ச்சியுமாம். சிற்சில நோயும் கபமும் நீங்குமென்க. 864

சவ்வரிசியின் குணம்

மேகமத்தி மேகஞ்சீழ் மேகரத்த மேகமும்போந்
தேகத்திற் றாதுவுஞ் சிலேத்மமுண்-டாகுமெழிற்
செவ்வரி படர்ந்தவிழித் தேமொழி மாதேயுலகிற்
சவ்வரிசியின் குணத்தைச் சாற்று.

(இ-ள்.) செவ்வரிபடர்ந்த விழியையுடைய தேனனைய மொழியாளே! சவ்வருசியினால் பிரமேகம் அஸ்திசிராவரோகம் வெண்மேகமிவைபோம். சுக்கிலமும் கபமும் விளையுமென்க. 865

மூங்கில் அரிசியின் குணம்

உதிரபித்தந் தீர்க்கு மோங்கு சுரத்திற்கு
மதிரவரு கண்ணோ யதற்கும்-புதிதாகக்
கஞ்சிசெய்ய லாகுங் கருதிற்சிற் றுண்டியுமாஞ்
செஞ்சிலம்பார் மூங்கி லரிசி

(இ-ள்.) பாயசம் பலகாரமுதலியவை செய்வதற்கான மூங்கிலரிசி ரத்தபித்தரோகம் விபரீதசுரம் நேத்திரநோய் இவைகளை விலக்கும். ()

திப்பிலி அரிசியின் குணம்

திப்பிலியின் றண்டுலஞ் சிலேத்மத்தைப் போக்கிவிடு
முப்பிசத்தை மேகத்தை யோட்டுங்காண்-தப்பாமல்
வாதசுரந் தணிக்கு மாகபரோகந் தொலைக்குந்
தாதுவை வளர்ப்பிக்குந் தான்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) திப்பிலியரிசி கபம் வயிற்றுப்பிசம் மேகம் வாதசுரம் க்ஷயரோகம் இவைகளைப்போக்கும். விந்துவைப்போஷிக்கும். 867

கோதுமை அரிசியின் குணம்

கோதுமையி னற்குணந்தான் கோதிற் பலங்கொடுக்குந்
தாதுவிர்த்தி யாக்குந் தனிவாய்வைச்-சேதிக்கும்
பித்த மளிக்கும் பிரமேகத்தைக் கெடுக்கு
முத்தமமா மென்றே யுரை.

(இ-ள்.) கோதுமை அரிசி நல்லபலம் சுக்கிலம் பித்தம் இதுகளை விருத்திசெய்யும். தனிவாதகோபத்தையும் பிரமேகத்தையும் நீக்கும்.

கேழ்வரகின் குணம்

சுத்த வனிலந்தன்னைத் தோன்றுவிக்கு மல்லவெனிற்
பித்த மனிலத்தைப் பிறப்பிக்குஞ்-சித்ரமலத்
தாழ்குழலே நீடுபஞ்சந் தாங்கியெனச் சொல்லுகின்ற
கேழ்வரகின் செய்தியிது கேள்.

(இ-ள்.) அழகிய மலரையணிந்த தாழ்ந்த கூந்தலையுடைய பெண்ணே! பஞ்சந்தாங்கி யென்கிற கேழ்வரகு சுத்தவாதத்தை வருவிக்கும். அல்லது பித்தவாதத்தையாவது உண்டாக்குமென்க. 869

கம்பு அரிசியின் குணம்

கம்பு குளிர்ச்சியெனக் காசினியிற் சொல்லுவர்கான்
பம்பு சொறிசிரங்கைப் பாலிக்கும்-வெம்பு
முடலின் கொதிப்பகற்று முட்பலமு முண்டாக்கு
மடலயிற்கண் மாதே யறி.

(இ-ள்.) கொலைத்தொழிலை புரிகின்ற கூரியவேல்போலுங் கண்களையுடையமாதே! கம்பு அரிசி நெருங்கிய நமைச்சலையும் சிரங்குகளையும் வீரியத்தையும் செய்யும். சரீரவெப்பமகற்றும் குளிர்ச்சியென்பர்.()

சாமைஅரிசியின் குணம்

உடலிறு தாக சுரமோடு மேகம்போ
மடலுறு கால்வீக்க மகலுங்-கடலிலிறை
யாமை யனையபதத் தன்னமே மேனியிடுஞ்
சாமை யரிசிக்குத் தான்.

(இ-ள்.) சாமை அரிசிக்கு தாகசுரம் பிரமேகம் மகத்வாதநோய் சோபாரோகம் இவை நீங்கும். தேகபுஷ்டியுண்டாகுமென்க. 871

LIBRARY SERVICE INDIA
KOTTAIYUR-623106.
TAMILNADU. INDIA.
Digitized By Roja Muthiah Research Library

தினை அரிசியின் குணம்

சந்நி சுரமையந் தனிவாத மும்போகுந்
துன்னுபித் தத்தைமிகத் தூண்டிவிடுந்-தின்னப்
பிணையும் பசியாம் பெருவீக்க நீங்குந்
தினையரிசி யின்குணத்தை தேர்.

(இ-ள்.) தினை அரிசி சந்நிபாதசுரம் கபரோகம் சுத்தவாதம் சோபாரோகம் இவைகளைப் போக்கும். பித்தத்தையும் பசியையுமுண் டாக்கும். 872

செஞ்சோள அரிசியின் குணம்

செஞ்சோளந் தின்றாற் சிறுசிரங்கு புண்ணுகளும்
விஞ்சு மெழிலான மேனிகெடு-நெஞ்செரிந்து
மந்தமிகுந் தீபனம்போ மாறாக் கரப்பானுங்
கந்தமலர்ப் பூங்குழலே காண்.

(இ-ள்.) செஞ்சோள அரிசியால் அற்பகிரந்திகள் விரணங்கள் மந்தரோகம் கரப்பான் இவை அதிகரிக்கும். அழகும் பசியும் விலகும்.

கருஞ்சோள அரிசியின் குணம்

சொறியைச் சிரங்கைத் தொலையாத புண்ணை
மறுவிலா மெய்யில் வளர்க்கும்-குறியா
வழகை கொடுக்கு மசதியை யுண்டாக்கும்
பழகு கருஞ்சோளமது பார்.

(இ-ள்.) கருஞ்சோள அரிசி நமைச்சல் கிரந்தி விரணம் அயர்வு இவைகளை உண்டாக்கும். மாறுநிறமான அழகைத்தருமென்க. 874

காய்த் தானியவகை

துவரையின் குணம்

பஞ்சமுட்டிக் காகுமரும் பத்தியவி யஞ்சனமாம்
விஞ்சுசுரஞ் சந்நிகட்கு மெத்தநன்றும்-பஞ்சின்
விழுந் துவரையாது மெலிந்தாரைத் தேற்றுங்
கொழுந்துவரை யாயினீ கொள்.

(இ-ள்.) நறுந்துவரை லங்கனமுடிவிற் சேர்க்கிற பஞ்சமுட்டித் தாரக பத்தியத்திற்கும் உப்பில்லாப் பத்தியத்திற்கும் சுரத்திற்கும் சந்நிக்கும் பஞ்சணையே கிடையாக எழுந்திருக்கச் சக்தியில்லாமல் மெலிந்தவர்க்குமுதவும்.பஞ்சமுட்டி விவரத்தை கஞ்சிவகையிற் காண்க.

Digitized By Roja Muthiah Research Library

உழுந்தின் குணம் இதனை உளுந்து என்பர்

செய்ய வுழுந்திற்குச் சிலேத்மவனிலம் பிறக்கும்
வெய்ய பித்தம்போமந்தம் வீறுங்காண்-மெய்யதனி
லென்புருக்கி தீரு மிடுப்புக் கதிபலமா
முன்பு விருத்தியுண்டா முன்.

(இ-ள்.) நல்ல உழுந்திற்கு கபவாதமிஸ்ரம் அலஜம் இடுப்புறுதி மிகுவீரிய மிவையுண்டாம். பயித்தியமும் எலும்புருக்கியும் போகும்.()

கடலையின் குணம்

கடலை வயிறூதற் கன்று ரகஞ்செய்யுங்
குடலைவலிப் பித்து மலங்கொட்டுங்-திடமருந்தைச்
சேதமுறப் பண்ணுந் தியக்கமொடு வாயுவையுந்
போத வழைக்கும் புகல்.

(இ-ள்.) கடலை வயிறுப்பிசம் பித்ததாகம் குடல்நோயுடன்கூடிய கிரகணி மயக்கம் மூலவாயு இவையுண்டாகும். நன்மருந்தை முறிக்கும்.

மோச்சைக்கோட்டையின் குணம்

அனிலபித்த வைய மனைத்தையு முண்டாக்குந்
தொனியெடுக்க வாயுவினைத் தூண்டுந்-தனிவேள்
குனிக்குஞ் சிலைப்புருவ கோதையே நாளு
மினிக்கு மொச்சைக் கொட்டையே.

(இ-ள்.) விற்போன்ற புருவக்கோதையே! இனிப்புள்ள மொச்சக் கொட்டையானது திரிதோஷங்களையும் இரைச்சலைத் தருகின்ற ஆவிருதவாயுவை உண்டாக்குமென்க. 878

பெரும்பயற்றின் குணம் இதுவே பெருங்காராமணி

பெரும்பயற்றை மேன்மேலும் பேணியுண் ணுவார்க்குப்
பெருஞ்சாட ராக்கினிபோம் பின்னும்-வருமந்தம்
பேதி யதிகரிக்கும் பேராக் கபங்கதிக்கும்
வாதகுடி லம்பெருகும் வாழ்த்து.

(இ-ள்.) பெரும்பயற்றை அதிகமாகத்தின்பவர்க்கு தீபாக்கினி கெடுவதுமன்றி அசீரணம் அதிசாரம் கபரோகம் வாதப்பிடிப்பு இவையுண்டாம். 879

சிறுபயற்றின் குணம்

ஐயைப் பித்தத்தை யரோசகத்தைப் போக்கிவிடும்
வெய்ய வாதத்தை விளைவிக்கு-மைய

Digitized By Roja Muthiah Research Library

மறுவொழிந்த தூய வதிவதன மாதே
சிறுபயறு செய்யுஞ் செயல்.

(இ-ள்.) களங்கமற்ற சந்திரனையொத்த முகத்தாளே! சிறுபயறு கபகோபத்தையும் பயித்தியத்தையும் அரோசகத்தையும் போக்கும். பித்தவாதத்தை உண்டாக்குமென்க. 880

பச்சைப்பயற்றின் குணம்

பச்சைப் பயறதுதான் பாரிற் பயித்தியத்தை
யச்சமற நாளு மகற்றுங்காண்-கச்சுலவு
கொங்கைமட மாதே குளிர்ச்சியென்பா ரெப்போதுந்
தங்கு வாதத்தைத் தரும்.

(இ-ள்.) கச்சணிந்த கொங்கையையும் மடமைத் தனத்தையுமுடைய மாதே! பச்சைப்பயறு பித்தத்தை நீக்கும். வாயுவைத்தரும். சீதளம் என்பர். 881

தட்டைப்பயறு வெண்பயறு கரும்பயறுகளின் குணம்

தட்டைப் பயறுமந்தஞ் சன்னிதரும் வெண்பயறு
முட்டியே மெய்யின் முதிர்வாதக்-கட்டருக்குங்
காணாய் கரும்பயறு கம்முநீர் வாதமுடன்
கோணு வாதத்தையும் போக்கும்.

(இ-ள்.) தட்டைப்பயறு அக்கினிமந்தத்தையும் சந்நிபாதத்தையும் உண்டாக்கும். வெண்பயறு ஓடுவாதத்தைப் போக்கும். கரும்பயறு சிலேத்தமவாதத்தையும் பங்குவாதரோகத்தையும் விலக்கும். 882

கோள்ளின் குணம்

குடல்வாதங் குன்மமுண்டாங் கொண்மருந்தே நாச
மடலேறு பித்தமிக வாகும்-கடுகடுத்த
வாதநீ ரேற்றமொடு மன்னுகுளிர் காய்ச்சலும்போஞ்
சாதிநறுங் கொள்ளுக்குத் தான்.

(இ-ள்.) நறியகொள்ளுக்கு பீசவாய்வும் பித்தகுன்மம் பயித்யமுமுண்டாம். வாதவலி நீரேற்றம் நளிர்ச்சுரம் மருந்துரமிவைபோம். 883

எள்ளின் குணம்

எள்ளுமருந் தைக்கொடுக்கு மேறனலாந் திண்மைதரு
முள்ளிலேயைக் சேர்க்கு முதிரத்தைத்-தள்ளுமிரு
கண்ணுக் கொளிகொடுக்குங் காசமுண்டாம் பித்தமுமாம்
புண்ணுக் கிடர்புரியும் பார்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) அபத்தியமாகிய எள்ளு உஷ்ணம் பலம் கபம் காசரோகம் பித்தநோய் இவைகளை வருவிக்கும். குரல்தொனியைக்கெடுக்கும். ஸ்திரீகளின் வயிற்றில் கட்டுப்பட்ட உதிரத்தை வெளிப்படுத்தும். விழிகட்கொளியாம். 884

இறைச்சி வகை

வெள்ளாட்டு இறைச்சியின்குணம்

வெள்ளாட்டு நோயெல்லா மோடுமுடல் பருக்குந்
தள்ளாடு வாதபித்தஞ் சாந்தமா-வெள்ளாட்டி
னற்கறியை யுண்பார்க்கு நாடுகய ரோகமும்போ
மற்குரிய வன்பலனும் வாழ்த்து.

(இ-ள்.) வெள்ளாட்டிறைச்சியை உண்பவர்க்கு உட்சுரங்களும் வாதபயித்தியமும் க்ஷயமும்போம். சரீரபுஷ்டியும் வீரியமும் விளையும்.

கோடியாட்டு இறைச்சியின் குணம்

கொடியாடு நற்கறியாங் கொள்ளும் வகைகேளாய்
தடியாமற் பூப்போற் சமைத்து-விடிகாலே
கொண்டா லிடுப்புவலி குற்றிருமல் வெட்டையும்போங்
கண்டாலும் வாதமறுங் காண்.

(இ-ள்.) கொடியாட்டிறைச்சியைப் பூப்போல் பாகஞ்செய்து காலையிலுண்ணில் சகனவிருதவாயு காசம் உஷ்ணவாயு இவைபோம். 886

வரையாட்டு இறைச்சியின் குணம்

பத்தியத்திற் கொவ்வும் பாரநோயைத் துரத்து
மெத்த மெலிந்தார் மெலிவகற்றுஞ்-சுத்தமண
மூட்டுவரை யொத்தமுலை யொண்டொடியே பன்மூலிக்
காட்டுவரை யாட்டுக்கனி.

(இ-ள்.) மலைகளையொத்த மணம்பொருந்திய முலைகளையுடையப் பெண்ணே! வனமூலிகைகளைத் தின்கிற வரையாட்டிறைச்சி கனத்த ரோகங்களையு மிகுந்த துர்ப்பலத்தையும் போக்கும். பத்தியக்கறியாம்.

செம்மறியாட்டு இறைச்சியின் குணம்

அம்புவியிற் செங்கரப்பா னண்டுவது மாத்திரமோ
செம்மறி யாட்டுக்கறியைத் தின்றக்காற்-கொம்பி

விருந்து மதித்தாற்போ லெப்பிணியு முண்டா
மருந்துயர நீங்கா தறி.

(இ-ள்.) செம்மறியாட்டிறைச்சியை உண்ணில் செங்கரப்பானும் முன்பில்லாத பலவித ரோகங்களும் சகல துன்பமு முண்டாம். 888

பள்ளையாட்டு இறைச்சியின் குணம்

மந்தமிகுந் தீபனம்போ மாறு வரோசகமாந்
தொந்தநோ யெல்லாந் தொடருங்கா-ணிந்துநுதன்
மானே கபமுயரும் வன்பள்ளை யாட்டுக்குத்
தானே மிகும்வாயு தான்.

(இ-ள்.) மூன்றாம் பிறையையொத்த நெற்றியை யுடையவளே! பள்ளையாட்டிறைச்சிக்கு அலஜம் மந்தாக்கினி நீங்காத அருசி திரி தோஷமிஸ்ரம் கபகோபம் வாதாதிக்க மிவைகளுண்டாம். 889

குறும்பாட்டு இறைச்சியின் குணம்

குறும்பாட் டிறைச்சிதனைக் கொண்டார்கட் கெல்லா
மெறும்பார் சொறிசிரங்கு மெய்து-மிறங்குங்
குடல்வாதஞ் சூலை கொடுமனிலக் கூட்ட
முடனே யடருமென வோர்.

(இ-ள்.) குறும்பாட்டிறைச்சியை உண்பவர்க்கு எறும்புமொய்க் கின்ற நமைக்கிரந்தியும் பீநசவாயுவும் வாதவருக்கமும் முண்டாம். 890

மான் இறைச்சியின் குணம்

மான்கறி யுண்டார்தமக்கு மாதொத்த நோய்க்கபநோ
யூன்பகந் தரங்கழலி நூதையொடு-தான்பரவு
வாத நமையும்விட்டு வாங்குங் கண்ணிற்புகையா
மோதுபித்தம் வீறுமென வோர்.

(இ-ள்.) மானிறைச்சிக்கு தொந்தநோய் ஈளை மாமிசபகந்தரம் கழல்வாயு வாதப்புடை இவைபோம். கண்புகைச்சலும் பித்தமாம். 891

கலைமான் இறைச்சியின் குணம்

தேகப் பிடிப்பகலு வெட்டை யனலுமறும்
போகமுறுப் பலனும் பூவையரே-தேகத்திற்
பித்த வாதங்களறும் பேரா வழலையும்போந்
தத்துகலை மான்கறிக்கு தான்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) பெண்ணே! கலைமானிறைச்சிக்கு மேகவாதப்பிடிப்பு வெள்ளை சுரம் பயித்தியவாதம் உள்ளழலை இவைபோம். விந்துவும் சரீரபலமு முண்டாம். 892

கடமான் இறைச்சியின் குணம்

உடல் வலுவாகி யேங்கிப் பருக்குங்
குடலிலதி வாதங் குதிக்கும்-வடமார்
கடமா மெனுங்கொங்கைக் காரிகையே கானக்
கடமா னிறைச்சியுண்ணுங் கால்.

(இ-ள்.) கச்சணிந்த குடம்போன்ற தனங்களையுடைய காரிகையே! காட்டிலுள்ள கடமானிறைச்சியை யுண்ணில் சரீரம் வன்மையோடு செழித்துத்தூலிக்கும். குடல்விருத்தி ரோகம் உண்டாகும். 893

ஊர்ப்பன்றி இறைச்சியின் குணம்

வாதபித் தங்கள் சேரு மருவிய புண்ணுமுண்டாங்
தாதுவும் கபமும்பொங்குந் தாங்சோணு-வசதியாகும்
வாதுற வனந்தநோய்கள் வளர்ந்தெழுந் துன்பமெய்து
மோதியுண் மருந்துநாச மூர்ப்பன்றிக்கறி யுண்பார்க்கே.

(இ-ள்.) ஊர்ப்பன்றி யிறைச்சியை யுண்பவர்க்கு வாதபித்ததொந்தம் விரணம் சுக்கிலம் சிலேஷ்மகோபம் விலவிலப்பு முதலிய பலவித ரோகங்கள் மனோதுக்கம் ஔஷதக்கெடுதி ஆகிய இவையுண்டாகும். ()

காட்டுப்பன்றி இறைச்சியின் குணம்

ஏறிய வாதம்போகு மெழுப்பிடுங் காசநோய்கள்
வீறிடும் விழிநோய்சீதம் விஷக்கடி-கிரந்தியுண்டாங்
கூறிடு மூலங்கிலங் குதங்குடல் வாதநாசம்
மாறிடு காட்டுப்பன்றி மாங்கிசந்தனை யுண்பார்க்கே.

(இ-ள்.) காட்டுப்பன்றி யிறைச்சியைத் தின்பவர்க்கு அதிகரித்த வாயுமூலம் சருமகிலம் குதப்பிரம்ஸரோகம் குடல்விருத்தி இவை நீங்கும். இருமல் நேத்திரநோய் கபம் விஷக்கடி விரணமிவையுண்டாகும்.

முள்ளம்பன்றி இறைச்சியின் குணம்

காட்டுப் பன்றிக்குணமுங் காயமெல்லா முள்ளை
நீட்டுப் பன்றிக்குணமு நேரொன்றாய்க்-காட்டுகினு
மிப்பன்றிக் கங்க மிறுகுவதா லிப்பன்றிக்
கெப்பன்றியு நிகரோ வெண்.

(இ-ள்.) காட்டுப்பன்றிமுட்பன்றி இவ்விறைச்சிகள் குணத்தில் நன்றாயிருந்தாலும் முட்பன்றியால் வண்மையிருதலால் எந்தப் பன்றியும் நிகரல்ல. 896

முசல்யிறைச்சியின் குணம்-விருத்தம்

கடுகிய நடையுண்டாகுங் கனத்தவோர் பித்தமேகு
முடுகிய வீளைகாச முதிர்ந்தவோர் சுவாசம்போகுஞ்
சடுதியில் வெருண்டேயோடுந் தனிமுசற் கறியினாலே
கொடுமையிற் கண்ணாய்வாதங் குறைந்திடு மலமிறங்கும்.

(இ-ள்.) கொடுமைபொருந்திய அயில்போலுங்கூறிய கண்ணையுடைய பெண்ணே! முசல்கறியால் விரைவாகிய நடைகள் உண்டாம். பயித்தியம் க்ஷயம் இருமல் மகாசுவாசம் வாயுவு மலச்சிக்கல் நீங்கும். ()

உடும்பு யிறைச்சியின் குணம்

தொன்மைத் துவர்ப்பினிப்பாற் றூர்ப்பலம் தடிப்புநன்மை
வன்மைக் கிராணிதலை வலியிவைக-ளின்மையுறு
மேற்றழல்புண் குட்டுகப மேகம்வெட்டை மூலமண்டங்
காற்றழல் விட்டிற்றடிக்குக் காண்.

(இ-ள்.) இயல்பாகத்துவர்ப்பும் இனிப்பும் உள்ள உடும்பு இறைச்சியினால் தூர்ப்பலம் வீக்கம் சொறி கிரகணதோஷம் சிரசு காதுகளில் வருத்துகின்ற பிணிகள் சருமச்சூடு விரணம் குஷ்டம் க்ஷயம் பிரமேகம் வெள்ளை மூலம் குடல்வாதம் வாதபித்தம் பேதி இவை விலகும். தடி-உடும்பு. 898

புலி கரடி சிறுபுலி இவ்விறைச்சிகளின் குணம்-விருத்தம்

வருபுலி மாங்கிஷத்தால் மாறுமுன் மாதரோகங்
கரடிமாங் கிஷத்தால்வாதங் கபங்கெடும் வலிப்புநீங்குந்
திரிசிறு புலியிறைச்சி தீர்த்திடுஞ் சிலரோகத்தை
வரிவிழி மாதேயிந்த வகையறிந் தோதுவாயே.

(இ-ள்.) செவ்வரிபரந்த கண்களையுடைய! பெண்ணே! பெரும்புலியிறைச்சியினால் உன்மாதரோகம்போம். கரடி யிறைச்சியினால் வாயுவும் க்ஷயமும் வலிப்பாகிய மூர்ச்சாரோகமும் நீங்கும். சிறுபுலி யிறைச்சியிற்சில ரோகங்களை விலக்கும் என்க. 899

மாடு முதலை இவைகளின் யிறைச்சிக்குணம்-வெண்பா

கோமாங் கிசத்தைக் குறித்துண்ட பேருடம்பி
லாமா வியாதிக் களவுண்டோ-வாம

மதலைக் குறுகக்கு வானனிலஞ் சீத
முதலைத் தசைக்கிருக்கு மோ.

(இ-ள்.) மாட்டிறைச்சியை உணவாக வுண்டால் சகலநோயும் உண்டாம். முதலை யிறைச்சியால் சிசுக்களின்கக்கிருமல்வாயுவு கபம்விலகும்.

பூனையிறைச்சியின் குணம்

பூனைக் கறியைப் புசித்தா லெழிலணங்கே
மேனிக் கழகுண்டா மேல்விரணந்-தானகலுஞ்
சூடு மதிசரிக்குஞ் சோரியது மேன்மேலு
நீடுமென நாளு நினை.

(இ-ள்.) அழகிய தெய்வப்பெண்ணை போன்றவளே! பூனைக்கறியையுண்ணில் சரீர அழகும் வெப்பமும் ரத்தவிருத்தியும் உண்டாம். சருமதாதுவைப்பற்றிய கிரந்தி விலகும். 901

புனுகுப்பூனை இறைச்சியின் குணம்

இடுப்பி லூரத்தி லெழுநோ யகற்றுங்
கடுப்புறு வாதத்தைக் கடுக்கும்-தொடுப்பி
லமிழ் தாதுவுநல் லரும்பசியு நல்குங்
கமழ் புனுகுப்பூனைக் கறி.

(இ-ள்.) மணமுள்ள புனுகுப்பூனை யிறைச்சி சகனவாதம் இருத்வாதம் மூலக்கடுப்பு இவைகளை நீக்கும். தாதுவையும் பசியையும் விளைக்கும். 902

கீரி இறைச்சியின் குணம்

கீரி யிறைச்சிக்குக் கெம்பீர முண்டாகு
நீரிழிவு மேகுமென்பார் நிச்சயமே-வீரியமாஞ்
சில்விஷம் விட்டேகுஞ் சிரங்கு சொரியகலும்
பல்லரணை போகும் பறந்து.

(இ-ள்.) கீரியிறைச்சிக்கு தைரியமும் சுக்கிலவிருத்தியும் உண்டாம். வெகு மூத்திரம் அற்பவிஷம் கிரந்தி நமை பல்லரணைபோம். ()

மரநாய் இறைச்சியின் குணம்

மரநா யிறைச்சிக்கு வன்கிரந்தி மேக
முரமரவே யோடி யொளிக்கும்-விரைவாதஞ்
சூலைகன வாதந் தொலையுஞ் சுரம்போகு
ஞாலமிசை யிக்குணத்தை நாட்டு.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) மரநாயிறைச்சிக்கு சிரங்கு பிரமேகம் பீசவாயு சூலைநோய் மகா வாதரோகம் சுரம் ஆகிய இவைகள் ஒழியும் என்க. 904

எலி இறைச்சியின் குணம்

எலியிறைச்சி குன்மம் பிலீக முரநோய்
கலிவித் திரப்புண் ணைமைச்சன்-மெலிவோடு
மீதுமட் டிடாப்புளக மேவச்செய் யும்புணரத்
தாதுவுக்கும் புஷ்டிதருந் தான்.

(இ-ள்.) எலியிறைச்சி குன்மம் பீலிகம் மார்புவலி பிளவை தினவு இவைகளை நீக்கும். பூரிப்பு வீரியவிருத்தி இதுகளைத்தரும். 905

வெள்ளெலி இறைச்சியின் குணம்

சீதமையங் குன்மஞ் செரிமூலம் வித்திரிதி
பேதி தொந்தரோகம் பீலிகமும்போம்-தாதுவுமாஞ்
சேரு முதிரமது தேகமெல்லாம் பரவுஞ்
சாருமென்ற வெள்ளெலிக்குத் தான்.

(இ-ள்.) வெள்ளெலி யிறைச்சிக்கு குளிர்ச்சி கபநோய் குன்மமும் மூலநோய் வித்திரிதிக்கட்டி அதிசாரம் கிரகணி முதலிய தொந்தநோய் பீலிகரோகம் இவைபோம். சுக்கிலதாதும் ரத்ததாதும் விளையும். ()

பெருச்சாளி இறைச்சியின் குணம்

வாதபித்தந் தாட்பிடிப்பு வன்பீனசங் குஷ்ட
மோதுதிர நோயா டுமைகிடம்-பேதியிவை
போர்ந்தகல வோடும் பெருச்சாளி யின்கறியாற்
றீர்ந்தவெழி லோவியமே செப்பு.

(இ-ள்.) அழகிய சித்திரப்பதுமை போன்ற பெண்ணே! பெருச்சாளி யிறைச்சியால் வாதபித்தவொந்தம் சம்விவுர்தரசியவாதம் பீநசம் பெருவியாதி ரத்ததாதுவைப்பற்றிய நோய் கிருமி அதிசாரம் ஆகிய இவைகள் விலகும். 907

பறவைக் கறிவகை

கோழிக்கறியின் குணம்

கோழிக்கறி நெருப்பாங் கொள்ளின் மருந்துறம்வங்
கூழைக் கடுப்புமந்தங் கூறரச-மாழ்கிப்போம்
நீளுற்ற போக நிணக்கிரந்தி பித்தமுண்டாந்
தூளித்த மெய்யிளைக்குஞ் சொல்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) சூடுள்ள கோழிக்கறியை யுண்ணில் ஔஷதவேகம் மகாவாதம் சுவாசம் தேகக்கடுப்பு மந்தாக்கினிமூலம் இவைபோம். சுக்கிலம் கொழுப்புள்ள விரணம் பித்தம் இவையுண்டாகும். உடம்பு இளைக்கும்.

கருங்கோழிக்கறியின் குணம்

குட்டங் கடிகிருமி கோரவாதக் கூட்ட
மட்டிடாச் சூலையறு மாதரசே-துட்ட
கிரந்தியொடு புண்வலிபோங் கேளுட லூரக்கு
மருந்து கருங்கோழியூன் வை.

(இ-ள்.) பெண்கணுயகமே! மருந்தாகிய கருங்கோழிக்கு குஷ்டம் காணுக்கடி புழு மகாவாதங்கள் சூலை சிறுசிறங்கு விரணம் வலிப்பு இவைபோம். உடல் வலுக்கும். 909

காணுங்கோழிக்கறியின் குணம்

உத்தமனே நோயனைத்து மோடு மிறுமலறும்
பத்தியமாங் கரப்பான் பாருமே-முத்தவொளி
தாணுங் கனிமொழியே சார்ந்த மறுவகலுந்
காணுங் கோழிக்கறியைக் காண்.

(இ-ள்.) மதுரம் பொருந்திய மொழியையுடையவளே! கறிய காணுங்கோழிக் கறியால் வாதகபநோயினங்கள் காசம் கரப்பான் வியங்கலாஞ்சனம் இவைபோம். பத்தியத்திற்குதவும். 910

வான்கோழிக்கறியின் குணம்

போகுமிகு மெய்யிற் புளகிதம்வான் கோழிதனக்
காக மதிலைய மதிமுகங்-தேகமெல்லாந்
தானே கரப்பானுகுஞ் சாற்ற வுரிசையுமாந்
தேனே யிதனைத் தெரி.

(இ-ள்.) தேனனையாளே! உரிசையையுடைய வான்கோழிக்கரிக்கு விந்துவும் மகிழ்ச்சியும் சிலேத்மபந்தமும் கரப்பானும் உண்டாமென்க.

சம்பங்கோழிக்கறியின் குணம்

வரட்சி சொறிசிரங்கு வன்கரப்ப னென்னுந்
திரட்சியொடு பலநோய் தீரும்-பொருட்சிகரி
கும்பக் கடாக்களிற்றின் கோடனைச்சொற் பூண்முலையாய்
சம்பக் கோழிக்கறிக்குத் தான்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) மதயானைக் கொம்புபோன்று ஆபரணமணிந்த முலையை யுடையவளே! சம்பங் கோழிக்கறிக்கு சொறசொறப்பு சொறிகிரந்தி கரப்பான் முதலிய பற்பல ரோகங்களும் நீங்கும் என்க. 912

வாத்துக்கறியின் குணம்.

வாத்துக் கறியருந்த வற்றியுலர் புன்சிரங்கும்
கோத்த கபமுங் குதிக்குங்காண்-ராத்திரியிற்
போக முறுதியுமாம் பொல்லா வரோசகநோ
யாகமதி லூறு மறி.

(இ-ள்.) வாத்துக்கறியையுண்ணில் கசிவு வறண்டு சிவந்தாறியவிரணம் கிரந்தி கோழை அருசி இவை அதிகரிக்கும். சுக்கிலஸ்தம்பனமாம்.

கோழிமுட்டையின் குணம்

வாதபித்தஞ் சேர்ப்பிக்கும் வன்றூடம் புண்போக்குந்
தாதுவை மெத்தத் தழைப்பிக்கு-மோது
கபத்தை யடக்குங் கரப்பனுண் டாக்குவையு
மிபத்தையுறுங் கோழிமுட்டை யென்.

(இ-ள்.) கோழிமுட்டை வாததோஷம் விரணம் கபப்பிணி இவைகளை நீக்கும். வாதபயித்தியம் சுக்கில்தாது கரப்பானிவைகளுண்டாம்.

காடைக்கறியின் குணம்.

கட்டிற் கிடப்பார்க்குக் காட்டிற் படுங்காடை
மட்டவிழுங் கோதாய் மருந்தன்றே-விட்டமுறச்
சோறுபுகுஞ் சோபையறுந் துன்னோ யெலாமேகும்
வேறுமறுந் தேற்றுவதேன் விள்.

(இ-ள்.) தேனொழுகிற மாலையணிந்த கூந்தலையுடையவளே! படுக்கையா யிருப்பவர்களைத் தேற்றுகின்ற காடைக்கறிக்கு அசனஞ் செல்லும். வீக்கமும் மெலிவினுல் கிளைத்த சகல நோய்களும் போம்.()

கவுதாரிக்கறியின் குணம் இதுவே-சிவல்

சிவலிறைச்சி பித்தஞ் சிலேஷ்ம மந்தம்வாதக்
கவலையற வோட்டியுடல் காக்கும்-புவனமதின்
மெய்க்குப் பலஞ்செய்யும் வீரியமு முண்டாக்குஞ்
சிக்கிய மலங்கழிக்குஞ் செப்பு.

(இ-ள்.) கவுதாரிக்கறி பயித்தியம் ஜலமந்தம் வாதவலி மலக்கட்டு இவைகளை நீக்கி வன்மை வீரியம் இதுகளை விருத்திசெய்து உடலை இரட்சிக்கும். 916

Digitized By Roja Muthiah Research Library

ஊர்க்குருவியின் குணம்-விருத்தம்

மருவிய திரிதோஷம்போ மறப்புறுப் புணர்ச்சியுண்டாம்
பெருகிய சுரமேகம்போம் பிறந்திடு மிளமைமெய்யிற்
கருகிய வன்னநீங்கிக் கனகம்போ லொளிவுசேரு
முருவமுந் திரமாநாளு மூர்க்குருவி யின்றசைக்கே.

(இ-ள்.) ஊர்க்குருவிக்கறிக்கு வாதபித்தம் கபப்பிரகோபம் சுர வெட்டை கருமைநிறம் இவை நீங்கும். இடைவிடாத கோபம் வாலிபத் தன்மை சுவர்னச்சாயல் தேகபுஷ்டி இவை உண்டாகும். 917

வானம்பாடிக்கறியின் குணம்-வெண்பா

வெட்டை யனலொடு வீழுபல நோயகலு
மட்டிலாக் காமம் வளருங்காண்-மட்டணையிற்
கானம் பாடிக்களிக்குங் காமரசப் பைங்கிளியே
வானம் பாடிக்கறி வறு.

(இ-ள்.) காமரசத்தைத் தருகின்ற பசுங்கிளிபோலும் பெண்ணே! பொரித்த வானம்பாடிக் கறியால் ஆண் குறியால் விழுகிற சீழ் வெப்பு முதலிய ரோகங்களும் போம். வீரியவிருத்தி உண்டாம். 918

விச்சுளிக்கறியின் குணம்

ஐயுடன் பித்த வரோசகத்தை மாற்றிவிடுஞ்
சையோக போகந் தழைப்பிக்கு-மெய்யாகப்
பத்தியம தாகும் பகவிச் சுளிக்குருவி
யுத்தமத்தி லுத்தமமா மோர்.

(இ-ள்.) பத்தியத்தில் உத்தமமாகிய விச்சுளிக்கறி கபரோகத்தை யும் பித்த அருசியையும் நீக்கும். விந்துவை வளர்ப்பிக்கும். 919

தூக்கணங்குருவிக்கறியின் குணம்

ஐய மருசி யகட்டின் மலமும்போக்குந்
துய்ய பசியைமெல்லத் தூண்டிவிடு-மெய்யின்
மினுத்த வழகுண்டா மென்பத்திய மாந்
தனித்தூக் கணங்குருவி தான்.

(இ-ள்.) பத்தியத்திற்கான தூக்குணங் குருவிக்கறி கபம் அரோச கம் மலக்கட்டு இவைகளை நீக்கும். பசியையும் வனப்பையும் விளைக்கும்.

கருங்குருவிக்கறியின் குணம்-இதுவே வலியன்

வாதகா மாலையறு மாதே கபமும்போ
மூதுகா மாலைவிழுந் தோடுங்காண்-வாதுசெய்

Digitized By Roja Muthiah Research Library

வந்த கரப்பா னுடனே மாறுச் சொறியும்போங்
குந்து கருங்குருவி கொள்.

(இ-ள்.) கருங்குருவிக்கறியை யுண்ணில், வாதகாமாலை விஷம் சிலேஷ்மம் ஊதுகாமாலை கரப்பான் தீராச்சொறி இவைபோம். 921

சிட்டுக்குருவிக் கறியின் குணம்

பூவிரணம் போக்கிவிடும் பொல்லாக் கிருமிகளைப்
பாவுமலத் தோடிறங்கப் பண்ணுங்காண்-பூவணையிற்
கட்டுற்ற மாதர்களைக் கைகுவித்துக் கொஞ்சுவிக்குஞ்
சிட்டுக் குருவித் திறம்.

(இ-ள்.) சிட்டுக்குருவிக்கறி, ஆண்குறிமலரின் புண்ணையும் மல கிருமிகளையும் நீக்கும். புணர்ச்சியில் நிர்வாகத்தை யுண்டாக்கும். 922

உள்ளான்கறியின் குணம்

உத்தமமாம் பத்தியத்திற் கொவ்வுமுள் ளான்கறிதான்
சத்தியங்காற் பித்தத்தைச் சாந்திசெய்யு-முத்த
நகையீர் மேகம்போக்கு நற்பசி யுண்டாக்குந்
தகைமந்தந் தீர்க்குமிது தான்.

(இ-ள்.) முத்துப்போலும் பற்களையுடைய பெண்ணே! பத்தியத்திற்கு உத்தமமாகிய உள்ளான்கறி, வாதபித்ததொந்தம் பிரமேகம் அசிரணம் இவைகளை நீக்கும். நற்பசியைத்தரும். 923

கோசு உள்ளான்கறியின் குணம்

கொசுவுள்ளான் றன்கறியைக் கூட்டியுண் பார்க்குப்
பசியெழும்பு மேகம் பறக்கும்-பசபசத்து
நின்ற தினவகலு நீங்காத போகமுறி
மன்றலுறை வார்குழலே வாழ்த்து.

(இ-ள்.) வாசனை பொருந்திய நீண்ட கூந்தலை யுடையவளே! உள்ளான் கறியால் மிகு தீபனமும் சையோகபலமும் உண்டாகும். சிற்ப்பிரமேகமும் நமைச்சலும் விலகும் என்க. 924

கோரை உள்ளான்கறியின் குணம்

காட்டிலுள்ள பட்சிகளி னன்கிதுவே பத்தியமாங்
கூட்டிலுள்ள தோஷங் குலையுங்காண்-தாட்டிகமா
யாரென்ன சொன்னு லும்புவியி னேயோர்க்குக்
கோரை யுள்ளான்கறியைக் கூட்டு.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) பத்தியப் பறவைகளின் உத்தமமாகிய கற்கோரை உள்ளான்கறியால் சப்ததாது கபதோஷங்கள் விலகும். இது பிணியாளர்க்குதவும். 925

மயில் கறியின் குணம்

சூலைப் பிடிப்புகளைச் சோரிவலியைப் பித்தை
வேலைச் சிலேட்டுமத்தை வீட்டுங்காண்-ஞாலொத்த
வற்பவிடை மாதே யனலா மயிலிறைச்சி
நற்பசி யுண்டாக்கு நவில்.

(இ-ள்.) நூலிழைபோலுஞ் சிறிய இடையையுடைய பெண்ணே! உஷ்ணமுள்ள மயில்கறி கீல்களிற் குத்தல் வாதசோணிதம் கபபித்தம் அதிகபம் இவைகளை நீக்கும். தீபனத்தைத்தரும். 926

குயில்கறியின் குணம்

நல்லதொரு பத்தியமா நாடாது வாதபித்தஞ்
சொல்லரிது தானே சொறியேகும்-வல்ல
குயிலருந்த மேகம்போங் குன்மவலி தீருந்
துயிலிலதி போகமுறுஞ் சொல்.

(இ-ள்.) மான்போலுங் கண்ணையுடைய பெண்ணே! பத்தியத்திற்கான குயில்கறியையுண்ணில், வாதபித்தியம் புடை பிரமேகம் வயிற்றுவலி இவைபோம். வீரிய விருத்தியாம். 927

கோக்குக்கறியின் குணம்

கொக்கருந்த மேகமுண்டாங் கூடுமரோசக நோய்
மைக்குழலே புண்கரப்பான் வந்துறையு-மெய்க்கு
நியத்தமருந் துண்ணிலித னீள்கவிச் சாகாது
வயிற்றுக் கிருமிபோ மால்.

(இ-ள்.) கறுத்த கூந்தலையுடையவளே! கொக்குக்கறியை யுண்ணில் சீழ்மேகம் அருசி விரணம் கரப்பான் இவை யுண்டாம். அதிக கவிச்சானதால் ஔஷதங்கட்கு இவ்வாடை உதவாது. 928

கருங்கோக்குக்கறியின் குணம்

கருங் கொக்கின் றன்கறிக்குக் காணுக்கரப்பான்
மருங்கொக்கும் புண்ணும் வளரும்-பெருங்கிரந்தி
யுண்டாஞ் சிலேஷ்மம் முலவுமுடல மெலாம்
வண்டார் குழலே வழுத்து.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) வண்டுமொய்க்கின்ற கூந்தலையுடையவளே! கருங்கொக்குக்கறிக்கு முன்பு இல்லாத கரப்பானும் விரணமும் பெருஞ்சிரங்கும் சரீரத்தில் நீரேற்றமும் உண்டாகும். 929

தாராக்கறியின் குணம்

தாராக் கறியருந்தத் தாதுமிக வுண்டாகும்
பேராக் கபம்வளரும் பெண்மயிலே-தீராத
வாந்திய ரோசகமும் வன் கரப்பன் புண்ணுமிகச்
சேர்ந்துவரு மிப்பலினைச் செப்பு.

(இ-ள்.) மயில்போலுஞ் சாயலையுடையவளே! தாராக்கறியையுண்ணில் சுக்கிலம் சிலேஷ்மம் சர்த்தி அருசி கடுவன் சிரங்கு ஆகியவைகள் விருத்தியாகும் என்க. 930

நாரைக்கறியின் குணம்

நாரைக் கறியருந்த நாறுகரப்பான் புண்ணு
மூரைத் தொடர்ந்துதொடர்ந் தோட்டுங்காண்-பாரித்த
மேகமொடு வாதம் விளையுமே நீரிழிவுக்
காகு மென்பார்க ளறி.

(இ-ள்.) நாரைக்கறியைத் தின்னில் சீழ் கரப்பான் கிரந்தி கடமேகம் வாதகோபம் இவை உண்டாம். அதிமூத்திரம் போகும். 931

ஆள்காட்டிப்பட்சிக்கறியின் குணம்

ஆட்காட்டிப் பக்ஷிக் கடன்மேகம் போமொளிக்குந்
தோட்காட்டு வாதந் தொடராவே-வாட்கண்
ணரிவையே பத்தியத்திற் காகும் புவியிற்
றெரியமறை யில்லாமற் செப்பு.

(இ-ள்.) வாள்போலுங் கண்ணையுடையவளே! பத்தியபதார்த்தமான ஆள்காட்டிப்பட்சிக்கறிக்கு வாதப்பிரமேகமும் அமச்சரவாதரோகமும் ஒழியும் என்க. 932

கிருட்டிப்பட்சிக்கறியின் குணம்

மருட்டு விழியுடைய மாதே புவிக்குட்
கிருட்டிக் கறியருந்திற் கேளாய்-மருட்டுபித்தம்
வாதங் கடுப்பு வளருமிரத் தக்கழிச்சற்
காதம்போம் வாந்தியறுங் காண்.

(இ-ள்.) கிருட்டிப்பட்சிக் கறியையுண்ணில் பயத்தைத்தராநின்ற பயித்தியம் வாயுவு கடுப்பு இவையுண்டாம். ரத்தபேதி வமனம் நீக்கும்.

Digitized By Roja Muthiah Research Library

சூரைப்பட்சிக்கறியின் குணம்

குட்டங் கிருமிகுன்மங் கோரவாதஞ் சோபை
துட்டம் பகந்தரந் துடைக்குங்கா-ணிட்டமுறப்
பத்தியத்திற் காகும் பருகி லுரிசையுமாங்
கைத்திடாச் சூரைக் கறி.

(இ-ள்.) ருசியுள்ள சூரைக்கறி குஷ்டம் புழு வயிற்றுவலி மகா வாதம் வீக்கம் ஆறாவிரணம் பகந்தரம் இவைகளை நீக்கும். பத்தியத் திற்காகும் என்க. 934

கிளுவைக்கறியின் குணம்

பாலிலா மாதர்கட்குப் பாலுமுண்டாம் போகமுமாந்
தாலமிசை பித்தந் தரிக்குமோ-சாலச்
சிரங்குபுண்க ளெல்லாமே சீழ்வற்றி யாறு
மருங்கிளுவை யையத்தின் றறி.

(இ-ள்.) கிளுவைக்கறியைத்தின்னில் மாதர்க்கு முலைப்பால்விருத் தியும் அதிகவீரியமுண்டாம். பயித்தியம் கிரந்தி விரணமும்போம். ()

மடையான்கறியின் குணம்

அன்னநடை பின்னுசடை யங்கண்மட மாதேகேள்
வன்னமடை யான்கறியை மாந்தினர்க்குத்-தின்னு
கரப்பான் சொறிசிரங்குங் கானுமைய வாத
முரப்பாக நீடு முறை.

(இ-ள்.) அன்னம்போலும் நடையையு பின்னற்சடையையுமுடை யவளே! மடையான் கறியையுண்டவர்க்கு கடுவனும் நமைச்சிரங்தியும் வலுத்தசிலேஷ்மம் வாததொந்தமும் உண்டாக்கும். 936

கூழைக்கடாக்கறியின் குணம்

நெடுநாளி னீரிழிவை நேராகக் கட்டு
மடலான சூலை யகற்று-மடுவாருங்
கூழைக் கடாக்கறிதான் கோரகரப்பான் புண்ணை
பாழ்த்தேகத் திருத்து மாய்.

(இ-ள்.) மடுக்களிலுள்ள கூழைக்கடாக்கறி நீடித்தவெகு நீரையும் கபச் சூலையையும் நீக்கும். வாதகரப்பானையும் விரணத்தையும் தரும்.

நமிட்டுப்பட்சிக்கறியின் குணம்

நமிடுகரப் பான்வாத நாட்சோபை மாற்று
மமிர்தகுண மாமுரிசை யாகுஞ்-சமமுறைக்கி

Digitized By Roja Muthiah Research Library

லெல்லாக் கறிக்கு மிஃதின்பாகு மிக்கறிக்குப்
பொல்லாக் கயரோகம் போம்.

(இ-ள்.) சகல கறிகளைப்பார்க்கிலும் ரட்சிக்குந்தன்மையும் மிகு மதுரமுள்ள நமிட்டுகறி கரப்பான் வாயு வீக்கம் க்ஷயமிவைகள் நீங்கும்.

சிறவிப்பட்சிக்கறியின் குணம்

வாராய் மடமானே வாதகப முண்டாகுஞ்
சேராச் சிறவிதனைத் தின்றக்காற்-பேராத்
தினவு கரப்பான்கிரந்தி சேருமோ நாளுங்
கனவுறுதியாம் போகங் காண்.

(இ-ள்.) சிறவிக்கறியையுண்ணில் வாதசிலேஷ்மமிஸ்ரம் புணர்ச்சித் திடமும் உண்டாம். தினவும் கரப்பானும் சிரங்கும்போகும். 939

பொன்னாந்தட்டான்கறியின் குணம்

மேக வழறணியு மிக்கவழ குண்டாகும்
போகமிருங் கரப்பான் போகுங்காண்-பாகான
பொன்னாந் தட்டான்கறியைப் போற்றியுண்ணி னற்சுவையா
மின்னாந் தேகம்புவியில் விள்.

(இ-ள்.) ருசியுள்ள பொன்னாந் தட்டான்கறியால் பிரமேகவெப்பும் கரப்பானும்போம். செழிப்பும் வீரியமும் தேஜசும் உண்டாம். 940

கடல்இறைஞ்சிக்கறியின் குணம்

பத்தியத்திற் கொவ்வுமிந்தப் பாரிற் கடலிறஞ்சி
யுத்தமமா நோயனைத்து மோட்டுங்காண்-மெத்தச்
சொறிகரப்பான் வன்சிரங்கு தொன்மேகம் போக்கும்
செறிநரை நீக்குஞ்சுவையாஞ் செப்பு.

(இ-ள்.) பத்திய பதார்த்தமான கடலிறஞ்சிக்கறி நமைகரப்பான் கிரந்தி நீடித்த பிரமேகம் பலிதநோய் முதலிய நோய்களைபோக்கும். ()

வெண்புறக்கறியின் குணம்

வெண்புறு வாதபித்தம் வீறுகப மேகமிவை
திண்புவியை விட்டோடச் செய்யுங்காண்-பண்பரவு
வெண்குஷ்ட நீள்கரப்பான் வெய்வரட்சியும்போக்கும்
பண்புற்ற பத்தியமாம் பார்.

(இ-ள்.) பத்தியத்திற்கான வெண்புறுக்கறி வாதபயித்தியம் ஜலமேகம் விரணவெண்குஷ்டம் கரப்பான் சொறி இவைகளை நீக்கும். ()

Digitized By Roja Muthiah Research Library

பச்சைப்புறாக்கறியின் குணம்

இச்சைதரும் புன்முறுவ லேந்திழையே மாந்தர்மிகப்
பச்சைப் புறவூன் பருகினுற்-கொச்சைதரும்
வாதபித்த வையம்போ மாபலமுந் தாதுவுமா
மோது சீதங்காக்கு முன்

(இ-ள்.) புன்னகையுடைய பெண்ணே! பச்சைப்புறாக்கறியையுண்ணில் திரிதோஷதொந்தமும் பேதியும்போம். தேகபுஷ்டியும் வீரிய விருத்தியும் உண்டாம். 943

மாடப்புறாக்கறியின் குணம்

உண்டால் பசியா முறைதாது வும்பெருகுங்
கண்டாலும் வாதங் கலங்குங்காண்-வண்டாருங்
காரின்மிகு மைக்கூந்தற் காரிகையே பத்தியமாம்
பாரின் மாடப்புறாவைப் பார்.

(இ-ள்.) வண்டுகள் மொய்க்கப்பெற்ற கறுத்த கூந்தலையுடையவளே! மாடப்புறாக்கறியால் தீபாக்கினியும் சுக்கிலமும் பெருகும். வாதப்பிரகோபம் நீங்கும். இது பத்தியக்கறியாம் என்க. 944

வரிப்புறாக்கறியின் குணம்

வரிப்புறாவின் றசையோ மாவுருசி தின்றாற்
றரிப்புறா வாதபித்தந் தானு-மரிப்பான
சோப ரோகங்க டோடரா வெவர்களுக்கு
நீபா ரிலையிதற்கு நேர்.

(இ-ள்.) உரிசையுள்ள வரிப்புறாக்கறியைத்தின்னில் வாயுவோடு கூடிய பித்தமும் பலவித வீக்கங்களும் போகும். 945

வன்னப்புறாக்கறியின் குணம்

ஈளை யிரைப்போ டிரத்தபித்தம் போக்கிவிடும்
வாளைவென்ற கண்ணாய் மலங்கழிக்கு-நாளுமோ
வன்னமூட்டும் பசியைமூட்டும் மருசியோட்டு நல்ல
வன்னப் புறாவைநுகர் வாய்.

(இ-ள்.) வன்னப்புறாக்கறி கோழை சுவாசம் ரத்தபித்தம் அருசி இவைகளை நீக்கும். அசனஞ்செலுத்தும். பசியைதரும். மலந்தள்ளும்.

மணிப்புறாக்கறியின் குணம்

கணிப்புறா வின்பக் களஞ்சியமே கேளாய்
மணிப்புறாப் பத்தியமாம் வாதப்-பிணிப்பறுமுட்

Digitized By Roja Muthiah Research Library

கொண்டாற் கயந்தீருங் குன்ம ரோகங்களறுங்
கண்டாலு மையம்போங் காண்.

(இ-ள்.) பத்தியத்திற்கான மணிப்புருக்கறியைத் தின்னில் வாத பிடிப்பு க்ஷயம் வயிற்றுநோய்கள் கபாதிக்கம் இவைபோம். 947

மனைப்புருக்கறியின் குணம்

பத்தியத்திற் காகாது பன்மனைப் புருக்கறிதா
னெத்த கரப்பான்சொறியை யுண்டாக்கு-மெத்தவுமே
நாவுருசி யாயிருக்கு நற்சுக்கிலம் பெருக்குந்
தாவு கயல்விழியாய் சாற்று.

(இ-ள்.) பாய்கின்ற கெண்டைபோலுங் கண்ணையுடையவளே! நாவுக்குருசையுள்ள மனைப்புருக்கறி மருந்தை முறிப்பதுந் தவிர கரப்பான் சருமச்சொறி தாதுவிருத்தி இவைகளை உண்டாக்கும். 948

தவிட்டுப்புருக்கறியின் குணம்

ஓடுகரப்பான் சோபை யுட்சொறி காமாலைபித்த
மாடுபெரு மூச்சடைப்பும் போம்-நீடு
கவட்டுக் கலகவிழிக் காரிகையே நாளுந்
தவிட்டுப் புருக்கறிக்குத் தான்.

(இ-ள்.) வஞ்சநிறைந்த கண்களையுடைய பெண்ணே! தவிட்டுப் புருக்கறிக்கு பரவுகின்ற கரப்பான் வீக்கம் உப்புற நமைச்சல் காமாலை பித்தியம் சுவாசத்தடை இவைபோம். 949

நீர்க்காக்கைக்கறியின் குணம்

பாண்டோடு சோபை பெருவயிறும் போங்கரப்பான்
மீண்டு சொறியு மெய்த்தவரை-நீண்டமத
னூர்க்காக்கு மாதரசே யோங்குபுலா னுற்றமுறு
நீர்க்காக்கை தன்னை நினை.

(இ-ள்.) புலால்மணம் உள்ள நீர்க்காக்கைக்கறியால் பாண்டு வீக்கம் மகோதரம் இவைபோம். கடுவனும் தினவும் உண்டாம் என்க. ()

அண்டங்காக்கைக்கறியின் குணம்

பித்தவெட்டை சோபையறும் பேதித்தெழுந் துடலி
லொத்தபெரும் பாண்டுவகை யோடுங்கா-ணித்தியமோர்
கண்டஞ்செய் காமிலம்போங் காக்கைக்கு ளோர்பிரிவா
மண்டங் காக்கைக்கறியா லாய்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) காக்கையில் ஒருபேதமுள்ள அண்டங்காக்கைக்கறியால் பித்தமேகம் வீக்கம் பாண்டுரோகங்கள் காமாலை இவை போகும். 951

கோட்டான்கறியின் குணம்

கோட்டான் கறிக்குக் கொடும்பசியும் நோய்கடலை
காட்டா தடங்குமிது கைவல்யங்-காட்டானை
மாமதம்போற் காமமுறும் வன்மருந்திற் பத்தியமாம்
பூமியிலே யாவர்க்கும் போதி.

(இ-ள்.) மயிலனையாளே! பத்தியத்திற்கான கோட்டான்கறிக்கு பிருதீபனமும் சுக்கிலமும் அதிகரிக்கும். சிற்சிலநோய்கள் நீங்கும். 952

மீன் கறிவகை

விரால்மீன்கறியின் குணம்

உடலை வளர்க்கு முறுபிணியைத் தீர்க்குங்
குடலுக் கதிகசுகங் கொடுக்கும்-கடலை
யுழக்கும் விராலைவிட்டிவ் வூர்க்குளத்துச் சேற்றை
யுழக்கும் விராலதனை யுண்.

(இ-ள்.) குளத்துவிரால் பிணியைநீக்கி உடலைவளர்த்துக் குடற்கு சுகந்தரும். 953

குறவைக்கறியின் குணம்

முட்டு குடல்வலிபோ மூடிரும லேகுமலக்
கட்டுரக்கும் வாயருசி காணுங்காண்-முட்டத்
துறவைப் பெற்றோருந் துதிக்குமெழின் மாதே
குறவைமீனின் குணத்தைக் கூறு.

(இ-ள்.) சந்நியாசிகள் புகழ்கின்ற பெண்ணே! குறவைமீனால் குடலுக்குள் ஓடிக்குத்துகின்ற நோயும் காசமும் போம். மலபந்தமும் அரோகமும் உண்டாம். 954

அயிரைக்கறியின் குணம்

உயிரை வளர்க்கு முடற்பிணியை நீக்கும்
மயிரை வளர்க்கும் ருசிமாற்றும்-வயிரச்
செயிரையுறச் சற்குணநற் றெள்ளமிர்தே நாளு
மயிரை யெனுமீ னது.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) அமிர்தம்போன்றவளே! அயிரைமீன் உயிருக்கு ஆதாரமாகிய சரீரத்தையும் ரோமத்தையும் வளர்க்கும். தேகசாட்டியத்தையும் அருசியையும் நீக்கும். 955

இருல்கறியின் குணம்

வாதமொடு மந்தமுறு மாருப் பொருமன்மிகுஞ்
சீதம் விளையுந் தினவுண்டா-மாதே
யுதிரமிகப் பெருகு மோங்குமிரு ளுண்டா
லெதிரிலங்க மாங்கிசமா மெண்.

(இ-ள்.) பெண்ணே! இருல்கறியையுண்ணில் வாய்வு அக்கினி மாந்தம் வயிறுப்பிசம் சீதளம் நமை ரத்தம் மாமிசதாது இவை விருத்தியாம்.

கெண்டைமீன்கறியின் குணம்

அண்டையினிற் பார்களுக்கு மாரோசிகங் காணும்
பண்டையுள நோய்முதிர்ந்து பாரிக்கும்-கெண்டையுண்டால்
வாயுவு முண்டாகும் வயிற்றுவலி யுஞ்சேரு
நீயு மறிவாய் நிசம்.

(இ-ள்.) கெண்டைமீனைத்தின்னில் மிகுந்தருசி பழமையாயடங்கியுள்ள ரோகங்கள் வாதப்பிணி குன்மம் இவைகள் அதிகரிக்கும். 957

சன்னக்கெண்டையின் குணம்

மின்னை நிகருமிடை மெல்லியரே மேனியது
சன்னமீ னுண்டாற் றளராவா-முன்னைக்
கரப்பானும் புண்ணுங் கடிய கபமும்போ
முரப்பாக நாளு முரை.

(இ-ள்.) மெல்லியரே சன்னக்கெண்டைமீனை யுண்ணில் தேகச்தளர்ச்சி நீங்குவதுமன்றி கரப்பானும் விரணமும் சிலேஷ்மாதிக்கமும் விலகும். 958

பேராரால்கறியின் குணம்

வாராய் மடமானே வந்த பிணியனைத்தும்
பேராரான் மீனுக்குப் பின்னிடையும்-பேரா
திருந்த பழமலம்போ மெய்துமா ரோக்கிய
மருந்தோடே யொக்குமென வை.

(இ-ள்.) மானனையவளே! மருந்துக்குச் சமமானபேராரால்மீனுக்கு தேகத்திலுள்ள பலவிதரோகங்களும் பழமலக்கட்டும் நீங்கிச் சவுக்கியமுண்டாகும். 959

Digitized By Roja Muthiah Research Library

சிற்றுறாற்கறியின் குணம்

சிற்றுறான் மீனருந்தச் சிக்கு மலசலம்போ
முற்றகபங் கரப்பா னுண்டாகுஞ்-சற்றேதான்
மந்தமுறுந் தீபனம்போம் வாயிற் சலமூறுங்
கந்தமலர்ப் பூங்குழலே காண்.

(இ-ள்.) மலரணிந்த கூந்தலையுடையவளே! சிற்றுறல்மீனையுண்ணில் மலசலபந்தமும் பசியும் நீங்கும். சிலேஷ்மம் கரப்பான் அக்கினிமந்தம் வாய் நீரூறல் இவையுண்டாம். 960

கச்சற்கருவாட்டுக் கறியின் குணம்

வாதமறு மப்பொழுதே வன்பித்த முண்டாகுஞ்
சீதமகலுந் தினவும்போம்-கோதாய்கேள்
கண்டாற் பசியெழும்புங் கச்சற் கருவாடு
கொண்டாற் சுரமும்விடுங் கூடு.

(இ-ள்.) பெண்ணே! கச்சற்கருவாட்டை யுண்ணில் வாதப் பிணி கபநோய் நமைச்சல் சுரரோகம் இவைபோம். கபபித்தமும் தீபனமும் உண்டாகும். 961

உழுவைக்கறியின் குணம்

முழுதும் புசிக்கலா முள்ளுமுல்லை யந்த
வுழுவைக் குடர்பிணி விட்டோடும்-வழுவான
முன்மலமுஞ் சாறு முதிர்கரப்பா னுண்டாகும்
வன்முலையாய் நீயறிந்து வை

(இ-ள்.) வலியகொங்கையையுடையவளே! முள்ளில்லாப் பதார்த்த மாகிய உழுவைமீனுக்கு சரீரத்திலுள்ள பலவிதநோய்களும் பழைய மலமும் போம். கரப்பான் உண்டாம். 962

வாளைக்கறியின் குணம்

ஆளை வளர்க்குமதி யாண்மைதனை யுண்டாக்கும்
வாளையென்ற கண்மாதே வாயுவாம்-வேளை
யறியாம லுண்டா லணுகுமே வாதங்
குறியார்கள் வாளைக் குணம்.

(இ-ள்.) வாள்விழிமாதே! வாதகுணமுள்ளவாளைமீன் தேகத்தைச் செழுமையாக்கித் தாதுவிருத்தியைச் செய்யும். அகாலத்திற் புசிக்கில் வாயுவாம். 963

Digitized By Roja Muthiah Research Library

சேல்கெண்டைக்கறியின் குணம்

குடல்வாத சூலை கொடுக்குஞ் சேற்கெண்டை
யுடல்வாத மேகமுண் டாக்குஞ்-சடமீது
புண்ணுஞ் சிரங்கும் பொருந்திநிற்கச் செய்துவிடு
முண்ண மிகுசுவையா மோர்.

(இ-ள்.) அதியுரிசையுள்ள சேல்கெண்டைமீன் குடல்வாதக்குத்தல் வாதப்பிரமேகம் விரணம் கிரந்தி இவைகளை உண்டாக்கும். 964

கடல் கெளிற்றுக்கறியின் குணம்

நெய்த்திருக்கு நொய்த்திருக்கு நீங்காத சுக்கிலமா
மொய்த்திருக்கும் வன்கெளிற்றை யுண்டாக்கான்-மெத்தக்
கரப்பானும் புண்ணுங் கபமும் பெருகுந்
தரைக்கு ளெவருக்குஞ் சாற்று.

(இ-ள்.) நெய்ப்பசையும் மிருதுவுமுள்ள கெளிற்றுமீனை யுண்ணில் மாறுவீரியமும் அரைக்கடுவனும் விரணமும் சிலேத்மமும் பெருகும். ()

ஓலைவாளைக் கருவாட்டின் குணம்

ஆலைவாய்ப் பித்த மணுகாதா மம்புவியி
லோலை வாளைக்கருவா டுண்டாக்காற்-சாலப்
பசியாரும் பஞ்சாய்ப் பறக்குமே வாதம்
புசியார்க் கிதனைப் புகல்.

(இ-ள்.) ஓலைவாளைக் கருவாடுண்ணில் விஷத்தை நிகர்த்தப் பயித்தியமும் வாதப்பிணியும் நீங்கும். விரைவில் தீபனமுண்டாம். 966

சுறுக்கறியின் குணம்

வாத கபமறுக்கு மன்னுகீடம் போக்கு
மூது குடல்வாத மோடுங்கா-ணுதரவா
யெல்லாப் பிணிக்கு மிதமாகு நல்லசுறு
நல்லா ரறிய நவில்.

(இ-ள்.) நல்லசுறுமீன்கறி வாதகபதொந்தம் கிருமிநோய் குடல்விருத்தி இவைகளை நீக்கும். சகல பிணிகளையுஞ் சாந்தப்படுத்தும். ()

சுறுக்கருவாட்டுக் கறியின் குணம்

சூலை கிராணிகுன்மந் துட்டவதி சாரமிவை
வேலை யுலகை விடுத்தோடுஞ்-சால

Digitized By Roja Muthiah Research Library

வறுப்பசி யுண்டாகு மபத்திய மல்லாத
சுறுக்கருவா டுண்பார்க்குச் சொல்.

(இ - ள்.) பத்தியக்கறியாகிய சுறாக்கருவாட்டை யுண்பவருக்குக் குத்தல் கிரகணி வயிற்றுநோய் வாதாதிசாரம் இவை நீங்கும். மிகு தீபனமாம். 968

கோள்ளிக் கருவாட்டுக்கறியின் குணம்

கொள்ளிக் கருவாடு கொண்டா லுடம்பெல்லாங்
கொள்ளிகொண்டு சுட்ட குறிப்பாகும்-விள்ளக்
கரப்பானும் புண்ணுங் கனகிரங்கும் பைய
வுரப்பா மழகுகெடு முன்.

(இ-ள்.) கொள்ளிக்கருவாடுண்ணில் உடலிற் றீப்பட்டுஆறியவடுப் போற்றழும்பு கரப்பன் விரணம் கிரந்தி இவைபெருகும். அழகுநீங்கும்.

சன்னக் கூனிக்கறியின் குணம்

சன்னக் கூனிக்கறியைத் தானருந்தி லக்கணமே
தின்னப் படுமன்னஞ் சீரணமாம்-பின்னும்
பசிக்கு மதிநெருப்பாம் பாரிலுறு மெல்லா
நசிக்கு மெனவே நவில்.

(இ-ள்.) மிகுருசியுள்ள சன்னக்கூனியைத் தின்னில் விரைவில் சீரணமாவதுந் தவிர உடனே பசியுண்டாகும். வாதமந்தநோய் நீங்கும். ()

திருக்கைக் கறியின் குணம்

வாதமொடு தாதுவும் வளர்ந்துள்ளே சேருமென்று
மோதுபித்தஞ் சோபமிவை யோடுமென்றுங்-கீதச்
செருக்கை யடைவாரைத் திருத்துமொழி மாதே
திருக்கைமீ னுண்பார்க்குச் செப்பு.

(இ - ள்.) இனியமொழியாளே! திருக்கைமீனைத் தின்பவர்க்கு, வாததாதுவும் சுக்கிலதாதுவும் அதிகரிக்கும். பத்தியமும் வீக்கமும் நீங்குமென்க. 971

மடவைக்கறியின் குணம்

மடவைமீன் வாதமொடு மந்த முளைமூலங்
குடல்வாதஞ் சூலை கொடிய-வடற்கரப்பா
னுண்டாக்கு மாமிசங்க ளுறும் மூலகத்தில்
வண்டார்க்கும் வார்குழலே வாழ்த்து.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) நீண்ட கூந்தலையுடையவளே! மடவைமீன் வாதப்பிணி அக்கினிமந்தம் மூலமுளை ஆந்திரபித்தவாதம் கடுவன் இவைகளைத் தரும் .மாமிசம் விருத்தியாம். 972

சுரும்புக்கறியின் குணம்

சுரும்புமீன் பத்தியமாய்ச் சொல்லுவா ருள்ளி
லரும்பிணியை யெல்லா மகற்றும்-பெரும்போகந்
தீபன முண்டாக்குமது தின்னச் சுவைகொடுக்குஞ்
சோபனமின் னாரரசே சொல்.

(இ-ள்.) பெண்கள் நாயகமே! உரிசையுள்ள சுரும்புமீன் வயிற் றுப்பிணிகளை நீக்கும். வீரியத்தையும் பசியையும் தரும் பத்தியத்திற் குதவுமென்பர். 973

உல்லமீன்கறியின் குணம்

உல்லமெல்லாஞ் சன்னவெலும் போவியமே யிக்கறிதா
நல்லகறி யாயதனை நாளுமுண்டால்-மெல்லக்
கழிச்சல் பிளவையொடு காணுக் கடியும்
விழிச்சுக் கொண்டாடுமென விள்.

(இ-ள்.) சித்திரமனையவளே! மெல்லிய முட்களுள்ள நல்ல பதார் த்தமாகிய உல்லமீனை யுண்ணில் பேதியும் விரணமும் காணுக்கடிவிஷ மும் அதிகரிக்குமென்க. 974

கற்றளைமீன்கறியின் குணம்

கற்றளைமீன் றன்னைக் கருதிநித முண்பாருக்
குற்ற வயிறூ வுறுமியெழுஞ்-சுற்றொழியாய்
பேதி யெடுக்கும் பிறகுகரப்பா னொழியுஞ்
சாதி மடமயிலே சாற்று.

(இ-ள்.) மயிலையொத்தவளே! தினமுங் கற்றளைமீனை யுண்பவர் க்கு குடலிரைச்சலும் மாறாத கழிச்சலும் உண்டாகும். கரப்பான் விலகு மென்க. 975

வெள்ளைவவ்வால்கறியின் குணம்

வெள்ளை வவ்வாறன்னை விரும்பிநித முண்பார்க்குத்
தள்ளுகின்ற பித்தம் தரிக்குமோ-துள்ளி
வருங்கரப்பா னேகு மயிலே புவியி
லரும் பத்தியாமா மறி.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) மயிலையொத்தவளே! வெள்ளைவால் மீனைத்தினமும் விரும்பித் தின்பவர்க்கு பித்தமயக்கமும் கடுவானும் போம். இது பயித்தியம் ஆகும் என்க. 976

கருவவ்வால்கறியின் குணம்

செங்கரப்பான் மேகஞ் சிறுசிரங்கு முண்டாகும்
வெங்கொடிய நீரிழிவும் விர்த்தியாங்-கொங்கைகளிற்
பாலூறு மெத்தப் பருகிற் கருவவ்வான்
மேலூறும் போகம் விதி.

(இ-ள்.) கருவவ்வால்மீனைத் தின்னில், செங்கரப்பான் பிரமேகம் சிறுகிரந்தி வெகுமூத்திரம் வீரியவிருத்தி முலைப்பால் இவையுண்டாம்.

நெய்த்தோலிக்கறியின் குணம்

மந்தமுறுந் தீபனம்போம் வாயிளைப்பு முண்டாகுந்
தொந்தமுறு வாதபித்தந் தோன்றும்பின்-னெந்தே
வயிறுப் பொருமும் வலியநெய்த் தோலிக்குத்
துயரமிகு மிதனைச் சொல்.

(இ-ள்.) நெய்த்தோலின் மீன்கறிக்கு அக்கினிமந்தம் அரோசகம் வாதபயித்தியம் வயிற்றுப்பிசமுதலிய துன்பம் உண்டாம். பசிகெடும்.

மயறிமீன்கறியின் குணம்

மயறி கரப்பானும் வாத பித்தத்தோ
டுயருகின்ற சோப மொழிக்கு-நியமா
யுதரத்தி னுள்ளு முறைவாதம் போக்கும்
பதியி லிதனைப் பகர்.

(இ-ள்.) மயறிமீன்கறி கரப்பான் கபம் வாதபயித்தியம் மூர்ச்சை வயிற்றில் தங்கிய விகுணவாதம் இவைகளைப் போக்கும். 979

விலாங்குமீன்கறியின் குணம்

விலாங்குமீன் றன்னை விரும்பிமிக வுண்டாற்
குலாங்கிஷமா யையங் குலாவு-மிலங்கருசி
போகமொடு சொறியும் புண்கரப்பா னுங்கதிக்கு
கோகனக மாதே குறி.

(இ-ள்.) இலட்சுமியொத்தவளே! விலாங்குமீனை அதிகமாகத்தின் தின்றால் கபாதிக்கமும் அரோசகம் தாதுவிருத்தி தவளைசொறி விரணம் கடுவன் இவை உண்டாம். 980

Digitized By Roja Muthiah Research Library

கிழங்கான்மீன்கறியின் குணம்

பத்தியத்திற் கேற்ற பருங்கிழங்கான் மீனருந்த
வுற்ற பிணியனைத்து மோடுங்காண்-மெத்தப்
பசியெழும்புஞ் சேர்ந்த பருமலமுஞ் சாடு
முசியா துடல்வளரு முன்.

(இ-ள்.) பத்தியத்திற்கான கிழங்கான் மீனைத்தின்னில் சகல பிணிகளும் பழயமலச்சிக்கலும்போம். தீபாக்கினியும்தேகச்செழுமையுமாம்.

ஆற்றுமீன் கிணற்றுமீன் கறிகளின் குணம்

ஆற்றுமீன் தாதுவை யுண்டாக்கு மையவெப்பை
யூற்று மருசியைவிட் டோட்டுங்காண்-சாற்றுங்
கிணற்றுமீன் வாதகுன்மங் கீறுபித்தங் குஷ்டம்
பிணைத்த பிலீகமுறும் பார்.

(இ-ள்.) ஆற்றுமீன் வீரியவிருத்தியைச் செய்யும். சீதசுரத்தையும் நாவில் சுரக்கின்ற அரோசக நீரையும் போக்கும். கிணற்றுமீன் வாயு குன்மம் பயித்தியம் குறைநோய் பிலீகரோகம் இவையுண்டாம். 982

மடு குளம் ஏரி இவைகளிலுள்ள மீன்கறியின் குணம்

ஓடுமடு மீனு லுலவைபித் தங்களறுந்
தாதுமேகங் கபமந்தங் களுண்டா-மோதுகுளம்
மாருமீன் றன்னு லழற்பிணி மந்தந்தீரு
மேரிமீன் மேகமடு மெண்.

(இ-ள்.) மடுமீனால் வாயுவும் பயித்தியமும் போம். சுக்கிலம் பிரமேகமும் சிலேஷ்மமும் அக்கினிமந்தமும் உண்டாம். குளத்து மீனால் சுரமும் அலஜரோகமும் விலகும். ஏரிமீனால் பிரமேகம் நீங்கும். 983

கடல் நண்டுக்கறியின் குணம்

குன்மவலி வாதங் கொடுங்கரப்பான் உண்டாக்குங்
கன்மச் சொறியைத் தருவிக்கும்-பின்னு
முதிரக் கழிச்சறனை யோங்குவிக்கு மாதே
யதிரக் கடனண் டது.

(இ-ள்.) பெண்ணே! கடல்நண்டுக்கறி வயிற்றுநோய் வாதகோபம் கடுவன் சருமச்சொறி ரத்தகிராணி இவைகளை உண்டாக்கும். 984

வயல் நண்டுக்கறியின் குணம்

வயலிலுறு நண்டருந்த வாதக் குடைச்
சயலினு மிருக்கா தணங்கே-துயிலவொட்டா

Digitized By Roja Muthiah Research Library

வன்சயித்தி யங்காப்பன் மன்குட விரைச்சலும்போ
முன்பயித்தி யங்கதிக்கு முன்.

(இ-ள்.) மாதே! வயல்நண்டுக்கறியையுண்ணில் வாதக்கடுப்பு தூங்கவொட்டாத கபநோய் குடலிரைச்சல் இவைபோம். பித்தம்பெருகும்.

நத்தைக்கறியின் குணம்

நத்தைக் கறிதனக்கு நாடாது மூலமுத
லொத்தமல ரோகமெலா மோடுங்கா-ணித்தநித்தந்
தின்றாற் செரியாது தேடரிய தாதுவிர்த்தி
நன்றாகு மாதே நவில்.

(இ-ள்.) காரிகையே! நத்தைக்கறிக்கு மூலமுளையும் மலாசயப் பிணிகளும் நீங்கும். இதை தினமும் புசிக்கில் அசீரணமும் சுக்கிலப் பெருக்கமும் உண்டாம். 986

ஆமைக்கறியின் குணம்

ஆமைக்கறி யருசியையும் பித்துண் மூலஞ்
சேமங் கனல்சூதிகா மேக-நாமரத்தப்
பேதி கிராணிமலம் பேதியகற்றும் பசியுந்
தாதுவுமே ருங்கொடுக்குந் தான்.

(இ-ள்.) ஆமைக்கறி அரோசகம்பம் பித்தம் உள்மூலம் உட்சூடு கருப்பமேகம் ரத்தாதிசாரம் சீதகிரகணி மலபேதி இவைகளை நீக்கும். பசி வீரியம் அழகும் தரும். 987

கடைச்சரக்கின் வகை

சுக்கின் குணம்

குலைமந்த நெஞ்செரிப்பு தோஷமேப்பம் மழலை
முலமிரைப் பிருமல் மூக்குநீர்-வாலகப
தோஷ மதிசாரந் தொடர்வாத குன்மநீர்த்
தோஷமாமம் போக்குஞ் சுக்கு.

இதுவுமது எண்சீர்ச்சந்தவிருத்தம்

வாதப் பிணிவயி றாதற் செவிவாய்
வலிதலை வலிகுலை வலியிரு விழிநீர்
சீதத் தொடுவரு பேதிப் பலரோ
சிகமலி முகமக முகவிடி கபமார்

சீதச் சுரம்விரி பேதச் சுரநோய்
  தெறிபடு மெனமொழி குவர்புவி தனிலே
யீதுக் குதவு மீதுக்குதவா தெனும்விதி
  யிலைநவ சுறுகுண முளவே சுக்கு.

(இ-ள்.) சுக்கினுல் விலாக்குத்தல் அசீரணம் மார்பெரிச்சல் புளி யேப்பம் தோஷகுணம் வெப்பம் ஆசனநோய் சுவாசம் காசம் ஜலபீன சம் நீரேற்றம் மேகவாதகுன்மம் ஜலதோஷம் சீதகிரகணி வாதநோய் வயிற்றுப்பிசம் செவிக்குத்தல் முகநோய் சிரநோய் சூலைவலி கபஸ்ரா வம் சீதபேதி பலவித அரோசகம் அலிமுகப்பாண்டு வயிற்றுக்குத்தல் கபசீதசுர முதலிய சுரரோகங்களாகிய இவை நீங்குமென்று சொல்லு வர். ஆயினும் இதனுலுண்டாகும் ஆரோக்கியத்தைக் கருதுமிடத்தி லிந்நோய்க்குதவும் இந்நோய்க்குதவாது என்னும் நியதியில்லாததால் சகல ரோகங்களுக்கும் உபயோகப்படத் தக்கதாம் என்க. 988

தேரையர் கூறிய இவ்விரண்டாஞ் செய்யுளில் மொழிகுவர் எனக் குணபாடங்களை கூறியிருப்பதை உன்னிப்பார்க்கில் சுக்கு இந்நோய்க் குதவும் இந்நோய்க்குதவாதெனவும் விதியில்லையென்றும் சொல்லி யிருப்பதுந்தவிர இச்சுக்கு மூர்த்திகள் சொரூபமென்று சொல்லும் திரிகடுகத்தின் முதன் மருந்தாயும் ஆயுள்வேதியர் கையிலெடுக்கும் ஆயுதமாயும் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரமனைத் தனக்கு அதிதேவதை யாய்ப் பெற்றிருப்பதாயும் பிரமகுலமாயும் பாகபேதங்களினுலனந்த ஔஷத ரூபங்களாயும் மகௌஷதம் என்னும் சஞ்சீவியின் பேராகிய கோடதகம் என்றும் நாமங்களைக் கொண்டிருப்பதாயும் தேவாராத னைக்கும் உபயோகப் படுவதாயும் இருப்பதினுல் சகலரோகங்களையும் நீக்கும் என்பது கருத்து. 989

மிளகின் குணம்

சீதசுரம் பாண்டு சிலேத்மங் கிரணிகுன்மம்
வாத மருசிபித்த மாமூல-மோதுசந்நி
ராசம பஸ்மார மடன்மேகங் காசமிவை
நாசங் கறிமிளகி னுல்.

இதுவுமது

கோணுகின்ற பக்கவலி குய்யரோகம் வாத
சோணிதங் கழுத்திற்குட் டோன்றுநோய்-காணரிய
காதுநோய் மாதர்குன்மங் காமாலை மந்தமென்றீ
ரேதுநோய் காயிருக்கி லீங்கு.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) மிளகினால் குளிர்ச்சுரம் பாண்டு கபம் கிரகணி குன்மம் வாயு அரோசகம் பயித்தியம் மூலம் சந்நியாசம் அபஸ்மாரம் பிரமேகம் இருமல் பங்குவாதம் குய்யரோகம் வாதசோணிதவாதம் களநோய் செவிவலி ரத்தகுன்மம் அசீரணம் இவைபோம். கரி மிளகு. 990

வெள்ளை மிளகின் குணம்

வெள்ளை மிளகருந்த வீறு கிரகணிபோந்
தள்ளுகப வாதந் தானேகு-முள்ள
சுரம்போகுந் தீபனமாந் தொன்மேகம் போமுத்
திரம்பார்த் தெவர்க்குந் தெரி.

(இ-ள்.) வெள்ளை மிளகினால் கிரகணி சிலேத்மவாதம் மூட்சை சீழ்ப்பிரமேகம் இவை நீங்கும். ஜடாராக்கினி உண்டாமென்க. 991

வால்மிளகின் குணம்

வாதபித்த வையம் வயிற்றுவலி தாகஞ்
சீதம் பலநோய் சிதையுங்காண்-போத
வதி தீபனமா மணங்கரசே நாளுந்
துதி வான்மிளகருந்தச் சொல்.

(இ-ள்.) பெண்கள் நாயகமே! வால்மிளகினால் திரிதோஷகோபம் குன்மம் விதாகம் வெட்டை முதலிய சிற்சிலரோகங்கள் விலகும். பசியுண்டாகுமென்க. 992

திப்பிலியின் குணம்-கட்டளைக்கலிப்பா

இருமல்குன்ம மிரைப்பசயப்பிணி
 யீளைபாண்டு சந்நியாசமரோசகம்
பொருமலூதை சிரப்பிணிமூர்ச்சைநோய்
 பூரிக்குஞ்சல தோஷம்பீலிகமும்
வருமலப்பெருக் கோடுமகோதரம்
 வாதமாதிமுத் தோஷஞ்சுரங்குளிர்
பெருமலைப்புரி மேகப்பிடகமும்
 பேருந்திப்பிலிப் போங்குறைக்கவே.

இதுவுமது-வெண்பா

ஆசனநோய் தொண்டைநோ யாவரண பித்தமுத
ஞசிவிழி காதிவைநோய் நாட்புழுநோய்-வீசிவிடு
யங்கலாஞ் சனஞ்சிதையு மப்பா யழிவிந்தும்
பொங்கலாஞ்ச நங்கையர்கோட் போல்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) திப்பிலியால் காசம் கபகுன்மம் சுவாசம் க்ஷயம்கோழை பாண்டு சந்நியாசம் அருசி வயிற்றுப்பிசம் வாயு சிரஸ்தாபம் மூர்ச்சை நீரேற்றம் பீலிகநோய் அதிசாரம் பெருவயிறு திரிதோஷம் நடுக்கல் சுரம் மேகக்கட்டி குதரோகம் நெஞ்சுநோய் ஆவிருதபித்தம் பீநசம் விழிநீர்க்கம்மல் கர்ணநாதம் கிருமி முகத்தில் எழும்புகின்ற கறுத்த மச்சம் முதலியவைநீங்கும். 993

யானைத்திப்பிலியின் குணம்

வாதமறுந் தீபனமா மாறுக் கபங்கரப்பா
ஞோதுகுறற் கம்மலிவை யோடுங்காண்-பூதலத்திற்
சோனையைநேர் நாசியினீர் தோலாச் சுவாசமும்போம்
யானையினற் றிப்பிலியா லாய்.

(இ-ள்.) யானைத்திப்பிலியால் வாதகோபம் சிலேஷ்மம் கரப்பான் சுரசாதரோகம் நீர்ப்பீநசம் இரைப்பு இவைநீங்கும். தீபனமுண்டாம்.

திப்பிலிமூலத்தின் குணம்

தாகபித்தஞ் சோகந் தணியாச் சுரமிருமன்
மேகங் குரற்கம்மன் மெய்க்கடுப்பு-மேகுங்காண்
திப்பிலி மூலங்கண்டத் திப்பிலிய தாநறுக்குத்
திப்பிலியென்றே யொருகாற் செப்பு.

(இ-ள்.) திப்பிலிமூலத்திற்கும் பித்ததாகம்மூர்ச்சை சந்தசுரம் காசம் பிரமேகம் சுக்கிலரோகம் சரீரநோவு இவைபோம். திப்பிலி மூலம் கண்டத்திப்பிலி நறுக்குத்திப்பிலி நறுக்குமூலம் தன்மூலம் எனவும் வழங்குமாம். 995

திரிகடுகின் குணம்

முக்கடுகா லாசியநோய் மூலங் கொடிறுபிணி
திக்கடு பாண்டீடாடு சிரத்துறுநோ-யக்கடுக்குந்
தாவரநஞ் சென்றுலகிற் சாற்றுகின்ற நோய்முழுதுந்
தீவரஞ் சுண்டிறக்குந் தேர்.

இதுவுமது

திரிகடுகாற் சீதபித்தஞ் சிக்குவை நோய்க்கிட
மெரிகடுதே லீளையிருமன் முடுக்கு-தெரிசந்நி
யாமழிசி யபஸ்மார மற் புதப்புண்
விசுசர்க் கராநோய்போம் விள்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) திரிகடு என்பது சுக்கு மிளகு திப்பிலியாம். இவைகளால் ஆகிய வாதங்கள் குதாங்குரம் கர்ணரோகம் பாண்டு சிரஸ்தாபம் அஸ்தியைப்பற்றிய தாவரவிஷம் கபபித்தம் சிக்வாகண்டம் கிருமி மகா சர்ப்பவிஷம் தேள்விஷம் கோழை காசம் சந்நியாசம் அரோசகம் அபஸ்மாரம் அற்புதவிரணம் நாடிவிரணம் இவை விலகும். 996

கடுக்காயின் சிறப்பு

கடுக்காயுந் தாயுங் கருதிலொன் றென்றாலும்
கடுக்காயத் தாய்க்கதிகங் காணீ-கடுக்காய்நோ
யோட்டி யுடற்றேற்று முற்றவன்னை யோசுவைக
ளூட்டியுடற் றேற்று முவந்து.

(இ-ள்.) கடுக்காயுந் தாயும் ஒன்றென ஒருவாறு நினைத்தாலும் தாயைப்பார்க்கிலும் கடுக்காயே அதிகமாம். ஏனெனில் கடுக்காயானது பிணிகளைநீக்கிச் சரீரத்தை தேற்றும். தாயானவள் அறுசுவை உணவை ஊட்டி யுடலைவளர்ப்பாள் என்க. பிணிகளை நீக்கினாலல்லவோ உணவு பயன்பட்டு உடல்தேறும் என்னும் வகையறியாமல் உணவைமாத்திரம் ஊட்டுந்தன்மை யுடையவளாதலால் அத்தாயினும் கடுக்காய் சிறந்த தெனக் கூறினார். 997

கடுக்காயின் போதுகுணம்

தாடைக் கழுத்தக்கி நாறி குறியிவிடப்
பீடை சிலிபதமுதற் பேதிமுட-மாடையெட்டாத்
தூலமிடி புண்வாத சோணி காமாலையிரண்
டால மிடிபோம் வரிக்காயால்.

(இ-ள்.) கடுக்காயினால் கன்னம் களம் கண் நா ஆண்குறி இவ்வி டத்துநோய்கள் பாதவன்மீகம் அதிசாரம் பங்குவாதம் அதிதூலம் இடிப்புண் வாதசோணிதவாதம் காமிலம் தாவரசங்கமவிஷங்கள் இவை போம். வரிக்காய்-கடுக்காய். 998

கடுக்காய்ப்பிஞ்சின் குணம்

வனதுர்க்கிச் சேய்க்கு மணித்தயிலம் பூசி
யனலிற் பொரித்தாங் கருந்தத்-தினமுமலச்
சிக்கல் கடுப்பாநின்ற சீதமறுங் காற்றுகைத்த
முக்கலக் கடுப்பிருக்கு மோ.

(இ-ள்.) கடுக்காய்ப் பிஞ்சுக்கு ஆமணக்கு நெய்தடவித் தீயில்வறுத் துத் தூள்செய்து அப்போதே உண்டால் மலச்சிக்கலும் எலும்பைப்

Digitized By Roja Muthiah Research Library

போல வெளுத்துநின்ற சீதமும் நீங்கும். மூலவாயுவினால் பிறந்த முக்கலும் ஆசனக்கடுப்பும் இருக்குமோ? இராதென்பது. கருத்து. வனதுர்க்கி-கடுக்காய்மரம். 999

கடுக்காயின் பேதம்

ஆதிவிசய னரோகிணி யோடே பிருதிவி
நீதிலமிர்த சிவந்தி மலை-மீதார்
திரிவிருத் தியபயன் செப்பிலிவை யேழா
மரிதகியின் பேர தறி.

(இ-ள்.) கடுக்காய் எழுவகைப்படும். அவையாவன விஜயன் அரோகிணி பிரிதிவி அமிர்தை சிவந்தி திரவிருத்தி அபயன் என்பனவாம். ()

1-வது விசயன் கடுக்காயின் குணம்

விசயனெனுங் கடுக்காய் வீரியத்தைச் சொல்வோம்
நிசமதுதான் வாதத்தை நீக்கு-மிசையுரைக்கப்
பேய்ச்சுரைக்காய் போலிருக்கு போவந்தி யாதேசம்
வாய்ச்சிருக்கு மக்காயை வாழ்த்து.

(இ-ள்.) பேய்ச்சுரைக்காய் குறியுள்ள விசயன் என்கிற கடுக்காய் வாதரோகத்தைப் போக்கும். இது அவந்திதேசத்தில் உற்பத்தியாம். ()

2-வது அரோகிணிக்கடுக்காயின் குணம்

ஓதுமரோ கிணிக்கா யொன்றுண் டானுற்சந்நி
பாதமொடு சீதம் பறக்குங்காண்-மீதுகுறி
நான்கு வரியாய்த்தோற்று நங்கா யதன்றேச
மாங்கு கன்னியாகுமரி யாம்.

(இ-ள்.) கன்னியாகுமரிதேசத்தில் பிறக்கின்ற அரோகிணிக்கடுக்காயால் சந்நிபாதமும் சீதமும் நீங்கும். இதன்மீது 4-வரைபோன் குறியிருக்கும். 1002

3-வது பிரிதிவிக்கடுக்காயின் குணம்

தோற்றும் பிருதிவிதான் றோலாப் பயித்தியத்தை
மாற்றும் வயதை வளர்க்குமதன்-மேற்றோலோ
மெல்லியதா மக்காய் விளைதேச மேதென்னில்
வல்ல சவுராட்டிகமாய் வாழ்த்து.

(இ-ள்.) மெல்லியதோலுள்ள பிருதிவிக்கடுக்காய் பித்தநோயை நீக்கும். ஆயுளைவிருத்திசெய்யும். சவுராஷ்டிரதேசத்தில் உற்பத்தியாம்.

Digitized By Roja Muthiah Research Library

4-வது அமிர்தக்கடுக்காயின் குணம்

அமிர்த மெனுங்கடுக்கா யம்புவியி லுள்ள
திமிர்த சிலேட்டுமத்தைத் தீர்க்கும்-வமிதச்
சதைப்பற்றுண் டாயிருக்குஞ் சாற்றிலதன் றேசங்
கதிக்கொத்த காசியென்பார் காண்.

(இ-ள்.) விம்மித் தசைமிகுந்துள்ள அமிர்தக் கடுக்காய் கண்டத்தில் ஒரு ஒலியைத்தருகின்ற கபத்தை ஒழிக்கும். காசிதேசத்தில் உற்பத்தியாம். 1004

5-வது சிவந்திக்கடுக்காயின் குணம்

சிவந்தியெனுங் கடுக்காய் செய்குணத்தைக் கேட்பாய்
விவர்ந்த மூலத்தையெலா மேய்க்குஞ்-சிவந்ததிகப்
பொன்னிறம தாயிருக்கும் பூங்குழலே யக்கடுக்காய்
துன்னுவனந் தோறுமுண்டாஞ் சொல்.

(இ-ள்.) மலரணிந்த கூந்தலையுடையாளே! மிகுசிவப்பும் தங்கச்சாயலும் உள்ள சிவந்திக்கடுக்காயானது வாதமூலரோகங்களை விலக்கும். இது வனங்களில் உற்பத்தியாம். 1005

6-வது திரிவிருத்திக்கடுக்காயின் குணம் இதுவே மோந்தன்

திரிவிருத்திக் கடுக்காய் தேகத்தி லுளும்
வருவிரணம் போக்குமதன் வன்ன-மொருவிதமோ
பஞ்சவன்ன மூவரம்பு பற்றி யிருக்குமது
விஞ்சுமலை தோறுமுண்டாம் விள்.

(இ-ள்.) வெண்மை கருமை செம்மை பசுமை மஞ்சள் என்னும் பஞ்சவன்னமும் மூன்றுவரியும் உடைய திரிவிருத்திக் கடுக்காய் சகல விரணங்களையும் நிவர்த்திசெய்யும். இது மலைகளில் உற்பத்தியாம். 1006

7-வது அபயனென்னும் கடுக்காயின் குணம்

அபய னெனுங்கடுக்கா யங்கநோ யெல்லா
மபயமிட் டோட வடிக்கு-மபயங்
கதிக நிறங்கறுப்ப தாகும் விளைபூமி
பொதிய மலையாம் புகல்.

(இ-ள்.) கருமை நிறத்தையுடைய அபயன் கடுக்காய் எனும்பைப் பற்றிய ரோகங்களையெல்லாம் நீக்கும். பொதியமலையி லுற்பத்தியாம்.

சங்காசாதிக் கடுக்காய் நான்குவகையில் 1-வது கருங்கடுக்காய் குணம்

பழமலத்தைப் போக்கும் பகரி லுடலுக்
கழகுதரும் புத்தி யளிக்கும்-பழய

Digitized By Roja Muthiah Research Library

மருங்கடுத்த வாதபித்த வன்கபத்தைத் தீர்க்குங்
கருங்கடுக்கா யென்றுளத்திற் காண்.

(இ-ள்.) கருங்கடுக்காயாவது பழயமலக்கட்டையும் திரிதோஷ ரோகங்களையும் போக்கும். அழகையும் அறிவையும் கொடுக்கும். 1008

2-வது செங்கடுக்காயின் குணம்

சுத்தியொடு புத்தி சுகமும் புகழுமுண்டா
மெத்தவொளிர் பொன்னிறமா மேனியெல்லாஞ்-சுத்தகப
வங்கடுத்த வீளைபல வன்காச மும்மலமுஞ்
செங்கடுக்காய்க் கில்லையெனத் தேர்.

(இ-ள்.) செங்கடுக்காய்க்கு மலாசயச்சுத்தி அறிவு இன்பம் கீர்த்தி சரீரத்தில் பொற்சாயல் ஆகிய இவை உண்டாம். தனிச்சிலேஷ்மக் கோழை பலவித இருமல் மலக்கட்டு ஆகிய இவை விலகுமென்க. ()

3-வது வரிக்கடுக்காயின் குணம்

மிடுக்காக்குந் தேகத்தை விந்துவை யுண்டாக்குஞ்
சடக்கெனவே யுண்டியையுட் சாடுந்-துடுக்கான
வாதபித்த வையகற்றும் வன்னியொடு நவ்விதருஞ்
சாதிவரிக் கடுக்காய் தான்.

(இ-ள்.) வரிக்கடுக்காய் தேகபுஷ்டி தாதுவிர்த்தி அசனசீரணம் வாதபித்த தோஷங்களை யகற்றும். அழகையுண்டாக்கும். 1010

4-வது பால்கடுக்காயின் குணம்

ஆமக் கெடுங்கா ணழகும் பொலிவுமிகுஞ்
சேமம் பெறுமலமுஞ் சேருமே-தாமநெடும்
வேர்க்கடைக்கண் கும்பமுலை மெல்லியலே யெப்போதும்
பாற்கடுக்கா யுண்பவரைப் பார்.

(இ-ள்.) மெல்லியளே! பால்கடுக்காயால் சீதகிராணி நீங்கும். வனப்பு தேஜசு வன்மை இவை விருத்தியாகும். 1011

நெல்லிமுளையின் குணம்

ஆகவனலஞ் சசியர்க் கென்புருக்கி கண்ணோய்
தாக முதிரபித்தந் தாதுநட்டம்-மேனகத்தி
னில்லிமுள்ளி போலருக லெண்கா மியவியங்க
நெல்லிமுள்ளி யாற்போம் நினை.

Digitized By Roja Muthiah Research Library

இதுவுமது

நல்லநெல்லி முள்ளியது நாவுக் குரிசைதரு
மல்லல் விரிபித்த மகற்றுமதை-மெல்லத்
தலைமுழுகக் கண்குளிருந் தாவுபித்த வாந்தி
இலையிழி மேகங்களும்போ மெண்.

(இ-ள்.) நாவுக்குரிசை தராநின்ற நெல்லிமுள்ளியால் உட்சூடுசோம ரோகம் மாதர்கள் ருதுதோஷம் அஸ்திசிராவம் தூம்பிரமதகம் ரத்த பித்தம் விம்மிக்ஷீணம் மூத்திரம் அருகல் ஆண்குறிக் கொப்பளம் பயித் தியம் பித்தவாந்தி பிரமேகம் ஆகியவைகள் விலகும். இதை அரைத் துச் சிரசுக்கிட்டு முழுக நேத்திரம் குளிருமென்க. 1012

தான்றிக்காயின் குணம் இது தாணிக்காயென மருவியது

சிலந்திவிடங் காமியப்புண் சீழான மேகங்
கலந்துவரும் வாதபித்தங் காலோ-லடர்ந்துடலி
லூன்றிக் காய்வெப்ப முதிரபித்துங் கரக்குந்
தான்றிக்காய் கையிலெடுத் தால்.

இதுவுமது

ஆணிப்பொன் மேனிக் கழகு மொளிவுமிகுங்
கோணிக்கொள் வாதபித்தக் கொள்கைபோந்-தாணிக்காய்
கொண்டவர்க்கு மேகமறுங் கூறு வனற்றணியுங்
கண்டவர்க்கு வாதம்போங் காண்.

(இ-ள்.) தான்றிக்காயால் சிலந்திவிஷம் ஆண்குறிக்கிரந்தி சீழ்ப் பிரமேகம் திரிதோஷசுரம் ரத்தபித்தம் வாதபித்ததொந்தம் பித்தநீர் உட்சூடு வாதகோபம் இவைபோம். அழகும் ஒளியும் உண்டாம். 1013

திரிபலத்தின் குணம் இதுவே கடுநெல்லி தான்றி

வித்திரதி நாசிநோய் வெண்குஷ்ட மாசனப்புண்
குற்றிருமல் பாண்டுகுஷ்டம் குன்மமிரைப்-பெற்றுமத
மூர்ச்சை பீலிகம் பிரமமோடுறுபுண் சர்வவிட
மூர்ச்சையறு முப்பலத்தான் முன்.

(இ-ள்.) திரிபலத்தால் வித்திரி பீநசம் வெள்ளைக்குஷ்டம் பகந் தரம் புகையிருமல் பாண்டு பெருவியாதி குன்மம் சுவாசம் மதரோகம் மூர்ச்சை பீலிக்கட்டி பிரமேகம் வயிற்றுநோய் விரணம் சர்ப்பகீட விஷ ங்களால் வந்தசோபம் ஆகியவை நீங்கும். 1014

Digitized By Roja Muthiah Research Library

பேரீச்சங்காயின் குணம் இதுவே தர்ச்சூர்க்காய்

வாயிலுண்டா மூற்றலை மாற்றும் பசியில்லை
யாயிலுண்டா லுண்டா மதுமேக-நோயுள்
பெருநீர் மறுக்குமினும் பெண்களைக் கூடுங்காற்
றருநீர்மை கர்ச்சூரக்காய் தான்.

(இ-ள்.) பேரீச்சங்காய் உமிழ்நீர்பெருக்கையும் மதுநீரையும் போக்கும் பசியையும் புணர்ச்சியில் திருவாகத்தையும் உண்டாக்கும். 1015

கண்டோரங்கியின் குணம் இதுவே சிறுதேக்கு விருத்தம்

கண்டுபாரங்கி யெனுஞ் சிறுதேக் குண்டேற்
காலெங்கே பித்தமெங்கே கபந்தா னெங்கே
தொண்டு தொட்டுத் தொண்டர்சுவாச காசமெங்கே
சுரமெங்கே வெறியெங்கே தொனிநோ யெங்கே
மிண்டுபுரி பீசநீர்க் கோவை யெங்கே
வெளிநீருண் ணீரெங்கே விரற்கா-லெங்கே
யண்டுபடாச் சீதசுரங் கடுப்பு மெங்கே
யழலையக நோயெங்கே யறைகு வீரே.

(இ-ள்.) கண்டுபரங்கியென்கிற - சிறுதேக்கினல் திரிதோஷ விருணம் கசச்சுவாசகாசம் ருட்சை பயித்தியம் சுரசாதம் நாசிநோய் சலதோஷம் முந்நீர்க்கோவை பின்னீர்க்கோவை புச்சாவர்த்தவாதம் குளிர்ச்சுரம் உடல்வலி உட்காந்தல் மனச்சங்கடம் இவைபோகும். 1016

அரத்தையின் போதுக்குணம் வெண்பா

தொண்டையிற் கட்டுங்கபத்தைத் தூரத்துரத்திவிடும்
பண்டைச் சீதத்தைப் பறக்கடிக்குங்-கெண்டைவிழி
மின்னே கரப்பனை வேருக்கும் பசிகொடுக்குஞ்
சொன்னே மரத்தைச் சுகம்.

இதுவுமது

மார்பை யடர்பிணி மாசுவாச காசமூலஞ்
சேர்சோபை தட்டச் சூர்வாத-சோணிதநீ
சுரத்தை யடுபடாமற் றாருறுக ணேரி
னரத் தெடுத்துகளி தாம்.

(இ-ள்.) கெண்டைமீனைப்போன்ற கண்களையுடையவளே! அரத்தை நெஞ்சுக் கோழை சீதளம் கரப்பான் இருத்ரோகம் ஈளை யிருமல்

Digitized By Roja Muthiah Research Library

மூலம் விக்கம் தந்தநோய் வாதசோணிதம் தீச்சுரத்தால் பிறந்த கபம் தந்தமூலப்பிணி இவைகளை நீக்கும். பசியைத்தரும். 1017

பேர் அரத்தையின் குணம்-இதுவே தும்ராஷ்டகம்

வாத மிசுவுவலி சந்நி பித்தையுஞ்
சீதசுரந் தாவிரணஞ் சொன்னநீ-ரோதுபல
வாங்கடுப் பூப்படரு மாறு மொளியாரு
மீங்கடரும் பேரரத்தை யால்.

(இ-ள்.) பேரரத்தையினால் வாதநோய் பின்னிசியு வலிப்பு சந்நி பாதம் பித்தகபம் நடுக்கற்சுரம் கிளேக்கின்றபுண் சிரசில் நீரேற்றம் சல விஷம் ஸ்திரீகள் ருதுதோஷம் இவையொழியும் தேஜசுண்டாம். 1018

சிற்றரத்தையின் குணம்

வாந்திபித் தங்கரப்பான் வாதஞ் சிராரோகஞ்
சேர்ந்தகப முத்தோஷஞ் சீதமொடு-நேர்ந்தசுர
மற்றரத்தைக் காட்டி வருமிருமலுந் தீருஞ்
சிற்றரத்தை தன்மருந்தாற் றேர்.

(இ - ள்.) சிற்றரத்தையால் சர்த்தி பயித்தியம் கரப்பான் வாயு சிரஸ்தாபம் சிலேத்மம் சிரதோஷம் சீதளம்பலசுரம் காரம்இவைபோம்.

வசம்பின் குணம்-கட்டளைக்கலித்துறை

பாம்பாகி நஞ்சற்புதப் புண்வலிவிட பாகங்குன்மஞ்
சூம்பாரிரத்த பித்தம் முகநாற்றம் வன்சூலேசந்நி
வீம்பாம் பைசாசம் பிலீகஞ்சிலி பதம்வீறிரு
ரும்பாக்கிருமி யிவையேகு மாசி வசம்பினுக்கே.

(இ-ள்.) வசம்பை விரும்புவையாகில் சர்ப்பகீட தாவரகிதத்திரம முதலியவிஷங்கள் அற்புதவிரணம் ஐவகைவலி விஷபாகரோகம் குன்மம் ரத்தபித்தம் வாய்நாற்றம் சூலை சன்னிபாதம் பிசாசம் பீலிகம் பாத வன்மீகம் காசம் வயறுப்பல் நீண்டமலக்கிருமி இவைபோம். 1020

வட்டத்திருப்பியின் குணம்-வெண்பா

ஐயநஞ் சூதைபித்தத் திக்கறைவ மாபிரமி
வெய்யசுரம் பேதி விரணமெலாம்-வையம்விடுத்
தெட்டத் திருப்பிவிடு மென்பை யூணுக்குமன்றி
வட்டத் திருப்பிவிடு மால்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) வட்டத்திருப்பி சிலேத்மகோபம் விஷம் வாததோஷம் பித்தநோய் அஸ்திசிராவம் பிரமியம் பித்தசுரம் அதிசாரம் சிரங்கு ஆகியவைபோம். மாமிசதாதுவை விருத்திசெய்யுமென்க. 1021

கோஷ்டத்தின் குணம்-விருத்தம்

திட்டிகவுள கடுகளஞ் சென்னிநாவா
தெறிபினவெப்ப தைப்புதா வர்த்தமூதை
முட்டியெழு மூலவிகணஞ் சுவாசகாச
மூடிகத்தோ டரவுமரவிடங்கண் மேகக்
கட்டியஜ கல்லிவிட பாகம்பூத
கணம்பால கிரகமொடு தாதுநட்டஞ்
சொட்டிவரு பிரமிபித்த மிவையொருங்கே
தொலையும் விரணாரிக்குச் சுகப்பேறாமே.

(இ - ள்.) கோஷ்டத்தினால் கண் தாடை வயிறு கழுத்து சிரசு நாவாய் இவ்விடங்களிலேயுள்ள தோஷசுரம் வீக்கம் உதாவர்த்தகம் கபவாதம் மூலை முலசம் ஈளை இருமல் எலி சர்ப்பம் நாவி முதலிய விஷங்கள் மேகப்பிடகம் அஜகல்லிகாரோகம் விஷபாகம் 18-வகை பூத கணங்கள் பாலகிரகதோஷம் வீரியநஷ்டம் வெள்ளை வீழல் பயித்தியம் ஆகிய இவை விலகும். சுகப்பிரசவம் உண்டாம் என்க. விரணாரி-கோஷ்டம். 1022

அதிமதுரத்தின் குணம்-இதுவே மதூகம் விருத்தம்

கத்தியரி முப்பிணியால் வருப்புண் டாகுங்
கண்ணோயுன் மாதம்விக்கல் வலிவெண் குட்டம்
பித்தமெலும் புருக்கிகிரிச் சரமாவாத
பித்தமத மூர்ச்சைவிட பாகம் வெப்பந்
தத்திவரு வாதசோ ணிதங் காமாலை
சருவவிடங் காமியநோய் தாதுநஷ்டம்
குத்திரும லாசியங்க மிதழ்நோ யிந்து
குயப்புணும்போ மதூகமெனக் கூறுங் காலே.

(இ-ள்.) அதிமதுரத்தினால் ஆயுதகாயங்களாற்சனித்த சத்தியோ விரணம் வாதாதிகளாற்பிறந்த நிஜவிரணம் நாவறட்சி நேத்திரநோய் உன்மாதம் இத்தியாதிரோகம் 5-விதவலிகள் வெண்குஷ்டம் பயித்தியம் அஸ்திசிராவம் மூத்திரக்கிரிச்சம் அவர்த்த பயித்தியம் மதம் மூர்ச்சை பித்தவிஷபாகம் சுரம் வாதசோணிதவாதம் காமியம் தாவரசங்கம விஷங்கள் குய்யரோகம் சுக்கிலநஷ்டம் புகையிருமல் முகபாகம் சிர

Digitized By Roja Muthiah Research Library

நோய் ஓஷ்டரோகம் சோமரோகம் ஸ்தனவித்திரிக்கட்டி இவைகள் போம் என்க. 1023

அதிவிடயத்தின் குணம்-வெண்பா

அதிவிடயஞ் சருக்கரார்ப் புதநோய் வெப்பு
கொதிமருவு பேதியொடு கோழை-யெதிர்வாந்தி
யென்றுரைக்கு நோய்க்கூட்ட மில்லா தகற்றிவிடுங்
குன்றைநிகர் முலையாய் கூறு.

(இ-ள்.) மலைபோலு முலைகளையுடையவளே! அதிவிடயம் சருக்கரார்ப்புதவிரணம் சுரம் தேகமுள்ள அதிசாரம் ஈளை மேல்நோக்கிய சர்த்தி முதலிய நோய்களை விலக்கும். 1024

அக்காரகாரத்தின் குணம்

அக்கார கார மதன்பே ருரைத்தக்கா
லுக்கிர காலத்தோட மோடுங்காண்-முக்கியமாய்
கொண்டாற் சலமூறுங் கொம்பனையே தாகசுரங்
கண்டாற் பயந்தோடுங் காண்.

(இ-ள்.) கொம்பனையாளே! அக்காரகாரத்தால் பயங்கரமான காலதோஷமும் தாகசுரமும் நீங்கும் இதை வாயி லடக்கிக்கொள்ளில் சலம் ஊறும். 1025

கடுகுரோகணியின் குணம்

மாந்தஞ் சுரமையம் வாயுகரப் பானுமஞ்
சேர்த்த மலக்கட்டு திரிதோடம்-பேர்ந்தபொட்சிப்
புண்வயிறு நோயிவைபோம் பொற்கொடியே பேதியுண்டாந்
திண்கடுகு ரோகணிக்குத் தேர்.

(இ-ள்.) கொடியிடையாளே! கடுகுரோகணிக்கு க்ஷீராலஜகம் கணசுரம் கபாதிக்கம் வாதகோபம் கரப்பான் சீதபேதி பழையமலபந்தம் முத்தோஷம் கிருமி விரணம் வயிற்றின்வலி இது விலகும். விரோசனமுண்டாம். 1026

பீதரோகணியின் குணம்

படர் நீலகாசம் படலமொடு பில்லந்
தொடரிமை களிற் றூன் றுந்-தோடமரு
மருவியெனச் சொல்லுகின்ற வக்கிநோ யேகு
மொருபீத ரோகணியை யுன்.

(இ-ள்.) பீதரோகணியால் கருவிழி நீலகாசம் கிருஷ்ண மண்டலம் இமையைப்பற்றிய நீர்ப்பில்லம் கிருச்சிரோன் மீலனம் முதலிய ரோகங்கள் கபஸராவம் ஆகிய இவைகள் நீங்கும் என்க. 1027

Digitized By Roja Muthiah Research Library

கிரந்திதகரத்தின் குணம்

சிறுபித்த நோயுந் திரைபெரிதல் போலுமெறிந்
தேறுஞ் சுவாசநோ யென்பதுவும்-வீறிப்
பரந்தசர்க் கரார்ப்புதமும் பன்னப் புகுங்காற்
கிரந்தி தகரத்தாற் கெடும்.

(இ-ள்.) கிரந்தி தகரத்தால் பயித்தியரோகமும் சுவாசரோகமும் சர்க்கரார்ப்புத விரணமும் ஒழியும் எனக. 1028

செவ்வள்ளிக் கொடியின் குணம்

செவ்வள்ளி யின்கொடிக்குச் சேடித்த குட்டமொடு
கவ்வு குறைநோய் கரப்பானு-மிவ்வுலகின்
மானே குடல்வாதம் வல்ல கடுவனுட
ஞனபரு மூலமும்போ மால்.

(இ-ள்.) மானனையாளே! செவ்வள்ளிக் கொடிக்கு வீறுகுஷ்டம் பெருவியாதி கடுவன் குடலண்டம் நகம் குதிக்கால்களைப் பற்றிய கொப்பிளம் மூலம் இவைதீரும். 1029

சவ்வியத்தின் குணம்-இது செவ்வியமென மருவியது

சூலை யருசிசன்னி தொல்லீரும் பீனசபித்த
மேலைக் குறற்கம்மல் வெங்களநோய்-மூலசுரங்
கவ்வி யங்கத்தேறு கனதாவர விஷமுஞ்
சவ்வியங் கொள்ளவிடுந் தான்.

(இ-ள்.) சவ்வியத்தால் குத்தல் அரோசகம் சந்நிபாதசுரம் நீடித்தகாசம் கோழை பயித்தியம் சுரசாதம் தொண்டைநோய் புராணசுரம் எலும்பைப்பற்றி யேறுகின்ற தாவரவிஷம் ஆகியவைகள் போமென்க.

சடாமாஞ்சியின் குணம்-இதுவே பருங்கோரை

குட்டம் சிலந்திவிடங் கோர புராணசுர
முட்டினங்கால் பேதிகண்ணோ யொட்டிருமல்-சொட்டிரத்த
பித்தமிரைப் பேகும் பெருங்கோரை யென்றுரைக்குஞ்
சுத்தசடா மாஞ்சிதனைச் சொல்.

(இ-ள்.) சடாமாஞ்சியால் குஷ்டம் சிலந்திவிஷம் பழையசுரம் உட்சூடு வாயு பேதி விழிநோய் காசம் ரத்தபித்தம் சுவாசம் போம். ()

விலாமிச்சவேரின் குணம்

மேகம் விழியெரிச்சல் வீறிரத்த பித்தமொடு
தாகமத மூர்ச்சைபித்தஞ் சார்மயக்கஞ்-சோகஞ்

Digitized By Roja Muthiah Research Library

சிரநோ யிழுவயேகுஞ் செய்ய விலாமிச்சக்
கெரிகிரமு மின்றென் றிசை.

(இ-ள்.) விலாமிச்சினுல் மேகநீர் கண்ணெரிவு உதிரபித்தம் தாகம் மதம் மூர்ச்சை பயித்தியம் மயக்கம் சோபம் தலைவலி தீச்சுரம் போம்.

பறங்கிப்பட்டையின் குணம்

தாகம் பலவாதந் தாதுநட்டம் புண்பிளவை
மேகங் கடிகிரந்தி வீழ்மூலங்-தேகமுடன்
குட்டை பகந்தரமேற் கொள்வமனம் போம்பறங்கிப்
பட்டையினை யுச்சரித்துப் பார்.

(இ-ள்.) பறங்கிப்பட்டையால் தாபம் பற்பலவாதநோய் விந்து நஷ்டம் விரணம் பிளவை நீரிழிவு கடிவிஷம் சிரங்கு மூலமுளை முடவாதம் குறைநோய் கபம் பகந்தரப்புண் வாந்தி இவைகெடும். 1033

பிசின்பட்டையின் குணம்-இதுவே மயிலாலக்கடி

தசையிலுஞ் சோரி தனிலும் பறந்தே
வசிபோற் குத்திக் குடையும் வாய்வை-நிசமாகக்
கொல்லு முடம்பின் கொதிப்பை யொருநொடியில்
வெல்லும் பிசின்பட்டை விள்.

(இ-ள்.) பிசின்பட்டை மாமிசத்தையும் உதிரத்தையும் பற்றியிருக்கின்ற ஆவிருவாதத்தையும் சரீரவெப்பத்தையும் போக்கும். ()

வெள்ளிலோரத்தின் குணம்

தாவரநஞ் சென்புருக்கி தாழா மகோதரநோய்
கூவ வொட்டாத குரற்சாதம்-பூவுலகில்
வெல்ல வரிதாட வியங்கமுதா வர்த்தமும்போம்
நல்லவெளி லோரத்தி னுல்.

(இ-ள்.) வெள்ளிலோரத்தினுல் விஷவிருக்ஷங்களின் நஞ்சு எலும்புருக்கி பெருவயிறு குரற்கம்மல் வியங்கரோகம் உதாவர்த்தரோகம் இவைகள் தீருமென்க. 1035

லவங்கப்பட்டையின் குணம்

தாதுநட்டம் பேதி சருவவிட மாசியநோய்
பூதகிரகஞ் சிலந்திப் பூச்சுவிடஞ்-சாதிவிட
மாட்டுமிரைப் போடிரும்ப லாதிநோய்க் கூட்டமற
வோட்டு மிலங்கத் துரி.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) இலவங்கப் பட்டையானது சுக்கிலநஷ்டம் அதிசாரம் பற்பலவிஷங்கள் வாயையனுசரித்தவாதம் தேவபூதமாகிய கிரகங்கள் சிலந்திவிஷம் பாம்புவிஷம் சுவாசகாசம் முதலிய நோய்களை விலக்கும். 1036

சன்ன லவங்கப்பட்டையின் குணம்

சன்ன லவங்கப்பட்டை தான்குளிர்ச்சி யுண்டாக்கு
மின்னு மிரத்தக்கடுப்பை யீர்க்குங்காண்-முன்னமுறு
மூந்திக் கடுப்பகற்று மூண்மூலப் புண்போக்குங்
கந்தமிகு பூங்குழலே காண்.

(இ-ள்.) மலரணிந்த கூந்தலையுடையவளே! சன்னலவங்கப்பட்டை ரத்தகிரகணி வயிற்றுப்பிடுங்கல் மூன்றும்வலய மூலவிரணம் இவைகளைநீக்கும் குளிர்ச்சியைத்தரும். 1037

லவங்கப்பத்திரியின் குணம்

மேகசுரஞ் சீதசுரம் வெட்டைசுவா சங்காசந்
தாகபித்தம் வாந்தி சாவாசியநோய்-வேகத்தின்
கட்டியொடு தாதுநட்டங் கைப்பருசி போக்கிவிடு
மிட்ட விலவங்கத் திலை.

(இ-ள்.) இலவங்கப்பத்திரி பிரமேகசுரம் குளிர்ச்சுரம் வெள்ளை இரைப்பு இருமல் பித்ததாகம் வமனம் வுயிர்தாசியம் மேகப்பிடகம் க்ஷீணசுக்கிலம் வாய்கசப்பு அரோசகம் இவை நீங்கும். 1038

லவங்கப்பூவின் குணம்

பித்த மயக்கமறும் பேதியொடு வாந்தியும்போஞ்
சுத்த விரத்தக்கடுப்புந் தோன்றுமோ-மெத்த
வில்வங்கங் கொண்டவருக் கேற்ற சுகமாகு
மலமங்கே கட்டுமென வாழ்த்து.

இதுவுமது

சுக்கில நட்டங்காணச் சூர்வியங்க லாஞ்சனந்தாட
சிக்கில்விடாச் சர்வாசி யப்பிணியு-மக்கிக்குட்
டங்கப் பூவோடு தரிபகிருந் தோன்றில
வங்கப்பூ வோடுரைத்து வா.

(இ-ள்.) லவங்கப்பூ பித்தசோபம் அதிசாரம் சர்த்தி உதிரக்கிரகணி ஆசனப்பிடுங்கல் க்ஷீணவிந்து செவிநோய் சிவந்தமச்சம் கறுத்தமச்சம் விவுர்தம் சம்விவுர்தம் என்றவாதங்கள் கண்ணில் பூப்படை முதலிய நோய்கள்போம். மலங்கட்டும் சௌக்கியமும் உண்டாகும். 1039

Digitized By Roja Muthiah Research Library

சாதிக்காயின் குணம்

தாதுநட்டம் பேதி சருவாசி யஞ்சிரநோ
யோது சுவாசங்காச முட்கிரணி-வேறோ
டிலக்காய் வரும்பிணிபோ மேற்ற மயல்பித்தங்
குலக்கா யருந்துவர்க்குக் கூறு.

(இ-ள்.) சாதிக்காய்க்கு விந்துநஷ்டம் அதிசாரம் ஆகிய வாதங்கள் தலைநோய் இரைப்பு இருமல் உஷ்ணவாத கிரகணி முதலிய ரோகங்கள் விலகும் மயக்கமும் பித்தமும் அதிகரிக்கும் என்க. குலம்-சாதி. ()

சாதிபத்திரியின் குணம்

சாதிதரும் பத்திரிக்குத் தாபச் சுரந்தணியு
மோதுகின்ற பித்த முயருங்காண்-தாதுவிர்த்தி
யுண்டாங் கிரகணியே டோதங் கழிச்சலறும்
பண்டாங் குரையே பகர்.

(இ-ள்.) சாதிப்பத்திரிக்கு அழற்சுரம் கிரகணி சலமந்தபேதி இவை நீங்கும். பயித்தியமும் சுக்கிலப்பெருக்கமும் உண்டாம் என்க. சாதி-சாதிக்காய். 1041

தாளிசபத்திரியின் குணம்

நாசிகளுக்குப் பிணிக ளுட்பட்ட காசஞ்ச
வாச மருசி வமனங்கால்-வீசிவரு
மேகமந்த சுத்திசுரம் விட்டேகுந் தாளிசத்தா
லாகுஞ் சுகப்பிரச வம்.

(இ-ள்.) தாளிசபத்திரியால் பீநசம் கிளரோகம் நாட்சென்றயிருமல் இரைப்பு அரோசகம் வாந்தி வாய்வு கீழ்ப்பிரமேகம் அசீரணம் அஸ்ததாது கதசுரம் ஆகிய இவைபோம். சுகப்பிரசவ முண்டாம். ()

முப்பத்திரியின் குணம்

பத்திரிகண் மூன்றிற் பயிலுங் குணங்களாய்
நித்தமலக் கட்டு நீங்கிவிடுஞ்-சுத்தசுரந்
தாகமொடு வாந்திவிக்க றங்காவெக் காலையிலுங்
கோகிலமே யிக்குணத்தைக் கூறு.

(இ-ள்.) குயில்போலும் இனியமொழியையுடையவளே! லவங்கம் சாதி சாளிசம் என்றே மூன்றுபத்திரிகளாலும் மலபந்தம் தனிச்சுரம் அதிதாகம் வமனம் விக்கல் இவை யொழியும். 1043

Digitized By Roja Muthiah Research Library

கற்கடகாசிங்கியின் குணம்-இதுவே கடுக்காய்

முக்கலையங் காசகப மூடு கிராணிமுளை
கக்கிரத்த பித்தங் கறைப்பேதி-யுட்குடலிற்
றங்கொலிநீர்ப் புண்சுரஞ் சமீரம்விட வெப்பிவைபோஞ்
சிங்கியினாற் போகமுறுந் தேர்.

(இ-ள்.) கற்கடசிங்கியினால் முக்கல் ஆமம் இருமல் க்ஷயம் கிரகணி மூலமுளை ரத்தபித்தம் ரத்தபேதி குடலிரைச்சல் மேகவிரணம் சுரம் விஷசுரம் ஆகிய இவைபோம். வீரியம் உண்டாம். 1044

நாகப்பூவின் குணம்-குறுவிருத்தம்

மதமூர்ச்சை பிரமியஞ் சுவாசகாசம் புகைச்சல்
வுதிர்குரற் கம்மல்கிட விடஞ்சரு வாசியந்தே
எதிகாரங் கமலப்பண்ணோ டிரத்த மூலம்மேகஞ்
சதிநீர்விற் துவினட்டம்போ மாநாக மலரினுக்கே.

(இ-ள்.) நாகப்பூவிற்கு மதமூர்ச்சை ரத்தப்பிரமியம் இரைப்பு இருமல் கண்புகை நடுக்கல் சுரசாதம் எலி முதலிய விஷம் வாயைப்பற்றிய வாதரோகங்கள் தேள்விஷம் பேதி புண்டரீககுஷ்டம் உதிரமூலம் பிரமேகம் வெப்பு வெகுமூத்திரம் க்ஷீணசுக்கிலம் ஆகிய இவைபோம்.

சிறுநாகப்பூவின் குணம்-வெண்பா

சிறுநாகப் பூவினது செய்கைதனைச் சொல்வோங்
குறியாடு மேகத்தைக் கொல்லு-நெறியைவிட்டுத்
தீதாற்செல் வாயுவையுந் தீர்க்குமிரு மற்போகுங்
கோதா யிதையறிந்து கொள்.

(இ-ள்.) பெண்ணே! சிறுநாகப்பூவானது ஆண்குறியால் விழுகின்ற வெள்ளை மார்க்கந்தப்பிய ஆவிருதவாதம் காசரோகம் இவைகளை நீக்கும். 1046

கண்டில்வெண்ணை கூகைநீற்றின் குணம்

கண்டில்வெண்ணெய் மாதேகேள் காந்திப் பிரதாபமுமாந்
தொண்டையினுண் ணீர்க்கட்டு தூரிருமன்-மிண்டிவரு
நீர்க்கடுப்ப க்ஷலத்து ணீர்க்குத்தலும் போகும்
பார்க்கு ளடியப் பகர்.

இதுவுமது

கூகைநீற்றுன் மாதர் குய்யநோய் வுத்திரிதி
யாகமெனு மார்பினோ யண்டுமோ-போகமதில்

Digitized By Roja Muthiah Research Library

வீரியமு முண்டாக்கும் வீழ்கிருமி நோயோடுத்
தூரிரும விளையும்போம் சொல்.

(இ-ள்.) கண்டில் வெண்ணெயினால் காந்தியும் பிரதாபமும் உண்டாகும். தொண்டையின் நீர்க்கட்டு நீர்க்கடுப்பு இவை நீங்கும். கூகை நீற்றினால் யோனிரோகம் வித்திரிதிக்கட்டி இருத்வாதம் கிரிப்பழுகாசம் கோழை இவைபோம். விந்துபுஷ்டியாம். 1047

நாகத்தின் குணம்-இதுவே நகம்

தலைவலி நீரேற்றந் தலையிடுப்புக் குத்தற்
றுலையாம லட்டுநோய் சோமை-நிலைவிழிநோய்
பாகனைய சொன்மின்னே பருமுதர ரோகமும்போ
நாகணத்தி லேநீ நவில்.

(இ-ள்.) பாகன்னவசனிப்பவளே! நாகணத்தினால் சிரஸ்தாபம் சலதோஷம் தலையிற்குத்தலுடலிடிப்பு மலட்டுநோய் வீக்கம் நீங்காத கண்ணோய் பெருவயிறு இவை ஏகும். 1048

மாசிக்காயின் குணம்

அக்கரங்கள் போக்கிவிடு மாறாத வெப்பகற்று
மெய்க்குறுதி மாசிக்காய் மென்மேலுந்-தக்கதொரு
பாலர்கண் நோய்போக்கும் பன்மேகமுந் தொலைக்கும்
வேலனைய கண்ணாய் விரி.

(இ-ள்.) வேலனைய கண்ணையுடையவளே! மாசிக்காய் பித்தசிசுவாகண்டம் மாறாத உட்சூடு சிசுக்களின் கணச்சூடு பலமேகங்கள் இவைகளை நீக்கும். உடற்குப் பலந்தரும். 1049

வலம்புரிக்காயின் குணம்

பூத பைசாசம் பொறுக்கொணா நேத்திரச்சூர்
சீதமிகு செவிநோய் கேவல்விக்க-லோதுகுளிர்த்
தோடமொடு மேகங்கூன் சொன்னவை யெலாநடுக்கி
யோட வலம்புரியை யுண்.

(இ-ள்.) வலம்புரிக்காயால் பதினெண் பூதகணங்கள் சசிக்கா விழிநோய் கர்ணநாதரோகம் இருமலின் தீவரத்தால் வராநின்ற கேவலவிக்கல் சீதசுரத்தினது ஆயாசம் மேகம் கூன்விழுதல் ஆகியவைபோம்.

வாய்விளங்கத்தின் குணம்

பாண்டு குட்டகுன்மம் பருந்தூல நோய்வாதந்
திண்டுதிய விடஞ்சி ரந்துண்ட-தீண்டமடி

Digitized By Roja Muthiah Research Library

நோய்விளக்கங் காட்டாத நுண்கிருமி யரசனப்புண்
வாய்விளங்கக் காட்டவிடு மால்.

(இ-ள்.) வாய்விளங்கத்தால் பாண்டு குட்டம் குன்மம் அதிதூலம் வாயு சர்ப்பகீடதாவரவிஷங்கள் சிரசு நாசி வயிறு இவைகளில் இப்பிணியுளதென் றறிதற்கரிய சன்னகிருமி பகந்தரம் இவைபோம்.()

தக்கோலத்தின் குணம்-இதுவே தக்கோலப்போட்டு

பாண்டுசுரம் போகும் பகரிற் பலஞ்சேருந்
தீண்டுமுப யாசியமுந் தீருங்கா-ணீண்டதொரு
தாதுவிர்த்தி யாகுந் தளர்ந்த மலமுங்கட்டுங்
கோதகலுந் தக்கோலங் கொள்.

(இ-ள்.) தக்கோலத்தினால் பாண்டுநோய் சுரமும் இருவிதமாகிய வாதங்களும்போம். பலமும் வீரியவிருத்தியும் மலக்கட்டுமுண்டாம். ()

விழல் அரிசியின் குணம்

விழலரிசி யென்றுன் மிகுபித்த மேகு
மழல் குடலின்வாத மசுலுந்-தழுவு
பரிதோட மேகமிவை சேராவா நீயுங்
குறியா யிதையறிந்து கொள்.

(இ-ள்.) விழலரிசியால் பித்தாதிக்கம் சுரம் ஆந்திரபித்தவாதம் வாதபித்தகபதோஷம் சீழ்ப்பிரமேகம் ஆகிய இவை விலகுமென்க. ()

கார்போக அரிசியின் குணம்

கார்போக மாவரிசி கண்டாற் கரப்பான்புண்
பீர்சருவ நஞ்சிவை பித்தமுறும்-பார்மீதில்
வாதகப நமைச்சல் வன்சொறி சிரங்குமறும்
சீதமலர்க் குழலாய் செப்பு.

(இ-ள்.) மலரணிந்த கூந்தலையுடையவளே! கார்போக அரிசியால் கடுவன் விரணம் பயங்கரமான சர்ப்பகீட தாவரவிஷங்கள் வாத சிலேத்மதொந்தம் தினவு யானைச்சொறி கிரந்தி ஆகிய இவை விலகும். பயித்தியம் அதிகரிக்குமென்க. 1054

வாலுழுவை அரிசியின் குணம்

வயிற்றுக் கடுப்புவலி மாறுக் கிராணி
பயித்தியங் காசமல பந்தஞ்-சயிக்கவொணுச்
சூதிகா வாதமும்போந் தொல்வா லுழுவைவிதைக்
காதிகவ சித்தர்மொழி யாம்.

(இ-ள்.) வாலுழுவை அரிசிக்கு வயிற்றுப்பிடுங்கல் கடுப்பையுடைய ரத்தபேதி பித்தம் இருமல் மலக்கட்டு அசிர்க்காம் இவைபோம். 1055

Digitized By Roja Muthiah Research Library

வெட்பாலை அரிசியின் குணம்

வெட்பாலை தன்னரிசி வீறுபித்த வாதமொடு
கொட்பார் கரப்பான் குடல்வாத-முப்பிசத்தை
காணுமலே நாளுங் கண்டிக்குங் காசினியிற்
பூணுர் முலையாய் புகல்.

(இ-ள்.) ஆபரணமணிந்த முலையையுடையவளே! வெட்பாலை அரிசியானது பயித்தியவாத தொந்தம் கடுவன் குடல்விர்த்திரோகம் வயிற்றுப்பொருமல் இவைகளை விலக்கும். 1056

காசினிவிதை துளசிவிதை-இவைகளின் குணம்

காசினி விதைக்குக் கதித்த வரோசிசர்த்தி
காசினியை விட்டேகுங் காணனமே-பேச
மளவி கற்பம்போ மருசி நடுக்குந்
துளசி னறுவிதைக்குச் சொல்.

(இ-ள்.) அன்னநடையாளே! காசினிவிதைக்கு அருசியும் வாந்தியும் நீங்கும். துளசிவிதைக்கு சிலேத்மமும் அரோசகமும் விலகும். ()

புத்திரசீவி விதையின் குணம்

ஆகியதோர் மூலமன லம்வெட்டை மேகமும்போம்
போகங் விளையும் பொருமலறுந்-தாகம்போம்
புத்திர சீவியெனப் போற்றும் விதையதனு
லித்தரையுண் மாதே யியம்பு.

(இ-ள்.) பெண்ணே! புத்திரசீவி விதையினல் மூலசுரம் வெள்ளை நீர்ப்பிரமேகம் வயிற்றுப்பிசம் நாவறட்சி இவைபோம். சுக்கிலம் விளையுமென்க. 1058

சமுத்திரசோஷி விதையின் குணம்

ஐயமகற்று மரோசகத்தை மாற்றிவிடும்
பையுதிர வாயுவையும் பற்றறுக்கு-மெய்யை
யமிழ்த்துகின்ற நீரை யனிலத்தைப் போக்குஞ்
சமுத்திரநற் சோஷிவிதை தான்.

(இ-ள்.) சமுத்திரசோஷி விதையானது கபதோஷம் சோணிதவாதம் அருசி அதிமூத்திரம் வாதாதிக்க மிவைகளை யொழிக்கும். 1059

கசகசாவின் குணம்

கிருமி நமைச்சல் கிராணி யதிசாரஞ்
சிரநீர் நித்திரைபோஞ் செப்பி-லுருவழகுங்

Digitized By Roja Muthiah Research Library

காந்தியு முண்டாகுங் கசகசாவின் குணத்தை
தேர்ந்தவர்க்கு விந்துவுமாந் தேர்.

(இ-ள்.) கசகசாவினால் ரசதாதுகிருமி தினவு சீதரத்தக்கழிச்சல் மலபேதி சலதோஷம் நித்திரைபங்கம் இவைபோம். தேகத்தில் சௌந்தரியம் தேஜசு சுக்கிலம் இவை விருத்தியாம். 1060

பெரிய யேலத்தின் குணம்-கட்டளைக்கலிப்பா

தொண்டைவாய்கவுடாலுருதங்கனிற்
றேன்றுநோயதிசாரம்பன்மேகத்தா
லுண்டைபோலெழுங்கட்டிகிரிச்சுர
முழலைவாந்திசிலந்திவிடஞ்சுரம்
பண்டைவெக்கைவிதாகநோய்காசமும்
பாழுஞ்சோமப்பிணிவந்துநட்டமுள்
வண்டையீளவன்பித்தமிவைக்கெலா
மலாமாம்பருமேலமருந்தே.

(இ-ள்.) பருத்த ஏலமானது சுறக்கினம் பித்தமுகபாகம் தாளுபாகம் பித்தசிக்வாகண்டகம் சருமகீலம் பேதி அரையாப்புக்கட்டி கிரிச்சரம் வாயுமூலை சர்த்தி சிலந்திவிஷம் ரூட்சை உஷ்ணபேதி விதாகம் இருமல் சோமரோகம் வயிற்றில் கபநிறைவு நெஞ்சிற்கோழை உரத்த பித்தமாகிய நோய்களை விலக்கும். 1061

சிறுயேலத்தின் குணம்-வெண்பா

மலவாத மோடு வயிற்றுக் கொதிப்பு
சலமூரல் வாயினிப்பு தாகஞ்-சலபேதி
வேர்க்குந் தலைநோய் மிகுரூட்சை யையமிவை
போக்குஞ் சிற்றேலமெனப் பேசு.

(இ-ள்.) சிறுஏலம் மலாவிருதவாயு நுறைத்தமலம் உமிழ்நீரூரல் வாயினிப்பு தாகம் சலபேதி வியர்வைத்தலைவலி மிகுசுரம் கபந்தீரும்.()

மலையேலத்தின் குணம்

நாவறட்சி தாகசுர நாடா தகற்றிவிடுந்
தீவறட்சி நீர்க்கடுப்பைத் தீர்க்குங்காண்-மூவறட்சி
கூடுமோ ரசத்தைக் கூடாம லோட்டிவிடும்
நாடு மலையேல நவில்.

(இ-ள்.) மலையேலமானது நாவறளல் வரட்சுரம் பித்தச்சொறி நீர்ச்சுருக்கு திரிதோஷவறட்சியால் பிறந்த அருசி இவைகளை நீக்கும்.()

Digitized By Roja Muthiah Research Library

காட்டுயேலத்தின் குணம்

தீராத வாந்தி சிலேத்ம மதிசாரம்
பேரா வருசிபித்தம் பேருங்காண்-சோறுமல்
காட்டேல வார்குழலே காராம் பரிமளஞ்சேர்
காட்டேல மென்றுரைக்குங் கால்.

(இ-ள்.) *நீண்டகூந்தலே யுடையவளே! உரைப்பும் மணமும் உள்ள காட்டு ஏலத்தினலே நீங்காத சர்த்தி கபம் பேதி அரோசகம் பயித்தியம் இவைகள்போம்.* 1064

சீரகத்தின் குணம்

வாந்தி யருகுன்மம் வாய்நோய் பிலீகமிரைப்
பேந்திருமல் கல்லடைப்பு லாஞ்சனமுட்-சேர்ந்தகம்ம
லாசன குடாரியெனு மந்தக் கிரகணியும்
போஜன குடாரியுண்ணப் போம்.

இதுவுமது

வாயுவொடு நாசிநோய் வன்பித்தஞ் சேராது
காய நெகிழாது கண்குளிருந்-தூயமலர்க்
காரளகப் பெண்மயிலே கைகண்ட தித்தனையுஞ்
சீரகத்தை நீதினமுந் தின்.

(இ-ள்.) *கறுத்த கூந்தலுடையாளே! சீரகத்தினல் பித்தசாந்தி அரோசகம் வயிற்றுவலி முகரோகம் பிலீகநோய் சுவாசம் காசம் அசமறிமச்சம் சுரக்கினம் சீதரத்தகிராணி வாதாதிக்கம் பீநசம் பயித்தியமும் விலகும். சரீரத்திற்குறுதியும் கண்ணுக்குக் குளிர்ச்சியுமாம்.* 1065

பெருஞ்சீரகத்தின் குணம்-இதுவே சோம்பு

யோனிநோய் குன்ம முருட்சை மந்தம்பொருமல்
பேனமரு காசம் பிலீகமிரைப்-பீனவுரை
சேர்க்கின்ற வாதமும்போஞ் சீர்பெரிய சீரகந்தான்
மூக்குநோ யில்லை யொழி.

(இ-ள்.) *பெருஞ்சீரகத்தினல் வாமினியோனிரோகம் வயிறுவலி சுரம் அசீரணம் வயிற்றுப்பிசம் நுறைத்த கபயிருமல் பிலீகம் சுவாசம் தொனி கத்தவாதம் அதிதும்மல் பீநசம் இவைகள் போகும்.* 1066

கருஞ்சீரகத்தின் குணம்

கருஞ் சீரகத்தாற் கரப்பனெடு புண்ணும்
வருஞ்சிராய்ப் பீநசமு மாறு-மருந்தினுற்

Digitized By Roja Muthiah Research Library

காச்சல் தலைவலியுங் கண்வலியும் போமுலகில்
வாய்ச்ச மருந்தெனவே வை.

(இ-ள்.) கருஞ்சீரகமானது மண்டைக்கரப்பான் விரணம் சிராப் பீநசரோகம் உட்சூடு சிரநோவு கண்ணோய் இவைகளை நீக்கும். 1067

காட்டுச்சீரகத்தின் குணம்

கைகறுப்பு மாறுங் கடியமேகம் போகும்
மெய்க்குத் தண்ணுயபித்தம் வீறுவாங்-கைக்கரிமாக்
கோட்டுப் பணைமுலையாய் குன்ம வாதந்தொலையு
காட்டுநற் சீரகத்தைக் காண்.

(இ-ள்.) யானைத்தந்தம்போலு முலைகளையுடையவளே! காட்டுசீர கத்தால் உள்ளங்கைக்கரும்புள்ளி பிரமேகம் பயித்தியம் வாதகுன்மம் இவைபோம். குளிர்ச்சியுண்டாம். 1068

பிளப்புசீரகத்தின் குணம்

உடலுக் கழகா முறைபித்த மேகு
மடலூறு வாத மதமாங்-கடிசேர்
தளவுநகைக் கோட்டுமுலைத் தையலே நாளும்
பிளவுநறுஞ் சீரகத்தைப் பேண்.

(இ-ள்.) பெண்ணே! பிளப்புச் சீரகத்தினால் நீங்காப் பயித்திய மும் வாதகோபமும் நீங்கும். சரீரத்திற்கு அழகுண்டாகும். 1069

கோத்தமல்லியின் குணம்-இதுவே உருள் அரிசி

கொத்தமல்லி வெப்பங் குளிர்க்காய்ச்சல் பித்தமந்தஞ்
சர்த்திவிக்கல் தாகமொடு தாதுநட்டங்-கத்தியெழும்
வாத விகாரமடர் வன்கர்த்தபி விரணம்
பூதலத்தி லாதகற்றும் போற்று.

(இ-ள்.) கொத்துமல்லியானது உட்சூடு நளிர்ச்சுரம் பயித்தியம் பயித்தியவேகம் அசீரணம் வாந்தி விக்கல் நாவறட்சி க்ஷீணி சுக்கிலம் பெரும்வெப்பம் கர்த்தவிரணம் ஆகிய இவைகளைப்போக்கும். 1070

சேங்கடுகின் குணம்

இடிகாச நாசிச்சு ரீளைகபம் பித்தங்
கடிவாத சீதங் கடுப்போ-டுடலிற்
படுங்கோட்டு நோயென்னும் பங்கிவளைச் செங்
கடுகோட்டு மேன்மருந்து காண்.

Digitized By Roja Muthiah Research Library

இதுவுமது

பந்தமயக்கம் வாதம் வாய்நீர்ச் சுழற்றலறு
முந்து சுப்பிரசவங்க ளுண்டா-மிந்துநுதன்
மானே கிரகணிக்குன்ம மாறுமுத் தோஷங்களறுந்
தானே கடுகிற்கு தான்.

(இ-ள்.) பிறைபோலும் நெற்றியையுடையவளே! செங்கடுகு தலையிடிப்பைத்தராநின்ற இருமல் பீநசம் சோழைக்கபம் பயித்தியம் காணவிஷக்கடி வாதசுபம் குடைச்சல் முடம் அக்கினிமந்தம் வாததோஷம் குழம்பிய உமிழ்நீர் கிரகணி வயிற்றுவலி திரிதோஷம் இவைகளை விலக்கும். சுகப்பிரசவத்தைத் தரும். 1071

வெண்கடுகின் குணம்

பால கிரகம்பூத பைசாச மோட்டிவிடு
மால விஷங்கடிய ளாற்றுங்காண்-கோலமிகு
வள்ளைச் செவிமாதே மாபங்க நோய்விலக்கும்
வெள்ளைக் கடுகின் விதி.

(இ-ள்.) பெண்ணே! வெண்கடுகானது கந்தகிரகம் முதலிய 12-பாலகிரகங்கள் தேவபூத முதலிய 18-வகை பூதங்கள் மகாசர்ப்பவிஷம் வண்டு முதலிய விஷக்கடிகள் பங்குவாதம் இவைகளை நீக்கும். 1072

சிறுகடுகின் குணம்

தோலிரத நெய்யூன்மே தோதாது வின்வளிக்கு
மேலிரணப் பூச்சு விடங்கபநோய்-காலிங்
கெறியகடு விழிமலும்போ மேங்தெழிலார் மாதே
சிறியகடுகின் குணத்தைத் தேர்.

(இ-ள்.) அழகியபெண்ணே! சிறியகடுகினால் விஷம் சிலேஷ்மநோய் மூச்செறியச்செய்கின்ற வயிற்றுவிம்மல் இவை நீங்கும். இது சருமம் ரசம் ரத்தம் மாமிசம் மேதை ஆகிய இத்தாதுக்களின் வாயுவினால் பிறக்கின்ற பிணிக்கு விரணம் உண்டாகும்படி பூசுகிறலேபன சிகிச்சைகளும் ஆம். 1073

நாய்க்கடுகின் குணம்

சூதக வாயுவொடு சோணிதத்தின் வாதமும்போம்
வாதவலி குன்ம மடியுங்காண்-மாதுநல்லாய்
பேய்கட் புகைபோடப் பேசா தொழிந்துவிடு
நாய்க்கடுகை நீவிரும்பி னால்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) மாதே! நாய்க்கடுகினால் வாதகசிர்க்கரம் வாதசோணிதம் வாதகடுப்பு குன்மம் இவைபோம். இப்புகையால் பூதபைசாசங்கள் விலகும். 1074

வெந்தியத்தின் குணம்

மேதிகண மத்திசுர மேகங் கயஞ்சீத
பேதியதி சாரநோய்ப் பித்திரும-லாதியநோய்
நீக்குமன நணிக்கு நித்தமுற விந்துவையுண்
டாக்கு மனமே யறி.

(இ-ள்.) அன்ன நடையாளே! வெந்தியமானது கணமாந்தம் அஸ்திசுரம் பிரமேகம் க்ஷயம் சீதக்கழிச்சல் பேதி ரத்தபித்தம் காசம் உட்சூடு முதலிய பிணிகளை விலக்கும். நிரந்தரமாகச் சுக்கிலத்தை விளைக்குமென்க. மேதி-வெந்தியம். 1075

ஓமத்தின் குணம்

சீதசுரங் காசஞ் செரியா மந்தம்பொருமல்
பேதியிரைச் சற்கடுப்பு போரா-மோதிருமற்
பல்லோடு பண்மூலம் பகமில்நோ யென்செயுமோர்
சொல்லொடு போமெனச் சொல்.

(இ-ள்.) ஓமத்தினால் குளிர்ச்சி சுரம் இருமல் அசீரணம் வயிற்றுப்பிசம் அதிசாரம் குடலிலெரிச்சல் ஆசனக்கடுப்பு சீதப்பேதி சுவாசகாசம் தந்தரோகம் தந்தமூலரோகம் குய்யரோகம் இவை விலகும். ()

குரோசானி ஓமத்தின் குணம்

வெகுமூத்திர வாதம் வீரியநட் டம்புண்
ணுகுபேதி யுட்கடுப்பி னோடே-மிகுகரப்பான்
தீருக் கபமிவைபோஞ் செய்யகுரோ சானியென்றால்
வாரா மயக்கமுறு மால்.

(இ-ள்.) குரோசானி ஓமத்தினால் அதிமூத்திரம் வாதாதிக்கம் க்ஷீணவிந்து விரணம் வாதாதிசாரம் உடற்கடுப்பு கரப்பான் நீங்காக் கபநிறைவு ஆகிய இவை நீங்கும். அதிமயக்கம் உண்டாகும். 1077

சதகுப்பையின் குணம்

வாதமொடு சூதிகா வாதஞ் சிரசிநோய்
மோதுசெவி நோய்கபநோய் மூடுசுர-மோதுகின்ற
மூலக் கடுப்பு முதிர்பீநசம் போக்கு
ஞாலச் சதகுப்பை நாடு.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) சதகுப்பை வாதரோகம் அசிர்க்கரம் தலைவலி கர்ணசூலை சலதோஷம் கபருட்சை ஆசனக்கடுப்பு சலபீநசம் இவைகளை நீக்கும்.()

பெருங்காயத்தின் குணம்-கட்டளைக்கலிப்பா

தந்தவேதந்த மூலத்தெழுபிணி சருவகாளத் திருட்சிக்கீடமா
யந்தவாத முதாவர்த்தமல்குனேய் மார்பணங்கட்ட குன்மம்கோதர
முந்துகெர்ப்பத்தின் வித்திரஞ்சூலை குருதிரப்பூச்சி சிலேஷ்மத்துறுவலி
வந்தமெய்க்கடுப் போடுவைமுற்றுமே மாயுநாறு காயங்கிடைக்கினே.

(இ-ள்.) மணமுள்ள பெருங்காயத்தினால் தந்தரோகம் தந்தமூல ரோகம் சகலசர்ப்பவிஷம் தேள்விஷம் கிருமி அசீரணம் வாதாதிக்கம் உதாவர்த்தவாதம் யோனிரோகம் இருத்வாயு எண்வகை குன்மம் உதரத்ராகம் கருப்பவித்திரிதி சூலை ரத்தகிருமி கபநோய் குடைச்சல்தீரும்.

வெள்ளைப்பூண்டின் குணம்-வெண்பா

சந்நியொடு வாதந் தலைநோவு தாளின்வலி
வன்னிவரு நீர்க்கோவை வன்சீத-மன்னமோ
யுள்ளுள்ளிக் காண்பா யுளைமூல ரோகமும்போம்
வெள்ளுள்ளி தன்னால் வெருண்டு.

(இ-ள்.) அன்ன நடையாளே! வெள்ளைப்பூண்டினால் சந்நிவாத ரோகம் சிலேஷ்மசிரஸ்தாபம் வாய்பூட்டுநோய் நீரேற்றம் சீதபேதி அரசம் இவை நீங்கும். 1080

அபினியின் குணம்

நல்லவபினிக் குணத்தை நாடறிய நாம்புகல்வ
தல்லல் குன்மவாத மருஞ்செவிநோய்-பல்லின்வலி
பேதியந்த மத்திநோய் பீநசம்போம் வன்மையுண்டாஞ்
சாதி யுதிரச்சுத்தி காண்.

(இ-ள்.) அபினியால் வயிற்றுநோய் வாதாதிக்கம் கர்ணசூலை தந்தநோய் அதிசாரம் அசீரணம் எலும்பிற் குடைச்சல் நாசிகாரோகம் இவைபோம். சாதிலிங்கநிறமுள்ள உதிரச்சுத்தியும் உண்டாம். 1081

கஞ்சாவின் குணம்

மூலக் கிராணியறு முன்புள்ள பேதிகட்டுஞ்
சாலமயக்கும் பசியுஞ் சாருங்காண்-தூலஞ்செய்
வாதமொடு வையமும்போம் வன்கரப்பனுந் தொலையுங்
கோதறு கஞ்சாச் சடைக்கு.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) கஞ்சாவிற்கு மூலவாய்வு கிரகணி நீடித்த அதிசாரம் அதிதூலம் கபாதிக்கம் கரப்பான் இவைபோம். மிருமயக்கமும் அதி தீபனமும் உண்டாம். 1082

கரியபோளத்தின் குணம்

மார்புவலி வீக்கம் வயிற்றுவலி பக்கநோய்
வார்மேகக் கட்டியொடு மாவாதம்-பாருலகி
னீளங் கைகாலி நிலைசூலியங் கறுத்த
போளந்தனைக் காணிற் போம்.

(இ-ள்.) கரியபோளத்தினால் இருத்வாதம் சோபை குன்மம் மூடம் மேகப்பிடகம் மகாவாதரோகம் கைகால்குத்தல் இவைபோம். 1083

ரத்தபோளத்தின் குணம்

விழுந்திறந் தங்கிமிக வீங்கு முறுவிக்க
மெழுந்து நிற்கவொட்டா விசுவோ-டழுந்தி
யுரைத்த தமரும்வலி யோடு மெதிர்நிற்கா
திரத்த போளத்தை யெடு.

(இ - ள்.) ரத்தபோளத்தினால் விழுந்து ரத்தம்கட்டி அதன்மே லதிகரித்தநோவுடன் வீங்குகின்ற வீக்கமும் எழுந்து நிமிர்ந்து நிற்க வொட்டாத பக்கநோயும், மார்பின் உபத்திரவமும் நீங்கும். 1084

வாலேந்திரபோளத்தின் குணம்

சூலை கயரோகஞ் சொறிகரப்பான் குன்மமிவை
யாலைவாயின் கோற்போ லாகுங்கா-ணீலசக்ர
வாளமெனத் தோன்றுமுலை மாதரசே வாலேந்திர
போளந்தனை யெடுக்கும் போது.

(இ-ள்.) பெண்கள் நாயகமே! வாலேந்திர போளத்தினால் கீல்பிடிப்பு க்ஷயம் நமைச்சல் கரப்பான் வயிற்றுநோய் ஆகியவைகள் விலகும்.

வெளிச்சப்பிசின் குணம்

முகசந்நி பாதமொடு முட்டிவரு நீரு
முகவாத சன்னிகளு மண்டா-மகிழுங்
களிற்றை நிகருமுலைக் காரிகையே நாளும்
வெளிச்சப் பிசினை விளம்பு.

(இ-ள்.) பெண்ணே! வெளிச்சப்பிசினால் வாயுவாற் பிறந்த சிம்ம கம்புகன் நேத்திரம் பிரலாபம் அந்தகம் என்னும் சந்நிபாதங்களும் அதிநீரும்போம். 1086

நாவியின்போதுக் குணம்

வாதவலி மந்தமறன் மாறுக் கபப்பிணிக
ளோதுகுட்டு குன்மந்தே ளோடுங்காண்-காதலர்தம்
புத்தியோ டாருயிரும் பூவும் வணைகுழலே
சுத்திசெய்த நாவியின்பேர் சொல்.

(இ-ள்.) விரும்பப்பட்ட நாயகருடைய அறிவையும் உயிரையும் கூந்தலொடு முடித்துக்கொள்ளுகின்ற பெண்ணே! சுத்திசெய்த நாவியினால் வாதக்கடுப்பு அசீரணம் ஓதமுள்ள ஜலதோஷங்கள் குஷ்டம் வயிற்றுவலி தேள்விஷம் இவை நீங்கும். 1087

பச்சைநாவின் குணம்

கடியதொரு குட்டங் கனத்த விஷசந்நி
கொடியதொரு குன்மங் குலையும்-படியிற்
றளிரத்தி வெப்புடனே தாகசுரந் தீரும்
வளர்பச்சை நாவிதனை வாழ்த்து.

(இ-ள்.) பச்சைநாவியால் குறைநோய் விஷசந்நிபாதம் வயிற்று நோய் அஸ்திச்சுடு தாகசுரம் ஆகிய இவைகெடும். 1088

வெள்ளைநாவியின் குணம்

குட்டங் கடிசூலை கூடுபுரி வன்கிருமி
துட்டகுன்ம வாதந் தொலையுங்காண்-வட்டமுலைப்
பெண்ணே சுரந்தணியும் பேருலகத்தார் பகைக்குட்
வெண்ணாவி தன்னை விரும்பு.

(இ-ள்.) பெண்ணே! வெண்ணாவியால் குஷ்டம் காணாக்கடி குத்தல் மார்பை வீங்கச்செய்கின்ற கிருமிரோகம் வாதகுன்மம் ருட்சை ஆகிய இவைகள் ஒழியும். 1089

கருநாவியின் குணம்

எண்ணாச் சுரம்போ மிறங்கும் பீலிகமறும்
புண்ணாறு மூறும் புழுக்கள்விழுந்-தண்ணாறும்
வல்லை கவிகையொடு வாத சுரமிவைக
ளில்லையொரு கார்நாவிக் கே.

(இ-ள்.) கருநாவிக்கு நாவொட்டிக்காய்ச்சல் நழுகிய பிலீகம் விரணம் கிருமிகள் வல்லக்கட்டி மகோதரம் வாதசுரம் இவை தீரும். 1090

Digitized By Roja Muthiah Research Library

சூத்திரநாவியின் குணம்

காய்ச்சல் தலைநோய் கனத்தசந்நி பாதமெரிப்
பூச்சி விடக்கடியுட் புண்குட்டங்-கூய்ச்சறரு
காத்திர தேளுங்குடிபோங் காரளகப் பைங்கொடியே
சூத்திர நாவிக்குத் துவண்டு.

(இ-ள்.) சூத்திரநாவிக்கு சுரம் சிரஸ்தாபம் சந்நிபாதம் எரிக் கிருமி சர்ப்பவிஷக்கடி உள்விரணம் குறைநோய் தேள்விஷமிவைபோம்.

நில ஆவரையின் குணம்

நிலாவாரை யின்குணந்தா னீகேண் மயிலே
பலமூல வாயுவெப்பு பாவைச்-சிலகிரந்தி
பொல்லாத குன்மம் பொருமுமலக் கட்டுமுத
லெல்லா மகற்றுமென வெண்.

(இ-ள்.) மயிலனையவளே! நில ஆவாரை பற்பல மூலவாயுக்கள் சுரம் சிழ்ச்சிரங்குகள் வயிற்றுவலி வயிற்றை யுப்பச்செய்கின்ற மலக் கட்டு இவைகளை நீக்கும். 1092

சிவதைவேரின் பொதுக் குணம்

உள்ள மலமு முதாவர்த்த மும்வயிற்றை
கொள்ளுபித்த வாதமும்போங் கூறுங்காற்-பிள்ளைகட்குச்
செப்பு கிரகமும்போந் தேனே யுலகத்துட்
டப்பிற சிவதைக்குத் தான்.

(இ-ள்.) குற்றமற்ற சிவதைக்கு, பழையமலம் உதாவர்த்தம் பித்த வாததொந்தம் பாலகிரகதோஷம் ஆகிய இவை விலகும். 1093

வெண்சிவதைவேரின் குணம்

கைப்புந் துவர்ப்புங் கலந்திருக்கும் பித்தத்தை
யிப்புவியி லுடொட்டா திவ்வளவே-செப்புதரத்
தொள்ளைக் கிருமி தொலைக்குமிகு பேதிதரும்
வெள்ளைச் சிவதைதனை விள்.

(இ-ள்.) கசப்புந்துவர்ப்புமுள்ள வெண்சிவதை, பைத்தியகோபத் தையும் மலாசயக்கிருமியையும்போக்கும். விரோசனத்தைத்தரும். ()

கருஞ்சிவதைவேரின் குணம்

காரமுடன் கைப்புண்டாங் காணுவெலி விடத்தைப்
பாரவனற் குன்மத்தைப் பற்றறுக்கும்-பாரிற்

Digitized By Roja Muthiah Research Library

றெரிஞ்சுரைத்தோம் பேதிதருந் தேன்மொழியே கேளாய்
கருஞ்சிவத்தைக் கந்தமது காண்.

(இ-ள்.) தேன்மொழியாளே! காரமும் கசப்புமுள்ள கருசிவதை அறிவதற்கரிய எலிவிஷத்தையும் பித்தகுன்மத்தையும் நீக்கும். விரோசனத்தைச் செய்யும். 1095

நேர்வாளக்கோட்டையின் குணம்-இதுவே நேபாளம்

ஓதிலுரதத் தூறுமலம் பன்னோய் விலகும்
பேதி மருந்திற் பெரிதாகும்-வாதமறுங்
கூர்வாளை யொத்தவிழிக் கொம்பனையே பண்டிதர்சொன்
னேர்வாளக் கொட்டைதனை நீ.

(இ-ள்.) பேதிமருந்தில் முக்கியமாய் நேர்வாளப் பருப்பால் மலாசயப்பழையமலமும் அதைப்பற்றிய பலப்பிணிகளும் வாதநோயும்போம்.

வாளப்பருப்பு சிலநோய்க்கு ஆகும் ஆகாதேனல் விருத்தம்

உரைத்திடு வாதநோய்க்கு முறைகெடு விடஞ்சந்நிக்கு
நிறைத்திடு சூலேகுன்மம் நீடிடுமலக் கட்டிற்குங்
கரைத்திடு வாளந்தன்னை கதித்திடு மேகத்திற்கு
மறைத்திடு பித்தத்தோர்க்கு மகற்றிய வதனைத்தானே.

(இ-ள்.) வாளப்பருப்பை வாதரோகம் விஷம் சந்நிபாதம் தேகக்குடைச்சல் வயிற்றுநோய் மலபந்தம் ஆகிய நோய்க்குபயோகப்படுத்தலாம். அதிமேகநீரையும் பித்தநோயையும் உடையவர்கட்கு நீக்கவும். ()

நீரடிமுத்தின் குணம்-வெண்பா

நீரடி முத்திற்கு நீங்கா கிரந்திகுஷ்டம்
போரிடு வாதவினை போகுங்காண்-காரடுக்கு
மென்குழலாய் பித்த மிகுமனல முண்டாகு
முன்கிளர் நமைச்சலறு முன்.

(இ-ள்.) மெல்லிய கூந்தலையுடையாளே! நீரடிமுத்துக்கு தீராச்சிரங்கு பெருநோய் வாதரோகம் தினவு இவை நீங்கும். பைத்தியம் உஷ்ணமு முண்டாம். 1098

செங்கோட்டையின் குணம்

கிருமி கயஞ்சூலை கிரந்தி திமிர்வாதம்
பொருமுகுன்ம முண்மூலம் புண்ணைத்-தருமா
கரிமுகக் குட்டக் கடிவிடபா கம்போ
மெரிமுகிக்குச் சகமா மெண்.

(இ-ள்.) செங்கொட்டைக்கு புழு க்ஷயம் இல்பிடிப்பு சிரங்கு சரு மத்திமிர் மகாவாதம் வாதகுன்மரோகம் உள்மூலம் விரணக்கருங்குஷ்டம் காணுக்கடி விஷபாகம் விலகும். வீரியவிருத்தியுண்டாம். 1099

தேங்காய்ப்பிண்ணுக்கின் குணம்

சொறிசிரங்கு புண்ணுமாந் தோலாக் கரப்பான்
வறுவாகு மேனியெல்லா மாதே-சிறுக
வயிற்றிற் புழுவினங்கண் மாறு துதிக்குஞ்
சயத்தேங்காய்ப் பிண்ணுக்காற் சொல்.

(இ-ள்.) பெண்ணே! தேங்காய்ப் பிண்ணுக்கினல் நமைச்சல் சிரங்கு விரணம் நீங்காத கரப்பான் மலாசயக்கிருமிகள் இவையுண்டாம். ()

எள்ளுப்பிண்ணுக்கின் குணம்

உள்ளிற்புண் ணுங்கிரந்தி யூரலுமிகக் கிளைத்தே
யெள்ளின் பிண்ணுக்குக் கெழும்புங்காண்-விள்ளும்
கரப்பான் விரணங் கதித்த நீர்மேக
முரப்பாகு நாளு முறை.

(இ-ள்.) எள்ளுப்பிண்ணுக்கு தாதுவைப்பற்றிய விரணம் சிரங்கு நமைச்சல் கரப்பான் புண் சலமேகம் இவை விளையும். 1101

வேப்பம்பிண்ணுக்கின் குணம்

சந்நியுடன் வாதத் தலைநோய்போம் வாதமறும்
முன்னின்ற தோஷ முறியுங்காண்-பண்ணுதமிழ்
வல்லவரே வேம்பின்வழி வந்தபிண்ணுக் கென்றொருகாற்
சொல்ல வையம்போமோ தொலைந்து.

(இ-ள்.) சொல்லுகின்ற தமிழ் வல்லவர்களே! வேப்பம்பிண்ணுக்கினல் சந்நிபாதம் வாதசிரஸ்தாபம் வாதரோகம் திரிதோஷம் சலாதிக்கம் இவை போகும் என்க. 1102

இலுப்பைப்பிண்ணுக்கின் குணம்

பொத்திக் கடுவனொடு புண்ணுங் கரப்பனும்போம்
வித்தைதப்பு தோஷமிவை வீறுவா-மெத்தெனவே
யெண்ணெய்க் கசிவுகளு மேகு மிலுப்பைவிதைப்
பிண்ணுக்குக் கென்றியப் பேசு.

(இ-ள்.) இலுப்பைப் பிண்ணுக்கு கடுவன் விரணம் கரப்பான் பீஜ வீக்கம் திரிதோஷம் எண்ணெய்ச்சிக்கு இவை நீங்கும். 1103

Digitized By Roja Muthiah Research Library

சாம்பிராணியின் குணம்

வாதசீதங் கண்ணோய் மாறாத சென்னிவலி
யோதமுறு பீநசத்துண் போட்டுங்காண்-பூதலத்தில்
வேம்பிது தானென்ன மிகுகசப்பைத் தானளிக்குஞ்
சாம்பிராணி சரக்குத் தான்.

(இ-ள்.) வேம்பைப்போற் கசப்புள்ள சாம்பிராணி வாதகபம் விழி நோய் நீங்காத சிரநோய் ஜலபீநசம் இவைகளை விலக்கும். 1104

கருப்பூரத்தின் குணம்

கிருமி சலதோஷங் கிளைப்புவலிப்பு சந்நி
பொருமுமந்த மங்கிபட்ட புண்ணோ-டெரிசுரங்கள்
வாந்திபித்தஞ் சீதமுறு வாதஞ் செவிமுகநோய்
சாந்திகருப்பூர மொன்றாற் சாற்று.

(இ-ள்.) கருப்பூரத்தினால் கிருமி நீரேற்றம் இசிவு சந்நிபாதம் வாதாலசகம் தீப்புண் கோரசுரம் சர்த்திபைபித்தியம் சிலேஷ்மவாதம் கர்ணசூலை சிலேஷ்மமுபாகரோகம் ஆகிய இவைபோகும். 1105

பச்சைக்கருப்பூரத்தின் போதுக் குணம்

அட்டகுன்மஞ் சூலை யணுகாது வாதமொடு
துட்டமேகப் பிணியுந் தோற்றாவே-மட்டலறுங்
கூந்தன் முடிமாதே கொடிய கபம்போகுஞ்
சார்ந்த பச்சைக்கர்ப்பூரத் தால்.

(இ-ள்.) தேன்பொருந்திய கூந்தலை யுடையவளே! பச்சைக்கருப் பூரத்தினால் 8-வித குன்மங்கள் கீல்களில் குத்தல் வாதநோய் சீழ்ப் பிரமேகம் சிலேஷ்மகோபம் இவை நீங்கும். 1106

பச்சைக்கருப்பூரத்தின் பேதம்

பச்சைக்கருப்பூர வகையில் ஈசன் வீமன் பூதாச்சிறையன் என மூவிதப் பச்சைக்கற்பூரங்கள் உண்டு. 1107

ஈசன் என்னும் பச்சைகருப்பூரத்தின் குணம்

ஈசனென்னும் பூரம் வெண்மையுங் காரமுமாம்
பேசரிய சீதமுஷ்ணம் பித்தமயல்-வீசுகின்ற
பீநசமுட் டாகமிவை பேர்த்துவிடுங் காந்தி
யானதனு வசிய மாம்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) வெளுப்பும் காரமும் தளதளப்பும் உள்ள ஈசன் என்னும் பச்சைக்கருப்பூரம் வசியத்திற்காகும் சிலேஷ்மசுரம் பையித்தியம் மயக்கம் நாசிநோய் தாகரோகம் ஆகிய இவைகளைப்போக்கும். 1108

வீமன் என்னும் பச்சைக்கருப்பூரத்தின் குணம்

வீமனெனுங் கர்ப்பூர மேகவெண்மை யாயிருக்குஞ்
சேமமுறுங் குளிர்ச்சி தின்றக்கா-னுமருசி
நோயகலுந் தாகமறு நுண்பேதியு மாகுந்
தூயமதி முகத்தாய் சொல்.

(இ-ள்.) மதிமுகமாதே! அழுக்கு வெண்மைகலந்த மேகநிறம் உள்ள வீமன் என்னும் பச்சை கருப்பூரத்தினால் கந்ததாளிநோயும் தாகரோகமும்போம். சரீரசௌக்கியமும் குளிர்ச்சியும்அற்பவிரேசன மும் உண்டாம். 1109

பூதாச்சிறையன் என்னும் பச்சைக்கருப்பூரத்தின் குணம்

பூதாச் சிறையனென்னும் பூரமஞ்சள் கைப்பாகுங்
கோதையர்க் காங்காசக் கொடுமேகம்-வாதாதி
யென்னுந் தனித்தோட மேறுமுத் தோடஞ்சொறியுந்
துன்னிரணமும்போக்குஞ் சொல்.

(இ-ள்.) மஞ்சள்நிறமும் கசப்புமுள்ள பூதாச்சிறையன் என்னும் பச்சைகற்பூரம் இருமல் அரித்திராமேகம் வாதபித்தகபம் என்கிற தனித்தனித் தோஷங்கள் திரிதோஷம் நமை நெருங்கிய புண்களிவை களை நீக்கும். ஸ்திரீகளுக் குபயோகிக்கின்ற ஔஷதங்களுக்குமாகும்.

புழுகுச்சட்டத்தின் குணம்-விருத்தம்

ஆசுறுக் காந்தியுண்டா மசீரண வாதம்போகுந்
தேசுதான் வளரும்பித்த சிலேஷ்மமும் விடமுமேகு
மாசறு மாயுளுண்டாம் வனசமா தருளுஞ்சேரும்
வாசமார் புழுகுச்சட்ட மகிமையை யுறைக்குங்காலே.

(இ-ள்.) மணமுள்ள புழுகு சட்டத்தினால் மந்தவாதமும் பித்த கபமும் விஷமும்போம். ஒளியும் தேஜசும் நிறையாயுளும் திருமகளரு ளும் உண்டாம். 1111

கஸ்தூரியின் போதுக்குணம்

சொல்லரும் வசியங்காந்தி சுகமுத லணுகும்பின்னு
மெல்லியார் தமக்குவாத விருத்தியாந் தலைநோயேகும்
பல்லுரு கபமுந்தீரும் பகரொணுப் பலமுமுண்டா
மல்லடர் சன்னிருட்டை மாறுங்கஸ் தூரிக்காமே.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) கஸ்தூரிக்குத் தலைநோய் கபந்தமூலம் சன்னிசுரங்கள் போம். வசியம் தேஜசு சவுக்கியம் மாதர்க்கு நாதவிருத்தி வன்மை இவை உண்டாம். 1112

கஸ்தூரியின்பேதம்-வெண்பா

கஸ்தூரி யைந்தாங் கரிகைதிலகை குளுந்தை
கைத்தபிண்டகைநா யகை முறையே-மொய்த்தசிவப்
பெள்ளு கொளுகட்டி சிறிதுபருமங் கனென
விள்ளு மிவைக்கேகும் வினை.

(இ-ள்.) கஸ்தூரி கரிகை திலகை குளுந்தை பிண்டகை நாசகை என ஐவகைப்படும். இவைகளில் கரிகை சிகப்புநிறமும் திலகைஎள்ளின் உருவமும் குளுந்தை கொள்ளினது வடிவமும், பிண்டகைகட்டி கட்டியாகவும் நாயகை சிறியபெரிய உருண்டைகளாகவும் இருக்கும். இவைக்கு சந்நிபாதம் அசீரணப்பிரசவ மலினம் முதலியநோய்கள் விலகும். ()

சவ்வாதியின் குணம்

சுரமுந் தலைவலியுந் துண்டத் தடைப்பு
முரமுந்து நோயோ டுடற்குட்-பரவிமிகக்
குத்துகின்ற வாயுவும்போங் கோதிற் சவ்வாதினுக்கு
மெத்த வசியமுமாம் வினை.

(இ-ள்.) குற்றமற்ற சவ்வாதுக்கு வாதகபரூட்சை சிலேஷ்மம் சிரஸ்தாபம் சலபீநசம் இருத்வாதம் அங்கசலவாதம் இவைபோம். வசீகரமாம். 1114

குங்குமப்பூவின் குணம்

விந்துநட்டந் தாகமண்டம் மேகசலஞ் சூலைகப
முந்துசுரம் பித்தங்கா லுச்சிவலி-முந்துகண்ணிற்
றங்குமப் பூவோடுறுநோய் சர்த்தியிவை நீங்கவென்முற்
குங்குமப்பூ வோரிதழைக் கொள்.

இதுவுமது

குங்குமப் பூவைக்கண்டாற் கூறுகொண்ட பீநசநோய்
தங்குசெவித் தோடஞ் சலதோடம்-பொங்கு
மதுர தோடந்தொலையு மாதர் கருப்ப
வுதிர தோடங்களறு மோர்.

(இ-ள்.) குங்குமப்பூவினுல் சீரண சுக்கிலம் நாவறட்சி குடல்விருத்தி மேகநீர் கீல்பிடிப்பு கபாதிக்கம் அதிரூட்சை பயித்தியம் விகுணவாதம் மண்டைவலி கருவிழியிற் படர்கின்றபூ கண்ணோவு

Digitized By Roja Muthiah Research Library

வார்த்தி சலபீநசம் கர்ணேன்மந்தம் நீரேற்றம் வாயினிப்பு பிரசவமலி னம் இவைதீரும். 1115

கோரோசனையின் குணம்

நீரழிவு மேகசுர நீங்காக் கனல்வேகங்
கூறிய வுன்மாதங் குழந்தைகணோய்-பாரகபம்
வீறு மசூரியும்போம் வேதாந் தனிலிரண்டாய்
கூறுங் கோரோசனை கட்கு.

(இ-ள்.) ஆயுள்வேதங்கூறிய இருவகை கோரோசனைகளுக்கும் மேகநீர் மேகருட்சை பித்தகோபம் உள்மாந்தம் சிசுக்களுக்குண்டா கின்ற கணமாந்தமுதலிய ரோகங்கள் சிலேஷ்மாதிக்கம் மசூரிகைப் புண்கள் இவைநீங்கும். இது மான்வயிற்றிலும் பசுவின் வயிற்றிலும் பிறப்பதாம். 1116

சந்தனத்தின் பொதுக்குணம்

கோதில்சந்தனஞ் சீதோஷ்ணங் கொண்டிருக்கு மச்சந்தம்
வாதபித்த வையமனப் பிரமை-யோதுசுரம்
மேகந் தனிதாகம் வெப்பு சொறியும்போகு
மாகந் தனக்குறுதி யாம்.

(இ-ள்.) குளிர்ச்சியும் வெப்பமும் உள்ள குற்றமற்ற சந்தனம் திரிதோஷம் சித்தப்பிரமை ருட்சை ஒழுக்குப்பிரமேகம் நாவறட்சி உட் சூடு நமைச்சல் இவைகளைப்போக்கும். சரீரத்திற்குப் பலமாம். 1117

சந்தனத்தின் பேதம்

மும்மையெனச் சொல்வார் முருகுசந்தப் பேதமவை
செம்மைமஞ்சள் வெண்மையெனத் தேர்முறையே-நன்மைதரு
முத்தமமு மத்திபமு மோதமமும் மாகுந்
தத்தைமொழி யணங்கே சாற்று.

(இ-ள்.) கிளிமொழியாளே! சந்தனத்தில் மூன்றுபேதம் உண் டென்பர். அவையாவன சிவப்பு மஞ்சள் வெள்ளை என்பனவாம். இவற் றுள் சிவப்பு மருந்துகளுக்கு உத்தமம். மஞ்சள் மத்திபம். வெள்ளை அதமம். என்றறிக. 1118

பச்சிலைக்கிச்சிலிக்கிழங்கு இவைகளின் குணம்

பச்சிலைக்குக் காந்தம் பரிமளிக்கு மவ்விலையோ
வெச்சைக் கிராந்திதனை மெய்ப்புழுவைச்-சொச்சமற
வோட்டுநற் கிச்சிலியு ணெண்கிழங்குக் கபமும்
பூட்டுமுடமும் புண்ணும் போம்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) பரிமளமுள்ள பச்சிலையானது பித்தகப விரணத்தையும் ரத்தகபம் மலம் இவைகளைப்பற்றிய கிருமிகளையும் போக்கும். இச்சி லிக்சிழங்குக்கு சிலேஷ்மநோயும் கீல்பிடிப்பும் விரணமும் நீங்கும். ()

உப்பின் பொதுக்குணம்

அளத்திலுறை நல்லுப் பனல்வாத மாற்றுங்
களத்து நோய்தன்னைக் களையுங்-கிளைத்தகப
வாசுடைய வல்லைநோ யட்டகுன்ம மும்போக்குங்
காசினியுண் மாதே கழர்.

(இ-ள்.) பெண்ணே! அளத்திலுள்ள நல்லஉப்பு உஷ்ணவாதம் கண்ட வாதரோகிணி ஆமந்திரண்டவல்லைக்கட்டி 8-வித குன்மம் இவைபோம்.

கறி உப்பின் குணம்

மந்தம் பொருமலரும் வாய்வும்போந் தீபனமாந்
தொந்தித்த வையந் தொடருமோ-சந்ததமு
மக்கினியின் புட்டி யடருங் கறியுப்பாற்
சிக்குகின்ற நீரிறங்குஞ் செப்பு.

(இ-ள்.) கறியுப்பினால் அசீரணம் வயிற்றுப்பிசம் வாதாதிக்கபம் நீரடைப்பு இவைபோம். பசியும் காமாக்கினியும் விருத்தியாம். 1121

கல்லுப்பின் குணம்

ஐயமறுஞ் சூலை யரோசிபித்தஞ் சர்த்தியொடு
வெய்யபிணி யட்டகுன்மம் விட்டேகும்-பொய்வளையே
வாதமதி தாக மலக்கட்டும் போமுலகிற்
கோதறு கல்லுப்பைக் கொடு.

(இ-ள்.) வளையலணிந்த காரிகையே! கல்லுப்பினால் கபம் குத்தல் அருசி பயித்தியம் வாந்தி உஷ்ணவாயு 8-வித குன்மம் வாதநோய் நாவறட்சி மலபந்தம் இவை ஏகும். 1122

கம்பி உப்பின் குணம்

மல்லாரு மட்டகுன்ம மாதருதரக் கட்டி
கல்லா மதைப்புநீர்க் கட்டருசு-மெல்லாமே
கம்பிகம்பி யென்றுங் கருவுண்டா மங்கிநின்ற
கம்பிகம்பி யென்றுரைக்குங் கால்.

இதுவுமது

சூதக வாயுவொடு சோணிதத்தின் வாதமும்போம்
வாதவலி குன்மமிவை மாறுங்காண்-மீதாங்

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P.M.DIST. INDIA

Digitized By Roja Muthiah Research Library

கொடிய வயிறிழியுக் கோழை கபமேகும்
வெடியுப்புத் தன்னை விளம்பு.

(இ-ள்.) பஞ்சபூத உப்பில் தேயுவின் கூறுகிய கம்பி உப்பினுல் 8-வித குன்மம் கருப்பாசயக்கட்டி சோபை மூத்திரகிரிச்சுரம் நீர்ச் சுறுக்கு சூதிகாவாதம் வாதசோணிதம் சாமானிய வாதபித்த கப குன்மங்கள் பெருவயிறு ஈளை சிலேஷ்மவாதம் இவை ஒழியும். பேரிளம்பெண் பருவங்கடந்த மாதர்கட்கும் கருப்பம் உண்டாகும். 1123

அட்டுப்பின் குணம்

பித்தங் குடிவிலகும் போராத சூலையறுஞ்
சர்த்தி யருசியிவை சாராவா-மொத்தகச்சிற்
கட்டுப்படாக் கொங்கைக் காரிகையே சங்கையற
வட்டுப்பின் பேரை யறை.

(இ-ள்.) கச்சுக்கடங்காத் தனத்தாளே! அட்டுப்பினுல் பயித்தியம் குத்தல் வாந்தி அரோசகமும் போம். 1124

வளையல் உப்பின் குணம்

துளையார் குடல்வாதந் தொந்த வாதத்தோ
டிளையாச் சுவாசமறு மின்னும்-வளையலுப்பாற்
குன்மவலி சூலைவெப்பங் கூறுப்பிலிக மிவை
சென்மம்விடுத் தோடுமெனத் தேர்.

(இ-ள்.) வளையலுப்பினுல் ஆந்திரபித்தவாதம் வாதபித்தம் இரைப்பு வயிற்றுநோவு கீல்பிடிப்பு சுரம் பிலீகம் இவைபோம். 1125

இந்துப்பின் குணம்

அட்ட குன்மமந்த மசிர்க்கரச்சூர் சீதபித்தந்
துட்டவைய நாடிப்புண் ணோடங்கள்-கெட்டமலக்
கட்டுவிட விந்துப்பைக் காமியநோய் வன்கரப்பான்
விட்டுவிட யிந்துப்பை விள்.

இதுவுமது

சென்னி கண்ணுபற்றூர் செவிகள்கண்டம் பகநோய்
சந்நியாசங் காசந் தாகமிரைப் புன்னிரத்த
மூலஞ் சிலந்திநளி மூடிகஞ் சூதைவலி
சூலஞ் சிதையுமிந்தாற் சொல்.

(இ-ள்.) இந்துப்பினுல் எண்விதக்குன்மம் அலசம் அசிர்க்கர கப்பித்தம் வாதிக்கம் நரம்புச்சிலந்தி திரிதோஷம் மலபந்தம் விஷம்

Digitized By Roja Muthiah Research Library

சுக்கிலம் சிலேஷ்ம உபதமசம் கடுவன் தலைவிழி நாவு தந்தமூலம் காது கழுத்து கண் யோனி இவ்விடத்து நோய்கள் சந்நியாசம் நேத்திரகாசம் தாகரோகம் சுவாசம் ரத்தமூலம் சிலந்தி தேள் எலி இவற்றின் விஷங்கள் வாதக்கடுப்பு குத்தல் இவை கெடும். 1126

பஞ்சலவணத்தின் குணம்

நீராமை யர்ப்புதமை னெஞ்சுவலி மாகுன்மம்
பேராக் கிராணி பிலீகமந்தந்-தீராக்கால்
விஞ்சவுப்பைக் குக்கிநோய் மெய்ச்சூலையும் பறக்கும்
பஞ்சவுப்பைத் தின்பையெனிற் பார்.

இதுவுமது

பஞ்சலவணம் பயித்திய குன்மம் போக்கும்
விஞ்சிய சிலேட்டுமத்தை வீழ்க்குங்காண்-கிஞ்சுகமே
தீபன முண்டாக்குந் திரிதோடம் போக்கிவிடுஞ்
சோபனமா மிம்மொழியைச் சொல்.

(இ-ள்.) கிஞ்சுகம்போல்பவளே! பஞ்ச உப்பினால் ஆமைக்கட்டி அர்ப்புதவிரணம் மார்புநோவு வலிகுன்மம் வாதகிரகணி பிலீகம் ஆமாஜீரணம் மகாவாதம் மிகவும் பொருமுகின்ற சிலேஷ்மகுணம் வேகக் குத்தல் பித்தகுன்மம் கபாதிக்கம் முத்தோஷம் இவை நீங்கும். பசியுண்டாம் என்க. 1127

கந்திஉப்பின் குணம்

உடல்கரையச் செய்துவிடு முட்டினமாம் பொல்லாக்
குடல்வாதந் தன்னைவெட்டிக் கொல்லு-மடலாருந்
தந்திமதத்த கத்தையடத் தாவுகொங்கை மாதரசே
கந்தியுப்பை நன்றாய் கழற்.

(இ-ள்.) யானைமத்தகத்தை அடத்தாவு கொங்கைகளை யுடையவளே! கந்தியுப்பானது அதிதூலரோகத்தையும் குடலண்டவாதத்தையும் போக்கும். ஆனால் வெப்பத்தை உண்டாக்கும். 1128

சவ்வர்ச்ச லவணத்தின் குணம்

சவ்வர்ச்ச மென்னுந் தனிலவணத் தாலுலகில்
வெவ்வச் சுரஞ்சூலை வெப்பமறுங்-கவ்வுகின்ற
நாடி விரணமுட னுட்பட்ட குன்மமும்போந்
தேடியனமே யிதனைச் செப்பு.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) அன்னம் போன்றவளே! சவ்வர்ச்சலவணத்தால் சுரம் இலிப்பிடிப்பிற்கிளைத்த உஷ்ணம் நரம்புக்கிரந்தி நீடித்தவயிற்று நோவு இவை ஏகும் என்க 1129

பிடாலவணத்தின் குணம்

பிடாலவண மென்றொருநாற் பேசி னுலகில்
விடாசீ ரிழிவகலு மெய்யே-விடலரிய
மந்த மகலும் வளரு மதிகபசி
கந்தமார் வார்குழலே காண்.

(இ-ள்.) மலர்குழலாளே! பிடாலவணத்தால் அதிநீரும் மந்தமும் போம். பசியுண்டாம். 1130

வெங்காரத்தின் குணம்

சொறிபுடை யெண்குன்ம நன்மை சொரியரசம்
பறிகிரணி கல்லூனம் பன்னோய்-நெறியைத்
தடங்கணங்க பங்கிருமி சர்ப்பவிடஞ் சந்நி
பிடங்கணங் கலச்சிசம்போ மெண்.

(இ-ள்.) வெங்காரத்தினால் தவளைச்சொறி புடை அஷ்டகுன்மம் தினவு ரத்தமூலம் ஒழுக்குக்கிரகணி அஸ்மரி பங்குவாதம் தந்தநோய் நாள்வழியைத் தடுக்கின்ற மூத்திரக்கிரிச்சரங்கள் கபாதிக்கம் பாம்பு புரு விஷம் சந்நிபாதம் ஆகியவை விலகும். டங்கணம்-வெங்காரம். ()

சீனக்காரத்தின் குணம்

சீனமெனுங் காரமது சீறிவரு பல்லரணை
யானைக்கால் கண்ணோ யனிலமொடு-மானிலத்திற்
றுன்மாங்கிசம் வாய்வு தோலாத வுள்ளழலை
குன்மமிவை போக்குங் குறி.

(இ - ள்.) சீனக்காரம் தந்தபிரலூனம் சிலிபதம் கஷ்தசுக்கிலம் வாதகிமிர் அதிமாமிசார்மம் வாதப்பிணி உட்சூடு குன்ம மிவைநீங்கும்.

சவுக்காரத்தின் குணம்

கரப்பானை சீதத்தைக் கண்டிக்கும் பேதி
யுரப்பாக்கும் வாயுவை விட்டோடுந்-தரைக்குள்
வழலை யெனப்பேர் வகித்த சவுக்கார
பழலைகுன்மம் போக்கு மறி.

(இ-ள்.) வழலை என்கிற சவுக்காரம் கடுவன் சீதளம் வாதகோபம் உட்சூடு வயற்றுநோவு இவைகளைப்போக்கும். விரோசனமாம். 1133

Digitized By Roja Muthiah Research Library

அப்பளகாரத்தின் குணம் 13

குடல்வாதஞ் சூலை கொடிதான வாத
மடல்புரியு மைய மறுக்கு-நெடுவயிற்றி
னுப்பிசத்தி னோடே யுயர்குன்ம நோயகற்று
மப்பிளக் கார மது.

(இ-ள்.) அப்பளக்காரம் வாதக்குடல் விருத்தி கில்லீக்கம் மகா வாதம் கபாதிக்கம் வயிற்றுப்பிசம் வாதகுன்மம் இவற்றை நீக்கும். ()

நவாச்சாரத்தின் குணம் 14

குன்மங் குடற்சூலை கொல்லு மகோதரத்தை
வன்மையுறு கல்லடைப்பை மாற்றுங்காண்-சன்மக்
கவிச்சு முத்தோடங் கனவாத நீக்கு
நவாச்சார மாதே நவில்.

(இ-ள்.) மாதே! நவாச்சாரம் வயிற்றுவலி குடலிற் குத்தல் பெறு வயிறு அஸ்மரி சரீரத்திற் புலால்வாசம் திரிதோஷம் வாதநோய் இவைகளை விலக்கும். 1135

யவாக்ஷாரத்தின் குணம் 15

குய்யன் களநா கொடிறுவா யிவ்விடநோ
யைய மிரைப்பிரும லாசனப்புண்-பையவுறு
கீடவிடஞ் சோபை கிராணியையும் பம்பரம்போ
லாடவிடு மெய்யவா க்ஷாரம்.

இதுவுமது

அட்ட குன்மஞ்சூலை யதிதூல முட்டினத்தா
லொட்டி வருவாத முதரநோய்-துட்டமந்த
நீடுகப நீரடைப்பு நீங்காப் பிலீகமிவை
யோடுமவா க்ஷாரத்தா லுண்.

(இ-ள்.) யவாக்ஷாரம் விரணப் பிரமேகம் களாகம் ஜிக்காலஜகம் தாளுகள் சுண்டிகள் ஊர்த்தவகுதம் கபவிருத்தி சுவாசம் காசம் பகந்த ரவிரணம் செந்துவிஷம் வீக்கம் வாதகிரகணி அவுதவயிற்றுவலி குத் தல் அதிதூலம் சுவாலிதவாதம் சுலோதரம் விஷாலஜகம் கபநோய் மூத்திரோச்சகம் வாதபீலிகம் இவைகளை யொழிக்கும். 1136

சத்திக்ஷாரத்தின் குணம் 16

மந்தமொடு தங்கு மலசலம் பிலீகமடி
யுந்தி வருகின்ற வொலியிருமல்-குந்தவைக்கும்

Digitized By Roja Muthiah Research Library

வாதவலி குன்ம மகோதரங் கிராணியும்போம்
மோதுசத்தி க்ஷாரத்தை யுண்.

(இ-ள்.) சத்திக்ஷாரத்தினால் மந்தாக்கினி சீரணமலமூத்திரம் சிலேத்தமபிலீகம் கோழை விழும்படி சத்தியுடன் வாராநின்ற க்ஷயகாசம் உருஸ்தம்பவாதம் வயிற்றுவலி பெருவயிறு கிரகணி இவைபோம்.

தும்பக்ஷாரத்தின் குணம்

ஈளை யுடனே யிறைப்பு வலிவாத
மாலைவிடாக் குன்மநோ யாவதும்போ-வேளையிமைப்
போதில் வெல்லும்வேழப் புருவச் சிலைமயிலே
கோதிலதும்ப க்ஷாரத்தைக் கூறு.

(இ-ள்.) மதனை யிமைப்போதில் வெல்லும் வில்லனைய புருவமுடையவளே! தும்பகாட்சாரத்தினால் கோழை சிலேத்மசுவாசம் வாயுவிசுவு திரிதோஷகுன்மம் இவைகள் விலகும். 1138

உமிலட்சாரத்தின் குணம்

குடல்வாதஞ் சூலை கொடுங்குன்ம மோடும்
விடலரு நீர்க்கட்டும் விலகு-மடவார்
கமல வதனக் கனங்குழலே நாளு
முமிலிட் சாரத்தை யுரை.

(இ-ள்.) தாமரைமலர்போன்ற முகத்தையும் மேகம்போன்ற கூந்தலையு முடையாளே! உமிலிட்சாரத்தினால் வாதகுடல்விருத்தி குத்தல் வாதகுன்மம் வாதமூத்திரக்கிரிச்சரம் ஆகியவைவிலகும். 1139

துத்தின் குணம்-இதுவே மடல்துத்தம்

முற்றிற குறிப்புண் முளைவிரணஞ் சென்னிதனைப்
பற்றிநின்ற வாதம் படர்கரப்பான்-சுத்தவிழிக்
காசங் கணம்பில்லங் கண்ணோய்க் குந்தத்தொலையும்
வாசமிகு துத்தத்தால் வாழ்த்து.

(இ-ள்.) துத்தத்தினால் அரிசோரோகம் முளைகளுள்ளபுண்கள் வாதிரசஸ்தாபம் கரப்பான் கருவிழிமந்தநரகாசம் சுழிகணம் இமைப்பில்லநோய் கண்ணோய் குந்தரோகம் ஆகியவைவிலகும். 1140

துரிசின் குணம்-இதுவே மயில்துத்தம்

புண்ணாற்றுங் காமியத்தின் புண்ணாற்றுங் கண்ணோயை
விண்ணேற்று முத்தோட வீறடக்குஞ்-சண்ணுகின்ற
வாந்தியொடு பேதிதரும் வாய்நோய் சுரந்தணிக்குங்
காந்தி தருந்துரிசி காண்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) துரிசி வாதாதிதோஷவிரணம் அவமந்த குய்யவிரணம் கண்ணோய் திரிதோஷம் சிலேத்மமூகபாகம் வாதகிதசுரம் இவைகளை நீக்கும். வமனம் விரோசனம் தேஜசு இவைகளை யுண்டாக்கும். 1141

அன்னபேதியின் குணம்

மூளைவிரணஞ் சூலைமந்த முட்டாமைக் கட்டி
விளையறன் மகோதரநோய் வீட்டும்-வளைமலைபோற்
காட்டு மன்னந்தன்னை கணத்திச் சலமாக்கி
காட்டுமன்ன பேதியது காண்.

(இ-ள்.) அன்னத்தை நீராய்க்கரைக்கின்ற அன்னபேதி மூளை கட்டிகுத்தல் அசீரணம் பாய்கின்ற ஆமைக்கட்டி வீறியசலோதரம் இவைகளை நீக்கும். 1142

மாங்கிசபேதியின் குணம்

துன்மாங்கிசங் கரைக்குஞ் சோபை யழலையொடு
வன்மைமிகு சூடுகப மாற்றுங்கா-ணன்மயிலே
யொப்பறு பிலீகமென வோதுகட்டி யைக்கொடுக்குஞ்
செப்பரிய மாங்கிச பேதி.

(இ-ள்.) நல்லமயில் போல்பவளே! மாங்கிசபேதி விரணாதிகளின் துர்மாமிசம் வீக்கம் உள்வெப்பம் கீல்பிடிப்பு கபதோஷம் பிலீகக்கட்டி இவைகளை விலக்கும். 1143

அம்பரின் குணம்

அளகமுள வாரமிர்தே யாண்மையை யுண்டாக்கும்
பளபளென மெய்யுரப் பாக்கும்-குளகுளத்த
புண்ணுற்று மம்பர் பொரிகரப்பனைப் போக்கும்
விண்ணோர்க்கும் வாசனையாம் விள்.

(இ-ள்.) அளகத்தையுடைய ஆரமிர்தனையாளே! பரிமளமுள்ள அம்பர் சுக்கிலவிருத்தியும் தேஜசையும் பலத்தையுந்தரும். அளிவிர ணத்தையும் கரப்பானையும் நீக்கும். 1144

குந்திரிக்கத்தின் குணம்

காச சுவாசங் கனத்த மேகக்கட்டி
வீசு விடக்கடி விறுச்சுகுட்டம்-பேசு
படர்தா மரைசிரங்கு பண்டை விரணங்க
ளிடர்செய்யிற் குந்திரிக்க மேந்து.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) குந்திரிக்கத்தினல் இருமல் இரைப்பு மேகம் பிடகம் பல விஷம் கிருஷ்ணகுஷ்டம் படர்தாமரைக்கிரந்தி நீடித்தசிரங்குகள் இவை போம். 1145

குங்கிலியத்தின் குணம்

பெரும்பாடு மேகம்போம் பேரா துடலி
லரும்பிய புண்ணுற்று மிவையல்லாற்-றரும்பா
கெலும்புருக்கி புண்சீழு மேகு முலகிற்
சலம்பருகுங் குக்கிலியத் தால்.

(இ-ள்.) நீரையிழுக்கிற குங்கிலியத்தால் அசிர்க்கரம் தந்திமேகம் இளைக்கிறவிரணம் அஸ்திசிராவம் சீழ்விரணம் இவைவிலகும். 1146

வெள்ளைக்குங்கிலியத்தின் குணம்

வெள்ளை யளிந்த விரண நாபிக்கமலத்
தொள்ளை விரணமேகந் தோற்றுகினு-முள்ளே
வருவரசே மேற்புண் வரினுஞ் சுவேதச்
சருவரச மேற்பழியைச் சாற்று.

(இ-ள்.) வெள்ளைக்குங்கிலியத்தால் மேகத்தாற் பிறந்தநாளப் புண் உந்திக்கமலவிரணம் சீழ்மேகம் உள்மூலவிரணம் இவை நீங்கும். சருவரசம்-குங்கிலியம். 1147

குக்கில் குணம்

காததர நாசிநோய் கட்டிகடி மேகப்புண்
வாதவித் திரஞ்சூலே வன்குநக-மோதிவையித்
திக்கி விருக்கத் திடமுளவோ வுபயக்
குக்கி விருக்கநமக் குள்.

(இ-ள்.) கருமை செம்மை என்னும் இருவிதக்குக்கிலால் கர்ணபூதி திரிதோஷம் ஒஷ்டம் கிராணிபாகம் பிடகம் காணுவிஷம் மேகரணம் வாதவித்திரிதி கில்பிடிப்பு நகங்களைப்பற்றிய விரணம் இவைபோம். ()

அரக்கின் குணம்

குட்ட மசிர்க்குபித்தங் குன்மமிரைப் பென்புருக்கி
பட்டிடு புண்ணுசச்சூர் பங்கநோய்-கொட்டோ
ராக்கரக்குஞ் சந்நிசுர மையமிவைக் கெல்லா
மாக்கரக்கு நூலே யறி.

(இ-ள்.) அரக்கு குறைநோய் அசிர்க்கரம் சிலேஷ்ம பயித்தியம் வயிற்றுநோய் சுவாசம் அஸ்திசிராவம் சத்தியோவிரணம் இருதாத விரு தவாதம் முடம் சந்திகசந்நிபாதம் கபாதிக்கம் இவைகளைகெடுக்கும். ()

Digitized By Roja Muthiah Research Library

மெழுகின் குணம்

அறைபக்க வாத மதைப்பைய மூதை
குறைவிந் திதழ்நோய் தேள்கூளி-கறையைப்
புழுகெடுக்க வங்கமுறு புண்ணிடிப்புண் டீப்புண்
மெழுகெடுக்க வாங்கமனு மெய்.

(இ-ள்.) மெழுகினால் பாரிசவாயுவு வீக்கம் கபநோய் வாதகோபம் சுக்கிலநஷ்டம் சிலேஷ்மோஷ்டரோகம் தேள்விஷம் பைசாசம் குஷ்டம் ஆகந்துகவிரணம் இவையேகும் என்க. 1150

பலவகை மெழுகின் குணம்

பொன்மெழுகு மாரல்சுரங் கண்ணோய் போக்கிவிடு
நன்மெழுகு கண்ணோய்க்கு நஞ்சாகு-முன்னுங்
கொசுமெழுகு நாளுங் குறித்த வசியத்திற்
கிசையு மெந்திரத்திற்கு மெண்.

(இ-ள்.) பொன்மெழுகு திரியாகிய சுரத்தையும் கண்ணோயையும் போக்கும். நல்லமெழுகு விரணத்தில் உண்டாகின்ற நோயை நீக்கும். கொசுமெழுகு வசியத்திற்கும் யந்திரத்திற்கும் உதவும். 1151

அப்பிரகத்தின் குணம்

அப்பிரகமான் றைந்தா லண்ட மகோதாமு
வெப்பிர மியங்கலமுன் னீரிழிவும்-வெப்பூரற்
பேதமும் போகாமேகப் பித்தமுங் கண்ணோயும்பல்
வாதமும் போந்தா துவுமா மால்.

(இ-ள்.) அப்பிரகத்தில் குடலண்டம் பெரிவயிறு பிரமியம் அதிமூத்திரம் சுரம் நமைகள் மேகபயித்தியம் கண்ணோய் பாதாக்ஷேபக முதலிய வாதரோகங்கள் இவை ஒழியும். வீரியவிருத்தி உண்டாம். ()

கல்நாரின் குணம்

காசபித்தம் வாதம் கடுப்பீறு நோயெரிவு
வீசுசர்த்தி நீரடைப்பு விந்துநட்டம்-பேசுமசை
தின்னுரைக் கூவுமந்தந் தீக்குடர்க்கல் தாகமிவை
கன்னுரைக் கூவவிடுங் காண்.

(இ-ள்.) கல்நாரினால் பித்தகாசம் வாதரோகம் பற்குடைச்சல் பல்லரணை நீர்க்குறி எரிச்சல் பித்தவாந்தி முத்திராதீதம் க்ஷீதசுக்கிலம் அஜீரணம் பித்தக்குடல்வாதம் பித்ததாகம் இவை நீங்கும். 1153

Digitized By Roja Muthiah Research Library

சகஸ்திரவேதியின் குணம்

அத்திசுரந் தாதசுர மசான விரத்தமொடு
குத்திவரு வாந்திகபங் கூறுசந்நி-மெத்த
நிகழ்த்துகண்ணோய் தாதுநட்ட நீட்டநீங்கா மேகம்போஞ்
சகத்திர வேதிக்குத் தளர்ந்து.

(இ-ள்.) சகஸ்திரவேதிக்கு அஸ்திசுரம் தாகபூர்வசந்நி ரத்தபேதி வமனம் கபாதிக்கம் சந்நி கண்ணோய் வீரியக்குறைவு பிரமேக மிவைபோம். 1154

கல்மதத்தின் குணம்

கண்டபடி பிணிமேகங் கல்லோடுநீ ரூனடைப்பு
வண்டற் கிரிச்சுரநோய் மாபிரமி-யுண்டலினாற்
பன்மதஞ்சேர் தாதுநட்டம் பன்னுமிந்த நோய்க்கூட்டத்துட்
கன்மதஞ்சே ரக்கரக்குங் காண்.

(இ-ள்.) கன்மத்தினால் அரைபுகரோகம் தந்துமேகம் அஸ்மரி மூத்திரபிந்து வாதவஸ்தி சதையடைப்பு தடித்த மூத்திரகிரிச்சரம் வாதப்பிரமியம் அதிகொழுப்பினாற்பிறந்த தாதுநஷ்டமிவை தீரும். ()

சிலாசத்தின் குணம்-இதுவே கற்பூரசிலாசத்தமாம்

கல்லடைப்பு மேகங் கனதூலம் வித்திரிதி
சொல்லடைக்கு நீரூரகற் சோணிதந்தான்-மெல்லிடையார்க்
கில்லகச்சத் தில்லையெனு மிந்திரிய நட்டமுமாங்
கல்லகச்சத் தில்லையெனுங் கால்.

(இ-ள்.) சிலாசத்தினால் அஸ்மரி சீழ்மேகம் அதிதூலம் வித்திரிதி கிரிச்சரமா சோணிதவாதம் சந்ததிக்கு ஏதுவாகிய விந்துநஷ்டம் இவைபோம். இதுமலைக்குள்ளிருந்து வருதலால் கல்லகச்சத்தென்றார்.

கோமூத்திரசிலாசத்தின் குணம்

கோமூத் திரசிலா சத்தாற் குறுகிப்
போமூத்திர மெரிவுட் புண்மேகம்-நாமேவு
வெப்புதிர வெப்புமறும் வீழிமுனி விம்பந்
துப்புமஞ்சு மெல்லிதழாய் சொல்.

(இ-ள்.) மெல்லிதழாய் கோமூத்திர சிலாசத்தால் மூத்திரகிரிச்சரம் நாளத்தெரிவு உள்விரணம் பிரமேகம் நாவிற்சூடு ரத்தக்கொதிப்பு இவை நீங்கும் என்க. 1157

சிலாரசத்தின் குணம்

தலைவலி நீரேற்றந் தனுர்வாதஞ் சந்நி
சூலைகுலையுந் தும்மற் குடிபோஞ்-சிலைநுதலே

Digitized By Roja Muthiah Research Library

மாசுடைபி வஞ்சுநிறம் வாய்க்திருப்ப தன்றிமணம்
வீசு சிலாரசத்தால் விள்.

(இ-ள்.) சிலேநுதலாளே! மலினமேகநிறமும் மணமுமுள்ள சிலா ரசத்தால் சிரஸ்தாபம் ஜலதோஷம் தநுர்வாதம் சந்நி அதிதும்மற் பீன சம் இவைகள் போம். 1158

நண்டுக்கல்லின் குணம்

நீரருக நீரடைப்பு நீங்காப் பெரிவயிறு
நீரொழுகு மேகம்வெட்டை நீங்குங்கா-ணாரமிர்தே
யைய மறுக்கு மரியதொரு நண்டுக்கல்
செய்யுங் குணமிதுவாந் தேர்.

(இ - ள்.) ஆரமிர்தம்போன்றவளே! நண்டுக்கல் க்ஷிணமூத்திரம் அஸ்மரி மகோதரம் சலப்பிரமேகம் வெள்ளைவிழல் கபர்திக்கம் ஆகிய இவைகளை விலக்கும். 1159

காவிக்கல் கடல்நுரை-இவைகளின் குணம்

அடலுறுநற் காவிக்க லட்சுநோய் மேகம்
வெடியக்கி வாந்திபித்தம் வீட்டுங்-கடனுரையே
நேத்திரநோய் விரண நீடுகபங் குன்மமிவை
தீர்த்திடுங்காண் டப்பாது செப்பு.

(இ-ள்.) காவிக்கல் கண்ணோவு மேகநீர் கிளை அக்கிபித்தவமனம் இவைகளை நீக்கும். கடல்நுரை விழிநோய் புண் க்ஷயம் குன்மம் இது களை நீக்கும். 1160

சுக்கான்கல்லின் குணம்

விரணந் தனையாற்றும் விறுசந்நி நீக்கு
மரணஞ்செய் வாயுவையும் வாட்டுங்-கரணத்தின்
மிக்கான வின்பவருண் மெல்லியலே தூயவெள்ளைச்
சுக்கா னெனுங்கல்லது சொல்.

(இ-ள்.) கரணங்களுக்கு மிகுந்த வின்பந்தரும் மெல்லியலே சுக் கான்கல் புண்சந்நி மகாவாதம் இவைகளை நீக்கும். 1161

நான்குவகை நிமிளைகளின் குணம்

தாதுவை வளர்க்குந் தனிப்பித்தத் தைப்போக்கு
போதுசந்நி பாதத்தை யோட்டுமகா-ணேத
வொருநா வுறுதே யுயர்பொன் முதலா
மொருநால் வகைநிமிளை யும்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) பொன் வெள்ளி வெண்கலம் செம்பு என்கிற நான்குவித நிமிளைகளும் விந்துவை வளர்க்கும். அதிபித்தத்தையும் சந்நியையும்நீக்கும்.

வெள்ளைச்சங்கின் குணம்

கசிவா மிரத்தபித்தங் கண்ணோய்க ளேகும்
பசியாரும் வாதம் பறக்கு-மிசிவுடனே
தங்குமு ளைவிரணந் தானகலுமே வெள்ளைச்
சங்கமது வுண்டேயிற் றுன்.

(இ-ள்.) வெண்சங்கத்தினால் உதிரபித்தம் விழி ரோகங்கள் வாததோஷம் இசிவு முளைக்கட்டி இவை நீங்கும். தீபனம் உண்டாம். 1163

முத்துச்சிப்பின் குணம்

ஈளை விலகு மிருமல் குடியோடுங்
கோம்விழு நங்காய்நீ கூறக்கேள்-வாளுடலிற்
கப்பிவரு மேகக் கட்டியையம் போமுகத்தின்
சிப்பிதனைக் கண்டவிடத் தே.

(இ-ள்.) முத்துச்சிப்பினால் கபக்கோழை காசம் க்ஷயரோகங்கள் மேகப்பிடகம் சிலேஷ்மாதிக்கம் ஆகியவைகள் விலகும். 1164

பலகறையின் குணம்-இதுவே கவடி

மாரந்தந் தங்கிரணி மாவிடச்சுரங் கண்ணோய்
தொந்தம் பரிநாமச் சூலைகய-மிந்த
வுலகறையக் காலொடிவை யோடு நரைத்த
பலகறையைக் காணினியம் பார்.

(இ-ள்.) வெண்பலகறையினால் அஜலம் தாகம் கிராணி விஷசுரம் விஷநோய் வாததொந்தம் பலவிதக்குத்தல் க்ஷயம் கபவாதம் இவை போம். நரை-வெள்ளை. 1165

கலைமான்கோம்பின் குணம்

அவயவத்தின் வெப்ப மதியத்தி மேகங்
கவிழ்திரி தோடம் பெருந்தாகங்க-ளிவைதர
னிலைக்குமோ மார்புநோய் நேத்திரநோய் நீங்கும்
கலைக்கொம்பாற் பேயுமிலைக் காண்.

(இ-ள்.) கலைமான்கொம்பினால் கைகால்களில் அரிவு அஸ்திமேகம் முத்தோஷம் விதாகங்கள் மருமவலிகண்ணோவு பிசாகம் இவை ஏகும்.

சோகி பீங்கான் மிருகக்கோம்பு பல் எலும்புகளின் குணம்

சோகிபீங் கான முக்குந் துன்மாங்கி சந்தனைக்
கோகுதிரை யொட்டை குரங்கமுவா-வேகப்

Digitized By Roja Muthiah Research Library

பலமிருகப் பல்லெலும் பல்விழிநோய் தீர்க்கு
நலமிகு மாதே நவில்.

(இ-ள்.) நன்மைமிகுந்த மாதே! பலகறை பீங்கானிவைகள் விருத்திமாமி சாதிநோயையும் பசு குதிரை ஒட்டை குரங்கு யானை பன்றி முதலிய பல மிருகங்களின் நகம் எலும்புகளும் பற்பல விழிப்பிணியையும் நீக்கும். சோகி-பலகறை. 1167

பஞ்சலோக ஐந்தெண்ணெய் குதிரைக்குளம்பு கழுதைக்குளம்பு எருமைக்கொம்பு இவைகளின் குணம்

பஞ்சலோகச் சார்வு பற்றறுக்குங் கண்ணோயை
யஞ்செண்ணெய் வாதசந்நி யைப்போக்கும்-விஞ்சு
குதிரைக் கழுதைக் குளம்பெருமைக் கொம்புங்
குதிரைவலி நீக்குங் குறி.

(இ-ள்.) பொன் காரீயம் செம்பு இரும்பு துத்தநாகம் என்கிற பஞ்சலோகங்கள் விழிப்பிணியையும் வேம்பு புங்கு புன்னை ஆமணக்கு என்கிற இவற்றின் ஐவித நோய்கள் வாதசந்நிகளையும் குதிரைவலியையும் நீக்கும். 1168

சீலை கம்பளம் மயிலிறகு இவ்வகைச் சாம்பலின் குணம்

அஸ்திபிர மேகம்போ மாடையின்றன் சாம்பலுக்குத்
தத்திவரு ரத்தந் தடைப்படுங்காண்-சத்தியமாய்
கம்பளச் சாம்பல்சந்நி காதுமைஞ்ஞைத் தோகைபஸ்பங்
கும்புவிக்கல் வாந்தி கெடுக்கும்.

(இ-ள்.) சீலைச்சாம்பலுக்கு என்புருக்கியும் கிறிரத்தமும் போம். கம்பளச்சாம்பல் சந்நியையும் மயிலிறகுச்சாம்பல் விக்கல் சர்த்தியையும் நீக்குமென்க. 1169

ஒட்டறையின் குணம்-இதனை ஒட்டடையென்பர்

குட்டங்கள் நோய் குறுதிமூலம் பேதி
யுட்டங் கசீரணமுள் ளுருகுன்மங்-கெட்டசிரா
வற்புதம்புண் சீதசுர மாப்பவகி நஞ்சிவைகள்
புற்புதம்போ லொட்டறையாற் போம்.

(இ-ள்.) ஒட்டறையால் குறைநோய் சிலேஷ்மங்கள் கண்டரோகம் ரத்தமூலம் அதிசாரம் மந்தம் சிலேஷ்மகுன்மம் நரம்புக்கிரந்தி நடுக்கற்சுரம் சிறுபாம்புவிஷம் ஆகியவைகள் போகும். 1170

இந்திரகோபப்பூச்சியின் குணம்

கருமேகந் தாதுநட்டங் கக்கும்பகம் போக்குந்
தருமே நற்காயசித்தி தன்னை-வருமேக

Digitized By Roja Muthiah Research Library

சாலமுறை வாளரகத் தையலே நன்மாரிக்
காலமுரை யியலது காண்.

(இ-ள்.) மேகம்போன்ற கூந்தலாளே! இந்திரகோபப்பூச்சி, கரு மேகத்தையும் சுக்கிலக்ஷீணத்தையும் சிலேஷ்மரோகத்தையும் நீக்கும். காயசித்தியைச் செய்யும். ஈயல்-இந்திரகோபம். 1171

முசுறுமுட்டையின் குணம்

துள்ளு மடல்வாதத் துன்பமந்தம் வல்லிசிவு
தள்ளு வலிக்குழி சதக்கபநோ-யுள்ளில்
விகிறுசந்நி பாதம் விலகும் தூகத்தார்
முசுறு முட்டைக்குணத்தை முன்.

(இ-ள்.) இலுப்பைமரத்து முசுறுமுட்டையினல் மகாவாதம் மந்தம் இசிவு ஐவிதவலி நீர்க்கபநோய் சந்நி இவைவிலகும். 1172

பூநாகத்தின் குணம்

மாதனமு செய்வறட்சி மாறுமடங் காச்சந்நி
பாதவறுநோ யோடென்றும் பாறுமடல்-வாதமறு
குண்டபத மீளு மோக்காள மையமும்போம்
கண்டபத மென்னுங் கால்.

(இ-ள்.) பூநாகத்தினல் மிகவுந்துன்பத்தை விளைக்கின்ற தாக ரோகமும் 7-வித அசாத்திய சந்நிபாதசுரங்களும் ஊருஸ்தம்பமென் கிற மகாவாதமாகிய புலியினல் கவர்ந்துக் கொள்ளப்பட்ட தொடையும் ஓக்காளமும் சிலேத்மரோகமும் ஒழியுமென்க. புலிவாயில் அகப் பட்ட ஆட்டுத்தொடை மீளாததுபோல் இந்த மகாவாதத்திலகப்பட்ட மனிதர்தொடை இவ்வியாதியில் நின்றும் நீங்குவது அருமையாயிருப் பினும் இது இதைநீக்கும் என்னுந் துணிவுதோன்ற அறுகுண்ட பதம் என்றார். அறுகு-புலி, கண்டபதம்-பூநாகம். 1173

கற்பாசியின் குணம்

பண்டை மேகத்தைப் பறக்கடிக்கும் பேதிகட்டு
மண்டையெறி வாசனையி லாருங்காண்-தொண்டைக்
கனிக்குமொழி லூட்டுமிதழ்க் காரிகையே காரநற்
கனிக்குமொரு கற்பாசி தான்.

(இ-ள்.) ஆதொண்டைக் கனியினுமழகிய விதழையுடையவளே! மழையாற்பிறந்த கற்பாசி நீடித்த மேகத்தையும் அதிசாரத்தையும் நீக்கும். வாசனைத் திரவியங்களி லொன்றுகப் பொருந்தும். 1174

Digitized By Roja Muthiah Research Library

பாஷாண வகை

பாதரசத்தின் குணம்

விழிநோய் கிரந்திகுன்ம மெய்ச்சூலே புண்குட்
டழிகாலில் விந்துவி ஞலத்தை-வழியாப்
புரியும் விதியாதும் புரியினே யெல்லா
மிரியும் விதியாது மிலே.

(இ - ள்.) சிவவீரியம் என்கிற ரசத்தை ஜீவரட்சாமிர்த சாஸ்திர முறைப்படி செய்யத்தக்க சுத்தியெல்லாஞ் செய்து பிரயோகித்தால் நேத்திரநோய் நரம்புக்கிரந்தி அஷ்டகுன்மம் கீல்பிடிப்பு மகாவிரணங்கள் பெருவியாதி க்ஷீணவாதம் இவைமுதலிய ரோகங்களும் விலகும். இதைச்சொல்லாத சாஸ்திரம் யாதொன்றுமில்லே. 1175

பாதரசதோஷத்தின் குணம்-விருத்தம்

கலேயைக்கிழிக்கு மவிழ்த்தெரியுங் கல்லேத்தேடி யெடுத்தெரியு
மலேயிற்குதிக்கும் புனன்மூழ்கி மருள்சேர்பித்தந் தனேக்கொடுக்கும்
முலேயினனல்போ லுடல்வெதுப்பு மோயாவுழலே வியர்வாக்கும்
பலகாலமுமே வாய்பிதற்றும் பாதரசதோஷமு மிஃதே.

(இ-ள்.) பாதரசத்தைச் சுத்திசெய்யாமையால் வருந்தோஷங்களாவன, துணியைக்கிழித்தல் அதனே யவிழ்த்தெறிதல் கல்லாலடித்தல் மலேயினின்றுங்குதித்தல் தண்ணீரில் முழுகிமுழுகிக்கிளம்பல் மயங்கிப் பித்துக்கொள்ளல் தேகத்தில் அழலேயுண்டாக்குதல் மாருது வாயில் சலமூறல் அதிவேர்வை பெருகல் எப்போதும் பிரலாபித்தல் இவைகளாம். 1176

எண்வகைத்தோஷம் நீங்காதரசத்தின் குணம்-வெண்பா

சர்ப்பம்வங்கங் கந்திவன்னி சஞ்சல மலங்காள
மொப்புண்மந்த மெண்டோட மோட்டிரத்தத்-தைப்புசிப்பார்
கொப்புளங் குட்டங்கியெரி கோதுவிந் திளேப்பிரத்த
லப்புளமூர்ச்சைக் குமரி யார்.

(இ-ள்.) ரசத்திற்கு எண்வகைத்தோஷமுண்டு அவையாவன:— சர்ப்பம் வங்கம் கந்தி வன்னி சஞ்சலம் மலம் காளம் மந்தம் என்பனவாம். அதுகளேநீக்காமல் அந்த ரசமருந்தை யுண்பவர்கள் முறையே விரணம் பெருவியாதி தீச்சுவாலே தபித்தல் உதிரப்பசையற்ற தேகநிறம் வீரியநாசம் மரணம் சோபம் என்கிற 8-வித ரோகங்களேயும் அடைவார்கள். 1177

Digitized By Roja Muthiah Research Library

ரசாஞ்சனத்தின் குணம்

அரியர சாஞ்சனத்தா லம்புவியி லுள்ள
விரிவிழி நோயெல்லா மறையு-மருவி
வருகாமிய விரண மாறும் புண்ணூறு
மொருமா மயிலே யுரை.

(இ-ள்.) மயில்போன்ற சாயலாளே! ரசாஞ்சனத்தினால் பூபடலம் விழிப்புண் குய்யரோகப்புண் ஆறாக்கிரந்திகளும் விலகுமென்க. 1178

ரசகர்ப்பூரத்தின் குணம்

இடைவாத சூலை யெரிசூலை குன்மந்
தொடைவாளை வாதமாஞ் சோணி-யிடையாதோர்
வொக்கும் ரசகர்ப்பூர மொன்றே யளவொடுநல்
லிக்குவெல்லத் தேழுநா ளீ.

(இ-ள்.) சுத்தித்த ரசகருப்பூரத்தைப் பிணிகளின் வன்மைக் கொப்ப நல்லவெல்லத்தில் பிரமாணமாகவைத்துப் பத்தியத்தோடு ஏழு நாள் கொடுக்கச் சகனவர்த்தவாதப்பிடிப்பு பித்தசூலை வயிற்றுநோய் சிலேஷ்மவூரல் தம்பவாதம் வாதாதிக்க சோணுவாதம் இவைபோம். ()

சாதிலிங்கத்தின் குணம்

பேதிசுரஞ் சந்நி பெருவிரண நீரொடுதல்
காதிகடி காசங் கரப்பான்புண்-ணோத
வுருவிலங்க சங்கமதா யூறுகட்டியும் போங்
குருவிலங்க சங்கமதைக் கொள்.

இதுவுமது

ஆதி யிரதவுருக் காதலாற் சாதிலிங்க
மோதி லிரத்தகுண முற்றுடலிற்-றீதுபுரி
குட்டங் கிரந்தி கொடுஞ்சூலை வாதமுத
லுட்டங்கு நோய்களை யோட்டும்.

(இ - ள்.) சிவந்தசாதிலிங்கம் முதலில் பாதரச உருக்காகையால் அந்தரசகுணத்தைக்கொண்டு அதிசாரம் சூட்சை சந்நிபாதம் அற்புத புண் அதிமூத்திரம் காணுவிஷம் இருமல் கரப்பான் சிரங்கு நுணுக் காய்க்கிரந்தி மண்டலகுஷ்டம் பாமை சரீரகுத்தல் வாதநோய் அந்தர் முக ரோகங்கள் ஆகிய இவைகளை விலக்கும் என்க. 1180

சவ்வீரத்தின் குணம்

குன்மமொடு குட்டங் கொடியவனிலத் திரட்டு
துன்மாங்கிசப் பெருக்கஞ் சூலைநோய்-வன்மையுறு

Digitized By Roja Muthiah Research Library

காமியப்புண் ணாதியநோய் கண்டாற்சவ் வீரனெனுஞ்
சாமியினு மத்தையுச் சரி.

(இ-ள்.) சவ்வீரத்தினால் குன்மம் முறைநோய் மகாவாதங்கள் வளருகின்ற துர்மாமிசங்கள் கீல்பிடிப்பு அரிசோரோகம் இவை நீங்கும்.

நெல்லிக்காய்கந்தகத்தின் குணம்

நெல்லிக்காய் கந்திக்கு நீள்பதினெண் குட்டமந்தம்
வல்லை கவிசைகுன்ம வாயுகண்ணோய்-பொல்லா
விடக்கடி வன்மேகநோய் வீறுசுரம் பேதி
திடக்கிரக ணீபம்போநந்தேர்.

(இ-ள்.) நெல்லிக்காய்க் கந்தகத்துக்கு 18-குஷ்டம் அலஜம்வல்லை கட்டி கவிசை மகோதரம் குன்மம் குந்தநோய் மகாவிஷ மேகவியாதி வாதசுரம் வாதாதிசாரம் கபகிரகணி கபாதிக்கமிவைபோம். 1182

வாணகந்தகத்தின் குணம்

வாணக் குழாய்க்கந்தி வாசனையை கண்டவுடன்
காணக் கிருமிசொறி காணுவாந்-தோணும்
பெருவியாதிக் கூட்டம் பேருமத னூலின்
மருவியாழும் கொடியே வாழ்த்து

(இ-ள்.) மதனநூலின் வகைகளறிந்தவளே! வாணமருந்துக்கான குழாய்கந்தகத்தால் ரசாத்ததாதுகளிற் பிறந்த சிறுகிருமி நமை குஷ்டங்கள் இவைபோம். 1183

தாளகத்தின் குணம்

தாளகத்தின் பேருரைக்கத் தாலுகவு நோய்குட்டம்
நீளக் குளிர்க்காய்ச்ச னீர்பக்கங்க-ளாளகங்கொள்
துட்டப் பறங்கிப்புண் சூழழுகண் மண்டைநோய்
கிட்டப் படுமோ கிளத்து.

(இ-ள்.) தாளகத்தினால் அதிசித்வாரோகம் தாளுகச்ச கபநோய் குஷ்டரோகம் நடுக்கற்சுரம் க்ஷயகாசசுவாசம் துஷ்டவிரணம் ஜலஸ்ராவம் சிரஸ்தாபரோகம் ஆகிய இவைகள் விலகும் என்க. 1184

சிவந்த அரிதாரத்தின் குணம்

சிவந்த அரிதாரமது செஞ்சிலைபோற் காட்டு
முவந்தனை யுண்முறையோ டுண்டா-லிவர்ந்தாழ்
கரங்களிற் மாவாதமுடற் சூலைநமை குட்ட
மிரங்குமென நாளு மிசை.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) சிவந்தகல்லைப்போலிருக்கின்ற அரிதாரத்தைச் சுத்தி செய்து கிரமமாகவுண்டால் குளிர்சுரம் மாவாதரோகம் சரீரகுத்தல் தினவு கிடிபகுஷ்டரோகம் ஆகிய இவைகள்போம் என்க. 1185

மடல் அரிதாரக்காடேகள், மனோசிலை இவைகளின் குணம்

மடலரி தாரத்தில் வருங்கர டிரண்டு
முடல்விடங் களைக்களையு முண்மை-கொடியகுட்டம்
காய்ச்ச லடுக்கலஜ கள்ளியிரைப் புச்சிலந்திப்
பேச்சறு மனோசிலைக்குப் பேசு.

(இ-ள்.) மடலரிதாரத்தில் பலவகை கட்டியென்கிற 2-விதக்காடுக ளாலும் உடலிலூறிய விஷங்கள் நீங்கும். மனோசிலையில் சருமகுஷ்டம் குளிர்சுரம் அஜகள்ளிகாரோகம் சுவாசம் சிலந்திவிஷம் இவைபோம். ()

மடலரிதாரத்தின் குணம்

ஈளை யுடனே யிருமல் குடிவிலகுங்
கோழை மலமகலுங் கொம்பனையாய்-நாளு
மடலூறு கயங்கரப்பா னுறுப் புண்ணும்போம்
மடலரி தாரத்தை மதி.

(இ-ள்.) புட்பக்கொம்பனையாளே! மடலரிதாரத்தினால் தமகசுவா சம் காசம் சிலேஷ்மமலாவாத்தம் யக்ஷம் ரோகம் கரப்பான் துஷ்ட விரணம் இவை ஏகும். 1187

அரிதாரத்தின் குணம்

காச முடனே கயநோய் கபவாதம்
பேசரிய குன்மமெட்டும் பேருங்காண்-மாசகன்று
கிற்று மதிநுதலே கேளாயுள் வேதமது
சாற்று மரிதாரத் தால்.

(இ-ள்.) பிறையையொத்த நெற்றியையுடையவளே! அரிதாரத் தினால், க்ஷயகாசம் ரோகராஜம் சிலேஷ்மவாதரோகம் அஷ்டகுன்மம் ஆகிய இவைகள் போகுமென்க. 1188

பொன் அரிதாரத்தின் குணம்

மந்தாரத் தாலே வளருஞ் சுவாசநோ
யுந்திவரு தீச்சுரநோ யோடுங்காண்-முந்து
தொனிக்கயஞ் செய்யான்கடியுந் தோற்குட்டு மேகுந்
தனிப்பொன் னரிதாரத் தால்.

(இ-ள்.) பொன்னரிதாரத்தினால் மந்தாரசுவாசம் வாதசுரம் சத் திக்கிறக்ஷயம் செய்யான் விஷம் சருமதலகுஷ்டம் இவை நீங்கும். ()

Digitized By Roja Muthiah Research Library

மிருதாரசங்கியின் குணம்

மிருதார சிங்கெனவே மெல்ல வுரைத்தாலு
முருவா ருடைகரப்பா னோடு-மொருவிதமோ
சாலச் சிரங்குபுண்ணுந் தப்பாம லாறிவிடும்
வேலொத்த கண்மயிலே விள்.

(இ-ள்.) வேலொத்த கண்ணாளே! மிருதாரசிங்கியினால் உடம்பெங்கும்பரவுகின்ற பித்தவிரணம் கரப்பான் கிரந்திகூட்டம் மகாவிரணம் இவை விலகுமென்க. 1190

வெள்ளைப்பாஷாணத்தின் குணம்

வெள்ளைப் பாஷாணம் விடங்கடி தீரும்பூசங்
கொள்ளைச் சுரந்தோடம் கோரசன்னி-தொள்ளையுறு
நாசிப்புண் வாய்ப்புண் ணளைகிரந்தி போமுண்ண
வாசிக்குங் கும்பமுலையாய்.

(இ-ள்.) பரிமளிக்காநின்ற கும்பமுலையாளே! வெள்ளைப்பாஷாணத்தைப் பச்சையாக அரைத்துக் கடிவாயில் பூசினால் சர்ப்ப விஷந் தீரும். கிரமமாகவுண்ணில் கபசுரம் திரிதோஷசந்நிபாதம் துஷ்டபீநசம் முகபாகம் சீழ்ப்புண் இவை நீங்கும். 1191

கௌரிபாஷாணத்தின் குணம்

அவுரியொடு பாகலிவை யாற்சுத்தி செய்த
கவுரி பாஷாணத்தைக் கண்டாற்-சவுரியஞ்செய்
வாதநோய் மந்தமொடு வந்தசுரங்க ளெலாம்
காதிவிழுந் தோடுமெனக் காண்.

(இ-ள்.) அவுரி பாகல் இவ்விலைகளின் சாற்றால் சுத்தித்த கௌரி பாஷாணத்தினால் மகாவாதமும் அசலமும் வாதகபசுரங்களும்போம். ()

நீலாஞ்சன பாஷாணத்தின் குணம்

வன்னியறு வெட்டுப்புண் மாபிரமி யக்கிச்சூர
சந்நியனல் கிடவெட்டு தாகஞ்சூ-டுன்னசிக்கு
நீங்கு நிலாஞ்சனத்தா னீடொளிதண் ணேருக்க
மோங்கு நீலக்குயிலே யோர்.

(இ-ள்.) நீலக்குயிலனைய பெண்ணே! நீலாஞ்சனத்தால் ரசவன்னி தோஷம் ஆகந்துகவிரணம் பிரமேகம் விழிப்பிணி சந்நிச்சுரம் புழுவெட்டு விதாகம் உட்சூடு ரத்தபித்தம் இவை விலகும். தேஜசு குளிர்ச்சி அழகு பலம் இவை மிகும். 1193

Digitized By Roja Muthiah Research Library

தொட்டிபாஷாணத்தின் குணம்

தொட்டிப் பாஷாணமெனச் சொன்னாற் சுரங்கிரந்தி
வெட்டிப் பார்க்கவா யிடருக்க-கிட்டிவரு
வாயுவின்றன் பெருக்குமந்த மூளைக்கட்டி யும்போ
மாயினது வாதவித்தைக் காம்.

(இ-ள்.) தொட்டிப்பாஷாணத்தினால் ரூட்சை சிரங்கு வாதாதிக் கம் அசிரணம் மூளைவிரணம் இவைபோம். இதுவாதத்தொழிற்காம். ()

பஞ்சபாஷாணத்தின் குணம்

பஞ்சபா ஷாணமெனப் பாரிலுரைத் திட்டாலும்
வெஞ்சதை யெணிப்புட்டும் வீறுங்காண்-விஞ்சுவளர்
கண்புற்றுத் தீருமதி காய்ச்சல்குளிர் மேகம்போம்
பண்புற்று மாதே பகர்.

(இ-ள்.) மேன்மையுடையாளே! பஞ்சபாஷாணத்தால் ககரம் சிலி பதமுதலிய ரோகங்கள் விழிசதைப்புற்று மிகுசுரம் நளிர்மேகம்போம்.

நவபாஷாணத்தின் குணம்

நவபாஷா ணந்தன்னை நற்சுத்தி செய்தங்
குவகையாய்ச் சிந்தூரித் துண்டா-னவமாகக்
காய மிருகுங் கனத்தநோயும் போகு
மாயுநோ யெல்லா மதி.

(இ - ள்.) சுத்தித்த நவபாஷாணத்தைச் சிந்தூரஞ்செய்து உண் ணில் தேகவண்மை உண்டாகும். மகாவாதமும் பலசுரங்களும் போம்.

உலோகவகை

பொன்னின் குணம்

அடற் றுவரவிடங்க ளங்கொளி மங்கல்
தடத்தாமுத் தோடகயங் காச-முடற்றுபஞ்
சேகையிருந் தாதுநட்டந் திட்டிநோ யீளையிவை
யீகையிருந் தாலேகு மெண்.

(இ-ள்.) பொன்னினால் தாவரவிஷங்கள் தேஜசுமருங்கல் அபிநி யாச சந்நிபாதம் பித்தக்ஷயம் தேகவெப்பு முதிர்ந்த கபதோஷம் க்ஷீண சுக்கிலம் விழிநோய் கோழைகட்டு விலகும் ஈகை-பொன். 1197

Digitized By Roja Muthiah Research Library

வெள்ளியின் குணம்

பாய்க்கூட்டங் காட்டப் பழையசுரந் தாருவிடம்
வாய்க்கூட்டாச் செய்மேக வாதமுத-னோய்கூட்ட
மண்டாது காணிகொளு மத்திமேகக் கசிவும்
வெண்டாதுகாணி மெய்யை மேல். வெண்தாது-வெள்ளி.

இதுவுமது

இரத்தங் கயம்பித்த மீளைகண்ணோய் காச
முரத்தைய மட்டகுன்மம் மூதை-வருத்தும்
விரணஞ் சிலேட்டுமநோய் மெய்புளிப் புண்ணூரண
மரணமுறும் வெள்ளியினல் வாழ்த்து.

(இ-ள்.) வெள்ளி பாயலுக்குப்பளுவுகாட்டாது துர்ப்பலஞ்செய்கிற புராணசுரம் மரவிஷம் ஒருவரால் உணவை ஊட்டஞ்செய்கிற மேக வாதப்பிடிப்பு முதலிய நோய்கள் ஒழுக்குவெள்ளை உதிரபேதி க்ஷயம் பைத்தியம் கோழை விழிநோய் இருமல் மார்புச்சளி அஷ்டகுன்மம் வாதகோபம் கிரந்தி நீர்க்கோவை லாஞ்சனம் சிரங்கு சொறி இவைகளை விலக்கும். 1198

தாம்பரத்தின் குணம்

தாம்பரத்தாற் சொறிபித்தஞ் சந்நி வழுவைகபம்
வீம்பார பீலிகமந்தம் வெண்மேகந்-தேம்பமலே
சூதகநோய் புண்கிரந்தி தோடவகா சக்கிருமி
தாதுநட்டங் கண்ணோய்போஞ் சாற்று.

(இ-ள்.) தாம்பரத்தினல் ரத்தபித்தம் சந்நிபாதம் வழுவை மகோதரம் கபாதிக்கம் பிலீகம் அஜீரணம் வெண்குஷ்டம் பித்தகபம் ரத்தகுன்மம் விரணம் திரிதோஷகாசம் கிருமி தாதுநட்டம் விழிநோய் இவைபோகும் என்க. 1199

பித்தளையின் குணம்

தாதுவிர்த்தி யுண்டாகுந் தாபச்சுரம் போகுஞ்
சீதளமாம் வாதஞ் சிதையுங்காண்-பூதலத்துண்
மாட்டியதோர் பித்தகுன்ம மாறுமலர்த் திருவே
நாட்டியதோர் பித்தளை யினல்.

(இ-ள்.) மலர்மேல்வசிக்கும் திருமாதளையாளே! பித்தளையினல் சுக்கிலம்பெருக்கும். குளிர்ச்சியும் உண்டாகும். தீச்சுரம் வாதாதிகபம் பயித்தியகுன்மம் இவைநீங்கும் என்க. 1200

Digitized By Roja Muthiah Research Library

வெண்கலத்தின் குணம்

நேத்திரநோய் சோமவினை நீர்பெருக் கிரத்தபித்தம்
வீழ்த்து சுவாசம்மந்த மோகமோ-டாழ்த்துகப
வாதவலி சூலை மகோதரம்போம் பித்தமொடு
தாதுவுமாம் வெண்கலத்தாற் றான்.

(இ-ள்.) வெண்கலத்தினால் விழிநோய் சோமரோகம் வெகு மூத்திரம் உதிரபித்தம் இரைப்பு அஜீரணம் கபவாதபிரமேகம் குத்தல் பெரிவயறு இவைபோம். சுக்கிலமும் பித்தமும் விருத்தியாம் என்க. ()

தராவின் குணம்

சூலையொடு மேகத்தை தோன்றும லோட்டிவிடு
மேலை வருகாலை விலக்குங்கா-லாலை
வாரமேவிய வல்கு லாரணங்கே வேட்டைத்
தராவெனு முலோகமது தான்.

(இ-ள்.) விடத்தையுடைய சர்ப்பத்தின் படம்போன்ற அல்குலாளே! வெட்டையாகிய தராவானது கீல்பிடிப்பு வெள்ளை வீழ்தல் கபவாத தொந்தம் ஆகியவைகளைப்போக்குமென்க. 1202

வெள்ளீயத்தின் குணம்-இதுவே வெண்ணாகம்

தாகங் கரப்பான் சலமேகம் பித்தகப
மேகமொளி மங்கல் வெப்புபல-மாகிரந்தி
துள்ளிய மந்தார சுவாசமுமங் தாக்கினியும்
வெள்ளீய மன்போக்கும் விதி.

(இ-ள்.) வெள்ளீயம் ராக்ஷயதாகரோகம் சலப்பிரமேகம் பித்தகபதொந்தம் மேகமூத்திரம் தேஜசுகுன்றல் சுரம் துர்ப்பலம் விரணம் மந்தாரசுவாசம் கபஞ்சேர்ந்த மந்தாக்கினி இவைகளை நீக்கும். 1203

காரீயத்தின் குணம்

பன்மரநஞ் சக்கிநோய் பாகர்த் தபிவிரணங்
குன்மக்கால் சூலங் குதவிரணஞ்-சன்மம்
பெருநாக மேகப் பிணிசுர மிவற்றைக்
கருநாகமே நீக்குங் காண்.

(இ-ள்.) காரீயம் கரவீரமுதலிய பற்பலதாவரவிஷம் கண்ணோய் கர்த்தபிரோகம் வலிவாதகுன்மம் குத்தல் பகந்தரவிரணம் கஜசருமகுஷ்டம் ரூட்சை ஆகியவைகளை யொழிக்குமென்க. கருநாகம்-காரீயம்.

Digitized By Roja Muthiah Research Library

துத்திநாகத்தின் குணம்

மேகங் கிளர்பேதி வெட்டையழலைத் தணிக்கும்
வேகங் கிருணி விலக்குங்காண்-போகாப்
பரியமுளைப் புண்ணைப் பயித்தியத்தைப் போக்கு
மரிய துத்திநாக மது.

(இ-ள்.) துத்திநாகம் விரணபிரமேகம் அதிசாரம் வெள்ளை உட்சூடு சீதரத்தக்கழிச்சல் முளைவிரணம் பித்தம் இதுகளை நீக்கும். 1205

இரும்பின் குணம்

பாண்டு வெண்குட்டம் பருந்தூதநோய் சோபை
மாண்டிடச் செய்மந்தங் காமாலைகுன்மம்-பூண்ட
பெருந்தாது நட்டமும்போம் பேதிபசி யுண்டாம்
கருந்தாது நட்டமிடுங் கால்.

(இ-ள்.) இரும்பினால் பித்தபாண்டு சிலேஷ்மவெள்ளைக்குஷ்டம் அதிதூலரோகம் வீக்கம் விஷாலஜகம் காமிலம் வயிற்றுநோய் சுக்கில நஷ்டம் இவைவிலகும். மலவிருத்தியும் தீபனமும் உண்டாம். 1206

எஃகுவின் குணம்

தந்தமந்த மூலவுரு தாதுநட்டஞ் சோபைகண்ணோய்
வந்தமந்தம் பாண்டுவினை வன்மைகுன்றன்-முந்த
பெருக்கிடையாய் நீட்டுகப பேத மிவைகட்
குருக்கிடையா தோட்டு முரை.

(இ-ள்.) எஃகு தந்தரோகம் தந்தமூலநோய் க்ஷீணசுக்கிலம் வீக்கம் நேத்திரரோகம் அலஜம் உடல்வெளுப்பு துர்ப்பலம் படுக்கையே கெதியாக வீழ்த்தாநின்ற க்ஷயகாசரோகங்கள் இவைகளை யொழிக்கும். 1207
உருக்கு-எஃகு.

காந்தகத்தின் குணம்

காந்தத்தாற் சோபைகுன்மங் காமில்மேகம் பாண்டு
சேர்ந்திரி தோஷம்வெட்டை சீதங்கா-லோய்ந்தபசி
பேருதரங் கண்ணோய் பிரமிய நீராமையும்போ
மோரினிறை யாயுளுறு முன்.

(இ-ள்.) காந்தத்தால் வீக்கம் குன்மம் காமாலை பிரமேகம் பாண்டு முத்தோஷம் வெள்ளைவீழல் சீதளம் வாதநோய் மந்தம் மகோதரம் விழிநோய் ஜலமேகம் நீராமைக்கட்டி இவைபோம். பூர்ணாயுளுண்டாம்.

Digitized By Roja Muthiah Research Library

மண்டூரத்தின் குணம்

கிட்டமொன்றுஞ் சோபை கிளைவீக்கம் மத்திசுரந்
துட்டவிட பாகஞ் சுவாசகபங்-கெட்டகொடும்
பாண்டிரும நீராமை பாழும் பிரமியமுந்
தாண்டிவிடு முண்டிரத்த தாது.

(இ-ள்.) மண்டூரத்தினால் வாதசோபை முதலிய வீக்கங்கள் அஸ்திசுரம் கொடியவிஷப்பாகம் இரைப்பு கபகோபம் தேகவெளிறல் காசம் நீராமைக்கட்டி அசிர்க்கரம் இவைநீங்கும். உதிரவிருத்தியாம். 1209

நவரத்தின வகை

மாணிக்கத்தின் குணம்

சுரரோகஞ் சந்நிகளின் தோட மதிதாக
மூரமான மேக மொழியுந்-திரமாக
வூணிக்கொ ணேத்திரநோ யோடுமர வீன்றவொளி
மாணிக்கத்தால் வசிய மாம்.

(இ-ள்.) சர்ப்பங்கக்கிய மாணிக்கத்தினால் சரீராதி சுரங்கள் சந்நி பாததோஷங்கள் திரிதோஷதாகரோகம் வாதபிரமேகம் கண்ணோய் ஆகிய இவைகள் ஒழியும் வசீகரம் உண்டாகும் என்க. 1210

வயிரத்தின் குணம்-இதுவே வச்சிரம்

ஆறுவித மாம்வயிர மவ்வவற்றுண் மாரசங்கள்
வீறிநிலைத் திருக்கு மேன்மையினாற்-கூறுமவைக்
கெப்பிணியு நீக்கு மிணையில் வனப்புமுண்டாஞ்
செப்பிணையின் மாமுலையாய் செப்பு.

(இ-ள்.) செப்பைப்போன்ற முலையாளே! தேவ பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திர சங்கர என்கிற ஆறுவகை வயிரங்களிலும் மகாரசங்கள் தங்கியிருப்பதால் அவைகளுக்கு நேத்திரரோக முதலிய பற்பல ரோகங்கள் விலகும். சரீர அழகுண்டாம். 1211

வைடூரியத்தின் குணம்

சீத வாதத்தொடு சிலேஷ்மம் புளியேப்பங்
காதுசூலைப் பிணிக ளத்தகுன்ம-மோதுபித்த
மென்றுரைக்கு நோய்களறு மெப்போதுந் தோடமிலை
நன்று வைடூரியத்தி னால்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) வைடூரியத்தினால் சிலேஷ்மவாததோஷம் சபம் புளியேப்பம் வருத்துகின்ற கீல்பிடிப்பு வாதகுன்மம் பயித்தியம் அபத்திய முதலிய சப்ததோஷங்கள் ஆகிய இவை நிவர்த்தியாகும். 1212

கோமேதகத்தின் குணம்

வாதபித்த கோபத்தை மாற்றுமலக் கட்டறுக்கு
மோதுமந் தாக்கினியை யோட்டுங்காண்-மீதி
லழலரு விகார மகற்று மொளிசெய்யுங்
கழறுகின்ற கோமேத கம்.

(இ-ள்.) கோமேதகம் வாதபித்தமிஸ்ரம் மலபந்தம் சுரத்தால் பிறந்த துர்க்குணம் இவைகளை நீக்கும். மினுமினுப்பைத் தரும். ()

புட்பராகத்தின் குணம்

வீரிய விர்த்தியது மேன்மேலு முண்டாகுங்
கூரியநற் புத்தியுண்டாங் கூறுங்காற்-பாரிற்
பிணிவருக்க மேகும் பெரும் புட்பராக
மணியாற் புகழுமுண்டாம் வாழ்த்து.

(இ-ள்.) புட்பராகத்தினால், விருத்தி. சுக்கிலமும் நல்லறிவும் கீர்த்தியும் உண்டாகும். மேகமுதலிய நோய்க்கூட்டம் நீங்கும். 1214

பவளத்தின் குணம்

சுரதோட மையமுந் தோட சுராங்காச
மருசி கிடத்தாலா மாலம்-பெரும்விந்து
நட்ட மதிதாக நாவறட்சி போமொளியுங்
கிட்டும் பவளத்தாற் கேள்.

(இ-ள்.) பவளத்தினால் ரூட்சையின் விகாரம் கபம் சந்நிபாதசுரம் இருமல் அருசோகம் கிடவிஷம் சுக்கிலக்ஷீணம் விதாகம் நாவில் சுறசுறப்பு ஆகிய இவை விலகும். சரீரகாந்தி உண்டாகும். 1215

முத்தின் குணம்

அத்திசுரஞ் சோபை யரூசிதுர்ப் பலங்கண்ணோய்
பித்துவிடஞ் சீதளநோய் பேசுகபஞ்-சத்தத்
தயிரிய நட்டத்தோடு தாதுநட்ட மும்போ
முயிறுநண் முத்திருந்தா லோது.

(இ-ள்.) ஜீவரத்தினம் என்கிற முத்தினால் அஸ்திசுரம் வீக்கம் அரோசகம் மெலிவு விழிநோய் அக்கினிகிடவிஷம் சுடகசிலேஷ்மம் குரல்வளையிற் சத்திக்கிற கோழை அதைரியம் வீரியநாசமிவைபோம். ()

Digitized By Roja Muthiah Research Library

மரகதத்தின் குணம்

தாதுதரும் பூதபை சாசந் தமையோட்டு
மீதுவரு புண்ணை விலக்குங்காண்-டீதுபுரி
மச்சை யகற்றும் மதுமேகம் போக்கும்
பச்சை யதுமதுரம் பார்.

(இ-ள்.) இனிப்புள்ள மரகதம் விந்துவை விளைக்கும் 18-வித பூத பைசாசங்கள் விரணம் பலவிஷங்கள் மதுமேகம் இவை நீக்கும் என்க.

நீலத்தின் குணம்

குதிவலி மேகம்பித்தங் கூறரிய பாண்டு
மதிமயக்க மெல்லா மருளு-மதிநுதலே
புத்தியொடு மேன்மேலும் போகசுக முண்டாகுஞ்
சுத்தநறு நீலத்தாற் சொல்.

(இ-ள்.) மதிநுதலாளே! நீலத்தினால் குதிகால்நோவு மேகநீர் அதிபித்தம் பாண்டு மனச்சோர்வு இவைபோகும். நல்லறிவும் மிகுசுக்கிலமும் உண்டாகும். 1218

வைத்தியாங்கம்

மருத்துவன் குணம்-கழிநெடில் விருத்தம்

தெய்வவுபாசனைபலநூ லெல்லைகாண்டற்
றிரிகரணசுத்திபண்ணோய் தீர்த்தனாளு
வைகன்றதீரமதி நுட்பஞ்சான்றோ
நட்பொழுக்கமேன்மைகுண மன்புள்ளானாய்
மெய்வசுதைவிகலையணங் குறைபதார்த்த
விதியுடற்காதார மடலங்கிமாந்தற்
கைவருமெண்பேதமெலா முணர்ந்துற்றானாய்
காணிவந்தமருத்துவன்கைக் கரணியுண்ணே.

(இ-ள்.) தேவவுபாசனை பலசாஸ்திரங்களை நன்றாக ஆராய்ந்தறிகுதல் மனவாக்குக்காயமென்னும் திரிகரணசுத்தியால் பலவியாதிகளைத் தீர்க்குதல் நாளும் வியாதியைக்கண்டு அஞ்சாத தீரத்துவம் மிகுந்த புத்திநுட்பம் பெரியோர்சிநேகம் ஆசாரம் மேம்பாடு நற்குணம் அன்பு இத்தன்மைகளுள்ளவனாகித் தேகம் தேசம் காலம் ரோகம் ஔஷதம் பதார்த்தகுணம் உடம்புக்காதாரம் உதராக்கினி தேகபலம் ஆகாரம்

Digitized By Roja Muthiah Research Library

கைபாகம் செய்பாகம் இன்ன நோய்க்கு இத்தனைநாள் ஔஷதங்கொ டுக்கவேண்டுமென்கிற கால அளவு என்னும் இப்பேதங்களையெல்லாம் அறிந்திருப்பவனாகத் தெரிந்தால் அந்த வைத்தியன் கொடுக்குஞ் சஞ் சீவியையொத்த மருந்தை உண்ணக்கடவை என்க. சரீரத்துக்குள்ள ஆதாரபேதமானது வாதம்பித்தம் சிலேஷ்மம் ரசதாதுரத்ததாது மாமி சதாதுமேதோதாது அஸ்திதாது மகமைதாது சுக்கிலதாது மலம்மூத் திரம்முதலிய 102-ம் உதாரக்கினி பேதமாவது சாமாக்கினி விஷமாக்னி தீக்ஷ்ணக்னி மந்தாக்னி என்னும் இந்த நான்கும் தேகபலமாவது சகச பலம் கால்பலம் யுத்தகிருதபலம் என்னும் சாஸ்திரத்தில் தோஷபேத படலத்தில் காண்க. 1219

கைபார்த்தமருத்துவன் நடத்தை வெண்பா

கன்மவுரு நோயதைமுக் கண்கொடறி வுற்றறிந்தார்
தன்ம நீராடற் சகத்துடனெட்-டின்மையெனி
லங்கைபதத் தூய்மையின்றே வங்குலிபூ வெற்றிலின்றேற்
கங்கை பதம்புனிறு காண்.

(இ-ள்.) நோயானது கன்ம ரூபமாகையால் அந்தநோயை மூன்று விரலைக்கொண்டு பிணியாளனுடைய கைமுதலாகிய தசவித நாடிகளை யும் தொட்டறிந்து அதுவுமன்றி அஷ்டவித பரீக்ஷையினாலும் அறிந்த மருத்துவர்கள் முக்கியமாக நடந்துகொள்ளத்தக்க ஒழுக்கமாவது 108-ஸ்நானஞ் செய்தல் அல்லது கைகால்களைச் சுத்தஞ்செய்தல் அவ் விரலைப் பூமியில் தட்டுதலாம். இப்படி செய்யாவிட்டால் சகல பாபங்க ளையும் நிவர்த்திசெய்யுங் கங்காநதியையொத்த வைத்தியருக்கும் பக் குவமாகச் செய்யப்பட்டிருக்கிற ஔஷதங்களும் ஆசூசம் உண்டாம் என்க. கண்போலத் தெரிவிக்கின்றமையால் விரலைக் கண்ணென்றார். இவ்வொழுக்க மில்லாத வைத்தியர்கள் கைமருந்து பிணியை நீங்கா தென்பது கருத்து. 1220

பிணியாளன் குணம்-கழிநெடில் விருத்தம்

அருப்பமுனரசெனினுந் தீர்ப்பானைக்கண்
டழைத்தவனையாதியரு மவனென்றோர்தல்
விருப்பமுறத்தவசிருத்தன் மெய்யன்பாடல்
வேண்டுடலீந்திடலுறையேற் றுண்டலத்தைத்
திருப்பவருந்துயராற்றற் சாதங்கூறற்
செப்புளொடுங் கற்பன்மருந்தெழித்தலூழா
மிருப்பகற்றுமுறைகுயிற்ற விவையுள்ளானே
லிவனுமம்புகலுகர்க்கு மின்றுநோயே.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) இராசனேயானாலும் தனக்கு வியாதிசம்பவித்தால் வைத்தியரை உபசாரத்துடன் அழைத்தல், தாய்தந்தை குருதெய்வம் நமக்கு இந்தவைத்தியரே என்றுநினைக்குதல், விருப்பமுண்டாகும்படி ஆசனங் கொடுத்திருக்கச்செய்தல், உண்மையான அன்புவைத்தல், ஔஷதத்துக்கு வேண்டிய திரவியங் கொடுத்தல், அவர் கொடுக்கின்ற மருந்தை இரண்டு கையினாலும் வாங்கி உண்ணுதல், ஔஷதத்தை வேண்டாமென்று மாற்றும்படி யுண்டாகும் வருத்தத்தைச்சகித்தல், ஔஷதஞ் சாப்பிடுவதனாற் றனக்கிருக்கும் குணாகுணங்களை யுண்மையாகக் கூறுதல், அன்றியுமவர்சொல்லுக்குள் அடங்கியிருத்தல், கண்ட ஔஷதங்களை யுண்ணாமல் நீக்குதல், பூர்வகர்மத்தினால் வியாதி சம்பவிப்பதாதலால் அந்தக்கர்மத்தை நிவர்த்தி செய்துக்கொள்ளுதல் என்னும் இந்தக்குணங்களை யுடையவனா யிருப்பானானால் இவன்பேரை யுச்சரிப்பவர்களுக்கும் வியாதி யணுகாது என்க. 1221

பாகஞ்செய்வான் குணம்-வெண்பா

பிணியர்க் குரியர் பிருக்குளத்தை யொப்ப
ரணியிற் சிறந்தகட்ப ராம்பற்-பணியர்குட்
டுப்புறையை யுண்மைமிகு துய்மையிவை யார்ந்தாரை
யொப்புறையை யாடற் குவந்து.

(இ-ள்.) பிணியாளர்களிடத்தி லிருந்து ஔஷதபாகஞ் செய்கிறவர்கள் அவர்களுக்கு உரிமையுள்ளவர்களும் மிகுந்த நன்மையுள்ள சிநேகிதரும் வைத்தியர் மனதை ஒத்தவர்களுமா யிருக்க வேண்டும். அத்தன்மையர்களில்லாத பட்சத்தில் மற்ற ஏவலாளிகளுக்குள் தேகபலம் பிணியாளர்களுடைய ஆயுசு விர்த்தியை விரும்புதல் புத்தி நுட்பம் சத்தியம் பரிசுத்தமென்னும் நற்குணம் உள்ளவர்களை பரிசோதித்து ஔஷதபாகஞ்செய்ய வைத்துக்கொள்ள வேண்டுமென்க. இந்த 4-பாடலும் தேரையர்செய்த இலவருக்கச்சுருக்கம் என்னும் சாஸ்திரத்திலிருந்து சேர்க்கப்பட்டவை. 1222

கருமை செம்மை வெண்மை மஞ்சள் என்னும் நிறத்தையுடைய கலுவங்களின் குணம்

கருங்கற் கல்வத்தவுழ்தங் காணிலுடற் கின்பா
நெருங்கிவந்தக் கற்றேருடநீக்கு-மொருங்குவெள்ளைக்
கண்மருந்தோ வீரமொடு காரமுமின் மஞ்சளம்மி
யினமருந்தோ நோய்விலக்கா வென்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) கரியநிறமுள்ள கலுவத்தி லறைத்தமருந்து உடலிற்கு நலஞ்செய்யும். சிவப்புநிற அம்மினதுமருந்து சகலதோஷத்தையும் நீக்கும். சுத்தவெண்மைநிறக் குழிக்கல்லினது மருந்திற்கு வீரமும் சுவையும் இன்மையாம். மஞ்சள் நிறக்கல்மருந்து பிணிகளை நீக்கா தென்றெண்ணுவாயாக. 1223

மருந்தினது பக்குவ குணம்

பக்குவ பாகத்தை யுறுமருந்தும் பிறழ்
பக்குவ பாகத்துப் பருமருந்து-மெய்க்குறுங்கா
லக்கால மும்பருணவாழி வருந்துன் சிந்துசேடன்
கக்காலமும் பொருந்துங் காண்.

(இ-ள்.) தருமானமுறையினாற் செய்யப்பட்ட ஔஷதங்களை யானு லும் பக்குவபாகத்தைப்பொருந்துமானால் அது தேவர்களுண்ணத் திருப்பாற்கடலில் உண்டான அமிர்தத்துக்கொப்பாம் கனமான முறை யினாற் செய்யப்பட்ட ஔஷதங்களேயானாலும் செய்பாகங் கெடுமா னால் அக்காலத்தில் ஆதிசேடன் கக்கிய விஷத்துக்கொப்பாகு மென்க.

மறுபாகக் குணம்

மாகமொட்டிக் குளிர்ந்த பாணியிர சாயனநல்
வேகவிவேகங் குடிநீர் மெய்ச்சுரச-மேகுமிரா
மீந்தவெஞ் சனதிகளை மீளவொரு காவானடி
மாந்தநஞ்சம் வேறிருக்கு மா.

(இ-ள்.) பக்குவமாகக்காய்ச்சி ஆறினவெந்நீர் ரசாயனம் நல்லவீரி யமுள்ளலேகியம் கஷாயம் தனியே இடித்துப்பிழிந்து முறித்த சுரசம் சென்ற இரவில் மீந்த பதார்த்தம் முதலியவைகளை மறுபடியும் ஒரு தரம் அடுப்பில்வைத்துப் பாகஞ்செய்து புசிக்கில் இதுவே விஷமாம்.()

மருந்துவைக்கும் பாத்திரத்தின் குணம்

தெங்கின் குடுக்கை திசிரிதந்தப் பாத்திரத்தார்
நன்கிராப் பன்மருந்து நன்மருந்தாம்-வெண்கலந்தான்
மையிரும்பாற் கட்டைகளாற் கொம்பாற் பாத்திரங்கட்
செய்யினிரண் டாம்பட்சஞ் செப்பு.

(இ-ள்.) தேங்காய்க்குடுக்கை மூங்கிற்பாணை தந்தசிமிழ் இவை களில் வைக்கிற நலமில்லாத அற்பமருந்தும் உயர்ந்த மருந்தாம். வெண் கலம் இரும்பு மரம் மிருகங்களின் கொம்பு இவைகளாற் செய்த பாத் திரங்களில் ஔஷதங்களை வைப்பது மத்திமபட்சமாம். 1226

Digitized By Roja Muthiah Research Library

மருந்தூட்டும் பாத்திரபேதம்

வாதமுதன் முப்பிணியோர் வைத்திரயுண் பாத்திரத்தின்
பேத முறையேகேள் பெருங்கஞ்சஞ்-சாதகும்பந்
தாம்பரமா மின்றென்னிற் சக்கரிகைப் பாத்திரநன்
றும்பரமாட் கொடுக்கு மாற்கு.

(இ-ள்.) வாதரோகிகளுக்கு வெண்கலப்பாத்திரத்திலும் பித்த ரோகிகளுக்குத் தங்கப்பாத்திரத்திலும் சிலேஷ்ம ரோகிகளுக்குத் தாம்பரப்பாத்திரத்திலும் மருந்திழைத்துண்ணக் கொடுக்கவேண்டும். இவைகளில்லையெனில் குயப்பாத்திரமே உத்தமமாகும். இது பூரணாயுளைத்தரும். 1227

மருந்தூட்டுங் காலம்

அனிலரோ யர்க்கசன மாகா முன்பிறந்த
துனியர்க் கசனநடு தூயை-யெனுநோயர்க்
கசகரப் பின்னுமருந்தி னுறையப் பிணியாற்
சரசரப் பின்னுலகிற் றூன்.

(இ-ள்.) வாதரோகிகளுக்கு போஜனம் செய்யுமுன்னும் பித்த ரோகிகளுக்குப் போஜன நடுவிலும் சிலேஷ்ரோகிகளுக்குப் போஜனஞ் செய்தபின்பும் ஔஷதம் உண்ணக் கொடுத்தால் அந்த வியாதியினாலே சமுத்திரஞ் சூழ்ந்த உலகத்தில் அவர்கள் இறக்கார்கள். 1228

மருந்தருந்தியபின்பு வாயிலிடும் வஸ்துக்கள்

சீவற் கனமதுதிராட்டை தும்பை மூக்குடிராகம்
பூவற சரநெற் பொரிச்சத்துள்-பூவி
னிருந்துண்ட நீர்மைகுன்று தேற்றுமேன் மக்கண்
மருந்துண்ட வாய்க்கிவையா மால்.

(இ-ள்.) கொட்டைப்பாக்குச் சீவல் நாகப்பூ தேன்திராட்சைப் பழம் வெற்றிலைக்காம்பு கிராம்பு ஒருவருஷஞ்சென்ற நெற்பொறி பச்சைக்கர்ப்பூரத்தூள் இவைகள் உண்டமருந்தின் தன்மையைக் கெடுக்காத வஸ்துக்களாதலாலும் வெகுட்டினுல் முகத்தின் சுபாவத்தன்மை மாறுமலிருக்கும்படிச் செய்யத்தக்கவை யாதலாலும் அதுகளிலொன்றை ஔஷதம் உண்டமேன்மக்கள் வாய்க்குக் கொஞ்சங்கொடுக்கவும்.

பகல் உறக்கத்தை நீக்கி மருந்தூட்டும் உபாயம்

வேசையர் கூத்தொன்றெருத்த வேறுவேறுங் கூத்தா
லாசியத்தாற் கீதத்தா லற்புதத்தால்-வீசுபுகழ்

Digitized By Roja Muthiah Research Library

றாக்கமரு ணீக்கியுரை துய்ப்புத்தணங்கை யுள்ளார்க்
கூக்கமருள் வார்மருத்து வர்.

(இ-ள்.) பண்டிதர்கள் கணிகைமாதர் பாதக்கூத்து ஒன்றுதவிர பலவித நாடகக்கூத்து விகடம் சங்கீதம் அதிசயம் ஆகிய இவைகளி னால் பகல் நித்திரைமயக்கத்தை விலக்கி நோயாளிகளுக்கு மருந்தூட் டிப் பலம் வரச்செய்வார்கள். 1230

சிகிச்சையின் பேதம்

சூதகந்தி தாதுபஸ்மஞ் சொன்ன நாட்டார்சிகிச்சை
யோதரிய மூலியிம்மண் ணூர்ச்சிகிச்சை-வேதடருஞ்
சத்திராட்ச ராக்கினி நிசாசரங் சிகிச்சையென்றே
முத்திராட்ச தாகு மொழி.

(இ-ள்.) சிகிச்சை என்பது ஒன்றாயிருந்தாலும் அது மூவகைப் படும் அவையாவன். ரசம் கந்தம் பாஷாணம் பஸ்பம் ஆதிகளைக்கொண்டு வைத்தியஞ் செய்வது தேவகணச் சிகிச்சை. விருக்ஷ முதலிய ஔஷ திகளைக் கொண்டு சிகிச்சை செய்வது மனுஷகணச் சிகிச்சை அறுத்தல் காரம் வைத்தல் அக்கினியாற் சுடல் முதலியவை ராட்சதகணச் சிகிச் சையாம் என்க. 1231

காலபேத விரோசனம்

குடிநீர் கற்கந்தயிலுங் கோடைக்காம் பேதி
கடுமாரி மூடுபனிக் காயுங்-கெடுமிவைகள்
சோபிக்கு மெக்களிக்குஞ் சூதமுப்பிற்கும் பேதி
சோபிக்கு மெக்காலஞ் சொல்.

(இ-ள்.) கஷாயம் அரைத்த கலக்க மருந்து ஆமணக்குநெய் என் னும் இம்மூன்றும் கோடைக்காலத்துப் பேதி மருந்துகளாம். மழைக் காலம் பனிக்காலங்களில் கொடுக்கில் அவைகளின் குணங் கெடும் மேற் கூறிய 3-காலங்களிலும் நேர்வாள பலவிதக் கள்ளிப்பால் ரசம் உப்பு இவைகள் சேர்ந்த மருந்துகளை கொடுக்கில் கிரமமாகப் பேதியாகும். ()

மருந்து வகை

அயச்செந்தூரத்தின் குணம்

அயத்தில் வருசெந்தூர மையமொடு சோபை
வயிற்றிலுரு காமாலை மாற்றும்-புயத்திற்குச்
செய்யபல முண்டாக்குந் தீபனத்தைத் தானெழுப்பும்
வெய்ய பாண்டோட்டமிது மெய்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) அயச்செந்தூரம் கபப்பிணி வீக்கம் காமாலை பித்தபாண்டு இவைகளை நீக்கும். புஜபலத்தையும் பசியையும் தரும் தீனிப்பையின் நாம்புகளைப்பற்றிய. மஞ்சள் நிறத்தால் பிறப்பதால் வயிற்றுளூறு காமாலையென்றார். 1233

காந்தச்சிந்தூரத்தின் குணம்

காந்தச் சிந்தூரங் கருகரிய வுந்திவலி
போந்த வதிசாரம் பொங்கிவரு-வாந்திகப
காசச் சுவாசம் காமாலைப் பாண்டுவொடு
பூசல் வினைநீக்கும் புகல்.

(இ-ள்.) காந்தச்செந்தூரம் நாபிவலி பேதச்சுரம் வமனம் க்ஷயம் இருமல் இரைப்பு காமிலம் பாண்டு நீங்காநோய் இவைகளை விலக்கும்.

தாம்பரபஸ்பத்தின் குணம்-சந்தவிருத்தம்

உருவங் குறுபசியும் பெறுமுரமும் பெறுமிரமா
மிருகண்ட ருடநயன் பெறுமிகையும் பெறுகுவரே
வறுசெம் புறுமலினந் தெறிவகையும் கபாடிவகையும்
மருகும் பெருவிதமுந் தெரிபவரம் புவிமிசையே.

(இ-ள்.) செம்பில் பொருந்திய களிம்பைநீக்கும் வகையும் பஸ்மஞ் செய்யும் வகையும் இதனை உண்ணும் பெரிதானவகையும் அறிந்தவர்கள் வயிற்றிலுண்டாகும் பசியையும் பலத்தையும் தவத்தில் உயர்ந்த மிருகண்ட மகாரிஷி புத்திரராகிய மார்க்கண்டேயர்போல ஆயுசுவிருத்தியும் அடைவார்கள் என்க. உண்ணும்போது பிரமாண அனுபான பத்தியவகைகளை அறிந்துண்ணவேண்டு மென்பதைப்பற்றிப் பருகும் பெருவிதமென்றார் என்க. 1235

இதுவுமது-வெண்பா

தாமர பஸ்பஞ் சகலகுட்டங் குறைநோய்
சோம்பு குட்டமெல்லாந் தூரத்துமென்பார்-தேம்பி
யிருக்கின்ற பித்தமுட னீளை சுரஞ்சந்நி
குருக்கின்ற வாயுவும் போக்கும்.

(இ-ள்.) தாம்பிரபஸ்பம் குன்மங்கள் பெருவியாதி மூர்ச்சைபல குஷ்டம் அதிபித்தம் சுவாசம் சுரம் சந்நி மிகுவாயு இவைகளை நீக்கும்.

வங்கச்சிந்தூரத்தின் குணம்

வங்கச் சிந்தூர மதுமேக நீரிழிவோ
டங்கமுறு தாப மகற்றுங்காண்-பொங்கிவரு

Digitized By Roja Muthiah Research Library

மோத வுதிரத்தா லுருவிரண நோய்போக்குந்
தாதுவை யுண்டாக்குமது தான்.

(இ-ள்.) வங்கச்சிந்தூரம் மதுநீர் அதிமூத்திரம் சுரம் ரத்தவிர்த்தி யினுற் பிறந்தபுண் இவைகளை ஒழிக்கும். சுக்லத்தை வளர்க்கும். 1237

ஆனந்தபைரவம் சுத்தபைரவம் சொர்ணனந்தபைரவம் பிரமானந்த பைரவம் ஆனந்தரசம் விநோதபைரவம் இவைகளின் குணம்-விருத்தம்

ஆனந்த பைரவம்பி னடர்சுத்த பைரவஞ்சொர்
ணனந்த பைரவம் பிர்ம்மானந்த பைரவம்மா
வானந்த ரசம்விநோத மாம்பைரவ மிவற்றால்
வானந்த மேவுருட்சை வருதிரி தோடம்போமே.

(இ-ள்.) ஆனந்தபைரவம் சுத்தபைரவம் சொர்ணனந்த பைரவம் பிரமானந்தபைரவம் ஆனந்த ரசம் விநோதபைரவம் இவைகளினால் முக்கியமான சுரமும் திரிதோஷாரம்ப ரோகங்களும் போகும். 1238

சுத்தமண்டூரம்மகாமண்டூரம் சித்தமண்டூரம் திரிகடுகாதிமண்டூரம் நாராயணமண்டூரம் இவைகளின் குணம்-வெண்பா

சுத்தி மண்டூரந் துதிமகா மண்டூரஞ்
சித்த மண்டூரந் திரிகடுக-மொத்திடுமண்
டூரநா ராயணமண் டூரமிவைக்கு வெகு
தூரமாம் பாண்டொடு சோபை.

(இ-ள்.) சுத்தமண்டூரம் மகாமண்டூரம் சித்தமண்டூரம் திரிகடுகாதி மண்டூரம் நாராயணமண்டூரம் இவைகளுக்கு ஐவகைப் பாண்டுநோய் களும் ஆறுவித சோபரோகங்களு மொழியும். 1239

வாதராக்ஷசமாத்திரைதசவித அக்கினிகுமாரம் இவைகளின் குணம்

இகல்வாத ராக்ஷசனுக் கெண்பது வாய்வும்
புகலாம லோடும் புறத்தே-யிகலார்
தசவித வக்கினிக் குமாரர்க்குச் சந்நி
நசிசுரங் களும்போ நவில்.

(இ-ள்.) வாதராக்ஷசமாத்திரையினால் 80-வித வாதநோய்களும் தசவித அக்கினிகுமாரத்தியினால் சந்நியும் அசாத்தியசுரங்களும்போம்.

கோரோசனாதிக்குளிகை தாககோப சமனமாத்திரை இவைகளின் குணம்

கோரோச னாதிக் குளிகைக்குப் பித்தசுரந்
தீராத தாகஞ் சிறுவர்சுர-நோராது

Digitized By Roja Muthiah Research Library

தாக கோபச்சமனந் தன்னாற் சுரஞ்சந்நி
தாகபித்தம் போமே தணிந்து.

(இ-ள்.) கோரோசனாதி மாத்திரைக்கு பயித்தியசுரமும் நீங்காத காவரட்சியும் குழந்தைகள் ரூட்சையும் விலகும். தாககோபசமனமாத்திரையினால் சுரரோகமும் சந்நிபாதமும் பித்தவிதாகமும் தீரும். 1241

குன்மகுடாரம் சுயம் அக்கினி பாடாணபின்னவச்சிரரசம் இவைகளின் குணம்

குன்ம குடாரமெனக் கூறிலட்ட குன்மமும்போம்
வன்னசுய மக்கினிக்கு வாதமாந்தம்-பின்னமுறும்
பாடாண பின்னவச்சிர பாரசத்தைப் பார்த்தவுடன்
கோடாகுங் கல்லடைப்பிற் கே.

(இ-ள்.) குன்மகுடார மாத்திரையினால் 8-விதக் குன்மங்களும் சுயம் அக்கினி மாத்திரைக்கு தனிவாதசீரணமும் பாஷாண பின்ன வச்சிரரசத்தினால் 4-வகை அஸ்மரி ரோகங்களும் கெடும் என்க. 1242

மேககுலாந்தகன் சர்வசித்திரசம் இவைகளின் குணம்

மேக குலாந்தகனன் மேககுலம் போமரிச
யோகசர்வ சித்திரச மொன்றுக்கே-போகும்
பெருமூத்திர மென்ற பேரும் பேதித்து
வருமூத் திரமுமறி வாய்.

(இ-ள்.) மேககுலாந்தக மாத்திரையால் 20-வித மேகங்களும்சர்வ சித்தி ரசத்திற்கு வெகுமூத்திரம் பலசொட்டு மூத்திரங்களும் நீங்கும்.

கோடாசலக்குளிகை மகாவன்னிரசம் இவைகளின் குணம்

கோடா சலத்தாற் கொடும்பாண்டு சோகைமுத
லோடாக்கிரகணியு மோடுங்கா-ணீடுமகா
வன்னிரச மென்றுரைக்கில் வாடாச் சலோதரமும்
பின்னிடையுந் தப்பாது பேசு.

(இ-ள்.) கோடாசலக்குளிகையால் பாண்டுநோயும் வீக்கமும் நீங்காதகிரகணியும்போம். மகாவந்நிசுரத்திற்கு சலோதாரரோகம் ஏகும்.

உலோகத்தமரசம் வங்கேசுவரம் நாரசிங்கரசம் இவைகளின் குணம்

உனாத வுலோகோத்தம ரசத்தா லுன்னும்
வினோத மெனும்பேதி விளையும்-கனமான

Digitized By Roja Muthiah Research Library

வங்கேஸ் வரத்திற்கு வல்லைகுன்மம் போம்நார
சிங்கம் மூலச்சுரந் தீர்க்கும்.

(இ - ள்.) உலகோத்தமரசத்தால் பற்பல வியாதிகள் நீங்கும். விநோதபேதியுண்டாம் வங்கேஸ்வரத்திற்கு வல்லைக்கட்டியும் குன்மக் கட்டியும்போம். நாரசிங்கத்திற்கு புராணசுரம் விலகும். இது நகங்களில் உந்தியில் தடவினாலும் புஷ்பச்செண்டில் தெளித்து மோந்தாலும் பேதியாகும்படி செய்வதினால் விநோதபேதி யென்றார். 1245

சிந்தாமணி திரிலோகசிந்தாமணி என்னும் இக்குளிகையின் குணம்

சிந்தா மணிக்குளிகை சேர்ந்தமலக் கட்டறுக்கு
முந்துசுர வாயுவையு மோட்டுங்கா-ணந்தாத
திரிலோக சிந்தா மணியென்னிற் சந்நி
திரிலோகத் தப்புரம்போந் தேர்.

(இ - ள்.) சிந்தாமணிக்குளிகை பழையமலச்சிக்கலையும் உஷ்ணவாயுவையும் நீக்கும். திரிலோகசிந்தாமணி மாத்திரைக்குச் சந்நிவிலகும். ()

திரிலோகசூடாமணி திரிலோகரக்ஷாமணி இவைகளின் குணம்

திரிலோக சூடா மணிக்குந் திறல்சேர்
திரிலோக ரட்சா மணிக்கு-முரவுநோய்
காசம் விக்கல்சந்நி கபந்தலைநோய் மந்தஞ்சு
வாசம் பாண்டும்போ மதி.

(இ - ள்.) திரிலோகசூடாமணி மாத்திரைக்கும் திரிலோகரட்சாமணிக்குளிகைக்கும் மார்புவலி இருமற்காசம் சந்நிபாதம் க்ஷயம் சிரஸ்தாபம் அலஜம் இறைப்பு சரீரவெளிறல் ஆகிய இவை நீங்கும். 1247

ராஜமிருகாங்கம் மகாராஜமிருகாங்கம் இவைகளின் குணம்

ராஜமிரு காங்கமது ராஜநோய் போக்குமகா
ராஜமிரு காங்கமது ராஜநோய்க்-காசகபம்
பாண்டு காமாலை பலபீநசஞ் சோபை
தாண்டுபித்த நோயகற்றுஞ் சாற்று.

(இ-ள்.) ராஜமிருகாங்கமாத்திரை ராஜரோகம் என்கிற க்ஷயத்தையும் மகாராஜ மிருகாங்க மாத்திரை க்ஷயகாசம் சுவாசம் பாண்டு காமிலம் பற்பலபீநசம் வீக்கம் பித்தகோபம் இவற்றை விலக்கும். ()

ராஜகண்டேச்சுரம் ராஜராஜேச்சுரம் ராஜகேசரிவடகம்
இவைகளின் குணம்

ராஜகண் டேச்சுரமும் ராஜராஜேச் சுரமும்
வீசுசுர மெல்லாம் விலக்குங்காண்-ராஜநற்

Digitized By Roja Muthiah Research Library

கேசரிய தாம்வடகங் கேதஞ்செய் தோட்சுர
நாசமுறக் காட்டுமதை நாடு.

(இ-ள்.) ராஜகண்டேச்சுர மாத்திரையும் ராஜராஜேச்சுர மாத்திரையும் வாதசுரமுதலிய சகல சுரங்களையும்போக்கும் ராஜகேசரிவடகம் திரிதோஷங்களிற்பிறந்த 13-சந்நிபாத சுரங்களையும் கெடுக்கும். ()

சந்திரோதயம் சந்திரகாசரசம் சந்திரபிரபாவவடகம் பூரணச் சந்திரோதயம் இவைகளின் குணம்-விருத்தம்

சந்திரோ தயத்தால்வெப்பந் தணியுஞ்சந் திரகாசத்தார்
பிந்துமுத் தோடஞ்சந்திர பிரபாவ வடகமோநான்
கைந்துநீர் போக்கும்பூர்ண மாஞ்சந்தி ரோதயத்தால்
விந்துவு மதிகரிக்கும் வீறுநோய் குழுவும்போமே.

(இ-ள்.) சந்திரோதய மாத்திரையால் தாபச்சுர முதலிய சகல சுரங்களும் சாந்தமாம். சந்திரகாச மாத்திரையினுல் திரிதோஷ விகுணம் நீங்கும். சந்திரபிரபாவ வடகமானது 20-வித மேகங்களையும் விலக்கும். பூரணசந்திரோதயத்தினுல் வீரியவிருத்தியாகும். பற்பல நோய்களும்போம் என்க. 1250

வசந்தகுசுமாகர மாத்திரையின் குணம்-வெண்பா

வசந்தகுசு மாகரத்தால் வல்லகயங் காச
முசந்தவிட பாண்டுகுன்மம் மூற்றாய்க்-கசிந்தநீர்க்
கட்டுபுளி யேப்பமொடு கல்லடைப்புத் தாகமிவை
விட்டு விடுங்காண் விரைந்து.

(இ-ள்.) வசந்தகுசுமாகர மாத்திரையால் க்ஷயம் இருமல் விஷ பாண்டு குன்மம் சொட்டுமூத்திரம் புளியேப்பம் அஸ்மரிதாகநோய் இவைகள் நீங்கும். 1251

மகாவசந்த குசுமாகரமாத்திரையின் குணம்-விருத்தம்

மகாவசந்த குசுமா கரத்தால் வந்த
வாயுகபம் பித்தமந்தம் வயிற்று நோய்கள்
விகார வுன்மாதங் காமாலை பாண்டு
விடுசிறுநீர் கட்டுசந்நி குன்மஞ் சோபை
யாகாத கயகாச சுவாசம் பிரமேக
மதிசார மெலும்புருக்கி விக்கின மூலஞ்
சிகாவாதஞ் சுருங்ககுட்ட மார்பு நோயுந்
தீருமதற் கனுபானந் தெரியுங் காலே.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) மகாவசந்த குசுமாகரமாத்திரையை கொடுக்கிற அனுபான மறிந்து கொடுக்கில் திரிதோஷத்தின் குணம் அசலம் உதரநோய்கள் உன்மாதம் காமிலம் பாண்டு விஷபேதி மூத்திரபிந்து வாதவஸ்து சந்நி குன்மம் வீக்கம் க்ஷயம் சாசம் சுவாசம் மேகநீர்பேதி அஸ்திசிராவம் இத்மாமூலம் சிரஸ்தாபம் குறைநோய் மார்புவலி இவை தீரும். 1252

லங்கேச்சுரம் பிரதாபலங்கேச்சுரம் இவைகளின் குணம்-வெண்பா

இலங்கேச் சுரத்திற் கெழுசூதி கைக்கர
விலங்கா கிரகணியு மில்லை-நலங்கொள்பிர
தாபலங் கேச்சுரத்திற் சாந்தமாஞ் சீதசுரம்
சோதமுறு நோயினமுஞ் சொல்.

(இ-ள்.) லங்கேச்சுரத்திற்கு சூதிகாவாதமும் கிரகணியும் பிரதா பலங்கேச்சுரத்தினால் சீதசுரமும் மூர்ச்சைமுதலிய பிணிகளும்போம்.()

ஏகாதசருத்திரமாத்திரை சிந்தூரபூஷணம் இவைகளின் குணம்

ஏகாதச ருத்திர மென்னு மாத்திரைக்குப்
போகாத சந்நிசுரம் போகுங்காண்-வாகான
சிந்தூர பூஷணத்தார் சீர்கருப்ப மாதருக்கு
வந்தசுரம் போமுணரு வாய்.

(இ-ள்.) ஏகாதசருத்திர மாத்திரைக்கு அசாத்திய சந்நிபாதசுரமும் சிந்தூரபூஷணமாத்திரையால் கருப்பஸ்திரீகட்குற்றசுரம்நீங்கும்.

பூபதிமாத்திரையின் குணம்

நாவிலிட வன்னமுறு நாளும் விடம்போகு
மேவுசுரஞ் சந்நிகளும் விட்டுப்போங்-காவிவிழி
மானார் வசியமது வாய்க்கு மிலேயனமாங்
தானேகேள் பூபதிக்குத் தான்.

(இ-ள்.) பூபதிமாத்திரைக்கு விஷம் சுரம் சந்நிபாதங்களும் விலகும் தீபனமும் ஸ்திரீவசியமும் ஆண்குறியெழுச்சியும் உண்டாம். 1255

நவலோகபூபதி சூலைப்பூபதி இவைகளின் குணம்

நவலோக் பூபதிக்கு நண்ணுசுரஞ் சந்நி
புவலோக வாழ்க்கைவிட்டுப் போங்கா-ணுவுசூலைப்
பூபதிக்குச் சூலைசந்நி பொங்கனலந் தென்றிசைவாழ்
பூபதிக் காளாகும் புகல்.

(இ-ள்.) நவலோகபூபதி மாத்திரைக்கு சந்தசுரம் சந்நியும் விலகும் சூலைப்பூபதிக்கு கீல்பிடிப்பு சந்நியும் தாபச்சுரமும் கெடும். 1256

Digitized By Roja Muthiah Research Library

பூபதிரசம் ரசபூபதி இவைகளின் குணம்

பூபதி ரசத்திற்கு போஞ்சன்னி மந்தம் மிரூத
பூபதிக்கு சந்நி பொருச்சிநோய்-கோபமிகு
காசங் சுவாசங் கடுஞ்சூலை பாண்டுமுத
ஞசங் கபவாய்வு நாடு.

(இ-ள்.) பூபதி ரசத்திற்கு சந்நிபாதமும் அலசரோகமும்போம் ரசபூபதிக்கு சந்நிபாதசிரமும் சோமரோகமும் இருமல் இரைப்பு சூல் பிடிப்பு பாண்டுரோகம் சிலேஷ்ம வாததொந்த இவைகள்கெடும். 1257

மருந்தருந்துங் கால அளவுகூறல்-விருத்தம்

தாதுகட்ட பஸ்மாரஞ் சுவாச காசந்
தனியுன்மா தன்னிவைக்காண் டுறையா மென்பர்
மோதுகிறிச் சரம் விரணங் கல்லடைப்பு
முதிர்மேக நீர்க்கு மருந் தீரைந்திங்க
ளோதுமுதா வர்த்தமா தங்களேழென்
றுரைவித் திரிதிக்கு மருந்தரையாண் டன்றி
மீதுவேண் டாவுரைத்த விம்மட் டுண்ணின்
விலகுமவை சடமற விரும்பிக் காணே.

இதுவுமது

சோகபகந்தரமூல முதிரச்சூலை
சூலைகுருதிக்குன்ம மசிர்க்குநோயா
நாகமூபயாட்டில் மெய்திமிரக்குன்ம
நாறுகயமிவைக் குறைகேளுன்காந்திரங்க
ளாகமகுமூர்ச்சை தவுல்லியகிரந்தி
யாமமிலபித்தஞ் சீதபித்தமுட்டி
யேகவருமதிமந்தஞ் சோமரோக
மிவைக்குறையும் மதியுண்ணிளினிமீளாவே.

இதுவுமது

வாந்திவிக்கல் கணமாந்தம் பேதிகட்கு
மண்டலமென் றுரைவாதங் காமிலங்கட்
கேந்திரு மண்டமுறை பற்பாண்டுசோபை
யென்மகோதரம்பிரி துனிக்கட்கூக்க
மோய்ந்திடமும்மண்டல நல்லுரைநாட்சென்று
மொழிவில்சுரங்கட்குறை மண்டலநான்குன்னி
மாந்திடபோமித்திரனே சகலநோய்க்கு
மருந்துாட்டின்மீட்டுமவை வாட்டாவாரே.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) சுக்கிலநட்டம் அபஸ்மாரம் சுவாசகாசம் உன்மாதம் என்னும் பிணிகளுக்கு ஒவ்வொரு வருஷகாலமும் கிரிச்சுரம் துஷ்டவிரணம் அஸ்மரிமதுமேகம் இவைகளுக்கு 10-மாதமும், உதரவர்த்தம் பக்ஷகாதம் 7-வகை வித்திரிதிக்கட்டிகள் இவைகளுக்கு 6-மாதமும், பகந்தரம் மூலம் ரத்தசூலை வாதசூலை ரத்தகுன்மம் அசிர்ச்சரம் ஆநாகம் அஷ்டிலம் பிரத்தியஷ்டிலம் திமிரம் குன்மம் சயம் இவைகளுக்கு 4-மாதமும், இருதர விருதவாதம மூர்ச்சைதவுல்லிய விரணம் ஆமில பித்தம் சீதபித்தம் பசியைக்கொடுக்கின்ற அலசம் சோமரோகம் இவைகளுக்கு 3-மாதமும், வாந்தி விக்கல் கணம் மாந்தம் அதிசாரம் இவைகளுக்கு 3-மண்டலமும், வாதம் காமாலை இவைகளுக்கு 2-மண்டலமும், பலவகைப்பாண்டு சோகை அஷ்டமகோதரம் துனிபிரதிதுனி இவைகளுக்கு 3-மண்டலமும், புராணசுரத்துக்கு 4-மண்டலம் ஔஷதங் கொடுக்கவேண்டும். இவ்வாறே மற்றரோகங்களுக்கு எண் என்கிற சாஸ்திர விதிப்பிரகாரம் ஔஷதம் ஊட்டில் மறுபடியும் அப்பிணிகள் ரோகியை வருத்தாவாங் என்க. 1258

பத்தியவகை

கஷாயம் சுரசம் ஸ்நானபானங்களுக் குரியசலம்
இவைகளின் உஷ்ணநிதானம்-விருத்தம்

சுத்தநற்குடிநீர்காண்டஞ் சுரசமுண்டிடினுரைதைக்கு
மெத்தவுஞ்சூடாம்பித்தம் வெப்பிரத்தஞ்சந்நிக்கு
முத்தமங்குளிர்ச்சியாகு மேரங்கைக்குச்சிறியசூடாங்
கொத்தடர்தொந்தநோய்க்குக் குறிசமோட்டினமாங்கூரே.

(இ-ள்.) பரிசுத்தமாகிய நல்ல கஷாயம் வெந்நீர் சுரசம் முதலியவைகளை அருந்துமிடத்து வாதநோய்க்கு மிகுந்த உஷ்ணமும் பித்தம் சுரம் சத்தியோவிரண ரத்தம் சந்நிபாதம் இவைகட்குக் குளிர்ச்சியும் அதிகரித்த சிலேஷ்மநோய்க்கு அற்பச்சுடுகையும் தொந்தநோய்க்குச் சமவெப்பமும் உத்தமமாம் என்க. சமவெப்பம் என்பது அதிக உஷ்ணம் குளிர்ச்சி இளஞ்சுடுகை என்னும் மூவகை நீரையும் சமமாகக் கலப்பதாம். 1259

பிணியாளர்க்குத் தயிர்தோய்க்கும் விதி-வெண்பா

காற்றெழிக்கக் கோட்டையுமக் காலொடு சேரையென்னுங்
கூற்றெழிக்கச் சுக்குங் குறுமிளை-மூற்றடுபித்
தம்மொழிக்க கட்டியும்பா றன்னிதிட்டுத் தோய்ப்பர்பத்தி
யம்மொழிக்க மாட்டாத வர்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) தயிரைமோரை நீக்காதரோகிகள், வாயுவைநீக்குதற்கு இஞ்சியும் வாதகபத்தை ஒழித்தற்குச்சுக்கும் சிறுமிளகும் பித்தத்தை விலக்குதற்கு வெல்லமும் பாலிலிட்டுக்காய்ச்சி தயிர்தோய்ப்பார்கள். ()

பிணியாளர்க்கு மோர்சேர்க்கும் விதி

கிரிச்சரந் தனக்குவெல்லங் கேள்பாண்டு நோய்க்கு
மரிப்பேதி கட்குஞ் சுக்காகு-மெரிப்பான்
மேகந் தனக்குத்தேன் மிக்குபிணி கட்கிளையு
ளேகங் கொடிவேலி யூட்டு.

(இ-ள்.) கிரிச்சரத்துக்கு வெல்லமும், பாண்டுவாதாதிசாரம் முதலியநோய்கட்குச் சுக்கும், மேகத்துக்குத்தேனும், மந்தாக்கினியாற் பிறந்த ஏனையரோகங்களுக்குச் சித்திரமூலப்பட்டையும், தயிரில் பிரமாணமாக ஊரவைத்துக் கடைந்தமோரைக் கூட்டவேண்டும். 1261

மருந்துண்பார்க்கு ஊருகாய்வகை

சுண்டைநெல்லி தேருகளா தூதுளை பாவட்டையா
தொண்டை நாரந்தங்கச் சறிஞ்சி-பண்டைநாட்
சென்ற வருணக்காயுஞ் சேரூரு காயென்னிற்
தின்ற மருந்தினமுறா தே.

(இ-ள்.) சுண்டை நெல்லி தேற்றான் களா தூதுளை பாவட்டை ஆதொண்டை எலுமிச்சை இக்காய்களும் நாரத்தம்பிஞ்சும் இஞ்சியும் நாட்பட உப்பில் ஊறவைத்துப் புசித்தால் தின்ற மருந்தின் குணங் கெடாது. 1262

அயச்செந்தூரத்தின் பத்தியம்-விருத்தம்

பத்தியந் திலங்கூஷ்மாண்டம் பரங்கிகொள் கடுகுதோரை
கத்திரி பிரமபத்திரி கட்கஞ்சா வபினிமாதர்
சுத்தமா காதுபாநெய் துயதிடலாம் புளிப்புப்
புத்தம மகற்றலானு லுத்தமம் பழுதுமின்றே.

(இ-ள்.) அயச்சிந்தூரத்துக்கு பூசினி கொள் கடுகு மூங்கிலரிசி கத்திரி புகையிலை கெஞ்சா அபினி இவை ஆகாவாம். புணர்ச்சியோவெனில் பரிச்சேதங்கூடாது. பசுவின்பாலும் ஆகும். அதில் புளிப்பும் உப்பும் நீக்கினல்உத்தமம். அன்றியும் உத்தமமாகிய அம்மருந்துபழுதுபடாது

காந்தச் சிந்தூரத்தின் பத்தியம்-விருத்தம்

பத்தியம் புளியுப்பின்றேற் பலிதமாம் வாரத்துள்ளே
நத்திடி லிரண்டுமார நவிலுமிச்சா பத்தியங்கொள்

Digitized By Roja Muthiah Research Library

கத்திரிக்கா யகத்தி கடுகுகூஷ்மாண்ட மெள்ளு
கொத்தவரைக் காய்மாங்காய் கூலக்கா யிவையாகவே.

(இ-ள்.) காந்தச்சிந்தூரத்துக்கு புளி உப்பு நீக்கில் 1-வாரத்துக்குள் பயனைத்தரும். அவைகளை விரும்பினால் இச்சாபத்தியத்துடன் 2-வாரம் உண்ணவேண்டும். இச்சாபத்தியமாவது கத்திரி அகத்தி கடுகு பூசனி திலம் கொத்தவரை மாங்காய் பலாக்காய் இவைநீக்கவும். 1264

தாம்பரபஸ்பத்தின் பத்தியம்-விருத்தம்

புளியொன்று தவிரவெல்லாம் புசிக்கினு நவையுறாது
இளைபெரு நெருப்புக்கீர மில்லையென்பது போலாகு
மளைமுசலி குசங்காடி யாமிலமடாது பாகற்
சுளையற மகட்பழம்நெய் சுதைசருக்கரை மானன்றே.

(இ-ள்.) தாம்பரபஸ்பத்திற் புளிப்பு ஒழிந்த மற்ற சுவையுள்ள பதார்த்தங்களையெல்லாம் உண்ணினும் குற்றம்வராது. ஏனெனில் நீரைவறட்டுகிற பெரு நெருப்பிற்கு ஈரமில்லை என்பதுபோலாம். ஆனால் புளித்ததயிர் முயற்கறி எலுமிச்சம்பழம் காடி நெல்லிக்காய் இவை கூடாது. பலாச்சுளை வாழைப்பழம் பசுநெய் பால் சர்க்கரை இவை நலமாம் என்க. 1265

பாதரசத்தின் பத்தியம்-வெண்பா

மற்சமுப்பு சீதோட்டின் மந்தாதிவத் தெண்ணெய்
துற்ச மத்தியங்கைப்பு தொங்குபுளியைச்-சாற்றுங்
கூட்டாமற் சூதங் கொடுப்பருண்டாரை நமன்பாற்
காட்டாமற் றுமிருத்தக் காண்.

(இ-ள்.) ரசத்திற்கு மீன் லவணம் சீதளவெப்பமுள்ளபண்டம் அக்கினிமந்தவஸ்து எண்ணெய்கள் கசப்பு புளிப்பு இவைகூடாவாம். ()

பறங்கிப்பட்டையின் பத்தியம்-விருத்தம்

மஞ்சளோ டெண்ணெய்பாக்கு மாங்கிச மனுவாகார
மிஞ்சிகார் கடுகுகைத்த விழிவுறு புளிமண்ணுப்பு
மஞ்சுறு வாளைகோலா மடவைமீன் சன்னைவெளவால்
சிஞ்சித மருந்தினுலுங் கெடும்பறங்கித் தோன்மாதோ.

(இ-ள்.) பறங்கிப்பட்டைக்கு கறிமஞ்சள் நல்லெண்ணெய் களிப்பாக்கு மிருகமாசிசம் காரம் இஞ்சி கடுகு கசப்பு புளிப்பு லவணம் இவைகளும் கோலா மடவை சன்னை வெளவால் முதலிய மீன்களும் லவவேசமும் சேரலாகாது. சேரில் அம்மருந்தின் தன்மை கெடும். ()

Digitized By Roja Muthiah Research Library

தைலங்களின் பத்தியம்-விருத்தம்

புலர்த்திய பின்பருந்து போசனந் தனிற்புளிப்பு
சலத்துறு ததிபால்பாகல் சரகம்மீ னிறைச்சியச்ச
நிலத்தெழு பிரமபத்திரி நித்திரை மடவாரின்னு
நலத்துறு வகைநீக்குப்பின் னுளும்பத் தியத்துணில்லே.

(இ-ள்.) தையிலமாடி யீரந்துவட்டியவுடன் நீ உணவில் புளிதயிர் பால் பாகற்காய் இலேக்கரி மச்சவகை மாமிசங்கள் அகத்தி புகையிலே பகல் நித்திரை புணர்ச்சி யின்னும் தகாதநடத்தை இவைகளை நீக்கு வதுந்தவிர மறுநாளிலும் பத்தியமாயிருக்கக் கடவை என்க. 1268

முக்கியமாக மருந்துகளுக்குதவாத வஸ்துக்கள்-வெண்பா

சிந்தக் கனிமிகுந்த சீவனந்தாம் பூலம்வெல்லம்
பந்தப் பயற்றுப் பருப்புமோர்-சிந்து
கடலே யிவையற் றுரைகறித் திடார்தங்க
ளுடலே யிவையத்திருத்தா ருன்.

(இ-ள்.) எவ்வித மருந்துகளுக்கும் முக்கியமாக உதவாத பதார்த் தங்களாவன புளி அதிகஜலபானம் அடைக்காய் கன்னல் வெல்லம் காராமணிப் பருப்பு மோர் கடலேப்பயறு ஆகிய இவைகளாம் 1269

பத்தியபதார்த்தங்கள்-விருத்தம்

பொன்னுங்காணிசிறுகீரை புதியநறுநெல்வரால்குறவை
சொன்னேங்கோவைகாய்வற்றல் சுண்டையவரைப்பிஞ்சுடனே
பன்னுவப்பைவெள்ளுள்ளி பரியமுருங்கையிளம்பிஞ்சும்
நன்னீர்விளேத்தசிறுபயறு நன்மாங்காய்க்குட்பிஞ்சுநன்றே.

இதுவுமது

அத்திப்பிஞ்சுகருவாழை யதன்றன்பிஞ்சுபூவாகுங்
கத்தித்திரியுமுக்குருவி காடையுடனேசிவலாமை
சுத்தமாங்காய்நறும்பருப்புஞ் சுறுமீன்றிருக்கைக்கருவாடாம்
பத்தியத்திலிவைதவிறப் பச்சைமீன்கள்பகையாமே.

இதுவுமது

வேண்டியமருந்துண்பார்கள் விராலொடுகுறவைதேளி
யாண்டிடுமயிரையூடா னுனைசன்னேயுஞ்சுதும்பு
மீண்டிடுமிருகெய்த்தோலி யிவைகளேயருந்துங்காலே
மீண்டிவையுலர்ந்ததாகும் விரைமலர்க்குழலினளே.

Digitized By Roja Muthiah Research Library

இதுவுமது

காடையுடும்புகவுதாரி காட்டினெலியுமூர்க்குருவி
யாடுவிரும்பில்வெள்ளாடா மதுவுமுலர்த்திக்கறிகொள்ளு
நாடுதனில்வாழ்வரால்குறவை நலமாமிவையுமுலர்த்திக்கொள்
கூடுங்கூடாதென்றோதே கூட்டின்மருந்துங்குணந்தருமே.

(இ-ள்.) வாசனைபொருந்திய கூந்தலாளே! பத்திய பதார்த்தங்களாவது பொன்னாங்காணி சிறுகீரை அன்றுருக்கிய பசுநெய்கோவை சுண்டை முதலிய வற்றல்கள் அவரைப்பிஞ்சு அப்பைக்கோவைக்காய் வெள்ளைப்பூண்டு முருங்கைப்பிஞ்சு பனிப்பயறு மாவடு அத்திப்பிஞ்சு கருவாழைக்கச்சல் ஷை-பூ-மாம்பருப்பு ஆகிய இவைகளும், ஏரிவரால் குறவை சிட்டுக்குருவி காடை கவுதாரி ஆமை விலாங்கு கடல்குறவை தேளி அயிரை ஊடான் சன்னை சுதும்பு சிறியநெய்த்தோலி பெரிய நெய்த்தோலி உடும்பு காட்டெலி இவைகளின் கறிகளும் சுறாதிருக்கை காடை கவுதாரி ஊர்க்குருவி வெள்ளாடு இறா குறவை இவற்றின் கருவாடுகளும் ஆகும் என்க. 1270

பேதியைக்கட்டுகிற பதார்த்தங்களின் விருத்தம்

மானேவயிறுகழிவார்க்கு வாழைக்கச்சலத்திக்காய்
தானேதிரியுமூர்க்குருவி காடையுடும்புகவுதாரி
தானேயாகுமுயலுலரிற் றக்குளத்துக்கருவாடா
மீனேவிரும்பித்தின்பீரால் வீணேயுயிரையிழந்தீரே.

(இ-ள்.) அதிசாரரோகிகட்கு வாழைப்பிஞ்சு அத்திப்பிஞ்சு சிட்டுக்குருவி காடை உடும்பு கவுதாரி முயல் குளத்துக்கருவாடு என்னுமிவைகள் ஆகும். பச்சைமீனையருந்தில் உயிருக்கு அபாயம். 1271

பேதியாகிற பதார்த்தங்கள்-வெண்பா

காரா மணிக்கீரை காட்டுப் பறங்கியிலை
பேராம் பெரும்பயற்றின் பேரிலைகள்-சீரா
ரகத்தி பெருங்கத்திரிக்கா யாயிழையே மீன்கள்
பகைத்ததிக பேதிதரும் பார்.

(இ-ள்.) ஆபரணமணிந்தபெண்ணே! காராமணி பறங்கி பருங்காராமணி அகத்தி என்னும் இக்கீரைகளும் கத்திரிக்காயும் பச்சைமீன்களும் மிகுபேதியை உண்டாக்கும். 1272

பத்தியாபத்திய பதார்த்தங்களின் விருத்தம்

மயறிகுறவைவரால்தேளி மற்றும்குறவைநாய்க்கெளிறு
அயிரைசன்னைபத்தியமா மகரமீன்களினிக்கேளு

Digitized By Roja Muthiah Research Library

முயரும்வாளையிறல்கூனி யோங்கும்கெளிறுவிலாங்குகெண்டை
கயலோடிவைகளாகாவாங் காரார்குழலேகண்டுரையே.

(இ-ள்.) கறுத்த கூந்தலாளே! பத்தியபதார்த்தமாவன மயறி குறவை வரால் தேளி ஆற்றுக்குறவை நாய்க்கெளிறு அயிரை சன்னை என்னும் மீன்களாம். அபத்தியமீன்களாவன வாளை இருசன்னக்கூனி பருங்கெளிறு பரும்விலாங்கு பருங்கெண்டை சேற்கெண்டை என்னு மிவைகளாம் என்க. 1273

அபத்திய பதார்த்தங்களின் விருத்தம்

கொள்ளுகாடிகுமட்டிக்காய் கோழிபன்றிகொக்குடனே
முள்ளிற்பெரியபாகற்காய் முதிருமவரைபயற்றங்காய்
பள்ளத்தெழுந்தமடற்சேம்பு படரும்வள்ளிபாலையிவை
யெள்ளத்தனைதான்றின்பீறே லெல்லாமருந்துமிழந்தீரே.

இதுவுமது

மாங்காயிளநீர்மாதுளங்காய் மாவின்பண்டம்புளிகடுகு
தேங்காய்நெய்பால்கிழங்குபழந் தின்னுங்காயம்வெங்காய
மீங்காதரிக்குஞ்சுராபான மீச்சங்கள்ளுபனங்கள்ளு
மாங்கேயிவற்றுளொன்றேனு வருந்தாதிருந்தால்மருந்தாமே.

(இ-ள்.) அபத்திய பதார்த்தங்களாவன கொள்ளு காடி குமட்டிக் காய் சேவல் வராகம் கொக்கு கொம்புப்பாகல் முத்தின அவரைக்காய் காராமணிக்காய் சேப்பங்கிழங்கு வள்ளிக்கிழங்கு பாலைக்கீரை மாங் காய் இளநீர் மாதுளங்காய் மாப்பலகாரம் புளி கடுகு தேங்காய் எருமை நெய் கிழங்குகள் முப்பழங்கள் பெருங்காயம் வெங்காயம் கள்ளு ஈச்சங்கள்ளு பனங்கள்ளு என்னும் இவைகளாம். 1274

வாதரோகாரி வஸ்துக்கள்-வெண்பா

செங்கழுநீர் கோட்டந்தேன் மிளகுநல் லெண்ணெய்
தங்குபெருங் காயந் தழுதாழை-யெங்கெங்குங்
கூட்டுசிறு முத்துநெய் கோதிலுழுந் திவைகள்
வாட்டும வாதத்தை மதி.

(இ-ள்.) செங்கழுநீர்க் கிழங்கு கோஷ்டம் குறிஞ்சித்தேன் மிளகு எள்ளின்நெய் பெருங்காயம் தழுதாழையிலை சிற்றாமணக்கு யெண் ணெய் உளுந்து ஆகிய இவைகள் வாதரோகத்தைப்போக்கும். 1275

பித்தரோகாரி வஸ்துக்கள்-விருத்தம்

கொம்மட்டிவாழைப்பன்னன் கொளுத்தியகரியினோடே
விம்மியதண்ணீர்விட்டான் வேரெனுங்கிழங்குசாந்தஞ்

Digitized By Roja Muthiah Research Library

செம்மைசேர்நெல்லிமுள்ளி சேருமிம்மருந்தெல்லாமே
கம்மியபித்தத்திற்குக் காலனென்றோதுவாரே.

இதுவுமது

செம்புநாவல்பீத்தாருச் சருமமுமுத்தக்காசுஞ்
செம்பருத்தியுற்செழித்த தெங்கிளம்பூவுங்கன்ன
லம்புயத்தாதிஞேடே யதனுறுவளேயநெய்தல்
வெம்பியசீலைச்சாம்பல் வெள்ளைப்பூசினக்காயென்னே.

(இ-ள்.) கொளுஞ்சு நாரத்தம்பழம் வாழைச்சருகுசுட்டகரி தண்ணீர்விட்டான் கிழங்கு சந்தனம் நெல்லிமுள்ளி சம்புநாவல் பெருமரப் பட்டை கோரைக்கிழங்கு செம்பருத்தி தென்னம்பூ கருப்புதாமரைப் பூவினது கரந்தம் மேற்படிவளேயம் செங்குவளைக்கேசரம் வஸ்திரஞ் சுட்டசாம்பல் கலியாணப் பூசினிக்காய் இவை பித்தத்தை நீக்கும். ()

சிலேஸ்மரோகாரி வஸ்துக்கள்-வெண்பா

ஆவினது பாலரத்தை முள்ளங்கி மயிற
றாவிநறுஞ் சாம்பல் தூதுளந்தேன்-மாவோமந்
துய்ய சருக்கரை துழாய்விதை விளாம்பழமு
மையமதை யோட்டு மறி.

(இ-ள்.) பசும்பால் தும்பராஷ்டம் முள்ளங்கி மயிலிறகுச் சாம்பல் தூதுளைச்சமூலம் மலைத்தேன் ஓமம் வெள்ளைச்சருக்கரை துளசி விதை விளாம்பழம் முதலியவைகள் சிலேஷ்மரோகத்தை விலக்கும்.()

மூலரோகாரி வஸ்துக்கள்

மருள்சா ரடைகருணை வச்சிரவல்லி காட்டுக்
கருணை விளிநரளை காராக்-கருணை
மெருகோடு வெள்ளறுகு வெண்சித் திரமூலம்
மருமூலம் போக்கு மருந்து.

(இ-ள்.) மருட்கிழங்கு வெண்சாரட்டை சமூலம் கருணைகிழங்கு பிரண்டை காட்டுக்கருணை புளிநரளை காராக்கருணை மெருகின்கிழங்கு வெள்ளறுகு வெண்சித்திரமூலம் முதலியவை மூலரோகத்தை நீக்கும்.

விஷாரி வஸ்துக்கள்

பேய்ச்சுரை பேய்க்கொமட்டி பேய்பீர்க் கொடுதுமட்டி
பேய்ப்புடலை யுங்கழிஞ்சிற் பேரறிவு-வாய்த்தமலை,
வேம்பு சிவனார்வேம்பு வெள்ளெருக்கு வெள்ளருகு
சோம்புவிடம் போக்குமெனச் சொல்,

LIBRARY SERVICE INDIA
KOTTAIYUR-623106.
TAMILNADU. INDIA.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) பேய்ச்சுரை பேய்க்கொம்மட்டி பேய்ப்பீர்க்கு தும்மட்டி பேய்ப்புடல் புங்கு அழிஞ்சினுல் காட்டவுரி மலைவேம்பு சிவனார்வேம்பு வெள்ளெருக்கு வெள்ளெறுகு இவைகள் விஷவேகத்தை நீக்கும். ()

பித்தசம திரவியம்

மொச்சை கடலைபெரு முற்கழுந் தேலம்வெந்தி
மெச்சுமிளகு சுண்டை வெண்ணெயிஞ்சி-பச்சைநிறங்
காட்டுமப்பைக் கோவை கருநிம்பஞ் சீரகங்கள்
கூட்டுக்கறி பித்தசமங் கூறு.

(இ-ள்.) வெள்ளை மொச்சைக்கொட்டை கடலை பெருங்காராமணி உளுந்து ஏலம் வெந்தியம் மிளகு சுண்டைக்காய் பசுவின்வெண்ணெய் இஞ்சி அப்பைக்கோவைக்காய் கருவேப்பிலை சீரகம் முதலியவைகள் சேர்ந்த பதார்த்தங்களால் பித்தகோபம் சாந்தியாகும் என்க. 1280

திரிதோஷசம திரவியம்-விருத்தம்

ஒன்றியவாதபித்த கபமிவையுராவண்ண
நன்றுறுகறிகளெல்லா நாளுமேசமைப்பராய்ந்தோர்
தின்றிடுமிளகுமஞ்சள் சீரகமுயர்ந்தகாயம்
வென்றிகொள்சுக்கோடேலம் வெந்தயமுள்ளிசேர்த்தே.

(இ-ள்.) மிளகு மஞ்சள் சீரகம் பெருங்காயம் சுக்கு ஏலம் வெந்தியம் வெள்ளைப்பூண்டு இவைகளை நல்லபதார்த்தங்களில் விதிப்படி சேர்த்துத் தினமுமுண்ணில் திரிதோஷம் ஒன்றுக்கொன்று மீறுவாம்.

அறுசுவைமிருதிக் குணம்-வெண்பா

புளிதுவர் விஞ்சுங்கறியாற் பூரிக்கும் வாதந்
தெளியுவர்கைப் பேரில்பித்துச் சீறுங்-கிளிமொழியே
கார்ப்பினிப்பு விஞ்சுற் கபம்விஞ்சுஞ் சட்டிரதச்
சேர்ப்புணரி னோயணுகா தே.

(இ-ள்.) கிளிமொழியாளே! புளிப்பும் துவர்ப்பும் அதிகரிக்கில் வாதம் அதிகரிக்கும். உப்பும் கசப்பும் அதிகரிக்கில் பித்தம் அதிகரிக்கும். உறைப்பும் தித்திப்பும் அதிகரிக்கில் சிலேஷ்மம் அதிகரிக்குமாதலால் அறுசுவைகளையும் கிரமமாகப் பதார்த்தங்களில் சேர்த்துண்ணிற் பிணிகள் சாராவாம் என்க. 1282

காலைக்கறிக்கான பயறுமுதலியவை

காலைக் கறிக்காகுங் காராமணி யுளுந்து
துலக் கடலை துவரையெள்ளு-கோலமொச்சை

Digitized By Roja Muthiah Research Library

தட்டைச் சிறுபயறு தாழ்வில் கடுகுகறி
யிட்ட சுக்குகாய மிவை.

(இ-ள்.) காலைப் பதார்த்தங்களுக்குதவும் பயறு முதலியவையா வன காராமணி உளுந்து கடலை துவரை திலம் மொச்சைக்கொட்டை தட்டைப்பயறு கடுகு மிளகு சுக்கு பெருங்காயம் இவைகளாம். 1283

மத்தியானகாலக் கறிவகை

கந்த வருக்கங் கனிவருக்கம் வாதமெழு
மந்தவருக்க மாந்தமாம் வருக்கங்-கந்தமுறு
தண்ணடைவருக்கந் ததிமோ ரிவையென்று
ணுண்ணடையாற் றேடமறு மோர்.

(இ-ள்.) மத்தியான போஜனத்தில் கிழங்குவகைகள் பழங்கள் வாதவஸ்துக்கள் மந்தபதார்த்தங்கள் மணமும் சீதளமுமுள்ள இலைக்கறிகள் எருமைத்தயிர் மோர் முதலியவைகளை யுண்ணினும் சூரியவெப்பத் தினாலும் தேகஉழைப்பினாலும் அவைகளின்தோஷம் நீங்கும். 1284

இராக்காலக் கறிவகை

அவரைப் பிஞ்சத்திக்கா யாப்பான் முருங்கை
துவரைப் பருப்பாற்றுத் தோணி-யெவரையுமோ
கண்டா விழுக்குந் தடத்தூ துணமிவையா
லுண்டா விழுக்குமிலை யுண்.

(இ-ள்.) அவரைப்பிஞ்சு அத்திக்காய் பசுவின்பால் முருங்கைப் பிஞ்சு துவரம்பருப்பு ஆற்றுமுள்ளிக்காய் யாரையுமுட்களாலிழுக்கின்ற காட்டுத் தூதுளங்காய் முதலியவைகளை மாலைக்காலக் கறிகளாகவுண் ணில் குற்றமின்று. 1285

காலைமாலை போஜனத்தின் நெய் மோர் பேதம்

காலைக் கெருமைநெய்மோர் காரத்தோ டுண்ணலாம்
மாலைக்காவின் நெய்மோர் வார்த்துணலா-மேலையண்ட
வெப்பப்புக் காலம் விரவிவர லாற்றுகளி
லொப்பப் பகற்கனற்கண் டுண்.

(இ-ள்.) அண்டவெப்பம் பகற்காலத்திலும் குளிர்ச்சி இராகாலத் திலும் ஆக மாறிவருதலால் வாயுவான எருமைநெய் மோர் காரவஸ்து யிவைகளைப் பகற்காலத்தில் பசியைக்கண்டுண்ணலாம் உஷ்ணசம்பந்த மான பசுவின் நெய்மோர் இவைகளை இராக்காலத்தில் உண்ணலாம். குற்றமில்லை. 1286

46

Digitized By Roja Muthiah Research Library

வாதமுதலிய மூன்றுதேகிகட்கும் உப்புவகை

வாதபித்தை யென்றே வருதேகர்க்குக் கல்லுப்
போதவுப் பிந்துப்பா முணர்முறையோ-யோதவெள்ளம்
வற்றியவிந் துப்பதனை வாதமுத லோரருந்தக்
குற்றமிலைக் குற்றமிலைக் கூறு.

(இ-ள்.) வாததேகிக்குக் கல்லுப்பும் பித்ததேகிக்குக் கடலுப்பும் சிலேஷ்மதேகிக்கு இந்துப்புமாகும். வாதமுதலிய மூன்றுதேகிகளும் லவணத்திற்குபதில் இந்துப்பை சேர்த்துண்ண தோஷமில்லை. 1287

வாததேகிகட்குக் கறிவகை

மாட்டுப் பறங்கிவங்க மாமுருங்கை வெள்ளவரை
காட்டுக் கூரபிஞ்சு நற்கருணை-காட்டுளுறை
மாகருணை யுங்கருவில் வாதத் தெழுந்துவந்த
தேகருணு நற்கறியாந் தேர்.

(இ-ள்.) வாததேகிகளருந்துங் கறிகளாவன கலியாணப்பூசினிக் காய் கத்தரிக்காய் வழுதுளங்காய் முருங்கைப்பிஞ்சு வெள்ளவரைக்காய் மிதிபாகல் பிஞ்சு காராக்கருணை காட்டுக்கருணை என்பனவாம். 1288

வாததேகிகட்கு கீரைவகை

மேனிமுன்னை யாரைநறும் வேளைமணத்தக்காளி
யானைநெருஞ் சின்முசுக்கை யப்பைநெடுங்-கானிலுறை
மூக்குரட்டை நல்வசலை முன்பிவைக ளாற்கீரை
யாக்குவர் வாயுத்தேகர்க் காய்ந்து.

(இ-ள்.) வாததேகிகளுக்குக் கீரைகளான குப்பைமேனி முன்னை ஆரை நல்வேளை மணத்தக்காளி யானைநெருஞ்சில் முசுமுசுக்கை அப்பைக்கோவை காட்டுமூக்குறட்டை நல்வசலை இவைகளாம். 1289

வாததேகிகட்கு ரசவகை

சக்கரவர்த்தி வெள்ளைச் சாறடை பாகன்முருங்கை
தெக்கிளிளந் தண்டுநறுந் தூதுணம்வார்-மைக்குழலே
சீதமுறு காணியிவை செந்தளிர்க ளிற்றினமும்
வாததேகி கர்க்கிரசம் வை.

(இ-ள்.) கறுத்தகூந்தலாளே! வாததேகிகளுக்கு சக்கரவர்த்திக் கீரை வெள்ளைச்சாரடை பாகல் முருங்கை முளைக்கீரை நல்லதூதுணம் பொன்னாங்காணி இவ்விலைகளில் நித்தியமும் ரசஞ்செய்வாயாக என்க.

Digitized By Roja Muthiah Research Library

வாததேகிகட்கு வற்றல்வகை

சுண்டைக்காய் பேய்ப்புடற்காய் தூதுளங்காய் நெல்லிக்காய்
தொண்டை மணத்தக்காளி தூதுவளை-பண்டைதுள்ளிக்
காயிவற்றின் வற்றல்களிங் கான்பிரண்டை வற்றலுமாம்
வாயுதேகர்க் கறிந்து வை.

(இ-ள்.) வாததேகிகளுக்கு சுண்டை பேய்ப்புடல் தூதுணம் நெல்லி ஆதொண்டை மணத்தக்காளி வெள்ளவரை முள்ளி ஆகியகாய்களும் காட்டுப்பிரண்டையும் வற்றல் செய்வாயாக. 1291

வாததேகிகட்கு ஊறுகாய்வகை

நாரத்தை தான்றிகடு நற்றேற்று னீடுகளா
வேரோத்த புன்களா விவ்வகைக்காய்-காருப்பப்
பூறிய காயாகு முயரிஞ்சியும் மமையுங்
கூறனில தேகிகளுக் கு.

(இ-ள்.) வாததேகிகளுக்கு நாரத்தை தாண்டு கடு தேற்றான் பருங்களா சிறுகளா ஆகிய இவ்வகைக்காய்களும் இஞ்சியும் உப்புநீரி லூறியதாகும். 1292

பித்ததேகிகட்குக் கறிவகை-விருத்தம்

வெள்ளரி யிரண்டுபாகல் விரிபுடல் பீர்க்குசிம்பை
முள்ளரி பூசினிகத்தா் முருங்கைமா களவரம்பை
யெள்ளிலிக் காய்கள்வள்ளி யீருளிக் கதலிப்பூதன்
டள்ளியுண் ணுணஞ்செய்வ ரும்பித்த தேகர்க்கென்றே.

(இ-ள்.) பித்ததேகிகளுக்கு வெள்ளரி கொம்புப்பாகல் மிதிபாகல் நீளப்புடல் பீர்க்கு அவரை ஆற்றுமுள்ளி கல்யாணப்பூசினி கத்தரி முருங்கை பருங்களா வாழையாகிய இக்காய்களையும் வள்ளிக்கிழங்கு வெங்காயம் வாழைப்பூ டீ. தண்டு இவைகளைச் சாப்பிடலாம். 1293

பித்ததேகிகட்குக் கீரைவகை-கலித்துறை

புளியாரை கோவை முருங்கைவசலை நற்பொன்முசுட்டை
மிளகப்பையோரிதழ் தாமரைபாலை வெளிமுசுக்கை
வளர்தூதுணஞ்சுரை வல்லாரைசில்லி மணத்தக்காளி
தளிரிளங்கீரைகள் புத்தசுதேகிக டாமுண்பரே.

(இ-ள்.) பித்ததேகிகள் புளியாரை கோவை முருங்கை வசலை நல் பொன்முசுட்டை மிளகு அப்பக்கோவை ஓரிதழ்த்தாமரை பாலைகாட்டு முசுக்கை தூதுணம் சுரை வல்லாரை சிறுகீரை மனத்தக்காளியாய் இக்கீரைகளைப் போசனத்திற் சேர்த்தருந்துவர். 1294

Digitized By Roja Muthiah Research Library

பித்ததேகிகட்கு ரசவகை-வெண்பா

கொத்து வசலை கொடிவசலை நல்லகத்தி
தத்துபுனல் வழுக்கை தைவேளை-நெய்த்தராச்
சாகங்களை யவித்துச் சாறுவைத் துண்பார்பித்த
தேகங் களையுடையார் தேர்.

(இ-ள்.) பித்ததேகிகள் கொத்துவசலை கொடிவசலை வெள்ளை யகத்தி பிரமியவழுக்கை தைவேளை தரா ஆகிய இலைகளை வேகவைத்து இறுத்த சலத்திற்செய்த ரசத்தை உணவுடன் சேர்த்தருந்துவார். 1295

பித்ததேகிகட்கு வற்றல் வகை

சுத்தமுள்ளி பேய்ப்புடல் தூதுணங்காய் சுண்டைகண்டங்
கத்திரி பயற்றைமணத் தக்காளி-நித்தமுறு
கஞ்சம் வல்லாரையிவை காய்த்தநறுங் காய்வற்றல்
விஞ்சுபித்த தேகிகட்காம் விள்.

(இ-ள்.) பித்ததேகிகளுக்கு வெண்முள்ளி பேய்ப்புடல் தூது ணம் காட்டுச்சுண்டை கண்டங்கத்திரி பயற்றங்காய் மணத்தக்காளி தாமரை வல்லாரை ஆகிய இவ்வகைக்காய்களின் வற்றல்களாகும். ()

பித்ததேகிகட்கு ஊறுகாய்வகை-கலித்துறை

பச்சைமிளகிஞ்சி தூதுளங்காய்முப் பலநாரத்தங்
கச்சைதமரத்தம்புன்னை வடங்கவில தேற்றான்மா
கொச்சையிளம்பிஞ்சு மாகாளிக்கத்தங் கொளிஞ்சியெலு
மிச்சையுப்பூறியகாய்பித்த தேகர்க்குமிக்குநன்றே.

(இ-ள்.) பித்ததேகர்க்கு பச்சைமிளகு இஞ்சி தூதுணம் கடு நெல்லி தான்றி நாரத்தை தமரத்தை புன்னை ஆல் விலா தேற்றான் மா ஆகிய இவ்விளம்பிஞ்சுகளும் பருநன்னாரிக்கிழங்கு கொளுஞ்சி நாரத் தங்காய் எலுமிச்சங்காய் இவைகளும் உப்பில் ஊறில் மிகவுத்தமம். ()

சிலேத்மதேகிகட்குக் கறிவகை-விருத்தம்

கத்தரிபேய்ப்புட லவரையிருபாகல் பருங்களாகண்டங்காரி
யத்திக்காய்களும் வருக்கைமரபயற்றை சுரையால்பீர்க்கரும்பிஞ்சுவேர்
மொய்த்தசூரணங்கதலித்தண்டோடப் பூமுளங்கிமுருக்கரும்பு
மத்திபூசினிக்காயீருள்ளிவள்ளி யுங்கபத்தோர்க்காணமாமே.

(இ-ள்.) சிலேத்மதேகிகளுக்கு கத்திரி பேய்ப்புடல் அவரை கொம்புபாகல் மிதிபாகல் பெரியகளா கண்டங்கத்திரி அத்தி ஆகிய

இந்நான்கும் பலா பயற்றம்பிஞ்சு சுரை ஆல் பீர்க்கு இவற்றின் பிஞ்சு சுளும் கருணைக்கிழங்கு வாழைத்தண்டு வெடி பூ முள்ளங்கி முள்முருக் கினரும்பு கூஷ்மாண்டம் வெங்காயம் வள்ளிக்கிழங்கு என்னுமிவைக ளாகுமாம். 1298

சிலேத்மதேகிகட்குக் கீரைவகை

காரையிருகோவைமுன்னைசெம்மைபுடலை துயிலிவழுக்கைநெருஞ்சி லாரைபுளியாரைமுல்லைமருதநெய்தன் மேனிநல்வல்லாரைபொன்னு வாரைமுசுக்கைமுருங்கையிருபிண்ணாக் கோடுபண்ணைமணலிபிள்ளைக் கீரைமுசுட்டையுங்காராமணிமாடங் கடலைபுளிக்கிரிக்களாவே.

இதுவுமது-வெண்பா

வேளைமணத் தக்காளி மென்சீதை சக்கிரவர்த்தி
பீளைவசலை சுக்கு பெண்சுணங்கன்-வேளையிவைச்
செந்தளிர் காளைக்கீரை செய்வர்கப தேகர்நிதம்
வந்தளி யுணத்தான் மகிழ்ந்து.

(இ-ள்.) சிலேத்மதேகிகளுக்கு காரை அப்பக்கோவை வரிக்கோ வை பசுமுன்னை கருஞ்செம்பை பேய்ப்புடல் துயிலி பிரமி வழுக்கை நெருஞ்சில் நீராரை புளியாரை முல்லை மருதம் நெய்தல் குப்பைமேனி வல்லாரை பொன்னுவாரை முசுமுசுக்கை பெருபிண்ணாக்கு சிறுபிண் ணாக்கு பண்ணை மணலி முளைக்கீரை முசுட்டை காராமணி உளுந்து கடலை புளிப்புள்ளமலைக்களா வேளை மணத்தக்காளி பொன்னாங்காணி சக்கிரவர்த்தி பீளை வசலை சுக்கு கற்றாழை நாய்வேளை வேளை ஆகிய இக்கீரைகளைச் சமைத்துப் போசனத்தில் உண்பார்கள். 1299

சிலேத்மதேகிகட்கு ரசவகை

கந்தவோமஞ் செங்கடுகு சதகுப்பை தரா
வெந்தியங் கொத்தமலி வேளைசுக்கு-முந்தகத்தி
தூறு குறிஞ்சாபாக றும்மையிச் சாகங்கள்வெந்த
சாறுகப தேகர்க்காஞ் சாற்று.

(இ-ள்.) சிலேத்மதேகர்க்கு ஓமம் செங்கடுகு சதகுப்பை வெந் தியம் கொத்துமல்லி வேளை சுக்கு அகத்தி குறிஞ்சா பாகல் தும்பை ஆகியவற்றின் இலைகளை அவித்திறுத்த சலங்களில்வைத்த ரசங்கள் ஆகுமென்க. 1300

சிலேத்மதேகிகட்கு வற்றல்வகை

சுண்டைமணத் தக்காளி தூதுணம் புரண்டையா
தொண்டைமுள்ளி பேய்ப்புடலை தொண்டைசிம்மை-கண்டயுரு

Digitized By Roja Muthiah Research Library

கத்திரி நெல்லிப்பிஞ்சு கானரந்தம் பிஞ்சிவகை
ளோத்த வற்றலெயத்தேகர்க் குன்.

(இ-ள்.) சிலேத்மதேகர்க்கு சுண்டை மணத்தக்காளி தூதுணம் புரண்டை கோவை முள்ளி பேய்ப்புடல் ஆதொண்டை அவரை கண்டங்கத்திரி இக்காய்களும் நெல்லி காட்டுநாரத்தைப் பிஞ்சுகளும் வற்றல் செய்யலாம் என்க. 1301

சிலேத்மதேகிகட்கு ஊறுகாய் வகை

மஞ்சண் மிளகுசுண்டை வாழைத்தண் டோடுமாம்
பிஞ்சாலம் பிஞ்சத்திப் பிஞ்சுகளும்-விஞ்சுகப
நாசநூந் தூதுணமு நெய்யபாகற் பிஞ்சு
மூறுகாய்த் தேகர்க் கோர்.

(இ-ள்.) சிலேத்மதேகிகளுக்கு பசுமஞ்சள் மிளகு சுண்டை வாழைபிளந்தண்டு மாம்பிஞ்சு அத்திப்பிஞ்சி கபநாசனி என்கிற தூதுணம் மிதிபாகற்பிஞ்சு ஆகிய இவற்றின் ஊறுகாய்கள் ஆம். 1302

காலதேகங்களுக்கு அவிரோத பதார்த்தம்

எல்லாக் கறிகளுமே யெல்லுக்கா மல்லுக்கா
மெல்லாக் கறிகளுமெல் லார்க்குமாம்-பொல்லாக்
கறிகளுக்குச் சத்துரு கலந்தமைத்து நன்றாங்
கறிகளுக்குள் வைத்தருந்துங் கால்.

(இ-ள்.) தோஷமுள்ள பதார்த்தங்களை அவைகளுக்குச் சத்துருவாகிய வஸ்துக்களால் தோஷத்தைநீக்கி அந்த பதார்த்தங்களை நற்குணங்களையுடைய பதார்த்தங்களுடன் வைத்துக்கொண்டு உண்ணில் பகல் இரவு என்னும் இரண்டு காலங்களுக்கும் வாதமுதலிய மூன்று தேகிகளுக்கும் விரோதஞ்செய்யாமல் அவைகள் சவுக்கியந் தரும். ()

இவ்விதநோய்க்குத் தாம்பூலங்கூடாதெனல்

மதமூர்ச்சா ரோக மகாசன்னி பாத
மதிரூட்சை சுட்கநோ யாறு-முதிர்விடங்கள்
பித்தங் கயஞ்சிரநோய் பேசுமிவைக் காகாது
சுத்தந் தாம்பூலமெனச் சொல்.

(இ-ள்.) மதரோகம் மூர்ச்சை அபிநியாச சந்நிபாதம் தாபச்சுரம் அதிசுஷ்கரோகம் தேகத்திலூறிய விஷங்கள் பயித்தியம் க்ஷயம் சிரஸ்தாபம் ஆகிய இவைகளுக்குப் பரிஷ்காரமாகத் தாம்பூலங் கூடாது. ()

Digitized By Roja Muthiah Research Library

இவ்விதநோய்க்கு நெய் கூடாதெனல்

தருண சுரஞ்சந்நி சலதோடந் தோட
மருணம கோதரமா நாகம்-வருணவெதி
சாரங்க வினவுரை தாவரிக்குன் மங்களுக்கா
தாரங்க வினவுரை தள்.

(இ-ள்.) தருணசுரம் சன்னிபாதம் நீர்க்கோவை சப்ததோஷம் பெருவயிறு ஆநாகம் ரோகம் பேதி தொனிகத்தவாதம் குன்மம் என்னும் இவை அதிகரிப்பதற்கு நெய்யே காரணமாதலால் அதனைத் தள்ளுவாயாக என்க. 1305

இவ்விதநோய்க்குத் தயிர்கூடாதெனல்

குட்டமதைப் பக்கிநோய் குன்மங் காமாலைமந்தந்
துட்ட விடுசிக் களச்சூர் சோபைகபங்-கெட்டசுர
மீரமிவை பீநசம்பி லீகம்புண் பாண்டெடாடதி
சாரமிவைக் கில்லைத் ததி.

(இ-ள்.) குறைநோய் வீக்கம் நேத்திரரோகம் வாதகுன்மம் காமிலம் அலசம் விஷஉசி களப்பிணி சோபை சலதோஷம் விஷம் சுரம் பீனசம் பிலீகம் கிரந்தி பாண்டுபேதி இவைகளுக்குத் தயிர்கூடாது. ()

தற்காலபலாபல பதார்த்தம்

திரிபதார்த்தம் பலமே செய்யு முடனே
திரிபதார்த்த மபலஞ் செய்யுந்-தெரிமுறையே
சிதவம் புணர்ச்சியூன் றேனுசொறி றும்பா
லாதவம் புணர்ச்சி தைலம்.

(இ-ள்.) குளிர்ந்தசலம் நாவுக்குருசியைத் தெரிவிக்கின்ற மாமிசம் பசும்பால் இந்த 3-ம் தற்காலபலத்தைச் செய்யும். கடூரவெய்யில்புணர்ச்சி நற்றயிலஸ்நானம் இந்த 3-உடனே துர்ப்பலத்தைச் செய்யும். ()

வீட்டின்வகை

சோர்னவீட்டின் குணம்

மேனிதனிற் காந்தியெழில் வீறுமூத ராக்கினியு
ஞானமுமே தோதாது நண்ணுங்காண்-வானே
மிகைசேர் சகலகுண விர்த்திகளும் விர்த்தி
தகைசேர்சோர் னத்தினில்லத் தால்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) மான்போன்ற விழியாளே! சொர்னவீட்டில் வசிப்பவர்களுக்கு சரீரத்தில்தேஜசு அழகு ஜடாக்கினி அறிவு மேதோதாது பற்பலசிறப்பு இவைகள் விருத்தியாம். 1308

கருங்கல் வீட்டில் குணம்

அலங்காரமு மதமு மக்கினியு நீங்குந்
துலங்கா தவமுந் துலங்கா-திலங்க
வருங்கலகப் பித்து மனத்துயர நோயுங்
கருங்கலகப் பித்தார்க்குக் காண்.

(இ-ள்.) கருங்கல்வீட்டில் வாசமாயிருக்கும் வெரியர்களுக்கு உலகில் விளங்குகின்ற சூரியகிரணமுஞ் சந்திரகிரணமுமில்லை. அதனால் அழகும் வீரியமும் உதராக்கினியும் நீங்கிவிடும். கலகஞ்செய்கின்ற பித்தமும் மனத்துன்பமும் சிலேஷ்மரோகமும் மிகுதியாக உண்டாம்.

மேல்வீடு ஓட்டுவீடு புல்வீடு-இவைகளின் குணம்

நீட்டையுரு மேல்வீடு நீணிலவெப் போடுபல
வேட்டை யொழிக்குங்காண் மிக்கெழிலா-லோட்டையுரு
கல்வீ டுயர்வென்னுங் காலிமஞ்சாரா நலத்தாற்
புல்வீ டுயர்வாம் புகல்.

(இ-ள்.) உயர்ந்த மெத்தைவீடானது பூமியின் உஷ்ணத்தோடு விஷஜெந்து மிருகமுதலியவைகளால் உண்டாகிற பலவித துன்பங்களையும் நீக்கும். ஓட்டுத்தடுக்குள்ள கல்வீடானது அழகினுலுயர்வுரினும் காத்தும் பனியும் சாராத நன்மையினால் விழல்தடுக்குவீடே உயர்வாம்.

காலைவிழிப்பின் குணம்

புத்தி யதற்குப் பொருந்து தெளிவளிக்குஞ்
சுத்த நரம்பினற்ற றாய்மையரும்-பித்தொழியுந்
தாலவழி வாதபித்தந் தத்தநிலை மண்ணுமதி
காலைவிழிப் பின்குணத்தைக் காண்.

(இ-ள்.) உதயகாலத்தில் விழிப்பவர்களுக்கு புத்திக்குத்தெளிவையுணர்த்துகின்ற சுத்த நரம்பு என்னும் ஒருவித நரம்பினது துவாரத்தில் நிறைந்திருக்கின்ற நீரானது கலங்கலின்றிப் பரிசுத்தமாயிருக்கும் பயித்தியகோபம் நீங்கும். உலகத்தில் வழங்குகிற வாதமும் பித்தமும் சிலேஷ்மமும் தங்கள் இடங்களிலேயே பொருந்தும் என்க. ()

விழித்தவுடன் சுத்தசலம் அருந்தலின் குணம்

தூங்கி விழித்தவுடன் சுதோதக மருந்தி
லோங்கிநின்ற பித்த மொழிவதன்றித்-தேங்கு

Digitized By Roja Muthiah Research Library

மல மூத்திரந் தங்கா வாதியுந்தந்
தலமாத் திரமுலவுந் தான்.

(இ-ள்.) நித்திரைசெய்து விழித்தவுடன் சுத்தோதகமென்னும் நீராகாரம் அல்லது நல்லசலம் இதுகளில் ஏதேனும் ஒன்றைப்பிரமாணமாகப்பருகில் பயித்தியதோஷம் விலகும். அன்றியும் மலஜல பந்தங்களும் நீங்கும். வாதமுதலிய மூன்றுதோஷங்களும் தத்தம் நிலைகளிச் சஞ்சரிக்கும். 1312

விழித்தவுடன் பார்க்கத்தக்க வஸ்துக்கள்

கஞ்சந் தங்கந்தீபங் கண்ணாடி யெல்லங்கி
செஞ்சந்த நீர்மண் சிவலிங்க-மஞ்சங்கல்
கற்றாத மதுவலக்கை மனைதடாரி யிவை
யுற்றால் விழிப்பிலுத் தமம்.

(இ-ள்.) நித்திரைசெய்து விழித்தவுடன் தாமரைப்பூ தங்கம் தீபம் கண்ணாடி சூரியன் புகையொழிந்த நெருப்பு செஞ்சந்தனம் கடல் வயல் சிவலிங்கம் முகில்சூழ்ந்தமலை கன்றையுடையபசு தமது வலக்கை மனைவி மிருதங்கம் இவற்றுள்ளே தேனும் ஒன்றை பார்க்கில் உத்தமமாம். 1313

விழித்தவுடன் கண்ணாடிபார்த்தலின் குணம்

தாதுவுங் களிப்புஞ் சகல வசீகரமும்
போத வறிவுமுண்டா ஸ்ரீதலத்து-ணுதமுறும்
பண்ணாடிப் பார்க்கும் பனிமொழியே நீவிழிப்பிற்
கண்ணாடி பார்த்திதனைக் காண்.

(இ-ள்.) பனிமொழியாளே! தூங்கிவிழித்தவுடன் கண்ணாடிபார்த்தலினால் வீரியவிருத்தியும் மகிழ்ச்சியும் சர்வவசியமும் ஞானமும் அதிகரிக்குமென்க. 1314

விழித்தவுடன் பார்க்கத்தகாத வஸ்துக்கள்-விருத்தம்

ஊனமவத்திரம் பவங்கல்லாடைசங்கை
யூமைதட்டை செவிடிரங்கல்சடைநிராசை
கூனமுக்குமேனிவிரி மூர்த்தந்தூக்கங்
குட்டமறநெய்த்தலையா குலமுன்மாதந்
தீனமறற்கயமிவையுள் ளார்முகத்து
தீட்டமுகைவிதவை வஞ்சியர்முகத்துங்
கானவரவிந்திபலி மூரிமாறு
கயிறுலக்கை முறத்திடத்தும் விழித்தற்தே.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) நித்திரைசெய்து எழுந்தவுடன் அங்கவீனம் வஸ்திரவீனம் பாவம் காவிவஸ்திரம் சிரகசங்கை ஊமைமொட்டைத்தலை செவிடு அழுகைசடை மனிதரிடத்தில் விருப்பமில்லாமை கூன் அழுக்குமேனி விரிந்த மயிர்த்தலை சதாநித்திரை குஷ்டம் கொல்லை எண்ணெய்த்தலை மனைவியாகுலம் உன்மாதம் தரித்திரம் க்ஷயரோகம் இவைகளையுடையவர் முகத்தையும் பாம்பு பூனை சாம்பல் எருமை விளக்குமாறு உலக்கை முறம் என்னும் இவைகளேயும் பார்த்தால் அன்றைக்குக் கெடுதி யுண்டாகும். 1315

சிலம்பம் மல்யுத்தம் குதிரையேற்றம் பாதநடை இவைகளால் உண்டாகுங் குணம்

சிலம்பமுதன் மல்யுத்தந் தேசிநடை கொள்ளிற்
பலம்பரவு மெய்யிருக்கும் பன்னத் துலங்குபசி
யுண்டாங் கபவாத மோடுவலி சூலையும்போம்
பண்டா மலமிறங்கும் பார்.

(இ-ள்.) காலையில் சிலம்பம் மல்யுத்தம் இவைகளைப் பழகுவதாலும், குதிரையேறிச் செல்லுதல் பாதசாரியாகி நடக்குதல் ஆகிய இச்செய்கைகளினாலும் வன்மைதளர்ந்த உடல் இறுகுதல் அதிகதீபனம் இவை உண்டாம். கபவாதமெழுந்தமும் வாதசூலையும் பழயமலசந்தமும் நீங்கும். 1316

மிதாமிதவார்த்தையின் குணம்

மிதவார்த்தைக் குள்ளறிவு மெய்ச்சுகமுங் குன்று
மதிவார்த்தைக் கவ்வுரை கெட்டப்போ-டுதிரமிவை
சுண்டும் பொங்குபித்தஞ் சூழுதலா லையவினை
யண்டும் பொங்கும் புன்னோய்.

(இ-ள்.) மிதமாக வசனித்தால், உள் அறிவும் சரீரசவுக்கியமும் உண்டாம். அதிகமாகவசனித்தால் முற்கூறிய அறிவும் சவுக்கியமும் கெடும். அன்றியும் சரதாதுவும் ரத்ததாதுவுஞ் சுண்டும். இவை குறைவதினால் பித்தம் அதிகரிக்கும். அதனால் கபநோய் பிறக்கும். நீர்ரோகம் உண்டாம். 1317

வெயிலால் உண்டாகுங் குணம்

வாதமொடு காந்திகெடு மாதுயரம் வேர்வைபல
மோறுபசி பித்தமிவை யுண்டாங்-காண்கிதக்
குயிலினிசை பழிக்குங் கோதின் மொழிமாதே
வெயிலினுறு குணத்தை விள்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) குயின்மொழிமாதே! வெயிலினால் வாதாதிக்கமும் அழுகும் விலகும். வருத்தம் வியர்வை வன்னம் ஜடராக்கினி பித்தகோபம் இவை அதிகரிக்கும் என்க. 1318

காலை மாலை வெயிலால் உண்டாகுங் குணம்

காலைவெயிற் காய்ந்தார்க்குக் காணும்பிணி யனைத்தும்
பாலைவெயிற் போலப் பரவுங்காண்-மாலைவெயிற்
காய்ந்தார்க் குறுபிணிமுற் காசறுமிலக் கணநூ
லாய்ந்தார்க் குறுவழிச்சேர லாம்.

(இ-ள்.) உதயகாலவெய்யிலில் காய்ந்தவர்களுடைய சரீரத்தில் முன்பில்லாத வியாதிகளெல்லாம் பாலைநிலத்து வெய்யிலைப்போல் உக்கிரமாகப்பரவும். மாலைக்காலவெய்யிலில் காய்ந்தவர்களுக்குப் பொருந்திய பிணிகள் பழமையாகிய குற்றமற்ற இலக்கணநூல்களை ஆராய்ச்சி செய்த புலவர்களுக்குக் காட்சியிற்பட்ட வழுச்சொற்கள் நீங்குவது போல நீங்கிவிடும். 1319

நிழலால் உண்டாகுங் குணம்

மேனி தடிக்கும் விவர்ன்னவழ குண்டாகும்
போனவலி வாதமந்தம் பூரிக்குந்-தானே
வளர்ந்தேறுஞ் சோம்பல் மதிவதன மாதே
குளிர்ந்த நிழலின் குணம்.

(இ-ள்.) மதிவதனமாதே! குளிர்ந்தநிழலி லிருப்பவர்களுக்கு சரீரந்தூலித்தலும் வேறுநிறமான அழகும் நீங்கிய கடுப்புவாதமும் அலசமும் அசதியும் அதிகமாம். 1320

மழைமந்தாரத்தின் குணம்

நித்திரை காந்தி நெடியபசி தாகம்போ
மொத்த மகிழ்ச்சிகுளி ரோதையொடு-மெத்த
வழைவந் திடச்செயிரைப் பாதியரோ யுண்டா
மழைமந் தாரத்தால் வழுத்து.

(இ-ள்.) மழைமந்தாரத்தினால் தூக்கம் ஒளிவு தீபனம்தாகமிவை போம். சளிப்பு நடுக்கல் சீதவாயுவு சுவாசமுதலிய பிணிகளுமுண்டாம்.

தீக்காய்வதின் குணம்

தீக்காயில் வாதமொடு சீத நிவாரணமா
மூக்கமிரு தாகமதி யுட்டின்மு-தீக்கா

Digitized By Roja Muthiah Research Library

இரத்தபித்த நோயு மிரத்தக்கொதிப்பு
முரத்தெழும்பு மென்றே யுரை.

(இ-ள்.) திக்காய்தலினால் வாதக்கடுப்பும் சீதமும் விலகும். உபசா கதாகம்கூடு இரத்தபித்தம் உதிரக்கொதிப்பு இவை அதிகரிக்குமென்க.

வேள்விப்புகை சுடுகாட்டுப்புகை தயிலப்புகை இவைகளாலுண்டாகுங் குணம்

மகத்தூம மியாயுள் வளர்க்குஞ் சவஞ்சா
ரத்தூம மத்தை யழிக்கு-மகத்தா
மருந்தயிலத் தூம மடர்வாத வன்னோய்
விருந்தயிலு மென்றே விதி.

(இ-ள்.) வேள்விப் புகையானது தீர்க்காயுசு கொடுக்கும். சுடுகாட்டுப் புகையானது உள்ள ஆயுளையும் கெடுக்கும். மகா தயிலப் புகையானது வாதரோகத்தை விருந்தாக உண்டுவிடும் என்க. 1323

மலசலம்விடுத்தலின் குணம்

இருமலங் கடங்கா வுறங்குங்காண் மூன்று
மிருமலங்கா டங்கணிலே யெய்து-மிருபச்
சமனுக்கினி சாருஞ் சாராநோய் கூட்டம்
நமனுக்கினி சாரா தாம்.

(இ-ள்.) மலம் சலம் இரண்டையும் சிக்கலின்றிக் காலைமாலைக் காலங்கடோறும் விடுப்பவர்களிடத்து வாதபித்த கபங்கள் தத்தம் நிலைகளிலுலவும் ஜடராக்கினி அதிகரிக்கும். நோய்க்கூட்டம் ஒழியும். எமனுக்கினையும் செல்லாவாம். 1324

பல்விளக்குவதின் குணம்

துகளிலை காட்டமிவை தொட்டுத் துலக்கிற்
றுகளிலை காட்டாது தோடந்-துகளிலைகண்
மெய்துவரை யொத்திருக்கின் மேனாள் வரைமூரன்
மெய்துவரை யொத்திருக்குமே.

(இ-ள்.) தூள் இலை கொம்பு இவைகளால் பல் விளக்கினால் பல்லுகளுக் கூனமில்லை. வாதபித்த கபங்களால் பல்லினிடத்தும் அவ்வேரினிடத்தும் பிறக்கின்ற 23-ரோகங்களும் உண்டாகாது. ஆனால் அந்த தூளும் இலையும் கொம்பும் இயல்பாகத் துவர் உள்ளதுகளாயிருந்தால் இறுதிநாள்வரைக்கும்பல்லுகள்மலையைப்போல்அசைவற்றுறுதியாகும்

Digitized By Roja Muthiah Research Library

பல்விளக்கத்தக்க கொம்புகள்

வேலுக்குப் பல்லிருகும் வேம்புக்குப் பற்றுலங்கும்
பூலுக்குப் போகம் பொழியுங்கா-ணுலுக்குத்
தண்டா மரையாளுஞ் சாருவளே நாயுருவி
கண்டால் வசீகரமாங் காண்.

(இ-ள்.) கருவேல் குச்சியால் பற்களுக்குறுதியும் வேப்பங்குச்சியால் பற்களுக்கொளிவும் நீர்ப்பூலாக்குச்சிக்கு வீரியவிருத்தியும் ஆலம் விழுதுக்கு லட்சுமிகடாட்சமும் நாயுருவிவேருக்கு முகவசீகரமும் உண்டாமென்க. 1326

பல்விளக்கத்தகாத வஸ்துக்கள்

கல்லு மணலுங் கரியுடனே பாளைகளும்
வல்லதொரு வைக்கோலும் வைத்துநிதம்-பல்லதனைத்
தேய்த்திடு வாராமாயிற் சேராளே சிதேவி
வாய்த்திடுவண் மூதேவி வந்து.

(இ-ள்.) செங்கல்மா மணல்கரி தென்னம்பாளை வைக்கோலிவைகளால் தினமும் பல்துலக்குவரிடத்தில் லட்சுமிநீங்கி மூதேவி சேர்வாள்.

ஸ்நானவிதி வகை

சுத்தஸ்நானத்தின் குணம்

சுத்தப் புனலாடத் தொன்னமைச்ச லாயாசந்
தொத்தெரிச்சற் பாரிப்பு தோன்றுவா-மெத்தனவுங்
காந்தி பலம்பசியுங் கட்டழகு முண்டாகு
மேந்துமுலை மாதே யியம்பு.

(இ-ள்.) பெண்ணே! ஆறு மடுக்களில் அதிகாலையில் தினம் சுத்தஸ்நானஞ்செய்பவர்க்கு தினவு சோர்வு வெப்பம் தேகக்கனதி இவை நீங்கும். தேஜசும் வன்மையும் தீபனமும் நல்லவனப்புமுண்டாம். ()

காலைமாலைக்குளியலின் குணம்

காலைக்குக் கடும்பசி யுண்டா நோய்போ
மாலைக் குளிக்கவிவை மத்திபமே-சோலையுடை
வாசநீர் சுத்தசலம் வன்னிநீ ராங்கால
தேசமுடற் பேதமுன்னிச் செப்பு.

(இ-ள்.) மா நெல்லி முதலிய இலைகளை ஊறவைத்த ஜலத்தையாவது சுண்ணப்பொடி தூவிய பரிமளஜலத்தையாவதுஅது கலவாத சுத்த

Digitized By Roja Muthiah Research Library

ஜலத்தையாவது வெந்நீரையாவது தங்கள் இருப்பிடங்களில் வைத்துக்கொண்டு காலதேச தேக பேதங்களையுணர்ந்து அவைகளுக்குப் பொருந்தியவாறே அதிகாலையில் ஸ்நானஞ் செய்பவர்களுக்கு ஜடராக்கினி புஷ்டியுண்டாம். சகல வியாதிகளும்போம். இவ்வண்ணம் மாலைக் காலங்களில் ஸ்நானஞ் செய்பவர்களுக்கு மேற்சொல்லிய குணங்கள் மத்திபமாம். 1329

மஞ்சட்குளியலின் குணம்

மஞ்சட் குளிதனக்கு மாருத்தூர்க் கந்தமொடு
விஞ்சுமுக சாட்டியமும் விட்டகலுந்-தொஞ்சலுறு
மைய மொழியு மடர்வியர்வுங் காணாது
வையமத னூல் வருத்து.

(இ-ள்.) பரிமளக்கலவையுள்ள மஞ்சள் காப்பிட்டுக்கொண்டு ஸ்நானஞ் செய்பவர்களுக்கு கற்றாழை நாற்றமும் முகத்திலுண்டாகின்ற ரோகமும் சிரணசிலேஷ்மமும் வியர்வையும் நீங்குமென்க. 1330

பஞ்சகற்பத்தின் குணம்

மிருகமதம் பித்தமணி வேம்புகடு நெல்லி
கருகுநறும் பாலரைத்துக் காய்ச்சி-யொருகமிட
விங்கற்ப நோய்க்கு மிடமின்று மெய்ஞ்ஞான்று
மைங்கற்ப மீதே யறி.

(இ-ள்.) கஸ்தூரிமஞ்சள் மிளகு வேப்பம்வித்து கடுக்காய்த்தோல் நெல்லிப்பருப்பு இவைகளைக் கிரமப்பிரகாரம் காராம்பசுவின்பால் விட்டரைத்துக் கொதிக்கவைத்து ஒப்பற்ற சிரசிற்றேய்த்துகொண்டு ஸ்நானஞ்செய்தால் எந்நாளும் பிணிகளுக்குக் கிஞ்சித்தேனும் இடமில்லை. இதுவே பஞ்சகற்பவிதி யென்றறியக்கடவை. 1331

அப்பியங்கனத்தின் குணம்

தலைமுழுக்காற் சென்னிமுழந் தாளிவைக்கு நீங்காப்
பலமுண்டாங் கேசம் படரும்-தலைநோய்போம்
பஞ்சேந் திரியம் பலத்துத் தெளிவையுறு
மெஞ்சாத் தொனியுமெழி மெண்.

(இ-ள்.) அப்பியங்கனத்தால் மெய்வாய் கண் மூக்கு செவி என்கிற பஞ்சேந்திரியங்களும் பலத்துத் தெளிவுறும். சிரசு முழங்கால்கட்குப் பலமும் ரோமவளர்ச்சியும் நற்றொனியுமுண்டாம். தலைவலிவிடும். ()

Digitized By Roja Muthiah Research Library

நித்திய அப்பியங்கனத்தின் குணம்

தினமப்பி யங்கனமே செய்யிற் சருழ
மினுமினுக்குஞ் சோம்பல் விலகுந்-தனியான
ஐயமுத்தோட மருசிதந்த நோயொழியு
மெய்யுமிகப் புட்டியிடு மே.

(இ-ள்.) தினமும் அப்பியங்கனம் செய்வதினால் தொக்கேந்திரி யப்பளப்பும் தேகபுஷ்டியும் உண்டாம். சோருதல் தனிக்கபநோய் திரிதோஷதொந்தம் அரோசகம் உபகிருசரோகம் இவைநீங்கும். 1333

பசுவினது நெய்முழுக்கின் குணம்

மைந்தர்முதன் முப்பருவ மாந்தர்க்கு மாமுடலின்
முந்தெரிச்ச லுன்மாத மூர்ச்சைகப-முந்திரத்த
பித்தம் மாதாகமொடு பேசுவிகா ரங்களுக்கு
முத்தமமா னெய்முழுக் குன்.

(இ-ள்.) பசுவினது நெய்முழுக்கு பால்ய குமாரவிருத்தர்களுக்கும் ஆம். ரசதாதுவின் கொதிப்பாற்கண்ட எரிச்சல் உன்மாதம் மூர்ச்சை மூளையைப்பற்றியகபம் ரத்தபித்தம் விதாகம் இவைகளை நீக்கி நன்மையைத் தரும். 1334

தைலாதிகளின் குணம்

எள்ளினெய்யு முக்கூட் டெனுநெய்யு மானெய்யும்
விள்ளுதயி லாதியென விறுநெய்யு-முள்ளபடி
வாரந் தனக்கிருநாள் வைத்தாடி னெய்களதி
காரந் தனக்கிடமிற் காண்.

(இ-ள்.) எண்ணெய் முக்கூட்டுநெய் பசுவின்நெய் உயர்ந்ததயிலம் முதலியவைகளை எட்டுத்தினத்திற்கு இரண்டுதரம் ஸ்நானஞ்செய்யில் சகலரோகங்களும் தேகத்தை வருத்துதற்கு அதிகாரம் இன்றும். ()

தைலம் தேய்க்கும்விதி-விருத்தம்

எடுத்தநற் றயிலநாசிக் கீரிரண் டாறுகாதுக்
கடுத்திடத் துளிவிட்டுச்சி யங்கந்தா ளடிகளிற்கு
கொடுத்திடாத் தேய்த்தூறச்செய் திப்புறஞ்சிகைகாய் வெந்நீர்
விடுத்துட னுடிநீரும் வியர்ப்புமற் றிடப்புலர்த்தே.

(இ-ள்.) நல்லதயிலங்களைமூக்கில் 4-துளியும் காதில் 6-துளியும் விட்டு சிரசு உடம்பு பாதத்தினடி இவைகளிலிட்டுச் சுடுகை பிறவாமல் தேய்த்து ஊறவைத்துப்பின்பு சிகைக்காய் தேய்த்து வெந்நீரில் ஸ்நானஞ்செய்து அந்தநீரும் வியர்வையும் நீங்கும்படி உலர்த்துவாயாக. ()

Digitized By Roja Muthiah Research Library

பாதாதிகளில் தைலமிடலின் குணம்-வெண்பா

பாதத்திடிற் கண்ணோய் பாறுமக்கட் கிடினோ
காதுற் றெழுநோய் போங்காது-ளிடினேதுந்
தலைநோ யகலுந் தலைக்கிடினோ யெல்லா
நிலையா வறலாடி னெய்.

(இ-ள்.) எண்ணெய் முதலிய தயிலங்களை உள்ளங்காலிற்றேய்க்கில் கண்ணைப்பற்றிய நோய்களும் கண்ணுக்குக்கட்டினால் செவிரோகங்களும் செவியிற்குத்தினால் சிரஸ்தாபங்களும் சிரசில் தேய்த்துஸ்நானஞ்செய்தால் சரீரத்திலுள்ள சகலரோகங்களும் நிவர்த்தியாகும். ()

அரைப்புவகை

சிக்கிராந் தூள்விரண தேகர்க் கரைப்பாகு
மாக்கிலுப்பைக் கட்டிசொறி யாளர்க்குத்-தூக்குமணிப்
புங்கரைப்புஞ் சீய்க்காயும் போக்கடிக்கு மெண்ணெய்களைக்
கங்குலுறை கூந்தன்மின்னே காண்.

இதுவுமது

பருப்பரைப்புக் கோடிநெய் பண்ணுமென் ணெய்யாதிக்
கரைப்புச் சிகைக்காயு மாகுந்-தெருப்பன்றி
நெய்யாதி யாநெய்க்கு நீள்கரைப் பூண்டாதி
மெய்யாரைப் பாகும் வின்.

(இ-ள்.) மேகம்போன்ற கூந்தலாளே! விரணதேகிகட்கு உசிலத்தூளும் சொறிதினவை உடையவர்களுக்கு இலுப்பைப்பிண்ணாக்கும் எண்ணெய்முதலிய தயிலங்களுக்குப் பொன்னாங்காயும் சிகைக்காயும் பசுவின்னெய்க்குப் பச்சைப்பயறும் பன்றி காக்கை முதலிய நெய்கட்குக் காரைச்செடிகளின் தூளும் அரைப்பாகும். 1338

ஸ்நானகாலவிதி-கலித்துறை

அயமானிவைக்கைம்பதத்துளியாழ் குளிர்கட்டமத்துன்
வயமாகனிக்குங்கோல்கேட்டுநந் நான்குவின்மானிரண்டே
பயமார்கடமர்ச்சத்திற்குந் திரிக்குட்பகர்திங்களி
னயமாந்தயிலங்களாடவரோகமெய் நண்ணுவரே.

(இ-ள்.) சித்திரை வைகாசிமாதங்களில் சூரியன் உதயமான ஐந்து நாழிகைக்குள்ளும் ஆனி ஆடிமாதங்களிலெட்டு நாழிகைக்குள்ளும் ஆவணி புரட்டாசி ஐப்பசி கார்த்திகைமாதங்களில் நாலு நாழிகைக்குள்ளும் மாசி பங்குனிமாதங்களில் மூன்று நாழிகைக்குள்ளும் பக்

Digitized By Roja Muthiah Research Library

குவ பாகமுள்ள தைல ஸ்நானஞ்செய்தால் அரோ தேகத்தைப்பொருந் துவார்கள் என்க. 1339

க்ஷவரத்தின் குணம்-வெண்பா

தூக்கம் விரணந் தொடைவலி சூலங்காசந்
தற்கால சாந்தஞ் சவரத்தால்-மிக்குடற்குச்
சாந்திமனப் பூரிப்பு கண்ணொளிரு காமமுமாஞ்
சேர்ந்ததிங்க ளுக்கிரண்டாந் தேர்.

(இ-ள்.) ஒரு மாதத்திற்கு இரண்டுதரஞ்செய்து கொள்ளுகிற க்ஷவரத்தினால் மனத்துயரம் புண் தொடைநோவு குத்தல் இருமல் ஆகிய இவைகள் உடனே கொஞ்ச சவுக்கியமாம். வேகவொளியும் மனச் சந்தோஷமும் விழிக்குப் பிரகாசமும் தாதுவிருத்தியும் உண்டாகும். ()

வ ஸ் தி ர வ கை

சாலுவையின் குணம்

சலதோடம் போகுந் தலைவலியு மேகு
மூலவிவரு நோய்வாத மோடும்-வலிய
வயிற்றுவலி போங்குளிரை மாறுப் பனியைச்
சயித்ததொரு சாலுவைக்குத் தான்.

(இ-ள்.) நல்ல சாலுவைக்கு நீரேற்றம் சிரோரோகம் வலிவாதம் வாதகுன்மம் களிர் மூடுபனி இவையொழியும் என்க. 1341

பட்டுவஸ்திரத்தின் பொதுக்குணம்

பித்த கபமகலும் பேரா மகிழ்ச்சியொடு
புத்திமிகும் வியர்வை பூணுங்கா-ணித்தியமும்
காந்தியது வுண்டாங் கனஞ்சேர் பட்டுத்துகிலுக்கு
கேந்துமுலை மாதே யியம்பு.

(இ - ள்.) பெண்ணே! உயர்ந்தபட்டு வஸ்திரத்தினால் பயித்திய சிலேஷ்மம் விலகும். மனக்களிப்பு ஞானம் வியர்வு தேஜசு இவையுண் டாகும். 1342

வெண்பட்டுவஸ்திரத்தின் குணம்

வெண்பட் டுடையால் விரிசுரமும் சீதமும்போம்
பண்பட்ட வாதம் பறக்குங்காண்-பெண்கிட்டுங்
காந்தியு முண்டாகுங் கதித்த அழகுமுண்டாங்
காந்திமதி முகத்தாய் காண்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) பிரகாசமுள்ள சந்திரவதனியே வெள்ளைப் பட்டுவஸ்திரத்தால் அதிசுரமும் குளிரும் வாதநோயும்போம். ஸ்திரீவசியமும் ஒளியும் வனப்பும் உண்டாம் என்க. 1343

நாருமடியின் குணம்

சளியோடு நீரேத்தந் தங்கா தகலும்
வளியொடு சந்நியும்பின் வாங்கு-மளியினங்கள்
சேருமடிக் கூந்தன்மின்னே தேகமிகச் சுத்தியதாம்
நாருமடிக் கென்றே நவில்.

(இ-ள்.) வண்டுகள் மொய்க்கும் வாசனை பொருந்திய கூந்தலையுடையவளே! நாருமடிக்கு கபக்கட்டு சலதோஷம் குடல்விருத்தி வாதம் சந்நிபாதசுரம் ஆகிய இவைபோம். சரீரஞ் சுசிகரமாம். 1344

வெள்ளை வஸ்திரத்தின் குணம்

ஓடுந் திரிதோட மோங்கா யிசுப்பெருகும்
கூடுந் திருவழகுக் கூர்களிப்பு-நீடுமதி
போதமுறும் வெற்றிவரும் பூரிக்கு மெய்வியர்வு
பேதமறும் வெண்டுகிலுக் கே.

(இ-ள்.) வெண் துகிலுக்கு வாதாதி தோஷங்களும் வியர்வும் விலகும். ஆயுசுவிருத்தி லட்சுமிவிலாசம் வனப்பு மகிட்சி அறிவு பலம் இவையுண்டாம். 1345

சிவப்புவஸ்திரத்தின் குணம்

ஏந்துபித்த முட்டின மெதிர்ந்த தருணசுரம்
வாந்தி யருசிகப மந்தமிவை-சேர்ந்திடுங்காற்
செய்ய கடுஞ்சிவப்புச் சீலையுடுத்தா லவைகள்
பைய வதிகரிக்கும் பார்.

(இ-ள்.) அதிபயித்தியம் உட்சூடு தருணசுரம் வமனம் அரோசகம் சிலேஷ்மகோபம் அலசம் என்னுமிவைகளில் ஏதேனும் ஒருரோகம் அனுசரித்திருக்குங் காலத்தில் மிகவும் சிவந்த வஸ்திரம் உடுக்கலாகாது. உடுத்தால் மேற்சொல்லிய ரோகங்கள் விருத்தியடையுமென்க.

மஞ்சள்வஸ்திரத்தின் குணம்

நீர்க்கடுப்பு காசமொடு நீடுவிஷ சுரமுந்
தீர்க்கமையும் வெப்பஞ் சோமலமும்-பார்க்குண்மிக
வஞ்சியே யேகுமஞ்சளாம் வத்திரம் புனைந்தால்
வஞ்சியே நன்றாய் வழுத்து.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) பெண்ணே! மஞ்சள்வஸ்திரத்தினால் வாதநீர்சுருக்கு இருமல் விஷசுரம் மாருத்தினவு தனிச்சுரம் மலபந்தம் இவை நீங்கும். ()

பச்சைவஸ்திரத்தின் குணம்

மெய்யழலை யேகும் விழிக்குக் குளிர்ச்சியுண்டாம்
பொய்யி லுடலமெல்லாம் பூரிக்கு-மையமுறு
நஞ்சை நிகரு நளினவிழிப் பெண்ணமிர்தே
பச்சையுடை யின்குணத்தைப் பார்.

(இ-ள்.) நஞ்சையொத்த கண்ணாளே! பச்சை வஸ்திரத்தினால் உட்சூடு சிலேஷ்ம தோஷமும்போம். கண்ணுக்குக் குளிர்ச்சியும் தேக பூரிப்பும் உண்டாம் என்க. 1348

கறுப்புவஸ்திரத்தின் குணம்

காசமொடு வெப்புங் கறுத்த கொடுவிடமும்
பேசுமந் தாக்கினியும் பித்தமும்போ-நேச
வெறுப்புறு வின்பநய மெல்லியலே நீலக்
கறுப்புநிற மாந்துகிற்குக் காண்.

(இ-ள்.) வெறுப்புறுவின்ப முடையாளே! கறுப்புவஸ்திரத்திற்கு இருமல் சுரம் மகாசர்ப்பநஞ்சு அக்கினிமந்தம் பயித்தியமும்போம். ()

அழுக்குவஸ்திரத்தின் குணம்

நோயடருங் காந்திகெடு நுண்ணறிவும் போயொளிக்குந்
தீயகுளிர் துக்கந் தினவுசங்கை-வாய்பேசக்
கூசுதலு முண்டாகுங் கோதாரு மாசுடைக்குப்
பேசுதலு மியாதிதற்குப் பின்பு.

(இ-ள்.) அழுக்குவஸ்திரம் தரிப்பவருக்கு பற்பலதுன்பம் மிகுநளிர் துயரம் நமைச்சல் கிரகசங்கை நாணம் ஆகியவைகள் உண்டாகும். சரீர ஒளியும் நுட்பமாகிய அறிவும் விலகும். 1350

கம்பளத்தின் குணம்

பெரும்பா டசீரணங்கள் பேராக் கிராணி
யருஞ்சூலை பேதி யகற்றுங்-கருஞ்சீழைப்
போக்குங் குளிர்வாடை பொல்லாப் பனிபீக்கிக்
காக்கும் பருங்கம் பளம்.

(இ-ள்.) சீதளக்காட்டையும் மூடுபனியையும் விலக்கி உடலைக் காக்காநின்ற பெரியகம்பளம் அசிர்க்கரம் அசீரணங்கள் திரிதோஷ கரகணி கில்பிடிப்பு அதிசாரம் கறுப்பாக ஒழுகுகிற சீழ் இவைபோம்.

Digitized By Roja Muthiah Research Library

முண்டாசு கவசம் நடுக்கட்டு இவைகளின் குணம்

முண்டாசு வாதபித்த முன்பொழிக்கு மெய்க்கவச
முண்டாயிற் காந்திபுட்டி யுண்டாகுந்-திண்டாடு
பித்தமறுந் தீயாம் பிணைத்தநடுக் கட்டுக்குத்
தொற்றமுறு வீரியமாம் கூறு.

(இ-ள்.) சிரசிற்கட்டுகின்ற முண்டாசு வாதபித்ததொந்தத்தைப் போக்கும். கவசம் என்கிற அங்கியினால் தேக ஒளியும் புஷ்டியும் உதராக்கினியும் உண்டாவதுந் தவிரப் பித்தகோபமும் நீங்கும். நடுக்கட்டு என்கிற அரைக்கச்சைக்கு பலம் பொருந்திய ஆண்மையுண்டாமென்க.

ஆபரணத்தின் குணம்

ஆபரணஞ் சூடி லரியலீ லாலயமா
மாபரண மெய்க்குமதி மங்கலங்காண்-சோபமனத்
துக்கத்தோடு நோய்போஞ் சொல்ல வசியமும்
மிக்குக் களிப்படரு மெய்.

(இ-ள்.) ஆபரணம் பூணில் அது மதன் கூத்துக்கு ஓரிடமாயிருப்பதுந்தவிரச் சரீரத்துக்கு அழகிய ஆபரணம் என்கிற கவசமுமாகும். இதனால் மங்களகாமும் வசிகரமும் மகிழ்ச்சியும் உண்டாகும். சோர்வு மனத்துயரம் வியர்த்தியுன்மாதம் முதலிய ரோகமும் நிவர்த்தியாகும்.

புசிப்பு வகை

பசியின் குணம்

பசியா லழகாண்மை பூரிப்பு மேகம்
ருசியாவி வார்த்தை யிவைசேரும்-பசியாலாந்
தாதினத்தின் சீரணமுந் தள்ளு கிழத்தனமு
மோதினத்தின் பேதமுமா மோர்.

(இ-ள்.) பசியினால் வனப்பு பலம் மகிழ்ச்சி ஆசை ஆகாரம் உயிர் பேச்சு இவை நீங்கும். அன்னரசத்தால் வளருகின்ற சப்தாதுகளுக்கு விகற்பமும் மூப்புத்தன்மையும் சுற்றத்தார் விரோதமும் உண்டாகும்.

போஜனகால விதி

தன்மமிரண் டேயூண் தப்பிமுக்காற் கொள்ளினினன்
சின்மதலே காலேமுற்றற் சேர்பருவ-நன்முகுர்த்த
மொன்றுக்கு ணன்குக்கு ளோதுமிரண்டுக் குளுண்பர்
னன்றுக்குத் தீயோர் நயந்து.

(இ-ள்.) தருமசாஸ்திரத்திற்கூறிய இரண்டுகாலபோஜனமே நலமாம். அதுதப்பி மூன்றுகால போஜனங்கொள்ள வேண்டுமானால் சூரியனுக்கிளம்பருவமாகிய உதயமுதல் 3¾-நாழிகைக்குள்ளும் காளைப்பருவமாகிய 15 - நாழிகைக்குள்ளும் மூப்புப் பருவமாகிய இரவில் 7½-நாழிகைக்குள்ளும் நலம் பெறுதற்குச் சாமாக்கினியை யுள்ளவர்கள் கொள்ளுவார் என்க. 1355

காலாகாலபோஜன குணம்

மூன்றுநான் காறென் முகூர்த்தங் களின்முறையே
ஞான்றுள் ளுண்ணுமந்த நறுமுணவே-தோன்றுடலுக்
கொக்குமித நோயாமு ரோகமுயிற் காந்தரஞ்செய்
விக்குமித மாராய்ந்து விள்.

(இ-ள்.) சூரியனுதயமாகிய 11¼ - நாழிகைக்குள் உண்கிற நல்லவுண்டி தேகத்திற்குப் பொருந்தும் 15-நாழிகை உணவுமிதம் என்கிற அளவிட்டு பிணிகளை விலக்கும் 22½-நாழிகையில் புசிக்கில் ரோகசம்பவமாம் 30-நாழிகையிலருந்தும் அசனம் உயிருக்கு முடிவைத்தரும். இந்த 4-முதல் 2-ம் காலபோஜனமும் மற்றவை அகாலபோஜனமாம். ()

போஜனம்செய் விதி

ஆதி யினிப்புநடு வாம்பிரநீ ருப்பொடுசா
காதியுறைப் பப்பா லந்தத்திற்-கோதிருமாப்
பாந்தியுப் பூறியகா யாதிவகை சேருணவை
மாந்ததி சகத்தையுறு வாய்.

(இ-ள்.) போஜனமுதலில் மதுரவஸ்துவும் மத்தியில் புளிப்பு உப்பு உரைப்பு இலைக்கறிகளும் முடிவில் துவர்ப்புச் சம்பந்தமான புளித்த தயிர் ஊறுகாய் நீ யுண்ணக்கடவை உண்ணில் இன்பமுண்டாம். 1357

போஜன அளவைக்கூறல்-கலிநிலைத்துறை

முக்கா லுணவன்றி யெத்தேகிகட்கு முழுவுணவி
லக்காரணமன்ன ராகாதிகூடி யரையதிற்பால்
சிக்காவமுதம் புதக்கிரங்கா லுண்டி சேடமுழை
வைக்காவிடி லுண்டி வேகதன லும் வளியுமின்றே.

(இ-ள்.) சகலதேகிகளுக்கு ¾-வயிற்று உணவேயன்றி முழு உணவு இல்லை. அதன்விவரம் அன்னமுங் கறிகளுங்கூடி ½ - பால் மோர் சலம் கூடி ¼-ஆக முக்கால் வயிற்றுணவேயாம். இன்னும் ¼-வயிறு இடைவெளிவைத்ததற்கு காரணம் சமானவாய்வும் அனல் பித்தமும் சொலித்து அவ்வுண்டியைப் பஸ்மஞ்செய்வதற்கேயாம் என்க. 1358

Digitized By Roja Muthiah Research Library

புசித்த புசிப்பின் பிரிவுகூறல்-வெண்பா

பிலத்தமரு முண்டுப் பிரிவை யுருக்கிற்
பலத்த கிருமிகட்கோர் பங்கு-மலத்திற்கோர்
பங்குமாய் வில்லனற்கோர் பங்குமுட லினுக்கோர்
பங்குமாய்த் தங்குமுன்னிப் பார்.

(இ-ள்.) துவாரத்தையுடைய தீனிப்பையிற்றங்கிய உணவானது 4-பிரிவையுறும். அவையாவன ஒருபங்கு கிருமிகளுக்கும் ஒருபங்கு மலத்திற்கும் ஒருபங்கு ஜடராக்கினிக்கும் ஒருபங்கு தேகத்திற்காம். ()

புசித்த அன்னசாரச் செய்கைகூறல்-விருத்தம்

ஒருநாளுண்ணனவிரதமிரத்தாது வைநனைத்தங்கூறிநிற்கு
மிருநாளுண்டிடினஃதங்கிரத்த தாதுவிலேறுமிவ்வாறேபின்
வருநாளுண்ணெழுநாலு மாமினகுதெழுதாதுவையம்வளர்த்தே
தருநாளும்சோராதவலிவுதனை யெட்டாநாட்சடத்தினுக்கே.

(இ-ள்.) ஒருநாளுண்ட வுணவில் நின்றும் பிரிவுற்ற அன்னரசமானது அன்றைக்கு ரசதாதுவை நனைத்து ஊறித்தங்கும் 2-ம் நாள் உண்ட அன்னரசம் அந்தரசதாதுவிலேற முன்புவூறி நின்றரசம் ரத்த தாதுவிற்பாயும். இவ்வாறே 3-ம் நாள் மாமிசதாதுவிலும் 4-ம் நாள் மேதோதாதுவிலும் 7-ம் நாள் சுக்கிலதாதுவிலுமாகச் சென்று அத்தாதுக்களை விருத்தியடையச் செய்து 8-ம் நாள் தேகத்திற்குக் குன்றுத வன்மையைக் கொடுக்கும். 1360

உண்கல வகை

தங்கக்கலத்தின் குணம்-வெண்பா

தங்கக் கலத்திலுண்ண தாதுவிர்த்தி யும்பசியும்
பொங்க மிகுதிடமும் பூரிப்பு-மங்குறையும்
பித்தசோபைப் பிணியிப் பேருகை விட்டகலுஞ்
சுத்தரசத் தீங்கினியே சொல்.

(இ - ள்.) தங்கப்பாத்திரத்திற் புசிக்கில் சுக்கில விருத்தியும் சமாக்கினியும் வன்மையும் உச்சாகமும் உண்டாம். பித்தசோகை நீங்கும். ()

வெள்ளிக்கலத்தின் குணம்

வெள்ளிக் கலத்திலுண்ண வீறிவரு கபமுந்
துள்ளியெழு பித்தமும்போஞ் சொல்லவோ-விள்ளிய

Digitized By Roja Muthiah Research Library

காந்தியுண்டா நாளுங் களிப்புண்டாந் தேகத்திற்
சேர்ந்துவரும் வாதமுண்டாஞ் செப்பு.

(இ-ள்.) வெள்ளிப்பாத்திரத்தில் அருந்த சிலேஷ்மகோபம் பித்த கோபமும் நீங்கும். தேஜசு மகிழ்ச்சி வாதாதிக்கமும் உண்டாம். 1362

செம்புக்கலத்தின் குணம்

செம்பு கலத்திலுண்ண தேகா ரோக்கியமாம்
பம்பிரத்த தோடம் பறக்குங்கா-ணம்புவியி
லண்ணியிடுங் காந்தி யணங்கே விழியொளியாம்
புண்ணியமு நண்ணும் புகல்.

(இ-ள்.) தேவமகளிரையொத்த பெண்ணே! செப்புப்பாத்திரத்தி லுண்ணில் சரீரசவுக்கியம் தேஜசு கண்ணுக்கொளிவு சுகிர்தம் இவை யுண்டாம். ரத்த பித்த ரோகம் விலகும். 1363

வெண்கலத்தின் குணம்

தாம்பரத்தில் வெள்ளீயந் தான்கலக்க வெண்கலமென்
றும்பெயர் பெறுங்கலத்து ளண்ணமுண்ணிற்-றேம்புகின்ற
சோபமொடிரத்த பித்தந் தோன்றவறி யாதனங்கள்
சாமமெனச் சொன்னுதலே சாற்று.

(இ-ள்.) மதன்வில்லனைய புருவத்தாளே! வெண்கலப் பாத்திரத் திற் புசிக்க சோர்வும் உதிரபித்தமும் போம் என்க. 1364

தாம்பரம், வெள்ளி, கலப்புவெண்கலம் இக்கலங்களின் குணம்-விருத்தம்

தக்கதாம்பரத்தின்வட்டிற் றூனதிரத்தபித்த
மெய்க்குறுதகற்றும்வெள்ளி விலக்கிடுமையந்தன்னை
யொக்கவேகலப்புவட்டி லுறுதிரிதோடம்போக்குங்
கக்கியவுதிரமேறுங் கனத்தவெண்கலத்திற்கென்னே.

(இ-ள்.) செம்புக்கலம் ரத்தபித்தத்தை விலக்கும். வெள்ளிக்கிண்ணி கபத்துன்பத்தை நீக்கும். கலப்புலோகவட்டில் திரிதோஷங்களை மாற் றும். வெண்கல உண்கலத்தினால் குறைந்த ரத்ததாது விருத்தி. 1365

உண்கலத்தில் இவைகள் முக்கியமெனல்-வெண்பா

வாழைவெள்ளைப் பன்னநன்று மற்றிலைகண் மத்திமமா
மாவைவெள்ளி வெண்கலமு மாநன்றுங்-கோழை
கயப்பாண்ட நோய்போகுங் கருதினிவைக் கெல்லாம்
யெப்பாண்ட மேலசனங் கொள்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) மனோச்சாக போஜனத்திற்கு வெள்வாழையிலை நன்று. மற்றைய இலைகள் மத்திமமாம். தங்கம் வெள்ளி வெண்கலம் இவைக ளாற்செய்த உண்கலங்கள் மிகவுநலமாம். இவைகளை விட மட்கலமே சிறந்தது. இதில் புசிக்கில், க்ஷயமும் பாண்டுரோகத்தாற் பிறந்த நீர்ச் சுரப்பும் விலகும் என்க. 1366

வாழையிலையின் குணம்

தொக்கி னுறுமின்னுஞ் சுகபோகமு மன்னு
மக்கினி மந்தம் மபலமொடு-திக்கிடுகால்
பாழை யிலைப்புமறும் பன்னுபித்த முஞ்சமனும்
வாழையிலைக் குணமு வாய்.

(இ-ள்.) வாழையிலைக்கு சருமதாதுவிற் பளபளப்பும் சுகபோகங் களும் பொருந்தும். மந்தாக்கினி துர்பலம் க்ஷிணவாதம் சிலேஷ்ம அரோசகம் இவை நீங்கும். பித்தகோப சாந்தமாம் என்க. 1367

பலாயிலையின் குணம்

பலாவிலையி லுண்ணப் பதுங்கிநின்ற பித்தங்
குலாவி யெழும்பிக் குதிக்கு-துலாவிவரு
கன்ம மகோதரநோய் காணு தகலாத
குன்ம மகலுங் குறி.

(இ-ள்.) பலாயிலையில் உண்டால் அடங்கியபித்தமும் அதிகரிக்கும். ஊழால்வந்த பெருவயிறும் குன்மரோகமும் நீங்கும். 1368

பாலுள்ளமரத்திலைகளின் குணம்

பாலிருக் கின்றமரப் பன்னங்களி லுண்டாற்
கோலிருக்கச் செய்வாதங் கோழைகபங்-கால
வசிர்க்குபித்தந் தாகமிவை யண்டா தகலு
முசிக்குமதி சீதளமா மோர்.

(இ-ள்.) பாலுள்ளமரத்தின் இலைகளில் உண்ணில் பங்குவாதம் க்ஷயம் அசிர்க்கரம் பயித்தியம் தாகம் இவை நீங்கும். அதிக குளிர்ச்சி யுண்டாம். 1369

தாமரையிலையின் குணம்

தாமரைப் பன்னத்தலுண்டாற் றுங்கரிய விட்டினமாம்
காமவா தஞ்சினந்து நண்ணுங்காண்-தூமமுறு
வக்கினிமந் தங்களுண்டா மன்றே மலர்த்திருவத்
திக்கினி லிராளெனவே தேர்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) தாமரையிலையிற் புசிக்கில் வெப்பமும் வாதரோகமும் மந்தாக்கினியும் உண்டாகும். சம்பத்துநீங்கிவிடும் என்க. 1370

கைப்பாத்திரத்தின் குணம்

கைப்பாத் திரத்திற் கலந்தன்னங் கொள்ளுங்கால்
வைப்பா மனச்சேட்டை மாறுங்கா-ணிப்பாற்
சருவ கிலேசமும்போஞ் சாற்றவவன் றாலின்னும்
பெருவருசி நோயும்போம் பேசு.

(இ-ள்.) சகலகறிகளுங்கலந்த அன்னத்தைக் கைப்பாத்திரத்திலுண்ண மனச்சேஷ்டையும் மனோதுக்கமும் பல அரோசகமும்போம்.

சோற்றின்வகை

அதிசுடுகை யன்னத்தின் குணம்

அதிகசுடுகை யன்ன மரத்தபித் தந்தாகம்
பிதிரேறு சித்தப் பிரமை-மதரோக
மென்றுரைக்கு நோய்கட் கிடங்கொடுக்குந் தப்பாது
குன்றுரைக்கும் பூண்முலையே கூறு.

(இ-ள்.) ஆபரணத்தையணிந்த குன்றனைய முலைகளையுடையவளே! நித்தியமும் புசிக்கின்ற மிகுசுடுகை அன்னமானது உதிரபித்தம் தாக பிரமை மதரோகம் இவைகளையுண்டாக்கும் என்க. 1372

அற்பச்சுடுகை யன்னத்தின் குணம்

அற்பச்சூட் டன்னம்வா தாதிகளாற் பீனசத்தா
லுற்பவித்த நோயை யொழித்துடற்கு-நற்பலத்தைச்
செய்யு மருசிதனைத் தீர்க்குஞ்சர் வோத்தகம்
பெய்யும் வளைக்கமாதே பேசு.

(இ-ள்.) வளையலணிந்த கரங்களையுடையவளே! கொஞ்சஞ் சுடுகையுள்ள அன்னமாது உத்தமத்திலுத்தமமாம். அது வாதபித்த கபங்களிலும் பீனசத்தாலும் விளைகின்ற நோயையும் அரோசகத்தையும் நீக்கும். சரீரத்துக்கு வன்மையைத்தரும் என்க. 1373

புழுங்கலரிசியன்னத்தின் குணம்

தென்புவிநாளுந் செழித்துவள ருஞ்சாலி
வன்பு புழுங்கல் வடிசாத-முன்புணவே
வாயுவிலை யத்தால் வலியும்வன் னேயுமின்
நோயுடை யார்க்காகு நுவல்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) புழுங்கலரிசி அன்னத்தைப்புசிக்கில், வாதகோபமும்பல மும் வலிரோகங்களும் இல்லை இதுநோயாளருக்குதவும். 1374

பச்சையரிசியன்னத்தின் குணம்

பச்சரிசிச் சோறு பலங்கொடுக்கும் வாயுவென்பார்
நிச்சயமாகப் பித்தை நீக்குங்கா-ணச்சமற
மூத்திரக் கிரிச்சரத்தை முன்பொழிக்குஞ் சேய்க்குமந்த
மாத்திர முண்டாகும் வழுத்து.

(இ-ள்.) பச்சரிசியன்னமானது பலத்தையும் குழந்தைகளுக்கு மாந்தத்தையும் உண்டாக்கும். பித்தகோபத்தையுங் கிரிச்சரத்தையும் நீக்கும். இதில் வாயுவுண்டென்பார். 1375

நன்றாகச்சமையாத அன்னத்தின் குணம்

நன்றாகச் சமையா நடுத்தண் டுலச்சோறு
தின்றால் மலஜலமுஞ் சிக்குமென்ப-தொன்றோகேண்
மற்றைநா ளுஞ்சரிக்க மாட்டா ததுவுடலிற்
சற்றும் வியாபிக்கா து சாற்று.

(இ-ள்.) நட்டரிசியன்னத்தைப்புசிக்கில் மலசலம்சிக்குவதுந்தவிர அதுமறுநாளும் ஜீரணசக்தியாகாது. அவ்வன்னரசம் உடலில் பரவாது.

குழந்தை அன்னத்தின் குணம்

குழந்தை சோறுண்ணிற் கொடுமேகங் காச
மருந்து மந்தாக்கினியு மாறும்-விழுந்திடச்செய்
துர்ப்பலமும் பீநசமுந் தோன்று மரிவையர்க்குட்
பொற்படரு மாதே புகல்.

(இ-ள்.) மாதருக்குள் சிறந்தமாதே! அளிந்த அன்னத்தைப் புசிக்கில் வாதபிரமேகம் இருமல் அக்கினிமந்தம் துர்ப்பலம் பீநிசம் இவை உண்டாகும் என்க. 1377

சுத்த அன்னத்தின் குணம்

சுத்தவன்னங் குற்றமிலைத் தோஷங்களை யகற்றுநின்
முத்தரத் தேகிக்குமது முக்கியங்காண்-பத்தியத்திற்
காகுமது முப்பிணிக்கு மாமவியஞ் சனங்கலந்து
ணேகுமுண் ணேயெல்லா மிரங்கி.

(இ-ள்.) குற்றம்நீக்கிய அன்னத்தை நற்கறிகளோடுண்ணில்அது வாதபித்தசிலேஷ்மம் என்னும் மூவிதரோகங்களுக்கும் முக்கியமாக உதவும். பத்தியத்திற்கும் வாதாதி மூவிதரோகங்களுக்கும் ஆகும். அன்றியும் குடல்நோய்கள் முழுமையும் விலகும் குற்றமில்லை என்க. ()

Digitized By Roja Muthiah Research Library

சுத்தன்னம் என்பது பழைய அரிசியைத் தவுடுநோய் முதலிய வைபோம்படி நன்றாகத்தீட்டி முழு அரிசியாக ஆராய்ந்து எடுத்து இள வெந்நீராற்கழுவி வஸ்திரத்திற்கொட்டிச்சற்றே ஆறவைத்து ஒருபாண்டத்தில் அரிசிக்கு மூன்றுபங்கு சலம்விட்டு அடுப்பேற்றி அது நுரை கூட்டிக் கொதிக்கும்பொழுது அந்த அரிசியை அதிற்போட்டு முக்காற் பாகமாக வெந்தவுடன் கரண்டியால்துழாவி வடித்துக்கொண்டு மறுபடியும் தணலில்வைத்து பக்குவப்படுத்தி இறக்கிக்கொள்வதாம். 1379

பொங்கல் அன்னத்தின் குணம்

பொங்கலெல்லா மந்தம் பொருமலெனு நோய்விளக்கு
மங்கமெலாம் வாத முண்டாக்குமன-லங்கொடுக்குஞ்
சம்பாநெற் பச்சரிசித் தன்பொங்கற் றுதுவிர்த்தி
யென்பார் பெரியோர்க ளெண்.

(இ-ள்.) பச்சரிசிப்பொங்கல் அன்னமெல்லாம் சகல அலசரோகம் வயிற்றுப்பிசம் அங்கலசனவாதம் வெப்பம் இவைகளை உண்டாக்கும் சம்பா பச்சரிசிப்பொங்கலன்னம் விந்துவை வளர்ப்பிக்கும். 1380

பாலும் அன்னமும் புசித்தலின் குணம்

பாலுமன்ன மும்புசிக்கிற் பன்னுபித்தந் தாகமறு
மேலுமற்ப மந்தமென்பார் மேனியிடு-ஞாலமதி
லப்பொழுதே தாதுவிர்த்தி யாகுஞ் சிசுவாதி
யெப்பருவத் தர்க்குமா மெண்.

(இ-ள்.) பாலுஞ்சோறும் உண்டால் பித்தகோபமும் தாகமும் விலகும் கொஞ்சமந்தம் தேகபுஷ்டி உடனே வீரியவிருத்தி இவைகள் உண்டாகும் இது பால கவுமார விருத்தர் பரியந்த முதவும். 1381

பசும்பாலின் பத்தியம்

ஆறின் முதனடுவா காவாப்பாலே வளர்க்கு
பீறின்சுவை யிரண்டேற் றென்பர்காரப்-பூறினுறுங்
கண்டொக்கு முண்ணென் களையொழிபாத் தோடருந்தப்
பண்டொக்கு முண்ணி பகர்.

(இ-ள்.) பசுவின்பாலைச் சாப்பிடவேண்டுமானால் புளிப்பு துவர்ப்பு உவர்ப்பு கைப்பு கார்ப்பு இனிப்பு என்னும் 6-சுவையில் 1-வதும் 2-வதுமாகிய 4-சுவையுள்ள வஸ்துக்குள் எதனையும் அனுபானமாகச் சேர்த்துக்கொண்டு உண்ணலாகாது சுக்கிலத்தை விருத்தி செய்யும்படியான கடைசியிற் சொல்லிய 2-சுவையுள்ள வஸ்துக்களை அனுபானமாகச் சேர்த்துக்கொண்டு உண்ணச் சிலர் சொல்லுவார்கள்.

Digitized By Roja Muthiah Research Library

ஆனாலும், அந்த 2 - சுவையில் 1 - ஆகிய காரப்புள்ள பொருள் நோயுற்றபோது அநுபானமாகக் கொள்ளலாகும் மற்றகாலத்தில் பாலை தனியே உண்ணவேண்டில் அதற்கு அநுபானம் கற்கண்டுப் பொடி பொருந்தும் 8-வகைக்குற்றங்கள் நீக்கிய அன்னத்துடன் உண்ணவேண்டில் மதுரமுள்ளபழம் அநுபானமாக பொருந்தும் ஆதலால் இவ்வாறு முறைப்படி உண் என்று சொல்லுவாயாக என்க. அன்னத்திற்கு எப்போதுங் குற்றமேயில்லை யாகினும் பாகபேதங்களுமானால் 7-வகைத் தோஷங்களுண்டாகின்றன. அவையாவன 1-வது அன்னத் தோஷம் என்பது கஞ்சி சிக்கிக்கொள்வதாம். இதனால் தூமம் விதூமம் என்கிற அசீரணங்கள் பிறப்பனவாம். 2-வது பிச்சில் தோஷம் அதாவது அன்னங் குழைந்துபோவதாம். இதனால் ஜடாக்கினி யணைந்துவிடும். 3-வது அசுசி தோஷம் அதாவது மயிர்க்கிருமி உமி முதலியவைகளோடு சமைப்பதாம். இதனால் அரோசக ரோகமுண்டாம். 4-வது கொதித்தோஷம் அதாவது நருக்கரிசி யன்னமாம் இதனால் அலசரோகமுண்டாகும். 5-வது சுஷ்கிலதோஷம் அதாவது ஆறி உலர்ந்த அன்னமாம் இதனால் விதூமரோக முண்டாகும். 6-வது தத்த தோஷம் அதாவது காந்தின அன்னமாம் இதனால் சீரணரோகமுண்டாகும். 7-வது விருபதோஷம் அதாவது கொழியலரிசி யன்னமாம் இதனால் ஆயுள் முதலானவைகள்கெடும். 8-வது அனர்த்துஜதோஷம் அதாவது நொந்து ஜலம்பிறந்து நூலிழைந்த அன்னமாம் அதனால் அதிநித்திரையும் சீதாதிரோகங்களும் உண்டாகும். 1382

பால் அருந்தற்கு நாழிகை யளவை கூறல்

அன்பான் முகூர்த்தத் துளேங்கடிகைக் குள்ளுனது
மிப்பான் மனுவர மிர்தாகு-மூப்பாயி
னஞ்சத்தான் காண்டற் கரியா னகிலமுன்
தஞ்சத்தா லுண்டவிருந் தாம்.

(இ - ள்.) பசுவின்பால் கறந்த மூன்றேமுக்கால் நாழிகைக்குள் அல்லது 5-நாழிகைக்குள் உண்ணக்கடவை இவ்வாறுண்டால் அந்தப் பால் தேவாமிர்தத்தை நிகராகும் அக்காலங்களுக்கு மேற்பட்டபாலை யுண்டால் பிரமன் அறிதற்கரிய ஸ்ரீ கயிலாயபதி உண்ட விஷத்தை ஒப்பாகும் என்க. 1383

காலையில் பச்சைப்பால் உண்பதின் குணம்

கையெரிவு காலெரிவு காமில மிரத்தபித்த
மெய்யெரிவு பாண்டுநோய் விந்துநஷ்டம்-வெய்ய

Digitized By Roja Muthiah Research Library

விதயகபம் போம்புட்டி யெய்துஞ்சேய்க் கொவ்வு
முதயமதிற் பச்சைப்பா லுண்.

(இ-ள்.) சூரியன் உதயகாலத்தில் பருகும் பசுவின்பாலினால் கை கால் உடம்புகளில் எரிவு காமாலை ரத்தபித்தரோகம் பாண்டு சீரண சுக்கிலம் உஷ்ணத்தால்பிறந்த மார்புச்சளி இவைநீங்கும். மேனியிடும் அன்றியும் குழந்தைகட்கும் பொருந்தும் என்க. இதனைத் தாரோஷ்ணச் சிகிச்சை யென்பர். அதாவது கறந்த சுடுகை ஆறுவதற்குமுன் உண்பதாம். 1384

நெய் அன்னத்தின் குணம்

வெறுநெய்யுஞ் சோறுமுண்ணில் வீருபல நண்ணுங்
கிறுகிறுத்த பித்தநோய் கிட்டா-தறிவிக்குங்
கண்ணுக்கு மாகுளிர்ச்சி கட்டுமிகச் சீரணமா
முண்ணற்குப் பத்தியமா முன்.

(இ-ள்.) நெய்யும் அன்னமும் கலந்துண்ணில் வன்மை விழிக்குளிர்ச்சி சீரணம் இவை உண்டாகும். பித்தவிகாரம் விலகும். இதுபத்திய உணவாம். இந்தக் கிருதபோஜன சிகிச்சைவிருத்தர்கட்கே முக்கியமாம்.

எண்ணெய் அன்னத்தின் குணம்

எண்ணெய்யுஞ் சோறுமுண்ணி லென்றைக்கு மாபலமாம்
பெண்ணுக் கிளையாத பீடுமுறுஞ்-சண்ணுகின்ற
வாதகப மேகம்போ மாறுப் பசியெழுப்பும்
பூதலத்து ளுளும் புகல்.

(இ-ள்.) அன்னத்தில் நல்லெண்ணெய் சேர்த்துண்ணில் வன்மையும் புணர்ச்சியில் திடமும் நல்லதீபனமும் உண்டாம். வாதகபபிரமேகம் நீங்கும். 1386

மாங்கிசங்கலந்துசமைத்த அன்னத்தின் குணம்

ஊனமைத்த வன்னமுண்ணி லுண்டா மதிகபலம்
போனமே தோதாதும் பூணுங்கா-ஞானல்
விரணநோய்க் காகா மிகுமந்தட் சீணந்
றருமணகப் பித்தசம னம்.

(இ-ள்.) மாமிசஞ்சேர்த்துப் பாகஞ்செய்த அன்னத்தை புசிக்கில் மிகுபலமும் விர்த்தி மேதோதாதுவும் அதிமந்தமு முண்டாம். க்ஷீணஞ்செய்யாநின்ற கபாரம்பமும் தக்தமும் சாந்தியாம். விரணத்தோருக் காகாது. 1387

Digitized By Roja Muthiah Research Library

பதார்த்த வகை

சமைத்த துவரம்பருப்பின் குணம்

தண்ணக் குறிஞ்சித் தலத்தாடகிப் பிளப்பை
வண்ணச் சுடறற்குள் வைத்தாக்கி-யுண்ணற்
கடிக்கும் பசுவின்று மாச்சியத்தோ டுண்ணிற்
பிடிக்குப் பிடிசதையாம் பேசு.

(இ-ள்.) சீதளமுள்ள மலைநாட்டுத் துவரம்பருப்பை வெந்நீரிலிட்டுச் சமைத்துப் போஜனமுதலிய பசுவிநெய்யுடன் அன்னத்திற் கலந்துண்ணில் ஒருபிடி அன்னத்திற்கு ஒருபிடி சதைவளரும் என்க. குறிஞ்சி நிலவஸ்துக்கள் மிருவன்மையுள்ளவை யாதலால் அந்நிலத் துவரையை விசேஷமாகக் கூறினர். 1388

நெய்சேர்த்துண்பதின் குணம்

பருப்பிலெழு வெப்பும் பருங்குடன் முறைப்புந்
திருப்புறு முன்மலத்தின் சிக்குந்-தரிப்புறு
மெய்க்குள்ள காந்தி விலகா தழகுறுநன்
னெய்க்குள்ள வுண்மை நெறி.

இதுவுமது

புத்திமிகுஞ் சிக்குவைநோய் போயொழியு நேத்திரத்தின்
மெத்த வொளியும் விளங்குங்காண்-பித்தமொடு
வாதகப மாறு வறட்சியெல்லா நீக்குங்
கோதின்று நெய்யைக் குடி.

(இ-ள்.) போஜன ஆரம்பத்தில் நெய்சேர்த்துண்பதில் துவரம் பருப்பினது உஷ்ணம் குடல் விகுத்தல் பழைய மலபந்தம் சிக்வாகண்டரோகம் பித்தாதிக்கம் வாதகபதோஷம் நீங்காச்சொறி இவை நீங்கும். அதிஞாபகம் தேஜசு வனப்பு கண்ணுக்கு ஒளிவுண்டாமென்க. ()

பொரியலின்பேத குணம்

காரமிகு பொரியல் காயந்தனிற் கபத்தைச்
சேர வுறவாக்குந் திண்ணமே-சோரப்
புள்ளியிட்டிடும் பொரியல் போர்மந்தத் தோடு
வளியிட்டிடு மனத்துள் வை.

(இ-ள்.) உறைப்புசுவையதிகரித்தபொரியல் கபத்தைதரும். புளிச்சுவைமிகுந்த பொரியல் அலசுநோயையும் வாதபிணியையும் விளைக்கும்.

Digitized By Roja Muthiah Research Library

வரலின்பேத குணம்

இளவருப் பானமந்த மெழுப்பும் கருக
முளவறுப்பான் முத்தோட மோங்கு-மளவருத்த
மையுவறற் பிணிக்கும் வாதமடு மாயினஃ
தைவறற் பிணிக்கு மாம்.

(இ-ள்.) இளவருப்பாகவறுத்த பதார்த்தத்தினால் மந்தமும் கருகும்படி வருக்கில் வாதபித்த கபதோஷங்களும் உண்டாகும். இவற்றில் இரண்டிற்கும் நடுத்தரமாக வறுத்தகறிகள் தொந்தவாதத்தை நீக்குவதுமன்றி கபசம்மந்தமான சகலதோஷங்களுக்கும் உதவும். ()

பச்சடியின்பேத குணம்

புளிப்பான பச்சடியாற் போம்பித்தங் கார்த்தல்
வளைப்பான பச்சடிக்கை வாத-மிளைக்கு
மினித்த பச்சடிக்கருகி யேருந் துவராற்
சனித்த பச்சடிக்குறும் வாதம்.

(இ-ள்.) புளிச்சுவையுள்ள பச்சடியால் பித்தபிரகோபமும் உறைப்புப் பச்சடியால் சிலேஷ்மவாதமும், இனிப்புப்பச்சடியால் ஆரோசகமும் நீங்கும். துவர்ப்புள்ள பச்சடியால் வாதாதிக்கம் உண்டாம். 1392

துவையலின்பேத குணம்

புளிப்பா இலேத்துவையல் போக்கும் பித்தத்தைப்
புளிப்பா லமைதுவையல் பொல்லா-புளிப்பில்
வெறுந்துவையா னன்றதற்கு மிக்க வுறைப்பிட்ட
நறுந்துவைய னன்றினு நன்று.

(இ-ள்.) புளியாரைமுதலிய புளிப்பிலேத்துவையல் பித்த கோபத்தைநீக்கும். வெறும்புளித்துவையல் ரத்தத்தை முறிப்பதால் நன்மையன்று புளிசேராத்துவையல் நலமாம். அதிககாரம் சேர்ந்த நல்ல துவையல் பசியையெழுப்புவதால் உத்தமத்திலுத்தமமாம் என்க.1393

குழம்பின்பேத குணம்

சொல்ல வுறைக்குங்குழம்பாற் றோன்று தனிலவஃ
தில்லையெனில் வாத மிருக்குங்காண்-தொல்லுலகி
னீர்த்த காரக்குழம்பா னீடுமுத்தோட முன்பின்
பார்த்தோடு மென்றே பகர்.

(இ-ள்.) உறைப்புள்ள கொழம்பால், வாததோஷம் சனிக்காவாம். அவ்வாறில்லாக்குழம்பால் வாதசின்னம் உண்டாம். காரத்தோடும் நீர்க்கவைத்தகுழம்பால் வாதாதி முத்தோஷங்களும் விலகும். 1394

Digitized By Roja Muthiah Research Library

துவரம்பருப்பின் ரச குணம்-கலிப்பா

நவரைவாழைக்கனி பலவின்கனி
நல்லமாங்கனி பாலொடுநெய்க்கறி
கவரிலப்பொழுதே மந்தமாம்பரி
காரங்கேட்கும் பயித்தியக்காரரே
யெவருங்காண்க வறைகுதுமன்னத்தி
லிட்டுணுங்கறி தன்னுடன்கூடவே
துவரைநீர்மிளகுள்ளி யிட்டுக்கொளீர்
துவட்டவாதமுந் துஞ்சிடுமுண்மையே.

(இ-ள்.) வாழை பலா மா என்கின்ற முப்பழங்களையும் பால்நெய்க் கறிகளையும் மிதமின்றிப்புசிக்கில் உடனே அக்கினிமந்தம் பிறக்கும். அதை நீக்குதற்கு வகையரியாது சிகிச்சைவினவுகின்ற பித்தர்களே கேளுங்கள். துவரம்பருப்புக் கட்டிறுத்த சலத்தில் மிளகு வெள்ளைப் பூண்டு முதலிய சம்பாரங்கள்சேர்த்து ரசம்வைத்து அதை நற்கறிகள் சேர்ந்தவுணவுடன் சேர்த்துண்ணில் மேற்கூறிய அக்கினிமந்தமும் வாதபிரகோபமும் நீங்கும். 1395

காடைச்சாற்றின் குணம்-விருத்தம்

பொற்றொடிமாதேகண்ணின் புண்ணொடுபிணியல்லாம்போம்
வற்றியஉடற்பருக்கும் வாதபித்தகையுமேகுஞ்
சுற்றியகிராணிகுன்மஞ் சுரம்பலசுவாசகாச
மாற்றிடுங்காடைச்சாற்று லாவியும்வளருங்காணே.

(இ-ள்.) பொன்னலாகிய வளையல்களை யணிந்த பெண்ணே! காடைச்சாற்றினால் போதகிவர்த்தம் முதலிய சில நேத்திரநோய்கள் சந்நிபாததோஷங்கள் கிரகணி வயிற்றுநோய் சுரம் சுவாசம் காசம் இவைபோகும். இளைத்தவுடம்பு பருக்கும் ஆயுளும் வளரும் என்க. ()

கோள்ளுச்சாற்றின் குணம்-விருத்தம்

வற்றியவுடம்பிதுளும் வாதமும்பித்துங்குக்கி
சுற்றியகிராணிகுன்மஞ் சுரம்பவசுவாசகாச
முற்றடர்கண்ணிண்புண்ணோ டுறுபிணியொழியும்வெப்பைப்
பெற்றிடுகாணச்சாற்றாய் மெருஞ்சலதோடம்போமே.

(இ-ள்.) சூடுள்ளக் கொள்ளுச்சாற்றால் சுட்கியதேகம் பருப்பது மன்றி ஸ்தம்பம்போல் உரக்கும். வாததோஷம் பித்தகோபம் கிரகணி குன்மம் ரூட்டை சுவாசம் காசம் விழியைப்பற்றிய விரண முதலிய சிலநோய்கள் ஜலதோஷம் ஆகிய இவை நீங்கும் என்க. காணம்-கொள்.

Digitized By Roja Muthiah Research Library

போஜனமுடிவில் தயிர் உப்பு சேருவதின் குணம்-வெண்பா

மூத்ததயி ருப்புமுண்ண முன்பிறங்கு வத்துகளின்
கோத்ததிரி தோடங் குடிவிலகும்-பூர்த்தியா
யுண்டபிறகு முற்குநடு வுற்றவையெல் லாம்புழுக்கம்
கொண்டாடச் சீரண மாகும்.

(இ-ள்.) போஜன அந்தத்தில் புளித்ததயிரும் லவணமும் கூட்டி யுண்ண அத்தயிருக்கும் நெய்க்கும் நடுவாகத் தீனிப்பையி லிரங்கியிருக்கிற சகலபதார்தங்கூடிய உண்டியிலுள்ள திரிதோஷங்கள் நீக்குவதுந்தவிர அவ்வுண்டி புழுக்கங்கொண்டு நெருக்கமுற்று சீரணமாகும்.

மோரும் அன்னமும் போசிப்பதின் குணம்

மோருமன்ன மும்புசிக்கின் மூளும் பசிமேக
நீருங்கு தரங்குராமு நீள்பாண்டும்-போராத
தாகங் கிராணி சலமேறு வீக்கமும்போம்
மாக விரணத்தில் விலக்கம்.

(இ-ள்.) மோரும் அன்னமும் கலந்து புசிக்கில் ஜடராக்கினி அதிகரிப்பதுமன்றிப் பித்தமேகமூத்திரம் முளைமூலம் பாண்டு தாரம் கிரகணி சிலேத்மசோபை இவைவிலகும் ரணங்களுக்கு ஆகாது. 1399

ஊறுகாயின் குணம்

ஊறுகா யெல்லா முதராக்கினி வளர்க்கு
வீறருசி யென்பதையும் வெல்லுங்காண்-கூறுகின்ற
வையமொடு பித்த வனிலத்தையுந் தொலைக்குஞ்
செய்யவடி வேற்கண்ணாய் செப்பு.

(இ-ள்.) வேற்கண்மாதே! போசனத்துடன் கூட்டிப்பொசிக்கிற நெல்லிக்காய் முதலிய பற்பல ஊறுகாய்களும் தீபாக்கினியை வளர்க்கும் அரோசகம் சிலேத்மபயித்திய தொந்தம் வாததோஷம் இவைகளை ஒழிக்கும். 1400

உண்டபின் வெந்நீரருந்தலின் குணம்

உண்டபின்பு வெந்நீ ரொருதரமாக் கொண்டக்கால்
மிண்டுசுரம் வாதம் விதாகமந்த-மண்டுரகத்
தார்ந்த பொருமலும்போ மாயுளுண்டா மாதர்தமைச்
சேர்ந்தணையத் தாதுவுமாந் தேர்.

(இ-ள்.) போசனாந்தத்தில் திருப்தியாகும்படி வெந்நீரை யொருதரமாக உண்டால்ருட்சை வாதாதிக்கம் விதாகம் அசலம் வயிற்றுப்பிசம் ஆகிவைபோம். ஆயுசும் சுக்கிலமும் விருத்தியாகும். 1401

Digitized By Roja Muthiah Research Library

நீரருந்துங் கிரமம்

தண்ணீரண் ணுண்டுண்டாற் சாருஞ் செவிமந்தங்
கண்ணகுனிந் துண்டாற் காசமுண்டாந்-தண்ணீர்
குடிக்கவென்றுற் பாத்திரத்தைக் கோதரவே வாயாற்
கடித்தருந்தத் துன்பமருங் காண்.

(இ-ள்.) நீரை அண்ணாந்துண்ணில் பாதிரியவாதமும் குனிந்தருந்தில் இருமலும் உண்டாம். பாத்திரத்தை வாயாற்கடித்து அருந்தில் ஒருரோகமுமில்லை. 1402

கஞ்சி வகை

பால்கஞ்சி பொரிசேர்ந்தகஞ்சி சுடுகஞ்சி

இவைகளின் குணம்-விருத்தம்

சுரைதருபாலில்வெந்த சோறுகஞ்சிகொள்ளி
லெரிதருபித்தந்தாழு மெழுமதிவிந்துவுந்தான்
பொரிதருகஞ்சிபித்தம் பொக்கிடும்சுடுகஞ்சிக்குத்
தரிதருமலமும்வாய்வுந் தாகமும்போகுங்காணே.

(இ-ள்.) பசும்பாலில் பச்சரிசிசேர்த்துக் காய்ச்சியகஞ்சியால் பித்த எரிவுநீங்கும். புத்தியும் சுக்கிலமும் விருத்தியாம். நெற்பொரிக்கஞ்சி பித்தியதோஷத்தைப் போக்கும். சாதத்தில்வடித்த சுடுகஞ்சிக்கு பலமும் வாதரோகமும் தாகவிடாயும் விலகும் என்க. 1403

கோள்ளுக்கஞ்சியின் குணம்-வெண்பா

கொள்ளுந் தண்டுலமாய்க் கூட்டியடுங் கஞ்சியது
கொள்ளுங்காற் றீபனத்தைக் கூறுவதே-யெள்ளோ
கசுக்கிப் பிழிபலமு நல்விந்து விந்துவுமே
வசிக்குங் கிழவர்கட்கும் வை.

(இ-ள்.) கொள்ளும் அரிசியும் சேர்த்துக்காய்ச்சிய கஞ்சியைக் குடிக்கில் அதிகபசி எள்ளைக்கையாற் கசக்கிப்பிழியும் படியானபலம் வீரிய விருத்தி ஆகிய இவைகள் கிழவர்களுக்கும் உண்டாகும். 1404

எவாக்கஞ்சியின் குணம்

துன்பன்றி யின்பருளச் சுட்க கபத்தோரு
மென்பன்றி முன்பசை யிழந்தோருங்-போத
போய்ச்சுலுடன் வீழ்வாரு முன்னையடுப் பாரென்னிக்
காய்சேவாக் கஞ்சியுரை காண்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) துன்பமேயன்றி யின்பந்தராத சுட்க கபரோகிகளும் சரீர முழுதும் எலும்புதவிர மாமிசப்பசை யிழந்தவர்களும் பலமற்றுக் கை கால் ஓய்ந்துவிழ்கின்றவர்களும் உன்னைப் பிரார்த்திப்பாரேயாகில் அவர்களுக்கு எவா அரிசிக்கஞ்சியையே மருந்தாகக்கொடுப்பாயாக. ()

கோதுமைக்கஞ்சியின் குணம்

கோதுமைக் கஞ்சி கொடுஞ்சுர நீரேற்றமிவை
காதுமைக்குஞ் சந்நிக்குங் காதரமே-போத
வுடலுந் திடமா மெலிவண்டுங் கூற்றுங்
கடலும் பணிவிழியே காண்.

(இ-ள்.) வண்டும் நமனும் கடலும் வணங்கும்விழியாளே! கோதுமைக் கஞ்சியானது, வாதசுரம் ஜலதோஷம் கபம் சந்நிபாதம் இவைகளை விலக்கும். தேகத்திற்கு வன்மையைத்தரும். 1406

சிறுபயறு உளுந்து பச்சரிசி இவைகளின் கஞ்சிக்குணம்

சிறுபருப்புக் கஞ்சிபித்தந் தீர்க்கு முழுந்தி
னுருபருப்புக் கஞ்சிவளிக் கூக்க-முறியகபம்
பச்சரிசிக் கஞ்சி பவனகபத்தைப் போக்குங்
கச்சிறுக்குங் கொங்கைமின்னே காண்.

(இ-ள்.) வாறிறுகியிருக்கிய கொங்கைகளை யுடையவளே! சிறுபயறும் பச்சரிசியும் சேர்த்துக் காய்ச்சியகஞ்சி பித்தகோபத்தை விலக்கும். உளுந்து சேர்ந்தகஞ்சி வாதத்திற்கு உரப்பாம். பச்சரிசிக்கஞ்சி வாதசிலேஷ்மத்தைப் போக்கும் என்க. 1407

கஞ்சி அன்னத்தின் குணம்-விருத்தம்

கஞ்சியன்னத்திற் காயம்பருத்திடு
மஞ்சிவெப்பமகலுஞ் சிலேஷ்மமோ
டுஞ்சியுற்றிடு மேனிமினுத்திடும்
பஞ்சிபோலப் பறந்திடும்பித்தமே.

(இ-ள்.) வடித்தகஞ்சியும் அன்னமுமாய்க்குடிக்கில், தேகந்தூலித்தலும் ஒளிவும் கபாதிக்கமுண்டாகும். வெப்பமும் பித்தகோபம்போம்.

புனற்பாகத்தின் குணம்-வெண்பா

புனற்பாக முத்தோடம் போக்கு மருந்தி
னனற்பாகந் தன்னை யடக்குந்-தனிக்குணங்க
ளும்மட்டோ வாய்க்கிதமா மாரோக்கியங் கொடுக்குங்
கம்மிட்ட பூவனமே காண்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) இலக்குமியனையாளே! புனற்பாகமானது வாதாதிமூன்று தோஷங்களையும் சுரவெப்பத்தையும் போக்கும். குடிப்பதற்கு இதத்தையும் சரீரசவுக்கியத்தையும் தருமென்க. புனற்பாகம் என்பது ஒரு தரம்வடித்த அன்னத்தை மறுபடியும் வெவ்வேறு உலையிலிட்டு வடித்தும் வடித்து அதைமறுவுலை பாய்ச்சிச் சலரூபமாகக் கொடுப்பதாம். இதனைத் தாரகபத்தியம் என்பர். 1409

பஞ்சமுஷ்டிக் கஞ்சியின் குணம்

பஞ்சமுட்டிக் கஞ்சிகெடும் பட்டிணிற் கொள்ளுங்கால்
விஞ்சனில பித்தகபம் வீறுவாம்-விஞ்சு
மிளைப்பகற்றுந் தாரக விலங்கணத்திற் கேற்குந்
திளைப்பவெழும் பூண்முலையே செப்பு.

(இ-ள்.) அனுபவிக்கப் பூரித்தெழுந்த தனங்களை யுடையாளே! தாரகபத்தியத்திற் குதவாநின்ற பஞ்சமுஷ்டிக் கஞ்சியை நீடித்தலங்கணமுடிவில் அருந்தில், திரிதோஷவிகாரம் அதிகரிக்காது. ஆயாசம் நீங்குமென்க. பஞ்சமுஷ்டிக் கஞ்சியாவது துவரை உளுந்து கடலை சிறுபயறு பச்சரிசி இதை 5-ல் 1-க்கு ஒருபிடியெடுத்துத் தனித்தனியே மெல்லிய சீலைகளில் முடிந்து ஒருபாத்திரத்திற் போட்டு அதில் ஆற்றுச்சலம் 2-படி விடுத்து 8-ல் ஒருபங்காகக் காய்ச்சுவதாம். 1410

முடிச்சுக்கஞ்சியின் குணம்

வாயுசுர நீரிரத்த மாறும் பசியெழும்பு
மோயும் பலதணிக ளுண்மையே-யாயுங்கா
ளுண்டி பருத்திடுமெய் யுண்ணுமேகும் முடிச்சுச்
சுண்டியரீக் கஞ்சினுற் சொல்.

(இ-ள்.) அரையாழாக்கு அரிசிக்கு இரண்டுபடி சலம்விட்டு அரைப்பலம் சுக்கை சீவித்தரித்துத் துணியில்முடிந்து அதிற்போட்டு காலிலொருபங்காகக் காய்ச்சிய கஞ்சியின்றெளிவைக் குடிப்பதினல், வாதசோகம் வெப்பம் சிவந்து இறங்குகிற மூத்திரம் பித்தாதிக்கத்தாலுண்டாகிய சிற்சிலநோய்கள் குடலைப்பற்றிய செரியாமந்தம் முதலிய ரோகங்களும் நீங்கும். உதராக்கினி விருத்தியும் போஜன பெருக்கமாம்.

வடிகஞ்சி உறைகஞ்சி கோடிகஞ்சி இவைகளின் குணம்

கஞ்சியெலா மந்தமவை கண்ணுக்குத் தான்குளிர்ச்சி
விஞ்சிவரும் பித்தமது விட்டகலு முஞ்சு
மதிகஞ்சி வாயுவதி சீதஞ் சேர்க்குங்
கொதிகஞ்சி வெட்டையைப் போக்கும்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) சாதத்தினின்று வடிக்கப்பட்டகஞ்சிகளெல்லாம் மந்தமே யானாலும், விழிக்குக்குளிர்ச்சியாம். இவற்றால் பித்தகோபம் நீங்கும். காலாதீதப்பட்டுத் தயிரைப்போலுறைந்த கஞ்சியானது, வாதாதிக்கத்தையும் கபப்பெருக்கையும் உண்டாக்கும். சாதம்வேகும்போது மீட்கின்ற கொதித்தண்ணீரென்கிற கஞ்சி நீர்ச்சுருக்கைப் போக்குமென்க.

பழஞ்சோற்றின் குணம்

பழஞ்சோற்றை யந்தப் பழைய நீராகாரக்
கொழுஞ்சேர்கை யோடுதயங் கொள்ளி-லெழுந்தாது
பித்தவாதம் போம் பெரும்பசியா மெய்யெங்கு
மெத்தவொளி வுண்டாம் விரி.

(இ-ள்.) இரவில்நீர்வூட்டிய அன்னத்தை அந்நீராகாரத்துடன் சூரியோதயகாலத்தில் அருந்தில், சுக்கிலவிருத்தியும் உதராக்கினியும் சரீரமுழுவது தேஜசும் உண்டாம். பயித்திய வாததொந்தம் விலகும்.

மோர்சேர்ந்தபழையதின் குணம்

மோரும் பழையதுமாய் மோடெடுக்க வுண்டாக்குந்
தீருமெரி வெல்லாவாஞ் சேயிழையே-தீராத
பித்தப் பிணியும் பிரமைநோயும் பறக்கு
முற்றகபந் தூக்குமிகு முன்.

(இ-ள்.) புராதன அன்னத்தில் மோர்சேர்த்துத் திருப்தியாக வுண்பவர்களுக்கு தேக எரிச்சலும் பித்தரோகமும் பிரமை முதலிய நோயும் நீங்கும். சிலேஷ்மாதிக்கமும் நித்திரையும் அதிகரிக்கும். ()

புளித்தசோற்றின் குணம்

புளித்தபழங் காடியன்னம் பொங்கனலா நாளுந்
தளிர்த்தபித்த கோபத்தைச் சாடும்-வெளுத்தமல
மந்தத்தை நீருக்கும் வாந்திதனை யொழிக்கு
மந்தமுறு மணங்கே யாய்.

(இ-ள்.) புளித்த பழைய கடிச்சாதம் உஷ்ணமாம். பித்தாதிக்கம் மந்தத்தினால் வெளுப்பாக இறங்குகிறமலம்வமனம் இவை நீங்கும். ()

ஊசியசோற்றின் குணம்

ஊசலன்ன முண்டா லுடனே வருமுறக்கம்
பேசுவதேன் வாதம் பிரபலமா-மாசித்துச்
சீதளமும் பித்தமும் விசேடிக்கும் வள்ளைரொத்த
காதளவு நீள்விழியாய் காண்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) நீண்டவிழியாளே! ஊசிய அன்னத்தை உண்ணில் உடனே நித்திரை வாதகோபம் சீதாதிக்கம் பித்தவிருத்தி இவையுண்டாம். ()

கூழ், களி இவைகளின் குணம்

கேழ்வரகின் கூழாற் கிளர்வாத பித்தமொடு
வூழ்வயிறுஞ் சாந்தமென விள்ளுவர்காண்-காழாங்
களிக்கும் பலமுண்டாங் காணி லதிவாதந்
தளிர்க்கு முலகிலிதைச் சாற்று.

(இ-ள்.) கேழ்வரகின் கூழினால் வாதபித்தமிஸ்ரம் உதரரோகமும் நீங்கும் என்பர். மேற்படிகளிக்கு வன்மையையும் வாதகோபமும் உண்டாம் என்க. 1417

கம்புசாதத்தின் குணம்

கம்பினது சாதத்தாற் காச்சுவாசஞ் சிரங்கும்
பம்பு முடலமிகப் பாரிக்குஞ்-செம்பரலோ
வற்றுவது மன்றிநிற மாறுமென்பார் வாமமெலா
முற்று முலைமாதே மொழி.

(இ-ள்.) பெண்ணே! கம்பஞ்சாதத்தினால் உதிரஞ் சுண்டுவது இருமல் இரைப்பு விரணம் சரீரம்ஸ்தூலித்தல் விவர்னமிவையுண்டாம்.

தினையின்மாசாதம், கஞ்சி இவைகளின் குணம்

தினைமா கபவாதந் தீர்க்கு மதன்சாதம்
புனைபித்த மாயினுநற் போகந்-தனைக்கொத்து
வாதம் போற்குங்கஞ்சி மாசோபைத் தோடமிதன்
பேதம் போக்குமெனவே பேசு.

(இ-ள்.) தினைமா சிலேஷ்மவாத தொந்தத்தைவிலக்கும். மேற்படி சோறு பித்தகுணத்தை யுற்றிருந்தாலும் வீரியத்தை விருத்திசெய்து வாதகோபத்தை நீக்கும். கஞ்சி வீக்கதோஷவருக்கங்களை ஒழிக்கும்.

சாமைச்சாதம் அதன்கஞ்சி இவைகளின் குணம்

சாமைச்சோ றுண்டாற் றனிவாதங் கோழைகபந்
தீமைக்கா தாரமாய்ச் சேர்சோபை-போமெத்தப்
பித்தமொடு தாதுவுமாம் பேசுமதன் கஞ்சிக்கு
முத்தோடம் போகு மொழி.

(இ-ள்.) சாமைச்சாதத்தை உண்ணில் வாதநோய் க்ஷயம் சிலேஷ்மவிருத்தி வீக்கம் இவைபோம். பித்தமும் சுக்கிலமும் விருத்தியாம். அதன் கஞ்சிக்கு வாதாதி மூன்றுதோஷங்களும் விலகும் என்க. 1420

Digitized By Roja Muthiah Research Library

வரகுச்சாதத்தின் குணம்

எரிகபத் தோடேபலநோ யெய்தும் வறட்சி
சொறிசிரங்கு பித்தந் தொடரு-நிறையுங்
கரகமெனப் பூரித்த கச்சுமுலை மாதே
வரகரிச் சோற்றால் வழுத்து.

(இ-ள்.) பொன்கரகமன்ன புணர்முலையாளே! வரகுச்சாதத்தினால் மூச்செறிகின்ற சுவாசம் இதைச்சேர்ந்தசிலநோய்கள் புடைதினவு கிரந்தி பித்தாதிக்கம் இவை உண்டாம். 1421

சோளச்சாதங்களின் குணம்

சோளமெனப் பேர்படைத்த சோறுகளா லுடலில்
மீளச்சொறி சிரங்கும் விர்த்தியா-நாளும்
கரப்பனு முண்டாகுங் கனமருந்தும் பாழாம்
பரப்பனை யுகண்மாதே பார்.

(இ-ள்.) பெண்ணே! கருமை வெண்மை செம்மை என்னும் சோளச்சாதங்களினால் தினவும் விரணமும் கரப்பானும் அதிகரிக்கும். நல்ல ஔஷதமும் கெடும். 1422

காடைக்கண்ணிச் சாதத்தின் குணம்

எரிவோடு பித்த மெழும்புமைய வாதங்
கருகிமுடிந்தோடிக் காக்கு-மரியசந்த
வாடை பொடிமணக்கு மாமுலை மாதேயுலகில்
காடைக் கண்ணிச்சோற்றைக் கண்டு.

(இ-ள்.) களபமணக்கு முலையாளே! காடைக்கண்ணிச் சாதத்தினால் சரீர எரிச்சலும் பித்தாதிக்கமு முண்டாகும். கபவாததொந்தம் ஒளிக்குமென்க. 1423

சித்திரன்ன பாற்பொங்கலின் குணம்-விருத்தம்

ஒப்பில்லாப் பாலில்வெந்த வுயர்சுவை யன்னமுண்ணில்
வெப்பில்லா வாதமுண்டாம் வெவ்வழற் பித்தந்தாழுந்
தப்பிலா விதிநெய்வெல்லஞ் சார்ந்திடுந் தன்மையாலே
செப்பிலக் கபமேலாடுஞ் செம்பித்த மொடுங்குங்காணே.

(இ-ள்.) உருசியுள்ளபாற் பொங்கலருந்துவதினால் தனிவாதகோபமும் இதில் நெய்யுஞ் சருக்கரையுஞ் சேருவதால் சிலேஷ்மாதிக்கமும் உண்டாகும். சுராந்தத்தில் சனித்தபித்தமும் நீங்குமென்க. 1424

Digitized By Roja Muthiah Research Library

பருப்புப்பொங்கலின் குணம்-வெண்பா

போகமிக வுண்டாகு பொங்கிய பித்தந்தணியு
தேகமதில் வாதமிகச் சேருங்காண்-வாகார்
பொருப்புப்போல் விம்முலைப் பூங்கொடியே பச்சைப்
பருப்புப் பொங்கற்சோற்றைப் பார்.

(இ-ள்.) குன்றனைய தனத்தாளே! பச்சைப்பருப்புப் பொங்கல் அன்னத்தினால் வீரியவிருத்தியும் வாதப்பெருக்கமும் உண்டாகும். பித்தகோபமும் விலகுமென்க. 1425

சருக்கரைப் பொங்கலின் குணம்

வாயினரோ சகத்தை மாற்றிவமனம் போக்கு
மாயில்பித்த கோபத்தை மாற்றுங்காண்-நேயச்
செருக்கரை செந்தோளாற் றிருத்துமட மாதே
சருக்கரைப் பொங்கற்சாதங் காண்.

(இ-ள்.) பெண்ணே! சருக்கரைப்பொங்கல் அருசி வாந்தி பயித்தியம் இவைகளை நீக்கும். 1426

மிளகோதனத்தின் குணம்

மிளகோ தனமருந்த விம்முகின்ற வாத
மிளகும் பசியு மெழும்புங்-களகளெனக்
கூவும் வயிற்றின் குடலிரைச் சலுங்கபமுந்
தாதுபித்தமுந் தணியுஞ் சாற்று.

(இ-ள்.) மிளகோதனம் உண்பதினால் பொருமுகின்ற வாயு குடலிரைச்சல் கபாதிக்கம் பித்தகோபம் இவைவிலகும். தீபனமுண்டாம்.

புளியோதனத்தின் குணம்

வாந்தி யுரமொழிய வாய்நீர்ச் சுரப்போகுஞ்
சாந்தியுறப் பித்தமது சாந்தியாம்-வாய்ந்த
வளியோ வயிலோ வென்றையுறச் செங்கண்ணாய்
புளியோ தனத்தால் புகல்.

(இ-ள்.) வண்டோ வேலோ வென்றையுறுங் கண்ணாளே! புளியோதனத்தால் வமனவேகம் அருசி பயித்தியமும் போம். 1428

கடுகோதனத்தின் குணம்

உரியகடுகும் புளியு மொவ்வக் கலந்தே
யரியமனத்தோ டமைத்த வன்னம்-பருகினால்
வாதமொடு வையமும் பின்வாங்கி விழிந்தோடுஞ்
சீதமலர் திருவே வோது.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) கடுகும் புளியும் சேர்த்தமைத்த அன்னத்தை உண்டால் வாததோஷம் சிலேஷ்மமும் ஒழியுமென்க. 1429

எள்ளோதனத்தின் குணம்

செப்பரிய வாதபித்தத் தீமை யகலுங்கபம்
துப்பி வளரு முடலிருகு-முப்பழத்தின்
கள்ளோ துஞ் செய்ய கனிமொழியே நீகேளா
எள்ளோ தனத்திறு லே.

(இ-ள்.) எள்ளோதனம் உண்டால் வாதபயித்திய தொந்தம் விலகும். சிலேஷ்மாதிக்கமும் தேகவலுவும் உண்டாகுமென்க. 1430

உழுந்தோதனத்தின் குணம்

எஞ்சுகப வாதமிக வேறுமதி மந்தமும்
விஞ்சுபித்தந் தாழு மெய்புரக்கு-மஞ்சு
மெழுந்தோதம் புக்கு மினியநடை மாதே
வுழுந்தோ தனத்திற் குறை.

(இ-ள்.) இனிய நடையாளே! உழுந்தோதனத்தால் சிலேஷ்மவாத தொந்தம் அலஜரோகம் சரீரதிடமதிகரிக்கும். பித்தகோபம் நீங்கும். ()

ததியோதனத்தின் குணம்

ஆறு வழலகற்று மாந்தபித்த நோய்போக்குந்
தேறுத மெய்யைமிகத் தேற்றுங்காண்-மாறு
மதியோதை கொள்ளும் வதன மயிலே
ததியோ தனமெலாஞ் சாற்று.

(இ-ள்.) சந்திரவதனியே! ததியோதனமானது மாறு உட்சூட்டையும் பித்தநோயையும் விலக்கும். உடலையிரட்சிக்கும். ஆதலால் இது சிறந்ததெனக் கூறுவாயாக. 1432

கட்டமுதின் குணம்

சூலைசுக்கி லாஸ்மரி சுவாச காசங்கண்ட
மாலை முதலியநோய் வந்தணுகு-மாலுலகிற்
றுட்ட மிரத்தமொடு தொன்மேக மும்பறக்குங்
கட்டமுதை நீயுண்ணுங் கால்.

(இ-ள்.) கட்டமுதை நித்தியமும் புசிப்பையாகில் தேகமுற்றிலுங் குத்தல் சுக்குலாஸ்மரி இரைப்பு இருமல் கண்டமாலை முதலியரோகங்கள் உண்டாகும். ரத்தபிரமேகமும் ஒழுக்கு வெள்ளை நிவர்த்தியாம். ()

Digitized By Roja Muthiah Research Library

பலகார வகை

உழுந்துவடையின் குணம்

வெறுமுழுந்திற் செய்வடைக்கு மென்மேலும் வாத
முறும்பித்தஞ் சற்றே யொடுங்கு-நறுந்தீ
பனம்போம் புசிப்பிற் பருகநன்றாய் வாலி
யயனம்போ னடையா யறி.

(இ-ள்.) அன்ன நடையாளே! சுத்த உழுந்தினாற் செய்த வடைக்கு வாதாதிக்கமாம். பித்தகோபமும் உதராக்கினியும் கெடும். இதை உண்டியோடுண்ணில் நலமாம். 1434

தயிருழுந்தின்வடைக் குணம்

உழுந்தின் பருப்பை யுலர்த்தி யூறச்செய்
வழுந்தா தரைத்து வடையாக்கிச்-செழுந்தேனிற்
கூட்டியுண வையபித்த சோபையறு மூதையிலே
தீட்டியவேற் கண்மாதே தேர்.

(இ-ள்.) வேற்கண்மாதே! உளுத்தம்பருப்பைப் புளித்ததயிரில் ஊறவைத்துப்பெரும்படியாக அரைத்துபாகமாக சுட்டவடையை நல்ல தேனில் தோய்த்து உண்ணிற் சிலேஷ்மபயித்திய ரோகமும் வாத தோஷமும் நீங்கும் என்க. 1435

பேயன்வாழைக்கனி சேர்ந்தவடைக் குணம்

பேயன் கதலியும் பெய்தமா ழுத்தின்வடை
நேயமுற வமைத்து நித்தலுமே-நேயமுடன்
றுனருந்தில் வாதபித்தந் தத்தநிலே கொண்டமருந்
தேனருந்தாத் தேனே தெளி.

(இ-ள்.) தேன்போன்றவளே! பேயன்வாழைக்கனிசேர்ந்த உழுந்துவடையை நெய்த்தொட்டுத் தினமுண்ணில் திரிதோஷங்கள் அதனதன் இடத்தை உற்றிருக்கும். 1436

தோசையின் குணம்

மிருகத் தெழுந்த பித்தத்தை வீறுதடக்கு
மகத்துளனில் கப மாற்றுஞ்-சகலத்திலுமு
தோசை பெருமயிலே தின்னரிசேர் மாழத்தின்
றோசைக் குணமிதனைச் சொல்.

(இ-ள்.) அழகுபொருந்திய பெண்ணே! உழுந்தும் அரிசியுஞ்சேர்த்துச்செய்த தோசையானது பித்தகோபத்தையும் வாதசிலேஷ்மதொந்தத்தையும் நீக்கும் என்க 1437

Digitized By Roja Muthiah Research Library

சம்பாரதோசையின் குணம்

காயமிள கிஞ்சி கருவேப்பிலை முதலாந்
தூயபல காரமிட்ட தோசைக்கு-வாயுவிலே
பித்தகப வேகப் பெருக்கொழியுந் தாதுவுமாஞ்
சுத்தவன சத்திலிலே சொல்.

(இ-ள்.) இலக்குமியாளே! பெருங்காயம் மிளகு இஞ்சி கருவேப்பிலைமுதலிய பரிசுத்தமுள்ள பலசம்பாரஞ் சேர்த்ததோசைக்கு வாததோஷமும் பயித்தியசிலேஷ்மகோபமும் விலகும். சுக்கிலவிருத்தி. ()

சுத்தஇட்டலி, சம்பார இட்டலி இவைகளின் குணம்

வெறுமாக்க ளிட்டலிக்கு வேகமறுங் காரப்
பெறுமாக்க ளிட்டலியைப் பேசி-லறுமனில
பைய் பித்தங்க ளதிகரிக்கு மோமார
னையவெய்யுங் கண்ணாய் நவில்.

(இ-ள்.) மதனைவெய்யுங் கண்ணாளே! உழுந்தரிசி இம்மாவுகளாற் செய்த சுத்தஇட்டலிக்கு பித்தகோபம் நீங்கும். காரஞ்சேர்த்தமேற்படி மாவுகளாற்செய்த சம்பார இட்டலிக்கு திரிதோஷங்கள் அதிகரிக்கும்.

முறுக்கின் குணம்

ஐயமொடு பித்த மதிகரிக்குந் தாழாத
செய்ய வனிலஞ் சிறிதடங்கும்-வைய
நிறுக்குமிகு கற்பையுறு நேரிழையே நாளு
முறுக்கின் குணமா மொழி.

(இ-ள்.) கற்பிற்சிறந்தவளே! முறுக்கு என்கிற ஒருவித பலகாரத்தால் சிலேஷ்மமும் பித்தமும் விருத்தியாகும். வாதகோபங் கொஞ்சந் தணியுமென்க. 1440

தேன்குழலின் குணம்

ஓங்கும் கபவாத முட்டினமு மீறிவரும்
வாகுஞ் சலங்கொஞ்ச மந்தமுமாந்-தேங்குமிசை
யான்குழலு மியாழுமிக வஞ்சுமொழிக் கிஞ்சுகமே
தேன்குழலுங் காங்குணத்தைத் தேர்.

(இ-ள்.) யாழினிய மொழியாளே! தேன்குழலுக்கு சிலேஷ்ம வாததொந்தமும் வெப்பமும் அதிதாகமும் உண்டாகும். பசிகொஞ்சம் மந்தப்படுமென்க. 1441

ROJA MUTHIAH
KOTTAIYUR—623 106

Digitized By Roja Muthiah Research Library

அதிரசத்தின் குணம்

ஐயமொடு பித்தமிகு மாகந்துதிக்க வுறுந்
துய்ய வனிலஞ் சுழிக்குங்காண்-சையத்
தெதிரசத்தை யூர்வோ னெனுங்கற்பு மாதே
யதிரசத்தை நன்று யறி.

(இ-ள்.) கற்புள்ளமாதே! அதிரசத்தினாற் கபமும்பித்தமும்விருத்தியாகும். தேகசுவரட்சணைக்குரிய சுத்தவாதம் வுள்ளடங்கும். 1442

பிட்டின் குணம்

செம்புனலுங் கட்டுந் தெளியுமுர மாகும்
வெம்பினில முட்புறத்தில் வீருங்காண்-செம்பழத்தை
வட்டைப் பழிக்கும் வன்முலைமா தேயரிசிப்
பிட்டைப் புசிப்பார்க்குப் பேசு.

(இ-ள்.) வன்னமுலை மாதே! அரிசிமாவின் பிட்டு என்கிற பலகாரத்தை உண்பவருக்கு வன்மையும் உள்ளில்வாத வெப்பமும் உண்டாம். மாதர்கட்கு ருதுகாலத்தில் மிதமின்றி ஒழுகுகின்ற உதிரம் கட்டுப்பட்டுத் தெளிவையுறுமென்க. 1443

மோதகத்தின் குணம்-இதுவே கோழுக்கட்டை

வாதமுறு மந்தமிகு மாருத வெப்பமுமாஞ்
சீத கபவிருத்தி சேருங்காண்-தீதுறுகட்
போதகமுஞ் செப்பும் பொருப்புநிகர் முலையாய்
மோதக முண்பார்க்கு மொழி.

(இ-ள்.) ஆனை செப்புமலை இவற்றை நிகர்த்த முலையாளே! மோதகத்தை யருந்துபவர்க்கு வாதவிருத்தி உதராக்கினி மந்தம் சிலேஷ்மாதிக்கம் ஆகியவைகள் உண்டாகும். 1444

கோதுமை அடையின் குணம்

தேகம் பலக்குமதி தீபனமுண் டாகுநிறை
மோகம் பெருமைய மூர்க்கமறுங்-கோபமிக
வோதி யடையு முயர்கொங்கை மாதரசே
கோதி யடையைக் கொடு.

(இ-ள்.) சிறந்த கொங்கையாளே! கோதுமை அடையினால் சரீரவண்மையும் உதராக்கினியும் சுக்கிலதாதுவும் அதிகரிக்கும். சிலேஷ்மகோபம் நீங்கும். 1445

Digitized By Roja Muthiah Research Library

பொரியுண்டையின் குணம்

சாந்திபித்த வாதந் தணியும் வலுத்தெழுந்த
சுத்தகப வாதந் தொலையுங்காண்-மெத்த
வரியுண்ட வேல்விழியாய் வையகத்திற் சாலிப்
பொரியுண்டை நன்ருய்ப் புசி.

(இ-ள்.) வேல்விழியாளே! பாகிற் சேர்த்துப்பிடித்த நெற்பொரி யுண்டையை யுண்பாயாகில் நலமாம். வாந்தி பயித்தியம் வாதகோபம் கபவாதமிஸ்ரம் இவைபோம். 1446

சேர்க்கை அவலின் குணம்

பானெய்சேர்த் துண்ணிற் பலமாந் ததிகண்மந்தத்
தானெய்து மோரயர்வு தாகமெரி-வேணிருக்கு
மப்புளிய மஞ்சுங்கா லாகுமிரை யொழியு
மெப்புளியும் பித்தி லவலில்.

(இ-ள்.) அவலில் பாலும் நெய்யும் சேர்த்துவுண்டால் சரீரத்துக் குப்பலம் உண்டாகும். அதை தயிர்களில் கலந்து உண்டால் மந்தம் உண்டாகும். மோரில் உண்டால் சோபமும் எரிவும் விளங்கும். சலத் திலூறவைத்து உண்டால் உளியால் வெட்டினுல் அதுவும் வாய்மடங் கத்தக்க உறுதியான வாயுவு உண்டாம். ஆகாரமும் ஏற்றுக்கொள் ளாது. ஏதாவது புளிகளில் சேர்த்து உண்டால் பித்தரோகம் நீங்கும்.()

நெற்பொரியின் குணம்

நெற்பொரியைத் தின்று னெடுந்தாகம் வாந்திமந்த
மற்பித்த வாத மதமூர்ச்சை-பற்பலவாம்
பேதி யரோசிகை பேருலகை விட்டொழியுஞ்
சாதி மடமயிலே சாற்று.

(இ-ள்.) மயில்போன்றவளே! நெற்பொரியைப் பாகப்படிக்கு தின் னில் அதிதாகம் வமனம் மந்தாக்கினி பயித்தியவாத தொந்தம் மத ரோகம் மூர்ச்சை அதிசாரவருக்கம் அரோசகம் இவைகள் நிவர்த்தியாம்.

அப்பளம் சோத்தப்பளம் இவைகளின் குணம்

வாதத்தை யுண்டாக்கும் மாபலத்தை யுங்கொடுக்கும்
சீதத்தை மேவுகபந் தீர்க்குங்கா-ளேதுமுழுந்
தப்பளஞ் சோற்றப்பளங்கா லாதிகளவிஞ் சாதுஙிலே
யொப்பவளஞ் செய்யு முறை.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) உழுந்துமாவின் அப்பளம் வாதப்பெருக்கையும் உடற்கு றுதியையுந்தரும். ஆமத்தைப்பற்றிய கபத்தைநீக்கும். அரிசிமாவினுற் செய்தசோற்றப்பளம் திரிதோஷங்களைவீரவொட்டாமற்சமப்படுத்தும்.

பாயசத்தின் குணம்

பாயசங் கொண்டாற் பழையமலம் வாந்திபித்த
மாயாசம் போங்கூறி லற்பமந்தந்-தூயசர்
வேந்திரிய நன்மை யெழில்வலி மனத்தெளிவோ
டாந்தபசி மேதையு முண்டாம்.

(இ-ள்.) பாலில் நெய்முதலியவை சேர்த்துக் காய்ச்சிய பாயசத்தி னுல் மலபந்தம் வாந்தி பித்தம் இளைப்பு இவை நீங்கும். அற்பமந்தம் பஞ்சேந்திரியங்கட்கு நலம் அழகு பலம் மனத்தெளிவு தீபனம் புத்தி இவை உண்டாம் என்க. 1450

பரமானத்தின் குணம்

பரமானத் தாற்பயித்தி யந்தாக மும்போ
முரமான ருட்சை யுரக்கும்-திரமான
வங்கம் பருக்கு மதிகமலமு முண்டாம்
பொங்கமுறு மாதே புகல்.

(இ-ள்.) சிறப்புற்ற பெண்ணே! பரமானத்தால் பித்தகோபமும் தாகமும் விலகும். சுரமும் சரீரபுஷ்டியும் மிகுவன்மையும் உண்டாகும்.

அன்னபின்னத்தின் குணம்

சோறுக்கெண் கூறாக்கந் தூமா வல்லிவைக்கண்
கூறுக்க நற்பழம்பால் கொள்ளிவைக்கெண்-கூறுக்க
மூன்பல மிவைக்கெண் கூறுக்கஞ் சுகாசுகத்துந்
தான்பல வகைத்துப்புந் தான்.

(இ-ள்.) அறுசுவையோடு மிக்கப்புசிக்கின்ற அன்னத்தால் உட லுக்குண்டாகின்ற பலத்தைவிட, 8-பங்குபலம் மாவும் அவலுமாம். இவ்விரண்டைப்பார்க்கிலும், 8-பங்குபலம் பாலும் பழமுமாம். இவை களைவிட, 8-பங்குபலம் மாமிசமும் கிழங்குமாம். இவைகளுக்கு மேல் 8-பங்குபலம் பற்பல நெய்களுமாம். இந்த நெய்கள் இவ்வாறே பலத் தையும் மிதந்தப்பினல் தீமையையும் செய்யும். 1452

உண்பதற்கு முன்பின் உண்ணுங்கனிகளின் குணம்

அருந்தற்கு முன்பருந்த லாமா மகல
மருந்தற்குப் பின்பிலந்தை யாகும்-பொருந்தியவெங்

Digitized By Roja Muthiah Research Library

காலும் கபித்தக் கனியாகு மாகாவெக்
காலுங் கதலிக் கனி.

(இ-ள்.) புசித்தற்குமுன் நெல்லிக்கனி பின்பு இலந்தைக்கனி இவ்விரண்டு காலங்களிலும் விளாங்கனியும் புசிக்கலாம். வாழைக்கனி எப்போதுங் கூடாது என்க. 1453

உண்டபின்பு குருநடை கோள்ளுதலின் குணம்

உண்டபின்பு நூறடிவைத் தோங்காக் குருநடையை
கொண்டவர்க்கு முன்புகுடர் கொண்டபருந்-திண்டியெலாஞ்
சேர்ந்தொன்றாய்ச் சீரணிக்குந் தீயமுத் தோடங்களதி
லார்ந்தொன்ற மாட்டா வறி.

(இ-ள்.) இராப்போஜனம் செய்தவுடன் தனதுகாலால் சிறுநடையாக 100-அடி உலாவியபின் நித்திரைகொள்பவர்களுக்கு முன்புவுண்ட அன்னத்திற் சேர்ந்த விஷம். பதார்த்தங்களெல்லாம் ஒன்றுறக்கலந்து சீரணிப்பதுந்தவிர அவ்வுண்டியில் திரிதோஷமுஞ் சாராதென்றுணர்க.

பரிமள வகை

மணக்குழம்புப் பூசுதலின் குணம்

பூசமணத் தாலின்பம் பூணு மணுக்கிருமி
நாசமுறு முட்டைக்கு நல்வலியாந்-தேசமாறு
நாதவிந்துவும் விரைத்தீ நண்ணமிக விளையுஞ்
சீதவிந்துவின் குளிர்போந் தேர்.

(இ-ள்.) புசித்தவுடன் பகலிரவிலும் பூசப்பட்ட மணக்குழம்பினால் மகிழ்வும் உதராக்கினிக்கு வன்மையும் இவ்வாசனையின் சூட்டினால் சோணிதசுக்கிலவிளைவும் உண்டாகும். ரசதாதுவில் ஊருகின்ற அணுக்கிருமிகளும் சந்திரகிரணத்தால் வராநின்ற சீதளக் குளிரும் நீங்கும். 1455

கார்காலமணப்பூச்சின் குணம்-விருத்தம்

கார்காலந்தனிற் பூசக்கருப்பூரசந்தங்
கஸ்தூரியகிற்கூட்டு காந்தியுமுண்டென்பார்
சீர்மேவுசிறப்புண்டாம் கீர்த்தியும்வந்தெய்துந்
தேகத்தின்வியர்வகலு மிளைப்போடுட்சுரம்போங்
கூர்மேவுகாசமிழுப் பிருமலிவைவிலகுங்
குட்சிவாய்வதுதொலையு நேத்திரமுந்துலங்கு

மார்வமிகுந்தாகமறும் வீரியமுநண்ணு
மறிக்தென் றுநடந்திடுவர்க்கம் புவியின்மீதே.

(இ-ள்.) மழைகாலத்தில் பச்சைக்கருப்பூரம் கஸ்தூரி அகில்கூட்டு இதுகளைக் கிரமப்படி நல்லசந்தனத்திற் சேர்த்தரைத்துப் பூச அழகு மேன்மை கீர்த்தி விழிக்குட்பிரகாசம் இச்சை சுக்கிலவிருத்தி ஆகிய இவை உண்டாம். வியர்வை அயர்வு உட்சுரம் இருமல் சுவாசகாசம் வயிற்றுவலி தாகம் இவை விலகும். இது உஷ்ணம் என்பர். 1456

பனிக்கால மணப்பூச்சின் குணம்-விருத்தம்

பனிக்காலந்தனைத்தேடிக் குங்குமச்சோரம்
பகருமகில்கஸ்தூரி சாந்துசவ்வாதுடனே
பனிப்பகலச்சமஞ்சேர்த்துப் பனிநீர்குழைத்துப்
பண்புபெறப்பூசியிடி லூக்கமுடைமையதாஞ்
செனிப்பானதாகமொடு பித்தமறுங்கபம்போந்
தினவுகெடும்வீரியமாஞ் செயமுயருமழகாந்
தனிப்பானசெய்யமலர்த் திருவுமருங்கணைவாள்
சவுரியமுஞ்சேருமுகச் சந்தோடமுறுமே.

(இ-ள்.) பனிக்காலத்தில் குங்குமப்பூ கிச்சிலிக்கிழங்கு அகிற் சாந்து கஸ்தூரி சந்தனம் சவ்வாது இவைகளை முறைமைப்படிப் பன்னீர்விட்டுக் குழைத்துப்பூசில் சரீரபலம் தாதுவிருத்தி மாதர் கூட்டம் வனப்பு லட்சுமிவிலாசம் வீரியம் களிப்பு இவைகள் உண்டாம். தாகம் பயித்தியம் சிலேஷ்மதோஷம் நமைச்சல் ஆகிய இவைகள் நீங்கும். ()

மாலையணிதலின் குணம்-வெண்பா

முல்லைமுத லீடுமண மொய்த்தலர்ந்த தொத்தணிவார்
கில்லையெனுந் தாதுநட்ட மில்லைமா-மொல்லைமனத்
துக்க மொழியுஞ் சுகமொழியும் பூரிப்பு
மிக்க மொழியவரு மேல்.

(இ-ள்.) முல்லைமுதலிய மிருவாசனையுள்ள மலர்மாலையைப் புனைபவர்கட்கு சுக்கிலதாதுவிருத்தியும் மங்களவார்த்தையையும் மகிட்சி நிறைவும் பலர் புகழ்ச்சியும் உண்டாம். மனத்துயரம்போகும். 1458

பன்னீரின் குணம்

பன்னீர் மிகக்குளிர்ச்சி பாராய் சுகசந்திக்
கின்நீருண் ணேரு மிளைப்புமறுஞ்-சந்நிகளும்

Digitized By Roja Muthiah Research Library

வாதபித் தையமொடு மானேவியாகுலமும்
பூதலம் விட்டேகு புகல்.

(இ-ள்.) பன்னீரை ஔஷத அநுபானங்களிற்கூட்டி அருந்தில் சுகசந்நியும் சந்நிபாதங்களும் விலகும். தனியேகுடித்தால் ஆயாசமும் திரிதோஷங்களும் மனச்சங்கடமும் நீங்கும். பன்னீர்ப்பூ சிதோஷ்ண திரவியம். ஆதலால் இதில் இறங்கிய நீரைக்குளிர்ச்சி என்றார். 1459

தாம்பூல வகை

தாம்பூலப்போதுக்குணம்-விருத்தம்

தக்கோலந் துவருறைப்பு காரமாமச்
சாரங்கடாயமதிற் சிலதோடம்போ
நிற்காது கிருமியுந் தாகம்பன்னோய்
நிறைபசியாமாதர்குழா நெருங்குமேலு
மிக்கான சுவையுதரஞ் சுத்தியாகும்
விடாய்நீங்குமடி-வொளிருந் தாதுமுண்டா
மெக்காலுந் தருமமெய்துங் களையுஞ்சேரு
மெக்கருமட்கு மிக்கேதங்குங் காணே.

(இ-ள்.) தாம்பூலரசத்தினால் கிருமி கபம் தாகம் பல்நோய் விடாய் இவைகள் நீங்கும். பசி ஸ்திரீகளின் உரவு நாவுரிசை மலசுத்தி நுண்ணறிவு சுக்கிலவிருத்தி தருமகுணம் அழகு உண்டாம். அன்றியுமதுசுபாசுபங்களுக் குதவும் என்க. தக்கோலம் என்பது ஏலம் முதலிய வாசனை திரவியம். துவர்-பாக்கு, உறைப்பு-வெற்றிலை, காரம்-சுண்ணாம்பு. 1460

கோட்டைப்பாக்கின் குணம்-வெண்பா

கொட்டைப்பாக் கென்றுரைக்கிற் கோழைமலம் போமுலத்
தட்டைப்பார்க் குங்கிருமி சாமந்தக்-கொட்டைப்பாக்
கொத்தசுரத் தோர்க்குமருந் துண்டவாய்க்கும் மெடுத்து
மெத்தவுண்ணிற் சோபைவரும் விள்.

(இ-ள்.) கொட்டைப்பாக்கினால் கோழை மலம் மலப்பையினது அடித்தட்டிலிருக்கும் கிருமி இவை நீங்கும். இது சுரநோயுடையவருக்கும் ஔஷதஞ்சாப்பிட்ட வருக்கும் வாயிற்போட்டுகொள்ள உதவும். அதிகமாகத்தின்றால் சோபாரோகம் உண்டாகும் என்க. 1461

இளங்கோட்டைப்பாக்கின் குணம்

வளங்கட் டிலங்கைநகர் வாசியென வந்த
விளங்கொட்டைப் பாக்குண்பார்க் கொன்றும்-களங்கட்டும்

Digitized By Roja Muthiah Research Library

வாயுவே காமறவன் வல்லருசி யேகுமகத்
தேயுவாகா மறைவே தோ.

(இ-ள்.) வளப்பம்பொருந்திய இலங்கைநகராகிய கொலம்புத்தேசத்திலுண்டாகின்ற இளங்கொட்டைப் பாக்கைத்தின்பவர்க்கு தற்காலத்தில் தொண்டைக்குள் கோழையடையும் வாதமும் நீங்காக் கபமும் வலியஅருசியும் விலகும் பசிவிலகாது இது ஒளிப்பல்ல என்க. 1462

இவ்விதபாக்குகளை நீக்கவேண்டுமெனல்

அதிபிஞ் சதிமுப் பதிப்சுமை மேனி
யதிவீரம் பூற்சிக ளுள்ளாட-லதிசொக்க
லுள்ளவிதப் பாக்குகளி லொன்றேனு நேரிலதைத்
தள்ளவிதி முக்காலுந் தள்.

(இ-ள்.) மிகவும் இளம்பிஞ்சு அதி முதிர்ச்சி மிகப்புதிது பச்சை புழுவாடல் சோருதல் ஆகிய இக்குணங்களுள்ள பாக்குகளைத் தின்றமல் நீக்கவும், என்க. 1463

சோற்றைப்பாக்கின் குணம்

சொற்றைப் பிளவிடித்துத் தோயமதி லூரவிட்டுச்
சத்துவர நூறுவிசை தான்கழுவி-வைத்துலர்த்தி
வாசமைத் துத்தின்ன மந்தமொடு தோடமறுந்
தேக மழகுமுறுஞ் செப்பு.

(இ-ள்.) சொற்றைப்பாக்குகளை இடித்து நல்லஜலத்தில் ஒருநாளூறவைத்து நூறுதரங்கழுவி உலர்த்தி அதில் வால்மிளகுமுதலிய வாசனைத் திரவியங்களைக்கலந்து தாம்பூலந்தரித்துங்கொள்ளில் அக்கினிமந்தமும் திரிதோஷகோபங்களும் விலக்கும். ஒளியும் அழகுஉண்டாம். ()

களிப்பாக்கின் குணம்

களிப்பாக்குத் தின்றக்காக் கண்டத்துட் கோழை
யொளிப்பாகக் கட்டு மிஃதுண்மை-தளிப்பான
பித்தவரோசகம்போம் பேதிமிகவுண்டாகுஞ்
சித்த மகிழ்ச்சியுறுஞ் செப்பு.

(இ-ள்.) களிப்பாக்கைத்தின்றால் நெஞ்சிற்கோழையும் அதிசாரமும் மனமகிழ்ச்சியும் உண்டாகும் பித்த அருசி ஒழியும் என்க. 1465

வெற்றிலையின் குணம்

ஐய மறுங்கா ணதன்சாரங் கொண்டாக்காற்
பையச் சபித்தியம்போம் பைந்தொடியே-மெய்யின்

கடியின் குணம்போகுங் காரவெற் றிலைக்குப்
படியுமுத் தோடமிதைப் பார்.

(இ-ள்.) காரமுள்ளவெற்றிலையின் இரசத்தைப் பருகில் கபம் சீதளம் காணுக்கடியின் துர்க்குணம் திரிதோஷகோபம் இவைகள் ஒழியும்.

கம்மாறுவெற்றிலையின் குணம்

வட்டிலொன் றிகிட்டினீ ரேற்றஞ் சிரோபார
மாட்டிவிடு சந்நி மாந்தமொடு-நாட்டிற்
பரியகுரற் கம்மல்வலி பண்டியுப் பிசம்போ
மரிய கம்மாறு வெற்றிலை.

(இ-ள்.) கம்மாறுவெற்றிலையால் சலதோஷம் சிரோபாரம் சந்நி மந்தாக்கினி குரற்கம்மல் வயிற்றுவலி உப்பிசம் இவைபோம். 1467

கற்சுண்ணத்தின் குணம்-விருத்தம்

உண்டவனஞ்சீரணமா நெய்ச்சிக்கேகு
முறில்விந்துவிற் சுக்கமுறுங்காண்வாயில்
விண்டவெயிறிறுகுமறற் பேதிவற்றும்
வெந்தளித்தநீர்ச்சுருக்கும் விலகுமெய்யை
யண்டுபலவிடமொழியுங் கறையோநீற்கு
மழலுறுபுண்சிரங்குநமை யழுபுண்ணூறுங்
கண்டவுருவன்மீகஞ் சிரநோய்சந்நி
களுங்கரக்குங்கற்சுண்ணங் காணுங்காலே.

(இ-ள்.) கற்சுண்ணத்தால் அன்னஞ் சீரணமாவதுந்தவிர குடலிற் பிடித்த நெய்ச்சிக்கு பேதி வாதகிரிச்சம் பூரான்கடி முதலிய பலவிஷம் காயங்களாலொழுகின்ற ரத்தம் நெருப்புச் சுட்டபுண் சிரங்கு தினவு அளிந்தவிரணம் களநோய் மண்டைப்புற்று தலைநோய் சந்நி இவைநீங்கும். சுக்கிலத்திற்குப் பலமும் தத்தங்களுக்குறுதி உண்டாம்.

முத்துச்சுண்ணத்தின் குணம்

முத்துச் சுண்ணத்தான் முதிர்ந்தவதி சாரமையுங்
குத்துக் கிருமியொடு குன்மநோய்-நத்தியதோர்
வாத வரோசகமு மாறிவிடு மலர்ந்த
பேதிலுரை மாதே புகல்.

(இ-ள்.) இலக்குமிபோன்ற பெண்ணே! முத்துச்சுண்ணத்தினல் நீடித்தபேதி கபக்கட்டு மலக்கிருமி வயிற்றுநோய் வாதஅரோசகம் ஆகிய இவைபோம் என்க. 1469

Digitized By Roja Muthiah Research Library

தாம்பூலத்தில் காய்ச்சுக்கட்டி சுக்கு லவங்கம் இவைகள் சேருதலின் குணம்

காய்ச்சுக் கட்டிகிறுகுங் கட்டவிழ்ந்த தந்தமங்கார்
பூச்சிக் குமிழாப் புனலிற்சா-மாச்சுக்
கிலவங்க மாதிகளா லின்புண்டா மின்னுஞ்
சொலவங்க நோயுமறுஞ் சொல்.

(இ-ள்.) காய்ச்சுக்கட்டி சேர்ந்த தாம்பூலத்தினுல் அசைவுற்ற பற்கள் இறுகும். அந்தச்சாற்றினுல் மலக்கிருமிகள் கெடும். சுக்குகிராம்பு முதலிய மணவருக்கங்கூடிய தாம்பூலத்தினுல் முகக்களிப்புண்டாம். சரீரத்தைப்பற்றிய சிலரோகம் அஜீரணம் முதலியவை நீங்கும். 1470

தாம்பூலந்தின்னுங் காலபேதம்

காலை பிளவதிகக் கட்டுச்சி நீரதிக
மாலை யிலையதிக மாயருந்தில்-வேலைநிலக்
காலை மலங்கழியுங் கட்டுச்சி தீபனமா
மாலை மணக்குலவும் வாய்.

(இ-ள்.) தாம்பூலந்தின்னுவதில் காலையில் பாக்கை யதிகமாகச் சேர்க்கில் சரியாக மலங்கழியும். மத்தியானத்தில் சுண்ணத்தை யதிகப்படுத்த நல்ல பசியுண்டாம். மாலையில் வெற்றிலையதிகப்படுத்த வாயில் மணம்வீசும் என்க. 1471

இதிலின்னதைமுதலிற் றின்னவேண்டுமெனல்

வெற்றிலைக்கு முன்னம் வெறும்பாக்கை வாயிலிட்டாற்
குற்றமுறு முறவோர் கூட்டம்போம்-வெற்றியை
முன்னிட்டுப் பாக்கருந்து மூதறிவோர் தம்மார்பின்
மன்னிட்டு வாழும்பூ மாது.

(இ-ள்.) தாம்பூலந்தரிக்குமிடத்தில் முதலில் வெற்றிலையையன்றிப் பாக்கைமாத்திரம் போட்டுக்கொண்டால் குற்றமுண்டாகும். பந்துக்களின் உறவு நீங்கும். முன்னதாக வெற்றிலையைத்தின்று பின்பு முறைப்படிக்குப் பாக்கு வெற்றிலைகளைத் தின்னவெண்டும். இவ்வண்ணம் நடத்துகிற விவேகிகளிடத்தில் லட்சுமி நிலைபெற்று வாசஞ்செய்வாளென்க. துவர்த்தல் சொக்குதல் மூர்ச்சைப்புழுகுகளிலிருப்பதால் இதை முதலிற்றின்றால் உடற்கு அபாயம்நேரிடும் என்பதைக் கருதிக் குற்றமுறும் என்றும் பந்துக்களின் கூட்டுறவு நீங்குமென்றும் சுண்ணந்தடவாத புனிதமுள்ள ஒருவெற்றிலையை முதலில் மென்று அந்த

Digitized By Roja Muthiah Research Library

சாற்றை விழுங்கில் நெஞ்சுவரலும் கபக்கட்டும் மேற்கூறிய பாக்கின் தோஷங்களும் விலகுவதால் லட்சுமிவாசஞ்செய்வாளென்றும் கூறினர்.

தாம்பூலத்தில் இன்னவை விலக்கவேண்டுமெனல்

நீற்றிலேயு மூக்கு நெடியநரம் புடனே
தீற்றும் புறவரியுந் தின்றக்கான்-மற்றுரை
வெல்லப் போற்செய்யும் விறனெடுமா லாயிடினுஞ்
செல்லப்போய் நிற்குந் திரு.

(இ-ள்.) தாம்பூலந்தின்னும்போது சுண்ணம்வைத்து காம்புநுனி நீண்ட நடுநரம்பு, பிற்புறத்தோல் இவைகளை நீக்காத வெற்றிலையைத் தின்னலாகாது. தின்றால் அவர்களிடத்தில் லட்சுமிசேராள் என்க. ()

தாம்பூலரசத்தின் குணம்

வாயுமந்தம் பீநச சுவாசகாசம் மருசு-
யேயுதர தோடமிவை போக்குந்-தூயுடற்குக்
காந்திதரும் புத்திக்குங் கட்குநலஞ் செய்யுமணஞ்
சார்ந்த தாம்பூல ரசம்.

(இ-ள்.) வாசனைவருக்கஞ் சேர்ந்த தாம்பூலச்சாறானது மணவாத்த வாதம் அக்கினிமந்தம் நாசிரோகம் சுவாசகாசம் அரோசகம் வயிற்றைப்பற்றிய துர்க்குணம் ஆகிய இவைகளை நீக்கும். சரீரத்திற்கொளி வையும் அறிவுவிழி இவைக்கு நலத்தையும் விளைக்கும். 1474

தாம்பூலரசம் விழுங்கும் வகை-விருத்தம்

அடைக்காய்தின் பதி லூறுமுதனீர்நஞ்சா
மதிபித்தமிரண்டாவ தூறுநீரே
கடையமிர்தமூன்றுவ தூறுநீர்தான்
கனம்துகநான்காவ தூறுமந்நீர்
மடையெனவேயைந்தாரிற் சுரந்துள்ளூறி
வருநீர்களைச்சுவைத்து மனங்கொண்டுண்டாற்
றடையுறுப்பித்தமொடு மந்தநோயுந்
தவிபாண்டுநோயுமுண்டாந் தரஞ்சொன்னோமே.

(இ-ள்.) பாக்குவெற்றிலை சுன்னம் இவைகளை ஒன்றுறமெல்லும் போது அதில் நின்று ஊறியமுதல்நீர் நஞ்சு 2-வது நீர்மிகுபயித்தியம் 3-வது நீர் அமிர்தம் 4-வது நீர் அதியினிப்பு 5-வது 6-வது நீர்கள் பித்ததோஷம் அக்கினி மந்தம் பாண்டுரோகம் இவைகளை உண்டாக்கும்.()

Digitized By Roja Muthiah Research Library

வாகன வகை

யானையேற்றத்தின் குணம்-வேண்பா

தாதுவிர்த்தி யும்பசியுந் தாழாது நற்பலமுந்
தீதுபித்த மும்வளருந் திண்ணமே-வாதமைய
மேழு கடல்புவியு ளெங்கு நிலையாவாம்
வேழ நடாத்துவர்க்கு மெய்.

(இ-ள்.) யானையேறி நடத்துபவர்கட்கு சுக்கிலம் ஜடராக்கினி பலம் பித்தம் இவை விருத்தியாகும். வாதகபதோஷங்கள் ஒழியும். ()

குதிரையேற்றத்தின் குணம்

உடலிறுக்குந் தீபனமு முண்டாகு நாளும்
குடலிறங்கும் வெப்பாங் குளிரோ-குடிபோம்
பொரியிருமற் போராடும் பூமாதுஞ் சார்வாள்
பரிநடத்து வார்தமக்குப் பார்.

(இ-ள்.) குதிரையேருபவற்கு தேகமிறுகல் பசி குடலண்டம் உஷ்ணம் சிற்றிருமல் லட்சுமிவிலாசம் இவையுண்டாம். குளிர்நீங்குமென்க.

பல்லக்கேற்றத்தின் குணம்

வாயுமிக வுண்டாகு மாருத பித்தமறு
மேய பசிகலங்கி யெய்துங்காண்-தீவமதன்
வெல்லற் கரியகலை விள்ளுஞ் சுகவணங்கே
பல்லக்கிவர் வையெனிற் பார்.

(இ-ள்.) மதனகலை விள்ளும்மாதே! பல்லக்கிலேறினல் வாதகோபமும் கலங்கியபசியும் உண்டாகும். ஒழியாத பித்தகோபம் விலகும்.()

தண்டிகையேற்றத்தின் குணம்

கண்ணொளிவு தாதுபுஷ்டி காம மெழிலுடனே
யெண்ணொளிரும் காந்தியிவையுண்டாம்-விண்ணுலகு
ளெண்டிசையு மெச்சு மிளமயிலே யெப்போதுந்
தண்டிகையை யூர்வார் தமக்கு.

(இ-ள்.) இளமயிலனையாளே! தண்டிகையை ஏறுபவர்கட்கு நேத்திரப்பிரகாசம் வீரியவிருத்தி சையோக விருப்பு அழகு ஒளிவு ஆகிய இவையுண்டாகும் என்க. 1479

ஒயுல்வண்டியேற்றத்தின் குணம்

சரீரமுறு நோய்போந் தனிவாத மேகும்
சரீரமென வூருபித்தங் காணு-தரிய

Digitized By Roja Muthiah Research Library

வயில்வண் டினங்தானென் றண்டியஞ்சுங் கண்ணு
யொயில்வண்டி யேறுவர்க்கென் றோர்.

(இ-ள்.) வண்டும் வேலும் அஞ்சும்கண்ணாளே! ஒயில்வண்டி ஏறு பவர்கட்கு ஆவிருதவாதமும் தனிவாதரோகமும் அதிக பித்த தோஷமும் நீங்குமென்க. 1480

பாதுகையிட்ட நடையின் குணம்

பலபண் பேதத்தாற் படருகின்ற ரோக
குலமேகும் விந்துகெடுங் கூறி-னிலவரமே
வாதபித்த வைபமறு மாதரசே நாடோறும்
பாதுகையை நீயணிந்து பார்.

(இ-ள்.) மாதரசே! மிதியடியிட்டு நடப்பவர்கட்கு மண்பேதங்களால் வருகின்ற சேற்றுப்புண் முதலிய ரோகங்கள் சுக்கில விருத்தி திரிதோஷம் இவை விலகும். 1481

கால்கவசமிட்ட நடையின் குணம்

தரணிவெப்ப நோயுந் தரையாலா நோயு
மரணிகன் முள்ளா ளாமருப்புந்-தரணியடர்
தேட்புழுக்க ளாதிகளாற் சேரும் பகுவாலுங்
காற்கவசத் தாற்கின்று காண்.

(இ-ள்.) காலிற் கவசமிட்டு நடப்பவர்கட்கு சூரியகிரணம் பட்ட பூமியால் வருநோயும் கட்டை கல் முள் இவைகளால் உண்டாகின்ற ரணங்களும் தேள் கிருமி முதலியவற்றாற் றொடராநின்ற இடருமில்லை.

சதாபாத நடையின் குணம்

சதாமிகுந்த பாதநடை தன்னு லொளிவஞ்
சதாவங்க புட்டியொடு தும்பு-நிதானமுறும்
வீரிய விர்த்தியும்போ மேனிகிழ மேனியதாஞ்
சீறியநற் கொங்கையின்னே செப்பு.

(இ-ள்.) சிறப்புற்ற கொங்கைகளையுடையவளே! எப்போதும் அதி நடை நடப்பதால் காந்தியும் சகசதேக புஷ்டியும் பலமும் மத்திபமாம் சுக்கிலட்சீணமும் கிழரூபமு முண்டாம். 1483

அதிகலூட்டம் சதா உட்கார்ந்திருத்தல் நொந்தசோறுண்ணல் மிகுகாற்று விரும்புதல் இவைகளின் குணம்

ஓட்ட மிதினு முளுக்கார்ந் திருந்திடினுஞ்
சூட்டாவி நொந்தபதந் துய்த்திடினுந்-தாட்டிகமாய்க்

Digitized By Roja Muthiah Research Library

காற்றுடலிற் பட்டிடினுங் காரிகையே நோயுடலாஞ்
சாற்றுகின்ற வாதமுறுந் தான்.

(இ-ள்.) இரைக்கும்படி ஓடுதல் சதா உட்காந்திருத்தல் சுடுபுகை படும்படி வுலாவல் நொந்தசோருண்ணல் மிகுகாற்று விரும்புதல் என்னும் இச்செய்கைகளினால் முறையேக்ஷயம் அதிதூலம் நேத்திரரோகம் அக்கினிமந்தம் முதலியநோய் வருக்கமும் வாதரோகங்களும் உண்டு. ()

ஊன்றுகோலின் குணம்

பலமிருந் தாலாம் பயமனைத்து நீக்கு
முலவுவிழு புத்தியிவைக் கொக்கும்-பலமருளும்
வீறு தயிரியமும் வீரிய முண்டாக்குங்
கூறிலயர் வோட்டுங்கைக் கோல்.

(இ-ள்.) கையில் பிடிக்கின்ற தடி கண்ணுக்கும் அறிவிற்கும் ஒத்திருப்பதன்றி நாய் முதலிய பற்பல மிருகங்களினா லுண்டாகிற பயத்தையும் இளைப்பையும் நீக்கும் வன்மைதிடம் பராக்கிரமம் இவைகள்.()

சயனவகை

புஷ்பணையின் குணம்

தீபாக்கினி தழையுந் தீன்றமருந்தா லெழுந்த
தாபாக்கினி யுந்தணியுங் காண்-யாபார
நட்புவரு விந்தூறு நாளுமுடலஞ் செழிக்கும்
புட்பவணைக் கொன்றே புகல்.

(இ-ள்.) முல்லைமல்லிகை முதலிய புஷ்பமெத்தையில் துயில்பவர்களுக்கு பசி போகத்திலிஷ்டம் சுக்கில்விருத்தி சரீரம் செழித்தல் இவை உண்டாம் மருந்தினால் உண்டாகிய உஷ்ணந்தீரும். 1486

இலவம்பஞ்சு பருத்திப்பஞ்சு இவ்வணைகளின் குணம்

இலவம் பஞ்சுபடுக் கைக்கேகு மனலம்
மலர்பருத்திப் பஞ்சி னணையோ-உலவிரத்தம்
விந்திவைகளைப் பெருக்கு மேல்விரக முண்டாக்குங்
குந்து சுரத்தை யழைக்கும்.

(இ-ள்.) இலவம்பஞ்சு மெத்தையிற் படுக்கையால் உட்சூடு நீங்கும் பருத்திமெத்தை ரத்தம் விந்து காமம் சுரம் இவைகளை விருத்திசெய்யுமென்க. 1487

Digitized By Roja Muthiah Research Library

ரத்தினக் கம்பளத்தின் குணம்-விருத்தம்

பஞ்சவன்னஞ் சேர்நற்கம் பளத்துறுஞ் சறவைதோடம்
விந்திடும் பித்தந்தாது விர்த்தியு முண்டாஞ்சீத
மஞ்சிடுக் கோபமைய மலைந்திடும் பாண்டுவோடு
நஞ்சுக ளெல்லாந்தீரு நலம்பெரு முட்குணமாமே.

(இ-ள்.) வெள்ளை சிவப்பு மஞ்சள் பச்சை கறுப்பு என்னும் 5-நிறரோமங்களால் நெய்த ரத்தின கம்பளத்திற்கு சீதளதோஷம் குளிர் கபாதிக்கம் பாண்டு வீக்கம் பற்பல விஷம் இவைகள் நீங்கும் பித்தமும் சுக்கில தாதுவும் அதிகரிக்கும் இது மிகவும் உஷ்ணமாம். 1488

சகலாத்தின் குணம்-வெண்பா

குளிர்சுரத்திற் கேற்குங் குளிர்பனியைப் போக்கும்
வளர்பெரும் பாடதனை மாற்று-மளிக
சகலாத் தேரிய லணியளக மின்னே
சகலாத் தெனவேநீ சாற்று.

(இ-ள்.) அழகிய கூந்தலையுடைய பெண்ணே! சகலாத்தென்கிற ரோமவஸ்திரம் நடுக்கற்சுரத்திற் குபயோகப்படுவது மன்று குளிர்பனி அசிர்க்கரநோய் இவைகளை நீக்கும். இது உஷ்ணகுணத்தை யுடையது வர்ன்னச் சேர்க்கையால் அனந்த பேதமுற்றிருப்பினும் எவைகட்கும் அக்குணமே ஆம்; ஆனால் வெண்மை பசுமை நீலம் ஊதா என்னும் நிறங்களுள்ளவைகள் அற்ப உஷ்ணமாம். 1489

தாழம்பாயின் குணம்

தாழம்பாய் வாந்தி தலைசுழற்றல் பாண்டுபித்த
மாழஞ்சேர் நீராமை யாம்பிணியும்-வீழுந்தண்
ணீரிழிவு போக்குமிக நேசித்தவர்குலத்திற்
காரிழியுங் கூந்தன்மின்னே காண்.

(இ-ள்.) மேகம்போன்ற கூந்தலாளே! தாழம்பாய் வமனம் தலைச்சுற்றல் பாண்டுரோகம் பித்ததோஷம் நீராமைக்கட்டி வெகுமூத்திரம் இவைகளை விலக்கும் என்க. 1490

கோரைப்பாயின் குணம்

கோரையின்பாய் நற்குணமாங் கூறிய மந்தமறுங்
கூரிய தேகங் குளிர்ச்சியுறும்-வாருலகி
னன்னித் திரைகூடு நாடாது ரூட்சையிதை
யுன்னிப் புவியி லுரை.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) நற்குணமுள்ள சோரைப்பாயினால் அக்கினிமந்தமும் சுரவேகமும் நீங்கும்; தேகக்குளிர்ச்சியும் சுகநித்திரையும் உண்டாகும்.

சாதிப்பாயின் குணம்

சாதிப்பாய் சீதளமாஞ் சாருமித னன்மூலம்
பேதிக்குட் சீதம் பிசறுங்காண்-வாதிக்குஞ்
சீதசுரங் காணுஞ் சிரசுமிகக் கனக்கு
மேதமிகு னோயார்க் கிசை.

(இ-ள்.) பிரப்பம்பாயினால், மூலரோகம் சீதமலப்பேதி சீதசுரம் சிரோபாரம் இவையுண்டாம். இது சீதளமாம் சாதிஎன்பது பிறம்பு.

பேரீச்சோலைப்பாயின் குணம்

பேரீச்சுப் பாயினிதம் பேரா துறங்குவர்க்குப்
பாரித்த குன்மம் பறக்குங்காண்-பூரித்த
வீக்கமருந் தீபனமா மெய்யைவெளுப் போட்டுண
மாக்கிவிடு மென்றே யறி.

(இ-ள்.) பேரீச்சோலைப்பாயில் தூங்குபவருக்கு வாதகுன்மமும் சோபையும் நீங்கும். பசி பாண்டு உஷ்ணதிக்கம் இவையுண்டாம். ()

சிற்றீச்சோலைப்பாயின் குணம்

சிற்றீச்சுப் பாயிற் றினமும் படுப்பவர்க்கு
குற்றிடு மேகாந்த லுடம்புலருஞ்-சுற்றியதோர்
வாயுவுறும் பித்தமறு மற்றுங் கபந்தீருந்
தாயகமா மிக்குணத்தைச் சாற்று.

(இ-ள்.) சிற்றீச்சுப்பாயில் துயில்பவருக்கு உஷ்ணமும் தேகவுலரலும் உண்டாம். ஆவிருதவாதம் அதிபித்தம் கபச்சினம் இவையாம்.

மூங்கிற்பாயின் குணம்

நீர்க்கடுப்பு மெத்தவுறு நீடுபித்த மும்பெருகு
மார்க்கு மனல மதிகரிக்கும்-பாக்குளுறை
கோங்கி னறியமுகைக் கொங்கை மலர்த்திருவே
மூங்கிலின் பாய்க்கு மொழி.

(இ-ள்.) கோங்கரும்பனைய கொங்கையின்னே! மூங்கிற்பாய்க்கு மூத்திரகிரிச்சுரம் பித்தகோபம் மிகவுஷ்ணம் ஆகிய இவைகள் விருத்தியடையும் என்க. 1495

Digitized By Roja Muthiah Research Library

தலைக்கணையின் குணம்

கழுத்திற்குந் தோளிற்குங் கண்ட வுயர்வாய்
வழுத்து நீளத்தில்வைத்த மட்டா-யிழைத்தநறும்
பஞ்சின் றலைக்கணைக்கெப் பானரம்பு நன்குறும்போந்
துஞ்சின் றலைக்குமுச்சிச் சூர்.

(இ-ள்.) கழுத்துக்கும் தோளுக்கும் மத்தியிலிருக்கும் அளவான வுயரமுள்ளதாகவும் நீளம் வேண்டிய மட்டாகவும் இலவம் பஞ்சினால் தைப்பித்த தலைக்கணையின்மேல், சிரசுவைத்துப் படுத்துக்கொண்டால் பாதாதிகேசம் வரைக்குள் உள்ள எந்தப்பக்கத்து நரம்புகளும் பிசகாமல் சமமாகவிருக்கும் அதுவுமல்லாமல் சிரசைப்பற்றிய ஆவர்த்தநோய்களும் நீங்கிவிடும் நாம்சொன்னது சந்தேகமாயிருந்தால் அவ்விதமாக இப்போதே நீ நித்திரைசெய்து பரீக்ஷைப் பார்ப்பாயாக. ()

விசிறி வகை

மயில் விசிறியின் குணம்

சந்நிவிடங் குன்மம் தலைச்சுழல் பித்தம்விக்க
றுன்னு சுவேதம்வாத தோடமும்போம்-பன்னவதி
லுன்னடிமாம் புந்தி யொளிரும் பசுந்தோகை
யிட்டமயில் விசிறிக் கே.

(இ-ள்.) மயிலிறகினாற்செய்த விசிறிக்கு விஷம் சந்நிபாதம் வயிற்றுவலி தலைச்சுழலல் பித்தகோபம் விக்கல் வியர்வை வாதகோபம் இவை நீங்கும். அறிவு விளங்கும். இது உஷ்ண காரியம். 1497

வெட்டி வேரின் குணம்

வாசவெட்டி வேர்விசிறி வன்பித்த சோமமொடு
வீசு மெரிச்சலையும் வீழ்த்துங்காண்-பேசுங்காற்
றுகமற்றுஞ் சாடும் சகல மனோக்கியமா
மோகமருண் மாதே மொழி.

(இ-ள்.) மோகம் அருள்மாதே மணமுள்ள வெட்டிவேர் விசிறி பைத்தியதோஷம் தேகளரிவு விதாகம் இவைகளை நீக்கும் மனோற்சாகத்தை உண்டாக்கும் என்க. 1498

பனவோலை விசிறியின் குணம்

பனைவிசிறி தன்னாற் பருத்தவொரு வாத
வினையைய நோயும் விலகும்-கனபித்த

Digitized By Roja Muthiah Research Library

நோயு மருசியென்ற நோயுங்குடி யேகுந்
தேயுமிடை மாதே தெளி.

(இ-ள்.) நுண்ணிய யிடையாளே! பனையோலை விசிறியினால் வாத தோஷம் சிலேஷ்மரோகம் பித்தாதிக்கம் அரோசகம் ஆகியவை நீங்கும். 1499

வெண்சாமரையின் குணம்

வெண்சாமரத்தால் வியர்வையா யாசமொடு
திண்சோபை மூர்ச்சைத் திருக்குமறுந்-தண்சாரத்
தாகமறும் வெப்பந் தணியுந் திருவமரும்
போகமுறு மாதே புகல்.

(இ-ள்.) போகமுறுமாதே! வெள்ளைச் சாமரத்தினால் வியர்வை ஆயாசம் மயக்கம் மூர்ச்சையால் வராநின்ற ஞாபகமறதி நாவறட்சி உஷ்ணம் ஆகிய இவைபோம் லட்சுமிவிலாசமும் புணர்ச்சிய விச்சையும் உண்டாகும் என்க. 1500

புணர்ச்சி வகை

இவ்வித மாதர் போகம் கூடாதெனல்-கலித்துறை

துக்கம்பயமதிக கேசந்தரிமலந்துஞ்சல்லி
வெட்கம்பசிகருப்பந்தாக மூப்புவெறுப்பசுபஞ்
சுட்கமலட்சியங்கோபம் ரூபமெய்த்துற்கந்தங்கோண்
முக்கதிதூலமுடைமாதர்போகம் விளைக்குவித்தே.

(இ-ள்.) துயரம் அச்சம் தேகமுழுதும் ரோமம் திரிதோஷகோபம் தூங்கிவிழித்தல் அலித்தன்மை நாணம் பசிகருப்பம் தாகம் தன் வயதுக்கு மேற்பட்ட வயது புணர்ச்சியில் வெறுப்பு சுபமின்மை சூசிமுகயோனி ரோகம் அலட்சியம் கோபம் அழகின்மை கற்றுழை நாற்றம் கோள் சொல்லுதல் அதிதூல ரோகம் ஆகிய இவைகளையுடைய மாதர்கள்போகம் சகலரோகங்களுக்கும் காரணமாம் என்க. 1501

இதுவுமது வெண்பா.

தேவ குருவரச தீனதூரத் தையலர்
பாவ வமங்கலமாம் பாவயர்பான்-மேவுயின்ப
கண்டாரைச் சாறுமுறு கண்ணிடுக்க மின்றியே
விண்டாரைச் சாருமுன் னிவள்.

(இ-ள்.) தேவஸ்திரீ குருபத்தினி இராஜபத்தினி ஏழைஸ்திரீ தூரஸ்திரீ பழிமாது விதவை இவர்களைப் போகிப்பவர்களை தாரித்தி

Digitized By Roja Muthiah Research Library

ரமும் துன்பமும் தொடருமே அல்லது இவர்களை விட்டு மற்றயாரைத் தொடரும். 1502

புணர்ச்சிசெய்யும் விதி

அங்கமுற்றும் பாகியமா யார்வமொன்று யன்பொன்று
யங்கமுற்றும் போகமொன்று யாருங்கா-லங்கத்
துரையுஞ் சகசவிர லுற்ற கருவிங்க
னறையும் பருவத்த வர்.

(இ - ள்.) சுகசபதம் என்கிற பருவமுள்ள ஸ்திரீயும் புருஷனும் சரீரமுழுதும் மறைப்பில்லாமல் இருவருக்கும் ஆசையொன்றுகியும் அன்பொன்றுகியும் போகம் ஒன்றுகியும் கூடுங்காலத்தில் உண்டாகும் கருவானது தாய்தந்தையர்களுக்கு உள்ள பலத்தைக் குறித்து உண்டாகும் ஆசை-அன்பு என்பது எப்போதும் உண்டாயிருக்கும் ஆசை. ()

அரோகசந்தானப் புணர்ச்சியின் குணம்

பதிறு றெனுமியாயுட் பாவையு நாலைந்தென்
றுதியாயுட் காளையுமெய் யொவ்வின்-மதியோ
தாமிரவி லுண்டாந் தநுசற்குந் தேகந்
திரயிரவி மஞ்சசுறு கண்டோர்.

(இ-ள்.) பதினறு வயதுள்ள ஸ்திரீயும் இருபது வயதுள்ள புருஷனும் மாதத்துக்கு ஒருநாள் இராத்திரி காலத்தில் சரீரசம்பந்தப்பட்டால் உற்பவிக்கும் குழந்தைகளுக்கும் தேகம் திடமாயிருக்கும் வியாதி வராது வந்தாலும் சூரியனைக்கண்ட பனிப்போல் நீங்கிவிடு மென்க தநுசர்க்கும் என்ற எச்ச உம்மைபால் தாய்க்கும் தந்தைக்கும் தேகம் உறுதியாயிருப்பதுமன்றி வியாதியுமணுகா தென்பது கருத்து மேற் சொல்லிய ஸ்திரீக்கு கருப்பையும் சோணிதமுஞ் சுத்தமாயிருக்கவேண்டும் புருஷனுக்கோவென்றல் சுக்கிலமும் வாதமும் இருதயமும் சுத்தமாயிருக்கவேண்டும் இதில் சொன்ன இவ்வாறு இருந்தால் நல்லகருத் தரிக்கும் முன்சொன்ன முறைப்படி கூடுவது ஸ்திரீக்கு மாதாந்த ருது காலமாகிய 12-நாளில் கூடவேண்டும் ஏனெனில் அந்தநாட்களில் சுக்கிலம்போய் தங்குகின்ற கருப்பையினது துவாரம் ராத்திரிகால தாமரை பூவைபோல் மூடிக்கொள்ளாம லிருப்பதினுலென்று கொள்க ருதுவான முதல் 3-நாளும் அசுத்தநாளாகையால் புருஷன் சேரக்கூடாது அதன் விவரம், கருப்பையின் முகத்துவாரமாகிய யோனித்துவாரம் பிரமாணத்தைத் தப்பி அதிகமாகத் திறந்திருப்பதால் அவ்வழியாகச் சுக்கிலத்தின் பங்கு மிகுதியாகச் செல்லப்படுகின்றது அப்போது அவ்வி

Digitized By Roja Muthiah Research Library

டத்துச் சோணிதமும் இதுவும் ஏற்றக்குறைச்சலின்றி சமமாகத் திரண்டு ஆணும்பெண்ணும் அல்லாத அலிப்பிள்ளையாகப் பிறக்கும் இந்த ஏதுவைப்பற்றியே முதன் 3-நாளுக்கும் அசுத்த நாளென்றதும் சேரக்கூடாதென்றதுமாம் மற்ற ஒன்பதுநாளுக்குள் இரட்டித்தநாளில் சேர்ந்தால் ஆண்குழந்தையும் ஒற்றைப்பட்ட நாட்களில் சேர்ந்தால் பெண்குழந்தையும் உற்பவிக்கும் அந்த விவரத்தை யெல்லாம் சரீரம் என்னும் சாத்திரத்தில் முதல் அத்தியாயத்திற் காண்க இது நிற்க சில மாதாந்திரத்தில் வசந்தகால முதலிய காலபேதத்தினுல் மேற்சொல்லிய முறை தப்பிப் புணரலா மென்று சொல்லப்படுகின்றது ஆயினும் அவ்விதப் புணர்ச்சியினுல் பிறக்கும் சிசுவுக்கும் தாய் தந்தைகளுக்கும் மிகு ரோக சம்பவமேயாம். 1504

தினப்புணர்ச்சியின் குணம்

அனந்தவித பந்தத்தோ டல்லும் பகலு
மனந்தவிட்டுச் சேர்ந்தா ரக்கண்-கனிந்தநோய்ச்
சங்கைக்கு மூப்புமிலைச் சார்ந்த மருத்துவர்க
டங்கைக்கு மூப்புமிலைத் தான்.

(இ-ள்.) கொக்கோக நூலிற் சொல்லாநின்ற பலவித லீலைகளுடன் இரவும்பகலும் நித்திரையுமின்றி ஸ்ரீபோகத்தில் அழுந்துபவருக்குமிதியாயுண்டாகும் வியாதிகளின் அளவிற்கு முடிவும் அவைகளை நிவர்த்திசெய்யவந்த மருத்துவர் கைகளுக்கு ஓய்வும் இல்லை என்க. ()

சுக்கிலநிரோதனத்தின் குணம்

விந்துவை மருக்குங்கால் வீக்கம் பிரமேக
முந்துவளி கல்லடைப்பு மூடுசுரஞ்-சந்துகைகா
லாசனநா பக்கமிடுப் பலவுழிநோய் மார்புவலி
லீரனனீர்க் கட்டிவையா மே.

(இ-ள்.) விருப்பமிருந்தும் போகியாமல் சுக்கிலபந்தஞ் செய்வதினுல் சோபையும் சீழ்ப்பிரமேகமும் அண்டமும் அஸ்மரியும் காமசுரமும் கைகால்கள் குதம் நாபாரிசம் சகனம் ஆகிய ஸ்தானங்களில் சரிக்காநின்ற வியாதிகளும் மார்புநோயும் பித்தகிருச்சரம் உண்டாம்.()

நித்திரைசெய்வதின் குணம்

ஐந் திரியங்க ளசவுக்கிய மகலு
நைந்தமனத் துச்சாக நண்ணுங்காண்-பைந்தொடியே
மேனீட்டு மாயளூறு மெய்யி னயர்வொழியுங்
கானீட்டுப் பள்ளிகொள்ளுங் கால்.

Digitized By Roja Muthiah Research Library

(இ-ள்.) முறைப்படி இடதுபக்கமாகப் படுத்துக்காலை நீட்டிக்கொண்டு நித்திரைசெய்தால் பஞ்சேந்திரியங்களின் அயர்வும் சரீரவருத்தமும் தீரும். இளைத்தமனத்திற்கு உச்சாகமும் ஆயுசுவிருத்தியுமுண்டு.

இதுவுமது

முக்காடிட் டங்கமுற்று மூடித் துயிலினிரண்
டக்கிக்குந் தோட்கு மதிபலமா-மிக்கான
சீதம்வெயில் தூசிபனி சீறிவரு காற்றிவையா
லோதவரு துன்புமிலை யுன்.

(இ-ள்.) தேகாதிபாதம் வரைக்கும் வஸ்திரத்தினல் மூடிக்கொண்டு நித்திரைசெய்யில் இரண்டு நேத்திரத்துக்கும் இரண்டு புஜங்களுக்கும் வன்மையுண்டாம். அன்றி குளிர்வாடை வெய்யிலின் வேகம் தூசி பனிகாற்று இவைகளால் குற்றங்களும் விலகும். 1508

தோக்கணத்தின் குணம்

தொக்கணத்தி ஞலிரத்தந் தோலூ னிவைகட்கு
மிக்கு சவுந்திரியஞ்ச மீரனும்போ-மெய்க்கதிக
புட்டிரக்கம் புணர்ச்சி யிவை கதிக்கும்
பட்ட வலைச்சலறும் பார்.

(இ-ள்.) தொக்கணத்தினல் இரத்தசரும மாமிசதாதுக்களுக்கு மிகவும் போஷணையாவதுந் தவிர தேகபுஷ்டியும் நித்திரையும் புணர்ச்சியிலிச்சையையும் அதிகரிக்கும். வாதாதிக்கமும் உழைப்பினல் வந்த வருத்தமும் நீங்கும். தொக்கணம் என்பது கையினல் குத்தி யிதவாக பிடிப்பதாம். 1509

இரவில் நித்திரைப் பங்கத்தின் குணம்

சித்தமயக் கஞ்செறியும் ஐம்புலத் தயக்க
மெய்த்தலனுக் கமைந்த மென்பைக-னித்தமுற
வண்டுஞ்சிலரை நாயாய்ப் பன்னேய் கவ்வுமிராக்
கண்டுஞ் சிலரைநம்பிக் காண்.

(இ-ள்.) இரவில் துயிலாதவர்களைநம்பி, புத்திக்குத் தெளிவின்மை ஐம்புலச் சோர்வு கட்கம் பயம் அக்கினி மந்தம் முதலிய நோய்கள் தினமுஞ் சேருவனவாய் அன்றியும் வேடருடைய நாய்கள் கவ்வுதல்போலப் பல வியாதிகளும் கவ்விக்கொள்ளும் என்க. இரவில் நித்திரை செய்யாதவரை மேற் சொல்லிய ரோகங்கள் வருத்தும் என்பது கருத்து. 1510

Digitized By Roja Muthiah Research Library

பகல்நித்திரையின் குணம்-விருத்தம்

தண்டமேட்டரக்ஷிய மூருத்தம்பஞ்
சருவாங்கமுக்கிராக் கிரகஞ்சுபதி
துண்டமுறுவனுத்தம்பந் திருக்குத்தம்பஞ்
சோணிதமாட்டியப்புருவா டோபகந்தண்
வண்டுகிருத்திசியூர்த் துவஞ்சம்பூத
மவபேதம்வதந்திர மவதானந்தாள்
விண்டவிவுர் பதினெண்காற்கும்
வித்தாகும் பகலனந்தன் மேவின்மாதோ

(இ-ள்.) பகல் நித்திரையானது தண்டம் மேட்டாரட்சியம் ஊருஸ்தம்பம் சருவாங்கம் உக்கிரகம் சு[illegible] அனுஸ்தம்பம் திருக்குஸ்ரும்பம் சோணிதம் ஆட்டியம் புருவாடோபகம் சிரூத்திரசி ஊர்த்துவம் சம்பூகம் அவபேதம் அவதந்திரம் அவதானம் விவுர்தாசிமை...ன்னும் 18-வித வாதரோகங்களைத் தருதற்கு ஒருவித்தாகும் என்க.

பத்தியத்தோர் பகற்றுயிலின் குணம்-வெண்பா

அண்டவங்கி யுண்டவறை பங்கியரும் பத்தியத்தா
லண்டவகி மூன்றொ டனந்தலது-கொண்டவங்கி
கூடுங்கா நேத்திரநோய் கூடுமிரத்த பித்த
நீடுங்காண் விந்துவு நீராம்

(இ-ள்.) பத்தியங்கொண்டவர்களுக்கு சூரிய வெப்பம் ஔஷத வெப்பம் கடும்பத்திய வெப்பம் என்னும் 3-வெப்பத்துடன் பகல்நித்திரைசெய்வதால் பிரிக்கின்ற வெப்பமுங்கூடுமாயின் விழிநோய் உண்டாகும். ரத்தபித்தரோகம் அதிகரிக்கும். விந்துவும் நீர்போலாகிவிடும்.

ரசம்-கேற்பம்-செய்நீர்-குளிர்ந்தநீர் இவைகளின் சீரணகாலம்-விருத்தம்

பாரினின்மாந்தருண்ணும் பற்பலபண்டமெல்லாஞ்
சீரணமாகுங்காலந் தெளியவேசெப்பக்கேண்மோ
காரணரசமோரேழு கடிகையாங்கற்கஞ்செய்நீர்
வீரணத்தண்ணீர்சாமம் வெந்நீருமிரண்டேயாமம்.

(இ-ள்.) உலகினில் மனிதரருந்தும் பலவாகிய பதார்த்தங்களின் சீரணகால அளவை கூறுமிடத்து யாதேனுமொன்றை பிடித்துப் பிழிந்த ரசம் 7-நாழிகையிலும் அரைத்த மருந்துகள் செய்நீர்கள் குளிர்ந்த நீர் இவைகள் ஒருசாமத்திலும் வெந்நீர் 2-சாமத்[illegible]சீர[illegible]ாகும்.

Digitized By Roja Muthiah Research Library

காய்ந்தாறியசலம்-கஷாயம்-பழச்சாறு சோறு-பால்-தேன்-இவைகளின்-சீரணகாலம்

சாலவேகாய்ச்சியாறுஞ் சலம்பதமூன்றேமுக்காற்
சீலமாங்கடாயமூன்று சேர்பழச்சாறுமாறுந்
தாலமாஞ்சோறிரண்டு சாமமாமிருபதாகும்
பாலுதேன்பன்னிரண்டு நாழிகைபகருவாயே.

(இ-ள்.) மிகவும் காய்ந்தாறிய சலம் மூணேமுக்கால் நாழிகை; கஷாயம் 3-நாழிகை; கனிரசங்கள் 6-நாழிகை; அன்னம் 2-சாமம்; பால் 20-நாழிகை; தேன் 12-நாழிகையிலும் சீரணமாம். 1514

தயிர்சோறு-மோர்ச்சோறு-நீர்ச்சோறு-வெண்ணெய்ச்சோறு சாராயம்-இவைகளின் சீரணகாலம்

வார்துவை தயிரும்சோறும் வகுத்திடிற் பதினொன்றாகு
மோர்விடு பதம்பன்மூன்று பொழிபதம் பதினெட்டாகு
மாறுவச் சோறிரண்டு சாமமா மரியவெண்ணெய்ச்
சாருமா பன்னஞ்சாமஞ் சாராயங் கடிகையைந்தாம்.

(இ-ள்.) தயிர் அன்னம் 11-நாழிகை; மோர் அன்னம் 13-நாழிகை; நீர் அன்னம் 18-நாழிகை; வெண்ணெய் அன்னம் 2-சாமம்; சாராயம் 1-சாமம் அல்லது 5-நாழிகையிலும் சீரணமாகும். 1515

சூரணம்-தைலம்-லேகியம்-கிருதம்-பஸ்பம்-கறிகள் பழங்கள் இவைகளின் சீரணகாலம்

சூரணந்தலமிலேகங் கிருதஞ்சொற்பனிரெண்டென்னச்
சேருநாழிகையாம்பஸ்பஞ் சீரணமரைச்சாமத்திற்
கூறியகறிகளெல்லாங் கூறிநாழிகையேழாகுஞ்
சீறியபழங்களெல்லாஞ் சீரணஞ்சாமந்தன்னில்

(இ-ள்.) சூரணம் தயிலம் லேகியம் கிருதம் இவை 12-நாழிகை; பஸ்பம் $3\frac{3}{4}$-நாழிகை; நல்லபதார்த்தங்களெல்லாம் 7-நாழிகை; உயர்ந்த பழவர்க்கங்களெல்லாம் ஏழரைநாழிகையிலும் சீரணமாம். 1516

கருணைமுதலிய கிழங்குகள்-வேந்து பாகமான விதைகள் பழச்சாறுகள்-பச்சையாய் அல்லது வேந்ததாயுள்ள ஆறுவகைச்சுவை அவைகளின் சீரணகாலம்

உரைகரு[illegible]ரக்கிழங்கோ டெட்கிழங்கெல்லாஞ் சாமம்
[illegible]முத்தின்சாறும் வெந்திடிற்சாமமேயாம்

Digitized By Roja Muthiah Research Library

பரிசுறுவைகள்பின்னும் பச்சையதாய்த்தின்றாலுங்
களைவெந்ததைத்தின்றாலுங் கடிகையைந்ததன்மேலில்லை.

(இ-ள்.) கருணை காராக்கருணை புளிகருணை நீர்க்கருணை சேனைக் கருணை முதலிய கிழங்குகளெல்லாம் ஏழரை நாழிகை, வித்துக்களும் கனிரசங்களும் ஏழரைநாழிகை, அறுசுவைப் பதார்த்தங்களைப் பச்சையாகஅல்லது பாகஞ்செய்ததாக உண்ணில் 5-நாழிகையிலும் சீரணமாம்

கழுநீர்-காடி-மா-உண்டை-போங்கல்-பசும்பால் இவைகளின் சீரணகாலம்

காவிநேர்கண்ணேய்கேளாய் கழுநீர்காடியுமைந்தாகு
மாவுடனுண்டைபொங்கல் வகை...ாவினற்பால்
மேவுமோர்தினத்திநான்கு விதமுஞ்சேர்த்தருந்துமுண்டி
பூவினிலைந்துநாழி போயபின்சீரணிக்கும்.

(இ-ள்.) நீலோற்பலம்போன்ற கண்ணுளே! கழுநீர் காடி 5-நாழிகையிலும், மா பொரியுண்டை மிளகோதனம் பசுவின்பால் இவைகளையெல்லாம் ஒன்றாகக் கலந்து ஓர் தினத்திலருந்தில் 20-நாழிகையிலும் சீரணமாம் என்க. 1518

கஞ்சிவகை–நல்லவெல்லம்-தேன்-காய்கள்-பச்சரிசி இவைகளின் சீரணகாலம்

வர்த்திக்கும்வடித்தகஞ்சி வகையெட்டிற்சீரணங்காண்
தித்திக்குநல்லவெல்லந் தேனிருபதுநாழிக்கு
ளுற்றிடுங்காயினங்க ளற்றிடுமெண்பதத்துட்
கத்தும்பச்சரிசிநாலைங் கடிகையுட்சீரணிக்கும்.

(இ-ள்.) தேகத்தைத் தூலிக்கச் செய்கின்ற வடிகஞ்சி முதலிய கஞ்சிகள் 9-நாழிகை-நல்லவெல்லம் தேன் பச்சரிசி 20-நாழிகை, கத்தரிக்காய் முதலிய காய்வருக்கங்கள் 8-நாழிகையிலும் சீரணிக்கும் என்க.

இளநீர்-சருக்கரை-பானக்கம்-தயிர்-மோர்களின்மேல் சலம் வறுத்தமா இவைகளின் சீரணகாலம்

இளநீர்சர்க்கரைபானக்க மேழுநாழிகையிற்செரிக்கும்
வளமுளதயிரின்மேலும் வார்த்துணுமோரின்...லுங்
தெளிவுறுதண்ணீருண்ணச் செரிந்திடுங்கடிகைய...ல்
தெளிநல்வறுமாநீருஞ் செரித்திடுங்கடிகையேழ...

(இ-ள்.) இளநீர் சருக்கரை பாணகம் 7-நாழிகை தயிரன்னம் அல்லதுமோரன்னம் புசித்து அதன்மேல் தண்ணீர் குடிக்கில் 4-நாழிகை வறுத்தமாவைத் தண்ணீரிற்கரைத்துக்குடிக்கில் 7-நாழிகையில்சீரணம்.

கடுநீர் முக்காற்சுண்டியநீர் ஆறியநீர் இவைகளின் சீரணகாலம்

கட்டநீருண்ணுங்காலே சொல்லியவாறுமுக்கான்
மட்டிலேகொதித்தவெந்நீர் வருக்கிலேழரையேயாகுந்
திட்டமாய்க்குளிர்ந்தநீர்தான் செரிக்குமொன்பதின்மேலென்
வட்டமுலையினாளே வழுத்துநாழிகையைத்தானே.

(இ-ள்.) அடிபரந்ததனங்களையுடையாளே! காய்ந்தநீர் 6-நாழிகை முக்காற்கூறு சுண்டியநீர் ... நாழிகை அருந்தும் பதமாயாற்றியநீர் 9-நாழிகையிலும் சீரணமாய. 1521

மரம் பூ தளிர் இவைகளின் குணம்

தருசெடிகளிலுண்டாங்கே சாரங்கள்பூகொழுந்தேயெல்லா
மரிவையேதின்றிடிற்சீ ரணஞ்சாமந்தனிலிவ்வாறே
திரவியவிசனங்கட்கெல்லாஞ் செப்பிடும்வேதமென்றே
குருபரனடியைப்போற்றுங் குறுமுனியுரைத்தவாரே.

(இ-ள்.) விருக்ஷம் செடி கொடி புல் இவற்றுளுண்டாகின்ற கேசரம் புஷ்பம் தளிர் இவைகள் ஏழரை நாழிகையில் சீரணமாம். இவ்வண்ணமாகவே சகலதிரவியங்களுக்கும் சீரணகால அளவையை ஆயுள்வேதங்கூறுகின்றதென அகத்தியமுனிவர் கூறியவாறும். 1522

நோயணுகாவிதி-வெண்பா

திண்ண மிரண்டுள்ளே சிக்க வடக்காமற்
பெண்ணின்பா லொன்றைப் பெருக்காம-லுண்டுங்கா
னீர்கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி.

(இ-ள்.) மலசலத்தை அடக்காமலும் விந்துவை அதிகமாக விடாமலும் உண்ணுமிடத்து நீரைக்காய்ச்சி மோரைவிளாவிநெய்யையுருக்கி உண்ணலுமாகிய தன்மையுள்ளவர்கள்பேர் கேட்டாலே பிணிவிலகும்.

இதுவுமது-விருத்தம்

மெண்ணெய்பெறின் வெந்நீரிற்குளிப்போம்
மோரம்பகற்றுயிலோம் பருவமூத்த ...

Digitized By Roja Muthiah Research Library

வேலஞ்சேர்குழலியரோடிள வெயிலும்விரும்போ
மிரண்டபக்கோ மொன்றவிடோ மிடதுகையிற்படுப்போ
மூலஞ்சேர்கறி நுகரோ மூத்ததயிருண்போ
முதனாளிற்சமைத்த கறியமுதெனினுமருந்தோம்
ஞாலந்தான் மடைத்திடினும் பசித்தொழியவுண்ணோ
நமனார்க்கிங்கேதுகவை நாமிருக்குமிடத்தே.

இதுவுமது

உண்பதிருபொழுதொழிய மூன்றுபொழுதுண்ணோ
முறங்குவதிராவொழியப் பகலுறக்கஞ்செய்யோ
மண்பரவுகிழங்குகளிற் கருணையன்றிப்புசியோம்
வாழையிளம்பிஞ்சொழியக் கனிபுசிக்கல்செய்யோம்
பெண்கடம்மைதிங்களுக்கோர் காலன்றிமருவோம்
பெருந்தாகமெடுத்திடினும் பெய்த்துநீரருந்தோம்
நண்பெறவுண்டபின்பு குறுநடையுங்கொள்வோ
நமனார்க்கிங்கேதுகவை நாமிருக்குமிடத்தே.

இதுவுமது

ஆறுதிங்கட்கொருதடவை வமனமருந்தயில்வோ
மடர்நான்குமதிக்கொருகாற் பேதியுறைநுகர்வோ
தேறுமதியொன்றதைக்கோர் தரநசியம்பெறுவோ
திங்களரைக்கிரண்டுதரஞ் சவறவிருப்புறுவோம்
வீறுசதுர்நாட்கொருக்காலெய் முழுக்குகைத்தவிரோம்
விழிகளுக்கஞ்சன மூன்றுநாட்கொருக்காலிடுவோ
நாறுகந்தப்புட்பமிவை நடுநிசியினுகரோ
நமனார்க்கிங்கேதுகவை நாமிருக்குமிடத்தே.

இதுவுமது

பகத்தொழுக்கு மாதாயாங்கந்துடைப்பமிவைத்தூட்
படநெருங்கோந்தீபமைந்தர் மரநிழலில்வசியோஞ்
சுகப்புணர்ச்சியன்னசீரணத் தருணஞ்செய்யோந்
துஞ்சலுணவிருமலஞ் சையோகமழுக்காடை
வகுப்பெ[illegible]கிழ்ந்துகசமிவை மாலேவிடுப்போம்
வற்சல[illegible]வம்பி[illegible] சற்குருவைவிடமா[illegible]லுந்
நகச்சல்முழுனைச்சல[illegible]தரிக்குமிடமணுகோ[illegible]
[illegible]னார்க்கிங்கே[illegible]வை நாமி[illegible]மிடத்தே.

(இ-ள்.) பசுவின்பாலே உண்போம் எண்ணெய்யிட்டுக் கொள்ளில் வெந்நீரில் ஸ்நானஞ்செய்வோம் பகற்காலத்தில் சையோகமும் நித்திரையுஞ் செய்யோம், தன் வயதுக்கு மேற்பட்ட வயதுள்ள மாதரையும் இளவெயிலையும் இச்சியோம், மலசலங்களை யடக்கோம் சுக்கிலத்தை யடுத்தடுத்து விடோம். இடதுகைக் கீழாகப்படுப்போம், மூலரோகத்தை யுண்டாக்கும் பதார்த்தவகைகளை யுண்ணோம். புளித்த தயிரை யுண்போம், முன்னாளிற் சமைத்தகறி, அமிர்தத்துக் கொப்பானாலும் புசியோம், பசித்தாலல்லது சாப்பிடோம். தினமொன்றுக்கு இரண்டுதர மல்லது மூன்றுதர முண்ணோம், புசித்தவுட னுட்காரந் துறங்குதல் நன்மையென்று ஐயினநூலிற் சொல்லியிருப்பினும், அதையும் பகலிற்செய்வோம். மாதரை ... ற்கோர்தரமே சேர்வோம், மிகுந்தாக முண்டாயினும் போஜ... விலன்றிப் பின்பு ஜலபானஞ் செய்யோம், கருணைக்கிழங்கின்றி மற்றைக் கிழங்குகளைத்தின்னோம், வாழையின் இளங்காயையே யல்லாது பழத்தைத் தின்னோம், புசித்தபின் குறுநடையாக நடப்போம், ஆறுமாதத்திற் கொருதரம் வாந்தியாகும் படியாகவும், நான்குமாதத்திற் கொருதரம், பேதியாகும்படியாகவும், மருந்துண்போம், ஒன்றரை மாதத்திற்கொருதரம் நசியஞ் செய்துக் கொள்வோம், மாதத்திற்கு 4 - தரஞ் சவரஞ் செய்துக்கொள்வோம், 4-தினத்துக்கொருதரம் அப்பியங்கனஞ் செய்வோம்,மூன்றுநாட்கொருதரம் கண்களுக்கு மையிடுவோம் கஸ்தூரி முதலிய வாசனைத் திரவியங்களையும், புட்பங்களையும், நடுராத்திரியில் ஆக்கிராணியோம், துரஸ்திரீ நடக்கும்போது பறக்குந்தூசியும், மேலடி...ம்படி நெருங்கோம் இரவில் தீபத்திநிழல் மனிதர்நிழல் விருக்ஷநிழல் இவைகளிற்றங்கோம் போசனஞ் சீரணிக்குங் காலத்தில் புணர்ச்சி செய்யோம். நித்திரை போசனம் மலசலம் புணர்ச்சி அழுக்குவஸ்திரம் சீப்பிட்டுச் சீவும்பொழுது சிந்துகின்றரோமம் ஆகியவைகளை மாலைக்காலத்தில், கண்ணோடு கூடிய பசுவையும் தெய்வத்தையும் பிதுர்க்களையும் ஆசிரியரையும் அம்மாலைகாலத்தில் பூசிப்போம், நகச்சலமும் சிகைச்சலமும் தெறிக்குமிடத்தில் நெருங்கோம், ஆதலால் நோயை முன்னிட்டுவரும் இயமனுக்கு நம்மிடத்தி லெள்ளளவேனு யிருக்கிறது ஒன்றுமில்லை எனக. ()

தீநெறியிழிவுகூறல்-விருத்தம்

சொ...ல் ...பதங்களினூனிற் கவிங்காறுகளுரைத்தற்
கில்ல ...யபதார்த்தங்களு மற்றியலுஞ்சொன்னே
நல்... சிலர்பிறழ்ந்து நடப்பரேனிணுமென்செய்வே
ெ... ழுகுமவர் பயனடைவர்புகலுங்காலே.

(இ-ள்.) தேசங்கள்தோறும் உண்ணுகின்ற வுணவுகள் தவிர பூ நாட்டிலிருப்பவர்கள் உண்ணத்தக்க குற்றமில்லாத பதார்த்தங்களையு குற்றமுள்ள பதார்த்தங்களையும் அவைகளைப் பாகஞ்செய்து புசி வேண்டிய இலக்கணத்தையும் இதுவரையும் விவரமாகச் சொன்னே விவேகிகள் இம்முறையில் நின்றும் வழுவாதுநடப்பார்கள் சிலர் இதற் மாறி நடப்பார்களேயாகில் நாம் செய்யக்கடவதியாது இதனால் அவ ளடைகின்ற பயனை சொல்லுமிடத்து மகா விஷசர்ப்பத்துடன் நாடே றும் பழகுபவர்கள் அடையும் பயனை யடைவார்கள். 15

நன்னெறிப் பெருமைகூறல்-வெண்பா

திரவியமுந் தில்லுணர்ந்தே தி[illegible]னுப் விப்பார்
பரவியநோய் காணாராய்ப் பால[illegible]நோர்
மெய்யங் களித்திடுகோண் மிக்காயுள் பெற்றீரேழ்
வையங் களித்திட வாழ்வார்.

(இ-ள்.) பதார்த்தங்களின் குணங்களையும் அவைகளைப் புசி வேண்டிய காலபேதங்களையும் பகுத்தறிந்து புசித்து அதனால் கிடை கிற சுகத்தை அநுபவிப்பவர்கள் பலவாகக் கூறப்பட்ட பிணிகளை காணாதவர்களாய்ப் புத்திரர்களையும் மலையைப்போல உறுதியுள்ள ரத்தையும் சிருஷ்டி கர்த்தாவைப்போல மிகுந்த ஆயுள் பெற்று 14- கத்திலிருப்பவர்களுங் கண்டு களிக்கத்தக்கதாக வாழ்வார்கள். 15

இவ்வாறே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும் மரு என்னும் அதிகாரத்திற் கட்டளையிட்டனர்.

அற்ற தறிந்து கடைப்பிடித்து மாற்ற
துய்க்க துவரப் பசித்து.

(இ-ள்.) ஒருவன் முன்னுண்டது அற்றபடியையறிந்து பின்ப புசித்து உண்ணுமிடத்து மாறுகொள்ளாத உணவுகளைக்குறிக்கிக் கு கிக்கொண்டு உண்ணக்கடவன்—மாறுகொள்ளாமையாவது உண்ப சரீரசுபாவத்தோடு மாறுகொள்ளாமையும் கால இயல்போடு ம கொள்ளாமையும் மாறுபாடில்லாத வுணவுகளை யானும் மனம்வே டியமட்டும் உண்ணாமல் பிணிவார் அளவினால் உண்ணவேண்டும் வாறு உண்பவன் உயிர் பிணிகளால் துன்பமுறாமல் சுகமுறும். 1

பதார்த்தகுண சிந்தாமணி மூலமும்-உ[illegible]

முற்றிற்று.

பூமகள்விலாச அச்சுக்கூடம்

Digitized By Roja Muthiah Research Library